மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சாலையாகும். இப்போதுதான் அவர்கள் மாநில நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதனால்தான் துறையின் சார்பாக, அதனை நான்குவழிச் சாலையாக மாற்றுகின்ற திட்ட மதிப்பீடுகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நான் சொன்னேன்.

முற்பகல் 10–15

அவர் குறிப்பிட்ட, அந்த மேம்பாலப் பணி என்பது NH–ன் ஓரமாகவே இரயில்வே லைன் போகிற காரணத்தினால் அங்கு உடனே மேம்பாலம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனென்றால், ஆத்தூர்–பெரம்பலூர் நான்குவழிச் சாலையை அகலப்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்ட பின்புதான் ஆத்தூர் நகரிலே இரயில்வே மேம்பாலம் கட்டுவதா, இல்லையா என்பதை, அதனுடைய சாத்தியக்கூறுகளை அறிந்துதான் அதற்குப் பதில் சொல்ல முடியும். எனவே, முதலில் இந்தப் பணிகள் முடியட்டும். அதற்குப் பின்னால் அந்தப் பணிகளை நாங்கள் எடுத்துக்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன் அவர்கள்.

திரு. A.P. ஜெயசங்கரன்: அதேபோல, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் Ring Road அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு 2021–ல் நில எடுப்புப் பணிகளும், நில அளவீடு பணிகளும் துவங்கப்பட்ட நிலையில், வேகமாக நடைபெற்ற பணிகள்

தற்போது சுணக்கமாக நடைபெற்று வருகின்றன. ஆத்தூர் நகரப் பகுதியில் நாளொன்றுக்கு 15,000 வாகனங்கள் வந்து செல்வதால், மிகுந்த போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் அதிகரிக்கின்றன. பெரம்பலூரிலிருந்தும், சென்னையிலிருந்தும் ராசிபுரம் செல்லும் வாகனங்கள் வந்தாலும் இந்த வழியில்தான் செல்ல வேண்டும். ஆத்தூர் town வழியாகத்தான் செல்ல வேண்டும். அதேமாதிரி, ராசிபுரத்திலிருந்து வரும் வாகனங்கள், சென்னையிலிருந்து வரும் வாகனங்கள், துறையூர் போக வேண்டியதாக இருந்தாலும் சரி, இந்த வழியில்தான் செல்ல வேண்டியிருக்கும். அதனால்தான், peak hours-ல் பார்த்தோம் என்றால், பள்ளி வாகனங்கள், கல்லூரி வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் வந்து செல்வதால் மிகுந்த இடையூறாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. A.P. ஜெயசங்கரன்: அதனால், இந்த உள்வட்டச் சாலை, ஆத்தூர் மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. எல்லா நில எடுப்புப் பணிகளும் முடிந்திருக்கின்ற நிலையில், slow-வாக நடந்து கொண்டிருக்கிறன. அதிகாரிகளைக் கேட்டால், பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். இந்த ring road இருந்தால்தான் ஆத்தூர் மக்கள் நிம்மதியாக இருக்க முடியும் என்ற ஒரு நிலை இருக்கிறது. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிற அந்தப் புறவழிச் சாலை, உளுந்தூர்பேட்டையிலிருந்து சேலத்திற்குப் போகிற NH சாலைதான் main NHAI சாலை. ஏற்கெனவே, ஆத்தூரிலே நகரப் பகுதி வரை சென்ற சாலைதான் பழைய சாலை. இதில்தான் நெரிசல் அதிகமாக இருக்கிறது; போக்குவரத்து அதிகமாக இருக்கிறது; அதனால், புறவழிச் சாலை அமைக்கப்படுமா என்ற ஒரு கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள். எனவே, அதற்குக் கிட்டத்தட்ட 11 கிலோ மீட்டர் வரை நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய ஒரு

2023 ஏப்ரல் 19]

சூழல் இருக்கிறது. இதற்கென DPR *தயார் பண்ணுவதற்காக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. திட்டமிட்டபடி அதற்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. ஆனாலுங்கூட, இந்த நான்குவழிச் சாலை முடிந்த உடனேயே, உளுந்தூர்பேட்டை சாலையிலிருந்து ஆத்தூருக்கு உள்ளே நகரப் பகுதிக்குப் போகாமல் ராசிபுரம் போகிற சாலையை இணைப்பதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகள் மற்றும்* DPR *தயார் செய்யச் சொல்லியிருக்கிறேன். அது 11 கிலோ மீட்டர் தூர சாலையாகும். இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்ப அதற்கு முன்னுரிமை அளிக்க முடியுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி இந்தப் பணியை இந்த அரசு தொடரும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* R.D. *சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பெரம்பூர் தொகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் மற்றும் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்ற வியாசர்பாடி* EH road*-ஐ டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி வரை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலையை அகலப்படுத்த முடியுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். தற்போது இந்தச் சாலை ஒருவழிப் போக்குவரத்து, அதாவது* one way traffic*-லே உள்ளது. நகர்ப்புறமாக இருக்கிற காரணத்தால் இருபுறமும் கட்டடங்கள் அதிகமாக இருக்கின்றன. இப்போது இருக்கிற சாலை என்பது 7 மீட்டர் அகலச் சாலை. இதை அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், பல கோடி ரூபாய் அதற்காகச் செலவிட வேண்டிய ஒரு சூழல் இருக்கிறது. எனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டதன் அடிப்படையில் இதை அரசின் சார்பாக ஆய்வு செய்து முறையாக விரிவுபடுத்த முடியுமா என்பதை நிதிநிலைக்கேற்ப அறிந்து இதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

[2023 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்படாமல் நீண்டகாலமாக பாதியிலே நின்று கொண்டிருக்கிறது. நம்முடைய ஆட்சி அமைந்ததும், அதைக் கட்டி முடிக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தோம். அதற்கு 104 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு நிர்வாக ஒப்புதல் எப்போது அளிக்கப்படும்; பணி எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்–அக்கரைபேட்டை–வேளாங்கண்ணி சாலையில் கடவு எண் 48–ல் இரயில்வே பாலம் கட்டுவது சம்பந்தமாகத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதுபோல, மேற்படி இரயில்வே பாலம் அமைப்பதற்கு 104 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அநேகமாக இந்த மாதமே கட்டுமானப் பணிகளைத் துவக்குகின்ற நிலையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தனபால் அவர்கள்.

திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, அவினாசி–அன்னூர்–மேட்டுப்பாளையம் வழியாக ஊட்டிக்குச் செல்கின்ற சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. ஊட்டிக்குச் செல்கின்ற மக்கள் அதிகமாக அந்தச் சாலையைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அந்தச் சாலையை நான்குவழிச்

2023 ஏப்ரல் 19]

சாலையாக விரிவுபடுத்த அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பேரவைத் தலைவர், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அன்னூர்–அவினாசி வழியாக ஊட்டிக்கு செல்கின்ற சாலையை நான்குவழிச் சாலையாக விரிவுபடுத்த முடியுமா என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். இது தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சம்பந்தப்பட்டது. அதே நேரத்தில், விரிவுபடுத்த வேண்டுமென்பதற்காக அரசின் சார்பாக ஏற்கெனவே இரண்டு கடிதங்கள் ஒன்றிய அரசினுடைய அமைச்சர் மாண்புமிகு நிதின்கட்கரி அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டு, அதற்குரிய* DPR *தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அது முடிந்தவுடன் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அநேகமாக இந்த நிதியாண்டிலேயே ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நிலை இருக்கிறது. முன்னாள் பேரவைத் தலைவராயிற்றே அதனால் இன்னும் கொஞ்சம் வேகமாக அந்தச் சாலையை அமைப்பதற்கு அரசு முயற்சிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அணைப்பட்டியிலிருந்து பெரியணை பேரணி பெரியபாலம் வரையுள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சாலைகள் பழுதடைந்துள்ளன. மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் மோசமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, இந்தச் சாலையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகிற சாலை, ODR சாலையா, MDR சாலையா அல்லது மாநில நெடுஞ்சாலையா என்பதை நான் அறிய முடியாத ஒரு சூழ்நிலை. எனவே, அவர் எனக்குக் கடிதம் கொடுத்தால் அது எந்த வகைப்பாடு சாலை என்பதை அறிந்து, இந்த ஆண்டினுடைய நிதிநிலைக்கேற்ப, அந்தச் சாலைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்லிலிருந்து குமுளி வரை செல்கின்ற சாலை தேசிய நெடுஞ்சாலையாக வகைமாற்றம் செய்யப்பட்டு, நான்குவழிச் சாலையாக அமைப்பதற்காக அரசாணையும் பெறப்பட்டு, அந்த வழித்தடங்களில் 9 by-pass-களுக்கும் அரசாணை பெறப்பட்டது. Transstroy என்ற நிறுவனம் அதை tender எடுத்திருந்தது. ஆனால், அந்தச் சாலை இருவழிச் சாலையாக உறுதிப்படுத்தப்பட்டு by-pass சாலையும் போடப்பட்டுவிட்டது. ஆனால், நான்குவழிச் சாலையாக அமைக்காத காரணத்தால், போக்குவரத்து நெரிசல் மிகுதியாக இருக்கிறது. இந்தச் சாலை இரு மாவட்டங்களை மட்டுமல்லாமல், இரண்டு மாநிலங்களையும் இணைக்கின்ற சாலையாகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து, இந்தச் சாலை மிகவும் அவசியமான சாலை. இதை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்; உறுதி செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தவர்; இந்தத் துறையினுடைய அமைச்சராகவும் இருந்தவர். அதனால் அவருக்கு அனைத்து விவரங்களும் தெரியும். பொதுவாக, தேசிய நெடுஞ்சாலை என்பதை அவரே அறிந்த ஒன்று. அதை நான்குவழிச் சாலையாக அமைக்க வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கமாகவும்,

2023 ஏப்ரல் 19]

கேள்வியாகவும் அமைந்திருக்கிறது. போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கிறது. எனவே, இவர் கேள்வி கேட்டதையே மையப்படுத்தி, நான்குவழிச் சாலை ஆக்குவதுதான் சாலச் சிறந்தது என்ற அடிப்படையிலே ஒன்றிய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுத, இந்த அரசு முன்முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

183—

வேளாண்மைக் கல்லூரி

***54734—திரு. அ. பண்ணாரி:**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எங்கள் பொதுச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கத் தேவையான 500 ஏக்கர் நிலம் உள்ளது. மேலும், பல்வேறு பயிர்கள் பயிர் செய்ய ஏற்ற மண் வளமும், நீர் வளமும், இயற்கை வளமும் உள்ளது. ஆகவே,*

மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, அந்தப் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியைச் சுற்றியுள்ள கோவை, கரூர், நாமக்கல், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 12 அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன; தனியார் கல்லூரிகள் 4 இருக்கின்றன; ஆராய்ச்சி நிலையங்கள் 5 இருக்கின்றன; KVK வேளாண் அறிவியல் நிலையங்கள் 4 இருக்கின்றன; மொத்தம் 25 கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் சொல்லப் போனால், இந்த 12 அரசுக் கல்லூரிகளில் 1,547 இடங்கள் உள்ளன. ஆனால், இந்த ஆண்டு 1,261 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கின்றார்கள். 286 இடங்கள் காலியாக உள்ளன. ஆக, அந்தளவுக்கு அந்தப் பகுதியைச் சுற்றி கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தால், தற்போது இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பவானிசாகர் தொகுதியின் பெரும்பகுதி மலைப் பகுதி ஆகும். இங்குள்ள மக்கள் பெரும்பாலும் மக்காச்சோளத்தைப் பயிர் செய்து வருகிறார்கள். ஆனால், மக்காச்சோளத்திற்குத் தகுந்த விலையில்லாததால் இடைத்தரகர்கள் மற்றும் வியாபாரிகள் பயனடைந்து வருகிறார்கள். ஆகவே, விவசாயிகள் நலன் கருதி, மக்காச்சோளத்திற்கு அரசே விலை நிர்ணயம் செய்து, அதைக் கொள்முதல் செய்ய முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரி கேட்டார்கள்; இப்போது மக்காச்சோளத்தைக் கொள்முதல் செய்யக் கேட்கிறார்கள்; மக்காச்சோளத்தைக் கொள்முதல் செய்வதற்கு நாங்கள் அனுமதியளித்து, இப்போது அதைக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தனியார் அதிகமாக கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, விலை நிர்ணயத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய கையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***38109—திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் தற்பொழுது வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாத காரணத்தால் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட வேலூர் மாநகரில், வேலூர் புறநகர்ப் பகுதியான அரியூர், பாகாயம், சித்தேரி, பழவஞ்சாத்து, விருபாட்சிபுரம் பகுதிகளில், சற்றேறக்குறைய 40 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றார்கள். ஏற்கெனவே, ஊராட்சிப் பகுதிகளாக இருந்தவை, தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள மக்களின் நீண்டகால கோரிக்கை அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் கட்டுவது ஆகும். எனவே, வேகமாக வளர்ந்துவரும் மாநகராட்சிப் பகுதிகளில், அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வேலூர் மாநகராட்சியை ஒட்டியுள்ள பகுதியான பெண்ணாத்தூர் பேரூராட்சியில், சற்றேறக்குறைய 20 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே அரசு இடம் இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவளித்தால், கண்டிப்பாக பெண்ணாத்தூர் பகுதியில் அரசு புறம்போக்கு நிலத்தை நாங்கள் ஏற்பாடு செய்து தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பகுதியில், அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நீங்கள் நிலம் கொடுப்பீர்கள் போலிருக்கிறதே? உங்களது சொந்த நிலத்தைக் கொடுங்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வேலூர் மாவட்டத்திலே, மனைப் பிரிவுகள் ஏறத்தாழ 8 ஆயிரத்து 545 போடப்பட்டிருக்கின்றன. அதிலே, பல இன்னும் விற்காமல் இருக்கின்றன. தனி வீடாக 50 வீடுகள் அணைக்கட்டுக்கும், வேலூருக்கும் இடையிலே கட்டப்பட்டிருக்கின்றன. அதிலே, 11 வீடுகள் 2015 ஆம் ஆண்டிலிருந்தே விற்காமல் இருக்கின்றன. இருந்தாலும்கூட, எங்கே அவசியம் இருக்கிறதோ, அதை ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் தேடித் தருவதற்கான நடவடிக்கையை*

2023 ஏப்ரல் 19]

எடுப்பதாகச் சொன்னார்கள். வீட்டுவசதி வாரியத்திலேதான் இடமில்லையே தவிர, அரசாங்கத்தினுடைய இடம் இருந்தால் அதைப் பெற்று நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாட்டை நாம் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

முற்பகல் 10–30

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட சென்னை–கிருஷ்ணகிரி–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கக்கூடிய பள்ளிகொண்டா பேரூராட்சி சற்றேறக்குறைய 25 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட பேரூராட்சியாகும். அந்த மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் அங்கே அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒடுகத்தூர் பேரூராட்சியானது சற்றேறக்குறைய 15 ஆயிரம் மக்கள்தொகையைக் கொண்ட ஒரு பேரூராட்சியாகும். வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 4 பேரூராட்சிகளில், 3 பேரூராட்சிகள் அணைக்கட்டு தொகுதியில் இருக்கக்கூடிய பேரூராட்சிகளாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால், ஒடுகத்தூர் பகுதியிலே சற்றேறக்குறைய ஐந்தரை ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சியில் கண்டிப்பாக அந்த இடத்திலே அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இருந்தால் கண்டிப்பாகச் செய்யலாம். இரண்டே இரண்டு விஷயங்கள். ஒன்று அங்கு இடம் வேண்டும். அடுத்தது, அங்கே தேவைகள் இருக்கின்றதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால், வீடுகள் கட்டி விற்காமலேயே பல இடங்களில் இருக்கிற காரணத்தால்தான், இதைப் பற்றி முன்னெச்சரிக்கையாக நாம் நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று கருதுகிறோம். இதிலே இப்போது வேறு மாதிரியான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. Land Pooling என்ற வகையிலே நில சேர்மானம் என்ற ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அதற்கான Bill கூட வருகிறது. எனவே, ஏதோ ஒரு வகையில் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு சென்னை போன்ற இடங்களிலெல்லாம் சரியான இடம் கிடைக்காத ஒரு நிலை உள்ளது. கோயம்புத்தூராக இருந்தாலும், மதுரையாக இருந்தாலும் இதே நிலைதான் உள்ளது. ஆனால், மும்பை, டெல்லி போன்ற இடங்களிலெல்லாம் இருக்கின்ற இடத்திலேயே 20 மாடிகள் அல்லது 30 மாடிகள் எனக் கட்டி, அதிகளவு வீடுகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். நிலமில்லாத நிலையில், இப்படிப்பட்ட நெருக்கடியான நகரங்களிலே 20 மாடிகள் அல்லது 30 மாடிகள் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி மக்களுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது ஒரு சரியான நடவடிக்கைதான். ஆனால் நமக்கு நடைமுறையிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், ஏற்கெனவே கட்டிய வீடுகளில் இன்னும் 8 ஆயிரம் வீடுகள் விற்காமல் இருக்கின்றன. அதன் காரணமாக, எங்கு அவசியம் என்பதை மிகத் தெளிவாக ஆய்வு செய்ய வேண்டுமென்று கருதுகிறோம். அவர்கள் சொல்வது நியாயமானது. எனவே, கோவை போன்ற மாநகரப் பகுதிகளில், அதற்கான ஆலோசனையைச் செய்யலாம்; நடவடிக்கை எடுக்கலாம்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பேரூராட்சிப் பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து அவ்வளவு தூரம் போய் விட்டார்கள். தனியாகக் கேள்வி கேட்க வேண்டும் என்பதில்லை. இருந்தாலும் அதைப் பற்றி நீங்கள் தற்போது கேட்டிருப்பதை வைத்தே ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரத்திலே அய்யந்திருமாளிகைப் பகுதியிலே வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் உள்ளன. இந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இந்தக் குடியிருப்புகள் * பழுதடைந்த நிலையிலே இருக்கிற ஒரு சூழ்நிலையிலே, இந்தக் குடியிருப்புகளை அகற்றிவிட்டு, புதியதாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் இரண்டு விதமாக இருக்கின்றன. ஒன்று வாடகைக்கு விடப்பட்டிருக்கிற குடியிருப்புகள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[*2023 ஏப்ரல் 19*

அவை வாரியத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். மற்றொன்று, ஏற்கெனவே அவை 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் விற்கப்பட்டவை. அவையும் பழுதடைந்து, தற்போது அவர்களும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டையும் உடனடியாகச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே சேலமும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் பேசும்போது, ** என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தைக்குப் பதிலாக பழுதடைந்த என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

185—

கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம்

***15351—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கரைப்பூண்டி பகுதியில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, கரைப்பூண்டி பகுதியில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் அமைப்பதற்குத் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

முற்பகல் 10–35

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலையில் மட்டும் தற்போது கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. 1989 ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட பின்பு தொடங்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம், வாடகைக் கட்டடத்தில்தான் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. திருவண்ணாமலையில் செயல்பட்டு வரும் இந்தப் பயிற்சி நிலையத்திற்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்ட அல்லது மாவட்டத்தின் மையப் பகுதியான போளூரில் ஒருங்கிணைந்த அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமானால், அதற்கான இடத்தையும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியையும் வழங்குகிறோம். மாநிலத்தில் இதுபோன்று எத்தனை மேலாண்மை கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் உள்ளன என்றும், அவற்றில் எத்தனை வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன என்றும், ஆண்டுதோறும் எவ்வளவு மாணவர்கள் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர் என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்தப் பயிற்சி நிலையம் திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழகத்தில் இதுவரை 22 பட்டயப் படிப்புகள் பயிற்றுவிக்கின்ற பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. தற்போது நடைபெற்ற மானியக் கோரிக்கையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கேட்டிருக்கிறார்; அதாவது நான் இடம் தருகிறேன், கட்டடம் வேண்டும் என்று*

[2023 ஏப்ரல் 19

சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை அந்தப் பகுதியில்—இப்போது இருக்கக்கூடிய இடத்தில் இரண்டு அறைகள்தான் இருக்கின்றன. வாடகைக் கட்டடத்தில்தான் இருக்கிறது. எதிர்காலத்தில் புதிதாக ஒரு பயிற்சி நிலையம் தொடங்குவதைவிட, இப்போது வாடகை கட்டடத்தில் தேவையான அளவிற்கு இடம் இருந்தாலும், எதிர்காலத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுத் துறை அலுவலர்களின் செயல் திறனை மேம்படுத்தும்பொருட்டு, புனே, ஆனந்த், பெங்களூரு, லக்னோ, கொல்கத்தா, பரிதாபாத், புதுடெல்லி ஆகிய இடங்களில் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கு அலுவலர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாகத் தமிழ்நாடு போற்றப்படுகிறது. இந்தியாவின் முதல் கூட்டுறவுச் சங்கம் 1904 ஆம் ஆண்டு, திருவள்ளூர் மாவட்டம், திரூரில் தொடங்கப்பட்டது. இதுபோன்ற பல முதன்மைகள் மாநிலத்தில் உள்ளன என்பதை அறிந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழு பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு மற்ற மாநிலங்களில் செயல்படும் பயிற்சி நிறுவனங்களைப்போல தேசிய அளவிலான கூட்டுறவு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாவட்டம், ஏழைகளின் இளவரசி என்று அழைக்கப்படுகின்ற ஏற்காடு, மஞ்சக்குட்டை பகுதியில் மாநில கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் நிதியிலிருந்து அமைக்க அரசாணைகள் வெளியிடப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு, 25% பணிகள் முடிந்துள்ள நிலையில், தற்போது இந்தப் பயிற்சி நிறுவனம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. ஏற்கெனவே கட்டடப் பணிகள் தொடங்கப்பட்ட ஏற்காட்டில் நிறுத்தப்பட்ட பணிகளை மீண்டும் தொடர இந்த அரசு ஆவன செய்யுமா எனக் கேட்டு அமர்கிறேன்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில் புதிதாகக் கொடைக்கானலில் இதுபோன்ற ஒரு பயிற்சி நிலையம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, எல்லா இடங்களிலும் பயிற்சி நிலையங்கள் அமைக்க வேண்டுமென்பது நோக்கம் அல்ல. இருக்கின்ற இடங்களில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பது ஏதுவாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி 25% வேலை முடிந்திருக்கிறது. அதனை மாற்றப் போவதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா, இல்லையா என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, மூலக் கேள்விக்கு தொடர்பில்லாதது. தேவையிருந்தால், அக்கறையிருந்தால், அதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், முழுமையான விவரம் அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

குடியிருப்புகள்

***48998—திரு. இ. பரந்தாமன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 19

எழும்பூர் தொகுதி, 5-வது மண்டலம், 61-வது வார்டு, அய்யாசாமி குடிசைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு அத்தொகுதிக்குள்ளேயே குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

எழும்பூர் தொகுதியில் புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.*

முற்பகல் 10-40

திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் தொகுதி, மண்டலம் 5, வார்டு எண் 61 அய்யாசாமி குடிசைப் பகுதி என்பது பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்ட ஒரு* arch canal *மேல் மக்கள் வசித்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு, அந்த* canal-*ஐ பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தால் மழைக் காலங்களில் வெள்ளத்தால் பாதிப்பு இல்லாமல் இருக்கும் என்ற காரணத்தினால்தான் அவர்களை குடியமர்த்த வேண்டுமென்றால், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் அவை வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்திவிட்டால் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகிற இடத்தில் இவர்களைக் குடியமர்த்தும்போது எதிர்காலத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்பில்லாமல் இருக்கும். அரசுக்கும் அதிகமான செலவில்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே மண்டலத்தில் வார்டு எண் 58-ல் சந்தோஷ் நகர் பகுதியில் 530 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இன்னும்

2023 ஏப்ரல் 19]

அவை மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவில்லை. மக்கள் வெளியிலே வாடகைக் கொடுத்து குடியிருந்து வருகிறார்கள். பல வருடங்களாக அவர்கள் வெளியிலே இருக்கிறார்கள். எனவே, எப்போது அந்தக் குடியிருப்பைப் பயனாளிகளுக்கு ஒப்படைப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தோஷ் நகர் பகுதியில் சிதலமடைந்த 272 குடியிருப்புகளை இடித்துவிட்டு, 6–3–2020 அன்று புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு, ரூபாய் 72 கோடியே 51 இலட்சம் மதிப்பீட்டில் 560 புதிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கான மின் இணைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, ஏற்கெனவே குடியிருந்த 272 குடியிருப்புதாரர்களுக்கு வீடுகள் வழங்கப்படும். எஞ்சியிருக்கிற வீடுகள் அந்தப் பகுதியிலே தகுதியுள்ள ஏழைகள் மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.*

திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரைவாக அவை ஒப்படைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா வருகின்ற ஜூன் மாதத்தில், ஏழையெளியோருக்கு எந்த வீட்டு வசதி வாரியத்தை அவர் உருவாக்கித் தந்தாரோ, அந்தத் தலைவருடைய நூற்றாண்டு விழாவின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் ஒப்படைத்தால் நன்றாக இருக்கும்.*

[2023 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று அதே மண்டலத்தில் கண்ணப்பர் திடல் பகுதி இருக்கிறது. அந்தக் கண்ணப்பர் திடல் பகுதியில் புதிதாகக் குடியிருப்புகள் கட்டுவதற்காக சென்னை மாநகராட்சியும், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியமும் இணைந்து கூட்டங்கள் நடத்தி இடத்தை மாநகராட்சி வசம் ஒப்படைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, மாநகராட்சி மாமன்றத்தினுடைய தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இரண்டு, மூன்று முறை அந்த இரண்டு துறைகளினுடைய அலுவலர்கள் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சி இடம் தருவதற்குத் தயாராக இருக்கிறது. நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினர் இந்த இடத்தைப் பயன்படுத்தி கட்டடத்தைக் கட்டி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முன்வருவார்களா; அந்தத் திட்டத்தை எப்போது நடைமுறைக்குக் கொண்டு வருவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, சந்தோஷ் நகரில் நிச்சயமாக நம்முடைய அரசு மீதம் இருக்கிற அந்தப் பயனாளிகளுக்கு இரண்டே மாதங்களில் வீடுகள் வழங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணப்பர் திடலைப் பொறுத்தவரையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு எண் 58-ல் உள்ள பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான, பழுதடைந்த நிலையில் இருந்த வணிக வளாகம் மற்றும் அதன் அருகில் உள்ள காலியிடத்தை இணைத்து 1.83 ஏக்கர் பரப்பிலே புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு மாநகராட்சியிடம் வாரியத்தால் இடம் கோரப்பட்டிருக்கிறது. புதிய இடத்தில் கட்டப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை மற்றும் பரப்பளவு குறித்த விவரங்களை, சென்னை மாநகராட்சியிடம் 3-8-2022 அன்று வாரியம் கோரியது. அதன்படி, இந்தத் திட்டப் பகுதியில் 400 சதுர அடி பரப்பில் 132 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, நிலத்தை ஒப்படைக்கக் கோரும் கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 17-1-2022 அன்று வாரியத்தால் அனுப்பப்பட்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 19]

இந்த நிலையிலே பெருநகர சென்னை மாநகராட்சி அதிகப்படியான குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமென்று கோரியதன் அடிப்படையிலே, 250 சதுர அடியிலே 594 வீடுகளும், 350 சதுர அடியிலே 577 வீடுகளும் கட்ட 2 plan-கள் போட்டு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சி எந்த design வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்த design படி வீடுகளைக் கட்டி, அந்தப் பகுதியிலே ஏழைகளுக்கு விரைவில் வீடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 187, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

188—

அங்கன்வாடி மையம்

***7565—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், 16-வது வார்டில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், பண்ருட்டி வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்குட்பட்ட 16-வது வார்டு ஈஸ்வரன்கோயில் தெரு பகுதியில் குழந்தைகள் மையம் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்போது அது அரசு இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் புதிய மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

[2023 ஏப்ரல் 19

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில் 11–வது வார்டில் சுமார் 2 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். நூற்றுக்கணக்கான குழந்தைச் செல்வங்கள் அங்கே இருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது, பக்கத்து வார்டான 17–வது வார்டில் ஓர் அங்கன்வாடி மையம் இருக்கிறது. அங்கு சமூகம் சார்ந்த சில பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத்தினால் ஒரு பகுதியில் இருக்கின்ற குழந்தைச் செல்வங்கள் 17–வது வார்டில் உள்ள குழந்தைகள் மையத்திற்குச் செல்வதில் சிரமங்கள் இருக்கின்ற காரணத்தினால், 2 ஆயிரம் மக்கள்தொகைக் கொண்ட, நூற்றுக்கணக்கான குழந்தைச் செல்வங்கள் உள்ள 16–வது வார்டு பகுதியில் ஓர் அங்கன்வாடி மையம் புதிதாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக பல்வேறு மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் செல்கின்றபோது மிக அற்புதமாக, அழகான கட்டடங்களுடன் அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருவதைப் பார்த்தோம். அப்படிப்பட்ட ஓர் அங்கன்வாடி மையத்தை இங்கு உருவாக்கி, சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குழந்தைகள் மையங்கள் தொடங்கிட தேவை எழும்பட்சத்தில், அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் மையங்களின் எண்ணிக்கைக்கு மிகாமல் மறுசீரமைப்புமூலம் மையங்களை இடமாற்றம் செய்தோ அல்லது வட்டாரங்களுக்கிடையே மாற்றம் செய்தோ சீரமைத்திட இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் அந்தப் பகுதியில் இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக இந்த அரசு அதனை ஆய்வு செய்து, புதிய மையம் அமைத்திட நடவடிக்கை எடுக்கும்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் எத்தனை அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன, அதில் எத்தனை மையங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன; எத்தனை மையங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், தமிழ்நாட்டிலுள்ள பல அங்கன்வாடி மையங்களின் கட்டடங்கள்* smart room *என்கிற அடிப்படையில்* TV, AC, *மின்விசிறி வசதிகள், இருக்கைகள் போன்ற அற்புதமான ஏற்பாடுகளுடன் இயங்கி வருகின்றன. குறிப்பாக, இது குழந்தைச் செல்வங்கள் செல்கின்ற இடம் என்பதால், அவர்களுக்காகத் தயாரிக்கப்படுகின்ற உணவுகள் மற்றும் சமையலறைக் கூடங்களெல்லாம் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சிறப்பு அனுமதியைப் பெற்று, தமிழ்நாட்டில் இந்தக் குழந்தைச் செல்வங்களுக்கான அங்கன்வாடிக் கட்டடங்கள் எங்குமே தனியார் கட்டடங்களில் இயங்கவில்லை, கூரைக் கொட்டகைகளில் இல்லை அல்லது ஒழுகுகின்ற இடங்களில் இல்லை அல்லது பல்லிகள் விழுகின்ற இடங்களில் இல்லை-பல்லிகள் என்று சொல்லும்போது, பல்லி விழுந்த உணவை குழந்தைகள் சாப்பிட்டு, சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடி மையங்களில் மயக்கமுற்றார்கள் என்ற செய்திகளெல்லாம் வருகின்றன. இவற்றைத் தவிர்க்கின்ற வகையில் அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களில் சிறப்பாக இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகள் மையங்களின் மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்து 439 ஆகும். அதில் தனியார் கட்டடங்களில் செயல்படும் மையங்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 654. பொதுவாக, இந்தக் கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி,*

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மற்றும் நகர்ப்புரங்களில் உள்ள கல்வி cess வரியின்மூலம் வரக்கூடிய தொகை ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டு வருகின்றன. மேலும், இந்த ஆண்டும் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் 500 புதிய கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்த அரசு தொடர்ச்சியாக புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுத்திடவும், அவற்றை smart வகுப்பறைகளாக மாற்றிடவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அங்கன்வாடி மையங்கள் மற்றும் சத்துணவுக் கூடங்களில் சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையலர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. ஒருவரே இரண்டு மூன்று இடங்களைப் பார்க்க வேண்டிய நிலையும் இருக்கிறது. அவ்வாறு உள்ள இடங்களில் தற்காலிகமாக ஊர் அளவில் ஒரு நபரை நியமித்து சமைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அமைப்பாளர் மற்றும் சமையலர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 19]

189—

மின்மாற்றி

***38432—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *கும்பகோணம் தொகுதி, அத்தியூர் ஊராட்சி, குருகூர் கிராமத்தில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *26–3–2021 அன்று உச்ச மின்நுகர்வு 16 ஆயிரத்து 481 மில்லியன் யூனிட் என்பதும், நேற்று 18–4–2023 அன்று 18 ஆயிரத்து 882 மெகாவாட் ஆக உயர்ந்தும், அதேபோல் ஒருநாள் அதிகபட்ச மின்சார பயன்பாடு என்பது 2019–2020–ல் 36.9 கோடி யூனிட் என்பது, நேற்று 18–4–2023 அன்று 41.30 கோடி யூனிட்டாக உயர்ந்தும் எந்தவிதத் தடையும் இல்லாமல் சீரான மின்சார விநியோகம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் ஊராட்சியில் உள்ள குருகூர் கிராமத்தில் மின்னழுத்தத்தை ஏற்றம் செய்வதற்கு அத்தியூர் மின்மாற்றியின் தாழ்வழுத்த மின்பாதையில் 727 மீட்டர் தூரத்திற்கு மின்கம்பிகளைத் தரமுயர்த்தும் பணி 12–10–2022 அன்று முடிக்கப்பட்டு, 2 மின்மாற்றிகள்மூலம் அப்பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2023 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியூர் ஊராட்சிக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் மொத்தம் 39 ஊராட்சிகள், 2 பேரூராட்சிகள், 48 வட்டங்கள் உள்ளன. மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ள அத்தியூர் ஊராட்சி, அதனை ஒட்டிய குருகூர், குமரன்குடி, பாதாரக்குடி, உத்தமதானி, தேவனாஞ்சேரி, விளந்தகண்டம், சோழபுரம், கோவிலாச்சேரி, அகராத்தூர், திருநல்லூர் போன்ற கிராமங்களில் மின்கம்பங்கள் சாய்ந்தும், மின்கம்பிகள் தொங்கியும், கூரையைத் தொடுவதுபோல் இருக்கின்ற காரணத்தினால் பல விபத்துகள் நடக்கின்றன. அப்படிப்பட்ட விபத்துகள் வருங்காலத்தில் நடக்காமல் இருப்பதற்கு நம்முடைய மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் அத்தியூர் ஊராட்சிக்கும், குமரன்குடிக்கும் மின்மாற்றி அமைத்துத் தருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் மாநகராட்சியில் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்ட பல பகுதிகள் இணைக்கப்படுவதால், இணைக்கப்படவிருக்கும் பகுதிகளில் இருமுனை மற்றும் மும்முனை மின்சாரம் என்று மாறிமாறி தற்போது வழங்கப்பட்டு வருவதால், அதனைத் தொடர்ந்து மும்முனை மின்சாரமாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் சீரான மின்சாரம் வழங்குவதற்காக 2 ஆண்டுகளில் 120 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள அத்தியூர் பகுதியில் கூடுதலாக மின்மாற்றி தேவையெனில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 ஏப்ரல் 19]

அதேபோல், சீரான மின்சார விநியோகத்திற்காக கும்பகோணம் தொகுதிக்கு மட்டும் 3 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். கும்பகோணம் மாநகராட்சியில் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் மும்முனை மின்சாரம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். துறையின் சார்பாக அலுவலர்களை அனுப்பி, அந்தப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு இலவச பம்ப்செட்டுடன் மின்சாரம் வழங்கிய மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி, மேலும் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் விவசாயிகளின் சார்பில் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கும்பகோணம் மாநகராட்சி, திருகொட்டையூர், பாலக்கரை உள்ளிட்ட 5 வட்டங்களில் குறைந்த மின்னழுத்தம் இருப்பதைத் தெரிந்து, பலதடவை நான் இந்த மாமன்றத்தில் 33/11 KV *துணை மின் நிலையம் வேண்டுமென்று உரையாற்றியிருக்கிறேன். மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கழக அரசு அமைந்ததற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கும்பகோணம் அரசு கலைக் கல்லூரிக்குப் பின்புறம் இடம் இருப்பதாகவும், அந்த இடத்தைத் தேர்வு செய்து, நிச்சயமாகச் செய்து கொடுப்பதாக உறுதியளித்தார். அப்படியென்றால், அந்தத் துணை மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா, அந்தப் பணி எந்த நிலையில் இருக்கிறது என்பதை கும்பகோணம் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

குடந்தையில் 12 தேர்கள் பவனி வருகின்ற தெருக்களின் பாதைகளில் புதைவடக் கம்பிகள் அமைத்துத் தருவதாக

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அந்தப் பணிகளின் முன்னேற்றம் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2.71 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, நிலம் வகைமாற்றம் செய்யக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய பணிகளுக்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு பணிகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. AK. செல்வராஜ் அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளியங்காடு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இடம் தருவதற்குச் சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்திருக்கிறது. ஆகவே, வெள்ளியங்காட்டில் ஒரு துணை மின் நிலையத்தையும்—அதேபோன்று காரமடை பகுதி, சிக்காரம்பாளையம் கிராமப் பகுதியில் அதிகமான அளவில் தொழில்களும், புதிய, புதிய தொழிற்சாலைகளும் வந்து கொண்டிருக்கின்றன—வடவள்ளி பகுதியில் மற்றொரு துணை மின் நிலையத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளியங்காடு பகுதியில் 1.19 ஏக்கர் நிலமும், வடவள்ளி பகுதியில் 2.88 ஏக்கர் நிலமும் தேர்வு செய்யப்பட்டு நில வகைமாற்றம் செய்யும் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. திட்ட மதிப்பீடுகள் முடிந்து, ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் முடிந்த பிறகு, அந்தப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பூண்டி ஒன்றியத்திலுள்ள கனகவல்லிபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்குரிய இடத்திற்கும்* enter upon permission *கொடுத்த பிறகு, அப்பணி கைவிடப்பட்டதாகத் தற்போது தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அதைக் கவனித்து, உடனே அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்குமாறு தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் இதைச் சுட்டிக்காட்டியிருந்தார்கள். துறையின் அதிகாரிகளுடன் பேசி, கனகவல்லிபுரத்தில் 14.88 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய துணை மின் நிலையம் அமைக்கக்கூடிய பணிகள் தொடர்ந்து செய்திட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட, தாராபுரம் சாலை–திருப்பூர் சாலைக்கு இடையில் 2 கி.மீ. புறவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றரை கி.மீ. அளவிற்கு இருவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அரை கி.மீ. அளவிற்கு ஒருவழிச் சாலையாக இருக்கிறது. மேலும், ½ கி.மீ. அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அந்த இடத்திற்கு, நகராட்சியில் 55 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்று மின்சார வாரியம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இது மூல வினாவிற்கு சம்பந்தமில்லாதது. துணை மின் நிலையம் வேண்டுமானால் கேட்க வேண்டும்.*

திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *துணை மின் நிலையம் இல்லை ஐயா.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அந்த இடப் பிரச்சினை குறித்து தனிக் கேள்வி கேட்க வேண்டும்.* (குறுக்கீடு)

திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நேற்று வரலாற்று நிகழ்வாக 41.30 கோடி யூனிட் மின் பயன்பாட்டுத் தேவையைத் தடையின்றி வழங்கிய திராவிட மாடல் அரசை வாழ்த்துகிறேன். ஆயிரம் விளக்கு தொகுதியில் அமைந்துள்ள சிவசங்கரன் மற்றும் ஹாரிங்டன் சாலைகளிலுள்ள மின்மாற்றியை* RMU *ஆக மாற்றியமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் பகுதிகளில், விடுபட்ட இடங்களில்* RMU *அமைக்கக்கூடிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதியில்* RMU *அமைக்கக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சேகர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

190—

மருத்துவமனைக்குக் கட்டடம்

***86653—திரு. S. சேகர்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பரமத்தி–வேலூர் தொகுதி, பரமத்தி–வேலூர் வட்ட மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *நாமக்கல் மாவட்டம், பரமத்தி–வேலூர் பேரூராட்சியில் 76 படுக்கைகள் வசதியுடன் வட்ட அரசு மருத்துவமனை ஒன்று மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, நவீன சமையலறை, குளிர்சாதன வசதியுடன்கூடிய பிணவறை, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு,* dialysis, *சித்தா பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் அங்கே*

இயங்கி வருகின்றன. மேலும், ஆய்வக வசதி, x–ray, ECG, Ultrasonogram வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கு போன்ற பல்வேறு வசதிகளும் அந்த மருத்துவமனையில் சிறப்பாக இருக்கின்றன.

இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடமும் தலா 10 கோரிக்கைகளைக் கேட்டிருந்தார்கள். மாண்புமிகு மன்ற உறுப்பினர் அவர்கள் தற்போது கேட்டிருக்கக்கூடிய கேள்வி அந்தக் கோரிக்கைகளில் ஒன்று. அதாவது, அவர் சொன்ன மருத்துவமனையை மேம்படுத்திட வேண்டுமென்பது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'உங்கள் தொகுதியில் 'முதலமைச்சர்' என்கின்ற திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட 10 கோரிக்கைகளில் ஒன்றை அனுமதித்து, அதற்கு 23 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Block) ஒன்றைக் கட்டுவதற்கு இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில், நேற்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது, விரைவில் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பரமத்தி–வேலூர் பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைக்கு நேற்று Critical Care Block நிறுவப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

திரு. S. சேகர்: *நேற்று Critical Care Block அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, புற நோயாளிகள் அதாவது வெளி நோயாளிகள் அங்கே வருவதற்கு இடம் போதுமானதாக இல்லை; கூடுதல் கட்டடம் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அங்கு செவிலியர்கள் மிகவும் குறைவாக இருக்கின்றனர். அதையும் பூர்த்தி செய்து கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் காலிப் பணியிடங்கள் இருப்பின், அவை உடனடியாகப் பூர்த்தி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், அங்கே கூடுதல் கட்டடங்களையும் கேட்டிருக்கிறார். நிதி வசதிக்கேற்ப இந்த ஆண்டு செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதைப்போல், பரமத்தி-வேலூரில் ஏற்கெனவே முசிறி துணை சுகாதார நிலையக் கட்டடம் ஒன்று ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.*

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல, மோகனூர் ஒன்றியம், பாலப்பட்டியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்படுத்தும் திட்டங்கள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, வடுகச்சேரி கிராமத்தில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. நாகைமாலி அவர்கள், இந்த ஆண்டின் அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்—அதற்கான திட்ட மதிப்பீடுகளை நான் உடனடியாகத் தயார் செய்யச் சொல்லி சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அவரை அணுகச் சொல்கிறேன்— அவர் உடனடியாகப் பரிந்துரை கடிதம் தருவாரேயானால், அங்கு சுற்றுச் சுவர் உடனடியாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. . . (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை மெரினா லூப் சாலையின் மேற்குப் பகுதியில் உள்ள மீன் கடைகளை அகற்ற சென்னை மாநகராட்சி எடுத்துவரும் நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை 7 மீனவக் கிராமங்கள் உள்ளன. இங்கு காலங்காலமாக வசித்து வரும் மீனவ மக்கள் கடற்கரைக்கும் தாங்கள் வசித்து வரும் இருப்பிடங்களுக்கும் இடையே உள்ள பயன்பாட்டு இடங்களை நாள் முழுவதும் பயன்படுத்தி வருகிறார்கள். கடற்கரையில் கட்டுமரங்கள்,* fibre *படகுகள், பெருவலை படகுகள் ஆகியவற்றை நிறுத்தியும் வைக்கின்றனர். இதுமட்டுமல்லாமல், கடற்கரையை மீன்கள் இறங்குதளமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். பின்னர், இந்த மீன்களைச் சாலைக்கு மேற்குப் பகுதியிலுள்ள கடைகளுக்கு எடுத்து வந்து வியாபாரமும் செய்கின்றனர்.*

சென்னை நகரை அழகுபடுத்துகிறோம் என்று சாலைக்கு மேற்கில் உள்ள கடைகளை அகற்ற சென்னை மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக மீனவ மக்கள் தெரிவிக்கின்றனர். இது மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாக இருக்கிறது. நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள மீனவ மக்களின் மீன்பிடித் தொழில், மீன் வியாபாரம் மற்றும் மீனவர்களின் குடியிருப்பு ஆகியவற்றிற்காக பாரம்பரியமாகப் பயன்படுத்திவரும் மெரினா கடற்கரை, Loop Road*-ஐ மீன்பிடித் தொழில் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்க வேண்டுமென்று மீனவ மக்கள் கோரிக்கையும் வைக்கின்றனர். பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடித் தொழில், மீன் வியாபாரம் செய்யும் இடங்கள், படகுகளை நிறுத்தும் இடங்கள், கடலில் மீன்பிடித் தொழில் செய்யும் இடங்கள், மீன் இனப்பெருக்கம் செய்யும் இடங்கள் குறித்து அறிவியல் ரீதியாக வரைபடம் தயாரிக்கப்பட வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றம்* Writ Petition *எண் 29928/2019-ல் வழங்கியுள்ள தீர்ப்பினையும் நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று மீனவ மக்கள் கோரிக்கையும் வைக்கின்றனர். ஆகவே, மீனவர்களின் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு கனிவுடன்*

பரிசீலித்து அவர்களுடைய வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதே பொருள் குறித்து மாமன்ற உறுப்பினர்கள் திரு. S.S. பாலாஜி, திரு. ம. சிந்தனை செல்வன், திரு. தி. வேல்முருகன், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. அருள், திரு. வி.பி. நாகைமாலி மற்றும் திரு. மா. சின்னதுரை ஆகியோரும் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடத்தில் அரசின் கவனத்தை ஈர்த்து அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், ஒரு நிமிடத்தில் அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கடற்கரையோரங்களில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்ற மக்கள் மீனவர்கள். அவர்களுக்கு அந்தத் தொழிலை விட்டால் வேறு தொழில் கிடையாது. விவசாயிகள் எப்படி விளைநிலங்களில் விவசாயம் செய்கிறார்களோ, அதுபோல் எனதருமை மீனவ மக்கள், கடலோடிகள் கடலை நம்பித்தான் வாழ்கிறார்கள். குறிப்பாக, தற்போது போராடி வருகின்ற நொச்சிக்குப்பம், பட்டினப்பாக்கம் பிரதான சாலையில் வாழ்கின்ற மீனவர்கள் அங்கே பன்னெடுங்காலமாக மீன் பிடித்து, வலைகளை உலர்த்தி, படகுகளை நிறுத்தி வருகிறார்கள்; அதையொட்டி அவர்களுடைய குடியிருப்புகளும் இருக்கின்றன. அரசின் சார்பாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளிலும் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீதிமன்ற விவகாரங்களையெல்லாம் பேச வேண்டிய அவசியம் இல்லை.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசவில்லை.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இது சட்டமன்றம். இங்கு அதுகுறித்து விவாதிக்கலாம். அந்த அடிப்படையில்தான் நான் சொல்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு; நாளை மக்களைச் சந்தித்து வாக்கு கேட்க வேண்டிய பிரதிநிதிகளைக் கொண்டது இந்த அவை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் விஷயத்திற்கு வாருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *விஷயத்திற்கு வந்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் ஆலோசனையெல்லாம் இருக்கட்டும்; விஷயத்திற்கு வாருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்கிவிடுகிறேன். அதெல்லாம் தேவையில்லை.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, பிறகு நீக்கிவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பொத்தாம்பொதுவாக அதையெல்லாம் சொல்ல வேண்டாம். தயவுசெய்து இந்த விஷயத்தைப் பற்றி மட்டும் பேசிவிட்டு அமருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இதிலே ஒரு கொள்கை முடிவு எடுக்க வேண்டும். ஏழையெளிய மக்களை, கிராமப்புற மக்களை, மீனவ மக்களை, கடல் தொழில் செய்கிற மக்களை, அவர்களுடைய வாழ்விடமான அவர்களுடைய சொந்தப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தக் கூடாது. அதற்கான முயற்சிகளை நம்முடைய தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2023 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: ** இதுபோன்ற தீர்ப்புகள் வருகின்றபோது, நாம் வலுவாக நம்முடைய வாதங்களை எடுத்து வைத்து, அவர்களை அப்புறப்படுத்தாவண்ணம், அந்த மக்கள் அந்தப் பகுதியில் வாழ்வதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்கு உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து, காவல் துறையும், மாநகராட்சியும் அவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்ற வேண்டுகோளையும் முன்வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும்; விதி எண் 92(vii)–ல் நீதிமன்றம், நீதிபதிகள், குடியரசுத் தலைவர், ஆளுநர் ஆகியோரைப் பற்றி எதுவுமே பேச முடியாது என்று மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் நீதிமன்றக் குறிப்புகள் பற்றி பேசியது, நான் பேசியது உட்பட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரில் மிதந்து கண்ணீரோடு வாழக்கூடியவர்கள் மீனவப் பெருமக்கள். மீனவப் பெருமக்களின் வாழ்வாதாரம் என்பது மீன்பிடித் தொழில்தான். இந்தச் சூழலில், சில நாட்களாக, சென்னை தலைநகரை ஒட்டியிருக்கிற பட்டினப்பாக்கம் பகுதியின் சுற்று வட்டாரத்தில் இருக்கிற மீன் விற்பனை நிலையங்கள் அகற்றப்பட வேண்டும் என்று அச்சுறுத்திய காரணத்தால், மக்கள் மத்தியில் ஒரு பெரிய பதற்ற நிலை உருவாகியிருக்கிறது. குறிப்பாக, தலைநகர் சென்னை என்பது மக்கள் தொகை அதிகமாக இருக்கிற பகுதியாகும். அங்கு மீன் தேவைகளும் அதிகமாக இருக்கின்றன. சென்னை திருவொற்றியூரிலிருந்து, அதையொட்டியிருக்கிற ராயபுரம், பட்டினப்பாக்கம் பகுதிகளிலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 19] [திரு. ஜி.கே. மணி]

இருக்கிற நீண்ட கடற்கரை முழுவதும் மீனவப் பெருமக்கள்தான் இருக்கிறார்கள். மீன்களைப் பிடித்தவர்கள் கட்டாயம் அதனை விற்பனை செய்ய வேண்டும். அவ்வாறு விற்பனை செய்கின்றபோது, இந்தப் பகுதியில் விற்கக் கூடாது, அந்தப் பகுதியில் விற்கக் கூடாது என்ற சூழல் ஏற்படுகின்ற காரணத்தால், அங்கே மக்கள் மத்தியில் பதற்ற நிலையும், வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்ற நிலையும் ஏற்படுகின்றன. எனவே, அரசு கனிவோடு இதைப் பரிசீலிக்க வேண்டும். மீன்களையும், கருவாடுகளையும் விற்பதற்கு மீனவப் பெருமக்களுக்கு இடங்களை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். அகற்றப்படக் கூடாது. ஆகவே, மீனவப் பெருமக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது, தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது, மீன்பிடித் தொழில் மிக முக்கியமான தொழில் என்பதாலும், அதனையே அவர்கள் நம்பி வாழக்கூடியவர்கள் என்கின்ற காரணத்தினாலும், பட்டினப்பாக்கம் பகுதியோடு சேர்த்து மற்ற பகுதிகளிலே மீனவப் பெருமக்கள் எங்கெல்லாம் மீன் பிடிக்கிறார்களோ, அவர்களுக்கு மீன் விற்பனை செய்வதற்கு அதிக இடங்களை ஒதுக்கித் தர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா loop road என்ற அந்தச் சாலையை உருவாக்குவதற்கு முன்பாகவே, அந்தப் பகுதியிலே மீனவர்கள் மீன்களை விற்று, தங்களுடைய வாழ்வாதாரத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் மீனவர்களுடைய வாழ்விடமாக இருக்கிறது. வளர்ச்சி, போக்குவரத்து இடையூறு என்ற பெயரிலே மீனவர்களை அந்தப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவது ஒரு சரியான செயலாக அமையவில்லை. எனவே, உயர் நீதிமன்றம் இந்தக் கடைகளை அகற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தாலும்கூட, மீனவர்களுடைய நலனிலே என்றென்றும் அக்கறையுள்ள நம்முடைய அரசு, loop road என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியில் மீன் கடை வைத்து பிழைக்கக்கூடிய அந்த மீனவர்களுடைய வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்குக் கொள்கை முடிவு எடுத்து, அவர்களுடைய

வாழ்வாதாரத்தைக் காப்பதனுடைய அவசியத்தை வலியுறுத்தி அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சென்னை கடற்கரைக்குப் பக்கத்திலே இருக்கிற நொச்சிக்குப்பம் மீனவ கிராமத்து மக்கள் தினமும் கட்டுமரத்தில் சென்று மீன்பிடித்து, அந்தப் பகுதியில் விற்பனை செய்து, தங்களுடைய வாழ்வாதாரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த லூப் சாலை அமைக்கப்படுவதற்கு முன்பாகவே, அந்தப் பகுதி மீனவர்கள் மீன் விற்கின்ற இடம் அந்த இடம். தற்போது லூப் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த லூப் சாலை அமைக்கப்பட்ட பிறகு, அங்கே போக்குவரத்து இருக்கிறது. ஆகவே, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்லி, ஆயிரக்கணக்கான மீனவ மக்களுடைய வாழ்வாதாரத்தைச் சீர்குலைப்பது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். ஆகவே, உடனடியாக நம்முடைய அரசு தலையிட்டு, அந்த மீனவ மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

***திரு. ம. சிந்தனை செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் உள்ளிட்ட அனைத்து விளிம்பு நிலை மக்களின் நலன்களில் எப்பொழுதும் உரிய கவனத்தையும், தாயன்போடு அவர்களது பிரச்சினையைப் பார்க்கக்கூடிய மேலான அணுகுமுறையும் நம்முடைய தமிழக அரசு கொண்டிருக்கிறது. மீனவப் பெருமக்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். காலங்காலமாக தாங்கள் வாழ்ந்து வருகிற, தாங்கள் வியாபாரம் செய்து வருகிற அந்தப் பகுதியிலே நீதிமன்றம்,* suo moto *என்று சொல்லக்கூடிய வகையில் தலையிட்டு சில அறிவுரைகளை வழங்கியிருக்கிறது. நீதிமன்றம் பார்க்கத் தவறிய இதரப் பகுதிகள் அவர்களின் வாழ்வாதாரமாக இருக்கிறது. நீண்ட நெடிய காலமாக அவர்கள் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள்*

2023 ஏப்ரல் 19] [திரு. ம. சிந்தனை செல்வன்]

ஆக்கிரமிப்பாளர்கள் இல்லை என்பதற்கான அனைத்து ஆதாரங்களையும் அரசு உரிய முறையில் தந்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரைப் பணயம் வைத்து தினந்தோறும் தங்கள் வாழ்வாதாரத்திற்காகப் போராடி வருகின்ற மீனவர்களுடைய எதிர்காலம் இன்றைக்குக் கேள்விக்குறியாகியிருக்கிறது. தெருவோரங்களிலே, சாலையோரங்களிலே அன்றாடம் தம்முடைய வாழ்வாதாரத்திற்காகக் காலங்காலமாக அவர்கள் மீன் வியாபாரம் செய்து வருவது எல்லோரும் அறிந்த ஒன்று. அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் நீதிமன்றம் இன்றைக்கு உத்தரவிட்டிருக்கின்றது என்ற அடிப்படையில், அங்கே கையாள்கின்ற முறை என்பது மிகப் பெரிய பதற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. ** அவர்களெல்லாம் நிரந்தரமாக அங்கே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். அந்த விஷயத்திற்கு மட்டும் வாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

முற்பகல் 11–15

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நிரந்தரமாக, காலங்காலமாக மீன் வியாபாரம் செய்து வருகிறார்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்வாதாரம் இன்றைக்குக் கேள்விக்குறியாகியிருக்கிற காரணத்தினாலே, மிகச் சிறந்த வழக்கறிஞர்களை வைத்து, நீதிமன்றத்திலே வாதாடி அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு—பட்டினப்பாக்கம் போன்ற பகுதிகளிலெல்லாம் தலைமுறை தலைமுறையாக அவர்களுக்கு வேறு எந்தத் தொழிலும் தெரியாது—அவர்கள் காலங்காலமாக,*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

தலைமுறை, தலைமுறையாக அந்தத் தொழிலைத்தான் நம்பியிருக்கிறார்கள். அந்த மீனவர்களினுடைய எதிர்காலம் இன்றைக்குக் கேள்விக்குறியாக இருக்கின்ற நிலையிலே, அவர்களுக்கு மாற்று ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. அவர்கள் வாழ்வாதாரத்திற்கு எங்கே செல்வார்கள்? மீன் பிடித்து, அந்த மீன்களையெல்லாம் மீண்டும் கடலிலே கொட்டுவதா என்று அந்த மீனவர்கள் தினந்தோறும் கண்ணீர் வடிக்கின்ற காட்சி, மனசாட்சி உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் வேதனையைத் தருவதாக இருக்கிறது. ஆகவே, இதனை உரிய கவனத்திலே எடுத்து, அந்த மீனவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கும், நீதிமன்றத்திலே சிறந்த வழக்கறிஞரை நியமித்து வாதாடி, மீனவர்களைப் பாதுகாப்பதற்கும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. வேலு அவர்கள்.*

திரு. த. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசியவர்களெல்லாம் மீனவர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அது தவறு. கடந்த வாரம் நீதிமன்ற உத்தரவின்படி கிழக்குப் பக்கத்தில் வியாபாரம் செய்கின்ற மீனவர்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. மேற்குப் பக்கத்தில் இருக்கின்ற 100 கடைகள், கொஞ்சம் நெரிசல் இருக்கின்ற காரணத்தினால், ஆக்கிரமிப்பாளர்களாக இருந்தால், அதை அகற்றிட வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல, பட்டினப்பாக்கத்திலே உள்ள உணவகங்களை அப்புறப்படுத்த வேண்டுமென்றுதான் சொன்னார்கள். ஆனால், கடந்த 2, 3 நாட்களாக ஒட்டுமொத்தமாக மீனவர்களை அகற்ற வேண்டிய சூழ்நிலை என்ற ஒரு தோற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; நிச்சயம் அது இல்லை. கடந்த இரண்டு நாட்களுக்கு முன் அதிகாரிகளிடம் பேசி, அவர்களுக்கு உரிய வழிமுறைகளை நாங்கள் செய்கிறோம் என்று உத்தரவாதம் அளித்து, இன்றைக்கு அந்த வழக்கு நீதிமன்றத்திலே வரவிருக்கிறது. நமது அரசு சார்பாக அவர்களுக்கு உத்தரவாதமும் அளித்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நேற்று இரவுகூட அவர்களிடம்*

2023 ஏப்ரல் 19] [திரு. த. வேலு]

பேசியிருக்கிறோம். உங்களுடைய வாழ்வாதாரம் எந்தவிதத்திலும் பாதிக்காது என்ற உத்தரவாதத்தை இந்த அரசு கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அகற்றப்படும் என்ற அந்த வார்த்தைக்கே இடமில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு உதவிட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு மீனவர்கள் நலனிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் தொடர்ந்து தனிக் கவனம் செலுத்தி வருகிறது என்பதை நாட்டு மக்கள் அனைவரும் நன்றாகவே அறிவார்கள். குறிப்பாக, மீனவ மக்களுக்கு முதன்முதலில் கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்தது கழக அரசு; மீனவர்களுக்கு நல வாரியம் அமைத்தது கழக அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்கள் பயன்படுத்தும் டீசலுக்கு மானியம் வழங்கியது கழக அரசு; மீனவர்களுக்கு வழங்கிய கூட்டுறவுக் கடன் 96 கோடி ரூபாயை தள்ளுபடி செய்தது கழக அரசு; மீனவர்களுக்கான சுனாமி வீடுகளைக் கட்டித் தந்தது கழக அரசு; மீன்பிடித் தடைக் காலங்களில் உதவித் தொகை வழங்கியது கழக அரசு; மீனவர்கள் கடலில் காணாமல் போனால், அவர்கள் திரும்பி வரும்வரை அக்குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கியதும் கழக அரசு. தமிழகத்தின் மாண்புமிகு முதல்வராக வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, மீன்பிடித் தடைக் காலத்திற்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை ரூ.5 ஆயிரத்தை ரூ.6 ஆயிரமாக கருணை உள்ளத்தோடு வழங்கியிருப்பவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

அதுமட்டுமல்ல, கடலரிப்பு உள்ள பகுதிகளுக்குத் தூண்டில் வளைவு அமைப்பதற்குப் பெரும்பகுதியான நிதியொதுக்கீட்டைச் செய்திருப்பவரும் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள். அதோடுமட்டுமல்லாது, பழவேற்காடு, திருவொற்றியூர், ஆலம்பரை உள்ளிட்ட 13 இடங்களில் சிறு மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பவரும் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்.

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 19

அதோடுமட்டுமல்ல, மீனவர்கள் கடலில் இறந்து போனால், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையை மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியிருப்பதும் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்கள் நீண்ட தூரம் படகுகளில், கப்பல்களில் மீன் பிடிக்கச் செல்லும்போது, அவர்களைத் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக Walkie-Talkie தொலைத் தொடர்பு வசதியை செய்து தந்ததும் கழக அரசு. இப்படி ஏராளமான பணிகளைக் கழக அரசு தொடர்ந்து அவர்களுக்குச் செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களும், மரியாதைக்குரிய திரு. வேல்முருகன், அண்ணன் திரு. ஜி.கே. மணி, மரியாதைக்குரிய முனைவர் ஜவாஹிருல்லா, திரு. வி.பி. நாகைமாலி, திரு. சிந்தனை செல்வன், மரியாதைக்குரிய திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. த. வேலு போன்றவர்கள் இந்த அரசின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயகுமார் அவர்கள் பேசும்போது ** என்று சொன்னார்கள். உண்மையிலேயே மாண்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலு அவர்கள் சொன்னதைப்போல. . .

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தையை ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். தற்போது, நீங்கள் சொன்னதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் நேற்று நான் இந்த மன்ற நடவடிக்கைகளில் கலந்துகொண்டிருந்தபோது, மாலை 6–30 மணிக்கு அந்த மீனவ மக்களின் பிரதிநிதிகள் 20 பேர் மாநகராட்சி ஆணையரிடம் பேசுவதற்காக வருகை தருகிறார்கள். எனவே, நீங்களும், மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் சென்று மாநகராட்சி அலுவலகத்தில் அவர்களோடு பேசி, ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 19] [திரு. மா. சுப்பிரமணியன்]

சுமூகத் தீர்வை எட்ட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். அந்த வகையில், இரவு 7–00 மணிக்குச் சென்ற நாங்கள் இரவு 11–00 மணிவரை 4 மணிநேரம் அவர்களுடன் பேசினோம். இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் எடுத்துச் சொன்னதைப்போல, உயர் நீதிமன்றத்தில் suo motu ஆக வந்த ஒரு வழக்கு. அந்த வழக்கின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒரு சிறிய அளவிலான நடவடிக்கை. இந்தச் சூழலில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுறுத்தி அனுப்பியது என்னவென்றால், மீனவர்களுடைய வாழ்வாதாரம் எந்த நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் சொன்னதைப்போல, மீனவர்களுக்கான ஓர் அடிப்படை அந்த நொச்சிக்குப்பம். தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மீனவர்களுக்கான குடியிருப்புகள் இருந்தாலும், அதிகமான மீனவர்கள் கடலை நம்பியே தொழில் செய்து கொண்டிருப்பது என்பது நொச்சிக்குப்பத்தில் மட்டும்தான். அதுமட்டுமல்ல, சென்னைவாசிகளுக்கு fresh fish வேண்டுமென்றால், நொச்சிக்குப்பம் போகலாம் என்கிற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரிய ஆறுதலான இடமாகவும் அது இருந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் அங்கே மக்கள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமலும் இருக்க வேண்டும்; அதே நேரத்தில் மீனவர்களுடைய வாழ்வாதாரமும் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நேற்று அவர்களிடத்தில் பேசி பெரும்பகுதியான தீர்வு காணப்பட்டுவிட்டது. தீர்வு காணப்பட்டுவிட்டதால்தான் நேற்றுவரை 2, 3 நாட்கள் போக்குவரத்தைத் தடை செய்து வைத்திருந்த அவர்கள், போக்குவரத்து சீராகி, இன்று காலை நொச்சிக்குப்பம், லூப் சாலையில் மீனவச் சங்கப் பிரதிநிதிகளே போக்குவரத்தை முறைப்படுத்தி, போக்குவரத்து சீராகச் சென்று கொண்டிருக்கிறது.

அதையும் கடந்து இந்த அவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எடுத்த மிகத் தீவிரமான நடவடிக்கையின் காரணமாக, இங்கு பேசிய மன்ற

உறுப்பினர்கள் சொன்னதைப்போல, மூத்த வழக்கறிஞர்களை இந்த வழக்கில் வழக்காடச் செய்து, மீனவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தர வேண்டும்; அவர்களுடைய உரிமையைப் பாதுகாத்திட வேண்டும்; அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திட வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், இன்று காலை, தற்போதுதான் அந்த வழக்கு நீதிமன்றத்தில் வந்தது. நீதிமன்றத்தில் நம்முடைய வழக்கறிஞர்கள் வைத்த வலுவான வாதங்களினால் மீனவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் இருபுறமும், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கிழக்கு என்று சொன்னார். கிழக்கிலும், மேற்கிலும் கடை வைத்துக்கொள்வது என்பது மீனவர்களுடைய விருப்பம். கிழக்கில் மட்டுமல்ல, மேற்கிலும் கடை வைத்துக்கொள்ள வேண்டும் என்பது, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் விடுத்த அந்த வேண்டுகோளை ஏற்று, நம்முடைய மூத்த வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் அந்த வாதத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். கிழக்கு, மேற்கு இருபுறமும் கடைகள் வைத்து, எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல், தங்குதடையில்லாமல் மீனவர்கள் வியாபாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். அதனால் போக்குவரத்திற்கு எந்தவிதத்திலும் இடையூறு இருக்காது என்பதையும் தன்னுடைய வாதத்திலே வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்கள் உயர் நீதிமன்றத்தில் அதற்கான ஓர் உத்தரவாதத்தையும் இன்றைக்கு எழுதித் தந்திருக்கிறார். அதாவது, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் இருபக்கமும் மீனவர்கள் வியாபாரம் செய்துகொள்வதை நான் உறுதிப்படுத்துகிறேன் என்று சொல்லி, அவரும் ஒரு Affidavit தாக்கல் செய்திருக்கிறார். இந்த நிலையில், வழக்கு 19-6-2023-க்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, பிரச்சினை இன்று காலையோடு முடிவுக்கு வந்துவிட்டது. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கவன ஈர்ப்பு

(அ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் மற்றும் நத்தம் பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். காந்திராஜன் மற்றும் திரு. ஐ.பி. செந்தில்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்.*

***திரு. எஸ். காந்திராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் மற்றும் நத்தம் பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை என்னுடைய சார்பிலும், மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் சார்பிலும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வேடசந்தூர் வட்டங்களில் மற்றும் இதர இடங்களில் சமீபத்தில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து அம்மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றது. இதன் தொடர்ச்சியாக, நில அதிர்வுக்கான தேசிய மையத்தின் இயக்குநர் அவர்களிடம் பாதிக்கப்பட்ட

இடங்களில் ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து, அதன் அறிக்கையினை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், சென்னை அண்ணா பல்கலைக்கழக காலநிலை மற்றும் பேரிடர் மேலாண்மை மைய இயக்குநர் மற்றும் வேலூர் தொழில்நுட்ப நிறுவன (VIT) காலநிலை மற்றும் பேரிடர் தணிப்பு மைய இயக்குநர் ஆகியோர்களிடம் திண்டுக்கல் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நில அதிர்வு குறித்து ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து அதன் அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதன்படி, வேலூர் தொழில்நுட்ப நிறுவன (VIT) காலநிலை மற்றும் பேரிடர் தணிப்பு மைய இயக்குநரால் இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ள சிறப்பு பேராசிரியர் நியமனம் செய்யப்பட்டு ஆய்வு மேற்கொண்டுள்ளார். மேலும், சென்னை அண்ணா பல்கலைக்கழக காலநிலை மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநரால் இதுகுறித்து ஆய்வு செய்ய நான்கு நபர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, மேற்படி குழுவால் 1–4–2023 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், தலைநகர் திண்டுக்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுமார் 25 கி.மீ. தொலைவிற்குட்பட்ட எனது வேடசந்தூர் தொகுதியில் அமைந்துள்ள வேடசந்தூர் மற்றும் வடமதுரை ஒன்றியங்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியின் வடக்கு பகுதியான ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தின் கிழக்குப் பகுதி, நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி ஒன்றியம் போன்ற பல பகுதிகளில் திடீர், திடீரென்று பயங்கரமான அளவில் ஒரு வெடிச்சத்தம் கேட்பது தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த மாதம் 18–3–2023 அன்று காலை சுமார் 11 மணியளவில் கதவு, ஜன்னல்கள் அதிரும்வண்ணம்

2023 ஏப்ரல் 19] [திரு. எஸ். காந்திராஜன்]

நிலநடுக்கம் போன்ற வெடிச் சத்தம் திண்டுக்கல் ஆர்.எம். காலனியில் உள்ள எனது வீடு மற்றும் அருகிலுள்ள வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் உணரப்பட்டது. அங்கு வசித்துவரும் பொதுமக்கள் குழந்தைகளோடு வீடுகளிலிருந்து வெளியேறி பதற்றத்துடனும், பயத்துடனும் தெருவுக்கு ஓடிவந்தனர் என்பதிலிருந்து இது எவ்வளவு சக்திவாய்ந்த வெடிச் சத்தம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். இங்கு வெளிவருகிற தினமலர், தினத்தந்தி, தி இந்து போன்ற முக்கிய நாளிதழ்களில் இந்தச் செய்தி வெளிவந்தது. இது இயற்கையாக நடக்கின்ற நிகழ்வா அல்லது மனிதர்களால் உருவாக்கப்படுகின்ற செயல்களா என்பதை சம்பந்தப்பட்ட துறையின் வல்லுநர்கள் மூலமாக விரைந்து அறிந்து, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமாக இந்தப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும். இத்தகைய வெடிச் சத்தங்களால் எவ்வித பாதிப்பும் இல்லை என்பதை மக்கள் தெரிந்துகொண்டு அவர்களின் பயம் நீங்குகின்ற வகையில் அரசு அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, திண்டுக்கல், திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த ஓராண்டில் மட்டும் தொடர்ந்து 15 முறை அதிக ஒலியுடன்கூடிய நில அதிர்வுகள் உணரப்பட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அளித்துள்ளார்கள். அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு வேண்டிய தகுந்த நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த அடிப்படையில், அந்தப் பகுதியில்* Mines *ஏதாவது இருக்கிறதா என்பதையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். அந்தப் பகுதியில்* Mines *இருக்குமென்று சொன்னால், வெடி வைக்கின்றபோது அதிர்வு வரும் என்று பார்த்தோம். அப்படி அந்தப் பகுதியில்* Mines *எதுவும் இல்லை. ஆகவே, என்னுடைய துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் மூலமாக நில அதிர்வுக்கான தேசிய மையத்தின்*

இயக்குநர் அவர்களையும், அண்ணா பல்கலைக்கழகத்தின் பேரிடர் மேலாண்மை மைய இயக்குநர் அவர்களையும், வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பேரிடர் தணிப்பு மைய இயக்குநர் அவர்களையும் ஒரு கமிட்டியாக அமைத்து எதற்காக இந்த வெடிச் சத்தம் வருகிறது என்பதை ஆராயச் சொன்னோம். அங்கே Mines-ம் இல்லாமல் இயற்கையாக அந்தப் பகுதியிலே வருகிறது என்று சொன்னால் என்ன காரணம் என்று அறிவதற்காகக் கமிட்டி அமைத்ததன் அடிப்படையில் எங்களுக்கு ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

அதில் பார்த்தோமென்று சொன்னால், நம்முடைய திண்டுக்கல் மாவட்டம், நில அதிர்வில் தரம் 2 அல்லது 3-வது வரிசைகளில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். 2, 3-ல் உள்ளதால் அதன்மூலம் நிலநடுக்கம் வருவதற்கான வாய்ப்பு இல்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், கடைசியாக வரவேண்டிய அந்த அறிக்கையைப் பொறுத்து, அதன்மீது தகுந்த நடவடிக்கை எடுத்து மக்களுக்குப் பயமில்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டிய பணியை நிச்சயமாக அரசு செய்யும். குறிப்பாக நில அதிர்வுக்கான தேசிய மையத்தின் நிபுணர்களை வரவழைத்து அதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான விளக்கத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே, இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்களிடம் விவரம் கேட்டளவில் அவர்களும் இந்த வெடிச் சத்தம் எதனால் ஏற்படுகிறது என்பதை ஆராய அனுமதி கேட்டுள்ளோம்; இதுவரை தெளிவான விளக்கமளிக்க இயலாத நிலை உள்ளதாகத் தெரிவித்தார்கள். அதனுடைய அடிப்படையில்தான் நான் கூடுதலாகக் கேள்விகளை இங்கே கேட்டிருக்கின்றேன். வருமுன் காப்போம் என்னும் சீரிய தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு

எதிர்காலத்தில் இப்பகுதி பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தைப்போன்று துறையின் வல்லுநர்களின் மூலமாக நடவடிக்கையை மேற்கொண்டு இந்த வெடிச் சத்தம் மற்றும் நில அதிர்வுக்கான தீர்வை விரைந்து காண வேண்டுமென்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்களின் சார்பிலும் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், மாவட்ட ஆட்சித் தலைவரிடம், பல தடவை வெடிச் சத்தம் வருவதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்கச் சொன்னதில், அந்தப் பகுதி முழுவதிலும் mines இல்லை; ஆனால், சத்தம் வருகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவரும் சொல்லியிருக்கிறார். சென்ற ஆண்டில் மட்டும் 15 தடவை இதேபோல வந்திருக்கிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்குக் கடிதம் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது எங்களுடைய கவனம், தேசிய நிலநடுக்க மையத்தின் நிபுணர்களை வைத்து ஆராய்ச்சி செய்தால்தான் அதற்கு ஒரு தீர்வு வரும் என முடிவு செய்து அதற்கு வேண்டிய அறிக்கை தயார் செய்வதற்கு நிபுணர்களை அழைத்திருக்கிறோம். அவர்கள் வந்து அறிக்கை கொடுக்கும் நேரத்தில் இதற்கொரு முடிவான பதிலை அல்லது நிறைவான வேலைகளை இந்த அரசாங்கம் செய்து கொடுக்கும்.

(ஆ) வணிக வரி நிலுவையை வசூலிக்க சமாதான் திட்டம் கொண்டு வருவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வணிக வரி நிலுவையை வசூலிக்க சமாதான் திட்டம் கொண்டு வருவது” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான வரி விதிப்பானது 2017 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளன்று அறிமுகம் செய்யப்பட்டது. அதன்படி நீக்கம் செய்யப்பட்ட

(i) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்,

(ii) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரிச்) சட்டம்,

(iii) 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்,

(iv) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரங்கள் வரிச் சட்டம்,

(v) 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவுமீது வரிச் சட்டம்,

(vi) 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீது வரிச் சட்டம்,

(vii) 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்,

(viii) 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம்,

(ix) 1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தைய வரிச் சட்டம், மற்றும் தற்பொழுது நடைமுறையில் உள்ள

(x) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம்,

(xi) 1956 ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம்

ஆகியவற்றின்படி பெருமளவிலான வரி, தண்டம் மற்றும் வட்டி ஆகியவை நிலுவையில் உள்ளன. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், சட்டப் பிரிவு 19(4), 19(5), 19(11) மற்றும் 19(20) ஆகியவற்றின்கீழ் உள்ளீட்டு வரி வரவு திருப்பத்தினாலும் மற்றும் வாகனங்கள் மற்றும் பொருட்கள் மீதான நுழைவு வரி விதிப்பு போன்ற சட்டங்கள் நீதிமன்றங்களால் உறுதி செய்யப்பட்டதாலும், கடந்தகால கேட்புகள் அதிகரித்துள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு, 2021 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் 2021–2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட அறிக்கையில், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பழைய வரிகளில் நிலுவையிலுள்ள 28 ஆயிரம் கோடி ரூபாயை வசூலிக்க எளிமையாக, அரசுக்கு பலனளிக்கக்கூடிய விதமாக, மீண்டும் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதற்கிணங்கிய வகையில் அரசானது, தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்டம் என்ற சட்டத்தை இயற்றுவதன் மூலமாக மேற்சொன்ன அறிவிப்பிற்குச் செயல் வடிவம் கொடுப்பதென முடிவு செய்து, தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட அறிக்கையில், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பழைய வரிகளில் நிலுவையிலுள்ள சுமார் 28 ஆயிரம் கோடி ரூபாயை வசூலிக்க எளிமையாக, அரசுக்கு பலனளிக்கக்கூடிய விதமாக, மீண்டும் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் 6 முறை சமாதான்

திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 1999, 2002, 2006, 2008, 2010 மற்றும் 2011 ஆண்டுகள் என ஒவ்வொரு முறையும் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டபோது, வசூல் செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு, பழைய சட்டங்களான தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், மைய விற்பனை வரிச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமாதான் திட்டம் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டமாகும். வணிக வரித் துறையில் நிலுவையில் உள்ள வரி நிலுவைகளைச் செலுத்தி தீர்ப்பதற்காக வணிகர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கும்பொருட்டு, ஒருமுறை தீர்வுத் திட்டமான சமாதான் திட்டம் முதன்முதலாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 1999 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னால், 2002 ஆம் ஆண்டு, 2006 ஆம் ஆண்டு, 2008 ஆம் ஆண்டு, 2010 ஆம் ஆண்டு மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் சமாதான் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதன் மூலமாக வணிகர்களின் நீண்டகால வரி நிலுவைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டபோது, 4 மாதங்களில் 2 ஆயிரத்து 95 மனுக்கள் பெறப்பட்டு, ரூபாய் 19.97 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு 3 மாதங்களில், 2 ஆயிரத்து 383 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 58.75 கோடியும், 2006 ஆம் ஆண்டு மூன்று மாதங்களில் 1,036 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 6.98 கோடியும், 2008 ஆம் ஆண்டு 8 மாதங்களில், 10 ஆயிரத்து 250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 85.39 கோடியும், 2010 ஆம் ஆண்டு 7 மாதங்களில், 10 ஆயிரத்து 943 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 169.69 கோடியும், 2011 ஆம் ஆண்டு 6 மாதங்களில், 8 ஆயிரத்து 349 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 100.33 கோடியும் கடந்த காலங்களில் வசூல் செய்யப்பட்டுள்ளன. தற்போது வரி

2023 ஏப்ரல் 19] [திரு. பி. மூர்த்தி]

நிலுவையாக தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 16 ஆயிரத்து 732.39 கோடியும், மைய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 6 ஆயிரத்து 532.75 கோடியும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ.4 ஆயிரத்து 107.85 கோடியும், தமிழ்நாடு ஆடம்பரங்கள் வரிச் சட்டத்தின்கீழ் ரூ.94.36 கோடியும், தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின்கீழ் ரூ.39.16 கோடியும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்கீழ் ரூ.14.49 கோடியும், தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவுமீதுவரிச் சட்டத்தின்கீழ் ரூ.5.59 கோடியும், தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டத்தின்கீழ் ரூ.17 இலட்சம், ஆக மொத்தம், ரூ.27,526.82 கோடி வரி நிலுவையில் உள்ளது.

முற்பகல் 11–35

இந்நிலையில் கடந்த 13–8–2021 அன்று சட்டமன்றப் பேரவையில் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கு, செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அரசு முதன்மைச் செயலாளர்/வணிக வரி ஆணையர் அவர்களிடமிருந்து 11–10–2021 அன்று உரிய கருத்துரு பெறப்பட்டு, சமாதான் திட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு, அந்தச் சட்டத்தை இயற்றுவதன் மூலமாக மேற்சொன்ன அறிவிப்புக்கு செயல் வடிவம் கொடுக்கப்படுவதென முடிவு செய்து, தற்போது நடவடிக்கையில் உள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளிடமோ, பொதுமக்களிடமோ வரி வசூல் செய்வது என்பது, பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மலரிலிருந்து தேனை வண்டுகள் சுவைப்பதைப்போல வலியில்லாமல் இருக்க வேண்டும். வட்டி, அபராத வட்டி, தண்ட வட்டி போன்றவற்றையெல்லாம் நீக்கி, வரியை வசூலித்தால் அரசுக்குப் போதுமான வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

கடந்த ஆறு முறை சமாதான் திட்டம் செயல்படுத்தும்போது, அந்தந்த ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சமாதான் திட்டம் செயல்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, உடனடியாகத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், தற்போது இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனவே, அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான காலதாமதத்திற்குக் காரணம் என்ன? உடனடியாக நடவடிக்கை எடுத்து சமாதான் திட்டத்தை விரைவில் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்து, வணிகர்களையும், உற்பத்தியாளர்களையும், பொதுமக்களையும் இந்த அரசு காப்பாற்றுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கு, செயல் வடிவம் கொடுக்கும் வகையில், தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்டமுன்வடிவு, சட்டமன்றப் பேரவையில் கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலே அறிமுகம் செய்வதற்கான சுற்றோட்டக் கோப்பு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரின் வழியாக மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த ஆண்டு 10–5–2022 அன்று அக்கோப்பிற்கு ஒப்புதல் வழங்கினார்கள். அன்றையதினம் 2022–2023 ஆம் நிதியாண்டில் பட்ஜெட் கூட்டத்தொடரின் கடைசி நாள் என்பதால் அந்தச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய இயலவில்லை. எனவே, இச்சட்டமுன்வடிவினை அவசரச் சட்டமாக இயற்றலாம் என துறை உத்தேசித்து சட்டத் துறையின் இசைவினை 20–5–2022 அன்று பெற்று, வணிக வரித் துறை ஆணையரிடமிருந்து உரிய கருத்துரு பெறப்பட்டு, அச்சுற்றோட்டத்தில் ஆணை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, 23–6–2022 அன்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு 24–6–2022 அன்று அனுப்பப்பட்டது.*

அவர், தலைமைச் செயலாளர், முதலமைச்சரின் செயலாளர்-II டாக்டர் உமாநாத் அவர்கள், நிதித் துறைச் செயலாளர் ஆகியோருடன் 4–7–2022 அன்று கலந்தாலோசிக்க ஏற்பாடு செய்யுமாறு வணிக வரி மற்றும் பதிவுத் துறைச் செயலாளர் அவர்களுக்கு உத்தரவிட்டார். 4–7–2022 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்படாத வரி விவரங்களையும் தற்போது வணிகத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடாத வணிகர்கள் குறித்து விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

முற்பகல் 11–40

அதன்படி 22–9–2022 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், ஏற்கெனவே கேட்கப்பட்ட விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டபோது, கூடுதலாக சதவிகித அடிப்படையில் (Percentile Method) வரி விவரங்களையும் சேகரித்து சமர்ப்பிக்குமாறு மீண்டும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன் பின்னர், 2–12–2022 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், 2017 ஆம் ஆண்டு வரையிலுள்ள சதவிகித அடிப்படையிலான (Percentile Method) வரி நிலுவை விவரங்கள் விவாதிக்கப்பட்டபோது, நிலுவை வரி செலுத்தியபின் எழும் வட்டி குறித்து, உள்ள நிலுவை விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்கள். இவ்விவரங்கள் குறித்து விவாதிக்க, இரண்டு நாட்களுக்கு முன்னதாக, 17–4–2023 அன்று மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கூட்டம் நடத்தப்பட்ட நிலையில், 'சமாதான் திட்டம்' செயல்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு குறித்த கோப்பு தற்போது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்குப் பின்னர், கோப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அவர்களது ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே, தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு சமாதான் திட்டம் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. குழுவின் அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கையைக் குழுவின் சார்பாக உவகையுடன் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

2023 ஏப்ரல் 19] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாவது திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாவது திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாவது திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவினை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவினை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2023 ஏப்ரல் 19] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

முற்பகல் 11–45

(ஈ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 18

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அரசினர் தனித் தீர்மானம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்கள் உரிய பயன்களைப் பெற அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களையும் பட்டியலில் சேர்த்து, அந்தப் பட்டியலின மக்களுக்கும் அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் கொண்டு வர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர்களாக இருந்து மதம் மாறிய பின்னரும் தீண்டாமை உள்ளிட்ட சாதிய வன்கொடுமைகளுக்கு அவர்கள் ஆளாவது தொடரவே செய்கிறது. எனவே, இதனைக் கனிவோடு நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது நாட்டின் அரசமைப்புச் சட்டப்படி இந்து, சீக்கிய, பௌத்த மதத்தைத் தவிர்த்த பிற மதங்களைச் சேர்ந்த யாரும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்பட முடியாது. வரலாற்று ரீதியாகவே அவர்கள் ஆதி திராவிடர் வகுப்பினராக இருக்கும்போது, அவர்களுக்குப் பட்டியலின வகுப்புக்கான உரிமைகளை வழங்குவதே சரியானதாக இருக்கும். அதன் மூலமாகத்தான் அவர்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை கிடைக்கும்.

2023 ஏப்ரல் 19] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதன் மூலமாக சமூகத்தில் அவர்களுக்கான உயர்வும், மேம்பாடும் கிடைக்கும். மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காக சமூகரீதியாக அவர்களுக்குத் தரப்பட்டு வந்த, அதே சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்கள் அனுபவித்து வரும் உரிமைகளை இவர்களுக்குத் தர மறுப்பது சரியல்ல என்பதுதான் நமது நிலைப்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

மனிதர்கள் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. ஆனால் சாதி என்பது மாறுதலுக்கு உட்பட்டது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய சாதி என்பது நீ வேறு; நான் வேறு என்பதாக இல்லாமல், நான் உயர்ந்தவன்; நீ தாழ்ந்தவன் என்ற முறையில் இருக்கிறது. அதாவது படுக்கைக் கோடாக இல்லாமல், செங்குத்துக் கோடாக இருக்கிறது. மொத்தத்தில் அது சமூகக் கேடாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சாதிய ஏற்றத்தாழ்வை வைத்து எந்த வகையில் அடக்கி ஒடுக்கினார்களோ, அதே சாதியை வைத்தே இடஒதுக்கீடு வழங்கி உயர்வடைய வைக்கும் தத்துவம்தான் சமூகநீதித் தத்துவம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சமூகநீதித் தத்துவத்தை அனைத்து வகையிலும் முறையாகப் பின்பற்ற வேண்டும் என்பதே திராவிட மாடல் அரசினுடைய நோக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும், அரசமைப்புச் சட்ட சமூகநீதி உரிமைகள் தரப்பட வேண்டும் என்பதே சரியான நிலைப்பாடு. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதெல்லாம் 1996, 2006, 2010, 2011 ஆகிய காலக்கட்டங்களில் இதே கோரிக்கையினை நிறைவேற்ற பிரதமருக்கு நேர்முகக் கடிதம் எழுதி, ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறார். இதே பேரவையில், ஒன்றிய அரசிடம் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்படும் என்று 6–1–2011 அன்று ஆளுநர் உரையில் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் இதனை வலியுறுத்தி இருந்தோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில். பட்டியலின மக்களுக்கு இணையாக கிறித்துவ ஆதி திராவிடர்களும் சலுகைகள் பெறும் வகையில் அரசாணைகள் வெளியிடப்பட்டு உரிய

பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இட ஒதுக்கீடு நீங்கலாக மற்ற உரிமைகள் தரப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசால் பட்டியலின மக்களுக்கு வழங்கப்படும் அனைத்துக் கல்வி உதவித் தொகைத் திட்டங்களும் கிறித்துவ ஆதி திராவிடர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை, வெளிநாடுகளில் சென்று உயர் கல்வி பயில்பவர்களுக்கான ஊக்கத் தொகை, உயர் கல்வி சிறப்பு ஊக்கத் தொகை அனைத்தும் இவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்துடன் இட ஒதுக்கீட்டையும் வழங்குவதே சரியானதாகவும், முறையானதாகவும் இருக்கும் என்று நினைக்கிறோம்.

முற்பகல் 11–50

அரசமைப்பு (பட்டியலின சாதிகள்) திருத்த ஆணை 1950–ன்படி, இந்து மதத்தில் இருந்து வேறுபட்ட மதத்தைக் கூறும் எவரும் அட்டவணை சாதிகளின் உறுப்பினராக ஆக முடியாது. ஆனால், 1956 ஆம் ஆண்டு சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்களையும், 1990 ஆம் ஆண்டு பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களையும், பட்டியல் சாதியினராகச் சேர்க்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. இதேபோன்ற திருத்தத்தைத்தான் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கோரிக்கையை பல்வேறு தரப்பினரும் அரசுக்கு வைத்திருக்கிறார்கள்.

ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மதம் மாறும்போது, தானாக ஆதி திராவிடர் வகுப்பில் இருந்து வெளியேறி விடுகிறார்கள் என்றும்; மதம் மாறிய பின்னும் அவர்களுக்கு ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று சாதிச் சான்றிதழ் இருந்தால் அது செல்லாது என்றும்; மதம் மாறியவர்களுக்கு ஆதி திராவிடர் வகுப்பு சான்றிதழ் வழங்கப்பட்டால் அது போலிச் சான்றிதழ் என்றும்; தேசிய ஆதி திராவிடர் ஆணையத் துணைத் தலைவர் கடந்த ஆண்டு சொல்லியிருந்தார். அப்போது பல்வேறு தரப்பினரும் இதற்குக் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.ஜி. பாலகிருஷ்ணன் தலைமையிலான ஆணையம் ஒன்றை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. இந்த ஆணையம் இந்தியா முழுமையும் சுற்றுப்பயணம் செய்து, அனைத்து மாநிலங்களின் கருத்தையும்

2023 ஏப்ரல் 19] [திரு. மு.க. ஸ்டாலின்]

பெற்ற பிறகே இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதனை வலியுறுத்தும் வகையில், பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

தீர்மானம்

"இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைக் கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களும் அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெற, அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு இந்திய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது" (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

என்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

சமூகநீதியானது சமநீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தனித் தீர்மானத்தின்மீது பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர்கள் 1 அல்லது 2 நிமிடங்களுக்குள் வரவேற்று, நன்றிகூறி, அமர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில், எந்த சாதியின் பெயரால் சமூக நீதி மறுக்கப்பட்டதோ, எந்த சாதியின் பெயரால் கல்வி, வேலைவாய்ப்பு உரிமை மறுக்கப்பட்டதோ, தீண்டாமைக் கொடுமைகள் அரங்கேற்றப்பட்டதோ, அதே மக்களுக்கு அதே சாதியின் பெயரால் கல்வி, வேலைவாய்ப்பு உரிமை போன்ற சமூக நீதி, சமநீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி,*

[திரு. தி. வேல்முருகன்] [2023 ஏப்ரல் 19

நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்தும், இதற்கு கடந்த காலங்களில் இருந்த சட்டப் பிரச்சினைகளையும், இதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுக்களுடைய அறிக்கைகளின் அடிப்படையிலும், ஆதி திராவிட கிறித்துவர்களை, அவர்கள் மதம் மாறினார்கள் என்பதற்காக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான சமூகநீதி மறுக்கப்பட்டு வருகின்ற இந்தச் சூழலில், அந்தச் சமூகநீதி இந்த மண்ணில் எவருக்கு மறுக்கப்பட்டாலும், அந்தச் சமூகநீதியைப் பெற்றுத் தருவதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் தலையாய பணி என்கிற உயரிய நோக்கத்தோடு, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற மதம் மாறிய கிறித்துவர்களை தலித் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்குரிய கல்வி, வேலைவாய்ப்பு உரிமையை நிலை நாட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, அரசினர் தனித் தீர்மானத்தை தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளிம்பு நிலையிலிருக்கின்ற மக்களைக் கை கொடுத்து தூக்கிவிட வேண்டுமென்றும், பொருளாதாரத்திலே ஒரு சம நிலையை அடைந்துவிட வேண்டுமென்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற இதுபோன்ற முயற்சிகளுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில், இந்த மண்ணிலே வாழ்கின்ற அத்துணை மக்களும் சாதி வேறுபாடுகளைக் கடந்து, சாதிகளற்ற ஒரு சமுதாயமாக, தமிழர்கள் என்ற ஒற்றை உணர்வோடு வாழ வேண்டுமென்ற எண்ணத்தில்தான், சாதிகள் இல்லாத ஒரு சமுதாயத்தைக் கட்டமைக்க தொடர்ந்து நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பிரிவில் இருக்கிற மக்களுக்கு இருவிதமான சலுகைகள் இருக்கும்போது, சாதி பாகுபாடுகள் தலை தூக்கிவிடுமோ என்கிற அச்சத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கின்றேன். வணக்கம்.

2023 ஏப்ரல் 19]

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநீதியை, சமநீதியாக வழங்குவதுதான் திராவிட மாடல் ஆட்சி என்று வர்ணித்து, நீண்ட நெடிய காலமாக தமிழ்நாட்டில் வாழக்கூடிய தலித் கிறித்துவர்களுடைய கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுமுகமாக இன்று தலித் கிறித்துவர்களைப் பட்டியலின சாதியில் சேர்க்க வேண்டுமென்று இந்தத் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கின்றேன்.*

2019 ஆம் ஆண்டில் இது தொடர்பாக ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வந்தபோது ஒன்றிய அரசு, தலித் கிறித்துவர்களைப் பட்டியலினத்தில் சேர்க்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டது. அரசமைப்பு (பட்டியலின சாதிகள்) திருத்த ஆணை 1950–ன்படி தொடக்கத்தில் இந்து தலித்துகள் மட்டும்தான் அதில் இடம் பெற்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1956–ல் சீக்கியத்தைத் தழுவிய தலித்துகளும், 1990–ல் பௌத்த மதத்தைத் தழுவிய தலித்துகளும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள். அதற்கு முதலில் 1955–ல் காகா காலேல்கர் ஆணையமும், அதேபோல் 1983–ல் சிறுபான்மையின, schedule *இன மக்களுக்கான உயர்நிலைக் குழுவும் அந்தப் பரிந்துரையைக் கொடுத்தன. திராவிட முன்னேற்றக் கழகமும் இடம் பெற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் அமைக்கப்பட்ட நீதியரசர் ரங்கநாத் மிஷ்ரா ஆணையம் தலித் கிறித்துவர்களைப் பட்டியலினத்தில் சேர்க்க வேண்டுமென்று மிகத் தெளிவான ஒரு பரிந்துரையை அளித்திருக்கின்றது. ஏராளமான ஆணையங்களும், தனிக் குழுக்களும் இந்தக் கோரிக்கைகளை வைத்திருக்கின்றன. திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தலைமையிலான மாநில சிறுபான்மையின ஆணையமும் இதை வலியுறுத்தியிருக்கின்றது. இங்கு இருக்கக்கூடிய முன் வரிசை தலைவர்களும் இந்தக் கோரிக்கைகளை முன் வைத்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூகநிதியை சமநீதியாக வழங்கக்கூடிய வகையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [*2023 ஏப்ரல் 19*

வந்ததற்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இஸ்லாத்தைத் தழுவிய பட்டியலின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதாவது "others" ஆக அவர்கள் schedule இனத்திலும் இல்லை; BC Muslim என்ற வகைப்பாட்டிலும் வரவில்லை. எனவே, இஸ்லாத்தை தழுவிய பட்டியலின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்கள் BC Muslim அதாவது பிற்படுத்தப்பட்ட Muslim. கலைஞர் அவர்கள் கொடுத்த அந்த இட ஒதுக்கீட்டை அனுபவிக்கக்கூடிய வகையில் அரசு வழிவகை செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை முன் வைத்து, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக அற்புதமாக நம்முடைய Fundamental Rights பற்றிச் சொன்னார்கள். இந்தியாவில் வாழ்கின்ற ஒருவர் எந்த மதத்தையும் பின்பற்றலாம் என்பது அவருடைய உரிமை. அவர் அந்த மதத்தைப் பின்பற்றியதால், அவர் சாதி மாறுவதில்லை. மாரி, மேரியாகி விட்டால், அவருக்கு சாதியில்லை என்ற அர்த்தம் இல்லை. மாரிக்கு என்ன நிலை ஏற்படுகிறதோ, அதுதான் மேரிக்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுதான் இப்போது நடைபெறுகின்ற நிலை. இதைத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதம் மாறினால் மட்டும் சாதி மாற முடியாது, மாறாது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

நண்பகல் *12–00*

ஆகவே, இந்த நிலையில் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம், குறிப்பாக தலித் கிறித்துவர்கள், தலித்தாக இருப்பவர்கள், ஆதி திராவிடர்கள், இந்து மதத்திலிருந்து கிறித்துவர்களாக மாறினால் அவர்களுக்கு வேலைவாய்ப்பில் எந்த reservation-ம் கிடையாது என்ற நிலையை மாற்றி, அவர்களுக்கும் அதில் ஒதுக்கீடுகள் கொடுக்க வேண்டும். SC-க்கு எத்தனை சதவிகிதம் இருக்கிறதோ, அவர்களை

2023 ஏப்ரல் 19] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]
SC-ஆகக் கருதி அதையும் கொடுக்க வேண்டுமென்ற இந்தத் தனித் தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரித்து, வரவேற்பதோடு அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்கள் இன்றுவரை கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் பின்தங்கியிருக்கிறார்கள். மதம் மாறினார்களே தவிர, அவர்களின் வாழ்க்கை, பொருளாதாரம் ஆகியவை மாற்றப்படவில்லை. அவர்கள் கிறித்துவ மதத்தைத் தழுவினார்கள் என்பதற்காக சமூக நீதி மறுக்கப்படுவது எந்தவிதத்திலும் நியாயமல்ல. ஆகவே, மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர்களுக்கும் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள உரிமைகளும், அவர்களுக்கான இட ஒதுக்கீடு உள்ளிட்ட சமூக நீதி பாதுகாக்கப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற சமூக நீதிக்கான, உரிமைகளுக்கான இந்தத் தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

***திரு. மா. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உயர்நிலை விழிப்புணர்வு கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்துகளையெல்லாம் ஏற்பு செய்து, உடனுக்குடன் பல அறிவிப்புகளைச் செய்வது, உண்மையிலேயே தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஆதி திராவிட மக்களிடம் பெரும் மதிப்பையும், பாராட்டையும் பெற்றிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மா. சின்னதுரை] [2023 ஏப்ரல் 19

வைக்கம் நூற்றாண்டு விழா, பெரியவர் இளையபெருமாள் நூற்றாண்டு நினைவரங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் நல ஆணையம் என பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிற இந்த நேரத்தில், தமிழகத்தில் தலித், ஆதி திராவிடர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லையே, இந்து ஆதி திராவிடர்களுக்கும், கிறித்துவ ஆதி திராவிடர்களுக்கும் இடைவெளி என்பது அதிகரித்து தமிழகத்தில், இந்தியாவில் நாம் புறக்கணிக்கப்படுகிறோமோ என்கின்ற வேதனையில் இருந்தார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திருமதி பிருந்தா காரத் அவர்கள் நாடாளுமன்றத்தில் இதை எழுப்பினார்கள்; வலியுறுத்தினார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறோம்; வரவேற்கிறோம். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

***திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானுட சமூகத்தின் வரலாறு என்பது 'ஏடறிந்த வரலாறு, வர்க்கப் போராட்டங்களின் வரலாறு' என்று காரல் மார்க்ஸ் சொன்னார். இந்தியாவைப் பொறுத்தவரையில், வருண சாதிய கட்டமைப்பைத் திணிப்பவர்களுக்கும், அதை மறுத்து, எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் இடையிலான வரலாறாக அது விரிந்து கிடக்கிறது என்று புரட்சியாளர் அம்பேத்கர் அதைத் தெளிவுபடுத்தினார்.

இத்தகைய சூழலில் ஆயிரமாண்டுக் காலமாக ஒடுக்கப்பட்டு கிடக்கிற தீண்டாமை என்கின்ற பண்பாட்டு ஒடுக்குமுறையின் விளைவாகப் புறந்தள்ளப்பட்டிருக்கிற அந்த மக்களுக்கு அரசமைப்பு சாசனம், ஒரு சட்டப் பாதுகாப்பை உருவாக்கித் தந்திருக்கிறது. அந்தச் சட்டப் பாதுகாப்பு 1950-ல் கொண்டு வரப்பட்ட Presidential order என்கின்ற ஓர் அரசாணையின் மூலமாகக் கிறித்துவம் தழுவிய பட்டியல் சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கு அந்தச் சட்டப் பாதுகாப்பை அனுபவிக்க முடியாத, நுகர முடியாத அளவில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதேசமயத்தில் பழங்குடியின

2023 ஏப்ரல் 19] [திரு. ம. சிந்தனை செல்வன்]

மக்கள் கிறித்துவத்தைத் தழுவினாலும், அவர்களுக்கு ST என்கின்ற அந்தஸ்து இருக்கிறது. ST என்கின்ற அந்தஸ்து மட்டும் கிறித்துவம் தழுவிய ஆதி திராவிட மக்களுக்கு இல்லை என்கின்ற நிலை இருக்கிறது. சமூகத்தில் சாதி என்பது பிறப்பின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படுகிறதே தவிர, அவர்கள் ஏற்றுக்கொள்கின்ற கொள்கையின் அடிப்படையில் சாதி என்பது மாறுபடுவதில்லை. ஆகவே, எங்களுக்கும் இந்த உரிமை வேண்டுமென்று சற்றேறக்குறைய 70 ஆண்டுகளுக்கு மேலாக இந்த மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

பிற்பகல் 12–05

இதைப்போலவே, ஒடுக்கப்பட்டு கிடந்த யூத மக்களின் விடுதலைக்காக அறவழியில், ஆன்மிக வழியில் போராடிய இயேசு பெருமான் அவர்கள், 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு' என்கின்ற அன்பு வழியை அவர்களுக்குப் போதித்த காரணத்தாலே அவர்களின் போராட்டம், ஓர் அமைதிப் போராட்டமாகவே இருந்தது. ஆனால், அந்த அமைதிப் போராட்டத்திற்கும் காது கொடுத்து, நம்முடைய மண்ணின் பூர்வகுடி மக்களாகிய கிறித்துவர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தம் தழுவியவர்கள் இவர்களையெல்லாம் அந்நியர்களைப்போல சித்தரிக்கக்கூடிய வெறுப்பு பேச்சு சனாதன சக்திகளால் அரசியல் ஆயுதமாக மாற்றப்படுகிற சூழ்நிலையில், அப்படிப்பட்ட வெறுப்பு பேச்சுக்கு தற்போது அவர்களை இலக்காகவிடாமல் தடுத்து, அரவணைக்கிற தாயின் கருணையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரையிலே நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு நாளும் நன்றி சொல்வதே எங்களுடைய வேலையாக இருக்கிறது. அவ்வாறு, சமூகநீதியைப் பாதுகாக்கக்கூடிய சமத்துவத் தலைவராக மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளங்குகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தருணத்திலே நான் ஒன்றைச் சொல்வது என்னுடைய கடமை. இந்தப் பணியில், 2008–ல் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய தலைவர் அண்ணன் முனைவர் திருமா அவர்களின் தலைமையில், இலட்சோபலட்ச மக்கள் திரண்டு,

விழுப்புரத்திலே ஒரு மாநாட்டை நடத்தினோம். மரியாதைக்குரிய தற்போதைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டிற்கு வந்து, நிச்சயமாக இதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, கிறித்துவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தருவதற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு முனையும், முனைப்பைச் செய்யும் என்று அந்த மேடையில் வாக்குறுதி தந்தார்.

மேலும், இந்த அவையில், மரியாதைக்குரிய மாண்புமிகு சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மஸ்தான் அவர்கள் பொறுப்பேற்ற அந்தத் தருணத்திலேயே அவர்களிடம் சென்று கேட்டபோது, கருணையோடு நிச்சயமாக இதுகுறித்த அனைத்து விதமான சட்ட நுணுக்கங்களையும் ஆய்ந்து—ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் எதை எடுத்தாலும், தொட்டதெல்லாம் விளங்கும், அதில் ஒருபோதும் பின்னடைவு என்பதே வந்துவிடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், நுணுக்கமாக ஆய்ந்து—அதைச் செய்வோம் என்று உத்தரவாதம் தந்தார்.

இந்தத் தருணத்தில் சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களையும் நான் நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நாங்கள் எல்லோரும், அதாவது, காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. செல்வபெருந்தகை உள்ளிட்ட அனைவரும் சேர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, ஒரு வாரத்திற்கு முன்னர்தான் மனு கொடுத்தோம். ஒரு மனுவைக் கொடுத்தால், அதை ஏற்று, பரிசீலித்து, முடிவெடுக்க எவ்வளவு காலமாகுமோ என ஏங்குவது என்பதுதான் கடந்த கால அனுபவம். ஆனால், நாங்கள் ஒரு வாரத்திற்கு முன்னர் கொடுத்த மனுவை, சில நாட்களிலேயே ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதுகுறித்த ஒரு தனித் தீர்மானத்தினைக் கொண்டு வந்திருப்பது என்பது ஒரு மகத்தான அனுபவமாக இருக்கிறது என்பதை மகிழ்வோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், 2008-ல் தரப்பட்ட

கிறித்துவர்களுக்கான 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பது, சமூகத்தில் சற்று முன்னேறிய பிரிவினரால் அது வேண்டாம் என்ற வகையில் கருத்து சொல்லப்பட்டு, அது திரும்பப் பெறப்பட்டுவிட்டது. அந்த இட ஒதுக்கீட்டை மீண்டும் தங்களுக்குத் தர வேண்டும் என்று அந்த மக்கள் கோருகிறார்கள். அதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கிறதா, அதற்கான சட்டப் பாதுகாப்பு இருக்கிறதா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கட்டாயம் ஆய்வு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அது வேறு விவரம். அதை இத்துடன் நிறுத்திக்கொண்டு, தற்போது கொண்டு வரப்பட்டுள்ள தனித் தீர்மானத்தின்மீது மட்டும் பேசுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *அந்த அடிப்படையிலே அந்தக் கோரிக்கையையும் இங்கே வைத்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தக் கோரிக்கையைப் பிறகு வைக்கலாம்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *எல்லா விதமான மக்களின் அனைத்து விதமான துயரங்களையும் ஏற்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். போதும்.* (குறுக்கீடு)

திரு. ம. சிந்தனை செல்வன்: *சொல்லி முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சொல்லி முடித்துவிடுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்து, அது நிறைவேறக்கூடிய வகையில் சட்டப்பூர்வமான தன்மையோடு இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, சமத்துவத் தலைவர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில், எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய தலைவர் அண்ணன் திருமா அவர்களின் சார்பில் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

[*2023 ஏப்ரல் 19*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், பேரவையில் உள்ள அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நமது மாநிலத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தனித் தீர்மானத்தினுடைய அடிப்படைக் கூறுகள்: இந்திய அரசை சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார். இது தொடர்பான விஷயங்களை ஆராய்வதற்கு, ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஆணையம் ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது.

*இரண்டாவதாக, நீதிமன்றத்திலே கடந்த வாரம்கூட இந்த வழக்கு விசாரணைக்கு வந்து, ஜூலை மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆக, நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை ஏற்கெனவே அதனுடைய ஆராய்ச்சிக்காக, தீர்ப்பிற்காக இருக்கின்ற ***

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம். ** மத நம்பிக்கை என்பது அவர்களுடைய உரிமை. மதம் மாறினாலும், அவர்கள் எந்த வழியில் பிறந்தார்களோ அந்த உரிமையைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டிய தேவையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர், நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கிற்கும், இதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. நீதிமன்றம் சட்டமன்றத்தைக் கட்டுப்படுத்தாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) தனித் தீர்மானம், ஒரு சமூகத்திற்குக் கொண்டு வருவதற்கு முழு உரிமை உண்டு. ஆகவே, அந்த அடிப்படையில் உங்களுடைய கருத்து, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறீர்களா அல்லது உங்களுடைய கருத்தைப் பதிவு செய்யும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைத்தான் சொல்கிறேன்.*

திருமதி வானதி சீனிவாசன்: *நீதிமன்றம், சட்டப் பேரவை நிறைவேற்றுகின்ற சட்டம், நாடாளுமன்றம் இயற்றுகிற சட்டங்களெல்லாம்கூட, அரசமைப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சற்று பொறுத்துக்கொள்ளுங்கள். இதுசம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் இல்லை. (குறுக்கீடு) இதுசம்பந்தமானது இல்லை. (குறுக்கீடு) இல்லை, இதுசம்பந்தமாக இப்போதுதானே சட்டமே கொண்டு வரச் சொல்கிறோம். இதை, நாம் பரிந்துரை செய்து மத்திய அரசுக்குத்தான் அனுப்புகிறோம். அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.*

திருமதி வானதி சீனிவாசன்: *அதனால்தான் சொல்கிறேன், இதில் Commission ஏற்கெனவே போட்டது, ஒன்று. இரண்டாவது, Court-ல் case pending-ல் இருக்கிறது. மூன்றாவது, நான் கேட்ட மாதிரி, ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ** என்று கூறியதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *நீங்கள் இந்தத் தீர்மானத்தை எதற்காக இப்போது கொண்டு வருகிறீர்கள்? அடிப்படையான விஷயம் என்ன? ** என்று வரும்போதுதான், இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றாந்தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொல்ல வந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்களைப் பார்த்துக் கேட்கிறேன், ஜனநாயக ரீதியாக என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய விடுங்கள்.

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2023 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டீர்கள். நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டீர்கள்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொன்னது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய பட்டியலின மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், உரிமை வேண்டும், படிப்பதற்கும், வேலைக்குச் செல்வதற்குமான இட ஒதுக்கீடு என்ற அடிப்படையில் சமூகநீதி வழங்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை வாசிக்கிற நேரத்தில் பல்வேறு உண்மைகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னதை நாங்கள் மனதாரக் கேட்டோம். குறிப்பாக, பட்டியலின மக்கள், அவர்கள் இந்து மதத்திலிருந்தாலும் அல்லது கிறித்துவ மதத்திற்கு மாறினாலும்கூட, இந்து மதத்திலே இருப்பதனால் அவர்களுடைய பொருளாதாரம் தாழ்ந்து விடுவதில்லை; கிறித்துவ மதத்திற்கு மாறுவதனால் அவர்களின் பொருளாதாரம் உயர்ந்துவிடுவதில்லை. இந்து மதத்தில் இருந்தால் அவர்கள் மாரியம்மன் கோயிலுக்குச் செல்கிறார்கள்; கிறித்துவ மதத்திற்குச் சென்றால், அவர்கள் மரியன்னை தேவாலயத்திற்கு அல்லது கிறித்துவ தேவாலயத்திற்குச் செல்கிறார்கள். சமூக நிலையிலே, பொருளாதார நிலையிலே எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. இதைத்தான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேகூட நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற நேரத்தில் நான் வலியுறுத்தினேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 19] [திரு. ஜி.கே. மணி]

இரண்டு வாரத்திற்கு முன்பு நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் மதம் மாறிய கிறித்துவர்களைப் பட்டியலின பட்டியலில் சேர்த்து இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்தினோம்.

அதுமட்டுமல்ல, இதற்கு முன்னால் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில் பல முறை இதே மன்றத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நானே வலியுறுத்திப் பேசினேன். அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். அதுமட்டுமல்ல, நடுவண் அரசின் சார்பில் ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவும் இந்தப் பட்டியலின மக்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்; இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. இப்போது மாண்பமை நீதியரசர் திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலான ஆணையமும் சுட்டிக்காட்டியிருக்கிறது; நீதிமன்றத்தில் இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1956, 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நிலைமை, அதற்குப் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில் கொண்டு வந்த நிலைமைகளையெல்லாம் சுட்டிக்காட்டி, இவர்கள் எந்த மதத்திற்கு மாறினாலும்கூட, அவர்கள் அடக்கப்பட்ட நிலையிலே, ஒடுக்கப்பட்ட நிலையிலேயே நலிவடைந்திருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் மதம் மாறினாலும், அவர்களைப் பட்டியலினத்திலே சேர்த்து இட ஒதுக்கீட்டுச் சலுகைகள் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முழுமனதோடு வரவேற்கிறேன்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: முடித்துவிடுகிறேன். இப்படி வரவேற்பது மட்டுமல்ல; கடந்த காலங்களில் ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன்பு பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக் குழு மற்றும் செயற் குழுக் கூட்டங்களில் இதுபற்றி தீர்மானம்

நிறைவேற்றியிருக்கிறோம் என்பதையும், எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள், இதை வலியுறுத்தி பல முறை அறிக்கைகளும் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதையும் நினைவூட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தனித் தீர்மானத்தை மீண்டும் ஒரு முறை மனதார வரவேற்று அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டிலே நாம் அனைவரும் இந்திய அரசமைப்புச் சட்டத்தைத்தான் பார்க்கிறோம்; நீதிமன்றமும் அதைத்தான் பார்க்கும். 1951 ஆம் ஆண்டின் இந்திய அரசமைப்புச் சட்டம், பத்தி 3-ன்படி, பட்டியல் இனத்தவர்களுக்கு வழங்கப்படும் SC அந்தஸ்து மற்றும் உரிமைகள், மதம் மாறிய தலித் கிறித்துவர்களுக்கு இன்று வரை மறுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த மக்களும் மற்ற தலித் மக்களைப்போலவே சாதி வேற்றுமை, தீண்டாமை போன்றவற்றைச் சமுதாயத்தில் அனுபவித்து வருகிறார்கள்.

Article 341 is not only contrary to Articles 14, 15 and 16 of the Constitution of India but also not based on justice. We believe that just as the reservation facilities cannot be given to any class on the basis of religion only, similarly, denying reservation facilities to Christians and Dalits on the basis of religion alone is a violation of Constitution. நம் நாட்டினுடைய அரசமைப்புச் சட்டத்தின்படி, ஒரு கட்சிக்காரரோ, ஒரு சாராரோ, இந்து தலித் கிறித்துவராக மாறிவிட்டால், அவர்களுடைய அதிகாரத்தையும் சலுகைகளையும் பறிப்பதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதுதான் புதுச் சட்டம். This is not humanity. This is infringement of the rights of dalit people. This is deprivation of natural justice. This is against the Constitution of India. This is against the Fundamental Rights.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமூக நீதிக் காவலர் ஆவார். அவர் எடுக்கின்ற அத்தனை முயற்சிகளும் வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள், இந்த அவையில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானமும் நிச்சயமாக வெற்றி

2023 ஏப்ரல் 19] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

பெறும். ஒருவேளை Constitution என்ற பிரச்சினை வந்தாலும், Justice Balakrishnan அவர்களுடைய பரிந்துரைப்படி எடுத்திருக்கிற முயற்சிகளும் நிச்சயமாக வெற்றி பெறும். உச்ச நீதிமன்றமும் அதை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அற்புதமான, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தனித் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இதை முடித்துவிடுகிறேனே? மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசியபோது, தலித் முஸ்லிம்கள் இட ஒதுக்கீடு கேட்கின்றார்கள் என்று சொன்னார்கள். அப்படியான ஒரு கோரிக்கை வைக்கப்படவில்லை. எனவே, அந்த வாசகங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசியபோது, ** என்று கேட்டார்கள். மேலும், ** என்றும் கேட்டார்கள். ஏற்கெனவே, இவர்களுக்காக, ஒன்றிய அரசு, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மாண்புமிகு திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைத்துள்ளது. இதே மதம் மாறிய கிறித்துவர்களுக்காக, ஆதி திராவிட மக்களுக்காக ஒரு Commission அமைக்கப்பட்டிருக்கிறது என்றால், ஒன்றிய அரசும் அதே நோக்கத்தில்தான் கொண்டு வந்ததா என்ற கேள்வியும் எழும்புகின்றது. ஆகவே, அதுசம்பந்தமாக திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2023 ஏப்ரல் 19

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, பட்டியலின மக்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு இச்சலுகைகள் வழங்கப்படுவதில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள், கிறித்துவ மதத்திற்கு மாறிய பட்டியலினத்தவர்களை, பட்டியலினத்தின்கீழ் இணைக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று 1995 மற்றும் 2013 ஆகிய காலகட்டங்களில் அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கடிதத்தில்கூட இந்து மதத்திலிருந்து பௌத்தம் மற்றும் சீக்கிய மதங்களுக்கு மாறும் தலித்துகள் பட்டியலினத்திலேயே இருக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்கள். இதுசம்பந்தமாக ஓய்வு பெற்ற மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது விசாரணை நடத்தி வருகிறது. மேலும், இதுசம்பந்தமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளது.

பிற்பகல் 12–20

இருந்தாலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைக் கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களும் அனைத்து வகைகளிலும் சமூக நீதியின் பயன்களைப் பெற அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்தும் எனும் தனித் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி நன்றி சொல்வது என்று தெரியாமல், உணர்வுபூர்வமாக நன்றி உணர்வோடு நின்று கொண்டிருக்கின்றேன். மதம் மாறிய ஒரே காரணத்திற்காக தலித்

2023 ஏப்ரல் 19] [முனைவர் த. இனிகோ இருதயராஜ்]
கிறித்துவர்கள், பட்டியலின மக்களுக்கான எந்த உரிமைகளையும், எந்தச் சலுகைகளையும் பெற முடியவில்லை என்கின்ற சூழல். ஆதி திராவிட மக்கள் மதம் மாறியிருக்கிறார்களேயொழிய அவர்களுடைய சமூகச் சூழல், பொருளாதாரச் சூழல் மாறவில்லை. மதம் மாறிய பௌத்தர்கள், சீக்கியர்களுக்கு பட்டியலின மக்களுக்கு உள்ள அதாவது SC status *கொடுத்துவிட்டு, மதம் மாறிய கிறித்துவர்களுக்கு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். எப்போது ஒன்றிய அரசை அணுகினாலும் ஏதாவது ஒரு* Commission *போட்டு அனுப்பிவிடுவார்கள். 1953-லிருந்து தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையம்,* Mandal Commission *அறிக்கை, 1969-ல் வெளியான* Untouchability, Economic and Educational Development of the Scheduled Castes *குழுவினுடைய அறிக்கை,* Justice Ranganath Mishra Commission *என்று எல்லா கமிஷன்களும் போட்டுவிடுவார்கள்.*

தீண்டாமை பற்றிய தீர்மானம் அல்ல இந்தத் தீர்மானம்; அரசமைப்புச் சட்டம் தந்துள்ள உரிமைகளை, இட ஒதுக்கீட்டை, சலுகைகளைப் பெறுவதற்கான தீர்மானம்தான் இந்தத் தீர்மானம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 72 வருட காலப் போராட்டம், இன்றைக்குத்தான் எங்களுக்கான விடியல். 'ஸ்டாலின்தான் வாராரு, விடியல் தரப் போறாரு' என்ற பாடல் வரிகளுக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தலித் கிறித்துவர்கள் விடியல் பெற்ற நாளாக, இந்த நாளை உருவாக்கித் தந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே தங்களது தேர்தல் அறிக்கைகளில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாகக் கூறியிருந்தன. இதற்கு முன் ஆண்டவர்களிடமும் நாங்கள் கோரிக்கை வைத்தோம். ஆனால், திராவிட மாடல் அரசை சிறப்பாக நடத்தி வருகிற எங்களுடைய தளபதியார் ஆட்சியில்தான் இந்தத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதிக்கான அரசு இந்தத் திராவிட மாடல் அரசு என்பதை மீண்டும் மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தினமும் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதனை நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், தலித் கிறித்துவத் தலைவர்களாகிய

[முனைவர் த. இனிகோ இருதயராஜ்] [2023 ஏப்ரல் 19

பேராயர் சின்னப்பா, ஆயர் நீதிநாதன், பேராசிரியர் மேரி ஜான், மேத்யூ, Father Regis, Father Devasahayaraj, Nixon Dayanidhi போன்றோர் எப்பொழுதெல்லாம் தலைவர் அவர்களைப் பார்த்து பேசினாலும், இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோரினார்கள். நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். நான் இந்த மாதத் தொடக்கத்தில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். இந்த மாதம் முடிவதற்குள் அதனை நிறைவேற்றித் தந்திருக்கிற முதல்வர் எங்களுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலம் அறிந்து நிறைவேற்றுகின்ற அரசுதான், எங்கள் அண்ணன் தளபதி அவர்களுடைய அரசு.

உச்ச நீதிமன்றத்தில் பல வருடக் காலமாகக் கிடப்பில் போடப்பட்ட இந்த வழக்கை இப்போதுதான் வேகமாக விசாரித்து கொண்டிருக்கிற சூழ்நிலை. இந்த நேரத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்குப் பேருதவியாக இருக்கும். நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த எங்கள் சமூக நீதியினுடைய தலைவா, 'நன்றி சொல்ல உனக்கு, வார்த்தையில்லை எனக்கு நான்தான் வணங்குகின்றேன்' என்று பாடி, கோடானு கோடி நன்றி, நன்றி, நன்றி என்று நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் கொண்டு வந்திருக்கின்ற தனித் தீர்மானம், உள்ளபடியே அனைத்து மக்களாலும் ஒருமனதாக நிறைவேற்றக்கூடிய தீர்மானமாக இன்றைக்கு வந்திருக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சட்டரீதியான பாதுகாப்பு உரிமைகள்

2023 ஏப்ரல் 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மற்றும் இட ஒதுக்கீட்டு சலுகைகள் உள்ளிட்ட அனைத்து சலுகைகள் கிறித்துவராக மதம் மாறிய பட்டியலின மக்களுக்கும் வழங்கப்படுகின்ற இந்தத் தனித் தீர்மானத்தை முழுமனதோடு நான் ஆதரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை நன்றியோடு வரவேற்று அமர்கிறேன்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள், நான் முன்மொழிந்திருக்கக்கூடிய தீர்மானத்தைக் கண்டித்துப் பேசி, பிறகு அந்தக் கட்சியினர் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். நாங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால், ஏனோ தானோ என்று கொண்டு வந்துவிடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறுகட்ட ஆலோசனைகளையெல்லாம் மேற்கொண்டு, சட்ட வல்லுநர்களுடன் கலந்து பேசி, அதற்குப் பிறகுதான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறோம். ஆகவே, இதை முறையாக முன்மொழிந்திருக்கிறோம் என்பதை உறுதி செய்யக்கூடிய வகையிலே பா.ஜ.க. வெளிநடப்பு செய்திருக்கிறது என்பதை மாத்திரம் பதிவு செய்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 29-சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(ஆ) கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(அ) கோரிக்கை எண் 29-சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.80,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 289, மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 327, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. *ராதாகிருஷ்ணன்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1763, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3399, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. *விஜயதரணி.*

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3505, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4817, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6727, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 384, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2522, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2914, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6359, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7009, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்] [*2023 ஏப்ரல் 19*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 660, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 908, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1381, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2382, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2664, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.*

***திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3266, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.*

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3314, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3360, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3545, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3662, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4234, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4569, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6000, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2299, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3212, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை* @@ *நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்*

@ *690 முதல் 778 வரையிலான பக்கங்களில் இணைப்பு* I *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *779 முதல் 899 வரையிலான பக்கங்களில் இணைப்பு* II *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று முற்பகல் இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு அமைச்சர்கள் 3 பேர் இதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இன்று மாலை 5–00 மணிக்கு மீண்டும் சட்டமன்றம் கூடவிருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் மனதில் வைத்து, கருத்தில் எடுத்துக்கொண்டு பேசவிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து குறித்த நேரத்தில் பேச்சை முடித்துத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலில் பேசவிருக்கின்ற மாமன்ற உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்களுக்கு 15 நிமிடங்களும், அதன்பின் உரையாற்றவிருக்கின்ற எஞ்சிய 9 மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தலா 7 நிமிடங்களும் வழங்கப்படுகின்றன. பேசுகின்ற உறுப்பினர்களுடைய பெயருக்கு அருகிலேயே அவர்கள் எத்தனை நிமிடங்கள் பேசினார்கள் என்பது குறித்து display screen–ல் தெளிவுபடுத்தப்படும். குறுக்கீடுகளையும் தாண்டி அவர்களுக்குக் குறித்த நேரம் வழங்கப்படுகிறது. ஆகவே, அவற்றோடு நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள். உரையை சரியாக 12.50–க்குள் முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 12–35

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓலைக் குடிசைக்கும் ஒரு விளக்கு தந்த திருவிளக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) வருடங்கள் கடந்தாலும் வளர்பிறைச் சந்திரனாய் நிலைத்த புகழ் கொண்டு நிகரில்லா வள்ளல், பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியாரின் துணிவாகி, பேரறிஞர் அண்ணாவின் அறிவாகி, மக்கள் திலகத்தின் கனிவாகி, மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்று மா தவத்தில் வாழ்ந்திட்ட மாதரசி,

(மேசையைத் தட்டும் ஒலி) பசிக்கு அன்னமிட்ட அட்சயப் பாத்திரம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவன் சிரிக்க உலகம் செழிக்கும் என்பதை முக்கடல் சூழ்ந்த பாரதத்திற்கு முன்மொழிந்த ஒன்றரைக் கோடி தொண்டர்களின் மகத்தான தலைவர், கழகம் காத்த நாயகர், எகத்தாளம் பேசியவர்களின் முகத்தில் சரித்திர சாதனைகளால் கரிபூசிய எங்கள் பச்சைத் தமிழர் (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டர்களின் இதயக்கனி, கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொங்குநாடு பெற்றெடுத்த கொள்கைத் தங்கம், சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா சகோதரர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் எனக்குப் பேச வாய்ப்பளிக்க, வாக்களித்து வெற்றிபெறச் செய்த பல்லடம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கையின்மீது பேசச் செல்வதற்குமுன் எனது பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சில கோரிக்கைகளை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். எனது பல்லடம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளான ஒரு சிலவற்றை மட்டும் இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

பல்லடம் தொகுதி, பில்லூர்–அத்திக்கடவு குடிநீர்த் திட்டம்மூலம் நாள் ஒன்றுக்கு பொதுமக்களின் குடிநீர் விநியோகத்திற்கு வர வேண்டிய 15.89 MLD நீருக்குப் பதிலாக 12.49 MLD நீர்தான் வருகின்றது. மேலும், இந்த அளவானது 2012 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கேற்ப கணக்கெடுக்கப்பட்டதாகும். எனவே, நாளுக்குநாள் கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகின்ற காரணத்தினால் பல்லடம் தொகுதிக்கு தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை. பல்லடம் சட்டமன்றத் தொகுதி, பல்லடம் நகராட்சி, தேசிய நெடுஞ்சாலை எண் 81–ல் அமைந்திருக்கிறது. கோயம்புத்தூர் மற்றும் கேரளாவிலிருந்து தென் மாவட்டங்கள் மற்றும் மத்திய மாவட்டங்களுக்கு வாகனங்கள் அதிகளவில் செல்கின்றன. தொழிற்சாலைகள், ஏற்றுமதி நிறுவனங்களிலிருந்து செல்லக்கூடிய சரக்கு வாகனங்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகளவில் உள்ளன. இத்தகைய காரணங்களினால், பல்லடம் நகரில் போக்குவரத்து நெரிசல் நாளுக்குநாள் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதனால், பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். இதனைக் கருத்தில்கொண்டு கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், அண்ணன் எடப்பாடியார் அவர்களால், கோவை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், காளிவேலம்பட்டியில் தொடங்கி மாணிக்காபுரம்–குங்குமபாளையம் வழியாக மாதப்பூர் வந்து இணையும் வகையில், 13.85 கிலோ மீட்டருக்கு வெளிவட்டச் சாலை அமைக்க பரிந்துரைக்கப்பட்டு, 15–2–2021–ல் ரூபாய் 45 கோடியில் நிலம் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டது. தற்போது அந்தத் திட்டத்திற்கான எந்தப் பணிகளும் நடைபெறாமல் உள்ளன. பல்லடம் நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்வகையில் இந்தத் திட்டப் பணிகளை விரைவாக முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கோவை உக்கடத்திலிருந்து அவினாசி மார்க்கமாக விமான நிலையம் வழியாகக் கணியூர் வரையிலும், அதேபோல், பல்லடம் மார்க்கத்தில் உக்கடம் முதல் காரணம்பேட்டை வரையிலும் மெட்ரோ இரயில் சேவை தொடங்க மாநில அரசால் உத்தேச திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மெட்ரோ இரயில் சேவையானது அனைத்து மக்களும் பயன்பெறும் வகையிலும், தொழில் துறையினர் வேண்டுகோளுக்கு இணங்கவும் கணியூரிலிருந்தும் காரணம்பேட்டையிலிருந்தும், சாமளாபுரம் வழியாக திருப்பூர் வரை நீட்டிக்கப்பட வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நல்ல அறங்களை நல்ல முறையில் ஒன்றுபடுத்தி, மனிதன் வாழ

வழிவகுத்துத் தருகின்ற கொள்கைதான் சமயம். அந்தச் சமய நெறியை சமுதாயத்தில் படரச் செய்த ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதை அம்மா அவர்களின் வழியிலே கட்டிக் காத்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் திருக்கோயில்களின் பொற்காலம். தமிழர்களின் பாரம்பரியத்தையும் கலை மற்றும் கலாச்சாரத்தையும் பேணிக்காப்பதில் தலைசிறந்து விளங்கிய ஒப்பற்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும், அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசும் செயல்பட்டன என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், 45 ஆயிரத்து 809 அறநிறுவனங்கள்-திருக்கோயில்கள், திருமடங்கள் மற்றும் அறக்கட்டளைகள் உள்ளன. இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இருக்கும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஆகம விதிப்படி, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு என்பது தொடர்ச்சியாக நடத்தப்படவேண்டிய ஒரு நிகழ்வாகும். அதேபோல்தான் திருக்கோயில்களின் தேர்களைச் செப்பனிடுவதும், தேர்த்திருவிழாக்களைச் சிறப்பாக நடத்துவதும் அறநிலையத் துறையின் பொறுப்பாகும். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின்போதும், அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியின்போதும், 12 ஆயிரத்து 810 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழமை மாறாமல் திருப்பணியை மேற்கொண்டதற்காக ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு, 2017 UNESCO Asia-Pacific Award for Cultural Heritage Conservation programme in the Awards of Merit category விருது, 1-11-2017 அன்று வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலில், 40 வருடங்களுக்கு

ஒருமுறை நடைபெறும் ஸ்ரீஅத்திவரதர் வைபவம், 1–7–2019 முதல் 17–8–2019 முடிய 48 நாட்கள் திருக்கோயிலின் பழக்க வழக்கங்களின்படி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் ஒரு கோடியே 7 ஆயிரம் பொதுமக்கள் ஸ்ரீஅத்திவரதரை (மேசையைத் தட்டும் ஒலி) தரிசனம் செய்தார்கள். இந்த மாபெரும் நிகழ்வில் எந்தவிதமான சிறு குறையும் மக்களுக்கு ஏற்படாமலும், எந்தவிதமான சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமலும் நடத்தி முடித்து சிறப்பு செய்தது மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சி என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 43 ஆயிரத்து 283 திருக்கோயில்களில் 1,586 திருக்கோயில்களில், 2 ஆயிரத்து 359 திருக்குளங்கள் உள்ளன. 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் எனும் சீரிய திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையிலே, 1,819 திருக்குளங்கள் தூர்வாரப்பட்டு நல்ல நிலையிலே பராமரிக்கப்பட்டன. அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மேலும் 847 திருக்குளங்கள் புனரமைக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் 5 ஆயிரத்து 400 மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, திருக்குளங்களும் புனரமைக்கப்பட்டு அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு, திருக்கோயில் திருக்குளங்களைப் புனித நீரின் பிறப்பிடமாக மாற்றிய பெருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசுக்கே உண்டு எனப் பெருமையுடன் (மேசையைத் தட்டும் ஒலி) கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமனைத் தேடி பக்தன் போனது அந்தக் காலம், பக்தனைத் தேடி பரமனே திருவீதி உலாவில் தினமும் போனது அண்ணன் ஆட்சிக் காலம். (மேசையைத் தட்டும் ஒலி) பல திருக்கோயில்களின் திருத்தேரோட்டங்கள் கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்றதை நாடு நன்கு அறியும். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் திருத்தேர்களைப்

2023 ஏப்ரல் 19] [திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்]

பராமரிக்க, வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியின்மூலம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. திருத்தேர்களைச் செப்பனிடுவது என்பது ஒரு புனிதமான பணியாகும். எனவே, இந்தத் திருத்தேர் திருப்பணி என்பது எவ்வித கால நேரமுமின்றி தொடர்ந்து நடைபெற்று வரும் பணியாகும். திருத்தேர்களைச் சீரமைத்து பாதுகாக்கும்பொருட்டு, தீப்பிடிக்காத தகடுகளால் கூரை, இரும்பு அச்சு, சக்கரம் ஆகியவற்றைச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் 30-8-2011 அன்று சட்டப் பேரவையில் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதனைத் தொடர்ந்து திருத்தேர்களுக்குக் காப்பீடும் செய்யப்பட்டன. தடைப்பட்டு நின்று போன தேரோட்டத் திருவிழாக்களை நடத்தவும், திருத்தேர்களைப் பாதுகாக்கவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசும், அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வந்தன என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னதானத் திட்டம். திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கும், அடியார்களுக்கும், இறையன்பர்களுக்கும் இறை அருளுடன் பசியாற்றிட அன்னதானத் திட்டத்தினை, மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23-3-2002 அன்று மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் முதன்முதலில் துவக்கி வைத்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உன்னதத் திட்டம், படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, 360 திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்குப் பின்பு, 2006 முதல் 2011 வரையிலான தி.மு.க. ஆட்சியின்போது, இந்தத் திட்டம், 2 திருக்கோயில்களுக்கு மட்டுமே விரிவுபடுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி மீண்டும் 2011 ஆம் ஆண்டில் அமைந்தவுடன், 2011 முதல் 2014 வரையில் கிட்டத்தட்ட 256 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 30 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதன்மூலம், நாளொன்றுக்கு 754 திருக்கோயில்களில் 64 ஆயிரத்து 962 பக்தர்கள் பயன்பெறுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கடந்த 13–9–2012 அன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. அப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களின் அமைச்சரவையில் நான் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சராகப் பணியாற்றும் பாக்கியம் கிடைத்தது. தற்போது, அதே 754 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டத்தைப் பக்தர்களின் வருகையை அறிந்து, மேலும் பல திருக்கோயில்களில் செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னதானத் திட்டத்தைப் பற்றியும், திருக்குளத்தைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருந்தார். அவர்களுடைய ஆட்சிக் காலம் பொற்காலம் என்றும் குறிப்பிட்டார். ஒரேயொரு உதாரணத்தை மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டுகளில் அமைச்சராக இருந்த காலம். (குறுக்கீடு) நான் நன்றாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் ஒன்றையும் சொல்லவில்லை. அவர் அன்னதானத் திட்டத்தை extend செய்யவில்லையென்று சொன்னார். திட்டத்தை extend செய்திருக்கிறோமா இல்லையா என்பதற்கான பதிலைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2012–2013, 2013–2014 ஆகிய காலக்கட்டங்களில் இரண்டு முறை அமைச்சராக இருந்தபொழுது அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார்கள். அந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் அவர்கள் வெளியிட்ட ஒட்டுமொத்த அறிவிப்புகளின் எண்ணிக்கை 27. அந்த 27 அறிவிப்புகளில் பழனியை சுற்றி 6 அறிவிப்புகள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட தங்க அட்டைத் திட்டத்தை அவர்கள் வைர அட்டைத் திட்டமாக அறிவித்ததோடு சரி. அது ஒருபுறம் இருக்கட்டும்.

அன்னதானத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்கின்றபொழுது, 754 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இன்னார், இனியவர் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பார்க்கமாட்டார்கள். எது நல்ல திட்டமோ, அந்தத் திட்டத்தைத் திறம்பட செயல்படுத்த வேண்டுமென்று அரவணைப்பைக் காட்டுகின்ற முதலமைச்சர் என்பதற்கு எடுத்துக்காட்டாக, மேலும் 10 திருக்கோயில்களுக்கு ஒருவேளை அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சி, ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் முழு நேர அன்னதானத் திட்டம் அறிவிக்கப்பட்டதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 8 திருக்கோயில்களில் முழு நேர அன்னதானத் திட்டத்தை அறிவித்து, 82 ஆயிரம் பேர் ஒரு நாளைக்கு உணவு உண்ணுகின்ற நிலையை ஏற்படுத்தி, ஆண்டுக்கு ரூ.105 கோடி நிதியை முழு நேர அன்னதானத் திட்டத்திற்கு மாத்திரம் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்ததற்காக இந்தப் பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,ஏழையெளியோருக்கான திருமணத் திட்டம்.மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1981 ஆம் ஆண்டு இந்து சமயத்தைச் சார்ந்த ஏழையெளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருமணம் செய்து வைக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது.

இத்திட்டத்தின்மூலம் ஆதி திராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பயன்பெற்று வந்தனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 1991 முதல் 1996 வரை 7 ஆயிரத்து 504 திருமணங்களும், 2002 ஆம் ஆண்டில் 1,008 திருமணங்களும், 2003 ஆம் ஆண்டு 1,053 திருமணங்களும் திருவேற்காட்டில் நடத்தி வைக்கப்பட்டன. மேலும், 2003 ஆம் ஆண்டு 489 இணைகளுக்கு பல்வேறு திருக்கோயில்களில் திருமணங்கள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டில் அமைந்த தி.மு.க. ஆட்சியில் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

பிற்பகல் 12–50

மீண்டும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி 2011 ஆம் ஆண்டில் அமைந்தபோது, அமைச்சரவையில் நான் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது, 18–6–2012 அன்று திருவேற்காடு திருக்கோயிலின் அருகே 1006 இணைகளுக்கான திருமணம்; 4 கிராம் தங்கம், திருமாங்கல்யம் உட்பட சீர்வரிசைப் பொருட்களுடன் சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இந்தத் திருமணத் திட்டத்தை இந்த அரசு சிறப்பாக நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, கடைசியாக இந்தக் கட்டணமில்லாத் திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு 8 ஆண்டுகள் ஆட்சியிலிருந்தவர்கள் அந்தத் திருமணத் திட்டத்திற்கு மூடுவிழா கண்டுவிட்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் நிறுத்தப்பட்ட இத்திட்டத்தின்மீது ஆய்வு மேற்கொண்டார்கள். உடனடியாக இத்திருமணங்கள் நடத்தப்பட வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். நீங்கள் ஆட்சியிலிருந்தபோது இத்திருமணத்திற்கு சீர்வரிசைக்காக ரூ.15,000–ஐத்தான் ஒதுக்கியிருந்தீர்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இணை ஒன்றுக்கு சுமார் 50,000/– ரூபாயை ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல் (மேசையைத் தட்டும்

ஒலி) 2022–2023 மானியக் கோரிக்கை அறிவிப்பு 14–ன்படி, 500 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தப்பட வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில், 4–12–2022 அன்று அருள்மிகு திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயில் மண்டபத்தில் 31 ஜோடிகளுக்கு தனது பொற்கரங்களால் திருமணத் திட்டத்தைத் துவக்கி வைத்து அறிவித்தபடியே 500 இணைகளுக்கும் திருமணத்தை நடத்திக்காட்டியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம். மனிதர்கள் மட்டுமல்ல, ஏனைய உயிரினங்களும் நம்முடைய இரக்கத்திற்கும் அன்பிற்கும் உரியவைதான் என்ற உயரிய கருத்தையுடையவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2003 ஆம் ஆண்டு திருக்கோயில்கள், திருமடங்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான யானைகள் ஓய்வும், புத்துணர்வும் பெற ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என 2003, 2004, 2005 ஆகிய ஆண்டுகளில் முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்கள் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டன. இம்முகாமில்தான் கோயில் யானைகள் தங்களைப் போன்றே ஓர் உருவத்தினைப் பார்த்து மகிழும் சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், யானைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவும், தரமான மருத்துவ வசதியும், ஓய்வும் அளிக்கப்பட்டதால் புத்துணர்வுடன் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பின. அதன்பின்பு அமைந்த தி.மு.க. ஆட்சியில், 2006 முதல் 2011 ஆம் ஆண்டுவரை இத்திட்டம் கைவிடப்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் மட்டும் 7 யானைகள் பராமரிப்பு இல்லாமல் இறந்துவிட்டன என்பதை இந்த அவையில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2011 ஆம் ஆண்டு மீண்டும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தவுடன் 11–12–2011 முதல் 48 நாட்கள் முதுமலை தெப்பக்காட்டில் இந்த முகாம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, யானைகள் நீண்ட

நேரம் மலையின்மேல் பயணம் செய்ய வேண்டிய சிரமத்தினைக் கருத்தில் கொண்டு, கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகே பவானி ஆற்றங்கரையில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு, நடைபெற்று வந்தது. அதற்குப் பின்பு, அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வந்தது. இந்த ஆட்சியிலும் இந்த முகாமினை எந்த மாச்சரியமும் இல்லாமல், தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* (குறுக்கீடு) *இல்லை, நான் ஒன்றுமே சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கைக்குப் பதில் சொல்கிறேன்.* Soft *ஆகத்தான் சொல்கிறேன். யானைகள் புத்துணர்ச்சி முகாமைப் பொறுத்தவரையில்–– தற்போதைய நிலவரப்படி, 29 யானைகள் திருக்கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலைச் சார்ந்த பார்வதி என்ற யானைக்கு உடல் நலம் குன்றியவுடன், வெளிநாடுகளிலிருந்து மருத்துவரை வரவழைத்து, மனிதர்களை மட்டுமல்ல, ஆண்டவனுக்கு நிகராக போற்றப்படுகின்ற யானைகளையும் காப்பாற்றிய முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர், அன்பிற்கினிய தளபதி அவர்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *இந்த 29 யானைகளில் 2 மடங்களைச் சார்ந்த யானைகளைத் தவிர, 27 யானைகளுக்கு நீச்சல் குளம், குளியல் தொட்டி கட்டி பெருமை சேர்த்தவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள்* (மேசையைத் தட்டும் ஒலி) *என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தக் குளியல் தொட்டியையொட்டியே நடை பழகுவதற்கான நடை பயிற்சி மைதானத்தையும் அமைத்து, மருத்துவர்களின் ஆலோசனையின்படி, யானைகளுக்கு காலை, மதியம், மாலை மற்றும் இரவு வேளைகளில் உணவுகளாக என்னென்ன உட்கொள்ள வேண்டுமென்று, அவற்றையும் வகுத்துத் தொகுத்துத் தந்துள்ளார்கள். 27 யானைகளையும் மனம் குளிர மகிழ்ச்சி உணர்வோடு வைத்திருக்கின்ற முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் என்பதை*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் முதன்மையான திருக்கோயிலான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி முடியுங்கள். 14½ நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) பேசுங்கள். இன்னும் ½ நிமிடம் பேசலாம், பேசுங்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு வருகைத் தரும் பக்தர்கள் மலை ஏற முடியாமல் படும் சிரமத்தினைக் கருத்தில்கொண்டு 3–1–2004 அன்று முதன்முறையாகக் கம்பிவட ஊர்தி என்னும் Rope car திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தொடங்கி வைத்தார்கள் என்பதைப் பெருமையோடு பதிவு செய்கிறேன். மேலும், முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் ஸ்ரீரங்கம் அருள்மிகு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தேவராஜி அவர்கள். (குறுக்கீடு) போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தேவராஜி அவர்கள். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. மாலையிலும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2023–2024 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், நில விவரங்கள் என்ற தலைப்பின்கீழ் பக்கம் 61–ல் 21 ஆயிரத்து 933 கட்டடங்கள், 70 ஆயிரத்து 738 மனைகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, திரும்பவும், நன்றி சொல்லி முடியுங்கள். முடித்துவிடுங்கள். நேரமில்லை.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: ஒரே ஒரு subject. ஒரே ஒரு subject. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்து விடுங்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: 39 ஆயிரத்து 171 விவசாய நிலங்கள் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடப்பட்டு பசலி ஆண்டு 1432–ல் 1–7–2022 முதல் 21–3–2023 வரையிலான காலத்திற்கு மட்டும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான மேற்கண்ட அசையாச் சொத்துகளிலிருந்து ரூபாய் 117.63 கோடி வாடகையாக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 2022–2023 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், நில விவரங்கள் என்ற தலைப்பில் பக்கம் 45–ல் 22 ஆயிரத்து 600 கட்டடங்கள், 33 ஆயிரத்து 665 மனைகள், 1 இலட்சத்து 23 ஆயிரத்து 729 விவசாய நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக உள்ளது. கட்டட வாடகைதாரர் 667 பேர் குறைந்துள்ளனர். மனை வாடகைதாரர்கள் 37 ஆயிரத்து எழுபத்து மூன்று பேர் அதாவது 100 சதவிகிதத்திற்கு மேல் கடந்த ஆண்டைவிட கூடியுள்ளனர். விவசாயக் குத்தகைதாரர்கள் 84,558 பேர் இந்தத் தகவலின்படி காணவில்லை. பசலி ஆண்டு 1431–ல் 1–7–2021 முதல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நிறைய paper வைத்திருக்கிறீர்கள். அதையெல்லாம் பதிவு செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. பக்கம், பக்கமாக வைத்திருக்கிறீர்கள். நிறைய வைத்திருக்கிறீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தேவராஜி அவர்கள். (குறுக்கீடுகள்) போதும், எல்லாம் பதிவு செய்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தேவராஜி அவர்கள்.

திரு. க. தேவராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்கி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர். . .

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்தது திரு. சேவூர் S. இராமச்சந்திரன் பேசுவாரே! (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) சரி ஒரு நிமிடம். (குறுக்கீடு) கோரிக்கை அல்ல. (குறுக்கீடு) இல்லை. ஒரு நிமிடம். 55-க்கு மணியடிப்பேன்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *தமிழ்நாடு முதுநிலைப் பணியாளர்கள் அனைவருக்கும் 2016 ஆம் ஆண்டு 7-வது ஊதியக் குழுவின்படி ஊதியம் வழங்கலாம் என தமிழ்நாடு அரசால் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அனைத்துத் திருக்கோயில் பணியாளர்களும் 7-வது ஊதியக் குழுவின் ஊதியத்தினைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். ஆனால், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் பணியாளர்கள் பலர் இன்றுவரை 7-வது ஊதியக் குழுவின்படி ஊதியம் பெறாமல் உள்ளனர். புதிதாகச் சேர்ந்த பணியாளர்களுக்கு 7-வது ஊதியக் குழுவின்படி ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பணிபுரியும் பழைய பணியாளர்களுக்கு 7-வது ஊதியக் குழுவின்படி ஊதியத்தை உடனே நடைமுறைப்படுத்தி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு (மணியடிக்கப்பெற்றது) நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *இந்த வாய்ப்பினை வழங்கிய கழகத்தினுடைய பொதுச் செயலாளர், சபையினுடைய எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தேவராஜி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். உறுப்பினர், 2 நிமிடங்கள் 48 வினாடிகள் அதிகமாக பேசுவதற்கு வாய்ப்பு தந்திருக்கிறேன்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் திருக்கோயில்களுக்கும் ஊதியம் வழங்குவதுபோல், திருத்தணி கோயில் பணியாளர்களுக்கு மாத்திரம் ஊதியம் வழங்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை அழகாகப் பதிவு செய்திருக்கின்றார். அவரும் ஏற்கெனவே துறையின் அமைச்சராக இருந்தவர் என்ற காரணத்தினாலும், விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். 7–வது ஊதியக் குழுவின் அடிப்படையில் முதல்நிலை கோயில்கள் அனைத்திலும் பணியாற்றுபவர்களுக்கு 7–வது ஊதியக் குழுவில் என்ன பரிந்துரைக்கப்பட்டதோ அந்தச் சம்பளம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எப்போதுமே ஒரு திருக்கோயிலை எடுத்துக்கொண்டால் அந்தத் திருக்கோயிலினுடைய வருவாயில், 25 சதவிகிதத்திற்குமேல் அங்கு பணியாற்றக்கூடிய ஊழியர்களின் சம்பளம் இருக்கக் கூடாது என்று விதி இருக்கின்றது. அப்படி 25 சதவிகிதத்திற்குமேல் இருக்குமானால், ஆணையாளருக்கு அனுப்பி, சிறப்பு அனுமதியைப் பெற்று அவர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டும். தற்போது அவர் கூறிய திருத்தணி திருக்கோயிலில் இருக்கின்ற நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து, ஆணையாளருக்கு, அந்தத் துறையினுடைய இணை ஆணையாளர் வாயிலாக பரிந்துரை அனுப்பப்பட்டு, அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றது. வெகுவிரைவில் அவர்களுக்குண்டான அந்தச் சம்பளம் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:

தொகுதிக் கோரிக்கைகள்:

மானசரோவர்–முக்தினாத் பயணத்திற்கு 500 பேர் என்பதை மேலும் 500 பேருக்கு அதிகப்படுத்தி வழங்க வேண்டும். பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் இயங்கி வந்த படுக்கை வசதியுடன்கூடிய மருத்துவமனை தற்சமயம் செயல்பாட்டில் இல்லை; இதனை மேம்படுத்தி மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். கோவை மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் படிகளில் மலையேறும் ஆண், பெண் பக்தர்களுக்குக் கழிப்பிட வசதி செய்து தர வேண்டும்.

2023 ஏப்ரல் 19] [திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்]

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை ஆளுகைக்குட்பட்ட திருப்பூர் மாவட்டம், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் கோவை மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்களால் பராமரிக்கப்பட்ட கருணை இல்லங்கள் செயல்பாட்டில் இல்லை; இவற்றை மீண்டும் திறக்க வேண்டும். ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் அரங்கநாதரை சயன கோலத்தில் தரிசிக்க பிற கோயில்களில் செய்யப்பட்டுள்ளதுபோல் உயர்மட்ட வல்லுநர் குழு அமைத்திட வேண்டும். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவச சித்த மருத்துவமனையையும், சித்த மருந்தகத்தையும் அமைக்க வேண்டும். திருக்கோயில் பணியாளர்களுக்கு 60 நாட்கள் போனஸ் என்பதை மாற்றி ஒரு மாத கால போனஸ் வழங்க ஆவன செய்ய வேண்டும். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களில் அவரவர் கல்வித் தகுதிக்கேற்ப 50 சதவிகிதம் ஒதுக்கிட ஆவன செய்ய வேண்டும்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் சார்நிலைப் பணியான செயல் அலுவலர் பணி மற்றும் அமைச்சுப் பணி ஆகிய இரு பணிகளிலும் 28 வருடங்கள் பூர்த்தியான அப்பழுக்கற்ற அலுவலர்களுக்குக் காவல் துறை போன்று எவ்வித நிபந்தனையுமின்றி பதவி உயர்வு வழங்கிட ஆவன செய்ய வேண்டும்.

திருக்கோயில் பணியாளர்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி நன்னடத்தை உள்ளவர்களை நிரந்தரப் பணியாளராக்குவதற்கான உத்தரவினை 2 ஆண்டுகளாகக் குறைக்க ஆவன செய்ய வேண்டும்.

திருக்கோயில் பணியாளர்களின் குறைகளை நீக்கி தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

பல்லடம்–தாராபுரம் சாலை, பனப்பாளையத்தில் இருந்து கோவை, அண்ணா நகர் வரை ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும். பல்லடம் தொகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தைச் செயல்படுத்த முழு முயற்சி எடுக்க வேண்டும்.

திருப்பூர் மாநகராட்சியில், மீதமுள்ள 7 வார்டுகளுக்கும், பல்லடம் தொகுதியில் மீதமுள்ள 7 வார்டுகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். விசைத்தறி நெசவாளர்களுக்கு உரிய கூலி உயர்வு பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விசைத்தறித் தொழிலாளர்களுக்கு நல வாரியம் உருவாக்க வேண்டும். விசைத்தறி பயிற்சி மையம் அமைக்க வேண்டும். வெளி மாநில விசைத்தறித் தொழிலாளர்களுக்காக விடுதி அமைத்துத் தர வேண்டும். பல்லடத்தில் ஒரு ஜவுளி சந்தை அமைக்க வேண்டும்.

கோழித் தீவன விலையைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். கோழிப் பண்ணை கழிவு மற்றும் இறந்த கோழிகளை மீண்டும் தீவனமாக மாற்றும் இயந்திரங்களை அரசு இலவசமாக நிறுவித் தர வேண்டும். பல்லடம், பொது கால்நடை மருந்தகத்திற்கு நவீன ஸ்கேனிங் இயந்திரம் மற்றும் இதர கருவிகளை நிறுவ வேண்டும்.

பல்லடம், கோழியின நோய் மற்றும் தீவன ஆய்வுக் கூடத்திற்கு அதி நவீன NIR இயந்திரங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். மேலும் அங்கு நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களைப் பணியமர்த்த வேண்டும்.

பல்லடம் தொகுதி, புரட்சித் தலைவி அம்மா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2022–2023 ஆம் கல்வி ஆண்டில் B.A. (Economics), B.A. (Political Science), B.A. (History), B.Com. (Co-operation) ஆகிய இளங்கலை படிப்புகளும் M.Com., M.A. (Tamil), M.A. (English) ஆகிய முதுகலை படிப்புகளும் என 7 பாடப் பிரிவுகளைத் துவங்க வேண்டும். மேலும், இக்கல்லூரிக்குத் தேவைப்படும் போதுமான விரிவுரையாளர்களைப் பணியமர்த்த வேண்டும்.

மத்திய அரசு அறிவித்ததைப்போல, தமிழ்நாடு அரசு பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கிய ரூபாய் 200 கோடி வட்டியில்லாக் கடனை மானியமாக மாற்றி அறிவிக்க வேண்டும். பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் ரூபாய் 350 என நிர்ணயிக்க வேண்டும். இணையவழி முன் பதிவுத் திட்டத்தினை மீண்டும் துவக்கிட வேண்டும்.

2023 ஏப்ரல் 19]

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தேவராஜி அவர்கள். தற்போது 1-00 மணி. நீங்கள் 1-07 மணிக்குள் முடித்து விட வேண்டும்.

***திரு. க. தேவராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர் ஆகியோரை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற சன்னிதானத்தில் உரையாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய தமிழினத்தின் முகவரியே, நவீன தமிழகத்தினுடைய சிற்பியே, தமிழ்நாட்டின் தங்கமகனே, கலங்கரை விளக்கம்போல் விழித்திருந்து கடமையாற்றுகின்ற தமிழ்நாட்டின் நிரந்தர முதல்வர், எங்களுடைய தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களால் உச்சி முகர்ந்து, மெச்சிப் புகழும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், எங்கள் சின்னவரை வணங்குகிறேன். கோபாலபுரத்தின் விஸ்வாசமே, எங்கள் மண்ணின் மைந்தரே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். திக்கெட்டும் திரண்டெழும் திருவண்ணாமலை தீபம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மலைக்கோட்டை தந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களே, விவசாயிகளின் ஜீவநாடியாக விளங்கும் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களே, எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்த ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை தொகுதியில் அமைந்துள்ள ஏலகிரி மலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டமான தாவரவியல் பூங்கா அமைக்க சுமார் 100 ஏக்கர் அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பணிகள் விரைந்து நடக்க நடவடிக்கை மேற்கொண்டு அந்தத் தாவரவியல் பூங்காவிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருப்பெயரை வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலமாக விளங்கும் ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏலகிரி மலைப் பகுதியில் அமைந்துள்ள ஏரி, குளங்களைத் தூர்வாரி அழகுபடுத்தினால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏலகிரி சுற்றுலாத் தலம் சிறப்பாக வளர்ச்சிபெற திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டையில் ஏழையெளிய மாணவர்கள் பயில தொழிற் பயிற்சி நிலையம் (ITI) அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஏலகிரி மலையில் வாழும் 500–க்கும் மேற்பட்ட பழங்குடியின குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலையில் 14 கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களுக்குப் போதுமான மின்சாரம் கிடைப்பதில்லை. எனவே, ஏலகிரி மலையில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி–திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலை அமைந்த பிறகு, செட்டியப்பனூர், கலந்திரா, பொன்னேரி, ஜோலார்பேட்டை, பக்கிரிதர்கா, பால்னாங்குப்பம், பாச்சல் வரை சுமார் 18 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலையை அமைத்துவிட்டார்கள். எனவே, அதன் இரண்டு புறமும் கழிவுநீர்க் கால்வாய்களை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டத்தில், கடந்த பத்தாண்டுக் கால அரசால் கவனிக்கப்படாமல் இருந்த, இரயில்வே மேம்பாலப் பணிகள் திராவிட மாடல் ஆட்சியில்தான் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜோலார்பேட்டை பகுதியில் குடியானகுப்பம், சோமநாயக்கன்பட்டி, நாட்றாம்பள்ளி பகுதியில் பச்சூர், வாணியம்பாடி பகுதியில் வளையாம்பட்டு, ஆம்பூர் பகுதியில் கெண்ணடிகுப்பம் ஆகிய இடங்களில் மேம்பாலப் பணிகளுக்கு சுமார் ரூபாய் 150 கோடி நிதி ஒதுக்கிடு செய்து, பணிகள் வேகமாக நடக்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் திருப்பத்தூர் மாவட்ட மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை தொகுதியில் சரஸ்வதி ஆற்றினையொட்டி கொத்தூர் கிராமம் முதல் கல்லாறு இணையும் வரை 9 கோடியே 94 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து பணி நடைபெறுவதற்கும், சின்ன வேப்பம்பட்டு ஊராட்சியில் தடுப்பணைக் கட்டுவதற்கு 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும் திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு என் தொகுதிவாழ் மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. க. தேவராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ முடித்து விடுகிறேன். வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியத்தில் போரகானாறு-எரகுட்டை சேனல் திட்டத்திற்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய்க்கு ஆணை பிறப்பித்த திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு தொகுதிவாழ் மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஜோலார்பேட்டை தொகுதி, நாட்றாம்பள்ளி ஒன்றியத்தில் புதிய கலைக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்திற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய திறந்த வெளி மற்றும் உள் விளையாட்டு அரங்குகள் அமைக்கப்படும் என்ற புதிய அறிவிப்பினை அறிவித்த மக்கள் போற்றும் அமைச்சர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை நகராட்சியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கு (தெற்கு) எட்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜோலார்பேட்டை சிறுவிளையாட்டு அரங்கத்தில் உள் விளையாட்டு அரங்கம் (இறகுப் பந்து, கபடி) மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்குவதற்கான விடுதி வசதி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை தொகுதி, அம்மணாங்கோயில் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். புதுப்பேட்டை பகுதியில் விவசாயக் கொள்முதல் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாமலேரிமுத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டு வகுப்பறைக் கட்டடமும் மூன்று அறிவியல் ஆய்வகக் கூடமும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை ஒன்றியம், சின்னமூக்கனூர் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆறு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் மற்றும் computer lab அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாட்றாம்பள்ளி அருள்மிகு சாமுண்டீஸ்வரி அம்மன் ஆலயத்திற்குக் குடமுழுக்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கெஜல்நாயக்கன்பட்டி ஊராட்சியில் இயங்கிவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை சமுதாய சுகாதார நிலையமாக தரமுயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஜோலார்பேட்டை ஒன்றியம், சின்னவேப்பம்பட்டு பகுதியில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை நகராட்சியில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்கிறோம்.

திரு. க. தேவராஜி: ஜோலார்பேட்டை, வக்கணம்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 12 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஜோலார்பேட்டை, கட்டேரி ஊராட்சியில் உள்ள கட்டேரி அம்மன் ஆலயத்திற்குக் குடமுழுக்கு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கடைசி point-ஐப் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீதமுள்ள எனது தொகுதிக் கோரிக்கைகளை அவையில் நான் பேசியதாகக் கருதி அவைக் குறிப்பில் சேர்த்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக நன்றி சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாடு முழுவதும் மக்கள் பேசுகிறார்கள், பூமி குலுங்கினாலும், புயல் வீசினாலும், வானம் அறுந்து கீழே விழுந்தாலும், என் தலைவனின் திராவிட மாடல் ஆட்சி நூறாண்டுக் காலம் நீடித்து நிற்கும் என்று மக்கள் தீர்மானித்துவிட்டார்கள். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அறிவாலயம் தந்த அன்பாலயமே! அகிலம் போற்றும் தமிழ்க் காவியமே! கோபாலபுரம் தந்த பூபாளமே! எங்கள் தமிழர்களின் அடையாளமே! மனுநீதிச் சோழன்போல் வந்தாய், சம நீதி எங்களுக்குத் தந்தாய்! ஒரு பாதி பெரியார், மறுபாதி

அண்ணா என்று வாழ்ந்திட்ட மன்னா! நூறாண்டு காலம் உன் புகழ் வாழ்க! நூறாண்டு கடந்து உன் தமிழ் வெல்க! டாக்டர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாசியில் பிறந்த மாசில்லாத் தலைவரே! முத்தமிழ் பெற்றெடுத்த பூந்தமிழே! இருட்டில் கிடந்த தமிழ்நாட்டிற்கு விடியல் தந்த வெற்றி நாயகனே! தாயுள்ளம் போன்ற உங்கள் ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களின் மனம் குளிர்ந்தது; படித்த இளவரசிக்கு 1,000 ரூபாய்! படித்து முடித்த இல்லத்தரசிக்கு 1,000 ரூபாய்! பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம்; நனவாகிறது ஏழைகளின் கனவு! இப்படி நீங்கள் போட்ட கையெழுத்து அத்தனையுமே ஆய்த எழுத்து! அன்று சிறையில் இருந்தபோது நீங்கள் தலைவன், இன்று கோட்டையில் இருக்கும்போது நீங்கள் தொண்டன்! என்றைக்கும் எங்கள் இதயத்தில் உதயசூரியன்! எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அன்பான வணக்கம்.

அண்ணன் திரு. உதயநிதி, மக்களுக்காக ஓடிகொண்டிருக்கும் நதி! வயதால் நீங்கள் சின்னவர்; திறமையால் நீங்கள் மன்னவர்; கலைஞருக்கு நீங்கள் பேரன்; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நீங்கள் புதல்வன்; எங்கள் இளைஞர்களுக்கு நீங்கள் காவலன்; எங்களுக்கு நீங்கள் ஆதவன்; மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ராஜபாளையம் வட்டாரம் கடந்த ஆட்சியாளர்களால் சிவகாசி கோட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு சாத்தூர் கோட்டத்தில் இணைக்கப்பட்டது. பொதுமக்கள் நலன் கருதி அதை மீண்டும் சாத்தூர் கோட்டத்திலிருந்து பிரித்து, சிவகாசி கோட்டத்துடன் ராஜபாளையத்தை இணைத்தவர், பல இலட்சக்கணக்கான ஏக்கர் அரசு நிலத்தை மீட்டெடுத்தவர், 2 இலட்சத்து 50 ஆயிரம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவசப் பட்டா வழங்கியவர், சிறப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து இரண்டு புயல்களைத் தகர்த்து, பொதுமக்களைக் கவர்ந்தவர், விருதுநகர் தெற்கு மாவட்டத்தினுடைய செயலாளர் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களை வணங்குகின்றேன்.

இந்திய அளவில் தொழில் வளர்ச்சியில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி, விருதுநகர் மாவட்டத்தில், குமாரசிங்கபுரத்தில் 1,052 ஏக்கரில், ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் சிப்காட் தொழில் பூங்காவைக் கொண்டு வந்தவர், 217 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தவர், 2 இலட்சத்து 37 ஆயிரத்து 617 கோடி ரூபாய் முதலீட்டைப் பெற்று வந்தவர், 3 இலட்சத்து 75 ஆயிரம் நபர்களுக்குப் புதிய வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்தவர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களை வணங்குகின்றேன்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும், அரசுக் கொறடா அவர்களையும், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். இச்சிறப்பு வாய்ந்த சட்டமன்றத்திற்கு என்னை அனுப்பிய ராஜபாளையம் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு திட்டங்கள், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48; இல்லம் தேடிக் கல்வி, பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி, புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம், நம் பள்ளி நம் பெருமை திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், ஊட்டச்சத்து குறைவு உள்ள குழந்தைகளுக்குச் சிறப்பு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம், இல்லத்தரசிகளுக்கு மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் ஆகியனவாகும் Chess விளையாட்டுப் போட்டியை சிறப்பாக நடத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்க் கடவுள் முருகன்; குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்

என்று சொல்வார்கள். முருக பக்தர்கள் திருவிழாக் காலங்களில், முருகன் குடியிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகிய இடங்களுக்குச் சென்று தரிசனம் செய்ய விரும்புகிறார்கள். ஆனால், 60 வயதிற்கு மேற்பட்டவர்கள், மூத்த குடிமக்கள், அறுபடை வீடுகளைத் தரிசனம் செய்வதற்கு சரியான ஏற்பாட்டை செய்து கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறார்கள். நமது இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறையும், சுற்றுலாத் துறையும், போக்குவரத்துத் துறையும், சமூக நலத் துறையும், வயதில் மூத்த குடிமக்கள், முருக பக்தர்கள் அறுபடை வீடுகளை தரிசனம் செய்ய ஆன்மிகச் சுற்றுலா அழைத்துச் சென்று வர ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு ஒரு package tour-போக்குவரத்து, உணவு, இருப்பிடம் மற்றும் சிறப்பு தரிசனம்-அளிக்கப்பட வேண்டும். ஏற்றிய இடத்திலேயே அவர்களைக் கொண்டு வந்து இறக்கிவிட ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். இந்த ஆன்மிகச் சுற்றுலா, நம் மாநிலத்தில் உள்ளவர்களுக்கும், வெளி மாநிலங்களில் உள்ளவர்களுக்கும், மூத்த குடிமக்களுக்கும் புதுமையாக இருக்கும். இந்த ஆன்மிகச் சுற்றுலாமூலம் முருக பக்தர்களும், பொதுமக்களும், நம் முதல்வர் அவர்களையும், அரசையும் பாராட்டுவார்கள்.

இதேபோன்று இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில், தஞ்சாவூர், பெரியகுளம் போன்ற இடங்களிலுள்ள மிகச் சிறப்பு வாய்ந்த கோயில்களுக்குச் செல்ல ஒவ்வோர் ஊரிலிருந்தும் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுலா என்பது, உள்நாட்டுச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, தனிநபர் சுற்றுலா, குழு சுற்றுலா, பன்னாட்டுச் சுற்றுலா, கல்விச் சுற்றுலா, சமூகச் சுற்றுலா என வகைப்படுத்தலாம். சுற்றுலாத் துறைமூலம் தமிழ்நாட்டிற்கு வருவாய் அதிகரிக்கும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களின் சிறப்புகள் குறித்து TV மூலமாகவும், வலைதளம் மூலமாகவும், நமது மாநிலத்திலும், வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் விளம்பரப்படுத்த வேண்டும். மேலும் 53 தமிழ்நாடு ஓட்டல்களை முறையாகப் பராமரித்து, தரமுயர்த்தி, நவீனப்படுத்த வேண்டும். அனைத்து

சுற்றுலாத் தலங்களிலும் தகவல் மையம் அமைக்கப்பட வேண்டும். இத்தகவல் மையத்தில் சுற்றுலாத் தலங்களைக் குறித்து. . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: தேவையான பேருந்து வசதி, தங்கும் விடுதி, உணவு வசதி என அனைத்தும் கவனிக்கப்பட வேண்டும். அதிகமான பயணிகள் வரும் இடங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு அரசு சுற்றுலா மையமாக அங்கீகாரம் கொடுக்க வேண்டும். அவற்றிற்கு அங்கீகாரம் கொடுக்கும்பட்சத்தில் அடிப்படை வசதிகளைக் கட்டாயம் செய்து கொடுக்க வேண்டும்.

சுற்றுலா என்றால், சுற்றுலாத் தலத்திலிருந்து நேரடியாக பேருந்து வசதி இருக்க வேண்டும். மலை, கடல் போன்ற ஆபத்தான பகுதிகளில் உயிர் காக்கும் மருத்துவ வசதி உடனடியாகக் கிடைக்குமாறு செய்ய வேண்டும். மேற்கண்ட அடிப்படை வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு நாம் செய்துகொடுத்தால், வருவாய் அதிகரித்து, சுற்றுலாத் துறையும் மேம்படும். மேலும், நம்முடைய கலாச்சாரம், பண்பாடு, தமிழ்மொழி வளர்ச்சியடையும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள அய்யனார் கோயில், சாஸ்தா கோயில், அணைப் பகுதியிலுள்ள சஞ்சீவி மலையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ராஜபாளையம் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள அய்யனார் கோயிலுக்குச் செல்ல பாலம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம்தான். முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் 4,253 தறிகள் உள்ளன. அதில் 2,201 தறிகள் ராஜபாளையம் தொகுதியில் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் சுமார் 10,000 நெசவாளர்கள் வாழ்வாதாரம் பெறுகின்றனர்.

அவர்களுக்கு 6 மாத காலம் ஜனதா சேலையும், 6 மாத காலம் uniform காடா வேலையும் வழங்கப்படுகிறது. இத்தனை வேலைகள் வழங்கினாலும், இந்தக் காலத்தில் ராட்டினம் சுற்றும் முதியவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியவில்லை. ஆகவே, ராஜபாளையம் தொகுதி நெசவாளர்களைக் கருத்தில்கொண்டு, வருடந்தோறும் ஜனதா சேலை நெய்யும் பணி வழங்க மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *ராஜபாளையம் தொகுதியில் அரசு மகளிர் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, எம்.பி.கே. புதுப்பட்டிவிலக்கிலிருந்து கோதை நாச்சியார்புரம் வழியாக அமிழ் ஹோட்டல் வரை புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள்.*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *நன்றி சொல்லிவிடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 3 கோடி ரூபாயிலிருந்து 4 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *அவ்வளவுதான் ஐயா, நன்றி சொல்லிவிடுகிறேன். நன்றி. இம்மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும்,*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள். விரைவில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வணக்கம். பெருந்தலைவர் காமராஜர் அவர்களை வணங்குகிறேன். சட்டமன்றத் தேர்தலின்போது தனது பரப்புரையில் கொடுத்த வாக்குறுதிகளில் பலவற்றை நிறைவேற்றித் தந்ததோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலுள்ள குடும்பத் தலைவி ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டத்தில் உள்ள திருக்குற்றாலம், உலகப் பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலமாகும். இந்தியாவில் உள்ள பல மாநிலங்களிலிருந்தும், உலகத்திலுள்ள பல நாடுகளிலிருந்தும் குற்றாலத்திற்கு மிகுதியான சுற்றுலாப் பயணிகள் வந்து இயற்கையைக் கண்டுகளித்து, அருவிகளில் குளித்துச் செல்கிறார்கள். இத்திருக்குற்றாலத்தில் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி, புலி அருவி, சிற்றருவி, செண்பகாதேவி அருவி, தேனருவி போன்ற அருவிகள் உள்ளன. இந்த அருவிகளிலிருந்து கொட்டும் தண்ணீர் மருத்துவக் குணம் வாய்ந்தது என்பது ஐதீகம். காரணம் அந்தத் தண்ணீர் பல்லாயிரக்கணக்கான மூலிகைகள் நிறைந்த செடிகளின் வழியாகத்தான் தவழ்ந்து வந்து அருவியாகக் கொட்டுகிறது. இங்கு பிரபலமான திருக்குற்றாலநாதர் கோயிலும் உள்ளது. எனவே, குற்றாலத்திற்கு வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய உதவிகளை அரசின் மூலமாகச் செய்வதற்கும், உரிய நிதிகளைப் பெறுவதற்கும் கேட்டுக்கொள்கிறேன். உலக சுற்றுலா வரைபடத்தில் இத்திருக்குற்றாலத்தைச் சேர்க்க வேண்டும் என்கிற கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு சென்ற கூட்டத் தொடரிலேயே தங்களின் வாயிலாக மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தேன். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க வரும் தாய்மார்கள் குளித்து முடித்தவுடன், உடை மாற்றுவதற்கான தனி அறைகள் உள்ளன. என்றாலும், அவை பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே, பெண்கள் உடை மாற்றும் அறைகளைச் சீர்செய்து, புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஏழைகளின் ஊட்டி குற்றாலம் என்கிற புகழ்பெற்ற இக்குற்றாலத்தில் உடை மாற்றும் பெண்களிடம் நபர் ஒருவருக்கு ரூ.10 வசூல் செய்யும் வழக்கம் உள்ளது. அந்தக் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும். மேலும், சுற்றுலாப் பயணம் வரும் தாய்மார்களுக்கென்று உடை மாற்றும் அறையின் பக்கத்தில் ஒரு சுகாதார வளாகம் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுலா வரும் சுற்றுலாப் பயணிகள் குறைந்த கட்டணத்தில் தங்கிச் செல்வதற்கு மெயின் அருவி தங்கும் விடுதி, மல்லிகை தங்கும் விடுதி, தென்காசி சாலை தங்கும் விடுதி, செங்கோட்டை சாலை தங்கும் விடுதி போன்ற தங்கும் விடுதிகள் உள்ளன. இவை கட்டி முடிக்கப்பட்டு நீண்ட வருடங்கள் ஆனதால் பழுதடைந்து பராமரிப்பின்றி கிடக்கின்றன. இவ்விடுதிகளை உடனடியாக பழுது நீக்கம் செய்து, புதுப்பித்து, குறைந்த வாடகையில் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கினால் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

பிற்பகல் 1–25

அதோடு மட்டுமல்லாமல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் போன்ற மாதங்களில் சாரல் மழை சீசன் நேரத்தில், சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் அதிகமாக வருகை தருவார்கள். அதே மாதங்களில் கிறித்துவ மக்களின் ராக்கால் திருவிழா என்பதாலும் அதிகளவு போக்குவரத்து வாகனங்கள் குற்றாலத்திற்குள் வந்து செல்லும்போது மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் விபத்துகள் நிகழ்கின்றன. போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு மல்லிகை தங்கும் விடுதிக்கு அருகில் காலியாக உள்ள இடத்தில் மேற்கண்ட ஐந்து மாதங்களுக்கு மட்டும் தற்காலிகப் பேருந்து நிலையம் அமைக்க சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களிடம் உரிய அனுமதியைப் பெற்று பேருந்து நிலையம் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 19] [திரு. S. பழனி நாடார்]

இதேபோன்று, போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்குக் குற்றாலத்திலிருந்து பழைய குற்றாலம் வரையிலான சாலையின் இருபுறமும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். அதேபோன்று, குற்றாலத்திலிருந்து தென்காசி ஆனைப்பாலம் வரையிலான சாலையில் இருபுறத்திலும் நீண்டகாலமாகப் பட்டுப்போன, கீழே விழும் நிலையில் ஏராளமான மரங்கள் உள்ளன. பட்டுப்போன அந்த மரங்களை வெட்டி அகற்றி, பொதுமக்களைக் காக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, தென்காசி ஆனைப்பாலம் மிகவும் குறுகலாக உள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. அந்தப் பாலத்தை அகலப்படுத்தித் தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. S. பழனி நாடார்: எல்லோருக்கும் நேரம் கொடுத்தது போன்று எனக்கும் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): நீங்கள் உரையாற்ற ஆரம்பித்த நேரம் குறித்து விவரம் எங்களிடம் இருக்கிறது.

திரு. S. பழனி நாடார்: குற்றாலம், காசிமேஜர்புரம், இலஞ்சி, கீழப்புலியூர், தென்காசி, சிந்தாமணி, மேலகரம், நன்னகரம் குடியிருப்பு உள்ளிட்ட நகர மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு 1961 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் குற்றாலம்-தென்காசி கோடைக்கால கூட்டுக் குடிநீர்த் திட்ட நீர்த்தேக்கம் குடியிருப்பு கிராமத்தில் 36 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட குளத்தின் நடுவே அமைக்கப்பட்டு, குழாய்கள் பதிக்கப்பட்டு குற்றாலம் பேரருவியிலிருந்து மழை, வெள்ள நீர் மேற்படி நீர்தேக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டு 1965-ல் இத்திட்டம் பயன்பாட்டிற்கு வந்தது. அதன்பின்பு, பல ஆண்டுகளாகச் சரியான பராமரிப்பு இல்லாததாலும், அருவி நீர் தடையில்லாமல் வராததாலும் பொதுமக்களுக்குத் தடையில்லாமல் குடிதண்ணீர் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): *இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. S. பழனி நாடார்: *எனவே, மேற்கண்ட குடியிருப்பு கிராமக் குளத்தை நிலா காட்டேஜ் முன்பாக, தூர்வாரி நீர்த்தேக்கத்தைப் பராமரிப்பு செய்து குற்றாலம் புலி அருவியிலிருந்து மழைக் காலங்களில் கால்வாய் மூலமாகவோ, ராட்சத குழாய்கள் மூலமாகவோ அருவியில் விழுகின்ற உபரி நீரைக் கொண்டு வந்து நிரப்பினால் மேற்கண்ட ஊர்களிலுள்ள அனைவருக்கும் வருடம் முழுமைக்கும், கோடைக்காலத்திலும் தடையில்லாமல் தண்ணீர் கிடைக்கும். எனவே, மேற்கண்ட கூட்டுக் குடிநீர் நீர்தேக்கத்தைப் புதுப்பித்து, பராமரித்துத் தருமாறு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): *மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளப்படும்.*

திரு. S. பழனி நாடார்: *எனது தென்காசி தொகுதியில் உள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயில் இந்தியா முழுவதும் பிரசித்தி பெற்ற கோயில்; நிறைய பக்த கோடிகள் (மணியடிக்கப்பெற்றது) வருகை தந்து இறைவனை வணங்கிச் செல்கிற மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகும்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள். நீங்கள் மணி 1–21–க்கு பேச ஆரம்பித்தீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. S. பழனி நாடார்: *திருக்கோயில்களுக்கு ஐதீக முறைப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும் என்பது வழக்கம். ஆனால், தென்காசி காசிவிஸ்வநாதர் திருக்கோயிலுக்கு 15 ஆண்டுகளாகக் கும்பாபிஷேகம் நடத்தப்படவில்லை என்கிற ஆதங்கம் நீண்ட காலமாக இப்பகுதி மக்களின் மனதில் உள்ளது. எனவே, மேற்கண்ட திருக்கோயிலுக்கு எப்போது கும்பாபிஷேகம் நடத்தப்படும்*

என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், வீரகேரளம்புதூரில் உள்ள நவநீதகிருஷ்ணசாமி கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்று 113 ஆண்டுகள் கடந்துவிட்டன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பழுதடைந்த இத்திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையைச் சென்ற கூட்டத் தொடரிலேயே தங்களின் வாயிலாக மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மேற்கண்ட கோயிலைத் தொல்லியல் துறையிடம் ஆய்வு செய்து கும்பாபிஷேகம் நடத்துவதற்கான கருத்துருக்களைத் தருமாறு அறிவுறுத்தியுள்ளேன் என்று கூறினார்கள்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன். நேரமில்லை; இன்னும் 7 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி, 3 மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும்.

திரு. S. பழனி நாடார்: எனது தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுகிறேன். அவற்றைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, புளியரையிலுள்ள குருஸ்தலமான ஸ்ரீதட்சிணாமூர்த்தி கோயிலைச் சுற்றி ஓய்வறைகள், தங்கும் விடுதிகள், சுகாதார வளாகங்கள் ஆகியவற்றைக் கட்டித் தர வேண்டும். ராமநதி–ஜம்பு நதி மேல்மட்டக் கால்வாய்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும். இரட்டைக்குளம்–ஊத்துமலை கால்வாய் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும். தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் நிரந்தரத் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

தென்காசி மாவட்டத்திலுள்ள HR&CE இணை ஆணையர் அலுவலகம் தூத்துக்குடி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனை தென்காசி மாவட்டத்திற்குப் பிரித்து தனியாக வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.

திரு. சீ. கதிரவன்: இந்த மாபெரும் அவையில் நடுவராக அமர்ந்து (குறுக்கீடு) நடுநிலையாக இப்பேரவையைச் செவ்வனே நடத்தி வரும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நானும் டெல்டாகாரன்தான்' என்று பாரம்பரியமிக்க இப்பேரவையில் ஒலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் குரல் டெல்லி வரை அதிர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கரி எடுக்கும் திட்டத்தில் கல் விழுந்தது. தங்களது மண்ணின் மைந்தனை நினைத்து டெல்டா விவசாயிகள் மனம் குளிர்ந்தனர். ஆன்லைன் சூதாட்டம் வேண்டாம் என அறப்போர் நடத்தினோம். சாத்வீக முறைப்படியும், கொஞ்சம் சத்தமாகவும் கேட்டுப் பார்த்தோம். எதுவுமில்லா பாத்திரங்களைக் கிண்டிக் கொண்டிருந்தவர்களின் காதுகளில் எதுவும் விழவில்லை. ஏனென்றால், இது சூதாட்டமாயிற்றே! சாதுரியமாக அரசியல் காய்களை நகர்த்தினார் நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இந்தச் சூதாட்டத்தில் நிலைகுலைந்து பாத்திரங்களைக் கீழே போட்டு, கிண்டியில் கிண்டிக் கொண்டிருந்தவர்கள் நம் பக்கம் திரும்ப வேண்டியதாயிற்று. விளைவு; ஆன்லைன் சூதாட்டத்திற்குத் தடை. திராவிட மாடல் ஆட்சிக்குத் தலைமை தாங்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கிடைத்து வரும் இந்த மாபெரும் வெற்றிகள் தொடக்கம்தான்; இன்னும் பலப்பல வெற்றி மகுடங்கள் மணிமகுடங்களாக சூடக் காத்திருக்கின்ற நமது திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு எனது வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாகனம் மாறி ஏற முயன்றோர்க்கும், போட்டியைக் காண டிக்கெட் கேட்போருக்கும் நயத்தக்க வகையில் பதிலளித்து,

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை நினைவுபடுத்தும் எங்களது இளைய தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) விளையாட்டுத் துறையை விளையாட்டாகப் பார்த்தவர்கள் மத்தியில், ஐ.பி.எல். போட்டியின் இறுதிக் கட்டத்தைப் போன்று, விறுவிறுப்பான துறையாக மாற்றி, தினந்தோறும் எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து வரும் எங்களது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. இராமகிருஷ்ணன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அறிஞர் பெருமக்கள், அனுபவம் வாய்ந்த சான்றோர்கள் அமர்ந்த இந்த மாபெரும் அவையில் என்னை அமரச் செய்த, உழைப்பால் உயர்ந்த எனது தந்தையார், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேந்தர், தனலட்சுமி சீனிவாசன் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர், எனது வாழ்வில் எல்லா வளங்களையும் எனக்களித்த உயர்திரு அ. சீனிவாசன் ரெட்டியார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வாழ்வின் ஆதாரம் நீராதாரம்தான். அதை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்து, உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்தி வரும் எங்களது மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அருமை அண்ணன் மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் எங்கிருக்கிறது என்றே தெரியாமல் மௌனம் காத்து வந்த துறைதான் இந்து சமய அறநிலையத் துறை. கடவுள் மறுப்பாளர்கள் தொடங்கிய கட்சி ஆயிற்றே, 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்து சமய அறநிலையத் துறையை எப்படி நடத்தப் போகிறார்கள்? என்ன செய்யப் போகிறார்கள்? எனக் குறிப்பிட்ட ஒருசாரார் கண்களை அகலத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் கண்கள் வியப்புக்குள்ளாகும் வகையில் அமைந்துள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணமாக மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் செயல்பாடுகள் அனைவராலும் போற்றும் வகையில் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கோயில்களில் நலத் திட்ட உதவிகள் செய்யப்பட்டாலும், எனது மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோயில்களில் நல்ல பல திருப்பணிகள் நடந்துள்ளன. எனது தொகுதியில் உலகப் பிரசித்தி பெற்ற அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் கோயில் அமைந்திருப்பது பெருமையளிக்கிறது. இந்தக் கோயிலில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டத்தால் 5 ஆயிரம் பேர் வரை தினமும் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், இலவச பிரசாதம் வழங்குதல், மருத்துவ முதலுதவி மையம், ஓதுவார் பயிற்சிப் பள்ளி போன்ற திட்டங்களும் செயல்பாட்டில் உள்ளன. அன்னைத் தமிழில் அர்ச்சனை, கட்டணமில்லாத முடி காணிக்கை போன்ற முத்திரை பதிக்கும் திட்டங்களும் அமல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், Master Plan திட்டத்தின்கீழ், அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் மேற்கொள்ளவிருக்கும் பணிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட அரசு ரூ.60.43 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

பிற்பகல் 1–35

மேலும் ஒரு நற்செய்தி. எனது தொகுதிக்குட்பட்ட சமயபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் பெருவாரியான மக்கள் தங்கள் இல்லத் திருமண விழா உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளை சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் முன்னிலையில் நடத்த விரும்புகின்றனர். இதனைப் பூர்த்தி செய்யும் வகையில் குறைவான கட்டணத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக திருமண மண்டபம் ஒன்று கட்டித் தர வேண்டுமென்ற எனது எண்ணத்தைத் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேந்தரும் தனலட்சுமி சீனிவாசன் குழும நிறுவனத்தின் தலைவருமான என் தந்தை உயர்திரு அ. சீனிவாச ரெட்டியார் அவர்களிடம் தெரிவித்தேன். சற்றும் யோசிக்காமல், எனது தந்தை அவர்கள், எனது மண்ணச்சநல்லூர் தொகுதி மட்டுமல்லாது, தமிழ்நாடு முழுவதிலுமிருந்து வருகை தரும்

அம்பாள் பக்தர்கள் பயன்பெற வேண்டுமென்று கோயிலுக்கு மிக அருகாமையில் அவரது பெயரிலுள்ள ஒரு ஏக்கர் நிலத்தை இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்குத் தானமாக வழங்க முன்வந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக்கொண்டு, திருமண மண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்கான கோரிக்கைகளை இந்த அவையில் முன்வைக்கிறேன். எனது தொகுதியில் ச. கண்ணனூர் பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்குத் தங்கும் விடுதி மற்றும் பெருந்திட்ட வளாகத்தில் திருக்கோயிலுக்குத் தேவையான பிரசாதங்கள் தயாரிப்பு நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதி, திருப்பைஞ்ஞீலி ஊராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயிலுக்குத் திருமண மண்டபம் மற்றும் தங்கும் விடுதி அமைத்துத் தருமாறு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதிக்குட்பட்ட திருப்பட்டூர் ஊராட்சியில் சுற்றுலாத் தலமாக அமைந்துள்ள அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு மக்கள் வருகை அதிகமாக இருப்பதனால், சுற்றுலாத் துறையின் மூலமாக இத்திருக்கோயிலை மேம்படுத்தி, திருமண மண்டபம், தங்கும் விடுதி மற்றும் புதிய தேர் அமைத்துத் தருமாறு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் சனமங்கலம் ஊராட்சி, எம்.ஆர். பாளையத்தில் 63 ஹெக்டேர் பரப்பளவில் 2009 ஆம் ஆண்டு காப்புக் காட்டில் வன உயிரினப் பூங்கா ஆரம்பிக்கப்பட்டது. இப்பூங்கா தமிழ்நாட்டின் மையப் பகுதியான திருச்சிராப்பள்ளியில் அமையப் பெறும் நிலையில், அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மக்களுக்குச் சிறந்த சுற்றுலாத் தலமாகவும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு வன உயிரினங்களைப் பற்றி கல்வி அறிவினைப் புகட்டும் வகையிலும் அமைந்திடும். ஆகவே, இப்பூங்காவை

மேம்படுத்தித் தருமாறு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனது தொகுதி, முசிறி வட்டம், பேரூர் ஊராட்சியில் அமைந்துள்ள ருத்ராட்சைகோம்பை ஆறு, அய்யாற்றில் கலக்கும் பகுதியில் தடுப்பணை அமைத்தால் 550 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும். கொடுந்துறை கிராமத்தில் மழைக் காலங்களில் வெள்ள நீர் தேங்குவதை முறையாக அய்யாற்றில் வடிவதற்கும் அப்பகுதியின் வெள்ளக் கரையைப் பலப்படுத்தினால், 150 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். சித்தாம்பூர் கிராமத்தின் அய்யாறு மற்றும் சித்தாம்பூர் ஏரி பொதுக் கரையினை நிரந்தரமாகப் பலப்படுத்த வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளைச் செய்து தருமாறு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி No.1 Tollgate-நாமக்கல் சாலை முக்கிய மாநில நெடுஞ்சாலையாக உள்ளது. தற்போது திருச்சி நகருக்கு அரை வட்டச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதி வடபுறம் No.1 Tollgate முதல் வாத்தலை வரை சுமார் 12 கிலோ மீட்டர் நீளம் மற்றும் வாத்தலை முதல் முசிறி வரை இடையேயான நீளம் 15 கிலோ மீட்டராகும். (மணியடிக்கப்பெற்றது) இச்சாலையில் தினந்தோறும் கனரக வாகனங்கள் உள்ளிட்ட. . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 8 நிமிடங்கள் முடிந்துவிட்டன. 7 நிமிடங்களுக்குப் பதிலாக 8 நிமிடங்கள் முடிந்துவிட்டன. ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். 15 கிலோ மீட்டர் நீளத்தை இணைத்து ஒரே சாலையாக மாற்றுப் பாதையாக Greenfield alignment ஆக அமைத்துத் தருமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட முசிறி வட்டம், சித்தாம்பூர் ஊராட்சியிலுள்ள பொது மக்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள 30,000 மக்கள் பயன்பெறும் வகையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடியல் அரசைத் தருவோம் என்று ஆட்சிக்கு வந்தோம். தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்து சமய அறநிலையத் துறை போன்று ஒவ்வொரு துறையிலும் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் திராவிட மாடல் அரசு விடியலை ஏற்படுத்தி வருகிறது. இதை நாங்கள் சொல்லவில்லை; மக்களே சொல்கிறார்கள். இதற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையும், அதில் செயல்படுத்தப்படும் திட்டங்களுமே சாட்சி.

இறுதியாக ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான போட்டியில் வென்றுவிட்டோம். அடுத்து 40-க்கு 40 என்ற தேசிய அளவிலான போட்டிக்குத் தயாராகவுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சிறப்பு மிகுந்த பேரவையில் நான் பேசுவதற்கு நல்ல வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒரு சிறப்பான துறை, நம்முடைய பாரம்பரியத்தை, பழமையைச் சொல்கின்ற துறை என்றால், அது இந்து அறநிலையத் துறையாகும். இந்த இந்து அறநிலையத் துறை என்பதுகூட கோயில்கள் என்பதோடு மட்டுமே வரையறுத்துவிடாமல், அதற்கு அறநிலையத் துறை என்று பெயர் கொடுத்ததிலிருந்தே நாம் எப்படி அறம் சார்ந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென நம்முடைய முன்னோர்கள் நினைத்திருப்பதை அந்தத் துறை செயல்படுத்துவதாக நாம் பொருள் கொள்ள வேண்டும்.

மத்திய தமிழகத்தினுடைய தஞ்சாவூர் மற்றும் அதனைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளிலெல்லாம் இப்போது தொழில் வளர்ச்சி என்பது புதிதாக தொழிற் திட்டங்களை

உருவாக்குவதெல்லாம், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட பின்பாக அது ஒரு சிரமமான விஷயமாக இருக்கிறது. ஆனால், அதேசமயம் அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு நாம் வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும், அந்தப் பகுதி மக்களுக்கு பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றால் இயல்பாகவே மத்திய தமிழகத்தின் பகுதியில் இருக்கக்கூடிய கோயில்களோடு, இவற்றையெல்லாம் இணைத்து எப்படி ஒரு Industrial Corridor என்று நாம் பல்வேறு இடங்களில் அறிவிக்கிறோமோ, அதுபோல Religious Tourism Corridor என மத்திய தமிழகத்தை அறிவித்து, அதற்கென்று திட்டங்களை நாம் செயல்படுத்தி, புதிய முதலீடுகளை ஈர்த்தால், இன்று அந்தப் பகுதிகளைச் சார்ந்த இளைஞர்கள் அதிகமாக வெளி நாடுகளிலே மலேஷியா, சிங்கப்பூர், வளைகுடா நாடுகளில் பணிபுரிகிறார்கள்; அவர்களெல்லாம் உள்ளூரிலேயே குடும்பத்துடன் தங்கிப் பணிபுரிவதற்கு அது வசதியாக இருக்கும்.

அதேபோல, இந்திய நாட்டிலே நான்கு முக்கியமான சுற்றுலாத் தலங்களை ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் தரிசிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். பத்ரிநாத், பூரி, துவாரகா, இராமேஸ்வரம். இதில் இராமேஸ்வரத்திற்கு வருகின்ற ஆன்மிக பக்தர்கள், அக்னி தீர்த்தக் கடலிலே குளிக்க வேண்டுமென்றுதான் முதலில் நினைத்துக் கொண்டு வருகிறார்கள். ஏனென்றால், அவர்கள் அந்த இடத்திலிருந்து வரும்போது, ஒவ்வோர் இடத்திற்கும் ஒரு சிறப்பு உண்டு. பூரி கோயிலுக்குச் சென்றால் அங்கு பிரசாதம் சாப்பிடுவது என்பது சிறப்பு. அதுபோல, இராமேஸ்வரம் கோயிலுக்கு வந்தால் குளிப்பது என்பதுதான் சிறப்பு. ஆனால், அக்னி தீர்த்தக் கடலிலே, அந்த நகரத்தினுடைய கழிவு நீரெல்லாம் கலக்கின்ற காரணத்தினால்–இது ஏற்கெனவே மதுரை உயர் நீதிமன்றக் கிளையினுடைய ஒரு வழக்காகவும் இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதிவரை இருந்து, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலைக் கேட்டுவிட்டுத்தான் செல்வேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் வாங்குவதே பெரிய விஷயம், உட்காருங்கள்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள், பதிலைக் கேட்பதற்கு இறுதிவரை இருப்பார்கள் என்ற நம்பிக்கை உங்களைப்போல் எனக்கும் இருக்கிறது. இருந்தாலும், மதிய நேரம் நெருங்குகின்றது. நீங்கள் சொல்கின்ற செய்திகள் மட்டும் பதிவாகிவிட்டு, அதற்குப் பதில் இல்லையென்றால் அர்த்தம் இல்லாமல் ஆகிவிடும் என்பதால், ஓரிரு வரிகளில் பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இராமேஸ்வரம் திருக்கோயிலில் 12 ஆண்டுகளாக ஓடாதிருந்த தங்கத் திருத்தேரின் நிலையை யார் வாயிலாகவோ அறிந்து, உடனடியாக அங்கு சென்று, அந்தத் திருத்தேரின் நிலையை அறிந்து, அதனை உடனடியாகப் பக்தர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர உத்தரவிட்டார். அப்போது அங்கு சென்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் அந்த அக்னி தீர்த்த இடத்தையும் பார்வையிட்டோம். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் இந்த நிலையை எடுத்துச் சொன்னவுடன், உடனடியாக ஒரு வரைவு பெருந்திட்டத்தை உருவாக்க உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வரைவு பெருந்திட்டத்தில் அக்னி தீர்த்தம், அதேபோல், அந்தத் திருக்கோயிலில் புண்ணிய தீர்த்தங்களாக கருதப்படுகின்ற 22 குளங்களினுடைய தீர்த்தங்கள் என இந்த அமைப்புகளையெல்லாம் சிறந்த முறையில் கட்டுமானம் செய்ய உத்தரவிட்டு, அதற்குண்டான நிதியையும் ஒதுக்கித் தந்து, இன்றைய மானியக் கோரிக்கை அறிவிப்பிலே அதற்குண்டான பரிகாரத்தையும் தெரிவிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியில் அதற்குண்டான அறிவிப்புகளும் வெளியிடப்படவிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

அதேபோல, தமிழகத்தினுடைய மிக முக்கியமான கோயில்களாக இருக்கின்ற தஞ்சாவூர் பெரிய கோயில், மதுரை, இராமேஸ்வரம் இம்மாதிரியான கோயில்களையெல்லாம் இணைப்பதற்காகத் தனியாக helicopter service–ஐ இங்கு நம்மால் உருவாக்க முடியும். ஏனென்று கேட்டால், உத்தரகாண்ட் மாநிலம் மாதிரியான அதிகமான பனிச் சிகரங்கள் இருக்கின்ற, தட்ப வெட்ப நிலை மிகவும் மோசமாக இருக்கின்ற இடங்களில்கூட helicopter service–ஐ மிகவும் successful ஆக செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தமாதிரி நம்முடைய தமிழ்நாட்டில்கூட religious–ஆன்மிகச் சுற்றுலாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்கான திட்டங்களைச் செயல்படுத்தினால் தமிழகத்தில் இருக்கக்கூடிய கலை, கலாச்சாரம், பண்பாடு இந்த விழுமியங்கள்—இந்தப் பண்பாட்டு விழுமியங்கள் எங்கே குவிந்திருக்கின்றன என்றால் கோயில்களில்தான் குவிந்திருக்கின்றன. கோயில் என்பது வெறும் வழிபாட்டு இடம் மட்டுமல்ல. கோயில் என்பது நம்முடைய கலை, கலாச்சாரம், ஓவியம், சிற்பம் இன்னுஞ்சொல்லப்போனால், உணவு தானியங்களைச் சேமித்து வைக்கக்கூடிய இடம், மருத்துவ சேவை செய்கின்ற இடம் என்று நிருவாகம், நிதி சார்ந்த விஷயங்கள்கூட கோயிலை மையப்படுத்தி இருப்பதுதான் தமிழர்களுடைய ஒரு மரபாக இருந்து வருகிறது. ஆக, இம்மாதிரியான முக்கியமான கோயில்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து, ஆங்காங்கு நவீன சேவைகளை இயக்குவதன் வாயிலாக, இன்னும்கூட தமிழகம் தன்னுடைய அடையாளத்தை உலகத்திற்கு எடுத்துச்செல்வதற்கு ஒரு மிகச் சிறப்பான வாய்ப்பாக இருக்கும் என்ற கோரிக்கையைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக தேவாரத்தினுடைய உலோக செப்பேடுகள் சீர்காழி கோயிலில் கிடைத்தன. அவர்கள் குடமுழுக்குப் பணிக்காக நிலத்தைத் தோண்டுகிறபோது அங்கு உலோகச் செப்பேடுகள் தேவாரத்தினுடைய மறைகளோடு கிடைத்திருக்கின்றன. இம்மாதிரியான பாரம்பரியமிக்க ஐம்பொன் சிலைகளோ, செப்பேடுகளோ கிடைக்கின்றபோது, அவற்றை ஒரு காப்பகத்தில் வைத்திருக்காமல் அல்லது

அதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இல்லாமல், தொல்லியல் ஆய்வுத் துறை வாயிலாக அவற்றினுடைய பழமையை, சிறப்புகளையெல்லாம் தெரிவிக்கின்ற வகையிலே, அந்தந்தக் கோயில்களில், இல்லையென்றால், குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்திற்கு ஓர் இடத்திலாவது பழமையான கோயில் சிற்பங்களையெல்லாம் ஒரு கண்காட்சியகமாக வைத்திருக்க முடியுமென்றால், இளைய தலைமுறையினருக்கு நம்முடைய பாரம்பரியங்களை எடுத்துச் செல்வதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும். கீழடியிலே மாநில அரசு ஒரு சிறப்பான காட்சியகத்தை அமைத்திருக்கிறது. அதுபோல, பல்வேறு பகுதிகளில் இம்மாதிரியான ஒரு பாரம்பரிய தொல்லியல் சின்னங்கள் நம்மிடம் உள்ளன. ஆனால், இன்றைக்கு என்னவென்று கேட்டால், நம்முடைய இளைய தலைமுறை, college students அங்கு செல்கிறார்கள். College students அங்கு சென்றார்களென்றால் அவர்களுடைய பெயர்களை எழுதி வைத்துவிட்டுத்தான் வருகிறார்களே தவிர, அவற்றின் முக்கியத்துவத்தை உணராமல் இருக்கிறார்கள்.

நேற்று, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல கருத்தை வெளியிட்டார்கள். அதாவது, நடைபாதை அமைப்பதற்காக 8 கிலோ மீட்டர் தூரத்தை ஒவ்வொரு இடத்திலும் நாங்கள் முடிவு செய்து, மக்களுடைய ஆரோக்கியத்துக்காக walking path-ஐ ready செய்யப் போகிறோம் என்று சொன்னார். அதேமாதிரி ஒவ்வொரு பகுதியிலும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோடு சேர்ந்து, ஒரு கலாச்சார நடை என்பதை நம்மால் உருவாக்க முடியும். ஏனென்றால், அங்கிருக்கக்கூடிய பள்ளி, கல்லூரி மாணவர்களோடு சேர்ந்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் முக்கியமான இடங்களுக்கெல்லாம் சென்று, நம்முடைய கலாச்சாரத்தின் சிறப்பை மக்களுக்குத் தெரிவிப்பதற்கு இம்மாதிரியான cultural walk என்கிற ஒரு விஷயத்தை நாம் முயற்சி செய்து பார்க்கலாம் என்பது என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தாத்தா அவர்கள் பணிபுரிந்த திருக்கோளிலிநாதர் திருக்கோயிலில், பலநூறு கோடி ரூபாய் மதிப்பு இருக்கக்கூடிய மரகத லிங்கம் காணாமல் போய்விட்டது. அதற்குப் பிறகு அதைத் திரும்பவும்

கொண்டுவந்துவிட்டார்கள். ஆனால், என்னவென்றால் காப்பகத்தில் வைத்திருக்கிறார்கள். அந்த மரகத லிங்கத்திற்குப் பூஜை செய்ய வேண்டும்; முறைப்படி அதைப் பூஜிக்க வேண்டுமென்பது பக்தர்களுடைய விருப்பம். ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய குடும்ப மூதாதையர்கள் பணி செய்த அந்தக் கோயிலில் இருக்கக்கூடிய மரகத லிங்கத்தைப் பக்தர்களுடைய தரிசனத்துக்காக, பூஜைக்காக, கோயில் நிருவாகத்திடம் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *இதற்கு மட்டும் உடனே பதில் சொல்லிவிட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனால் ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கான அந்த 7 நிமிடங்களை நான் கொடுத்துவிடுவேன்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்கீழ் உள்ள சிலை தடுப்புப் பிரிவினுடைய அதிவேகப் பணியினால் மீட்கப்பட்டது மரகத லிங்கம். அந்த மரகத லிங்கத்திற்கு போதிய ஆவணங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படாததால், அது வருவாய்த் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. வெகு விரைவில் அதற்குண்டான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட திருக்கோயிலிடம் ஒப்படைத்து, தினந்தோறும் பூஜை, புனஸ்காரங்கள் செய்வதற்கு இந்த ஆட்சி தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான துறை. இன்னும் 6 நிமிடங்கள்தான் இருக்கின்றன. நீங்கள் இவ்வளவு சீக்கிரம் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு வந்துவிடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.*

அர்ச்சகர். அனைவரும் அர்ச்சகராகலாம் என்பதும், அவர்களுக்கான பயிற்சி கொடுப்பது என்பதும் மிகச் சிறப்பான திட்டம். பாரதிய ஜனதா கட்சி அதை வரவேற்கிறது. ஆகமக் கோயில்கள் அல்லாத மற்ற அத்தனைக் கோயில்களிலும் மிகச் சரியான பயிற்சி அளிக்கப்பட்டு, குறைந்தது 10 வருடங்களாவது அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களை, பெண்களாக இருந்தாலும், எந்தவொரு வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை நியமிக்க வேண்டுமென்பது பாரதிய ஜனதா கட்சியினுடைய கோரிக்கை. இது தொடர்பாக பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. இன்னமும்கூட இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பள்ளி, கல்லூரிகளையெல்லாம் இப்போது நீங்கள் பொதுத் துறைக்கு, கல்வித் துறைக்கு மாற்றுகிறீர்கள். இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள பள்ளிகள் கோயில்களினுடைய வருமானம், பக்தர்களுடைய கொடையினால் நடத்தப்படுகின்றன. அங்கு இந்து கல்வியைச் சொல்லிக்கொடுக்கின்ற வகையிலே அந்தப் பள்ளிகளிலிருந்து எந்தவொரு மரபும் அறுந்துவிடக் கூடாது. (குறுக்கீடு) இதுகுறித்து பின்னால் அறிவிக்கின்றீர்களா? எனவே, இதையும் ஒரு கோரிக்கையாக நாங்கள் வைக்கின்றோம்.

பிற்பகல் 1–50

அதேபோல், கோவையில், கோனியம்மன் காவல் தெய்வம் கோயில் உள்ளது. அந்தக் கோனியம்மன் கோயிலுக்குச் சொந்தமான குளத்தை இப்போது car, bus parking ஆக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் கோவை காவல் தெய்வத்தின் திருக்கோயில் குளத்தைத் திரும்பவும் மீட்டு, அதைக் கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும். அது கோயம்புத்தூர் (தெற்கு) தொகுதியில் உள்ளது. நான் பேச ஆரம்பித்து 7 நிமிடங்கள்தான் ஆகியுள்ளன ஐயா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள்தான்.

திருமதி வானதி சீனிவாசன்: நான் மரபைமீறி எதுவும் பேசவில்லை ஐயா, அரசுக்கு நல்ல விஷயங்களை ஆலோசனையாகத்தான் சொல்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்களும் அப்படிச் சொல்லவில்லை. பேசுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: கோவையில் உள்ள வாலாங்குளம் பகுதியில் cycle track என்று எதுவும் இல்லை. தற்போது எரிபொருள் சிக்கனத்திற்காகவும், மாற்று எரிபொருளை இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் cycle track ஒன்றை கோயம்புத்தூரில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே, வாலாங்குளம் பகுதியில் சுற்றுலாத் துறையின் சார்பாக பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதே இடத்தில் ஒரு cycle track அமைக்கப்பட்டால் தொகுதியிலுள்ள இளைஞர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

அதேபோல், கோயம்புத்தூர் (தெற்கு) சட்டமன்றத் தொகுதியிலுள்ள உக்கடம் பகுதியில் மேம்பாலம் கட்டுவதற்காகத் துணி வெளுப்பவர்கள், அந்த dobikana–வை காலி செய்து, புல்லுக்காடு என்ற பகுதிக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களென்றால், ஒவ்வொருவருக்கும் குலதெய்வ வழிபாடு என்பது மிகவும் முக்கியமானது. இதெல்லாம் ஓர் உணர்வுப்பூர்வமான விஷயம். அந்தப் புல்லுக்காடு பகுதியில் அவர்களின் குலதெய்வமான வீரமாத்தியம்மன் தெய்வத்திற்கு ஒரு சிறிய கோயிலை அமைத்துத் தர மாநில அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாமல்லபுரத்தில் அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கல்லூரி இயங்கி வருகிறது. அந்தக் கல்லூரியில் முதல்வர் பணியிடம் நிரந்தரமாக இல்லாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட 40–க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாகவுள்ளன. ஏனென்றால், கட்டடக் கலை, சிற்பக் கலை இவற்றையெல்லாம் அடுத்த ஆராய்ச்சி கட்டத்திற்கு எடுத்துச் சென்று அவர்களை expert ஆக மாற்ற வேண்டுமென்று சொன்னால், மேற்படிப்புகள், ஆராய்ச்சிப் படிப்புகள் இருக்க வேண்டும். ஆனால், இதற்கான எந்த வசதியும் தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற மாமல்லபுரம் அரசுக் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கல்லூரியில் இல்லை. அதை ஏற்படுத்தித் தருவதன் வாயிலாக, இன்னும்கூட சிறந்த விற்பன்னர்களை அந்தத் துறையால் உருவாக்க முடியும்.

இதுமட்டுமல்லாமல், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பான பொருட்கள் உண்டு. குறிப்பாக, One District One Product என்பதை Central Government–ல் announce செய்தாலும்கூட

உத்தரப்பிரதேசத்தில் உள்ள 75 மாவட்டங்களில், வாசனை திரவியங்கள், உலோகப் பொருட்கள், துணிகள் என்று ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தனிச் சிறப்பான பொருட்களை வைத்து அரசாங்கம் அதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து வருகிறது. அதுபோல், தமிழ்நாட்டில்கூட One District One Product என்பதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்புவாய்ந்த பொருட்களைக் கண்டறிந்து அதை மேம்படுத்துவதற்காக, அதன் வாயிலாகப் பொருளாதார மேம்பாட்டைக் கொண்டு வருவதற்காக அரசு திட்டங்களை அறிவிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன் ஐயா. மகாகவி பாரதியார் அவர்கள் பராசக்தியைக் கும்பிடப் போகும்போது சொல்கிறார்; கவிதை இயற்றுவது என்னுடைய தொழில்; மனிதவள மேண்மைக்காக கவிதை இயற்றுகிறேன். ஆனால், எப்போது பார்த்தாலும் உப்பு, புளிக்கே என்னை சிரமப்பட வைக்கின்றாயே பராசக்தி என்று கேட்கின்றார். அந்த மாதிரி, நாம் இங்கே legislate செய்வதற்காக வந்துள்ளோம். சட்டத்தை இயற்றுவதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வருகின்றோம். ஆனால், எப்போதுமே எங்களுக்கு எப்படி கோரிக்கை இருக்கிறதென்றால், எங்கள் பகுதியில் குப்பை எடுக்கவில்லை; தெரு விளக்கு எரியவில்லை; சாக்கடை வசதியில்லை; ரோடு போடவில்லை என்று இருக்கிறது. ஆதலால், இந்தப் பிரச்சினைகளிலிருந்து நகராட்சி நிர்வாகத் துறையினர் கோயம்புத்தூர் (தெற்கு) தொகுதியை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டம் இயற்ற தீர்மானம் கொண்டுவந்தால் வெளிநடப்பு செய்துவிடுகிறீர்கள். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிறுவனத் தலைவர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகின்றேன். கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் முதன்முறையாகக் குடிமராமத்துத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, 2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்

100 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிமராமத்து நாயகியை வணங்குகிறேன். கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் பாதுகாவலர், கழகத்தின் அடித்தளமாக இருக்கின்ற தொண்டர்களின் பாதுகாவலர், கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகின்றேன். எனக்கு இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களை வணங்கி, எனது தொகுதிக் கோரிக்கைகளைத் தெரிவித்துவிட்டு, மானியக் கோரிக்கைகளின்மீது சில கருத்துகளைத் தெரிவிக்க விழைகின்றேன்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மனு கொடுத்திருக்கின்றேன். பாப்பான் குளத்தில் கருத்தீஸ்வரர் திருக்கோயில், நெட்டூர் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், பூலாங்குளம் உச்சிமாகாளி அம்மன், முப்பிடாதி அம்மன் திருக்கோயில், பள்ளக்கால்புதுக்குடி நதிக்கரையில் அமைந்துள்ள ஸ்ரீதேவி சமேத வெங்கடாஜலபதி திருக்கோயில், முக்கூடல் பேரூராட்சியில் அமைந்துள்ள பாண்டியாபுரம் முப்பிடாதி அம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மற்றும் கோயில் சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கின்றேன். இதைத் தவிர மாண்புமிகு ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் வைத்திலிங்கம் அவர்கள் 12 கிராமங்களுக்கு உரிமையான, பழமையான கோவிலூர் ஊராட்சியில் உள்ள வன்மீகநாதர் திருக்கோயிலுக்கு 2003 ஆம் ஆண்டுதான் கும்பாபிஷேகத் திருப்பணி நடைபெற்றது என்று தெரிவித்திருக்கிறார். அந்தக் கோயிலுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன்.

2023 ஏப்ரல் 19] [திரு. பால் மனோஜ் பாண்டியன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு, தமிழகத்தில் அன்னதானத் திட்டம் என்ற ஓர் உன்னதமான திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் 764 கோயில்களுக்கு அன்னதானத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலங்குளம் தொகுதியில் உள்ள பத்ரகாளி அம்மன் கோயிலுக்கு அன்னதானக் கூடம் கட்டப்படும் என்ற உறுதியினைத் தந்து, அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்து வந்திருக்கின்றது; ஆனால், பணிகள் இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆகவே, அதை நான் கோரிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக கல்லூரி ஒன்று கடையம் பகுதிக்குக் கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் அறிவித்தார்கள். ஆனால், அந்த கல்லூரி வருவது இன்றுவரை, நீதிமன்றத்தில் சில வழக்குகளால் நின்றிருக்கிறது என்று கடந்தமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கல்லூரியை இந்த ஆண்டு தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் மீட்கப்படுவதை அன்றாடம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புவதெல்லாம், இதுவரை கோயில் நிலங்களை மொத்தமாகப் பட்டியலிட்டு, எவ்வளவு அரசுக்குச் சொந்தமானவை என்றும், எவ்வளவு நிலங்கள் இந்த இரண்டு ஆண்டுகளில் மீட்கப்பட்டன என்றும் இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கோரிக்கையாக வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் தெரியும், இங்கே நம்முடைய உறுப்பினர்கள் அனைவரும் கேட்கும்பொழுது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும்

[*திரு. பால் மனோஜ் பாண்டியன்*] [*2023 ஏப்ரல் 19*

இந்தத் துறையில் எந்த ஒரு கோரிக்கையைக் கேட்டாலும் இல்லை என்று சொல்வதில்லை. எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஆனால், நான் அறிய விரும்புவது, இந்தத் துறைக்கு நிதியாதாரம் என்று சொன்னால், அது நன்கொடைகளாக இருக்கும்; அல்லது அது அரசு மானியமாக இருக்கும். ஆகவே, எந்த அடிப்படையில் இதுபோன்ற திட்டங்கள் இப்போது, இத்தனைக் கோயில்களுக்கும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று நான் அறிய ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் நிறைய தெரிய வேண்டும் என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போவதால் ஒருசில வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன். அவர் கேட்ட அன்னதானத் திட்டம் என்பது அந்தத் திருக்கோயிலினுடைய நிதியிலே இல்லை என்பதால், அந்தத் திருக்கோயிலினுடைய இணை ஆணையர் அவர்கள் பொது நிதிக்குப் பரிந்துரை செய்திருக்கின்றார். பொது நிதியிலிருந்து உடனடியாக அதற்குத் தேவையான நிதி விடுவிக்கப்பட்டு, ஒரு மாதக் காலத்திற்குள்ளாக அங்கே அன்னதானத் திட்டம் துவக்கப்படும். நீங்கள் கூறிய 6 கோயில்களும், நம்முடைய ஒரத்தநாடு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் சேர்த்து, அந்த 7 கோயில்களும் உடனடியாகத் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதேபோல், நீங்கள் திருக்கோயில்களுடைய பணிகள் எப்படி நடக்கின்றன என்றீர்கள். இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த ஆண்டோடு சேர்த்து 528 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்கிய பெருமை இந்த ஆட்சியைச் சாரும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *அதோடுமட்டுமல்லாமல், திருக்கோயில்களில் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.560 கோடி அளவிற்கு உபயதாரர் நிதி வரப்பெற்றிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) உபயதாரர்கள் இந்த ஆட்சியை நம்பித் தருகின்ற பணம், இறைவனுடைய திருப்பணிக்குச் செல்லும் என்பதால், தாராளமாக வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.*

அதோடுமட்டுமல்லாமல், பெரிய திருக்கோயில்களில் இருக்கின்ற நிதி, சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு நிதி தேவைப்படுமாயின், கடனாகத் தருவதற்குண்டான ஏற்பாடுகளை நல்கி, திருப்பணிகள் எங்கும் தடையில்லாமல் நடைபெறுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத் துறை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அருகில் வந்து பேசிக்கொண்டிருந்த காரணத்தால்தான், மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் சொன்னதை நான் கவனிக்கவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கோவையில் சாலைகளெல்லாம் மிகவும் பழுதுபட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக ரூ.90 கோடியும், இரண்டாவது கட்டமாக ரூ.85 கோடியும் வழங்கி, சாலைப் பணிகள் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு ரூ.25 கோடி நிதியைத் தரச் சொல்லி உத்தரவினை வழங்கியிருக்கிறார்கள். எனவே, கோவையில் உள்ள சாலைகளைப் பொறுத்தளவில் ஓரளவுக்குச் சரிசெய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.*

குப்பைகளை அள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எந்தப் பகுதி என்று

குறிப்பிட்டுச் சொன்னால், அந்தப் பகுதியைக் கவனித்து உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். நேரடியாக குப்பை அள்ளுகிற பணியாளர்களுக்குத் தருவதற்காக இன்னும் 2, 3 நாட்களில் சுமார் 120 புதிய வண்டிகள் வரவிருக்கின்றன.

அதைப்போல, குடிநீரைப் பற்றிப் பேசினார்கள். கோவைக்கு பில்லூர்–I, பில்லூர்–II, பில்லூர்–III என மூன்று திட்டங்கள் இருக்கின்றன. பில்லூர்–I, பில்லூர்–II திட்டங்களின்கீழ் தற்போது தண்ணீர் வழங்கிக்கொண்டிருக்கிறோம். சிறுவாணி அணையிலிருந்து கோவைக்குக் குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கிறோம். சிறுவாணியில் தண்ணீர் குறைந்துவிட்ட காரணத்தினால், நாளொன்றுக்குத் தேவையான அளவிற்குக் குடிநீர் கிடைக்கிறதா என்றால், போதிய அளவில் தண்ணீர் கொடுக்க முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதனால், இதனை எதிர்பார்த்துதான், பில்லூர்–III திட்டம், நாளொன்றுக்கு 172 MLD–க்குமேல் வழங்குகிற பெரிய திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறோம். அத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் நில உரிமையாளர்களிடம் பிரச்சினை இருந்தது. அதனையும் பேசி முடித்து, headworks–ல் இருக்கிற பிரச்சினையைப் பேசி முடித்து, pipeline பதிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 15 கிலோ மீட்டர் தூரம்தான் இன்னும் pipeline பதிக்கும் பணி இருக்கிறது. நிலமெல்லாம் வாங்கப்பட்டுவிட்டது. அங்கு வேலை செய்யும் ஆட்கள் குறைவாக இருந்த காரணத்தால், கோவைக்கு குடிநீர்ப் பிரச்சினை வந்துவிடக் கூடாது என்பதற்காக இங்கிருந்து அதிகாரிகளை அனுப்பி, வேலையாட்களை அதிகப்படுத்தி, அப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறோம். பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, எந்தத் தண்ணீரையும் எதிர்பார்க்காமல், பில்லூர்–III திட்டத்தின்கீழ் கோவைக்கு முழு நேரமும் முழு அளவு தண்ணீர் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்கிறார்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லட்டும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்

அவர்கள் தீர்வைக் கொடுப்பதற்கு, விரைவாக முயற்சிகள் எடுப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். Temporary ஆக லாரிகள்மூலம் குடிநீர் வழங்கினால் சரியாக இருக்கும் என்பது என் கருத்து. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமயபுரம் மாரியம்மன் கோயில் வைப்பு நிதி ரூ.400 கோடி missing என்று சொல்லி, viral ஆக எல்லா சமூக வலைதளங்களிலும் செய்திகள் பரவுகின்ற இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமயபுரம் மாரியம்மன் கோயில் வைப்பு நிதி குறித்து இந்த அவைக்கு விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றம், தமிழகத்திலுள்ள அனைத்து கோயில்களுக்கும் CCTV கேமராக்கள் பொருத்த வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில், தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய மதுரை கிளைக்கு இந்து சமய அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டிலுள்ள 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டு, மதுரை உயர் நீதிமன்றத்திற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருக்கின்றார். அதில் குறிப்பாக, சமயபுரம் திருக்கோயிலினுடைய வைப்பு

நிதியைப் பற்றிக் குறிப்பிட்டார். சமயபுரம் திருக்கோயிலின் வைப்பு நிதி பற்றி தவறான பிரசாரத்தை ஊடகங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளில், சமயபுரம் திருக்கோயிலில் ரூ.100 கோடி அளவிற்கு வைப்பு நிதி கூடியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல், பழனி திருக்கோயிலில் வைப்பு நிதி ரூ.141 கோடி கூடுதலாகப் பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட CCTV கேமராக்களைப் பொறுத்தவரையில், 1,117 திருக்கோயில்களில் 1,080 இடங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செந்துறை அருகே உள்ள அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான சிலைகள் Australia-வில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

சிலைகள் காணாமல் போகின்ற இந்தச் சூழ்நிலையில், காவல் துறை, இதனை CCTV camera-க்கள் மூலமாகவும், குறிப்பாக Art galleries மற்றும் கலைக் கூடங்கள் மூலமாகவும், Museum–அருங்காட்சியகங்கள் மூலமாகவும் compare பண்ணும்போது அதைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான அந்தச் சிலைகளைப் பாதுகாக்கக்கூடிய கடமை இருப்பதால், இதேவகையில் சிலைகள் திருடுபோனால், அதனைக் கண்டுபிடிப்பதற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Australia-வில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான சிலைகளின் மதிப்பு 35,000 டாலர் ஆகும். இதுபோன்ற விலைமதிக்க முடியாத சிலைகளைப்

பாதுகாப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் வீராணம் உபரி நீர் கால்வாய் பணி முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்படும் என்று கூறியதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் சார்பில், அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில், பல நேரங்களில் உறுப்பினர்களை Common Wealth Conference கூட்டங்களுக்கு அயல்நாடுகளுக்கு அனுப்பியது உண்டு. அந்தச் சூழ்நிலையில் அனைத்து உறுப்பினர்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே விமான நிலையத்திற்கு வந்து வழியனுப்பியிருக்கின்றார்கள்; அவர்களை வரவேற்கவும் செய்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாது, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்திருக்கின்றார்கள். ஆனால், உதவி பெறாத ஒரே உறுப்பினர், அன்றைக்கு உறுப்பினராக இருந்த மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். அவரும் அப்போது அந்தக் குழுவுடன் சென்றிருந்தார்கள். எனவே, நான் இந்த அவைக்கு, மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் எப்படி அயல்நாடுகளுக்கு அனுப்பினாரோ, அதேபோன்று இந்த அரசும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பினைக் கொடுத்து, Common Wealth Conference கூட்டங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Canada நாட்டில் நடைபெற்ற Speakers' Conference–க்கு என்னை அனுப்பிவைத்தார் இந்த அரசின் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் பேரவைத் தலைவர் சென்றாலே அனைவரும் சென்றதாகப் பொருளாகிறதல்லவா? நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு. ஆலங்குளம் தொகுதியிலுள்ள கடையம் பகுதி, கனிம வளமிக்க பகுதியாகும். அந்தப் பகுதியிலுள்ள கனிம வளங்களெல்லாம் கேரள மாநிலத்திற்குச் செல்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த முறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்தையும் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) முடியுங்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: ஒரே ஒரு நிமிடம் மட்டும் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதற்கான கடமை இருக்கின்ற காரணத்தினால், இரண்டு நாட்களுக்கு முன்பு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, உத்தரவினைப் பிறப்பித்தார்கள். இருந்தாலும், இரண்டு வருடங்களுக்குப் பின்பு அங்கு கனிம வளமே இல்லாத சூழ்நிலை ஏற்படும் என்று பொதுமக்கள் அச்சப்படுகின்றார்கள். எனவே, அங்குள்ள கனிம வளங்களைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் ஆலங்குளம் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், கடையத்தை இந்த ஆண்டு தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் ஆலங்குளம் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு செய்து கட்டடத்தைக் கட்டியிருக்கின்றார்கள். அதற்கு Compound Wall அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 19] [திரு. பால் மனோஜ் பாண்டியன்]

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஏற்கெனவே கேட்டுவிட்டேன், பாப்பான்குளம்–ஆழ்வார்குறிச்சி, கோவிந்தப்பேரி–திருமலையப்பபுரம் மற்றும் நாராயணபுரம் ஆகிய ஊர்களிலுள்ள பாலத்திற்கும் நிதி கேட்டிருக்கின்றேன். அதற்கும் நடவடிக்கைகள் எடுத்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு நல்வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம் குருவன்கோட்டை கிராமத்தில் கால்வாய் படித்தரை, கதிரடிக்கும் களம் அமைத்துத் தர வேண்டும்; மாயமான்குறிச்சி கிராமத்தில் கால்வாய் படித்தரை, மயானத்தில் நன்மைக் கூடம், சமுதாயநலக் கூடம் அமைத்துத் தர வேண்டும்; மாயமான்குறிச்சி வடக்கு கிராம மயானத்தில் எரிமேடை நன்மைக் கூடம் அமைத்துத் தர வேண்டும்; அய்யனார்குளம்–பட்டமுடையார்புரம் கிராமத்தில் சாலை, அங்கன்வாடி மையக் கட்டடம், ஊராட்சி மன்றக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும். சிவலார்குளம்–நெட்டூர் சாலை அமைத்துத் தர வேண்டும்; குறிப்பன்குளம் கிராமத்தில் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தர வேண்டும்; சண்முகபுரம் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும்; பட்டமுடையார்புரம் கிராம மயானத்தில் எரிமேடை நன்மைக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் உபமின் நிலையம் அமைத்துத் தர வேண்டும்; மின்சார உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்குக் கட்டடம், கால்நடை மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை கட்டித் தர வேண்டும்.

கடங்கனேரி ஊராட்சியிலிருந்து வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தைப் பகிர்ந்து தனி ஊராட்சி அமைத்துத் தர வேண்டும்; வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கூடுதலாக ஒரு இலட்சம் லிட்டர் தண்ணீர் வசதி செய்து தரவும், வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் சிற்றாறு வரை சாலையை மேம்படுத்தித் தரவும், காடுவெட்டி ரோடு முதல்

கடங்கனேரிவரை உள்ள காத்தவராயன் கோயில் சாலை அமைத்துத் தரவும், காமராஜர் மண்டபம் முதல் கிராமக் கமிட்டி வரை செல்லும் சாலையை மேம்படுத்தித் தரவும், VAO அலுவலகம் கட்டித் தரவும், புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டித் தரவும், நூலகத்திற்குப் புத்தகங்கள் அதிகம் வாங்கித் தரவும், நெல் கொள்முதல் நிலையம் மற்றும் கதிரடிக்கும் களம் அமைத்துத் தரவும், உடற்பயிற்சிக் கூடம், தொழிற்பயிற்சிப் பள்ளி அமைத்துத் தரவும், கால்வாய் படித்தரை, மயானத்தில் மின்விளக்கு மற்றும் குடிநீர் வசதி செய்து தரவும் வேண்டும்.

கீழவீராணம் நாராயணபுரம் கிராமத்தில் ஆற்றுப் பாலம் அமைத்துத் தரவும், மருதப்புரம் கிராமத்தில் சமுதாய நலக் கூடம். புதிய நியாயவிலைக் கடை கட்டடம். உடற்பயிற்சி நிலையம், கதிரடிக்கும் களம் போன்றவை அமைத்துத் தரவும், சிவலார்குளம் கிராமத்தில் திறந்தவெளி கிணறு, சமுதாய நலக் கூடத்தில் சமையலறை மற்றும் அண்ணாநகரிலிருந்து சிவலார்குளம் வரை தெருவிளக்கு வசதி செய்து தரவும், நல்லூர் ஆலடிப்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரவும், காசியார்புரம் கிராமத்தில் கூட்டுறவு அலுவலகக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும். காமராஜ் நகர் கிராமத்தில் பேருந்து நிலையம் கட்டித் தர வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை கிராமத்தில் பேவர் பிளாக், 30 ஆயிரம் லிட்டர் OHT குடிநீர் வசதி செய்து தரவும், மாறாந்தை கிராமத்தில் கால்வாயை தூர்வாரி தடுப்புச் சுவர் அமைத்துத் தரவும், அம்பலவாசர் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும் வேண்டும்.

கல்லத்திக்குளம் கிராமத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் மற்றும் மயானத்திற்குச் சாலை அமைத்துத் தரவும், செட்டிக்குறிச்சி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தரவும் வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், நாலாங்குறிச்சி கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், தெருவிளக்கு வசதி செய்து தரவும் வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், ஓடைமறிச்சான் கிராமத்தில் தங்கம்மாள் கோயில் சாலையை மேம்பாடு செய்து தரவும், கொல்லங்குளம் கிராமத்தில் நியாய விலைக் கடை

அமைத்துத் தரவும், உடையாம்புளி கிராமத்தில் அருந்ததியர் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், வீராணம் கிராம குளத்திலிருந்து காவலாகுறிச்சி பெரிய குளத்திற்கு உபரிநீர் கால்வாய் இரட்டைகுளம் கால்வாய் அமைத்துத் தரவும் வேண்டும்;

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், காவலாகுறிச்சி கிராமத்தில் திருமண மண்டபத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் சமையலறை அமைத்துத் தரவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மயானப்பாதை, மயானத்திற்கு எரியூட்டும் பாறை அமைத்துத் தண்ணீர் வசதி செய்து தரவும், அனைத்து சமுதாய மக்களும் பயன்படுத்தும் மயானத்திற்கு எரியூட்டும் பாறை அமைத்துக் குடிநீர் வசதி செய்து தரவும், காவலாகுறிச்சி–நெட்டூர் இணைப்புச் சாலை அமைத்துத் தரவும், காவலாகுறிச்சி–வீராணம் இணைப்புச் சாலை அமைத்துத் தரவும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், சங்கரன்கோவில்–ஆலங்குளம் காவலாகுறிச்சி வழியாக பேருந்து வழித்தடம் அமைத்துத் தரவும், JJM திட்டத்தின்மூலம் பணிகளைச் செய்து தரவும் வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், வெண்ணிலிங்கபுரம் கிராமத்தில் JJM திட்டம்மூலம் குடிநீர் இணைப்பு அமைத்துத் தரவும், காவல் நிலையம் அமைத்துத் தரவும், சிமெண்ட் கால்வாய் அமைத்துத் தரவும், R.C. கோவில் தெருவில் பேவர் பிளாக் அமைத்துத் தரவும், மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டித் தரவும், கதிரடிக்கும் களம் அமைத்துத் தரவும், வெண்ணிலிங்கபுரம்–ரெட்டியார்பட்டி ரோடு பாலம் வரை சாலை அமைத்துத் தரவும், வெண்ணிலிங்கபுரம் பஸ் ஸ்டாண்டு தெருவில் பேவர் பிளாக் அமைத்துத் தரவும், வடக்கு கடைசி (ஆசாரி) தெரு சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், பஸ் ஸ்டாண்டு வடக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும் வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், காடுவெட்டி கிராமத்தில் உக்கிரன்கோட்டை ரெட்டியார்பட்டி சாலை காடுவெட்டி வழியாக செல்லும் இடையில் 300 மீட்டர் நீளமுள்ள சாலையை அமைத்துத் தரவும், கதிரடிக்கும் களம் அமைத்துத் தரவும் வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கிடாரங்குளம் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் கதிரடிக்கும் களம்,

விடுபட்ட தெருக்களில் பேவர் பிளாக் அமைத்துத் தரவும் வேண்டும். அருணாசலப்பேரி கிராமத்தில் கதிரடிக்கும் களம் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், சம்பன்குளம் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், புதுப்பட்டி கிராமத்தில் JJM திட்டம்மூலம் புதிய நியாய விலைக் கடை கட்டடம் மற்றும் குடிநீர் இணைப்பு அமைத்துத் தரவும், பரும்பு–காமராஜர் நகர் கிராமத்தில் 30 ஆயிரம் லிட்டர் OHT அமைத்துத் தரவும், காசிநாதபுரம் கிராமத்தில் 30,000 லிட்டர் OHT அமைத்துத் தரவும், மருதம்புத்தூர் கிராமத்தில் JJM திட்டத்தின்மூலம் குடிநீர் இணைப்பு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் அமைத்துத் தரவும், துலுக்கப்பட்டி கிராமத்தில் துலுக்கப்பட்டி–கண்டப்பட்டி சாலை மேம்படுத்தவும், கண்டப்பட்டி–நாலாங்குறிச்சி சாலை மேம்படுத்தவும், அம்பேத்கர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், கடங்கனேரி கிராமத்தில் மயானப் பாதையை தார்ச் சாலையாக மாற்றி அமைத்துத் தரவும், கற்குவேல் அய்யனார் கோயில் அருகில் கால்வாயில் தடுப்புச் சுவர் அமைத்துத் தரவும் வேண்டும்.

ஆலங்குளம் ஒன்றியம், ராம்நகர் கிராமத்தில் மெயின் ரோடு பஸ் ஸ்டாண்ட் அருகில் உயர் கோபுர மின்விளக்கு அமைத்துத் தர வேண்டும்; 30,000 லிட்டர் OHT அமைத்துத் தரவும், R.C. கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத்தரவும் வேண்டும்.

ஆலங்குளம் ஒன்றியம், கீழக்குத்தபஞ்சான் கிராமத்தில் அரசு ஆரம்பப் பள்ளிக்குக் கட்டடம் அமைத்துத் தரவும், மேலகுத்தபஞ்சான் கிராமத்தில் 30,000 லிட்டர் OHT அமைத்துத் தரவும், காளத்திமடம் கிராமத்தில் அரசு மருத்துவமனை அமைத்துத் தரவும், கடையம் வடக்கு ஒன்றியம், ஐந்தாங்கட்டளை கிராமத்தில் அருந்ததியர் காலனியில் தெருவிளக்கு வசதி, ஆழ்குழாய் கிணறு மற்றும் OHT அமைத்துத் தர வேண்டும்.

அனுநீர் குளம் பொன்னாரி குளம் குற்றாலம் தண்ணீர் வர வழிவகை செய்து தரவும், சிவகாமிபுரம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைத்துத் தர வேண்டும்; முத்துமாலைபுரம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும்; ராமநாராயணன்பட்டி கிராமத்தில் சாலையை சீரமைத்துத் தர வேண்டும். ஐந்தாங்கட்டளை கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும்,

சொக்கநாதன்பட்டி கிராமத்தில் ஆழ்துளைக் குழாய் குடிநீர்த் தொட்டி, சமுதாய நலக் கூடம் அமைக்கவும் MGR நகர் நடுரோட்டில் உள்ள புளியமரத்தூரினை அகற்றவும் வேண்டும்; கட்டளையூர் கிராமத்தில் e-சேவை மையம் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்; நாலாங்கட்டளை கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், நாலாங்கட்டளையிலிருந்து ஆழ்வார் துலுக்கப்பட்டி வரை தார்ச்சாலை சீரமைத்துத் தரவும், அங்கன்வாடி கட்டடம் அமைத்துத் தரவும் வேண்டும்; 34E, 9, 5C ஆகிய பேருந்துகள் இயக்கப்படவில்லை. இப்பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும், பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாதாப்பட்டினம், பூலாங்குளம் வழியாக பாவூர்சத்திரம் செல்வதற்கு பஸ் வசதி செய்து தரவும் வேண்டும்; குடிநீர் இணைப்புக்குப் பணம் கட்டியும் இன்னும் இணைப்பு தரவில்லை. அதற்கு ஊராட்சி மன்றத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, கடையம் வடக்கு ஒன்றியம், அழகம்மாள்புரம் கிராமத்தில் புதிய நியாய விலைக்கடை, சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், சுடுகாட்டிற்குக் குடிநீர் வசதி செய்து தரவும், புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரவும், தேரிகுடியிருப்பு கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரவும் வேண்டும்; மயிலப்பபுரம் கிராமத்திற்குப் புதிய பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிலையம் அருகில் கழிவு நீர்க் கால்வாய் அமைத்துத் தரவும் வேண்டும்; வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, கடையம் வடக்கு ஒன்றியம், கருத்தலிங்கபுரம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைத்துத் தரவும், வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கவும் வேண்டும்; வடமலைப்பட்டி கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரவும், சமுதாய நலக் கூடத்தை விரிவாக்கம் செய்து தரவும் வேண்டும்; வடக்கு மடத்தூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும் வேண்டும்; வெங்கடாம்பட்டி காலனி கிராமத்தில் உள்ள வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கவும், கோவிலூற்று கிராமக் குளத்திற்கு தடுப்புச்சுவரும், GH-க்கு சுற்றுச்சுவர் மற்றும் பணியாளர் விடுதியும் அமைத்துத் தர வேண்டும்; நெல்லையப்பபுரம் கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் மற்றும்

நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்; சுடுகாடு சாலை பழுதுநீக்கம் செய்து தர வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, கடையம் வடக்கு ஒன்றியம், மாதாபட்டினம் கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும்; லட்சுமியூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும்; பண்டாரகுளம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை, சுடுகாட்டில் நன்மைக் கூடம் மற்றும் எரிதகன மேடை மற்றும் தாமிரபரணி நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்; தெற்குமயிலப்பபுரம் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும்; சிவஞானபுரம் கிராமத்தில் திரு. PH பாண்டியன் அவர்கள் அமைத்த கிணறு பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்து விட்டதால், அதைத் தூர்வாரி மூடி அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, கடையம் வடக்கு ஒன்றியம், வள்ளியம்மாள்புரம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தரவும், புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரவும், 130 வாக்காளர்கள் வெங்கடாம்பட்டி பஞ்சாயத்தில் இருப்பதை தனி மடத்தூர் பஞ்சாயத்துக்கு மாற்றித் தரவும், ஆழ்துளைக் குழாயைச் சீரமைத்துத் தரவும், புதிய சாலை அமைத்துத் தரவும் வேண்டும்; தீர்த்தாரபுரம் கிராமத்தில் கோயில் முன்பாக புதிய சாலை அமைத்துத் தரவும் வேண்டும்; 9 ஆம் எண் பேருந்து 4 முறை ஊருக்குள் வர நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்; பிள்ளையார் கோயிலுக்கு EB Line அமைத்துத் தரவும், தீர்த்தாரபுரம் கிராமத்தில் தீர்த்தாரப்புரம்–ஆலங்குளத்திற்குப் புதிய பேருந்து சேவை அமைத்துத் தரவும் வேண்டும்; சங்கரலிங்கபுரம் கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்; பண்டாரகுளம் கால்வாயை சீரமைத்துக் கொடுக்கவும், பண்டாரகுளம் மறுகால் அருகில் பாலம் அமைத்துத் தரவும் வேண்டும்; தீர்த்தாரபுரம் தார்ச்சாலையை சீரமைத்துத் தர வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, கடையம் வடக்கு ஒன்றியம், சொக்கலிங்கபுரம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைத்துத் தர வேண்டும்; சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும்; கடையம் வடக்கு ஒன்றியம், AP நாடானூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும் வேண்டும். EB Line-ஐ மாற்றி அமைத்துத் தரவும், நீர்த்தேக்கத் தொட்டி

அமைத்துத் தரவும் வேண்டும்; முருகாண்டியூர் கிராமத்தில் அங்கன்வாடிக்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தரவும், கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தரவும், பொதுக் கழிப்பறை அமைத்துத் தரவும், எரிதகனமேடை அமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், செல்லப்பிள்ளையார்குளம் கிராமத்தில் சுடுகாட்டிற்கு சாலை அமைத்துத் தரவும், சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும் வேண்டும்; மடவார்விழாகம் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் மற்றும் நியாயவிலைக் கடை அமைத்துத் தர வேண்டும்; சடையாண்டியூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் மற்றும் சுடுகாட்டிற்கு தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும்; தெற்குமடத்தூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், சிண்டெக்ஸ் மோட்டார் பழுது பார்த்துத் தரவும் வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, கடையம் வடக்கு ஒன்றியம், காவூர் கிராமத்தில் 10 ஆம் வகுப்பு வரை உள்ள அரசு பள்ளியை 12 ஆம் வகுப்பு வரை தரம் உயர்த்தவும், புதிய நியாயவிலைக் கடை அமைத்துத் தரவும், கால்நடை மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரவும், தாமிரபரணி தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

ஆலங்குளம் தொகுதி, கடையம் வடக்கு ஒன்றியம், கோதண்டராமபுரம் கிராமத்தில் தாமிரபரணி நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரவும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிய இடத்தில் குடிநீர் வசதி, மின் வசதி அமைத்துத் தரவும், சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், புங்கம்பட்டி கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரவும், ஓம் சக்தி மெயின்ரோட்டில் கழிவுநீர் வாய்க்கால் அமைத்துத் தரவும், நடுரோட்டில் இருக்கும் EB Pole-ஐ மாற்றி அமைத்துத் தரவும், தாமிரபரணி தண்ணீர்த் தொட்டி கட்டுமானம் 90% நிறைவுற்றுள்ளது. அதைத் துரிதப்படுத்தி அமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், பாரதி நினைவுநகர் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும்; அங்கப்புரம் கிராமத்தில் தாமிரபரணி நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்; அங்கப்புரம் கிராமத்தில்

[திரு. பால் மனோஜ் பாண்டியன்] [2023 ஏப்ரல் 19

முப்பிடாதி அம்மன் கோயில் மேல்புறம் சிமெண்ட் சாலை, கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், நரையப்பபுரம் கிராமத்தில் சமுதாய நலக் கூடம், புதிய நியாயவிலைக் கடை மற்றும் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்; அரசு இடத்தில் சுடுகாடு அமைக்கவும், வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்; கட்டேறிப்பட்டி கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், மயிலானூர் கிராமம், தெற்குத் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தரவும் வேண்டும். கோவில் மேல்புறம் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், ஊர் கிணற்றைத் தூர்வாரி, மூடி அமைத்துத் தரவும், Sintex tank சீரமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், அருணாசலம்பட்டி கிராமத்தில் வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீடு வழங்கவும், கருப்பசாமி கோயிலுக்கு தார்ச்சாலை அமைத்துத் தரவும் வேண்டும்; புறங்காட்டாப்புலியூர் கிராமத்தில் கோயில் பின்புறம் கடையம் வரை சாலை அமைக்கவும், சமுதாய நலக்கூடம் அமைத்துத் தரவும், ஊருக்குள் செல்லும் சாலைக்குத் தார்ச்சாலை அமைத்துத் தரவும் வேண்டும்; அம்பேத்கர் நகர் கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்; புலவனூர் கிராமம்–ராமநதி அணைக்கு செல்லும் சாலையை தார்ச்சாலையாக்க வேண்டும்; கல்யாணிபுரம் கிராமத்தில் புதிய கலையரங்கம் கட்டித் தர வேண்டும்; குமரேசபுர காலனி கிராமத்தில Sintex tank அமைத்துத் தர வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், கீழக்கடையம் கிராமத்தில் பாறை இடத்தில் park அமைத்துத் தரவும், 18 ஊர்களுக்குப் பாத்தியப்பட்ட மேலபத்ரகாளியம்மன் கோயிலில் அன்னதானக் கூடம் அமைத்துத் தரவும், VAO office மற்றும் கழிவுநீர்க் கால்வாயை சீரமைத்துத் தரவும், பாதுகாத்தம்மன் கோயில் அருகே உடைந்த நிலையில் இருக்கும் மின் கம்பத்தை சீரமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், தெற்கு கடையம் கிராமத்தைத் தனி தாலுகாவாக அமைத்துத் தரவும், தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவும், கேளையாபிள்ளையூர் கிராமத்தில் சமுதாய

நலக்கூடம் அமைத்துத் தரவும் வேண்டும்; புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தரவும், இரண்டு தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், புலவனூர் கிராமத்தில் பொன்மலை நகர் கடைசி தெருவில் சிமெண்ட் சாலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கவும், நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரவும், கருப்பசாமி கோயில் வடபுறம் உள்ள சாலையைச் சீரமைத்துத் தரவும், சமுதாய நலக்கூடத்திற்குச் சுற்றுச்சுவர் மற்றும் சமையலறை அமைத்துத் தரவும், நடுதெரு சிமெண்ட் ரோடு பழுதடைந்ததைச் சரி செய்து தரவும், sintex tank சரிவரப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், தெற்கு கடையம் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், volley ball மைதானத்திற்கு வேலி அமைத்துத் தரவும், விளையாட்டு மைதானத்தில் குடிநீர் வசதி செய்து தரவும் வேண்டும்; உடற்பயிற்சி கூடம் அமைத்துத் தரவும், இரட்டைக் கிணற்றைச் சீரமைத்துத் தரவும், பாரதி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைத்து தரவும், ஷிபா கார்டன் பகுதியில் புதிதாக சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும், பள்ளி விளையாட்டு மைதானத்திற்குச் சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், முதலியார்பட்டி கிராமத்தில் கிழக்கு தெரு பகுதியில் சாலையை சீரமைத்துத் தரவும், புதிய நியாயவிலைக் கடை அமைத்துத் தரவும், அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் புதிதாக வகுப்பறை கட்டி தரவும் வேண்டும்; இந்திரா நகர் கிராமத்தில் VAO office பகுதியிலுள்ள சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாயைச் சீரமைத்துத் தரவும், தாமிரபரணி தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், திருமலைபுரம் கிராமத்தில் முப்பிடாதி அம்மன் கோயில் முன்பாக பார்க்கிங் கல் அமைத்துத் தரவும், தாமிரபரணி தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவும் வேண்டும்; கழிவுநீர்க் கால்வாய் சீரமைத்துத் தரவும் வேண்டும்; துப்பாக்குடி கிராமத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் மற்றும் நாடார் மக்களுக்குப் பாத்தியப்பட்ட சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை அமைத்துத் தரவும், வடக்கு

மறுகால் ஓடை மற்றும் அம்மன் கோயில் பக்கம் பாலம் அமைத்துத் தரவும் வேண்டும்.

கடையம் வடக்கு ஒன்றியம், ராவுத்தபேரி கிராமத்தில் பேருந்து எண் 34M முக்கூடல்–கடையம் வரை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும், சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், தெற்கு மறுகால் ஓடையிலிருந்து அம்மன் கோயில் வரை தடுப்புச் சுவர் அமைத்துத் தரவும், துப்பாக்குடி வழியாக ராவுத்தப்பேரி வரை கால்வாய் அமைத்துத் தரவும் வேண்டும்; இந்திரா நகர் கிராமத்தில் புதிய நூலகக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

கடையம் தெற்கு ஒன்றியம், பாப்பான்குளம் கிராமத்தில் பாப்பான்குளம் முதல் ஆழ்வார்குறிச்சி வரை உள்ள யூனியன் சாலையில் தடுப்புச்சுவருடன்கூடிய தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும்; பொட்டல்புதூர் கிராமத்தில் நூலகக் கட்டடம் பல ஆண்டுகளாக சேதமடைந்து மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. அதனை இடித்து புதிய கட்டடம் கட்டி நூலக வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்; பொட்டல்புதூர் கிராமத்தில் பொட்டல்புதூர் முத்தன் தெரு, யூனியன் ரோடு மற்றும் அதனுடன் சேர்ந்த பாலமும் அமைத்துத் தர வேண்டும்; பொட்டல்புதூருக்கு இன்னொரு மாற்றுப்பாதை அமைத்துத் தர வேண்டும்; கோவிந்தபேரி கிராமத்தில் கோவிந்தபேரி ஊருக்குள் செல்லும் சாலை அமைத்துத் தர வேண்டும்.

கருத்தப்பிள்ளையூர் கிராமத்தில் பங்களா குடியிருப்புப் பகுதியில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும், அண்ணா நகர் பகுதியில் புதிய நியாயவிலைக் கடை அமைத்துத் தரவும், ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரவும், காசி விஸ்வநாதபுரம் பகுதியில் நன்மைக் கூடம் அமைத்துத் தரவும், கீழஆம்பூர் கிராமத்தில் 8–வது வார்டு பசுமந்தை தெருவில் சிமென்ட் சாலை அமைத்துத் தரவும், தென்காசி–அம்பை மெயின் ரோட்டில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரவும் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் போட்டுத் தடுக்குற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்கிறது, திட்டம் போட்டுத் திருடுற

கூட்டம் திருடிக்கொண்டே இருக்கிறது. எனவேதான், இந்த அரசு சட்டம் போட்டும், பலர் கல்லைக் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது? திட்டம் போட்டு செய்கிறார்கள்; அவற்றையும் தடுப்போம்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, சிலைக் கடத்தல் குறித்து தெரிவித்திருக்கிறார்கள். அடிப்படையிலே, இந்தச் சிலைகள் நம்முடைய ஊரிலிருந்து போயிருக்கின்றன என்பதை நாம் நிரூபிக்க வேண்டியதுதான் மிக முக்கியமான ஒன்று. provenance இந்த ஊரிலிருந்து இந்தச் சிலை இந்த இடத்திற்குப் போயிருக்கிறது என்பதை நாம் முதலில் establish பண்ண வேண்டும். அதிலே bronzes–ஐ பொறுத்தமட்டில் inscribed bronzes ஆக இந்த இடத்தில் அல்லது இந்த மன்னனால் வழங்கப்பட்டிருக்கிறது என்று அதில் இருந்தால் நேரடியாக நாம் சொல்ல முடியும் அல்லது அந்த ஊரினுடைய பெயரும் அதில் inscribed ஆகி இருந்தால் direct ஆக அதை இந்த ஊருக்குரிய கோயில் என்று நாம் attribute செய்து எடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. பல இடங்களில், எந்த இடத்திலிருந்து இந்த சிலைகள் வெளியே போயிருக்கின்றன என்பதை நிரூபிப்பதில் இருக்கக்கூடிய சிரமங்களின் காரணமாகத்தான் இப்படி வெளிநாடுகளுக்குக் கொண்டு போயிருக்கக்கூடிய சிலைகளைக் கொண்டு வருவதிலே பலவிதமான தாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு இறை உருவங்கள், அவை bronzes ஆக இருந்தாலும் சரி அல்லது stone sculptures ஆக இருந்தாலும் சரி இவற்றையெல்லாம் French Institute–லே அவர்கள் படங்களாக எடுத்து வைத்திருந்த காரணத்தினால்தான் இந்த இடங்களிலிருந்து என்னென்ன சிலைகளை வெளியே கொண்டுபோய் இருக்கிறார்கள் என்பதை நாம் கொண்டுவர முடியும்.

பாத்தூர் நடராஜர் சிலை கடத்தப்பட்டதில் ஒரு பெரிய வரலாறே இருக்கிறது. தச்சூரிலிருந்து வெளியே

சென்றிருக்கக்கூடிய சிலைகள்கூட பல இடங்களிலே இருக்கின்றன. ஆக, நமக்கு முக்கியமாக எந்த இடத்திலிருந்து இந்தச் சிலைகள் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், ஒவ்வோர் இடத்திலும் இருக்கக்கூடிய இறை திருமேனிகள்—அது நான் சொன்னதைப்போல இரண்டு விதமாகவும் இருக்கும். ஒரு காலத்தில் அந்த வெண்கலச் சிலைகள், ஐம்பொன் சிலைகளைக் கடத்தினார்கள். அதற்குப் பிறகு stone sculptures இந்த மாதிரி வெளியே நிறைய போய் இருக்கின்றன. எனவே, எந்த இடத்திலிருந்து சென்றிருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. உதாரணமாக, அரியலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய சுத்தமல்லியிலிருந்து போய் இருக்கக்கூடிய சிலை. அதில் சுத்தமல்லி என்றேகூட இருக்கிறது; அதை இன்னும் நம்மால், கொண்டுவர முடியவில்லை. எனவே, அதை நிரூபிக்க வேண்டிய கடமையில் உள்ளோம். எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய அந்தத் திருமேனிகள், சிலைகளையெல்லாம் ஆவணப்படுத்தக்கூடிய ஒரு முயற்சியை நம்முடைய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளவிருக்கின்றார்கள். தொல்லியல் துறையினுடைய சார்பிலும், தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய சிலைகள், அது loose sculpture ஆக இருந்தாலும், வேறு இடங்களில் இருக்கக்கூடிய இத்தகைய சிலைகளையெல்லாம் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாகக் கொண்டு வந்து, அவற்றை ஆவணப்படுத்தக்கூடிய முதல் முயற்சியைச் செய்வோம். இந்தச் சிலைகள் வெளியே கடத்தப்படுவதைத் தடுக்கவும், அதேபோல, அந்தச் சிலைகள் வேறு எங்காவது Auction Houses-யிலோ அல்லது Museums-யிலோ இருந்தால் அவற்றைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை நாம் செய்து கொடுக்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஏதேனும் சிலைகள் காணாமல் போய் இருக்கிறதா?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருந்தேன். மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியையொட்டிய இடத்தில் கோயில் திருப்பணிகளுக்குப் பள்ளம் எடுத்தபோது, அங்கு பல்வேறு ஐம்பொன் சிலைகளும், குறிப்பாக தேவாரம், திருவாசகம் உள்ளடங்கிய செப்பேடுகள் நூற்றுக் கணக்கிலே

கிடைத்திருக்கின்றன. அவை எந்த நூற்றாண்டில் எழுதப்பட்டன. சீர்காழி அருகே கிடைக்கப்பெற்றது. இது குறித்து மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குக் தெரியப்படுத்துவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி சட்டைநாதர் கோயிலில் திருப்பணிகளை மேற்கொள்வதற்காக நிலத்தைத் தோண்டியபோது, அங்கே நிறைய இறை திருமேனிகள், பஞ்சலோக மூர்த்திகள் அல்லது சோமாஸ்கந்தர் என்று சொல்லக்கூடிய பல்வேறு பஞ்சலோக சிலைகள், வெண்கலச் சிலைகள்–bronze statues கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அவை பொதுவாக, பல மன்னர்களினுடைய காலங்களில் படையெடுப்புகளுக்காக வருகின்றபொழுது, அந்தக் கோயிலிலே, இறை திருமேனிகளைப் பாதுகாப்பதற்காக, பூமியிலே புதைப்பது வழக்கம். அதற்குப் பிறகு அந்தக் கலாபம், சண்டைகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு, பின்னாளில் வரக்கூடிய தலைமுறைகளுக்கு அது தெரியாமல் பூமியிலே புதையுண்டு, இப்போது திருப்பணிகளை மேற்கொள்கிறபோது அவை வெளிவருகின்றன. பொதுவாக அப்படி வரக்கூடியவை Treasure Trove Act, 1878-ன் பிரகாரம் வருவாய்த் துறையின் மூலமாக நம்முடைய அருங்காட்சியகங்களுக்குப் பெறப்படுகின்றன. சில இடங்களிலே, சூழ்நிலையைக் கருதி, அங்கே இருக்கக்கூடிய கோயில்களில் வைக்கலாம். இப்போது, அப்படி கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடியவை மதிப்பிற்குரிய நம்முடைய தருமபுர ஆதீனத்தின் குருமகா சந்நிதானம் அவர்களுடைய மேற்பார்வையிலே எடுத்து சட்டைநாதர் கோயிலிலேயே அவை பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

பொதுவாக இறை திருமேனிகள்தான் கிடைக்கும். ஆனால், இந்த இடத்திலே தேவாரப் பாடல்கள் எழுதப்பட்டிருக்கக்கூடிய செப்பேடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. ஏறத்தாழ 480 பெரிய செப்பேடுகள் அங்கே கிடைத்திருக்கின்றன. திருஞானசம்பந்தருடைய தேவாரமும், அப்பருடைய தேவாரமும் அவற்றிலே இருப்பதாகத் தெரிய வருகிறது. நம்முடைய தொல்லியல் துறையினுடைய இயக்குநரை உடனடியாக

நான் அங்கே அனுப்பியிருந்தேன். அவரும் அங்கே சென்று, அவற்றையெல்லாம் நேற்று பார்வையிட்டிருக்கிறார். தேவாரப் பாடல் எழுதியிருக்கக்கூடிய மரபு ஏற்கெனவே உண்டு. முதலாம் குலோத்துங்க சோழனுடைய காலத்திலே அவருடைய படைத் தளபதியாக நரலோக வீரன் இருந்த காலத்திலேயிருந்து அது இருப்பதாகத் தெரிகிறது. இன்னுஞ்சொல்லப்போனால், முதலாம் இராஜராஜ சோழனுடைய காலத்திலே தில்லையிலே தில்லை வாழ் அந்தணரால் தேவாரச் சுவடிகள் கொடுக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தபொழுது, தேவாரப் பாடல்களைப் பாடிய மூவரும் வந்தால்தான் கொடுப்போம் என்று சொன்னபோது, மூவருடைய திருமேனிகளையும் இராஜராஜ சோழன் அங்கே எழுந்தருளச் செய்து, அந்தத் தேவாரப் பதிகங்களைப் பெற்றதாக வரலாற்றுக் குறிப்புகள் இருக்கின்றன.

பிற்பகல் 2–15

எனவே, அந்த அடிப்படையில், கோயில்களிலே தேவாரம் எழுதி வைக்கக்கூடிய அந்த முறை உள்ளது. வரலாற்றில் முதன்முறையாக செப்பேடுகளிலே தேவாரம் எழுதியிருக்கக்கூடியது இப்போதுதான் நமக்குக் கிடைத்திருக்கிறது; அது மிக முக்கியமான ஒரு finding. இப்போது அந்தக் கோயிலிலே அவை முறையாக வைக்கப்பட்டிருக்கின்றன. தொல்லியல் துறையினுடைய சார்பாக, யார், யாருடைய தேவாரங்கள் இருக்கின்றன என்பதை முழுமையாகப் படித்தறிந்து அவற்றைப் புதுப்பிக்கக்கூடிய பணியினை நாம் மேற்கொள்ளலாம். இப்போது பார்க்கக்கூடிய அளவில் அது பிற்கால சோழர் காலத்தைச் சார்ந்ததாக, ஏறத்தாழ 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக அந்த எழுத்து அமைதி இருக்கிறது. அதைப்போல, இறை திருமேனிகளுடைய அந்தக் கலை அமைதியையும் பார்க்கின்றபோது பிற்கால சோழர் காலத்தைச் சார்ந்ததாக அவை அமைந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைக் கூற வாய்ப்பளித்தத் தங்களுக்கு

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் சேர்த்து, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சில கோரிக்கைகளையும் நான் இங்கே முன்வைக்கிறேன்.

திருத்துறைப்பூண்டி நகரம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரம். போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்குத் திருத்துறைப்பூண்டி–திருவாரூர் சாலையிலிருந்து மன்னார்குடி வழியாக முத்துப்பேட்டை சாலை வரை ஒரு புதிய புறவழிச் சாலை திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, முத்துப்பேட்டையில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் முன்வைக்கிறேன். அதேபோல, கோட்டூரில், விக்கிரபாண்டியத்தை தலைமையிடமாகக் கொண்டு ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்கிறேன்.

இங்கே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் வைத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை நாங்கள் நன்றாகப் படித்தோம். அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற கோரிக்கை 60 ஆண்டுகளுக்கு முன்னால் பகுத்தறிவு புரட்சியாளர் தந்தை பெரியார் அவர்களால் முன்மொழியப்பட்டு, அதே கோரிக்கை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு, இதே அவையில் சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, சமூக நீதிப் பயணம் தொடங்கியது. அப்போது தொடங்கிய சமூக நீதிப் பயணத்தைத்தான் கடந்த 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆகமப் பயிற்சி முடித்த அனைத்து சாதியினரும் அனைத்து ஆலயங்களிலும், அர்ச்சகராகலாம் என்ற பணியை வழங்கி நிறைவு செய்தார்கள். அப்படி முடித்த அந்த வேளையில்தான் தற்போது திருச்சி ஸ்ரீரங்கத்தில் இருக்கிற குமாரவயல் முருகன் கோயிலில் அர்ச்சகராகப் பணியமர்த்தப்பட்டவர்கள், இன்றைக்குப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்பதற்கான ஒரு நீண்ட நெடிய போராட்டத்தை இந்த அவையும், இந்த அரசும் நன்கு உணரும் என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு அரசமைப்புச் சட்டம், குடிமக்கள் அனைவரும் சமம்

என்று சொல்லியிருக்கிறது. குடிமக்கள் அனைவரும் சட்டத்தின்முன் சமம் என்று சொன்னால், அது ஆகம விதியின்படியும், பழக்க வழக்கத்தின்படியும் தடுக்கப்படுமேயானால், அந்தப் பழக்க வழக்கத்திற்கு, அந்த ஆகம விதிகளுக்கு எதிர்ப்பு வருமேயானால், அதை அனுமதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றமும் காட்டமாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. எனவே, இதையெல்லாம் நன்கு உணர்ந்து, ஆலயங்களில் அர்ச்சகர்களை நியமனம் செய்வதற்கு இட ஒதுக்கீடு முறையைக் கொண்டுவர இந்த அவையிலே சட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு சேர்த்து, கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களைப் பற்றி, அவர்களுடைய வசிப்பிட நில உரிமைகளைப் பற்றி இந்த அவையும், இந்த அரசும் அக்கறையோடு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான திருக்கோயில்களுக்கும், மடங்களுக்கும் கிட்டத்தட்ட 5 இலட்சம் ஏக்கர் நஞ்சை நிலங்களும், புஞ்சை நிலங்களும் இருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலங்களெல்லாம் எதன் பொருட்டும், எதனடுத்தும் எந்தக் கோயிலுக்கும் சொந்த வருமானத்தில் வந்த நிலங்கள் அல்ல என்பதனை இந்த அவை புரிந்துகொள்ள வேண்டும் என நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2–20

பணப் பரிவர்த்தனை இல்லாத காலங்களில், வங்கி முறையில் செயல்பாடுகள் இல்லாத காலங்களில் தங்களுடைய அசையாச் சொத்துகளையெல்லாம் குடும்பத்தினருக்குக் கொடுக்க விருப்பமில்லாமல், உறவினர்களுக்குக் கொடுக்க விருப்பமில்லாமல், தான் நம்பிக்கை வைத்த கடவுளுக்கு எழுதி வைத்த சொத்துகள்தான் அவை. வேலையில்லாமல், வறுமையில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழைத் தொழிலாளி தான் வசிப்பதற்கு இடம் வேண்டும் என்பதற்காக, அங்கே இருந்த அறங்காவலர் குழுத் தலைவர், அறங்காவலர் அதிகாரிகள் ஆகியோரின் தயவினால் காடாக, மேடாக, முள்ளாகக் கிடந்த அந்த நிலங்களையெல்லாம் தன்னுடைய சொந்த உழைப்பால்,

*சமன்படுத்தி, தன்னுடைய சொந்த உழைப்பினால் கிடைத்த வருமானத்தின் மூலமாக அங்கே வீடுகள் கட்டி, காலங்காலமாக, வாழையடி வாழையாக, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த இடத்தில் குடியிருப்பதற்குத்தான் இன்றைக்கு நெருக்கடி வந்திருக்கிறது. அந்த இடத்திற்குத்தான் வாடகை என்ற பெயரில் நெருக்கடிகள் வந்திருக்கின்றன. கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் 34–*A *என்ற ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. அந்த அரசாணை என்ன சொல்கிறது? அங்கே இருக்கிற சந்தை மதிப்பில், அங்கே நிலவுகிற நில மதிப்பின் அடிப்படையில் சதுர அடி கணக்கில் அவற்றிற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று, 34–*A *அரசாணை சொல்கிறது. இந்த அவை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதுதான் 2007–ல் 456 என்று ஓர் அரசாணையை வெளியிடுகிறார்கள். அதேபோல், 2010–லும் 298 என்று ஓர் அரசாணை வெளிவருகிறது. இந்த அரசாணை என்ன சொல்கிறதென்றால், அங்கே ஏழைகள் குடியிருக்கிற அந்த இடங்களுக்கெல்லாம் 3 ஆண்டுகளுக்கொருமுறை, அவர்களுடைய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல, வாடகையை உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறது; அது பகுதியாகவும் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. நான் மீண்டும் இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆண்டுக்குப் பகுதியாக வாடகை செலுத்தியபோதெல்லாம் கோயிலுக்கும், குடியிருந்தவர்களுக்கும் எந்த முரண்பாடும் இருந்தது கிடையாது. ஆனால், வாடகை என்ற பெயரில், சதுர அடி கணக்கில் என்று வந்த பிறகுதான் இன்றைக்குப் பிரச்சினைகள் தொடங்கியிருக்கின்றன. எனவே, இந்த அவை இதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். டாக்டர் கலைஞர் அவர்கள் பிறப்பித்த அரசாணையைத்தான் இந்த ஆட்சி பின்பற்ற வேண்டும். கடந்த ஆட்சி பிறப்பித்த அரசாணையை தயவுசெய்து பின்பற்றக் கூடாது என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு சேர்த்து, விவசாய நிலங்களும் இருக்கின்றன. இந்த விவசாய நிலங்களில் அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. நெருக்கடி வந்தபோது,* (குறுக்கீடு) *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வெள்ளம் வந்தபோது, வறட்சி வந்தபோது. . .* (குறுக்கீடு)

(திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. ஓ.எஸ். மணியன், திரு. இரா. காமராஜ், திரு. கே.ஏ. செங்கோட்டையன் உள்ளிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று வாய்ப்புக் கோரினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன். உங்களுடைய உறுப்பினர் இப்போது, அடுத்தது பேசுவார். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. K. மாரிமுத்து: *அவர்களுடைய உரிமைகள் இன்று கோயில் மூலமாக மறுக்கப்படுகின்றன. (குறுக்கீடு) எனவே, விவசாயிகளுடைய நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். விவசாயி பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், விவசாய நலனில் அக்கறையோடு, விவசாயிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை இன்றைக்கு இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி சொல்லி முடியுங்கள். உங்கள் நேரம் முடிந்து விட்டது. நன்றி சொல்லி உட்காருங்கள்.*

திரு. K. மாரிமுத்து: *எனவே, இதுபோன்று கோயில் மனையில் குடியிருப்போர்க்கும், விவசாய நிலங்களில் சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கும், பாதுகாப்பான சூழ்நிலையை, அவர்களுக்கான உரிமையை இந்த அரசு பெற்றுத் தர வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி இருந்த காலம் வரை அதைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். எனவே, திராவிட மாடல் ஆட்சி அதைப் பெற்றுத் தரும் என்று கோயில் மனைகளில் குடியிருப்போரும், கோயில் நிலங்களில் சாகுபடி செய்யும் விவசாயிகளும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் எங்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. முத்தரசன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மனுவாகக் கொடுத்திருக்கிறார்கள். இதே கோரிக்கையைத்தான் நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடமும் மனுவாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், சொல்லுங்கள்.*

2023 ஏப்ரல் 19]

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள், ஒரு காலத்தில் இருந்த பிரச்சினையை இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களால் தமிழகத்தில் கோயில் நிலங்களில் மொத்தம் எத்தனை பேர் குடியிருக்கிறார்கள் என்கிற கணக்கெடுப்பு எடுத்தபோது, 12 ஆயிரத்து 700 பேர் கோயில் நிலங்களில் குடியிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. அதிலேயும் சாதி வாரியாக, என்னென்ன சாதியைச் சேர்ந்த நபர்கள் குடியிருக்கிறார்கள் என்று கணக்கெடுக்கப்பட்டது. ஏனென்றால். . .

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள் பேசியது அது அல்ல. (குறுக்கீடு) இதைக் கேட்டுவிட்டு, விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், உங்கள் உறுப்பினர் சொல்லும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் திசை திருப்பக் கூடாது. திரு. K. மாரிமுத்து அவர்கள் பேசும்போது, 34–A என்ற அரசாணையின்படி சதுர அடிக்கு வரி விதிப்பு போட்டிருக்கிறீர்கள்; கலைஞர் ஆட்சிக் காலத்தில் போட்ட அரசாணை எண் 456–ன்படி, சூழ்நிலைகளுக்கேற்ப போடலாம் என இருக்கிறது. அதனை இந்த அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். இதில், உங்களுக்கு என்ன clarification இருக்கிறது. (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் பேசும்போது சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி V. அமலு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கொறடா சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், நீங்கள் சொல்லுங்கள்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.O. No. 456–ல் கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுடைய இடத்தை அவர்களுக்கே பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடு. அதில் மத்திய அரசினுடைய நில எடுப்புச் சட்டம் என்ன சொல்கிறதோ, அந்தத் தொகையை அரசிற்கு கொடுத்து விடுகிறோம் என்ற உத்தரவாதத்தோடு அந்த G.O. No. 456 வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் நீதிமன்றத்தில்

வழக்கிட்டு, தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள். அதைச் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி V. அமலு அவர்கள்.*

***திருமதி V. அமலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றவர்களின் எண்ணங்களைத் தன்னகத்தே கொண்டு, அனைத்து மக்களுக்கான அரசை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய தன்னிகரில்லாத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.*

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கர்மவீரர் காமராஜர் அவர்களால் கட்டப்பட்ட ஒரே மேம்பாலத்தினால் இந்நாள் வரை பல்வேறு இன்னல்களுடன் பயணித்து வந்த குடியாத்தம் மக்களுக்கு, குளிர்ந்த செய்தியாக இக்கூட்டத் தொடரில் சுமார் 47 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு பாலங்களுடன்கூடிய சாலை மற்றும் பொது மக்கள் நடை பயிற்சிக்கான பாதை என இரண்டுக்கும் சேர்த்து நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மண்ணின் மைந்தர் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தில், தமிழ்நாட்டின் குரலாக ஒலிக்கக்கூடிய அன்புச் சகோதரி அவர்களையும் வணங்குகிறேன். தமிழ்நாட்டின் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். வேலூர் மாவட்டக் கழகச் செயலாளரும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் இளம்புயல் அவர்களையும் வணங்கி, இந்த அவையில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், அவையில் அமைதியாக உட்காருங்கள். உறுப்பினர் ஒருவர்*

பேசினால், அனைவரும் தயவுசெய்து கவனியுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் பேசுவதை யாருமே கவனிப்பது போன்று எனக்குத் தெரியவில்லை.

திருமதி V. அமலு: மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கும், கழகத் தலைவர் மீதும், என் மீதும் நம்பிக்கை வைத்து எனக்கு வாக்களித்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த குடியாத்தம் தொகுதி மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, நகரக் கழக, கிளைக் கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும், எதிர்க்கட்சித் தோழர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இந்நேரத்தில் என் பணிவு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”

என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களும் கல்வியறிவு பெற்றாலே இந்த நாடு முன்னேற்றம் அடைந்துவிடும் என்ற நோக்கிலும், பெண்கள் பொருளாதாரத்தில், சமுதாயத்தில் சம அந்தஸ்தைப் பெற வேண்டும் என்ற நோக்கிலும், பெண்களுக்கென பல்வேறு திட்டங்களை—அரசு பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயணம்; மகளிர் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி; படிப்பறிவு இல்லாத மகளிரே இருக்கக் கூடாது என்கிற உயரிய நோக்கத்தோடு மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம்; அரசு பணியிடங்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீட்டை 40% உயர்த்தியது; பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50% இட ஒதுக்கீடு; அதன் தொடர்ச்சியாக வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமான பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை—வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–30

இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் கலந்து கொண்டு பேசுவதற்கு

வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் மொத்தம் 7 நிமிடங்கள். அதில், 4 நிமிடங்கள் நன்றி சொல்லியிருக்கிறீர்கள். 3 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திருமதி V. அமலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தைத் தந்து, மதுரை, பழனி, திருச்செந்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையங்களிலும், சென்னை மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் வைணவ அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையங்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன. ஒருகால பூஜைகூட செய்ய இயலாத ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்கு நாள்தோறும் ஒருகால பூஜை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எதிரிகளைத் துவம்சம் செய்யும் வகையில், திராவிட மாடல் என்றாலே இந்துக்களுக்கு எதிரானவர்கள் என்று எதிர்க்கட்சியினரால் கட்டமைக்கப்பட்டதை உடைத்து, கடந்த ஆண்டில் மட்டும் 574 திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் பதிவு செய்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் மாபெரும் சாதனையாக, நமது கழக அரசின் ஆட்சி அமைந்த பிறகு சுமார் ரூ.4 ஆயிரத்து 236 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன என்பதை நான் இங்கே பெருமையாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது சுற்றுலாத் துறை என்பதை நாம் நன்கு அறிவோம். சுற்றுலாத்

துறையினால், போக்குவரத்துத் துறை, தங்கும் விடுதிகள், தகவல் தொடர்பு, உள்நாட்டு வாணிபம் போன்றவற்றின் வளர்ச்சி காரணமாக தனி மனித வருமானத்தை உயர்த்தும் நோக்கோடு பல்வேறு நடவடிக்கைகளை நமது கழக அரசு முன்னெடுத்துள்ளது. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது நன்கு புலப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி சார்ந்த கோரிக்கைகளில் சிலவற்றை மட்டும் இங்கே படித்துவிட்டு, மீதமுள்ளவற்றைத் தாங்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியே செய்துவிடலாம். எல்லா கோரிக்கைகளையுமே என்னிடம் கொடுத்துவிட்டால் பதிவு செய்து கொள்ளலாம்.*

திருமதி V. அமலு: *மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் தற்போதைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் திறந்துவைக்கப்பட்ட மோர்தானா அணையில் சிறுவர் பூங்கா அமைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைலாசகிரி முருகன் கோயிலுக்கான மலைப் பாதையை அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். துத்திப்பட்டு ஊராட்சியில் மிகவும் பழமை வாய்ந்த பிந்துமாதவ பெருமாள் திருக்கோயில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடமுழுக்கு செய்யப்படாமல் உள்ளது. எனவே, அரசின் சார்பில் அத்திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு செய்து தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

துத்திப்பட்டு ஊராட்சியில் எம்.ஜி.ஆர். நகர், அன்னை சத்யா நகர் இடையில் கலைஞர் நகர், இந்திரா நகர் சாலையில் ஆற்றங்கரையோரம் தடுப்புச் சுவர் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி V. அமலு] [2023 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரமடைந்த நாளிலிருந்து இன்று வரை பேரணாம்பட்டு பேருந்து நிலையம் காவல் துறைக்குச் சொந்தமான இடத்திலேயே இயங்கி வருகிறது. எனவே, அவ்விடத்தை காவல் துறையிடமிருந்து பெற்று நகராட்சிக்கு வழங்கினால் போதுமான நிழற்குடைகளை உருவாக்கி, பொதுமக்களுக்கு நன்மை செய்ய இயலும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

குடியாத்தம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி எதுவும் இல்லை. இதனால், பெண்கள் இடைநிற்றல் விகிதம் மிகவும் அதிகமாக உள்ளது. எனவே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–35

குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு நகராட்சிக்கு AMRUT திட்டத்தின்கீழ் ரூ.10.45 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. பேரணாம்பட்டு நகரில் குடிநீர் பிரச்சினை அதிகமாக உள்ளதால் இந்தத் திட்டத்தை விரைந்து முடித்துத்தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு நகரில் சில சர்வே எண்கள் ‘அ’ பதிவேட்டில் இலவச கைப்பற்று என்று உள்ளது. 151, 416, 429, 450, 433, 455, 517, 545 ஆகிய இந்த சர்வே எண்களில் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக 1,500 பேர் வீடுகட்டி வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்கெனவே மனுக்கள் அளிக்கப்பட்டு, வருவாய்த் துறை பரிசீலித்து தற்போது நில நிர்வாக ஆணையரிடம், CLA–விடம் உள்ளது. எனவே, அவர்களின் நலன் கருதி 1,500 நபர்களுக்கு விரைவில் பட்டா வழங்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றிகூறி, அமர்கிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

குடியாத்தம் நகரத்தில் நினைவுத்தூண் அமைத்துத் தர வேண்டும். குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தை அமல்படுத்தித் தர வேண்டும். குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட 51 ஊராட்சிகளில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். பத்தலபள்ளி அணையைக் கட்டி முடித்து பேரணாம்பட்டு மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு உதவ வேண்டும்.

குடியாத்தம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாலைகளை அகலப்படுத்தி இருவழிச் சாலைகளாக அமைத்து சாலையின் நடுவே தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும். குடியாத்தம் முதல் பேரணாம்பட்டு இடையில் தொழிற்பேட்டை அமைத்து வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும்.

குண்டலபள்ளி ஊராட்சிக்குட்பட்ட ராங்கம்பேட்டையில் வனத் துறை பகுதியில் சுமார் 3 கிலோமீட்டர் அளவிற்கு வனத் துறை அனுமதி பெற்று சாலை அமைத்துத் தர வேண்டும். குடியாத்தம் கங்காதரசுவாமி நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். மோர்தானா, சேம்பள்ளி, கொட்டாரமடுகு, குண்டலபள்ளி, அரவட்லா, எருக்கம்பட்டு, பத்தலபள்ளி ஆகிய பகுதிகளுக்கு, டவர் அமைத்து, தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தித் தர வேண்டும்.

பேரணாம்பட்டு பேருந்து நிலையத்தில் நிழற்கூடங்களை உருவாக்கித் தர வேண்டும். பேரணாம்பட்டை, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தின் நிறுவனர், சத்துணவு தந்த சரித்திர நாயகர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறப்பளீஸ்வரர் என்கின்ற திருக்கோயிலின் கோபுர சிகரமாய்

திகழ்ந்த தனிப்பெரும் தெய்வம் எங்கள் அம்மா; உலகம் வணங்கும் மகராசி; உரிமை மீட்கும் கைராசி; உழைப்பினைக் காத்த மகராசி; உண்மையைப் போற்றும் செயலரசி; உழைப்பவரை உயர்த்தும் அருளரசி; பரிவால் சிறந்த பண்பரசி; தமிழகத்தை அன்பால் வென்ற தமிழரசி; மக்கள் இதய கோயிலில் வீற்றிருக்கின்ற எங்கள் வீட்டு குலசாமி அம்மா, நீங்கள் வங்கக் கடலோரம் உறங்கும் பாதத்தைத் தொட்டு வணங்குகிறேன். இந்திய அரசியலுக்கு ஓர் இலக்கணம் சொல்ல வேண்டுமென்றால், எல்லோரும் உச்சரிக்கும் பெயர் 'அம்மா, அம்மா, அம்மா'-தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுமைத் திறனாலும், நேர்கொண்ட பார்வையாலும், ஞான செருக்காலும், கள்ளமில்லா உள்ளத்தாலும், பணிவு கொண்ட செயலாலும், தனது வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் அம்மாவின் ஒட்டுமொத்த ஆசியோடும், தொண்டர்களின் நம்பிக்கையோடும் இன்று கழகத்தை மிகுந்த நேர்த்தியோடு வழிநடத்தக்கூடிய, எதிரிகளின் சிம்ம சொப்பனம், எங்கள் நம்பிக்கை நாயகர், கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்களது பாசத்திற்கும், நேசத்திற்கும், அன்பிற்கும், பண்பிற்கும் உரிய மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வணக்கங்களைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வழிநடத்திவரும் சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா, முன்னாள் அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகழ் வாய்ந்த சட்டசபையை சீரோடும், சிறப்போடும் வழிநடத்தும் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், இந்தப் பாரம்பரியமிக்க பேரவையில் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு, மக்கள் பணியாற்ற வந்துள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் அன்பு கலந்த வணக்கங்களைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988 முதல் கழகப் பணியாற்றிவரும் என்னை ஒன்றியக் குழு உறுப்பினராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும்,

2014–ல் சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2021–ல் ஆரணி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றிபெறச் செய்த எங்கள் அன்பு அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். ஆரணி சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகளுக்கும், வாக்காளர்களுக்கும், தொண்டர்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த ஒருசில முக்கியக் கோரிக்கைகளை இங்கே பேசிவிட்டு, மீதமுள்ள கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுக்கிறேன். அவற்றை நான் பேசியதாகப் பதிவிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கித் தருமாறு கோருகிறேன்.

ஆரணி–ஆற்காடு இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றித் தரக் கோருகிறேன். ஆரணி முல்லன்றபுரம் சாலையில் இடையில் உள்ள வெட்டியான் தொழுவம் ஏரிக்கரை ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தரக் கோருகிறேன். ஆதனூர், தச்சூர், மேல்நகர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தரக் கோருகிறேன். ஆரியபாடி, வண்ணங்குளம் மற்றும் பனையூர் ஊராட்சிகளில் உள்ள ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தரக் கோருகிறேன். ஆரணி ஊராட்சி ஒன்றியம், ஆரியப்பாடி ஊராட்சி, துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், ஒன்னுபுரம் ஊராட்சியிலிருந்து புதுப்பாளையம் ஊராட்சி வரை நாகநதி ஆற்றின் குறுக்கே ஒரு தரைப் பாலம் அல்லது மேம்பாலம் அமைத்துத் தரக் கோருகிறேன். ஆரணி நகரில் உள்ள அரசு மருத்துவமனையைத்

தரமுயர்த்தித் தருமாறும், ஆரணி நகருக்குப் புறவழிச் சாலை அமைத்துத் தருமாறும், ஆரணி கிராமிய காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து கூடுதலாக ஒரு புதிய காவல் நிலையத்தை அமைத்துத் தருமாறும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கடந்த பத்தாண்டுகளாக இந்தத் துறை இருந்ததாகத் தெரியவில்லை; இந்தத் துறை செயல்பட்டதா என்ற குற்றச்சாட்டை வைத்துள்ளார்கள். எனவே, துறை சார்ந்த அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்சிக்கு எளியவனாய், கடுஞ்சொற்கள் பேசாதவனாய். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு சொல்கிறீர்களா! நன்றி.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: சாமானியனாக இருந்த நான், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் காலத்தில் இந்து சமய அறநிலையத் துறை இறைவனின் பணி என்பதால், எந்தவித விளம்பரமும் இன்றி அமைச்சராகச் செயல்பட்ட துறையில், தற்போது இருப்பவர்கள் தம்மை முன்னிலைப்படுத்திக்கொள்வதைக் காட்டிலும், ஆண்டவனை முன்னிலைப்படுத்திச் செயல்பட வேண்டுமென்று இச்சபையில் கோரிக்கை விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குக் கடந்த முறை கும்பாபிஷேகம் நடைபெற்றபோது, ஆன்மிக விதிகளுக்கும், மரபுகளுக்கும் மாறாக விழா நடைபெற்றதாக ஆன்மிகவாதிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். நிறைய பேர் கருவறைக்குள் சென்றது, கோயில் புனிதம் பாதிக்கப்பட்டதாகவும் மக்கள் மனநிலை உள்ளது. இவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டிய பொறுப்பு அறநிலையத் துறைக்கு உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2023 ஏப்ரல் 19] [திரு. சேவூர் S. இராமச்சந்திரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில், சுற்றுலாப் பயணிகளின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லதோர் அறிவுரையை வழங்கினார். திருக்கோயில்களை முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாகத் தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்கிறார்கள். தெய்வத்தை முன்னிலைப்படுத்தி, தெய்வத்திற்கான அனைத்து ஆராதனைகளையும் அனைத்து பூஜைகளையும் செய்கின்றபோது, அதற்குக் காரணமாக இருக்கின்ற ஆட்சி எந்த ஆட்சி, அந்த ஆட்சியின் மாண்புமிகு முதல்வராக இருப்பவர் யாரோ, அவரை முன்னிலைப்படுத்துவது என்பது தடுக்க முடியாத ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சிக் காலத்தில், தெய்வத்திற்கு செய்ய வேண்டிய திருப்பணியையும் நீங்கள் முன்னிலைப்படுத்தவில்லை; உங்களையும் நீங்கள் முன்னிலைப்படுத்திக்கொள்ளவில்லை. அந்த இந்து சமய அறநிலையத் துறை ** என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களது ஆட்சிக் காலத்தில், (குறுக்கீடுகள்) அவர் சொன்னாரல்லவா! அவர் சொன்னதைத்தான் சொல்கிறேன். அவர்தான் சொன்னார். (குறுக்கீடுகள்) அவர்தானே சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கட்டும். ஒருவர் எழுந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்லி முடிக்கட்டும். ஒருவர் எழுந்து பதில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதற்காக ஏன் மொத்தமாக எழுந்து நிற்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் கருத்து சொல்வதாக இருந்தால் நான் வாய்ப்பளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: அதேபோன்று, பத்தாண்டுகள் அளப்பரிய சாதனைகளைச் செய்ததாகச் சொன்னார். அவர்கள் பத்தாண்டுகளில் ஒட்டுமொத்தமாக அறிவித்த திருப்பணி அறிவிப்புகள் 65. அதில் தேர் கொட்டகை மட்டும் 9. அந்த 9 தேர் கொட்டகைகளும் எந்த மாவட்டத்திற்குத் தெரியுமா? திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மட்டும் 9 தேர் கொட்டகைகளை அறிவித்துக்கொண்டார். (குறுக்கீடுகள்) அந்தத் தேர் கொட்டகைகளும் அறிவிக்கப்பட்ட பிறகு, அந்தப் பணிகளை அவர்களது ஆட்சிக் காலத்திலேயே எடுத்து நிறைவேற்ற முடியாததால், யார் கொண்டுவந்தாலும் தேர் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தற்போது அந்தத் தேர் கொட்டகைகள் பணிகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவர் ஏதாவது விவரம் தேவை என்று பேசினால், அந்த 65 அறிவிப்புகளும் என்னென்ன நிலைகளில் இருக்கின்றன என்பதை விலாவாரியாக எடுத்துக்கூற நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவரே அதைச் சொல்லலாமே! (குறுக்கீடு) ** என்கிற வார்த்தைகளை நீக்கிவிடலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கதிரவன் அவர்கள் பேசும்போது, கருவறைகளெல்லாம் பத்து வருடங்களாக இருட்டடிப்பு செய்யப்பட்டன என்று பேசியதற்குத்தான் அவர் பதில் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சரியாகச் சொல்கிறாரா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) எனவே, அது இரண்டையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 19]

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தெளிவான பதிலைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) திரு. சேவூர் S. இராமச்சந்திரன், அதற்கு எதிர் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சேவூர் S. இராமச்சந்திரன், அதற்கு எதிர் கருத்தைச் சொல்லுங்கள். அவர்கள் சொன்னதற்குப் பதில் இருந்தால் சொல்லுங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய உறுப்பினர் அவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக எந்தப் பணியும் நடைபெறவில்லை; இந்தத் துறை இருந்ததாகவே தெரியவில்லை என்று கூறிய காரணத்தினால், நாங்கள் விளம்பரப்படுத்தாமல், தமிழகத்திலுள்ள அத்தனை திருக்கோயில்களும் புனரமைக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) கும்பாபிஷேகம் செய்யப்பட்டதைத்தான் கூறினேனே தவிர, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் கருவறைக்குள் பக்தர்கள் செல்கிறார்கள் என்று கூறினேனே தவிர, ** என்று சொல்லவில்லை. அதைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள் என்று பணிவுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கன்னியாகுமரி சுற்றுலாத் தலத்திற்குப் பயணிகள் வசதிக்காக மேலும் இரண்டு அதிநவீன படகுகள் 2020 ஆம் ஆண்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தலா ரூ.4 கோடி மதிப்பீட்டில் வாங்கப்பட்டன. இந்த இரண்டு படகுகளையும் மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஓர் அரசினுடைய கடமை திருக்குளங்களைச் சுத்தப்படுத்துவது, திருத்தேர்களைச் செப்பனிடுவது, வருமானம் குறைவாக உள்ள கோயில்களுக்கு வருமானம் அதிகம் ஈட்டக்கூடிய கோயில்களிலிருந்து பணத்தைக் கொடுத்து புனரமைப்பது, சமயநெறியை உருவாக்குவது, கோயில்களின் வெளிப்புறங்களைச் சுத்தப்படுத்துவது போன்ற பணிகளைச் செய்வதுதான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையில் கடந்த சில காலங்களாக அன்றாட அவசிய, அத்தியாவசியப் பணிகளைச் செய்வதைக்கூட அதிகமாக விளம்பரம் செய்துகொள்கிறார்கள் என்று மக்கள் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலங்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் பெற்றுக்கொள்ளுங்கள்; விளம்பரத்திற்குப் பதில் சொல்லட்டும்.

476. அருள்மிகு பூவனநாத சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், கோவில்பட்டி நகர் மற்றும் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

477. அருள்மிகு காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில், கீழமங்கலம், ஒட்டப்பிடாரம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

நாகப்பட்டினம் இணை ஆணையர் மண்டலம்:

478. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், பாலக்காடு, நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

479. அருள்மிகு அபிமுக்தீஸ்வரர் சுவாமி திருக்கோயில், குறிச்சி, நாகப்பட்டினம் மாவட்டம்.

480. அருள்மிகு ஆபத்தோதாரண சுவாமி திருக்கோயில், அம்பல், நாகப்பட்டினம்.

481. அருள்மிகு சீனிவாசப்பெருமாள் சுவாமி திருக்கோயில், புத்தன் கோட்டகம்.

482. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், இனியநல்லூர், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

483. அருள்மிகு மதங்கேஸ்வரர் திருக்கோயில், அடிப்புதுச்சேரி, குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

484. அருள்மிகு காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில், முன்னவல்கோட்டை, வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

485. அருள்மிகு சோமநாத சுவாமி திருக்கோயில், புத்தகரம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

486. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், ஆய்குடி, கூத்தாநல்லூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

487. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், மூங்கில்குடி, நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

488. அருள்மிகு சொக்கலிங்க சுவாமி திருக்கோயில், மேற்கண்ணமங்கலம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

489. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், மணலாகரம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

490. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் சுவாமி திருக்கோயில், இளவரசநல்லூர், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

491. அருள்மிகு கைலாசநாதர் சுவாமி திருக்கோயில், பழையநத்தம், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

492. அருள்மிகு லட்சுமி நாராயணப்பெருமாள் சுவாமி திருக்கோயில், கொத்தமங்கலம், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

[திரு. பி.கே. சேகர்பாபு] [2023 ஏப்ரல் 19

493. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், வேப்பஞ்சேரி, திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

494. அருள்மிகு அன்னபூரணியம்மன் திருக்கோயில், மேட்டுப்பாளையம், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

495. அருள்மிகு சுவேதவனேஸ்வரர் திருக்கோயில், குறிச்சி, மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

496. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், திருவாஞ்சியம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். (உபகோயில் வாஞ்சிநாத சுவாமி திருக்கோயில், திருவாஞ்சியம்)

497. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், மணலாகரம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

498. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், சேங்கனூர், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

499. அருள்மிகு வேதநாரயணப்பெருமாள் திருக்கோயில், வாழ்க்கை, நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

500. அருள்மிகு ஒளிரப்பர் திருக்கோயில், பா. திருமாளம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

501. அருள்மிகு மருதவனேஸ்வரர் திருக்கோயில், பா. திருமாளம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

502. அருள்மிகு விக்னேஸ்வரர் திருக்கோயில், மணவாளம்பேட்டை, நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

503. அருள்மிகு சுக்ரீஸ்வரர் திருக்கோயில், நாலில்ஒன்று, கூத்தாநல்லூர் வட்டம், திருவாருர் மாவட்டம்.

504. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், கீழநெடுங்காட்டாங்குடி, திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

505. அருள்மிகு செல்லமாரியம்மன் திருக்கோயில், அகலங்கண், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

506. அருள்மிகு அருணாச்சலேசுவரர் சுவாமி திருக்கோயில், ஆவராணி, நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

2023 ஏப்ரல் 19] [திரு. பி.கே. சேகர்பாபு]

507. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

508. அருள்மிகு காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில், திருக்கண்ணங்குடி, நாகப்பட்டினம் நகர் மற்றும் மாவட்டம்.

509. அருள்மிகு தர்மபுரீஸ்வர சுவாமி திருக்கோயில், கூத்தூர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

510. அருள்மிகு அனந்தநாராயணப்பெருமாள் திருக்கோயில், ஆவராணி, கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

511. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், பழையனூர், கூத்தாநல்லூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

512. அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், அடியக்கமங்கலம், திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

513. அருள்மிகு சபாநடேஸ்வரர் திருக்கோயில், தெற்கு நானலூர், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

514. அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், கெழுவத்தூர், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

515. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், கீழநாணச்சேரி, குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

516. அருள்மிகு ரஜதகிரீஸ்வரர் திருக்கோயில், வேளாங்கண்ணி, நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

517. அருள்மிகு காமாட்சியம்மன் சுவாமி திருக்கோயில், குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

518. அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில், பேராவூரணி, தஞ்சாவூர் மாவட்டம்.

519. அருள்மிகு செல்வ பிள்ளையார் சுவாமி திருக்கோயில், வங்க நகர், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

520. அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், கூத்தம்பாடி, திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

521. அருள்மிகு வீற்றிருந்த பெருமாள் சுவாமி திருக்கோயில், வண்டலூர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

522. அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயில், ஒரத்தூர், நாகப்பட்டினம்.

523. அருள்மிகு ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயில், ரெங்கநாதபுரம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

524. அருள்மிகு அழகுநாச்சியம்மன் திருக்கோயில், நேரு நகர், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

525. அருள்மிகு ஜம்புநாத சுவாமி திருக்கோயில், ரெங்கநாதபுரம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

526. அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில், போலகம், நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

527. அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில், பயத்தஞ்சேரி, மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

528. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், சூரசம்ஹார மண்டபம் சன்னதி, மாப்பிள்ளைக்குப்பம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

529. அருள்மிகு தில்லை மாரியம்மன் திருக்கோயில், ஆலங்குடி, வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

530. அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயில், சின்னகூத்தாநல்லூர், கூத்தாநல்லூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

531. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், பாலக்குறிச்சி, கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம்.

532. அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், சாட்டியக்குடி, கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

533. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், சிக்கவலம், நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

534. அருள்மிகு பாண்டுரங்கநாத சுவாமி திருக்கோயில், திருப்பாத்தளி, திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

2023 ஏப்ரல் 19] [திரு. பி.கே. சேகர்பாபு]

535. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், ஆவராணி, நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

536. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், பனங்காடி, மணலூர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

537. அருள்மிகு ருத்ரமுடையார் திருக்கோயில், தேவூர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் (உபகோயில்).

538. அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், தன்னிலாப்பாடி, கீழ்வேளூர் வட்டம்.

539. அருள்மிகு ஆயியாரம்மன் திருக்கோயில், திருவிடவாசல், கூத்தாநல்லூர், திருவாரூர்.

540. அருள்மிகு பாம்பாளம்மன் மற்றும் சௌரிராஜன் கட்டளை திருக்கோயில்கள், திருவாதிரைமங்கலம்.

541. அருள்மிகு பிடாரி குளுந்தாளம்மன் திருக்கோயில், தப்பளாம்புலியூர்.

542. அருள்மிகு கரியமாணிக்கப்பெருமாள் திருக்கோயில், அலிவலம்.

543. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், அடியக்கமங்கலம்.

544. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி, திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

545. அருள்மிகு திருக்குள விநாயகர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் (உபகோயில்).

546. அருள்மிகு ஆனைமேல் அழகர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் (உபகோயில்).

547. அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் (உபகோயில்).

548. அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் (உபகோயில்).

549. அருள்மிகு வினைதீர்த்த விநாயகர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் (உபகோயில்).

550. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி, திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

551. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், மேலநத்தம், திருவாரூர்.

552. அருள்மிகு வெங்கடாஜலபதி பெருமாள், சேரன்குளம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

553. அருள்மிகு ஸ்ரீவேணுகோபால சுவாமி திருக்கோயில், ஆலத்தூர், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

554. அருள்மிகு லெட்சுமி நாராயணப்பெருமாள் திருக்கோயில் (உபகோயில்), இராஜகோபால சுவாமி திருக்கோயில், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

555. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், மகிழஞ்சேரி, நாகப்பட்டினம்.

556. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், மகிழஞ்சேரி, நாகப்பட்டினம்.

557. அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில், மகிழஞ்சேரி, நன்னிலம் வட்டம், நாகப்பட்டினம்.

558. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மகிழஞ்சேரி, நாகப்பட்டினம்.

559. அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயில், நல்லமாங்குடி, நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

560. அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் திருக்கோயில், தலைஞாயிறு, வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

561. அருள்மிகு முத்தாளபரமேஸ்வரி என்கிற பிடாரியம்மன் திருக்கோயில், தேவூர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

562. அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில், ஆய்மூர், திருக்குவளை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

563. அருள்மிகு நாராயணேஸ்வரர் திருக்கோயில், நாரணமங்கலம், குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

564. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், புதுப்பத்தூர், திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

565. அருள்மிகு ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயில், திருவிடைவாசல், கூத்தாநல்லூர், திருவாரூர் மாவட்டம்.

566. அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயில், ஓவர்சேரி, மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

567. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கோட்டூர்தோட்டம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

568. அருள்மிகு விக்னேஸ்வரர் திருக்கோயில், குன்னியூர், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

569. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், செதலபதி, நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

570. அருள்மிகு கல்லுளிமாரியம்மன் திருக்கோயில், வென்னவாசல், நீடாமங்கலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

571. அருள்மிகு நொடிநைனார் திருக்கோயில், கீழ வீதி, திருவாரூர் நகர் வட்டம் மற்றும் மாவட்டம்.

572. அருள்மிகு காயரோகண சுவாமி மற்றும் நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம் நகர் வட்டம் மற்றும் மாவட்டம் (முக்தி மண்டபம்).

573. அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயில், நாகூர், நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

574. அருள்மிகு அம்பலவானேஸ்வர சுவாமி திருக்கோயில், ஓரடியம்புலம், தலைஞாயிறு, நாகப்பட்டினம் மாவட்டம்.

575. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், நாரணமங்கலம், குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

576. அருள்மிகு சேப்பெருமாள் அய்யனார் மற்றும் விஸ்வநாதர் கோயில், சிக்கவலம், கீழ்வேளூர், நாகப்பட்டினம் (உபகோயில்).

577. அருள்மிகு ஸ்ரீதேவி சமேத சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், வடவேர், குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

578. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், அச்சுதமங்கலம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

579. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், அச்சுதமங்கலம், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

580. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், திருப்பணிபேட்டை, கூத்தாநல்லூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

581. அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில், திருப்பணிபேட்டை, கூத்தாநல்லூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

582. அருள்மிகு திருமூலநாத சுவாமி திருக்கோயில், வண்டலூர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

583. அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், கொத்தவாசல், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

மதுரை இணை ஆணையர் மண்டலம்:

584. அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில், தேனி ரோடு, நாகமலைபுதுக்கோட்டை, மதுரை.

585. அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில், சுடுதண்ணீர், வாய்க்கால், சிம்மக்கல், மதுரை.

586. அருள்மிகு திரௌபதியம்மன் (துவராள்பதியம்மன்) திருக்கோயில், சொக்கலிங்கபுரம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

587. அருள்மிகு அம்மச்சியார் திருக்கோயில், இராஜாக்கூர் வடக்கு வட்டம், மதுரை.

588. அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், திருவண்ணாமலை, (இணைப்பு) அருள்மிகு நாச்சியார் ஆண்டாள் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்.

2023 ஏப்ரல் 19] [திரு. பி.கே. சேகர்பாபு]

589. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், திருமோகூர் ரோடு, திருவாதவூர், மதுரை.

590. அருள்மிகு கஞ்சனமாலையம்மன் திருக்கோயில், ஏழுகடல் தெரு, சிம்மக்கல், மதுரை.

591. அருள்மிகு பரிபூரண விநாயகர் திருக்கோயில், சுடுதண்ணீர், வாய்க்கால், சிம்மக்கல், மதுரை.

592. அருள்மிகு காளியம்மன் மற்றும் முனியாண்டி சுவாமி திருக்கோயில், வில்லாபுரம், மதுரை மாவட்டம்.

593. அருள்மிகு மகாதேவசாமி திருக்கோயில், ராஜாமில் ரோடு, மதுரை நகர், மதுரை தெற்கு வட்டம், மதுரை மாவட்டம்.

594. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், சிவகாசி நகர் மற்றும் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

595. அருள்மிகு நாச்சியார் ஆண்டாள் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் உபகோயில் அருள்மிகு கிருஷ்ணன் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்.

596. அருள்மிகு நவநீதகிருஷ்ணன் சக்கரத்தாழ்வார் திருக்கோயில், சின்ன சொக்கிகுளம், மதுரை.

597. அருள்மிகு விநாயகர் வீரபத்திர சுவாமி திருக்கோயில், சமயநல்லூர், மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம்.

598. அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில், திருமலைராயர் படித்துறை, சிம்மக்கல், மதுரை.

599. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், நேதாஜி ரோடு, மதுரை.

600. அருள்மிகு அனுமார் திருக்கோயில், தத்தனேரி, மதுரை மாவட்டம்.

601. அருள்மிகு மகா கணபதி திருக்கோயில், சுண்ணாம்பூர், மதுரை.

602. அருள்மிகு ஏழுகடல் விநாயகர் திருக்கோயில், ஏழுகடல் தெரு, சிம்மக்கல், மதுரை.

[திரு. பி.கே. சேகர்பாபு] [2023 ஏப்ரல் 19

603. அருள்மிகு வெங்கலமூர்த்தி அய்யனார் திருக்கோயில், அனுப்பானடி, மதுரை.

604. அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், பழங்காநத்தம், மதுரை தெற்கு வட்டம்.

605. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில், மதுரை வடக்கு வட்டம் மற்றும் மாவட்டம்.

606. அருள்மிகு தேரடி கருப்பணசாமி திருக்கோயில், கீழமாசி வீதி, மதுரை.

607. அருள்மிகு மீனாட்சி சுந்தர் விநாயகர் திருக்கோயில், திருமங்கலம்.

608. அருள்மிகு தாளை கருப்பு அய்யனார் திருக்கோயில், செங்குளம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

609. அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், சிவகாசி நகர் மற்றும் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

610. அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோயில், எதிர்கோட்டை, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம்.

611. அருள்மிகு சென்னகேசவப்பெருமாள் திருக்கோயில், சின்னவாடி, கே. புதூர், விருதுநகர் வட்டம் மற்றும் மாவட்டம்.

612. அருள்மிகு கொன்றையாண்டி அய்யனார் திருக்கோயில், மறவன்குளம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

613. அருள்மிகு விநாயகர் திருக்கோயில், இலுப்பையூர், திருச்சுழி வட்டம்.

614. அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், கல்லூரணி, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம்.

615. அருள்மிகு கருப்பசாமி திருக்கோயில், சிவகாசி நகர் மற்றும் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

616. அருள்மிகு ஹரிச்சக்கரமூர்த்தி பெருமாள் கோயில், வீரசோழன், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம்.

617. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், குருவித்துறை, வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்.

மயிலாடுதுறை இணை ஆணையர் மண்டலம்:

618. அருள்மிகு வரதராஜப்பெருமாள் சுவாமி திருக்கோயில், மணலூர்.

619. அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில், சோழபுரம், கும்பகோணம் வட்டம்.

620. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், பிள்ளையாம்பேட்டை, கும்பகோணம் வட்டம்.

621. அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில், பிள்ளையாம்பேட்டை, கும்பகோணம் வட்டம்.

622. அருள்மிகு தாய்மூகாம்பிகை திருக்கோயில், கும்பகோணம் நகர் மற்றும் வட்டம்.

623. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், குத்தாலம் நகர் மற்றும் வட்டம், மயிலாடுதுறை.

624. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், முளப்பாக்கம், மயிலாடுதுறை வட்டம்.

625. அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில், பழையகூடலூர், மயிலாடுதுறை வட்டம்.

626. அருள்மிகு உப்புசந்தை மாரியம்மன் திருக்கோயில், கீழையூர், தரங்கம்பாடி வட்டம்.

627. அருள்மிகு வடபத்ரகாளியம்மன் திருக்கோயில், சன்னாபுரம், கும்பகோணம் வட்டம்.

628. அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில், கும்பகோணம் வட்டம்.

629. அருள்மிகு சந்தான மாரியம்மன் திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம் வட்டம்.

விழுப்புரம் இணை ஆணையர் மண்டலம்:

630. அருள்மிகு இராமநாதீஸ்வரர் திருக்கோயில், அன்னியூர், விழுப்புரம் மாவட்டம்.

631. அருள்மிகு அபிராமேஸ்வரர் திருக்கோயில், வி. மாத்தூர், விழுப்புரம் மாவட்டம்.

632. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், பு. கிள்ளனூர், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

633. அருள்மிகு சித்தகிரி முருகன் திருக்கோயில், குன்றின்மேல், அவலூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம்.

634. அருள்மிகு மஞ்சனீஸ்வரர் திருக்கோயில், கீழ்ப்புத்துப்பட்டு, விழுப்புரம் மாவட்டம்.

635. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், அன்னியூர், விழுப்புரம் மாவட்டம்.

636. அருள்மிகு திருமுகிலீஸ்வர் திருக்கோயில், உப்புவேலூர், விழுப்புரம் மாவட்டம்.

637. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், உப்புவேலூர், விழுப்புரம் மாவட்டம்.

638. அருள்மிகு ராஜநாராயணப்பெருமாள் திருக்கோயில், வி. அகரம், விழுப்புரம் மாவட்டம்.

639. அருள்மிகு வேணுகோபாலசுவாமி திருக்கோயில், வடவாம்பாளையம், விழுப்புரம் மாவட்டம்.

640. அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், நாகலூர், விழுப்புரம் மாவட்டம்.

641. அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், குரூர், விழுப்புரம் மாவட்டம்.

642. அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், அம்மையகரம், விழுப்புரம் மாவட்டம்.

643. அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில், சின்னசேலம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

644. அருள்மிகு குருசாமி அம்மாள் மடம் மற்றும் வள்ளலார் திருக்கோயில், கண்டமங்கலம், விழுப்புரம் மாவட்டம்.

645. அருள்மிகு பிடாரி திருக்கோயில், மஞ்சப்புத்தூர், விழுப்புரம் மாவட்டம்.

646. அருள்மிகு யாக்யவல்கிய சுவாமி திருக்கோயில், சொர்ணாவூர், விழுப்புரம் மாவட்டம்.

647. அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், சின்னபாபு சமுத்திரம், விழுப்புரம் மாவட்டம்.

648. அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், விழுப்புரம் நகர் மற்றும் மாவட்டம்.

649. அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில், சின்னபாபு சமுத்திரம், விழுப்புரம் மாவட்டம்.

650. அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில், சின்னபாபு சமுத்திரம், விழுப்புரம் மாவட்டம்.

651. அருள்மிகு ஆதிகேசவபெருமாள் திருக்கோயில், திருமுண்டீஸ்வரம், விழுப்புரம் மாவட்டம்.

652. அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில், கொணலூர், விழுப்புரம் மாவட்டம்.

653. அருள்மிகு வரதராஜப்பெருமாள் மற்றும் அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், வீரணாமூர், விழுப்புரம் மாவட்டம்.

654. அருள்மிகு சிந்தாலம்மன் திருக்கோயில், மதுரப்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்.

655. அருள்மிகு அரிஹரபுத்திர அய்யனார் திருக்கோயில், தென்னமாதேவி, விழுப்புரம் மாவட்டம்.

656. அருள்மிகு வீரபத்ர சுவாமி திருக்கோயில், மதுரப்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்.

657. அருள்மிகு லட்சுமி நாராயணப்பெருமாள் திருக்கோயில், கொடுக்கூர், விழுப்புரம் மாவட்டம்.

658. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், மதுரப்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்.

659. அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில், மதுரப்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்.

660. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சங்கீதமங்கலம், விழுப்புரம் மாவட்டம்.

661. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், சங்கீதமங்கலம், விழுப்புரம் மாவட்டம்.

662. அருள்மிகு லட்சுமி நாராயணப்பெருமாள் திருக்கோயில், காணைக்குப்பம், விழுப்புரம் மாவட்டம்.

663. அருள்மிகு தாண்டவனேஸ்வரர் மற்றும் லட்சுமி நாராயணசாமி திருக்கோயில்கள், மூக்கனூர், விழுப்புரம் மாவட்டம்.

664. அருள்மிகு அய்யனாரப்பன் திருக்கோயில், நாகலூர், விழுப்புரம் மாவட்டம்.

665. அருள்மிகு முருகன் திருக்கோயில், இந்திலி, விழுப்புரம் மாவட்டம்.

666. அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், மாத்தூர், விழுப்புரம் மாவட்டம்.

667. அருள்மிகு லட்சுமி நாராயணப்பெருமாள் திருக்கோயில், தியாகராஜபுரம், விழுப்புரம் மாவட்டம்.

668. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சின்னபாபு சமுத்திரம், விழுப்புரம் மாவட்டம்.

669. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம்.

670. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், தென்செட்டியந்தல், விழுப்புரம் மாவட்டம்.

671. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், பால்ராம்பட்டு, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

672. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், சின்னசேலம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

673. அருள்மிகு வெள்ளை விநாயகர் மற்றும் பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில்கள், திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம்.

674. அருள்மிகு வளமுற்ற விநாயகர் திருக்கோயில், மொடையூர், விழுப்புரம் மாவட்டம்.

675. அருள்மிகு லட்சுமி நாராயணப்பெருமாள் திருக்கோயில், ப. வில்லியனூர், விழுப்புரம் மாவட்டம்.

676. அருள்மிகு இராமநாதீஸ்வரர் திருக்கோயில், மடவிளாகம், விழுப்புரம் மாவட்டம்.

677. அருள்மிகு சீனுவாசப்பெருமாள் திருக்கோயில், க. அலம்பலம், விழுப்புரம் மாவட்டம்.

678. அருள்மிகு தர்மராஜா திரௌபதியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

வேலூர் இணை ஆணையர் மண்டலம்:

679. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், சிறுவாபுரி, பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

680. அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில், சிறுவாபுரி, பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

681. அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில், ஒடுகத்தூர், அணைக்கட்டு வட்டம், வேலூர் மாவட்டம்.

682. அருள்மிகு நாகவள்ளியம்மன் திருக்கோயில், காமராஜர் தெரு, ஆவடி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

683. அருள்மிகு சென்னகேசவப்பெருமாள் திருக்கோயில், மண்குன்றுமலை, திருப்பத்தூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

684. அருள்மிகு திருக்கச்சிநம்பிகள் மற்றும் வரதராஜப்பெருமாள் திருக்கோயில்கள், பூந்தமல்லி நகர் மற்றும் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

685. அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில், சேண்பாக்கம், வேலூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

686. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், வேலப்பாடி, வேலூர் நகர் மற்றும் மாவட்டம்.

687. அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், திருப்பத்தூர் நகர் மற்றும் மாவட்டம்.

688. அருள்மிகு சாந்தீஸ்வரர் திருக்கோயில், மேல்மணம்பேடு, பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

689. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், சென்னீர்குப்பம், பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

690. அருள்மிகு புத்துமாரியம்மன் திருக்கோயில், புத்துகோயில், நாட்றாம்பள்ளி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம்.

691. அருள்மிகு வேம்பாத்தம்மன் திருக்கோயில், வசந்தநடை, அணைக்கட்டு வட்டம், வேலூர் மாவட்டம்.

692. அருள்மிகு சாமுண்டீஸ்வரியம்மன் திருக்கோயில், எஸ்.கே. ரோடு, ஆம்பூர் நகர், திருப்பத்தூர் மாவட்டம்.

693. அருள்மிகு சுந்தரவீர ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், திருப்பத்தூர் நகர் மற்றும் மாவட்டம்.

694. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், கே.வி. குப்பம் வட்டம், வேலூர் மாவட்டம்.

695. அருள்மிகு சுந்தர விநாயகர் திருக்கோயில், கோவிந்தம்பாடி, வெட்டுவாணம், அணைக்கட்டு வட்டம், வேலூர் மாவட்டம்.

696. அருள்மிகு பசுபதி பொன்னியம்மன் திருக்கோயில், பசுமாத்தூர், கே.வி. குப்பம் வட்டம், வேலூர் மாவட்டம்.

697. அருள்மிகு வினைதீர்த்த விநாயகர் திருக்கோயில், ஆவடி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

698. அருள்மிகு கோமலீஸ்வரர் திருக்கோயில், கோளப்பன்சேரி, பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

இணைப்பு-14

அறிவிப்பு எண் 195 தொடர்பான பட்டியல்

புதிய அன்னதானக்கூடம் கட்டும் பணி

1. அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை நகர், வட்டம் மற்றும் மாவட்டம்.

2. அருள்மிகு மார்க்கசகாயேஸ்வரர் திருக்கோயில், மூவலூர், மயிலாடுதுறை நகர் மற்றும் வட்டம்.

3. அருள்மிகு நாகேஸ்வரமுடையார் திருக்கோயில், சீர்காழி நகர் மற்றும் வட்டம்.

4. அருள்மிகு சக்திவனேஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருசக்திமுற்றம், கும்பகோணம் வட்டம்.

5. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், ஒழுகைமங்கலம், தரங்கம்பாடி வட்டம், மயிலாடுதுறை மாவட்டம்.

6. அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில், சேண்பாக்கம், வேலூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

7. அருள்மிகு உத்தமர் திருக்கோயில், பிட்சாண்டார் கோவில், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி.

8. அருள்மிகு பெருமாள் திருக்கோயில், சாத்தான்குளம், தச்சன்மொழி, தூத்துக்குடி மாவட்டம்.

9. பிறவி மருந்தீஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருத்துறைப்பூண்டி நகர் மற்றும் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

10. அருள்மிகு கொண்டத்துகாளியம்மன் திருக்கோயில், பெருமாநல்லூர், அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம்.

11. அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், முத்தணம்பாளையம், திருப்பூர் மாவட்டம்.

12. அருள்மிகு மாரியம்மன் விநாயகர் திருக்கோயில், சூலக்கல், கிணத்துக்கடவு வட்டம், கோவை மாவட்டம்.

13. அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில், வேளச்சேரி, சென்னை–41.

14. அருள்மிகு தம்பிக்கலை ஐயன் சுவாமி திருக்கோயில், ஈரோடு.

15. அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், காளிப்பட்டி, ராசிபுரம், நாமக்கல்.

16. அருள்மிகு காயாரோகணேசுவரர் சுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம் நகர், வட்டம் மற்றும் மாவட்டம்.

17. அருள்மிகு ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயில், திருநீர்மலை, சென்னை.

18. அருள்மிகு கண்ணாயிரமூர்த்தி அய்யனார் திருக்கோயில், சொரகுடி, திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

19. அருள்மிகு குறுங்காலீஸ்வரர் மற்றும் வைகுண்டவாசப்பெருமாள் திருக்கோயில், கோயம்பேடு, சென்னை.

20. அருள்மிகு பாஷ்யகார ஆதிசென்னகேசவப்பெருமாள் திருக்கோயில், மேற்கு மாம்பலம், சென்னை–33.

21. அருள்மிகு மத்தியபுரீஸ்வரர் சுவாமி திருக்கோயில், பரக்கலக்கோட்டை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

22. அருள்மிகு காளகத்தீஸ்வரர் திருக்கோயில், திண்டுக்கல் நகர், வட்டம் மற்றும் மாவட்டம்.

23. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், நத்தம் நகர் மற்றும் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

24. அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில், பழூர்.

25. அருள்மிகு லட்சுமி நரசிம்மப்பெருமாள் திருக்கோயில், தாளக்கரை, அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம்.

26. அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2.

27. அருள்மிகு உத்தண்ட சௌந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், குள்ளபுரம், பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.

28. அருள்மிகு கதலி நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், அம்மைநாயக்கனூர், நிலக்கோட்டை வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

29. அருள்மிகு மாரியம்மன் வகையறா திருக்கோயில்கள், மணப்பாறை நகர், திருச்சி மாவட்டம்.

30. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கருவலூர், அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம்.

31. அருள்மிகு சௌந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், வடமதுரை, திண்டுக்கல் வட்டம் மற்றும் மாவட்டம்.

32. அருள்மிகு கந்தபெருமான் திருக்கோயில், கொங்கணகிரி, திருப்பூர் மாவட்டம்.

33. அருள்மிகு கதலி நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், ஜம்புலிபுத்தூர், ஆண்டிப்பட்டி வட்டம், தேனி மாவட்டம்.

34. அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபகோயில்.

இணைப்பு-15

அறிவிப்பு எண் 227 தொடர்பான பட்டியல்

வணிக வளாகம் கட்டும் பணி

1. அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், விழுப்புரம் நகர்.

2. அருள்மிகு பெரியபாளையத்தம்மன் திருக்கோயில், ராயப்பேட்டை, சென்னை-14.

3. அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை நகர் மற்றும் வட்டம்.

4. அருள்மிகு நந்தவன அறக்கட்டளை திருக்கோயில், திருவண்ணாமலை நகர் மற்றும் வட்டம்.

5. பொம்மபுர ஆதீனம் மடம், மயிலம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

6. அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், அனந்தபுரம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

7. அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயில், திருவெண்ணெய்நல்லூர் நகர் மற்றும் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

8. அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், எலவனாசூர்கோட்டை, உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

9. அருள்மிகு நேத்தாரகேஸ்வரர் திருக்கோயில், பனையபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

10. அருள்மிகு ராமானுஜ முதலியார் அறக்கட்டளை, திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

11. அருள்மிகு தம்பிக்கலை ஐயன் சுவாமி திருக்கோயில், தங்கமேடு, பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம்.

12. அருள்மிகு திரெளபதியம்மன் திருக்கோயில், சின்னசேலம் நகர் மற்றும் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

13. அருள்மிகு அகத்தீஸ்வரர் மற்றும் வேள்வீஸ்வரர் திருக்கோயில், ஆற்காடு சாலை, வளசரவாக்கம், சென்னை–87.

14. அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், நாச்சியார்கோவில், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

15. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், எ.குமாரமங்கலம், உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தி என்பது தனிச் சொத்து, ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து என்றார் பெரியார். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது திருமூலர் வழியில் அண்ணா சொன்ன ஆன்மிகம். எனக்கு கடவுளைப் பிடிக்குமா என்பது பிரச்சினையல்ல; கடவுளுக்கு என்னைப் பிடிக்கிறதா? அவருக்குப் பிடிக்கிற மாதிரி நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதே கலைஞர் காட்டிய ஆன்மிக வழி. கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் வழியில் ஒருபோதும் இந்த அரசு குறுக்கே நிற்காது என்று உறுதி அளித்தார் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆன்மிக நால்வரான சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், சுந்தரர் போல திராவிட நால்வராக இருக்கும் பெரியார், அண்ணா, நம்முடைய கலைஞர், தளபதியார் வழியில் நடப்பதால் இந்த அரசு இராஜகோபுரமாய் உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு துறைகளிலேயே அதிகமாகக் குறி வைக்கப்படுவதும், கவனிக்கப்படுவதுமாக இருப்பது இந்து சமய

2023 ஏப்ரல் 19] [திரு. பி.கே. சேகர்பாபு]

அறநிலையத் துறைதான். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்து சமய அறநிலையத் துறையைக் கலைப்போம் என்று ஒரு சிலர் கதறிக் கொண்டிருக்கின்றார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் வயலுக்கு வேலி எதற்கு என்று காளை மாடு கவலைப்படுவதுபோல் உள்ளது. நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஆன்மிகத்தில் சமூக நீதி காக்கும் இந்து சமய அறநிலையத் துறையை எங்கள் முதல்வர் இருக்கும் வரை யாராலும் எப்பொழுதும் எதுவும் செய்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பசுக்களை வைத்து பகை வளர்க்கும் அரசல்ல; பசுக்களுக்குக் காப்பகங்கள் கட்டி பக்தர்களுக்குக் காமதேனுவாகக் கொடுத்து கொண்டே இருக்கும் அரசு எங்கள் முதல்வர் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இது இருப்பதை இடித்து விட்டு வேறொன்றை கட்டுகின்ற அரசல்ல; இடிந்ததைப் புதுப்பித்துக் கட்டும் அரசு, இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பெரியது எது என்று ஔவையிடம் கேட்டபோது, அண்டத்திலேயே மிகப் பெரியது ஆண்டவன் குடியிருக்கும் தொண்டர் தம் உள்ளம் என்றார். அந்தக் கடைக்கோடி பக்தகோடிகளின் உள்ளம் குளிர, பல கோடிகளை அள்ளித்தந்து மக்களுக்குத் தொண்டாற்றும் அரசு, நம் அரசு என்பதை இந்த நேரத்தில் பதிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடவர் கோன் காஞ்சியிலே கட்டிய கோயிலுக்குச் செல்லாமல் மனதிற்குள்ளே கோயில் கட்டிய பூசலார் நாயனாருக்கு முன்பே இறைவன் காட்சி தந்தார் என்பார்கள். அதுபோல, செல்வந்தர்களின் இல்லங்களைத் தேடிச் செல்லாமல் சாமானியர்களின் உள்ளங்களை நாடிச் செல்லும் சரித்திரத் தலைவர் எங்கள் முதல்வர் என்பதை இந்த நேரத்தில் பதிவிடுகிறேன்.

உதயம் என்றால் விடியல் என்று பொருள். தொட்ட செயலில் எல்லாம் வெற்றிகண்டு பட்டாசு வெடிக்கும் திராவிட தீபாவளியே!, தொட்ட செயலில் எல்லாம் வெற்றிகண்டு பட்டாசு வெடிக்கும் திராவிட தீபாவளியே! ஒன்றியப் பிரதமரை தனி ஒருவராய் சந்தித்து Khelo India-*வை தமிழ்நாட்டில் நடத்திடக் கோரியவரே!, ஒன்றியப் பிரதமரை தனி ஒருவராய் சந்தித்து* Khelo India-*வை தமிழ்நாட்டில் நடத்திடக் கோரியவரே!,*

Odisha–வுடனான புரிந்துணர்வால் அம்மாநிலத் திறனையும், நம் மாநிலத்திற்குக் கொண்டு வருபவரே! உரிமைகளை உரிமையோடு கேட்டுப் பெறும் உரிமைப் போராளியே! எப்போதும் சுறுசுறுப்பாகச் சுற்றி வரும் திருவல்லிக்கேணி தேனீயே! "அறிவின் செயல் மகிழ்வோடு இருப்பதல்ல, பிறர் வலிகளை நீக்குவது" என்றார் Aristotle, "அறிவின் செயல் மகிழ்வோடு இருப்பதல்ல, பிறர் வலிகளை நீக்குவது" என்றார் Aristotle. மகிழ்வான வாழ்வு வேண்டி வருகின்ற பக்தர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து மனநிறைவைத் தந்தவர், மகத்தான முதல்வர், நம் முதல்வர். அடுத்தவனை என்ன செய்யலாம் என சிந்திக்கும் அரசல்ல இது; அடுத்தவனை என்ன செய்யலாம் என சிந்திக்கும் அரசல்ல இது. அடுத்தடுத்து மக்களுக்கு என்ன செய்யலாம் என யோசிக்கும் அரசு, இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திக்கெட்டும் புகழ் பரப்பும் திராவிட முதல்வரை உளம் நெகிழ்ந்து வணங்குகிறேன். எனக்கு இந்தப் பெரும் வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறிக்கொள்கிறேன். இந்தத் துறையின்மீது கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களுக்கு முடிந்த அளவிற்கு என் உரையிலே தெளிவான பதிலைத் தந்திருக்கின்றேன். மேலும், ஒரு சில வெட்டுத் தீர்மானங்கள் விடுபட்டிருந்தால், அவற்றிற்குண்டான ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

பிற்பகல் 3–35

எனக்கு இந்த உரையைத் தயாரிப்பதற்கு முழு உதவியாக இருந்த தலைமைச் செயலாளர் உட்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் இருக்கின்ற அதிகாரிகள் உட்பட, துறை சார்ந்த செயலாளர் அன்பிற்கினிய டாக்டர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப., துறையினுடைய ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., உடல்நிலை சரியில்லை என்றாலும் இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கை எவ்வாறு சென்று கொண்டிருக்கிறது என்று அவ்வப்போது பேசிக் கொண்டிருந்த அன்பிற்கினிய திரு. கே.வி. முரளிதரன், இ.ஆ.ப. உட்பட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். நன்றி, நன்றி மட்டும் சொல்லி விடுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமும், அருள்மிகு காந்தியம்மன் உடனுறை நெல்லையப்பர் திருக்கோயிலுக்கு வெள்ளித் தேர் கேட்டிருந்தேன். அதற்காக 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் ஒதுக்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், இன்னொரு மனுவும் கொடுத்திருந்தேன்* (குறுக்கீடு) *ராஜவள்ளிபுரத்திலுள்ள ஈஸ்வரன் கோயிலுக்கு ஒரு தேர் கேட்டிருந்தேன்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.* (குறுக்கீடு) *சொல்லியாகி விட்டது. நீங்கள் சொல்லியாகி விட்டது. வெள்ளித் தேர், 3 கோடியே 95 இலட்சம் ரூபாய். ஒரு நன்றி, ஒரே ஒரு நன்றியை மட்டும் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *ராஜவள்ளிபுரம் திருக்கோயிலுக்கு இன்னொரு தேர் அமைத்துத் தரும்படி தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், சொல்லுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே பேரவையில் கேள்வி நேரத்தில் பாபநாசம் தொகுதியிலுள்ள, முருகனின் அறுபடை வீடுகளில் நான்காம் படை வீடான சுவாமிமலை திருக்கோயிலுக்கு. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: Lift வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். 3.5 கோடி ரூபாய் அளவிலே சுவாமிநாத சுவாமி கோயிலுக்கு lift வசதி செய்து தரப்படும் என்ற அறிவிப்பிற்கும், அதேபோல, அங்கே வணிக வளாகம் அமைப்பதற்கு 1.5 கோடி ரூபாய் ஒதுக்கித் தரப்படும் என்ற அறிவிப்பிற்கும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பாபநாசம் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள், ஒரே ஒரு second.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்கு 2 கோடியே 63 இலட்ச ரூபாய் செலவில் திருத்தேர் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், திருச்செங்கோடு மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கம் வீரர், திராவிட இயக்க முன்னோடி, ஒடுக்கப்பட்டு, தடுக்கப்பட்டு, நடுக்கம் கொண்டிருந்த நலிந்தோரை நெஞ்சு நிமிர வைத்த வைக்கம் போராட்டத்தின் சரித்திரச் சான்றோன் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சீர்மிகு சிற்பி, மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற முத்திரை கருத்தை முழங்கியவர், கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற முப்பெரும் முனைப்புகளை ஒற்றைத் தாரக மந்திரமாக கற்றுத் தந்தவரான பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன்.

அண்ணா வழியில் அயராது உழைப்போம் என மூச்சுமுட்ட உழைத்த முத்தமிழ் வித்தகரின் முனைப்புகள், திராவிடப் பூங்காவிற்கு உரமாகவும், தரமிகு திறனாகவும் உள்ளன. அத்தகைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுக்கும் இடம் நோக்கி வணங்குகிறேன்.

அறிவாற்றல்மிகு சாதனையாளர், இனமானப் பேராசான், தன்மானச் சிங்கம், நிலைமாறா நெறியாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதுபெரும் தோழர், பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சி, தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திட்டவர், முரசொலி நாளிதழின் உழைப்பு, அவரை முரசொலி மாறன் என்றே வடிவமைத்தது; அத்தகு கொள்கைக் குன்றான முரசொலி மாறன் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

பிற்பகல் 3–40

“உழைப்பு, உழைப்பு, உழைப்பு. அதுதான் தளபதியாரின் தனிப்பெரும் சிறப்பு” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப் பெற்றவர், உலகத் தமிழ் மக்களின் பாதுகாவலர், திராவிட மாடலை வளர்த்தெடுத்த சீலர், சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் ஆகிய முப்பெரும் தாரக மந்திரங்களின் ஒப்பற்ற தலைவர் தளபதியார். வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் போராடினார். அதன் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று தளபதியார் திராவிட இனத்திற்கே பெருமை சேர்த்தார். நிகழ் யுக தமிழினத் தலைவராக நெஞ்சு நிமிர்த்தியவர்; திராவிட மாடலை வடிவமைத்து, தமிழ்நாட்டு மக்களைத் தலை நிமிர வைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

இளைஞர்களின் எழுச்சி நாயகர்; கழக இளைஞரணிச் செயலாளர்; தமிழ்நாட்டு மக்களின் இல்லத்து செல்லப் பிள்ளை; விளையாட்டு வீரர்களுடன் களமாடும் செயல்சிட்டு சீர்மைமிகு சின்னவர்; பார்புகழும் மன்னவர்; மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், சிறப்புமிகு சின்னவரை வணங்குகிறேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அனைத்து கூட்டணிக் கட்சிகளின் சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற

[திரு. கா. ராமசந்திரன்] [2023 ஏப்ரல் 19

உறுப்பினர்களையும் வணங்கி, இம்மாமன்றத்தில் சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கை மீதான எனது பதிலுரையை வழங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா என்பது வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத் துறையாகும். சுற்றுலாப் பயணிகளின் பணப் புழக்கம் காரணமாக உள்ளூர் மக்களின் பொருளாதாரம் பொலிவடையும். வேலைவாய்ப்புகளைப் பெருக்கி; வறுமையினை ஒழித்து; வருவாயை அதிகரித்து; அன்னிய செலாவணியை ஈட்டி; பொருளாதாரத்தைப் பெருக்கிட சுற்றுலா உதவுகிறது. ஐ.நா. சபையின் ஆய்வின்படி, பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் என 3 அம்சங்களை சுற்றுலா பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா என்ற சொல்லில் பல பிரிவுகள் உண்டு. தமிழ்நாட்டை ஆண்ட பண்டைய மன்னர்கள் கட்டிய கோட்டைகள், அரண்மனைகள், கோயில்கள், நினைவுத் தலங்கள் எனச் சுற்றிப் பார்க்க வந்தால் அது பாரம்பரியம் மற்றும் ஆன்மிக சுற்றுலா.

சென்னை முதல் கன்னியாகுமரி வரை 1,076 கி.மீ. நீண்ட நெடிய கடற்கரை புவியமைப்பைக் கொண்டது தமிழ்நாடு. இயற்கை எழில் கொட்டிக் கிடக்கின்ற அப்பகுதிகளைச் சுற்றிப் பார்க்க வந்தால் அது கடற்கரை சுற்றுலா.

மலையேற்றம், கடல் நீச்சல், நீர் விளையாட்டு, ரங்க ராட்டினம் என பயணப்பட்டால் அது சாகசச் சுற்றுலா.

இயற்கை வழங்கிய வனப்புமிகு வனங்களும், மலை வாசஸ்தலங்களும், சரணாலயங்களும், தேசிய பூங்காக்களும் எனச் சுற்றிப் பார்க்க வருவதே சுற்றுச்சூழல் மற்றும் வனச் சுற்றுலா.

வெளிநாட்டு நோயாளிகள் மருத்துவச் சிகிச்சைக்காக சிறப்பும், சிக்கனமும் கருதி தமிழ்நாட்டிற்கு வருகின்றனர். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதே மருத்துவச் சுற்றுலா.

உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனைகளின் பொருட்டு வணிகர்களின் அன்றாட பயணங்களே வணிகச் சுற்றுலா.

2023 ஏப்ரல் 19] [திரு. கா. ராமசந்திரன்]

பரபரப்பான நகர மக்கள் நகர்ந்து சென்று மலை சார்ந்த கிராமச் சூழல்களிலும் பண்ணை இல்லங்களில் பொழுதை கழிப்பதும், கிராமிய மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் சுற்றுலா.

கேரவன்களில் பயணித்தபடி, சுற்றுலாத் தலங்களில் சுகம் காணும் திட்டங்களே கேரவன் சுற்றுலா.

ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, ரேக்ளா ரேஸ், பொங்கல் திருவிழாக்கள், கிராம தேவதைகளுக்கான விழாக்கள் ஆகியவற்றைக் கண்டுகளிக்க வந்தால் அது பண்பாட்டுச் சுற்றுலா.

மண்ணுக்கேற்ற மணமும், மண்பானைச் சோறும் என பண்டைய தமிழர் உணவு பழக்க வழக்கங்களில் திளைக்க விரும்பினால் அது உணவுச் சுற்றுலா.

பள்ளிப் பாடங்களில் பவனி வருகின்ற பல்வேறு நிலைப்பாடுகளை நேரில் பார்ப்பதற்காக மாணவர்களை அழைத்துச் சென்று சுற்றிக்காட்டுவது என்ற நிலை பாடத் திட்டங்களில் உண்டு. இதுவே கல்விச் சுற்றுலா.

கலை, கலாச்சாரம், இயற்கை எழில் சூழ்ந்த மலை, நீர், நிலப்பரப்புகள் கொண்டதாகவும் இருப்பதால், தமிழ்நாடு நாட்டிலேயே முதன்மை சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. தமிழ்நாடு மற்றும் நாட்டின் முக்கிய நகரங்களில் 38 சுற்றுலா அலுவலகங்கள், 22 சுற்றுலாத் தகவல் மையங்கள் உள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளின் பயணிகளே பெருமளவில் நம் நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். யுனெஸ்கோவின் உலக பாரம்பரியச் சின்னமான மாமல்லபுர நினைவுச் சின்னங்கள் 1 இலட்சத்து 44 ஆயிரத்து 984 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டு, வருகையில் முதலிடம் வகிக்கின்றன.

தாஜ்மஹால் 38 ஆயிரத்து 922 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டு, இரண்டாம் இடத்தில் உள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் 10 பிரபலமான பாரம்பரிய நினைவுச் சின்னங்களின் பட்டியலில், திருமயம் கோட்டை அருங்காட்சியகம்; வட்டக்கோட்டை; செஞ்சிக் கோட்டை; சித்தன்னவாசல், குடைவரை ஜெயின்

கோயில்; சாலுவன்குப்பம் புலிக்குகைக் கோயில் உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

பிற்பகல் 3–45

2021 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 11 கோடியே 65 இலட்சத்து 66 ஆயிரம். இவற்றில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்து 30 ஆயிரம். 2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 21 கோடியே 89 இலட்சத்து 11 ஆயிரம். இவற்றில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4 இலட்சத்து 7 ஆயிரம். 2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2022 ஆம் ஆண்டில் 10 கோடியே 23 இலட்சத்து 45 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் கூடுதலாக தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர்.

தமிழ்நாடு மாநில திட்டக் குழு "2030–க்குள் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் கொள்கைகளை வகுத்து செயல்படுத்துதல்" என்ற இலக்கினை சுற்றுலாத் துறைக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கினை எய்திட, உலகப் புகழ் பெற்ற "இந்திய நாட்டிய விழா" ஆண்டுதோறும் மாமல்லபுரத்தில் டிசம்பர் முதல் ஜனவரி வரை நடத்தப்படுகிறது. இந்திய நாட்டிய விழாவைக் காண ஆண்டுதோறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரத்திற்கு வருகை புரிகின்றனர். 50–க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்நாட்டின் முக்கிய கோடை வாசஸ்தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில் கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன. சர்வதேச பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்பதால், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை தமிழ்நாட்டில் கணிசமாக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2022–2023 ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகளைப் பெற்றுள்ளது:

1. சிறந்த கடற்கரைகள் மற்றும் கடற்கரைத் தலத்திற்கான விருது, இந்தியா டுடே குழுமத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தின் Lemur கடற்கரைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. "ஆன்மிக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருது தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு Travel + Leisure India and South Asia 11-வது பதிப்பு விழாவில் கிடைத்துள்ளது.

3. SKOCH உச்சி மாநாட்டில் 18-1-2023-ல் "வெள்ளி" விருது கிடைத்துள்ளது.

4. இந்தியாவில் பிரமிக்க வைக்கும் மலைக் காட்சிகளுக்கான சிறந்த இடத்திற்கான பிரிவில் நீலகிரி மாவட்டம், குன்னூர் "வெள்ளி" விருதினை, புதுடெல்லியில் Outlook Traveller Awards-2022 விழாவில் பெற்றது.

5. பசுமை சுற்றுலாத் தலங்களுக்கான சிறந்த 100 நிலைத்தன்மை கதைகளுக்கான விருதுக்காக 2022-ல் கிரேக்கத்தின் Athens-ல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

6. "இந்தியாவின் சிறந்த பாரம்பரிய தலத்திற்கான" விருது தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஜெர்மன் தலைநகர் Berlin-ல் Pacific Area Travel Writers Association (PATWA) ஆல் வழங்கப்பட்டது.

7. "இந்தியாவின் சிறந்த சுற்றுலா அமைச்சர் 2023" என்ற விருது தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சராகிய எனக்கு Pacific Area Travel Writers Association ஆல் (PATWA) ஜெர்மன் தலைநகர் Berlin-ல் நடைபெற்ற சர்வதேச பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது, TravelXP Channels மற்றும் TravelXP சமூக ஊடகங்கள்மூலம் தமிழ்நாட்டின் அழகையும் கலாச்சாரத்தையும் 15 மொழிகளில் உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களுக்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் விளம்பர உத்திகள் 2022-2023 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவியது.

சுற்றுலாத் துறையானது, 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள்/இடங்களைக் கண்டறிந்து மேம்படுத்த தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2022–2023 ஆம் ஆண்டில், அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், பூண்டி அணைக்கட்டு, ஆண்டிபாளையம் ஏரிப் பகுதி, கொளவாய் ஏரிப் பகுதி, ஒகேனக்கல் அருவிப் பகுதி, முட்டம் கடற்கரை, திற்பரப்பு அருவி, பூம்புகார், குற்றாலம், பிச்சாவரம், முத்துப்பேட்டை Mangrove காடுகள், முத்துக்குடா பகுதி, வத்தல்மலை ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த மொத்தமாக ரூ.97.0068 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மதுரை, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அரங்கம், சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஆன்மிக மற்றும் கலாச்சார சுற்றுச்சூழல் பூங்கா, இராமேஸ்வரம் மற்றும் கொடைக்கானலில் helicopter இறங்குதளம் ஆகியவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.46.9593 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் helicopter இறங்குதளம் அமைப்பது பற்றிக் கேட்டிருந்தார்கள். அதை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 3–50

தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தரமான சேவைகளை வழங்குவதற்கு, "தமிழ்நாடு சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், சுற்றுலாப் பேருந்து இயக்குபவர்களுக்கான திட்டம் 2023" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய சுற்றுலாக் கொள்கை தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்படும்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு முதன்முதலாகத் தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் 2022–ல் வழங்கப்பட்டன. இதில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள், விமான நிறுவனங்கள், விடுதிகள், உணவகங்கள், வழிகாட்டிகள் போன்ற பல்வேறு சுற்றுலா பங்களிப்பாளர்களை உள்ளடக்கிய 17 வெவ்வேறு பிரிவுகளில் 55 விருதுகள் வழங்கப்பட்டன.

ஆடம்பர வசதிகளுடன்கூடிய Cordelia Cruises என்ற சொகுசுக் கப்பல் சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை துறைமுகத்திலிருந்து துவக்கி

வைக்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஒரு முக்கிய மைல் கல்லாக அமைகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 30–6–1971 அன்று நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தங்குமிட வசதிகள், பல்வேறு தொகுப்பு சுற்றுலாக்கள், படகுக் குழாம்கள், பொருட்காட்சி மற்றும் திருவிழாக்கள் போன்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியச் செயல்பாடுகளாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 28 ஓட்டல்களை நேரடியாக நிர்வகித்து வருகிறது. ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம் தீவுத்திடல், கடற்கரை ஓய்வு வளாகம், மாமல்லபுரம், ஓட்டல் தமிழ்நாடு மதுரை–2, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருச்சி, ராணிப்பேட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு 2022–2023 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு தரமுயர்த்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்களில் உணவு விற்பனையை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படியே “அமுதகம்” என்ற வணிகப் பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது 35 உணவகங்கள் “அமுதகம்” என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

வண்டலூர், கோவளம், ஏற்காடு மற்றும் வாலாங்குளம் ஏரி ஆகிய சுற்றுலாத் தலங்களில் “குயிக் பைட்ஸ்” என்ற வணிகப் பெயரில் துரித உணவகங்கள்மூலம் மார்ச் 2023 வரை ரூ.56.59 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளன.

ஆலயம் என்ற பெயரில் இராமேஸ்வரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பக்தர்கள் தங்கும் மூன்று விடுதிகளை 50:50 என்ற இலாபப் பகிர்வு அடிப்படையில் இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து நடத்தி வருகின்றது. 2022–2023 ஆம் ஆண்டில் ஆலய விடுதிகள்மூலம் ரூ.291.54 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம், வாலாங்குளம் ஆகிய 9 இடங்களில் சாகசப் படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன்கூடிய படகு குழாம் இயக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டில், முட்டுக்காடு படகு குழாம்மூலம் ரூ.485.82 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. முதலியார்குப்பம் படகு குழாம்மூலம் ரூ.117.20 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. உதகமண்டலம் படகு குழாம்மூலம் ரூ.1375.95 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பைக்காரா படகு குழாம்மூலம் ரூ.390.00 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கொடைக்கானல் படகு குழாம்மூலம் ரூ.452.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. ஏற்காடு படகு குழாம்மூலம் ரூ.364.17 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பிச்சாவரம் படகு குழாம்மூலம் ரூ.466.87 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய படகு இல்லம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24–8–2022 அன்று கோயம்புத்தூர் வாலாங்குளம் ஏரியில் திறக்கப்பட்டது. 2022–2023 ஆம் ஆண்டு இதன்மூலம் ரூ.29.85 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தொட்டபெட்டா, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலை வாசஸ்தலங்களில் தொலைநோக்கி இல்லங்கள் இயங்கி வருகின்றன. 2022–2023 ஆம் ஆண்டு இவைமூலம் ரூ.299.55 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–55

டென்மார்க் சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையின்மூலம், நீலக்கொடி சான்றிதழ் பெற்ற கோவளம் கடற்கரை, தமிழ்நாட்டின் முதல் மற்றும் இந்தியாவில் 9–வது நீலக்கொடி கடற்கரை என்ற பெருமையைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் நீலக்கொடி கடற்கரையின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை மேற்கொண்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டு கோவளம் நீலக்கொடி கடற்கரைமூலம் ரூ.178.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சொந்தமாக 14 சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவற்றின் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருநாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரகச் சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு-மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை மிகவும் புகழ்பெற்றவை.

பொதுமக்களின் அமோக வரவேற்பினைப் பெற்ற சென்னை-திருப்பதி ஒருநாள் தினசரி சுற்றுலாவை இணையவழி முன்பதிவுமூலம் பதிவு செய்யப்பட்டு, திருமலை திருப்பதி தேவஸ்தான கணினியுடன் இணைக்கப்பட்டு, விரைவாக தரிசனம் முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. (குறுக்கீடு) இதோ முடித்துவிடுகிறேன்.

தற்போது தினசரி 1,000 விரைவு தரிசன சீட்டுகளைப் பெற்று சென்னை, திருச்சி, கோவை, மதுரை, சேலம், ஓசூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலிருந்து தினசரி இச்சுற்றுலாவை இயக்கி வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 33 திருக்கோயில்களிலும் உடனடி சிறப்பு தரிசனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டில் ஆடி மாதம் அம்மன் மற்றும் புரட்டாசி மாதம் பெருமாள் சிறப்பு தரிசனச் சுற்றுலா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையில் தேவாலயச் சுற்றுலா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஜைன சமய தொடர்புடைய இடங்கள் அதிகம் உள்ளன. இவற்றைப் பிரபலப்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதக்கும் உணவகம், உதகை படகு இல்லத்தில் சாகச விளையாட்டுகள், மாமல்லபுரம் மரகதப் பூங்காவில் 'ஒளிரும் பூங்கா' ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை ஆகிய சுற்றுலாத் தலங்களில் கம்பி வட ஊர்தி நிறுவுவதற்கும், சென்னையில் 'எங்கும் ஏறலாம்–எங்கும் இறங்கலாம்' என்ற பேருந்து

வசதியினை அறிமுகப்படுத்துவதற்கும், தமிழ்நாட்டிலுள்ள ஐந்து திருக்கோயில்களை laser ஒளிக்கற்றைமூலம் மிளிரும் வகையில் அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகள் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை தீவுத்திடலில் 1974 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் மார்ச் வரை 70 நாட்களுக்கு இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. அந்தக் காலகட்டத்தில் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தவாறு இத்திட்டத்தை வடிவமைத்து வழங்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 47–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தொடங்கி மார்ச் 23 ஆம் தேதி வரை ‘சுற்றுலா மறுசிந்தனை’ என்ற கருப்பொருளை மையமாக வைத்து வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை உள்பட 51 அரசுத் துறைகளின் அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இதன்மூலம் அரசின் பல்வேறு திட்டங்களைப் பற்றி பொதுமக்கள் பார்த்து தெரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது. இந்தாண்டு பொருட்காட்சியை சுமார் 15 இலட்சம் பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகுக்குத் தெரியப்படுத்தும்விதமாக, கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து, “நம்ம ஊரு திருவிழா” எனும் வருடாந்திர கலைவிழா சென்னையில் நடத்தப்பட்டது. இந்த திருவிழாவில் 40–க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலை வடிவங்களில் 500–க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வு சென்னையில் தீவுத்திடல் உள்பட 18 இடங்களில் நடைபெற்றது. இந்த விழாவில் பார்வையாளர்கள் நமது தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உணவு அரங்குகள் அமைத்து சிறப்பாக நடத்தியது.

பிற்பகல் 4-00

அவர்கள் கையொப்பமிட வேண்டுமென்று ஒரு காலவரையறை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்கிற வேண்டுகோளை முன்வைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மாநில சுயாட்சி உரிமைகளுக்காக இந்தியாவிற்கே வழிகாட்டிய ஒரு மாபெரும் வரலாற்று இயக்கம். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி வழியில் இந்த மன்றம், இந்த அவை கூடி நிறைவேற்றுகிற சட்ட மசோதாவிற்கு **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) அடுத்த subject குறித்து பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்துகளைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த subject-க்கு வாருங்கள். (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: நான் சொல்கிறேன். நீங்கள் நீக்கிவிடுங்கள். பதிவு செய்ய வேண்டியது என்னுடைய கடமை. எனவே, நாம் ** என்ற வேண்டுகோளை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் தொடர்பான செலவு பற்றி சில உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். என்னிடம் 5 தீர்மானங்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கைகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. அந்த மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மட்டுமே பேசவிருக்கிறார்கள். எனவே, இது இறுதி மானியக் கோரிக்கை என்பதால், ஒரு விளக்கத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. S.S. பாலாஜி,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், டாக்டர் நா. எழிலன், முனைவர் T.R.B. ராஜா மற்றும் திரு. தி. வேல்முருகன் ஆகிய 5 பேரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, நான் 3 விளக்கங்களை மட்டும் கூறி, எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயல்பாட்டைத் தொடாமல், நிதி மேலாண்மைப் பற்றி மட்டும் நான் பேச விரும்புகிறேன்.

முதலில், மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அந்தத் தலைப்பை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கடந்த 10 ஆம் தேதி முதலில் அவர்தான் தொடங்கி வைத்தார். 'அட்சய பாத்ரா', அதாவது, காலை உணவுத் திட்டத்தின் செலவைப் பற்றி அவர்தான் தொடங்கி வைத்தார். அதற்குப் பின்னர் அதுகுறித்த கோப்புகளையெல்லாம் எடுத்துப் பார்த்தோம். அதில் சில அசாதாரண நிகழ்வுகள், அதாவது, அன்றைக்கு இருந்த ஆளுநரின் செயலாளர் அரசுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் சொல்கிறார், ஆளுநர்களுடைய ஒரு conference நடந்து அந்தக் கூட்டத்தில், சில ஆளுநர்கள் சேர்ந்த ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு ஆளுநர் மாளிகை செயல்பாடுகளைச் சிறப்பிப்பதற்கு ஓர் அறிக்கையைத் தயாரித்து, அது ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஒரு பகுதியை நாங்கள் உங்களுக்கு அனுப்புகிறோம். அதை நீங்கள் உடனடியாகச் செயல்படுத்தி, செயல்படுத்திவிட்டீர்கள் என்று எங்களுக்கு ஆதாரத்தைக் கொடுத்தால், நாங்கள் மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று ஒரு கடிதம்.

இரவு 7-05

என்னைப் பொறுத்தவரை, அதை முறையில்லாத ஒரு கடிதமாகத்தான் நான் கருதுவேன். மிரட்டும் வகையிலான கடிதமாகத்தான் இருந்திருக்கிறது. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், Governor being the head of the State, the discretionary grant placed at his disposal seems to be very meagre. Moreover, the amount being provided under this head is different from State to State. It was decided to recommend that the amount there should be uniform in the grant and should be minimum of Rs.5 crore. இதெல்லாம் எந்த அளவுக்கு

ஜனநாயக நாட்டில் செல்லும் என்பது எனக்குப் புரியவில்லை. அதாவது, பெரிய பொறுப்பு, அதனால் ரூ.5 கோடி வரைக்கும் எந்தக் காரணமும் கேட்காமல் செலவு செய்வது என்பதெல்லாம் என்னைப் பொறுத்தவரைக்கும் ஜனநாயகத்திற்கு உட்பட்டதில்லை. அந்தக் கடிதம் பெற்ற பிறகு, அன்றைக்கு இருந்த ஆட்சியில் இருந்த நிதித் துறைச் செயலர் ஒரு கோப்பை உருவாக்குகிறார். அதில், இந்த மாதிரி கடிதம் வந்திருக்கிறது. அவர்கள் கேட்கிறார்கள் அடுத்த ஆண்டிலிருந்து ரூ.5 கோடியாகவும், இந்த ஆண்டு ஏற்கெனவே நிலுவையில் இருப்பதனால் இதுவரைக்கும் ஒதுக்கிய ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய், வெறும் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயை, இந்த மாதம்–ஜனவரி மாதம், ரூ.2 கோடியாக உயர்த்த வேண்டும் என்று. ஆண்டு எப்போது முடிகிறது என்றால் மார்ச் 31 ஆம் தேதி முடிகிறது. அப்படியென்றால், திடீரென்று ஒரு நாள் ரூ.2 கோடியாக உயர்த்தினால், செலவு செய்வதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது என்றுகூட தெரியவில்லை.

ஏனென்றால் ஏற்கெனவே கூறப்பட்டிருக்கிறது. Finance Code-ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. Discretionary grants are petty grants and charitable donations to institutions of a public or quasi-public character and individuals in need. இதுதான் மொத்த scope. இதுதான், வரையறை. இதில் எப்படி ரூ.2 கோடி இரண்டு மாதங்களில் செலவு செய்ய முடியும்? அன்றைக்கு இருந்த நிதித் துறைச் செயலர் ஓர் அசாதாரண முடிவை எடுக்கிறார். கோப்பு எதையும் உருவாக்காமலும், எந்த அமைச்சரின் கையெழுத்துக்கு அனுப்பாமலும்—சாதாரணமாக ஜனநாயக நாட்டில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மை இருக்கிற அரசாங்கம் அமைச்சர்களை நியமித்து, கோப்பில் அவருடைய policy approval வாங்கித்தான், இதையெல்லாம் செயல்படுத்த வேண்டும். அது எதுவும் நடக்காமல்—நிதித் துறைச் செயலரே ஒரு முடிவு எடுக்கிறார்; இந்த ஆண்டு முடிகிற நேரத்தில் இருப்பதனால், ரூ.2 கோடிக்கு பதிலாக ரூ.50 இலட்சம் மட்டும் கொடுத்துவிடலாம்; அடுத்த ஆண்டிலிருந்து ரூ.5 கோடி கொடுக்கலாம். ஆனால், தெளிவாக இந்த வரையறையை அமல்படுத்த வேண்டும். Discretionary grants are only for petty grants and charitable donations to institutions of a public-இதையெல்லாம் திருப்பித் திருப்பி அவரே கோப்பில் எழுதி போட்டிருக்கிறார். ஆக, எந்த அமைச்சரின் கையெழுத்துக்கும் போகாமல், எந்த ஒரு கொள்கை முடிவும் எடுக்காமல், நிதித் துறைச் செயலாளரே

அந்த நிதியை, ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக ஒரே நாளில் ஒரு கோப்பில் அதிகரித்து, அடுத்தாண்டு budget-ல் ரூ.5 கோடியாக, 60 நாட்களுக்குள், அறிவித்திருக்கிறார்கள். என்ன ஆகிறது என்றால் எதிர்பார்க்கிற மாதிரி அந்த நிதியை இரண்டு மாதங்களில் பயன்படுத்த முடியவில்லை. ஒன்று, வருட கடைசி அன்றைக்கு, மார்ச் 31 ஆம் தேதியன்று ரூபாய் 49 இலட்சத்து 81 ஆயிரம் அளவிற்கு, அரசுக் கணக்கிலிருந்து எடுத்து, ஆளுநர் மாளிகையினுடைய வீட்டுக் கணக்கில், அதாவது நமது கண்ணுக்குத் தெரியாத கணக்கில் மாற்றப்படுகிறது.

அடுத்த ஆண்டு வருகிறது; இதேமாதிரி ரூ.5 கோடி என்று வரும்போது, மொத்தம் ரூ.5 கோடியும், நம்மிடம் நேராக சொன்னது 'அட்சய பாத்ரா' என்று description-ல் இருக்கிறதே தவிர, போகிற கணக்கு வீட்டுக் கணக்கு. எனவே, இந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது நமக்கு சரியான பாதையில் வரவில்லை என்று நான் கூறுவேன். ஏனென்றால், எந்த ஓர் அமைச்சராலும் கையெழுத்துப் போடாத கோப்பு இது. இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை நாங்கள் செயல்படுத்தினோம் என்று அன்றைக்குச் சொன்னார். எந்த அமைச்சருக்கும் பங்கே இல்லாத ஒரு திட்டத்தை, அரசினுடைய கொள்கை அடிப்படையில் செயல்படுத்திய திட்டம் என்று கூறவே முடியாது. இது முழுவதுமாக அன்றைக்கு இருந்த ஆளுநருடைய discretionary grant. ஆனால், எங்களுக்கு அது நிஜமாகவே யாரிடம் சென்று சேர்ந்தது என்பது தெரியவில்லை. எனவே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு வகிக்கின்ற பொதுத் துறையில் இருக்கிற கோப்புகளை எல்லாம் எடுத்துப் பார்த்தால், அன்றைக்கு இருந்த ஆளுநரின் செயலர் பொறுப்பைவிட்டு, அடுத்த மாநிலத்திற்குச் செல்கிற நேரத்தில் கையெழுத்து இல்லாத, seal இல்லாத ஒரு account-ஐ இங்கே கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார், அதில் பார்த்தால், அவர் சொல்கிறார், முதலில் ரூபாய் 1 கோடியே 99 இலட்சம், அடுத்து ரூ.2 கோடி, அதற்குப் பிறகு ரூ.50 இலட்சம் என்று மொத்தம் ரூ.4 கோடியே 49 இலட்சம் அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர் கூறுகிறாரே தவிர, எங்களுக்கு அதற்கான ஆதாரம் இல்லை. அடுத்ததாக, இன்று வரையிலும் என்னிடம் இருக்கின்ற தகவல் என்னவென்றால், கோவிட் வந்த காரணத்தால் அந்தக் கட்டடத்தை கட்டி முடித்து, இன்று வரையிலும் அந்தக் கட்டடத்தைத் திறந்து, அதில்

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 19

ஒருநாள்கூட உணவு தயாரிக்கப்படவில்லை என்பதாகும்; எந்த school–க்கும் கொடுத்ததில்லை.

இரவு 7–10

இதற்கு மாறாக, நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நடந்த சில விஷயங்களைப் பற்றி நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 2021–ல் புதிய ஆளுநர் அவர்கள் வந்த பிறகு, கூடுதல் நிதிக்கோ, கூடுதல் செலவினத்திற்கோ கோரிக்கை அடிப்படையில் சுமார் 17 கோப்புகள் உருவாக்கப்பட்டு, பொதுத் துறை, நிதித் துறை என சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சர்களுடைய கையெழுத்து பெறப்பட்டு, அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. நாம் அவர்களுக்கு எவ்வளவு மரியாதை செய்கிறோம்; எவ்வளவு உதவி செய்கிறோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அவர்களுடைய செயல்பாடுகள் பற்றி அல்ல; நிதி மேலாண்மையைப் பற்றி நான் சொல்கிறேன்.

ஒரு கோப்பில், ஒரு புது Mercedes-Benz உட்பட 5 புது வாகனங்களை வாங்க ரூ.2 கோடியே 10 இலட்சம் வழங்கிவிட்டோம்; இன்னொரு கோப்பில், சுதந்திர தின விழாவைக் கொண்டாடுவதற்கு ரூ.25 இலட்சம் வழங்கிவிட்டோம்; மற்றொரு கோப்பில், சுற்றுப்பயணம் செய்வதற்கு ரூ.15 இலட்சம் வழங்கிவிட்டோம்; பிறிதொரு கோப்பில், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதவியேற்பு விழாவிற்கு ரூ.10 இலட்சம் வழங்கிவிட்டோம்; இன்னுமொரு கோப்பில், கிறிஸ்துமஸ் விழாவிற்கு ரூ.25 இலட்சம் வழங்கிவிட்டோம்; மற்றுமொரு கோப்பில், குடியரசு தினம் கொண்டாடுவதற்கு ரூ.20 இலட்சம் வழங்கிவிட்டோம்; பிறிதொரு கோப்பில் புது furniture வாங்குவதற்கு பணம் வழங்கிவிட்டோம்; கூடுதல் OSD–க்கு மாதத்திற்கு ரூ.70,000/– வழங்கிவிட்டோம்; கூடுதல் உணவு தயாரிப்பாளர் மற்றும் உதவியாளருக்கு மாதத்திற்கு ரூ.20,000/– வழங்கிவிட்டோம்; பல நீதிபதிகள் பதவியேற்பு விழாவிற்கு ரூ.4 இலட்சம், ரூ.5 இலட்சம் என அனைத்து நிதிகளையும் வழங்கிவிட்டோம். மாண்புமிகு ஆளுநர் அவர்கள், எந்த வகையிலும் நம்மை குறை சொல்கிற அளவிற்கு நடக்கவில்லை.

இன்னமும் நான் கூற வேண்டியது என்னவெனில், 2017–ல் நடைபெற்ற அத்தகைய கூட்டத்தின் அடிப்படையில், ஏதோ ஒரு கடிதம் நமக்கு 2018–ல் வரப்பெற்றதால், நாம்

2023 ஏப்ரல் 19] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

உயர்த்தியிருக்கிறோம்; வேறு எந்த மாநிலமும் இங்கே உயர்த்தியதுபோல் உயர்த்தியது இல்லை. 2017–2018–ல் நடைபெற்ற கூட்டம், மகாராஷ்டிராவில் இருந்த 15 இலட்சம் ரூபாய் 15 இலட்சம் ரூபாயாகவே இருந்தது; அதற்குப் பிறகுதான் உயர்த்தினார்கள். உத்தரப்பிரதேசத்தில் இருந்த 30 இலட்சம் ரூபாய் 30 இலட்சம் ரூபாயாகவே இருந்து, பிறகு 50 இலட்சம் ரூபாயாக உயர்ந்து, தற்போது 1 கோடி ரூபாயாகியிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் இருந்த 15 இலட்சம் ரூபாய், தற்போது வரை 25 இலட்சம் ரூபாய்க்குள்ளாக, 15 இலட்சம் ரூபாய், 17 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய், 24 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய், 24 இலட்சம் ரூபாய் என்று 7, 8 வருடங்களாக அப்படியே இருக்கிறது. பா.ஜ.க. ஆளும் கர்நாடகாவில் 35 இலட்சம் ரூபாய், 45 இலட்சம் ரூபாய், 60 இலட்சம் ரூபாய் என்று இருந்ததை குறைத்து, 30 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய் என ஆகியிருக்கிறது. அப்படியெனில், வேறு எந்த மாநிலமும், கேரளாவிலோ, மகாராஷ்டிராவிலோ, உத்தரப்பிரதேசத்திலோ, மேற்கு வங்காளத்திலோ, கர்நாடகாவிலோ இந்த அளவிற்கு அந்த discretionary fund–ம் கொடுத்ததில்லை; கூடுதல் நிதியும் கொடுத்ததில்லை.

இதையெல்லாம் தாண்டி, இந்தத் தகவல் என்னுடைய கவனத்திற்கு வந்தவுடன், நான் அதிகாரிகளிடம் பேசி, Finance Code–க்கு மீறி எந்த bill–ம் செலவு செய்யக் கூடாது என்றேன். அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; அது அவர்களுடைய உரிமை. ஆனால், நம்முடைய கடமை Finance Code–க்கு ஏற்ப, audit–ல் நமக்கு பிரச்சினை ஏற்படாத வகையில் செயல்பட வேண்டும்; அது நமது நிதித் துறையின் கடமையாகும். அந்த அடிப்படையில் ஏற்கெனவே 2 திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தற்போது 3–வது திருத்தத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

ஒன்று, எந்தத் துறையும் இந்த வருடம் செலவு செய்யாத பணத்தை அடுத்த வருடம் பட்ஜெட்டில் கேட்கக் கூடாது. ஏனென்றால், அவர்களுக்கு அந்த செலவுத்திறன் இல்லை என்பது normal budgeting rule ஆகும். அந்த அடிப்படையில், கடந்த ஆண்டு இருந்த 5 கோடி ரூபாயை இந்த ஆண்டு 3 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். ஏனென்றால், கடந்த ஆண்டு,

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 19

நாங்கள் பட்ஜெட் போடுகிற வரையிலும், சுமார் ரூ.2 கோடியே 67 இலட்சம்தான் செலவு செய்திருக்கிறார்கள்; அதற்கேற்ப நடவடிக்கை எடுத்தோம். இறுதி நாட்களில் நகர்த்துவது என்பது மிக மிகத் தவறு; அதுமட்டுமல்லாமல், தனி account-க்கு மாற்றுவதும் தவறு. நான் முதலில் discretionary grant பற்றி மட்டும் கூறினேன்; எல்லா தலைப்புகளிலும் மாற்றப்பட்டுள்ளன. அதற்கும் நான் தகவல்களைக் கொடுக்கிறேன்; வீட்டு செலவுக் கணக்கிலும்கூட 12 கோடி ரூபாயில் கிட்டடத்தட்ட ரூ.6 கோடி டிசம்பர் 20 வரையிலும் அவர்கள் கணக்கில் மாற்றப்பட்டுள்ளது; நமக்கு audit–க்கு கணக்கு இல்லை. Secretariat-ல் 7 கோடி ரூபாயில் 5½ கோடி ரூபாய், அதாவது 80 சதவிகிதத் தொகை மாற்றப்பட்டுள்ளது; நம்மிடம் தகவல் இல்லை. புது IFHRMS system வந்த பிறகு, 9 கோடி ரூபாயில், household கணக்கில், அதாவது சம்பளமில்லாத கணக்கில் 6 கோடியே 65 இலட்சம் ரூபாய், அதாவது 75 சதவிகிதத் தொகை மாற்றப்பட்டது; நம்மிடம் கணக்கு இல்லை.

இரவு 7–15

அதேபோல், இந்த discretionary grant-ஐ சேர்த்து 12 கோடி ரூபாயில் Secretariat-ல் 5 கோடி 78 இலட்சம் ரூபாய்க்கு நமக்கு கணக்கு இல்லை. எனவே, இதையெல்லாம் தடுக்கும் வகையில் இந்த Finance Code-ல் கூடுதலாக ஒரு section இருக்கிறது. Finance code என்ன சொல்கிறதென்றால், 'such grants shall be subject to audit', அதாவது தணிக்கைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பது இந்த code–லிருக்கிற விதிமுறை. அந்த விதிமுறையில் நான், கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறைக்கு ஒரு கடிதம் எழுதி, இந்தப் பல கோடி ரூபாயை audit செய்து, CAG நம்மை வந்து audit செய்வதற்கு முன்பாக, உண்மையாகவே இந்த நிதியெல்லாம் எங்கே சென்று சேர்ந்தது என்பதை அறிய வேண்டும். ஏனென்றால், இது நம்முடைய பொறுப்பு. நாம் நிதி மேலாண்மை செய்கிறோம். ஆகையால் முதல் செயல், budget-ஐ முறையாகச் செய்திருக்கிறோம். இரண்டாவது செயல், ஒரு audit-ஐ நான் கூறியிருக்கிறேன். மூன்றாவது செயல், ஒரு கோப்பு நகர்ந்து கொண்டிருக்கிறது. ஓரிரு நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கையெழுத்து பெற்று, நிதி மேலாண்மையை எப்படி Finance code விதிமுறைகளுக்குட்பட்டு செயல்படுத்த வேண்டும்; இந்த மாதிரி தவறுகள் இனிமேல் நடக்கக் கூடாது என்பதற்காக ஒரு training

programme-*க்கும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு புதிய* committee *வைத்து, இவற்றை எல்லா அலுவலர்களுக்கும்* training *கொடுத்து, என்ன விதிமுறை, எப்படி செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்.*

ஏனென்றால், ஜனநாயக நாட்டில் மன்னர் என்று யாரும் கிடையாது. உதாரணத்திற்கு London-*ஐ எடுத்துக்கொண்டால், அந்த நாட்டினுடைய பெயரே* The United Kingdom of Great Britain and Northern Ireland. *அங்கே பாராளுமன்றத்தில் மன்னருக்கு நிதியொதுக்குகிறார்கள். அதற்கு பெயர்* Sovereign Grant. *அதாவது மன்னருக்காக கொடுக்கிற நிதி. அதை மன்னர் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஏனென்றால் அது அந்த மாதிரி நாடு. ஆனால், நம்முடையது* democratic country, *ஜனநாயக நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது ஜனநாயக நாட்டில் எந்த விதிமுறையில் நிதி ஒதுக்கப்படுகிறதோ, அந்த விதிமுறையில் மட்டும்தான் செலவு செய்ய வேண்டும். அதை உறுதிப்படுத்த வேண்டியது நிதித் துறையினுடைய கடமை என்பதனால், நாங்கள் எங்கள் கடமையைச் சரியாகச் செய்வதற்கு பல சிறப்பு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள் இந்த விளக்கத்தைக் கேட்ட மாதிரி தெரியவில்லை. இந்த* subject-*ஐ நாம் ஏற்கெனவே பேசியிருக்கிறோம். நானும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது, அட்சய பாத்ரா திட்டம் என்பது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சொல்லி, அன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அந்த* fund, subject *எல்லாம் உங்கள்* Finance Department *பற்றியது; நீங்கள் கேட்கலாம். அவையெல்லாம் பிரச்சினையில்லை. ஆனால், அன்றைக்கு இந்தத் திட்டத்தை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் துவக்கி வைத்தார்கள்; உணவு வழங்கப்பட்டது.* Secretary, Commissioner, *நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன். எல்லோரும்*

இருந்தோம். என்னென்ன ward என்று அன்றைக்கு mention செய்தேன். இரண்டு இடங்களில் சமையற்கூடம் கேட்டார்கள். அதற்கு இடம் கொடுத்தோம். அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தை இன்னும் எல்லா பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துங்கள் என்றுதான் அன்றைக்குக் கேட்டேன். அதனை கோரிக்கையாகத்தான் அன்றைக்கு நாங்கள் வைத்தோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நீங்கள் Finance சம்பந்தப்பட்ட எதை வேண்டுமானாலும் கவர்னர் மாளிகையில் கேளுங்கள். அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. அந்தத் திட்டத்தை அன்றைக்குக் கொண்டு வந்தது—கவர்னர் இருந்தார்—அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டத்தைப் புதிதாக ஆரம்பித்தார்கள்; வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் உங்களுடைய திட்டத்தைப் பற்றி குறையே சொல்லவில்லை. அந்த நிதி பரிமாற்றத்தைப் பற்றித்தான் சொன்னார்கள். அதுவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சருடைய எந்த கையெழுத்தும் இல்லாமல் ஒரு Finance Secretary போட்டு அனுப்பியதைத்தான் இவ்வளவு நேரமாக அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்களே தவிர, உங்கள் கவனத்திற்கே வராமல் அப்படி ஒரு file போனது தவறு என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உங்களுடைய திட்டத்தைக் குறை சொல்லவில்லை. Finance-ல் ஏற்பட்டிருக்கிற குளறுபடியைத்தான் விளக்கியிருக்கிறார். இது பல்வேறு சந்தேகங்களைக் கிளப்புகிறது. இது மாதிரி இவரே clean ஆக பிடித்திருக்கிறார். இது கவர்னர் அல்ல, யாராக இருந்தாலும், ஆண்டவனாக இருந்தாலும், தவறு செய்தால் அதற்குரிய தண்டனையை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இல்லையென்றால், rectify செய்ய வேண்டும். அதைத்தான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

இரவு 7–20

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்சய பாத்ரா பற்றி நான் கூறுவது ஒரே ஒரு கருத்துதான். அதாவது, அன்றைக்கு இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று திறந்து வைத்தார் என்ற ஆதாரம் ஊர் பூராகவும் இருக்கிறது; அதை நான் மறுக்கவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்தத் திட்டத்தை ஒரு NGO ஆரம்பிக்கின்றது. அரசு கொள்கை அடிப்படையில் கோப்பை நகர்த்தி, அரசு நிதியை வழங்கி, அது நடைபெற்றிருந்தால் அது அரசினுடைய செயல் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்கு எந்த ஓர் ஆதரவு, எந்த ஒரு input இல்லாத, கவர்னருக்கு discretionary ஆக நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்ளலாம் என்று கொடுத்த நிதியை, அந்த ஆளுநர் அந்த நிறுவனத்திற்கு அதுவும் அன்றைக்கு transfer செய்யவில்லை. இப்போது தெரிய வருகிறது. அவர் Bank Account-ல் போட்டுவிட்டார். அப்போது ஆளுநர் ஒரு முடிவு எடுத்ததற்கு, அவருக்கு வழங்கப்பட்ட நிதியில் முடிவு எடுத்ததற்கு, அது அரசினுடைய கொள்கை திட்டமா, இல்லையா என்றுதான் நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். அதாவது, அரசு திட்டமிட்டிருந்தால் அது அரசினுடைய திட்டம். ஆளுநர் அவராக ஒரு முடிவு எடுத்து, திறப்பு விழாவிற்கு முதலமைச்சர் சென்றால் அது அரசினுடைய திட்டமா, இல்லையா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்சய பாத்ரா என்ற ஓர் அமைப்பு, இந்த மாதிரி திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சில உதவிகளைக் கேட்டது. இடம் வேண்டுமென்று கேட்டார்கள், ஒருங்கிணைந்த சமையற்கூடம் கேட்டார்கள். இது மட்டும்தான் நம்மிடம் கேட்டார்கள். அந்தத் திட்டத்தை வந்து சொன்னவுடன், உடனே நல்ல திட்டம் என்று சொல்லி, எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், எங்கள் துறைக்கு உத்தரவு போட்டு இடங்களையெல்லாம் கொடுத்தோம். இதுதான் எங்களிடம் கேட்டார்கள். இந்த மாதிரி ஒரு திட்டத்தை ஆரம்பிக்கிறோம் என்றுதான் சொன்னார்கள். அதை நாங்களும் சொல்லவில்லை. நீங்கள் சொன்னதுபோல்,

நாங்களும் அந்த மாதிரி அரசு நிதியைக் கொடுத்து நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இடத்திற்கும் 55 விதியில் கொடுத்திருக்கிறார்கள் டாக்டர் எழிலன் என்று சொல்லி, 22 ground மாநகராட்சி இடத்தை கொடுத்திருக்கிறது. அதை திரும்பித் தாருங்கள் என்று சொல்லி அதுவும் இருக்கிறது. அங்கு இன்னும் பணியே செய்யவில்லை, சமையல் தொழில் அங்கு நடைபெறவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது எல்லாமே உங்களுக்கும் முழு விவரமும் தெரியாமல் நடந்திருக்கிறது என்ற விஷயத்தைத்தான் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஜனநாயக மாண்புகள் குறித்து இங்கு பேசினார். அதே ஜனநாயக மாண்போடு நம்முடைய சட்டமன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட இந்த **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அதற்கு விளக்கமெல்லாம் வந்துவிட்டது. அடுத்த subject பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் ஒன்றுமே சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பேசியதை repeat பண்ண வேண்டாம். எல்லாமே முடித்துவிட்டேன்.

திரு. தி. வேல்முருகன்: நான் ஒன்றுமே சொல்லவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்பதை கேட்டுவிட்டு நீக்கிக் கொள்ளுங்கள். ஆதலால், அதுபோன்ற நிலை கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன்.

இங்கு, தங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்கின்ற ஒரு கேள்வியை பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடத்தில் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தலைமைச் செயலாளர் அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர்களை, அரசு உயரதிகாரிகள் எவ்வாறு நடத்த வேண்டும்? மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எவ்வாறு நடத்த வேண்டும்? காவல் துறை அதிகாரிகள் எவ்வாறு அவர்களோடு நடந்துகொள்ள வேண்டுமென்கிற ஒரு வழிகாட்டு நெறிமுறையை வெளியிட வேண்டுமென்று நான் இந்த அவையின் மூலமாகக் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய பொதுத் (மரபு) துறை அரசாணை எண் 85-ல் அரசினுடைய protocol-ஐ வெளியிட்டிருக்கின்றது. இந்திய நாட்டின் முதல் குடிமகனில் தொடங்கி பல்வேறு மரபு சார்ந்த பதவிகளை வகிக்கின்றவர்களுக்கு என்ன protocol இருக்கிறது என்று வெளியிட்டிருக்கின்றது. அதில், நம்முடைய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 21-வது இடத்தில் protocol-க்கான அனுமதியை நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலோடு பொதுத் துறை செயலாளர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார். ஆனால், இன்றைக்கு அந்தப் பட்டியலைப் பார்க்கின்றபோது பல்வேறு அரசு உயர் செயலாளர்கள், DGP, கூடுதல் DGP, தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மைச் செயலாளர், அரசுச் செயலாளர் இப்படி என்று அதில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மாடத்தில் அமர்ந்திருக்கின்ற தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் பண்பு மிக்கவர்கள், இவர்கள் senior அதிகாரிகள். புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றால்கூட, அவர்களிடத்திலே நின்று நிதானமாக அவர்களோடு கலந்துரையாடுகிறார்கள். ஆனால், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அது வேண்டாம். அதை நீக்கிவிடுகிறேன். மற்றதைச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: ** சுட்டிக்காட்டினால் திருத்திக் கொள்வார்கள் என்றுதான் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை.

அதேபோல், மாவட்ட ஆட்சித் தலைவர்கள்; சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த அரசுக்கு நற்பெயர் ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியாக ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிறார்கள். அந்த ஆய்வுக் கூட்டங்களில் மக்களால் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கக்கூடிய இருப்பை உறுதி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் வேண்டுகோள் வைக்கிறேன். அந்தந்தத் தொகுதிகளில், அந்தந்த மாவட்டங்களில் நடைபெறுகின்ற அரசினுடைய நலத் திட்டங்களைக் கண்காணிக்கக்கூடிய வகையில் ஒரு குழுவாக நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

இரவு 7–25

மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி என்பதே வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் வரி வசூல் செய்வதற்காகப் பல்வேறு அதிகாரங்களை அவர்கள் கைக்குத் தந்து, அதில் அதிகாரம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இன்றுகூட மாவட்டத்தில் இருக்கிற எந்தப் பணிகளை எடுத்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கையொப்பம், மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலுக்காகக் கோப்பு காத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நான் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். அதாவது, மண்டல அளவில், zonal அதிகாரி level-ல் துறையின் அரசுச் செயலாளரைக் கொண்டு அதைக் கண்காணிக்க வேண்டுமென்றும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாக அதிலே இடம்பெற வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைத்தேன். அதற்கான பணிகளெல்லாம் நடந்தன; ஆனால், அது நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கு எல்லா அதிகாரிகளையும் நான் குறை சொல்லவில்லை. இந்த ஆட்சிக்கு நற்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று இரவு, பகல் பாராமல் உழைக்கின்ற நேர்மையான மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், ஐ.பி.எஸ். அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், ** என்பதைத்தான் வலியோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன்? ** அதை நிவர்த்தி செய்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்களுக்கெல்லாம் அந்த நிலை இல்லை. மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர், நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

திரு. தி. வேல்முருகன்: சரி, பேரவைத் தலைவர் அவர்களே, நான் இருப்பதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: ** ஏதோ ஒன்றிரண்டு பேர்தான் அப்படியிருக்கிறார்கள் என்று நான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதோ குறிப்பிட்டு ஒரு விஷயத்தில் இப்படி நடந்திருக்கிறது என்று நீங்கள் சொன்னால், அதை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்வேன்.

திரு. தி. வேல்முருகன்: சரி, பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்கிற மாதிரி பொத்தாம் பொதுவாக நீங்கள் சொன்னது not good. மாண்புமிகு உறுப்பினர் மற்றும் நான் சொன்னது உட்பட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எல்லா ** சொல்லவில்லை. ஏதோ அங்கொன்று, இங்கொன்று இருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதை மட்டும்தான் நான் ஏற்றுக்கொள்வேன். மற்றவற்றையெல்லாம் பொத்தாம் பொதுவாக இங்கே பதிவு செய்தால் அது நன்றாக இருக்காது. (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: சரி. இது சட்டமன்றம். பேச வேண்டிய இடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி பேசுங்கள். நன்றாகப் பேசுங்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. தி. வேல்முருகன்: பேச வேண்டிய இடம். அதற்காக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளம்; இன்றைக்கு டெல்லியில் கிட்டத்தட்ட 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், தெலுங்கானாவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், மத்திய பிரதேசத்தில் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், உத்தரபிரதேசத்தில் 1 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாயும், பீகாரில் 1 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயும், மகாராஷ்டிராவில் 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும் என பல்வேறு மாநிலங்களில் கொடுக்கிறார்கள். ஏனைய மாநிலங்களில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் என்கிற அந்த அரசினுடைய emblem பொருத்தப்பட்ட வாகனமும், அவர்களுக்கான உதவியாளர்களும், அவர்களுக்கான பணியாளர்களும் அந்த அரசுகளால் வழங்கப்படுகின்றன.

இங்கே ஒரு கொடுமை என்னவென்று சொன்னால், நான் நம்முடைய ஆட்சியில் சொல்லவில்லை. தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியாளர்கள் இங்கு வருகிறார்கள். அவர்கள் அவைக்குள்ளே வருவதற்கு அவ்வளவு சிரமப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது தொகுதி சார்ந்த பிரச்சினைகள் குறித்து, கேள்வி நேரத்தின்போது அல்லது விவாதத்தில் பேசுகின்றபோது, குறிப்புகள் வேண்டுமென்று சொன்னால், அவர்களை நாங்கள் அழைக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அவர்கள் அவைக்கு உள்ளே வர அனுமதி மறுக்கப்படுகிறது. அவர்களுடைய Identity Card–ல் photo ஒட்டப்பட்டு, PA to சட்டமன்ற உறுப்பினர் என்று ஒரு card கடந்த கால கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்டது. தற்போது, வெறும் அவர்களுடைய முகவரியை மட்டும் போட்டு ஒரு பேப்பரில் Identity Card கொடுக்கிறார்கள். அவர்கள் உட்காருவதற்கும் இங்கு இடமில்லை. எனவே, அவர்கள் உட்காருவதற்கு ஓர் இடத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்.

நாங்கள் இங்கிருந்து போகின்ற வழியில் எங்கு பார்த்தாலும் சபைக் காவலர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள், நிற்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இங்கு அமருவதற்கும், பேரவைக் காவலர்கள் பணியிலிருந்து relieve ஆகின்ற காவலர்கள்

அமருவதற்கும், நாங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று உட்கார்ந்து பேசுவதற்குமான ஓர் இடவசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதேபோன்று, உதயசூரியன் சின்னத்தில் நின்ற நான், பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அண்ணன் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் போன்றவர்கள், இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து, அமர்வதற்கு முன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுப்பதற்கோ, இல்லையென்றால் அன்றைய Agenda குறித்து ஆய்வு செய்வதற்கோ எங்களுக்கு ஓர் அறை வேண்டுமென்ற வேண்டுகோளை கடந்த கூட்டத் தொடரிலே வைத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் அறையில் கொடுக்கிறீர்களே!

திரு. தி. வேல்முருகன்: அதுவும் வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் ரூ.25,000/– வழங்கப்படுகிறது. அதை தயவுசெய்து ரூ.50,000/– ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதேமாதிரி மருத்துவச் செலவு. இப்போது எல்லாவிதமான நோய்களும் வருகின்றன. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு heart பிரச்சினை, kidney பிரச்சினை, சர்க்கரை நோய் என்று பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, மாதாமாதம் ரூ.10,000/– அவர்களுக்கு வழங்கி, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும். அதேபோன்று அவர்களும் வந்து செல்வதற்கு ஏற்ற வகையில், old MLA hostel–ல் ஓர் அலுவலகம் கேட்கிறார்கள். அதையும் வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TNPSC குறித்து ஒரு சட்டம் கொண்டுவந்தபோது, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சட்டத் திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே தாக்கல் செய்தார்கள். அதில், தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர்கள், தமிழர்களுக்கு அந்த வேலைவாய்ப்பு

கிடைக்கப்பெற வேண்டுமென்ற அடிப்படையில், ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னேன். அப்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த Bill*–ஐ இப்போது நீங்கள்* pass *செய்யுங்கள். எதிர்வரும் காலத்தில் கண்டிப்பாக நான் அதைக் கொண்டுவருகிறேன் என்று சொன்னார். அதை நீங்கள் கண்டிப்பாகக் கொண்டுவர வேண்டும். அப்படியில்லையென்று சொன்னால், வேற்று மாநிலத்தவர்களும் இங்கு வந்து தங்கி,* address proof*–வோடு அந்தத் தேர்வினை எழுதி, 40 மதிப்பெண்களைப் பெற்று, தமிழ்நாட்டினுடைய அரசு உயர் பதவிகளைக் கைப்பற்றிக்கொள்கிற ஓர் அபாயம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். அதற்குரிய வழிவகைகளை காண வேண்டுமென்கிற வேண்டுகோளை முன்வைக்கின்றேன். அதேபோல, ஒன்றிய அரசு பதவிகளிலே சமீபத்தில்* Central Industrial Security Force *(*CISF*)–லும், துணை இராணுவத்திற்கும் ஆள் எடுக்கின்றார்கள்.*

இரவு 7–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *அப்படி ஆள் எடுக்கின்றபோது தமிழில்* apply *செய்வதற்குக்கூட வாய்ப்புகள் இல்லை. கடந்த மாதம் போஸ்டல் துறையில் ஆள் எடுத்தார்கள். தமிழர்கள் யாரும் உள்ளே சென்று* apply *செய்ய முடியவில்லை. ஆக, இதுபோன்ற நிலை இருக்கக் கூடாது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த மண்ணின் மக்களுக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்கின்ற வகையில் ஒன்றிய அரசின் அனைத்துப் பதவிகளிலும் தமிழர்களுக்கு வேலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் என்ற* Emblem *பொறித்த அரசு வாகனம் ஒன்றை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி*

குறித்து நான் பேச வருகிறேன். நம்முடைய அரசு பல்வேறு துறை தலைப்புகளின்கீழ், பல நூறு கோடி ரூபாயை ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் செலவிடுகிறது. அப்படி, பல்வேறு இனங்களின்கீழ் செலவிடுகின்ற அந்தத் தொகையை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்கென்று குறைந்தபட்சம் ரூபாய் 10 கோடி அல்லது ரூபாய் 25 கோடியை ஒதுக்கி, அதை அந்தத் தொகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்றவகையில், அவர்கள் பரிந்துரை செய்கின்றபோது, அந்தப் பணம் வேறு இனங்களில் செலவிடுவதுபோல், சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையோடு செலவிடப்படுகிறது. இதில் ஒரு ரூபாயைக்கூட எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் தனது வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போகக்கூடிய வாய்ப்பில்லை. வெறும் பரிந்துரை செய்கின்ற அதிகாரம் மட்டுமேதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அந்தப் பரிந்துரை செய்கின்ற அதிகாரத்தை ஏன் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் வழங்கக் கூடாது என்கிற வேண்டுகோளை நான் முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நல்ல ஆலோசனை. இன்னும் மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டும். மணி 7.30 ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை போதும், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள். (குறுக்கீடு) போதும், போதும். (குறுக்கீடு) இன்னும் இருக்கிறது. நாளைக்கு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா முன்வரிசை தலைவர்களுக்கும் 20-லிருந்து 25 நிமிடங்கள் கொடுக்கிறீர்கள். எனக்கு சரியாக 10 நிமிடங்களிலேயே bell அடித்து முடிக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரியாக 32 நிமிடங்கள் ஆகின்றன.

திரு. தி. வேல்முருகன்: இல்லை, இல்லை 11 நிமிடங்கள்தான் ஆகின்றன. நான் தப்பாக எதையுமே பேசவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தப்பாக பேசினீர்கள் என்று நான் இதுவரை சொல்லவில்லை. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய மகத்தான வரலாற்றுச் சாதனை படைக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்தத் தவறுகளை, அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கின்ற பிரச்சினைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கின்ற காரணத்தினால் இவற்றைக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேனே தவிர, ஒருபோதும் நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்களின் அரசுக்கும், அவரின் புகழுக்கும் களங்கம் விளைவிக்கக்கூடிய எதையும் பதிவு செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல ஆலோசனை. தயவு செய்து நன்றி, சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு, அரசு உயர் துறை செயலாளர்களோடு, ஏனைய அரசுத் துறை தலைவர்களோடு இணக்கமாக—Bureaucracy என்று சொல்லக்கூடிய I.A.S., I.P.S. அதிகாரிகள் போன்றவர்களும்–– சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்துதான் மக்களுக்கான திட்டங்களைக் கொண்டுபோய் சேர்க்க முடியும். (மணியடிக்கப்பெற்றது) இருவரையும் ஒரே ஏறில் பூட்டிய–– ஆக, Bureaucracy ஒரு பக்கமும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு பக்கமும் பணியாற்ற முடியாது. ஆகையால், தயவுசெய்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், ஏனைய கூட்டங்களில் அவசியம் கலந்துகொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அழைக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அவர்களை சந்திக்க நேரம் கிடைக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், பதிவு செய்து விட்டீர்கள்.

2023 ஏப்ரல் 19]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள். இந்த முன்வரிசை தலைவர்களுக்கான car pass, சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குள் தொலைக்காட்சி, பத்திரிகை நிருபர்களுக்கான அனுமதி போன்ற சின்ன, சின்ன விஷயங்களெல்லாம் கோரிக்கைகளாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தந்து இந்தியாவிலேயே சமூகநீதிக்காக சமரசமற்றுப் போராடுகின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்புப் புதல்வரே, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களை தமிழ்நாட்டு மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள். (குறுக்கீடு) போதும், போதும். (குறுக்கீடு) நன்றி என்று மட்டும் சொல்லி முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்விழந்த மக்கள் தங்கள் காலத்தில் வாழ்வுரிமை கிடைக்கும் என்ற மிகப்பெரிய எதிர்பார்ப்போடு இருக்கின்றார்கள். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.

***திரு. பொன். ஜெயசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாமானியனும் பெருமைக்குரிய இந்தப் பேரவையில் அமருவதற்கான வாய்ப்பை நான் பெறுவதற்குக் காரணமாக அமைந்த என் இயக்கத்தினுடைய நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., (மேசையைத் தட்டும் ஒலி) மறைந்தாலும் எங்கள் இதயங்களில் வாழும் தன்னிகரற்ற அரசியல் ஆளுமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7–35

சிலுவம்பாளையம் என்ற சிற்றூரில் கிளைக் கழகச் செயலாளராக தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, தமிழகத்தில் உள்ள ஏழையெளிய மக்களின் உணர்வுகளோடும்,

உள்ளத்தோடும் இரண்டறக் கலந்து, ஒரு தொண்டனும் உழைப்பால் உயர்ந்து தலைவனாகலாம், முதல்வராகலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஜனநாயகத்தின் உயர்ந்த விழுமியங்களை இந்த உலகுக்கு உணர்த்தும் வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை அலங்கரிக்கும் ஆளுமை, அரசியல் சாணக்கியர், எளியவர்களின் தலைவர், தனது நான்கு ஆண்டு கால ஆட்சியில் எண்ணற்ற பல சாதனைத் திட்டங்களை, எளிய மக்கள் பயன் பெறத்தக்க வகையில் உருவாக்கியிருந்தாலும் ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்கு எட்டாக் கனியாக இருந்த, மருத்துவக் கல்வியை அரசு பள்ளிகளில் பயிலும் ஏழை குடிசை வீட்டு மாணவனும் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் கடவுளாக காட்சி தரும் வறியவர்களின் தலைவர், எதிர்காலத்தில் இந்த நாடும், மக்களும் விழிகளை அகல விரித்து, புருவங்களை உயர்த்தி வியக்கத்தக்க வகையில் அவதாரம் எடுக்க இருக்கும் என் தலைவர் கழகப் பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு மண்டலமாம் கோவை, எங்கள் இயக்கத்திற்கு உவந்தளித்த கொடை, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மனசாட்சி, எளியவனான நானும் இந்த அவையிலே அமர்வதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து, இன்றைய மானியக் கோரிக்கைகளில் எனது கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பளித்த, எனது அரசியல் வழிக்காட்டி, கழகத் தலைமை நிலையச் செயலாளர், எதிர்க்கட்சிக் கொறடா மாண்புமிகு அண்ணன் எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், நம்பிக்கையோடு இந்த வாய்ப்பினை வழங்கிய, நான் வணங்கி நேசிக்கும், எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதி வாழ் பொதுமக்கள் அனைவருக்கும், எனது கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், எனது இதயம் கனிந்த நன்றிகளைப் பணிவன்போடு சமர்ப்பிக்கின்றேன்.

The Elephant Whisperers என்ற ஆவண குறும்படத்தில் நடித்ததற்காக, திரைப்படத் துறையின் உயரிய விருதான Oscar விருதினைப் பெற்று, பாரத தேசத்திற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்த, எனது தொகுதியான கூடலூர், தெப்பக்காடு பகுதியில் வசித்துவரும், பழங்குடியின தம்பதிகள் Bellie, Bomman மற்றும் அந்தக் குறும்படத்தை உருவாக்கிய Kartiki Gonsalves

அவர்களுக்கும் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் பெருமைமிகு இந்தப் பேரவையின் வாயிலாக எனது வாழ்த்துகளைப் பதிவு செய்கின்றேன். அதைப்போல அரசமைப்புச் சட்டத்தில் எளியவர்கள், எல்லா பதவிகளிலும் பயன்பெற வேண்டும், இடம்பெற வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு, அரசமைப்பிலேயே அதற்கான வழிவகைகளை அமைத்துக் கொடுத்த, இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய பேராசான், சிற்பி, அண்ணல் அம்பேத்கர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கூடலூர் தொகுதியில் பல்லாண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினை. கூடலூர் ஜென்மம் நில ஒழிப்பு சட்டம், அதாவது, The Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1969-க்குட்பட்ட தீர்வு காணப்படாமல் இருக்கும் சுமார் 34,986 ஏக்கர் நிலப் பிரச்சினை. அவற்றைப் பெருந்தோட்ட நிறுவனங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழ்நாடு அரசிற்கு சம்பந்தமில்லாத ஜென்மிகள் என்னும் கேரள நிலக்கிழார்களுடன் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை ஒப்பந்தம் முடிவுற்ற பின்பும், சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் வசம், வைத்துக்கொண்டு, அனுபவித்துவரும், சுமார் 23,553.37 ஏக்கர் நிலம் தொடர்பாக, தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து, என்னுடைய கருத்தை இந்த மாமன்றத்தில் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜென்மம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நிலங்களை அரசு எடுத்துக்கொண்டதற்கு எதிராகவும், தங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை வலியுறுத்தியும், 9 நிறுவனங்களுக்கு, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டுவிட்ட நிலையில், கடந்த 23–9–1976 ஆம் ஆண்டு, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், மேற்கண்ட தோட்ட அதிபர்கள் அரசிற்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில் இவ்வாறு கருத்துகளைத் தனது தீர்ப்பில் பதிவு செய்துள்ளது.

அதாவது, "The Janmam Act has been enacted to acquire the rights of Janmis in Janmam Estates in Gudalur Taluk and to introduce Ryotwari settlement, whereas the enactment of the Ceiling Act has been done with the view to fix a ceiling on the

land holdings and to distribute the excess land to the landless and agricultural population" எனத் தெரிவித்துள்ளது. எனவே, இச்சட்டத்தினை இயற்றிய தமிழக அரசின் நோக்கமும் நில உச்சவரம்புச் சட்டத்தைச் செயல்படுத்தி, இச்சட்டத்தின்கீழ் தமிழக அரசின் ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்ட நிலம் முழுவதையும், வன நிலமாக மாற்றுவது மட்டுமல்ல, மாறாக அங்கு விவசாயம் செய்து வாழும் விவசாயிகளுக்கு அந்த நிலத்தின் மீதான உரிமையை உறுதி செய்து, அவர்களின் வாழ்வையும் வளமாக்குவதுதான் என்ற புரிதல் அரசிற்கும், அதிகாரிகளுக்கும் இருந்தால், வனம் எனும் பெரும் செல்வமும், அங்கு வாழும் மக்களின் இன்னலும், ஒரு சேர தீர்க்கப்பட்டுவிடும். எனவே, அரசு மனது வைத்தால் இப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வினை வழங்க முடியும் என்பதனை பணிவோடு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இரவு 7–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிலப் பிரச்சினைத் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட குழு, அதாவது The Empowered Committee constituted by the Supreme Court தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளது. "The Government of Tamil Nadu has not completed the survey and demarcation of the Janmam lands vested with the State and does not have a complete set of cadastral map of the vested Janmam lands" எனக் குறிப்பிட்டுள்ளது. மேலும், இந்த நிலம் தொடர்பாக, தமிழக அரசு அளவீடு செய்து வன எல்லைகளை நிர்ணயிக்காத வரையில், Settlement process cannot proceed before the forests' boundaries are first demarcated எனவும் பரிந்துரைத்துள்ளது. எனவே, அரசு விரைவாக இந்தப் பிரிவு 17 வகை நிலங்களை அளவீடு செய்து நீதிமன்றத்தில் தெரிவித்தால், நீதிமன்றம் விதித்துள்ள அனைத்துத் தடைகளும் நீங்கிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கு அரசுக்கு ஓர் உன்னதமான நோக்கம் இருக்கின்றது. என்னைப் பொறுத்தளவில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம், தனியார் வசம் இருந்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களையெல்லாம் எடுத்து, அதனை அங்கிருக்கக்கூடிய வறிய மக்களுக்கு, அங்கே விவசாயம் செய்து வாழக்கூடிய

மக்களுக்கு அளிப்பது என்பதுதான். ஆனால், நானறிந்த வகையில் உலகத்திலேயே ஒரு சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கத்திற்கு மாறாக, அந்த மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருப்பதாக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜென்மம் ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதன் வாயிலாக, இந்நிலங்களின்மீதான அரசின் ஆளுகை எவ்விதக் கேள்விகளுக்கும் அப்பாற்பட்டு அரசமைப்புச் சட்டத்தில் வலுவாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு இந்நிலத்தின்மீது எடுக்கும் கொள்கை முடிவில் யாரும் தலையிட முடியாது. அப்படிப்பட்ட நிலையிருந்தும், இயற்கை நமக்கு வழங்கிய ஒரு பெரும் செல்வம் கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றது. ஓர் எடுத்துக்காட்டை மட்டும் இந்த அவையிலே பதிவு செய்வதன் வாயிலாக, அதன் தீவிரத்தையும், அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

எங்கள் பகுதியிலிருக்கும் Manjushree Plantations Limited எனும் தனியார் தோட்ட நிறுவனத்திடம் மட்டும் சுமார் 19,576.52 ஏக்கர் பிரிவு 17 வகை நிலம் கைவசம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜென்ம ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, இந்த ஒட்டுமொத்த நிலத்தின் உரிமையும் தமிழக அரசின் கைவசம் எடுக்கப்பட்டு, அந்தச் சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், ஜென்ம ஒழிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்தத் தனியார் நிறுவனம் அந்த ஜென்மிகளிடம் ஏற்படுத்திக் கொண்டதாகக் கூறப்படும் ஒரு குத்தகை ஒப்பந்தத்தைக் காட்டி, அதன்மீது உரிமை கோருகின்றது. அவ்வாறு அவர்கள் ஜென்மிகளிடம் போட்டுக்கொண்ட ஒப்பந்தத்தின்படி, அவர்களிடம் இருக்க வேண்டிய நிலத்தின் அளவு சுமார் 3,677 ஏக்கர். ஆனால், அவர்களின் அனுபவத்தில் வைத்துக்கொண்டு பட்டா கோரும் நிலத்தின் அளவு சுமார் 19,516 ஏக்கர். இந்த கோருரிமைக்கு எதிராக மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என அவர்கள் தட்டிய கதவுகளெல்லாம் மூடப்பட்டு, இதில் அரசுதான் முடிவெடுக்க வேண்டுமெனத் தீர்ப்புகள் சொல்லப்பட்ட பின்பும், அரசு இதில்

முடிவெடுக்காமல் தயங்குவதற்கு என்ன காரணம் என்பது மர்மமாகவே உள்ளது. அதைவிட ஆச்சர்யம் ஆரம்பத்தில் 19,576.52 ஏக்கர் நிலத்திற்கு உரிமை கோரிய அவர்கள், பின்னர் தங்களுக்கு 6,148 ஏக்கர் நிலத்தை மட்டும் கொடுத்தால் போதுமென தங்களுடைய கோருரிமையைத் தாங்களாகச் சுருக்கிக்கொண்டு, உச்ச நீதிமன்றத்திலேயே இது பதிவு செய்யப்பட்டபோதும், அரசு இதில் முடிவெடுக்காமல் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிர்ச்சியளிக்கத்தக்க தகவல் என்னவென்று சொன்னால், சுதந்திரம் பெறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் போட்டுக்கொண்ட ஒப்பந்தத்தின்படி, செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ஏக்கருக்கு 10 பைசா மற்றும் 33 பைசாதான் என ஒட்டுமொத்த நிலத்திற்கும் அவர்கள் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ஆண்டுக்கு ரூ.2,043.30 மட்டுமே. அதுமட்டுமின்றி, இந்த நிலங்களின் மீதான உரிமை முற்றிலும் தமிழக அரசுக்கு மாறிவிட்டபோதும், கடந்த 1976 ஆம் ஆண்டே காலாவதியாகிவிட்ட ஒரு குத்தகை ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டு, இவர்கள் அரசாங்கத்தை ஆட்டிப் படைத்து வருகின்றனர். ஏக்கருக்கு 10 பைசா மற்றும் 33 பைசாவைக்கூட அரசுக்குச் செலுத்தாமல் அரசின் செல்வத்தை இவர்கள் அனுபவித்து வருகின்றனர். கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இவர்களிடமிருந்து சொத்து வரி வசூலிப்பதில்லை; குத்தகைத் தொகையும் வசூலிப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

இரவு 7–45

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையைப் பற்றி ஏற்கெனவே, கலைவாணர் அரங்கத்தில் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெற்றபொழுது கூறியிருக்கிறார்கள். நான் அன்றைக்கே, இது சம்பந்தமாக உங்களிடம் என்னென்ன தகவல்கள் இருக்கின்றனவோ, எங்களிடம் அந்தத் தகவல்களைக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், எனக்குத் தெரிந்து இந்த ஆட்சி வந்த பிறகு இருக்கிற பிரச்சினையில்லை. இது பல ஆண்டுகளாக, அவர்களும் ஆட்சியில் இருந்தபோதும் இருந்த

பிரச்சினை. (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். அதனை, அடிப்படையில் சீர்திருத்தம் செய்வதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு இணைந்து Land Lease Policy, அதாவது தமிழ்நாடு நிலத்தை எந்த வகையில் குத்தகை எடுக்க வேண்டும்; எந்தக் காரணத்திற்காக, யாருக்காக சலுகை கொடுக்கப்பட வேண்டும்; யாருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்; எத்தனை ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற complete Policy-ஐ தற்போது கையில் எடுத்திருக்கிறோம். நீங்கள் சொல்வதுபோன்று நீதிமன்றத்தில் நாங்கள் செய்ய மாட்டோம் நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று என்றைக்குமே சொல்லமாட்டார்கள். அரசாங்கத்தின் செயல்பாடுகளில், நீதிமன்றத்தில் அதிக அளவில் திணிப்பு வருகின்றது. யாரெல்லாம் மாண்புமிகு அமைச்சர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் இது தெரியும். ஆனாலும், நீங்கள் தகவல் அளித்தீர்களானால், எந்தவகையில் அதனை எவ்வளவு விரைவில் சீர்திருத்தம் செய்ய முடியுமோ-- ஏனென்றால் இந்தப் பிரச்சினை இன்றைக்கு நேற்றைக்கு ஏற்பட்டதல்ல, 10 ஆண்டுகள் 20 ஆண்டுகளாக இருக்கின்ற பிரச்சினை. ஆனாலும், இந்த policy-ஐ உருவாக்குகின்ற சூழ்நிலையில், அதனை எந்தவகையில் திருத்திக்கொடுக்கலாம் என்று பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அதனை எழுதிக் கொடுத்துவிடுங்கள்; அரசு பார்த்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Supreme Court-ல் இந்த வழக்கு 2009 ஆம் ஆண்டில் வந்தது. வருவாய்த் துறையிடம் அந்த நிலத்தை ஒப்படைப்பு செய்து, நீங்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டது. அதற்குப் பிறகு, நடவடிக்கை எடுக்கும் நேரத்தில், 2011 ஆம் ஆண்டில் ஆட்சி மாறிவிட்டது. இவர்கள் இருந்த 10 ஆண்டுக் காலத்தில் எதுவுமே செய்யாமல் சும்மா இருந்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் தற்போது இது குறித்துக் கேட்கிறார்கள். இப்போதும் அந்தத் தொகுதியில்தான் இருக்கிறார், ஆனால் எந்தப் பணியும் மேற்கொள்ளவில்லை. தற்போது இது குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் காலத்தில் கேட்கிறார்கள். சென்ற வருடம் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்கு வந்து, அங்கிருந்து, இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் நமது அரசைக் குற்றம் கூறவில்லை. இருக்கிற விஷயத்தைதான் கூறினார்கள். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல பதிலை அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் 10 ஆண்டுக் காலம் என்று. 10 ஆண்டுக் காலம் நீதிமன்றத்தில் இருந்தது. தேர்தல் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அவர் Section 17 subject குறித்து அந்தக் குத்தகை நிலம் குறித்துதான் பேசுகிறார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இது நன்றாகவே தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகக் கோரிக்கைதான் வைக்கிறார்கள். அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. Srilanka-விலிருந்து வந்தவர்களுக்கு அப்போது இயற்றப்பட்ட சட்டம்தான் அது. அதனை கோரிக்கையாகத்தான் வைக்கிறார்கள். 10 ஆண்டு காலம் செய்யாமல் இல்லை. முயற்சிகள் செய்துகொண்டுதான் இருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இதனை குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு பதில்தான் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அது வரலாறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள் அனைத்தையும் அழகாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அதில் ஒன்றுமில்லை. (குறுக்கீடு) இதில் என்ன குறை இருக்கிறது. 2009 ஆம் ஆண்டில் Supreme Court Judgement வரப்பெற்று ஆட்சி மாற்றம் வந்தது; நீங்களும் செய்யவில்லை என்று கூறினார்கள். (குறுக்கீடு) திரு. பொன். ஜெயசீலன், நீங்கள் உரையை முடிக்கிறீர்களா அல்லது நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதிலுரையாற்ற அழைக்கட்டுமா? மாண்புமிகு உறுப்பினர், திரு. பொன். ஜெயசீலன் (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர், திரு. பொன். ஜெயசீலன் உங்களுக்கு 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன. நன்றி சொல்லி முடியுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லிவிட்டுச் செல்ல வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போகவில்லை. இன்றைக்கு இருக்கிறார்கள். விரைவில் உரையை முடியுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, அரசுக்கு பல கோடி ரூபாய் வருவாய் ஈட்டக்கூடிய ஒரு பிரச்சினையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது முடிந்துபோயிற்று. அதற்குப் பதில் சொல்லியாயிற்று. வேறு* subject *இருந்தால் சொல்லுங்கள்,*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 19-3-2018 அன்று இந்தப் பிரச்சினையில் ஒரு தீர்வினை எட்ட வேண்டுமென்பதற்காக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அந்த பொருள் குறித்து தற்போது மேலாண்மை செய்து முடிவு செய்யப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். வேறு பொருள் இருந்தால் பேசுங்கள். அந்த* matter over. *நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு நிலுவை என்பதை மட்டும் சொல்லிவிடுகிறேன். குழு அமைத்தபடி, இவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை மட்டும் ரூ.634,39,87,063 ஆகும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த நிறுவனம் கட்ட வேண்டும். பதிவாகிவிட்டது. பதிலுரை, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும் (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியின் ஒட்டுமொத்தப் பிரச்சினை இது. நீங்கள் அதனைத் தீர்த்துவிட்டீர்களானால் எங்கள் தொகுதியின் ஒட்டுமொத்தப் பிரச்சினையும் தீர்ந்துவிடும். எனவே, 3 நிமிடங்கள் மட்டும் அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதை விளையாட்டிற்காக இந்த மானியத்தின்மீது பேச வரவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு பேசுங்கள். Chorus–ஆக சத்தம் போடக் கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் இருக்கிறார்கள், மாண்புமிகு கொறடா அவர்கள் இருக்கிறார்கள். மேலும், இரண்டு நிமிடங்கள் வாய்ப்பு கொடுங்கள் என்றால் கொடுப்பேன். மொத்தமாக சத்தம் போட்டு, உங்கள் சத்தத்திற்குப் பயந்து நான் வாய்ப்புத் தருவது போன்று செய்வது நாகரிகமாகத் தெரியவில்லை. சரியாக 3 நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக நினைக்க வேண்டாம். இது உணர்வுப்பூர்வமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் subject–க்கு வாருங்கள். 7–52 மணிக்கு முடித்துவிட வேண்டும். முடியுங்கள்.

இரவு 7–50

இவ்வாறு உறுப்பினர்கள் கேட்டதில், நம்மால் முடிந்ததையெல்லாம் கொடுத்து முடித்துவிட்டோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றம் உயர்வானதொரு மன்றம். ஒவ்வொருவருடைய தொகுதியிலும் குறைந்தபட்சம் 2.5 இலட்சம் மக்கள் இருப்பார்கள். அந்த 2.5 இலட்சம் மக்களில், நாமெல்லாம் இந்த இடத்தில் வந்து அமர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், நமக்குதான் அந்த பாக்கியம் கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது கிடைக்க முடியாத பாக்கியம். வைதீக மொழியில் சொல்ல வேண்டுமென்றால், அவரவர்களுக்கு பிராப்தம் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். இந்த மன்றத்தில் நாம் இருந்தோம் என்பதே நம்முடைய வருங்கால சந்ததியினருக்கு, என்னுடைய தாத்தா இங்கே இருந்தார்; என்னுடைய பாட்டனார் இங்கே இருந்தார் என்று சொல்வது பெருமையான ஒன்று. இந்த மன்றத்தில் மிகப் பெரிய ஆட்கள் எல்லாம் நீண்டகாலம் இருந்திருக்கிறார்கள். நானும் கிட்டத்தட்ட 50, 60 வருடங்களாக இங்கே அமர்ந்து இந்தச் சபை நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

2023 ஏப்ரல் 19] [திரு. துரைமுருகன்]

இந்த மன்றத்தில் எனக்கு ஒரே ஒரு குறை என்னவென்றால், எனக்கு மட்டும் அந்தக் குறை இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் குறை உண்டு. எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய கட்சிக் கூட்டங்களிலும் சரி; இங்கேயும் பல முறை சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது வர்ணனையைத் தவிர்த்துவிட்டு, நேரடியாக சப்ஜெக்ட்டில் பேசுங்கள். ஏனென்றால், உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பில் அந்த நேரத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், ஒரு elderly person என்ற வகையில் சொல்கிறேன் என்பதற்காக, யாரும் வருத்தப்பட மாட்டீர்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அவையின் பாதி நேரங்கள் வர்ணனையிலேயே செலவாகி விடுகின்றன. அவரை வணங்குகிறேன், இவரை வணங்குகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, நீங்கள் இப்படியே வணங்குகிறேன் என்று தெரிவித்துக்கொண்டே இருப்பதால் யாராவது திருப்தி அடைவார்கள் என்று நினைக்கிறீர்களா? மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன் என்று என்னைச் சொன்னவுடன், நம்மை அவர் வணங்குகிறேன் என்று சொல்லிவிட்டார் என்று நான் பெருமிதம்கொள்வேன் என்று நினைக்கிறீர்களா? அதற்குப் பதிலாக அந்த நேரத்தை அவர் வீணடித்து விட்டாரே என்று வருத்தம்தான்படுகிறேன்.

சிதம்பரத்தில் மாணவரணி மாநாடு ஒன்று நடைபெற்றது. அண்ணா அவர்கள் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்புறம் நான் அமர்ந்திருந்தேன். ஆலடி அருணா அவர்கள் பேசும்போது, அண்ணா அவர்களைப் புகழ்ந்து பேசுகிறார். காஞ்சி கரிபால்டி, ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்து பேசுகிறார். அமர்ந்திருந்த அண்ணா அவர்கள், 'அருணா இங்கே வா' என்று அவரை அருகில் அழைத்தார். என்னை காஞ்சி கரிபால்டி, single tea, double tea என்று சொல்வதற்கு ராஜகோபால் இருக்கிறார். காஞ்சிபுரத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். உனக்கு அளிக்கப்பட்டுள்ள சப்ஜெக்ட் என்ன என்றார். 'Democratic Socialism' என்று பதில் சொன்னார். அதுபற்றி தெரிந்தால் பேசு. இல்லையென்றால் அமைதியாகச் சென்று உட்கார் என்று சொன்னார். அதற்குப் பிறகு, ஆலடி அருணா அவர்கள் பேசினார். மிக அற்புதமாகப் பேசினார். பேசி முடித்து வந்த பின்னர், அண்ணா அவர்கள் எழுந்து நின்று அவரை அழைத்து, அவருடைய முதுகில் தட்டிக்கொடுத்து, இவ்வளவு சப்ஜெக்ட்டை வைத்துக்கொண்டு, எதற்காக

நீ என்னைபோய் வர்ணித்துக் கொண்டிருக்கிறாய், இதனால் நான் மகிழ்ச்சி அடைந்துவிடுவேன் என்று நீ கருதுகிறாயா? என்று கேட்டார். அண்ணா அவர்கள் கொஞ்சம்கூட முகஸ்துதி பிடிக்காத மனிதர். முகஸ்துதி என்றாலே கீழே விழுவதாக அர்த்தமாம். முகஸ்துதிக்கு மயங்குகிற எவரும் ** ஆகையினால், என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதன்முறை சட்டமன்றத்தில் பேசும்போது வேண்டுமென்றால், எனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி, நான் போட்டியிட வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி என்று சொல்வார்கள்.

இரவு 8–20

இன்னும் கொஞ்ச நாளில் வீட்டிற்குப் போகப் போகிறோம். இப்போதே, மறுபடியும், நன்றி, எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டேயிருந்தீர்களென்றால், அதிலேயும் போட்டா போட்டி போட்டுக்கொண்டு எவன் எழுதிக் கொடுக்கிறான் என்று தெரியவில்லை. பத்திரம் எழுதுவதைப் போன்று எவனோ ஒருவன் வந்திருக்கிறான். வரை, வரை, வரை என்று எழுதிக்கொடுத்துவிட்டு, நான் பாரு, நீ பாரு என்று கவிதை நடையில் போட்டிருக்கிறான். தயவுசெய்து, கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறேன், இந்த மன்றத்தில் அவையெல்லாம் உகந்தது அல்ல. இந்த மன்றத்தினுடைய கண்ணியத்திற்கு ஏற்புடையதல்ல. என் தலைவர்மீது எனக்கு நம்பிக்கை உண்டு; மரியாதை உண்டு. உங்கள் தலைவர்மீது உங்களுக்கு நம்பிக்கை உண்டு; மரியாதை உண்டு. அதை யாரும் மாறுபடுத்த முடியாது. அதனால்தான், அங்கு, அங்கு கட்டுப்பட்டு உட்கார்ந்திருக்கிறோம். நான் தளபதியைப் பார்த்து, தளபதி, தளபதி, தளபதி என்று நான் சொல்வதனாலேயே, அவரும் மகிழ்வது இல்லை; நானும் உயர்வது இல்லை. இன்னொருத்தன் சொல்லிக்கொண்டிருக்கிறான், படிக்கிறான் பார் என்று. அது தேவையே இல்லை. எனவே, இந்த மன்றத்தினுடைய கண்ணியத்திற்காகச் சொல்கின்றேன்; வர்ணனையை விடுங்கள்; subject–ஐப் பேசுங்கள். அதில் எந்தவிதமான குறையும் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் எடுத்துக்கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

M.L.A.-க்கள் சம்பளம் கொடுக்கிறோம்—நிதிநிலைமைக்கேற்ப பின்னால் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார். நிச்சயமாக செய்வார். அதனால் ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை. நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னதை, நீங்களே அவைக் குறிப்பிலிருந்து நீக்க சொல்லிவிடுங்கள். அந்த வார்த்தையை நீக்கிவிடுகிறேன். அது, உங்களுக்கு flow-ல் வந்துவிட்டது. அதைப்போல, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்மீது ** நம்முடைய மாண்புமிகு முதல்வர் இந்த அறிவிப்பை வழங்கியிருக்கிறார் என்று சொல்லியிருப்பதில், அந்த ** என்ற வார்த்தையை நீக்கலாம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நான் சொல்லியிருந்தால், அந்த வார்த்தையை எடுத்துவிடுங்கள். அது ஒன்றுமில்லை. திரு. இரா. அருள் அவர்கள் பேசும்போது, அவர் picturise செய்ததைப் பார்த்தீர்களென்றால், வேறுமாதிரி இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இந்த அவையின் நேரத்தில், ஒரு நிமிடத்தை எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள், இதுபோல், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்த subject-ல் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள், "இன்று காலையில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் 4 பேர் வந்தார்கள். அவர்களில், ஒருவரின் சட்டை கிழிந்திருந்தது; ஊசி நூலைக் கொண்டு அதைத் தைத்து, அதோடுதான் என்னைப் பார்க்க வந்தார். நான் பார்த்தவுடன், ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டேன். கண்ணீர் விட்டுவிட்டார். ஆகவே, நான் அவருடைய ஓய்வூதியத்தை உயர்த்துகிறேன்" என்று சொன்னார். அவரின் நூற்றாண்டு விழாவிற்காக (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதே தேதியில் கருணையோடு, தாயுள்ளத்தோடு அவர்களுக்கு ஊதியத்தையும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உயர்த்தி, மருத்துவத்திற்கும் ஆண்டிற்கு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.75 ஆயிரமாக உயர்த்தி, அவருடைய குடும்ப ஓய்வூதியத்தையும் ரூ.15 ஆயிரமாக ஆக்கிய தாயுள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றப் பேரவைமூலம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிலுரை, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இட்ட கட்டளையை ஏற்று, இங்கே புகழாரம் என்பதை என்னுடைய வாழ்த்துரையில் நிறுத்தி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளடங்கிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மானியக் கோரிக்கை எண் 38-பொது (மறுவாழ்வு)த் துறை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை சார்பாக பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த—அன்று, முத்தமிழறிஞர் கலைஞருக்கு தளபதி; இன்று, தளபதிக்கு உதயநிதி. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி; தந்தை மகனுக்குச் செய்யும் நன்றி என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மண்ணுக்கும் ஒரு மணமும், ஒரு நிறமும் இருப்பதைப்போல ஒரு தத்துவமும் இருக்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழருக்கான தத்துவம்.

உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவரும் நம் உறவினரே என்பதை ஏற்றுக்கொண்ட தமிழர் கடல் கடந்து சென்று குடியேறிய நாட்டையும் தங்களுடைய தாய் நாடாகவே கருதினர். அந்த நாட்டின் காடு, மலைகளைத் திருத்தி, இரயில் தண்டவாளங்களை அமைத்து, அந்த நாட்டின் பூர்வீகக் குடிகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், பண்பாட்டு மேன்மைக்கும் தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள்.

இரவு 8—25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த மொரீஷியஸ், ரீயூனியன், சீஷெல்ஸ் ஆகிய தீவுகளுக்குத் தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டு 294 ஆண்டுகளாகின்றன. இலங்கைக்கு தமிழர்கள் அழைத்து செல்லப்பட்ட 200 ஆம் ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டில்

நடைபெறவுள்ளது. இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஜாவா, சுமத்ரா தீவுகளை சோழ மன்னன் இராஜராஜ சோழன் வெற்றி கொண்டு 1,000 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. வெற்றி பெற்ற நாடுகளையெல்லாம் அடிமை காலனி நாடுகளாக மாற்றும் எண்ணம் இருந்திருந்தால், இன்று தென் கிழக்கு ஆசிய நாடுகளெல்லாம் தமிழ் பேசும் நாடுகளாக இருந்திருக்கும். ஆனால், யாரையும் அடிமைப்படுத்த விரும்பாத தமிழரின் மனநிலையால் 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் வெற்றி கொண்ட நாடுகளில் இன்று வரலாற்று எச்சங்களை மட்டுமே நாம் காண்கிறோம். தமிழர்கள் உரிமைகளை மறுத்து கடல் கடந்து கொண்டு செல்லப்பட்டிருந்தாலும், அவர்களின் வாரிசுகள் இன்று அந்த நாடுகளை ஆளுகின்ற அளவிற்கு உயர்ந்துள்ளனர். சென்றடைந்த நாடுகளைத் திருத்தி செம்மையாக்கி, அந்தந்த நாடுகளின் பூர்வக்குடிகள்போல அந்த மண்ணுடன் ஐக்கியமாகி உள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கறை கொண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், "தமிழர்களே, தமிழர்களே என்னை கடலில் தூக்கிப் போட்டாலும் நான் கட்டுமரமாகத்தான் மிதப்பேன்; அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம்" என்று சொன்னதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள், தமிழ்நாட்டிற்கு வெளியே இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வாழுகின்ற தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு இயற்றிய வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்த அயலகத் தமிழர் நல வாரியத்தை 2022 ஆம் ஆண்டில் 16 உறுப்பினர்களைக் கொண்ட வாரியமாகக் கட்டுருவாக்கி, கடலால் பிரிந்த சொந்தங்களை அன்பினால் ஒன்றிணைத்தார்.

வேலைவாய்ப்புகளுக்காகவும், தொழில் புரியவும், உயர் கல்வி கற்கவும் தமிழர்கள் கடல் கடந்து செல்வது தொடர்ந்து இன்றும் நடைபெறுகிறது. இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், இவர்களுக்காகக் குரல் கொடுக்கவும் தமிழ்நாட்டில் பாதுகாப்பு அரணாகத் திகழ்கின்ற வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம், வெளிநாடு செல்வோர் குறித்த தரவுகளை ஏற்படுத்தி, பதிவுகள் செய்து, அடையாள அட்டை வழங்கி, காப்பீட்டு வசதியை

உறுதி செய்து, அயல்நாட்டிற்குச் செல்வோருக்கான முதற்படியை எளிமையாக்கிக் கொடுக்கிறது. அயல்நாட்டிற்குப் பணியின் நிமித்தம் செல்லும் குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த தமிழர்களுக்கு இன்னல் நேர்ந்தால், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவும் வகையில், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்குதல் முதலிய பணிகளையும் இவ்வாரியம் மேற்கொள்ளும். அயலகத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு ஆலோசனைகள் வழங்க கட்டணமில்லாத் தொலைபேசி வசதி ஏற்படுத்துதல், வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகளை ஏற்படுத்துதல், குடியேறிய நாடுகளில் தேவைப்படும் நேரங்களில் சட்ட உதவிகளை வழங்குதல் போன்ற சேவைகளும் இவ்வாரியத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

பண்பாடு மற்றும் அறிவுசார் நிகழ்ச்சிகளை ஊக்குவிக்கவும், தமிழ்நாட்டில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பினை அங்கீகரிக்கவும், ஒவ்வோராண்டும் ஜனவரி மாதம் 12 ஆம் தேதியை அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையடுத்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் அயலகத் தமிழர் தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்கள் நேரடியாகவும், இணையவழி மூலமாகவும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரவு 8–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சென்னை, கலைவாணர் அரங்கில் “உலகெங்கும் தமிழ்” என்ற கருப்பொருளில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழாவில் 40–க்கும் மேற்பட்ட நாடுகளில் அரசியல் பதவிகளில் பங்குபெற்றோர், தற்போது பதவியில் உள்ளவர்கள், தமிழ்ச் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோருடன் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் புலம் பெயர்ந்து அயல்நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள் விரிவான ஆய்வுகள் மேற்கொண்ட தரவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படும்; புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள், தாய் தமிழ்நாட்டில் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பைப் புதுப்பிக்கும் வண்ணம் ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு

அழைத்து வர ஏற்பாடு செய்யப்படும்; அயல்நாடுகளில், வெளி மாநிலங்களில் பணிக்குச் சென்று எதிர்பாராதவிதமாக இறந்து விடும் தமிழர்களின் குடும்பங்களுக்கு மாத ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்; அயல்நாடுகளுக்குச் செல்வோர் குறித்த தரவு தளம் ஒன்று ஏற்படுத்தப்படும் என முத்தாய்ப்பான நான்கு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேமதுர தமிழோசை திசையெல்லாம் பரவ வகை செய்ய வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் வாரிசுகளுக்குத் தமிழ் பயிற்றுவிக்க ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இணையவழியில் எளிய தமிழில் பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–4–2023 அன்று துபாயில் டேரா என்ற பகுதியில் பணிபுரிந்து வந்த கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ராமராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த 43 வயதான திரு. இமாம் காசிம் மற்றும் 49 வயதான திரு. குடு என்ற முகம்மது ரபீக் ஆகியோர் தீ விபத்தில் இயற்கை எய்திய செய்தி அறிந்து இறந்தவர்களின் உடல்களைத் தமிழ்நாட்டிற்கு விரைவில் கொண்டு வந்து, பூத உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதின் அடிப்படையில் நேற்று இறந்தவர்களின் பூத உடல்களை சொந்த ஊரில் உறவினர்களிடம் ஒப்படைத்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கியதைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஹ்ரைனுக்கு வேலைக்குச் சென்று அங்கு 4 மாதங்களுக்கு முன்னர் நடந்த ஒரு விபத்தில் கால் இழந்த புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பெரியார் நகரைச் சேர்ந்த சுப்பையா–அழகி தம்பதியரின் மகன் வீரபாண்டி என்பவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தாயகம் மீட்டு வந்து ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவரை நேற்று முன்தினம் மருத்துவமனைக்குச் சென்று நலம் விசாரித்து,

தேவையான மருத்துவ உதவிகள் கிடைக்க மருத்துவக் குழுவைக் கேட்டுக்கொண்டேன். இதுபோல தகவல்கள் கிடைக்கப்பெறுகின்ற இனங்களிளெல்லாம் விரைந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பு நடத்தியபோது, உக்ரைன் நாட்டில் மருத்துவம் படிப்பதற்காகத் தங்கியிருந்த மாணவர்களைப் பாதுகாப்பான முறையில் அழைத்து வருவதற்காக போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக 1,524 மாணவர்கள் அரசு செலவில் அழைத்து வரப்பட்டு, மாணவர்களின் சொந்த ஊர்களில் அவர்களின் பெற்றோர்கள் வசம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டனர் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் உட்பட இந்தியர்கள் தகவல் தொழில்நுட்ப வேலை என்ற போர்வையில் கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் எல்லைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சட்ட விரோத இணையதள வேலைக்குக் கட்டாயப்படுத்தி, மறுப்போரை துன்புறுத்தியதாகத் தகவல் கிடைக்கப் பெற்றதை அடுத்து ராஜாங்க ரீதியாக மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் விளைவாக 73 தமிழர்கள் தமிழ்நாடு அரசு செலவில் பத்திரமாக அழைத்து வரப்பட்டு, அவர்களின் குடும்பத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிக்கு வெளிநாட்டிற்குச் சென்று அங்கு சிக்கிக் கொள்வோர், உடல் நலம் பாதிக்கப்படுவோர் மீட்கப்பட்டு தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கும், வெளிநாடுகளில் எதிர்பாரா வகையில் இயற்கை எய்துவோரின் பூத உடல்களைக் கொண்டு வருவதற்கும், சுழல் நிதியாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1 கோடி மாண்புமிகு தளபதியார் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதியைக் கொண்டு இதுவரையிலும் 1,685 நபர்கள் மீட்டு தாயகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். 323 பூத உடல்கள் கொண்டு வரப்பட்டு சொந்த ஊரில் குடும்பத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள செய்தியைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இரவு 8–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் நலனில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் தத்துவத்தின் அடிப்படையில் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் மறுவாழ்வு தேடி அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர்களின் நலனில் மாறாத பாசம் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசான தளபதியார் அவர்கள் 27–8–2021 அன்று சட்டமன்றப் பேரவையில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள். ரூபாய் 30 கோடி செலவில் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படை வசதிகள் ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபாயில் அவர்களுக்குத் துணிமணிகள், பாத்திரங்கள் வழங்குகின்ற நிலை, அதேபோல, 10 கோடி ரூபாயில் முகாம், 5 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற மேம்பாடு, 321 சுய உதவிக் குழுக்களுக்கு 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 300 மகளிர் உதவும் சங்கங்களைப் புதிதாகத் துவக்கி சுழல் நிதி வழங்குதல். . . (குறுக்கீடு) தலைப்புகள்தான் சொல்கிறேன்.

பாரதப் பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு பெற இயலாதவர்களுக்கு ரூபாய் 7 கோடி செலவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், மேலும் இந்த ஆண்டு 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அந்த மானியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டயப் படிப்பிற்கு ரூ.2,500/–லிருந்து ரூ.10,000/– ஆகவும், இளநிலை கல்வி மற்றும் அறிவியல் பட்டப் படிப்பிற்கு ரூ3,000/–லிருந்து ரூ.12,000/–ஆகவும், இளநிலை தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு ரூ.5,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவினை வழங்கி ரூபாய் 2 கோடியே 71 இலட்சம் விடுவிக்கப்பட்டு, இன்றைக்கு செயல்படுத்தப்படுகிறது.

முகாமிற்கு உள்ளேயும், வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால சவால்களுக்குத் தீர்வு காண ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் கூட்டங்கள் இதுவரை 5 முறை நடைபெற்றுள்ளன. சட்ட

ஆலோசனைக் குழுக் கூட்டங்களும் தொடர்ந்து நடந்து வருகின்றன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுவாழ்வு முகாம்களில் சிதிலமடைந்துள்ள 7,469 வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்ட முதற்கட்டமாக ரூபாய் 177 கோடி செலவில், 3,510 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு, இப்பணிகள் அனைத்தும் முடிவடையும் நிலையில் உள்ளன. இந்த ஆண்டு மீண்டும் 3,500 வீடுகளுக்கு நிதியுதவி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிக்கும் அனைத்து மக்களுக்கும் உதவும் வகையில் ரூபாய் 196 கோடியே 83 இலட்சம் மதிப்பில், 40 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியும், 500 டன் ஆவின் பால் பவுடரும், 101 டன் உயிர் காக்கும் மருத்துவப் பொருட்கள் இலங்கைக்கு சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, அந்தப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிவிப்புகள் இருந்தால் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுவாழ்வு முகாம்களில் வசிக்கின்ற இலங்கை மக்களுக்கும், தாயகம் திரும்பிய தமிழ் மக்களுக்கும் தொடர்ந்து பல்வேறு நலத் திட்டங்களைச் செய்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் துறை சார்பாக நன்றியினைத் தெரிவித்து நேரத்தின் அருமை கருதி, அயலகத் தமிழர்களின் நலன் தொடர்பாகப் பின்வரும் அறிவிப்புகளை இந்த அவையில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதமுள்ளவற்றை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

அறிவிப்புகள்

பொதுத் (மறுவாழ்வு) துறை

1. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்கூடங்கள் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டுவரும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டு, அவர்கள் அதன்மூலம் தையற்கலை, பாரம்பரிய முறையில் உணவுப் பொருட்கள் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை அவர்கள் வசிக்கும் வீடுகளிலேயே செய்து வருகின்றனர். இதனால் அவர்கள் செய்யும் தொழில்கள்மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதில் சுணக்கம் உள்ளது. அவர்களுக்கென தொழிற்கூடங்கள் (work shed) அமைத்துத் தரும் நேர்வில், அவர்கள் மேற்கொள்ளும் தொழிலினை சீரிய முறையில் செய்வதோடு, அதன்மூலம் பொருள் ஈட்டி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள இயலும். இதன்மூலம் அவர்கள் தொழில் முறையை ஒன்றிணைத்து, வணிகத்துடன் ஒருங்கிணைக்க ஏதுவான சூழல் ஏற்படும்.

முதற்கட்டமாக, 10 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, முகாம் ஒன்றுக்கு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்கூடம் என்ற வகையில் (அதன் நிலையான செலவுகள் உட்பட) 10 முகாம்களில் 3 கோடி ரூபாய் செலவில் 10 தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்.

இரவு 8–40

2. இருநூறு புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் சுழல் நிதி வழங்கப்படும் நிலையில், அவர்களின் சுயசார்புத்தன்மை நிலைநிறுத்தப்படுவதுடன் அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர்கின்றது.

[திரு. செஞ்சி K.S. மஸ்தான்] [2023 ஏப்ரல் 19

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்படும் 321 சுய உதவிக் குழுக்களுக்கு "சமூக முதலீட்டு நிதியாக"தலா ரூபாய் 50,000/-த்துடன் கூடுதலாக ரூபாய் 75,000/- வீதம் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் 2021-2022 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டது. மேலும், புதிதாக 300 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் ரூ.1.25 இலட்சம் சமூக முதலீட்டு நிதியாக 2022-2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், மேலும் 200 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றிற்கு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதம் 200 குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. சுய தொழில்புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு சுய தொழில் தொடங்க 2 கோடி ரூபாய் மூலதன நிதியாக ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரும் அதே வேளையில், சுய தொழில்புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும். இலங்கைத் தமிழர் ஏராளமானோர் படித்தும், தகுதி இருந்தும் அவர்களின் சட்டரீதியான தகுதியின்மையால் வங்கிகளில் கடன் வாங்க இயலாத நிலையில், தினக்கூலி மற்றும் தங்கள் படிப்பிற்கு இணையில்லாத தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இலங்கைத் தமிழர்கள் சிறு மற்றும் குறு தொழில்கள் தொடங்க மூலதன நிதி இரண்டு கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக வழங்கப்படும். இதன் மூலமாக ஆண்டுதோறும் சுழற்சி முறையில் தொழில்முனைவோர் தேர்வு செய்யப்பட்டு மூலதன நிதி வழங்கப்படும்.

4. 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்

இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டு, கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூபாய் 9.50

கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,000 இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நடப்பு ஆண்டிற்கும் நீட்டிக்கப்பட்டு, 2023–2024 ஆம் நிதியாண்டில் மேலும் 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் கல்வி பயின்ற இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதுடன், அவர்களது பொருளாதார நிலையும் மேம்பாடு அடையும்.

5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்தில் வெளிநாட்டு வேலை வேண்டி வருபவர்களின் விண்ணப்பங்களை நேரடியாகப் பெற்று பதிவு செய்து வந்தது. அனைத்துத் தரப்பு மக்களும், தொலைதூர இடத்தில் இருப்பவர்களும் பயனடையும் வகையில் வெளிநாட்டு வேலைக்குச் செல்ல அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ள ஏதுவாக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை, தமிழ்நாடு அரசு தரவுதள மையத்துடன் (Government Data Centre) இணைந்து 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

வெளிநாட்டில் வசிப்பவர்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வழங்கும் சேவைகளை மேம்படுத்தவும் இந்தக் கைபேசி செயலி மற்றும் இருமொழி இணையதளம் உதவிபுரியும்.

6. ரெப்கோ வங்கியில் 10 புதிய வங்கிக் கிளைகள் தொடங்கப்படும்

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி) இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக

நிறுவப்பட்டதாகும். தற்பொழுது, இந்த வங்கி 108 கிளைகளைக் கொண்டு தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இயங்கி வருகிறது. இதில். 83 கிளைகள் தமிழ்நாட்டிலும், 10 கிளைகள் ஆந்திராவிலும், 1 கிளை தெலுங்கானாவிலும், 8 கிளைகள் கர்நாடகாவிலும், 4 கிளைகள் கேரளாவிலும், 2 கிளைகள் புதுச்சேரியிலும் உள்ளன. தாயகம் திரும்பியோர் அதிகம் வசிக்கும் இடங்களில் வங்கியின் வர்த்தகத்திற்கான வாய்ப்புகளைக் கருத்தில்கொண்டு இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 10 புதிய கிளைகள் தொடங்கப்படும். இதற்கான செலவினம் ரெப்கோ வங்கியால் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு இப்போது நான் தெரிவித்துள்ள விளக்கங்கள் திருப்தியளிக்கும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்புடன் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சபையிலுள்ள அனைவருக்கும் நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ரூ.408,07,67,000/–, மூலதனக் கணக்கில் ரூ.74,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.698,53,19,000/–, மூலதனக் கணக்கில் ரூ.150,00,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.8,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.87,66,87,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஊ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.53,33,16,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

(எ) கோரிக்கை எண் 16-நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,33,96,15,000/–, மூலதனக் கணக்கில் ரூ.390,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.112,62,53,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

இரவு 8–45

(ஏ) கோரிக்கை எண் 35-மனிதவள மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 35–மனிதவள மேலாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மனிதவள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.157,65,82,000/-, மூலதனக் கணக்கில் ரூ.2,98,06,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.3,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஐ) கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,208,44,72,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

2023 ஏப்ரல் 19] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (20–4–2023), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

107. 2020–2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தொகுப்பு தணிக்கை அறிக்கை. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2014) 20 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

108. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

109. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

110. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் எழுபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

111. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 52(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

112. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் தணிக்கை

[2023 ஏப்ரல் 19

செய்யப்பட்ட ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 37(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

113. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

307. மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல்) (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

308. மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா) (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

309. மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

310. மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

311. மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

312. மானியக் கோரிக்கை எண் 38–பொது (தேர்தல்கள்)த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 19]

313. மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் (மறுவாழ்வு) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

314. மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

315. மானியக் கோரிக்கை எண் 35–மனித வள மேலாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

316. மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

317. மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறையின் '2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்' என்கிற சிறுநூல். (தமிழ்)

318. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் 'திட்டத் தொகுப்பு' என்கிற சிறுநூல். (தமிழ்)

319. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

320. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

321. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கை. (2021–2023)

2023 ஏப்ரல் 19]

இணைப்பு I

(132 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

சுற்றுலா என்பது வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத் துறையாகும். இது வணிகம், வேலைவாய்ப்பை உருவாக்குதல், முதலீடுகள், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சமூகம் தழுவிய தாக்கத்தை உருவாக்குகிறது. பன்முகத் தன்மை கொண்ட தொழிலாகும். கலாச்சாரம் மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், நிலையான வளர்ச்சி இலக்குகளுக்குத் தேவையான பங்களிப்பை வழங்கும் ஆற்றலை சுற்றுலாத் துறை கொண்டுள்ளது. உலக பயணம் மற்றும் சுற்றுலா அமைப்பு (WTTC) 2022–2032 ஆம் ஆண்டிற்கிடையில், உலகப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் தொழில் துறையின் பங்கு சராசரியாக ஆண்டிற்கு 5.8 விழுக்காடு என்ற விகிதத்தில் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது உலகப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி விகிதத்தைவிட இரு மடங்காகும்.

சுற்றுலாத் தொழில் துறையானது 2021 ஆம் ஆண்டில், கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் வருமானத்தை ஈட்டியுள்ளது. மேலும், 8.2 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

2. இந்தியாவில் சுற்றுலா

வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் பல்வேறு நிலப்பரப்புகள் இந்தியாவை முக்கிய சுற்றுலாத் தலமாக உருவாக்கியுள்ளன. இந்திய நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய பங்களிப்பையும், மில்லியன் வேலைவாய்ப்புகளையும் சுற்றுலாத் துறை வழங்குகிறது. நாட்டிற்கு அன்னியச்

[2023 ஏப்ரல் 19

செலாவணியை ஈட்டுவதில் சுற்றுலாத் துறை தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருகிறது. ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட இந்திய சுற்றுலா புள்ளிவிவர அறிக்கை 2022-ன்படி, 2020 ஆம் ஆண்டில் 6.959 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ள சுற்றுலாப் பிரிவின் அந்நியச் செலாவணி வருவாய் (FEE), 2022-ல் 8.797 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்து 26.4 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. உலகப் பயணம் மற்றும் சுற்றுலா அமைப்பின் (WTTC) கூற்றுப்படி, சுற்றுலாத் தொழிலில் 178 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாயை இந்தியா ஈட்டியுள்ளது. இது 2021-ல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.8 விழுக்காடு ஆகும். சுற்றுலாத் தொழில் 32 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி, இந்தியாவின் மொத்த வேலைவாய்ப்புகளில் 7 விழுக்காடு பங்களிப்பை வழங்கி உள்ளது. மேலும், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் 94 விழுக்காடு செலவிடப்படுகிறது.

இந்தியாவில் சுற்றுலாவை ஊக்கப்படுத்துவதிலும், மேம்படுத்துவதிலும் ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் முக்கியப் பங்காற்றுகிறது. அதன் முக்கியச் செயல்பாடுகளான சுற்றுலாத் தலங்களை அடையாளம் காணுதல், மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலாப் பிரிவுகளைப் பிரபலப்படுத்துதல், சுற்றுலாத் தொழிலின் உள்கட்டமைப்பு, திறன் மேம்பாடு, நாடு முழுவதும் சுற்றுலாக் கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதை எளிதாக்குதல் ஆகியவை அடங்கும். இந்தியாவில் சுற்றுலாத் துறையின் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம், மாநில அரசுகள் மற்றும் தனியார் துறையுடன் இணைந்து செயல்படுகிறது.

3. தமிழ்நாட்டில் சுற்றுலா

இந்திய துணைக்கண்டத்தில் தமிழ்நாடு பல்வேறு வகையான நிலப்பரப்புகளைக் கொண்டுள்ளது. பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்திற்கும், விருப்பங்களுக்கும் ஏற்றவாறு பல்வேறு சுற்றுலாத் தலங்கள் இம்மாநிலத்தில் உள்ளன.

மாநிலத்தின் சிறப்பம்சங்கள்

I. மதுரை மீனாட்சி அம்மன் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயில்,

2023 ஏப்ரல் 19]

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில் போன்ற 36,627-க்கும் அதிகமான பழமைவாய்ந்த கோயில்கள் உள்ளன.

II. *தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த கடற்கரைகளில் 13 விழுக்காட்டிற்கும் அதிகமானதாகும்.*

III. *பரதநாட்டியம், கர்நாடக இசை மற்றும் பிற 100 நாட்டுப்புற கலைகளைக் கொண்டுள்ளது.*

IV. *17 வன விலங்குச் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 17 பறவைகள் சரணாலயங்கள் மற்றும் 5 புலிகள் காப்பகங்கள் உள்ளன.*

V. *யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட பின்வரும் 6 உலக பாரம்பரிய சின்னங்கள் உள்ளன:-*

1. மாமல்லபுர நினைவுச் சின்னங்கள்

2. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்

3. அரியலூர் கங்கைகொண்டசோழபுரம் கோயில்

4. தாராசுரத்தில் உள்ள ஐராவதீஸ்வரர் கோயில்

5. நீலகிரி மலை இரயில்

6. மேற்கு தொடர்ச்சி மலைத்தொடர்

துடிப்பான கலாச்சாரங்கள், பல்வேறு வகையான இயற்கை நிலப்பரப்புகள், பழமையான பாரம்பரியம் மற்றும் வரலாறு ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதன்மூலம், தமிழ்நாட்டை வளமான அனுபவங்களை வழங்கும் விரும்பத்தக்க மாநிலமாக மாற்றுவது மாநில அரசின் நோக்கமாக உள்ளது.

இனிவரும் காலங்களில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக சுற்றுலாத் துறை பத்து சுற்றுலாப் பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளது.

1. *பாரம்பரியம் மற்றும் ஆன்மிகச் சுற்றுலா*
2. *கடற்கரைச் சுற்றுலா*
3. *சாகசச் சுற்றுலா*
4. *சுற்றுச்சூழல் மற்றும் வனச் சுற்றுலா*

5. மருத்துவம் மற்றும் உடல்நலம் பேணும் (Medical & Wellness) சுற்றுலா

6. வணிகச் (MICE) சுற்றுலா

7. கிராமிய மற்றும் மலைத்தோட்டப் பயிர் சுற்றுலா

8. கேரவன் (Caravan) சுற்றுலா

9. பண்பாட்டுச் சுற்றுலா

10. உணவுச் சுற்றுலா

இணைப்பு வசதிகள்

மாநிலத்தின் சிறப்பான அமைவிடம், வலுவான உள்கட்டமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட சாலை இணைப்புகள் ஆகியவை சுற்றுலாத் தலங்களை எளிதில் அடைய ஏதுவாக உள்ளன.

விமான நிலையங்கள்

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு பன்னாட்டு விமான நிலையங்களும், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய இரண்டு உள்நாட்டு விமான நிலையங்களும் உள்ளன.

துறைமுகங்கள்

தமிழ்நாட்டில் சென்னை, தூத்துக்குடி, எண்ணூர் ஆகிய மூன்று பெரிய துறைமுகங்களும், 17 சிறு துறைமுகங்களும் உள்ளன.

இரயில் இணைப்புகள்

தேசிய அளவிலான சராசரி விகிதத்தைவிட அதிகமான இரயில் இணைப்புகளைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட தெற்கு இரயில்வே, 4,000 கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட நன்கு மேம்படுத்தப்பட்ட இரயில் இணைப்புகள்மூலம் மாநிலத்தின் அனைத்து இடங்களையும் இணைக்கின்றன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவை மாநிலத்தின் முக்கிய இரயில் சந்திப்புகளாகும்.

2023 ஏப்ரல் 19]

சாலை இணைப்புகள்

தமிழ்நாட்டில் 70,562 கி.மீ. கொண்ட நன்கு மேம்படுத்தப்பட்ட சாலை இணைப்புகள் மாநிலத்தில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் இணைக்கின்றன.

சுற்றுலாத் துறை

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் 30.6.1971-ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், 1.4.1995-ல் சுற்றுலாத் துறையும் உருவாக்கப்பட்டன. இவற்றின் நிர்வாக அமைப்பு விவர அட்டவணை இணைப்பு I மற்றும் இணைப்பு II-ல் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் முக்கியப் பெருநகரங்களில் சுற்றுலாத் துறை 38 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 22 சுற்றுலாத் தகவல் மையங்களைக் கொண்டுள்ளது.

சுற்றுலா குறித்த தகவல்களை அளித்தல், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களை நடத்துதல், பயணச் சந்தைகளில் பங்கேற்றல், பிற மாநிலச் சுற்றுலாத் துறைகளுடன் தொடர்பில் இருத்தல் மற்றும் பிற சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை இவ்வலுவலகங்கள்மூலம் சுற்றுலாத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் பட்டியல்கள் இணைப்பு III மற்றும் IV-ல் அளிக்கப்பட்டுள்ளன.

3.1. சுற்றுலாத் துறையின் குறிக்கோள்கள்

- *தேசிய மற்றும் உலகளவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாகத் தமிழ்நாட்டினை மேம்படுத்துதல்.*
- *தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பண்பாடு, பாரம்பரியம் மற்றும் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னங்களின் கட்டடக் கலையினைக் காட்சிப்படுத்துதல்.*
- *மாநிலத்தில், புதிய சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்கெனவே உள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல்.*

- அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல்.
- தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, உலகத்தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.
- நாட்டின் அந்நியச் செலாவணியினைப் பெருக்குதல்.
- சுற்றுலாத் தொழில் துறையில், வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கான வழிவகைகளை உருவாக்குதல்.

3.2. உத்திகள்

- சுற்றுலாச் சுற்றுக்களில் ஒருங்கிணைந்த சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- மேம்படுத்தப்பட்ட இணைப்பு, உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் சுற்றுலா நட்புச் சேவைகளை அளித்தல்.
- பல்வேறு முகமைகளுக்கிடையே ஒத்துழைப்புடன்கூடிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார ரீதியான நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலாவில் தனியார் மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- திறன் வளர்ச்சி மற்றும் மனிதவள மேம்பாடு.
- உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் வர்த்தக சந்திப்புகள், சுற்றுலாச் சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்று தமிழ்நாட்டினை விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலா சார்ந்த கூட்டங்கள், ஊக்கத்தொகை, மாநாடுகள், கண்காட்சிகள் (MICE-Meetings, Incentives, Conventions, Exhibitions) மற்றும் வணிக வாய்ப்புகள் மிகுந்த சுற்றுலாப் பிரிவுகளை (Niche Tourism) வளர்ச்சிக்காக மேம்படுத்துதல்.

தனித்துவமான சுற்றுலா நிலைப்பாடுகளை வழங்குவதன்மூலம் முடிவே இல்லாத நிகழ்வுகளைக் கொண்ட (where Stories never

2023 ஏப்ரல் 19]

end) *மாநிலமாகத் தமிழ்நாட்டை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கோயில்கள் மற்றும் பாரம்பரிய நினைவுச் சின்னங்களைக் கடந்து, சுற்றுச்சூழல் சுற்றுலா, உடல்நலம் பேணும் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா, வனச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, கிராமியச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா மற்றும் பாரம்பரியச் சுற்றுலா என எண்ணற்ற சுற்றுலாப் பிரிவுகள் காட்சிப்படுத்தப்படுகின்றன.*

மேலும், சொகுசு கப்பல் சேவை, திறந்தவெளி முகாம்கள் மற்றும் கேரவன் வாகனச் சுற்றுலா போன்ற புதிய சுற்றுலாக்களை அறிமுகப்படுத்துவதன்மூலம், சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகள், சுற்றுலாத் தலங்களில் சிறந்த உள்கட்டமைப்புகளை வழங்குவதுடன், மாநிலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

4. தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை

சுற்றுலாச் சேவைத் துறை தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டின் புவியியல், கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை ஆகியவை காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் இந்தியாவில் அதிகம் பார்வையிடப்படும் மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. 2021 ஆம் ஆண்டில், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முதலிடத்தையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இரண்டாவது இடத்தையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை

2021 ஆம் ஆண்டில், 115 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகைப் புரிந்துள்ளனர். இது உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 17.02 விழுக்காடு ஆகும். கடந்த ஏழு ஆண்டுகளில், ஆறு ஆண்டுகள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு தனது முன்னணி நிலையைத் தொடர்ந்து நிலைநிறுத்தி, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முதலாவது இடத்தைப் பெற்று வருகிறது.

[2023 ஏப்ரல் 19

2021 ஆம் ஆண்டில் உலகளாவிய சுற்றுலா மீட்டுருவாக்கத்தில் இந்தியாவின் வளர்ச்சி 11.05 விழுக்காடாக உள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கோவிட் பெருந்தொற்றுக்கு முந்தைய காலத்தை ஒப்பிடுகையில், தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தோராயமாக 45 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை

2021 ஆம் ஆண்டில் கோவிட்-19 வைரஸ் தொற்று கட்டுப்பாடு இருந்தபோதிலும், தமிழ்நாட்டிற்கு 1.23 மில்லியன் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகைப் புரிந்துள்ளனர். மேலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டிற்கான சுற்றுலாப் பயணிகள் வருகையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா, ஜெர்மனி, ரஷ்யா, இலங்கை மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 6 யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தலங்களில் ஒன்றான மாமல்லபுர நினைவுச் சின்னங்கள் 1,44,984 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் மாமல்லபுரம் முதலிடத்திலும், தாஜ்மஹால் 38,922 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டு இரண்டாம் இடத்திலும் உள்ளன. இது இந்தியாவிற்கு வருகைப் புரிந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் 45 விழுக்காடு ஆகும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் 10 பிரபலமான பாரம்பரிய நினைவுச் சின்னங்களின் பட்டியலில், திருமயம் கோட்டை அருங்காட்சியகம், வட்டக்கோட்டை, செஞ்சிக் கோட்டை, சித்தன்னவாசல், குடைவரை ஜெயின் கோயில் மற்றும் சாலுவன்குப்பம், புலிக்குகைக் கோயில் உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாட்டிற்கு வருகைப் புரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இருப்பினும், 2021-ல், கோவிட் வைரஸ் கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று குறைந்துள்ளது.

2023 ஏப்ரல் 19]

தமிழ்நாட்டிற்கு வருகைப் புரிந்த சுற்றுலாப் பயணிகளின் விவரம்

ஆண்டு	உள்நாடு	வெளிநாடு	மொத்தம்
	(இலட்சத்தில்)		
2017	3450.61	48.60	3499.21
2018	3859.09	60.73	3919.82
2019	4948.64	68.66	5017.30
2020	1406.51	12.28	1418.79
2021	1153.36	12.30	1165.66
2022 #	2185.04	4.07	2189.11

– தற்காலிகமானது

சுற்றுலா ஆய்வு – 38 மாவட்டங்கள்

ஐக்கிய நாடுகளின் உலகச் சுற்றுலா அமைப்பு (UNWTO) பரிந்துரைத்துள்ள விதிமுறைகளின்படி, மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களில் ஆய்வு செய்து, தங்கும் இடங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை குறித்து கணக்கெடுக்கப்படும். இக்கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக 13 மாத கால அளவில் நடைபெறும்.

நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

ஐக்கிய நாடுகள் சபையானது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் வளர்ச்சியை ஏற்படுத்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) வகுத்துள்ளது. 17 நிலையான வளர்ச்சி இலக்குகளான வறுமை, பசி, சுகாதாரம், கல்வி, புவி வெப்பமடைதல், பாலின சமத்துவம், நீர், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நீதி உள்ளிட்ட பல்வேறு சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிகளை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான 8-வது இலக்காகிய, நீடித்த, உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது மற்றும் அனைவருக்கும் தரமான வேலைவாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு, சுற்றுலாத் துறைக்குப் பின்வரும் இலக்கினை நிர்ணயித்துள்ளது.

"உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்து, 2030-க்குள் செயல்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்".

இந்த இலக்கை அடைய, சுற்றுலாத் துறையால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விவரம்:

1. பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம்களை உருவாக்குதல்.
2. சுற்றுலா வழிகாட்டிகளின் பதிவுகளை மேற்கொள்ளவும், தரமான பயிற்சி அளிக்கவும், அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் அதன்மூலம் அவர்களின் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்தவும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.
3. சுற்றுலாக் கொள்கையின் நோக்கங்களாக சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்குவதன்மூலம் சுற்றுலாத் தொழில்முனைவோர்களை அதிகளவில் ஈர்த்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழிலில் முதலீட்டை அதிகரித்தல்.
4. மாநிலத்தின் உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் இந்திய நடன விழா, வீர விளையாட்டு விழா கிராமப்புற விளையாட்டு மற்றும் சென்னை விழா தேசிய கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி கண்காட்சி போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடத்துதல்.
5. முக்கியச் சுற்றுலாப் பிரிவுகளான சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் சாகசச் சுற்றுலா போன்ற சுற்றுலாப் பிரிவுகளை மேம்படுத்துவதன்மூலம் வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்துவதுடன் உள்ளூர் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துதல்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் மேற்குறிப்பிட்ட முயற்சிகள்மூலம் மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

2023 ஏப்ரல் 19]

5. பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்

தமிழ்நாடு துடிப்பான பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் சங்கமம் ஆகும். மாநிலத்தின் வளமான கலாச்சாரம், சிறந்த கலைப் படைப்புகள், கட்டடக் கலை அற்புதங்கள், உயர்ந்த பாரம்பரியம், பாரம்பரியக் கைவினைப்பொருட்கள், உணவு வகைகள் மற்றும் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைப் பிரபலப்படுத்துவதற்காக சுற்றுலாத் துறை ஆண்டு முழுவதும் நடைபெறும் ஏராளமான கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களில் பங்கு கொள்கிறது.

5.1 சுற்றுலாத் துறைமூலம் நடத்தப்படும் விழாக்கள்

5.1.1. இந்திய நாட்டிய விழா

உலகப் புகழ் பெற்ற இந்திய நாட்டிய விழா ஆண்டுதோறும் மாமல்லபுரத்தில் டிசம்பர் முதல் ஜனவரி வரை நடத்தப்படுகிறது. இதில் இந்தியாவின் பல்வேறு மாநில நடன வடிவங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இந்நாட்டிய விழாவினைக் காண ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க மாமல்லபுரத்திற்கு வருகை புரிகின்றனர். இந்த ஆண்டு, இந்திய நாட்டிய விழா 23.12.2022 முதல் 12.1.2023 வரை மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக சென்னை தீவுத்திடலில், கலை நிகழ்ச்சிகள் 4.1.2023 முதல் 11.1.2023 வரை மற்றும் 18.1.2023 முதல் 22.1.2023 வரை நடைபெற்றன. இவ்விழாவில் 50-க்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

5.1.2 தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா

பொங்கல் பண்டிகையையொட்டி பொள்ளாச்சியில் உள்ள ஆச்சிப்பட்டியில் 8-வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா 13.1.2023 முதல் 15.1.2023 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இத்திருவிழாவில் ஸ்பெயின், பிரேசில், இங்கிலாந்து, அமெரிக்கா, தாய்லாந்து, கனடா, பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் வியட்நாம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் 12 வண்ணமயமான வெப்பக்காற்று பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

இவ்விழாவில் அமைதியான மற்றும் பசுமையான பொள்ளாச்சி சூழலில் பறக்கவிடப்பட்ட வெப்பக்காற்று பலூன்கள் 25,000-க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வானத்தை அலங்கரித்தன. இந்நிகழ்வு பங்கேற்பாளர்கள் மற்றும் சாகச ஆர்வலர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்தது.

5.1.3 கோடைவிழாக்கள்

உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய மலைவாசஸ்தலங்களில் கோடைகாலங்களில் கோடைவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இவை சுற்றுலாப் பயணிகள் மலைவாசஸ்தலங்களின் இதமான காலநிலையை அனுபவிக்கவும், இயற்கை எழில் கொஞ்சும் அழகினை இரசிக்கவும் உதவுகின்றன.

தமிழ்நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களை பற்றி சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில் ஆண்டு முழுவதும் சுற்றுலா விழாக்களை நடத்துவதுடன் பல்வேறு விழாக்களிலும் சுற்றுலாத் துறை பங்கு கொள்கிறது.

5.1.4 சர்வதேச பட்டம் திருவிழா

தமிழ்நாடு சர்வதேச பட்டம் விடும் திருவிழாவின் முதற்பதிப்பு 13.8.2022 முதல் 15.8.2022 வரை மூன்று நாட்கள் மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பல்வேறு நாடுகளையும், மாநிலங்களையும் குறிக்கும் வகையில் பல்வேறு வகையிலான பட்டங்கள் பறக்கவிடப்பட்டன. தாய்லாந்து, அமெரிக்கா மற்றும் மலேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் தங்கள் பட்டம் விடும் திறமைகளை வெளிப்படுத்தி விழாவில் உற்சாகமான சூழலை ஏற்படுத்தினர்.

5.1.5 2022-2023-ன் விழாக்கள் குறித்த விவரங்கள்

விழாக்கள்	மாதம் மற்றும் வருடம்
கண்ணகிக் கோவில் திருவிழா, தேனி	ஏப்ரல் 2022
பல்வேறு இடங்களில் புத்தகத் திருவிழாக்கள்	ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை

2023 ஏப்ரல் 19]

விழாக்கள்	மாதம் மற்றும் வருடம்
வாவ் தமிழ்நாடு போட்டோ மற்றும் வீடியோ போட்டி விருதுகள் வழங்கும் விழா, சென்னை	ஏப்ரல் முதல் மே 2022 வரை
ஏற்காடு கோடை விழா-2022	மே முதல் ஜுன் 2022 வரை
மதுரை சித்திரைத் திருவிழா-2022	மே முதல் ஜுலை 2022 வரை
உதகமண்டலம் கோடை விழா-2022	மே 2022
கட்டபொம்மன் திருவிழா, பாஞ்சாலங்குறிச்சி	மே 2022
கடலூர் கோடை விழா-2022	ஜுன் 2022
வங்காள சுற்றுலா விழா, கொல்கத்தா	ஜுன் 2022
கொடைக்கானல் கோடை விழா-2022	ஜுன் முதல் ஜுலை 2022 வரை
7-வது தேசிய சுற்றுலா முதலீட்டாளர்கள் மாநாடு, புதுதில்லி	ஜுலை 2022
தமிழ்நாடு சர்வதேச பட்டம் திருவிழா, மாமல்லபுரம்	ஆகஸ்ட் 2022
குற்றாலம் சாரல் விழா-2022	ஆகஸ்ட் 2022
வல்வில்ஓரி திருவிழா-2022, கொல்லிமலை, நாமக்கல்	ஆகஸ்ட் 2022
ஆடி திருவாதிரை திருவிழா, கங்கைகொண்டசோழபுரம்	ஆகஸ்ட் 2022
ஆடிப்பெருக்கு, ஒகேனக்கல்	ஆகஸ்ட் 2022
அரசு பொருட்காட்சி, சேலம்	ஆகஸ்ட் முதல் செப்டம்பர் 2022 வரை

விழாக்கள்	மாதம் மற்றும் வருடம்
அரசு பொருட்காட்சி, திருநெல்வேலி	ஆகஸ்ட் முதல் செப்டம்பர் 2022 வரை
உலக சுற்றுலா தின விழா, அனைத்து மாவட்டங்கள்	செப்டம்பர் 2022
உலக சுற்றுலா தின விழா, ஸ்கால் கிளப், கோயம்புத்தூர்	செப்டம்பர் 2022
பர்யதான் பர்வ்-2022, மும்பை	செப்டம்பர் முதல் அக்டோபர் 2022 வரை
இந்திய நாட்டிய திருவிழா, மாமல்லபுரம்	டிசம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை
கலை நிகழ்ச்சிகள், தீவுத்திடல், சென்னை	ஜனவரி 2023
பொங்கல் விழா	ஜனவரி 2023
தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, பொள்ளாச்சி	ஜனவரி 2023
மார்கழி கிராமிய திருவிழா, தக்ஷின்சித்ரா, சென்னை	ஜனவரி 2023
பாரத் பர்வ் 2023, புதுதில்லி	ஜனவரி 2023
மண்வாசனை, சென்னை	மார்ச் 2023
உமாஜின், சென்னை	மார்ச் 2023
இந்திய பொறுப்பியல் சுற்றுலா விருதுகள் மற்றும் மாநாடு	மார்ச் 2023

5.2 உள்நாட்டில் பிரபலப்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலாத் தலங்களைப் பிரபலப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் உள்ள சுற்றுலாப் பங்குதாரர்களுடனான

2023 ஏப்ரல் 19]

கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்கும் சுற்றுலாத் துறை இந்தியா முழுவதும் நடைபெறும் பல்வேறு உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்கிறது. பல்வேறு மாநிலச் சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்றச் சுற்றுலாத் தொழில் நிறுவனங்கள் இந்த பயணச் சந்தைகளை ஏற்பாடு செய்கின்றன. இப்பயணச் சந்தைகள் தமிழ்நாட்டினை சுற்றுலாவில் விரும்பத்தக்க மாநிலமாக நிலைநிறுத்த ஒரு தளமாக அமைகிறது.

5.2.1 உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள், 2022-2023

உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்	மாதம் மற்றும் வருடம்
தெற்காசிய பயணம் மற்றும் சுற்றுலா பரிமாற்றச் சந்தை (SATTE), புதுதில்லி	மே 2022
பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி (TTF), கொல்கத்தா	ஜூலை 2022
பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி (TTF), அகமதாபாத்	செப்டம்பர் 2022
இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி (IITF), புதுதில்லி	நவம்பர் 2022
பயணம் மற்றும் சுற்றுலாச் சந்தை (TTB), ராஞ்சி	நவம்பர் 2022
தெற்காசிய பயணம் மற்றும் சுற்றுலா பரிமாற்றம் விழா, ஜென்எக்ஸ் 2022, (SATTE GenX) சென்னை	நவம்பர் 2022
இந்திய பயண ஏற்பாட்டாளர்கள் சங்க மாநாடு, லக்னோ	டிசம்பர் 2022
வெளிநாட்டு பயணச் சந்தை (OTM), மும்பை	பிப்ரவரி 2023
தெற்காசிய பயணம் மற்றும் சுற்றுலா பரிமாற்றச் சந்தை (SATTE), புதுதில்லி	பிப்ரவரி 2023

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி (TTF), சென்னை	பிப்ரவரி 2023
36-வது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப்பொருட்கள் கண்காட்சி-2023, சூரஜ்குண்ட், பரிதாபாத், ஹரியானா	பிப்ரவரி 2023
இந்திய பயணம் மற்றும் சுற்றுலாக் கண்காட்சி, பூரி, ஒடிசா	பிப்ரவரி 2023

5.3 சர்வதேச அளவில் பிரபலப்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை உலக அளவில் சுற்றுலாவை மேம்படுத்தும் பணியில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் சுற்றுலாத் தலங்களை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குக் காட்சிப்படுத்துவதற்காக சுற்றுலாத் துறை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களைப் பிரபலப்படுத்தவும், நமது துடிப்பான கலாச்சாரம், பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை சர்வதேசப் பயணச் சந்தைகளில் காட்சிப்படுத்தவும் பல்வேறு சுற்றுலாத் தொழில் முனைவோர்களுடன் இணைந்து பங்கேற்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தங்கும் விடுதி உரிமையாளர்கள், சுற்றுலாப் பயண முகவர்கள் மற்றும் பயண ஏற்பாட்டாளர்கள் சுற்றுலாத் துறையுடன் இணைந்து பயணச் சந்தைகளில் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். வெளிநாட்டுப் பயணச் சந்தைகளின்போது, சுற்றுலாவை மேம்படுத்த பல்வேறு சுற்றுலாப் பயண செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் தமிழ்நாடு சுற்றுலாவை மேலும் வலுப்படுத்துகின்றன. இதன்மூலம் தமிழ்நாட்டிற்கு வருகைப் புரியும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது.

5.3.1 வெளிநாட்டுப் பயணச் சந்தைகள்/கண்காட்சிகள், 2022-2023

வெளிநாட்டுப் பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்	மாதம் மற்றும் வருடம்
உலகப் பயணச் சந்தை, லண்டன்	நவம்பர் 2022
சர்வதேச சுற்றுலாச் சந்தை, பெர்லின்	மார்ச் 2023

மலேசிய சுற்றுலா மற்றும் பயண முகவர்கள் சங்கம் (MATTA) கண்காட்சி, கோலாலம்பூர், மலேசியா	மார்ச் 2023

1. உலகப் பயணச் சந்தை (WTM), லண்டன்

லண்டனில் நடைபெற்ற பயணம் மற்றும் சுற்றுலாத் தொழிலுக்கு புகழ்பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியான World Travel Market விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றது. இக்கண்காட்சி 2022 நவம்பர் 6 முதல் 8 வரை லண்டனில் நடைபெற்றது. இதில் சுற்றுலா வல்லுநர்கள், கண்காட்சியாளர்கள், அமைப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பங்கேற்றுச் சுற்றுலாத் தொழில் குறித்து தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும், ஸ்காட்லாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தில் தமிழ்நாட்டு சுற்றுலாத் தலங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் மற்றும் வணிகர்களுக்கு இடையிலான (B2B) வாய்ப்புகளை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் நடத்தப்பட்டன.

சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள், ஸ்காட்லாந்து

தமிழ்நாடு சுற்றுலாவைப் பிரபலப்படுத்துவதற்குத் தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் 5.11.2022 அன்று ஸ்காட்லாந்தில் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இது கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள் மற்றும் தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கான ஒரு சிறந்த நிகழ்வாக அமைந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களிடம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பல்வேறு சுற்றுலாத் தொகுப்புகள் பற்றி விளக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா மற்றும் சுற்றுலா பங்குதாரர்களுக்கிடையே சுமுகமான மற்றும் கூட்டாண்மைக்கான வாய்ப்பை இந்த நிகழ்வு வழங்கியது.

சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள், லண்டன்

மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான முக்கிய சந்தையாக லண்டனை தமிழ்நாடு சுற்றுலாத் துறை அடையாளம்

கண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், தமிழ்நாட்டிற்கு வருகைப் புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், லண்டன் மாநகரில் 7.11.2022 அன்று லண்டன் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் மற்றும் நகர பிரதிநிதிகளுக்காக சுற்றுலாத் துறைமூலம் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் நடத்தப்பட்டன.

சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள், வட அயர்லாந்து

வடக்கு அயர்லாந்தில் 6.11.2022 அன்று தமிழ்நாடு சுற்றுலாத் துறை தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மற்றும் அங்குள்ள சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் முகவர்களைத் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் ஈர்க்கவும் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்பினை நடத்தியது. இந்தச் சுற்றுலாப் பயணச் செயல்பாட்டாளர்களின் சந்திப்பின்போது பங்கேற்பாளர்களிடம் தமிழ்நாட்டின் வளமான கலாச்சார மற்றும் பாரம்பரியமிக்க சுற்றுலாத் தலங்கள், தனித்துவமான அனுபவங்கள், தங்குமிடம், போக்குவரத்து, விற்பனை முகவர் குறித்த விவரங்கள் மற்றும் விளம்பரச் சலுகைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

2. சர்வதேசச் சுற்றுலாச் சந்தை (ITB), பெர்லின்

ஜெர்மனியில் பெர்லின் நகரில் நடைபெறும் சர்வதேசச் சுற்றுலாச் சந்தை (ITB) முன்னணி சுற்றுலாச் சந்தைகளில் ஒன்றாகும். மேலும், இது சுற்றுலாத் தொழிலின் சலுகைகள் மற்றும் சந்தைப்படுத்துதலைப் பல்வேறு சுற்றுலாச் செயல்பாட்டாளர்களுக்கு வழங்கும் இடமாக அமைகிறது. 7.3.2023 முதல் 9.3.2023 வரை நடைபெற்ற சர்வதேசச் சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றது. இப்பயணச் சந்தையில் சுற்றுலாப் பயண அமைப்பு நிறுவனங்கள், சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், சர்வதேசச் சுற்றுலாக் கழகங்கள் மற்றும் சுற்றுலாப் பங்குதாரர்கள் பங்கேற்றனர்.

கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு 2022-2023 சர்வதேசப் பயணச் சந்தைகள் சுற்றுலாத் தொழிலின் மீட்சிக்கு ஒரு சான்றாக விளங்குகின்றன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

தமிழ்நாடு — செக் குடியரசு ஒருங்கிணைப்பு

ஜனவரி 2023-ல் செக் குடியரசின் பிரதிநிதிகள் குழு தமிழ்நாட்டிற்கு வருகைப் புரிந்தனர். அவ்வமயம் செக் குடியரசிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிப்பதற்கும், சுற்றுலாச் செயல்பாட்டாளர்கள் சந்திப்புகளை நடத்தவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

மார்ச் 13, 2023 அன்று, ப்ராக் நகரில், பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தின் துணை அமைச்சர் திரு. ஜான் ஃப்ளேக்ஸா தலைமையிலான குழுவுடன் சுற்றுலாத் துறையின் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. செக் குடியரசின் பிராந்திய மேம்பாட்டு அமைச்சகப் பிரதிநிதிக் குழுவில், சர்வதேச சந்தைப்படுத்தல் – புதிய சந்தைகள், செக் சுற்றுலா (தேசிய சுற்றுலா நிறுவனம்), செக் குடியரசின் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் பயண முகவர்கள் சங்கம், செக் டிராவல் ஏஜென்சிகள் சங்கம், சுற்றுலாத் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்குவர். செக் குடியரசின் பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம், சுற்றுப்பயண அமைப்பாளர்களிடையே B2B *(வணிகர்கள் இடையிலான) ஒத்துழைப்பின் சாத்தியமான பகுதிகளை ஆராய்வதற்கும், வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்றவாறு சுற்றுலாத் தொகுப்புகளை உருவாக்குவதற்கும், இந்தியாவில் உள்ள முக்கியமான கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களில் பங்கேற்பதற்கும், தமிழ்நாடு சுற்றுலாவை மேம்படுத்த பயண செயல்பாட்டாளர்களின் சந்திப்புகள் மற்றும் சுற்றுலா குறித்த தகவல்களை உள்ளூர் ஊடகங்களில் வெளியிடுவதும் இச்சந்திப்பின் நோக்கமாக இருந்தது.*

செக் குடியரசின் கலாச்சார அமைச்சக அதிகாரிகளுடன் மற்றொரு சந்திப்பு நடத்தப்பட்டது. இச்சந்திப்பின்போது, பிராந்திய கலாச்சாரப் பரிமாற்றங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு இடையில் மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கிடையேயான கலாச்சாரம் குறித்த கலந்தாய்வு, திருவிழாக்கள் மற்றும் கண்காட்சிகளில் கலைஞர்கள் பங்கேற்பது மற்றும் பரஸ்பர கலாச்சாரம் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், பாரம்பரிய யுனெஸ்கோ நினைவுச் சின்னங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், பயிற்சிப் பட்டறைகளை நடத்துவது குறித்தும் பிரதிநிதிகளால் விவாதிக்கப்பட்டது.

சுற்றுலாத் தொழிலில் தமிழ்நாடு மற்றும் செக் குடியரசின் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், இரு நாடுகளுக்கிடையேயான சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிப்பதையும் இக்கலந்துரையாடல்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன.

5.4 விருதுகள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2022-2023 ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகளைப் பெற்றுள்ளது.

1. 24.2.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள்-2022 விழாவில் சிறந்த கடற்கரைகள் மற்றும் கடற்கரைத் தலத்திற்கான விருது கன்னியாகுமரி மாவட்டத்தின் லெமூர் கடற்கரைக்கு வழங்கப்பட்டுள்ளது.
2. "ஆன்மிக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதினை 16.11.2022 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற டிராவல் + லீஷர் இந்தியா மற்றும் தெற்காசியாவின் 11-வது பதிப்பு விழாவில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றுள்ளது.
3. "சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்ததற்கும், சேவைத் தரத்தை மேம்படுத்தியதற்கும்" சுற்றுலாப் பிரிவில் "வெள்ளி" விருதை 88-வது SKOCH உச்சி மாநாட்டில் 18.1.2023 அன்று தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றுள்ளது.
4. இந்தியாவில் பிரமிக்கவைக்கும் மலைக் காட்சிகளுக்கான சிறந்த இடத்திற்கான பிரிவில் புதுடெல்லியில் அவுட்லுக் டிராவலர் விருதுகள்-2022 விழாவில் நீலகிரி மாவட்டம், குன்னூர் "வெள்ளி" விருதை 24.8.2022 அன்று பெற்றது.
5. கிரேக்கத்தின் ஏதென்ஸில் செப்டம்பர் 2022-ல் நடைபெற்ற "எதிர்காலத்தில் சுற்றுலா" உச்சி மாநாட்டில் "பசுமை இடங்களுக்கான சிறந்த 100 நிலைத்தன்மைக் கதைகளுக்கான விருதுகள் 2022"-ன்கீழ் ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டன.
6. "இந்தியாவின் சிறந்த பாரம்பரிய தலத்திற்கான" விருது தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு 8.3.2023 அன்று

பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் 2023 நிகழ்ச்சியில் பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) வழங்கப்பட்டது.

7. "இந்தியாவின் சிறந்த சுற்றுலா அமைச்சர் 2023" என்ற விருது தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமசந்திரன் அவர்களுக்கு பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) 8.3.2023 அன்று பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது.

8. இந்தியப் பொறுப்பியல் சுற்றுலா விருதுகள் 2023 (India Responsible Tourism Awards 2023) மாநாடு தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வைத் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் ஒருங்கிணைப்புடன் அவுட்லுக் டிராவலர் ஏற்பாடு செய்தது. இவ்வருடாந்தர விருது நிகழ்வுகள், நாட்டில் பொறுப்பியல் பயணம் மேற்கொள்பவர்களை அங்கீகரித்து பாராட்டுகிறது. 17.3.2023 அன்று உதகமண்டலத்தில் நடந்த IRTA 2023 விழாவில், தங்கும் உறைவிடப் பிரிவின் கீழ் (Homestay) நிலையான தலைமைத்துவத்தில் சிறிய உள்ளூர் தங்கும் விடுதிப் பிரிவில், வெள்ளி விருது "ஜேக்கப் அண்ட் க்ளோஸ்டர் ஃபார்ம்ஸ், சென்னைக்கு வழங்கப்பட்டது.

6. உலகச் சுற்றுலா தின விழா கொண்டாட்டங்கள்

சுற்றுலாவின் சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் பொருளாதார தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த சர்வதேச உலகச் சுற்றுலா தினம் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 27 அன்று ஐக்கிய நாட்டு உலகச் சுற்றுலா அமைப்பால் (UNWTO) அறிவிக்கப்பட்டு, கொண்டாடப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில், உலகச் சுற்றுலா தினத்திற்கான கருப்பொருள் "சுற்றுலாவை மறுபரிசீலனை செய்வது". இது தற்போதைய சுற்றுலா நடைமுறைகள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் விளைவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

உலகச் சுற்றுலா தினம் (World Tourism Day) 2022-ஐ முன்னிட்டு சுற்றுலாத் துறை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த

[2023 ஏப்ரல் 19

கலாச்சார நிகழ்ச்சிகள், தூய்மைப் பிரச்சாரங்கள், கருத்தரங்குகள் மற்றும் சிறப்புக் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சென்னையில் உலகச் சுற்றுலா தினம்-2022-ன் ஒரு பகுதியாகக் கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

1. தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் முதன்முறையாக வழங்கப்பட்டன.
2. "Influencers on Wheels" என்ற டிஸ்கவர் தமிழ்நாடு 2.0 நிகழ்ச்சி 27.9.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.
3. உணவு மற்றும் உறைவிடம் நிறுவனங்கள், சாகசச் சுற்றுலா நடத்துபவர்கள், கேம்பிங் ஏற்பாட்டாளர்கள், கேரவன் வாகனச் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், கேரவன் நிறுத்துமிடம் ஏற்பாட்டாளர்கள் ஆகியோருக்கான பதிவுகள் மேற்கொள்ள புதிய திட்டம் வெளியிடப்பட்டது.
4. 'வாவ் தமிழ்நாடு' 1.0 மற்றும் 'எனது தமிழ்நாடு, எனது பாரம்பரியம்' என்ற சமூக ஊடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.
5. 'வாவ் தமிழ்நாடு 2.0' புகைப்பட மற்றும் வீடியோக்களுக்கான போட்டிகள் அறிவிக்கப்பட்டன.

7. பொங்கல் சுற்றுலா விழா

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா அலுவலர்களால் பொங்கல் சுற்றுலா விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலாச்சார திருவிழாவில் ஏராளமான வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கலந்து கொள்கின்றனர்.

8. சுற்றுலா விளம்பரங்கள்

8.1 தமிழ்நாடு சுற்றுலா இணையதளம்

தமிழ்நாட்டில் சுற்றுலா தொடர்பான அனைத்துத் தகவல்களையும் அளிக்கும் இணையதளமாகத் தமிழ்நாடு சுற்றுலா இணையதளம் விளங்குகிறது. இது மாநிலத்தில் சுற்றுலாப் பற்றிய தகவல்களை அளிப்பதற்கும், விளம்பரப்படுத்தவும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

சந்தைப்படுத்தவும் மற்றும் பல்வேறு அம்சங்களையும் கொண்டுள்ளது. இவ்விணையதளம் பயணம் மேற்கொள்பவரின் பயணம் முழுவதிற்கும் சுற்றுலா தொடர்பான தகவல்களை அளிப்பதற்கும் மற்றும் பயணத்திற்கு முன், பின் உள்ள கட்டங்களில் பதிவுகளை மேற்கொள்ளவும் உதவுகிறது. உலகளாவிய அணுகும் தன்மையுடன், பயனாளிகள் எளிதில் தகவல்களைப் பெறுவதற்கும், உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

8.2 விளம்பர வீடியோக்கள்

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த, மாநிலத்தின் கலாச்சார மற்றும் வரலாற்று இடங்கள், சாகசச் சுற்றுலா செயல்பாடுகள், பாரம்பரிய கைவினைப்பொருட்கள், தனித்துவமான உணவு வகைகள் மற்றும் கிராமப்புறச் சுற்றுலா அனுபவங்களை வெளிப்படுத்தும் விளம்பர வீடியோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த வீடியோக்களில் மலைவாசஸ்தலங்கள், அருவிகள் மற்றும் கடலோரப் பகுதிகள் போன்ற சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களும் இடம் பெற்றுள்ளன. கூடுதலாக, யுனெஸ்கோ பாரம்பரியத் தலங்கள், கலை மற்றும் கைவினைப்பொருட்கள், வன விலங்குகள், உணவு வகைகள், சாகச விளையாட்டுகள் மற்றும் இயற்கை சுற்றுலாத் தலங்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் சுற்றுலாப் பற்றிய விளம்பர வீடியோ குறித்த விரிவான தகவல்கள் இணையதளத்திலும் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் வளமிக்க பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகைக் குறித்து சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரிவிப்பதே இவ்விளம்பர வீடியோக்களின் நோக்கம். ஜல்லிக்கட்டு மற்றும் இந்திய நாட்டிய விழா போன்ற சிறப்பு நிகழ்வுகளும் பார்வையாளர்களுக்கு மாநிலத்தின் கலாச்சார பாரம்பரியத்தை விளக்கும் வகையில் படமாக்கப்பட்டுள்ளன.

8.3 மின்னணு சந்தைப்படுத்துதல் முயற்சிகள்

மின்னணு விளம்பரங்கள் தமிழ்நாட்டின் மீதான சுற்றுலாப் பார்வையை மேம்படுத்துவதையும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த இலக்கை அடைய, ஹிந்துஸ்தான் டைம்ஸ், இ-எய்ட்டீன், நெட்வொர்க் 18, இந்தியன் எக்ஸ்பிரஸ், டெய்லி ஹன்ட் மற்றும் ஒன் இந்தியா போன்ற முக்கிய இணையதளங்களில் மின்னணு

விளம்பரப் பிரச்சாரங்களைத் தொடங்கியுள்ளது. இந்த பிரச்சாரங்கள் உலகளாவிய பார்வையாளர்களைச் சென்றடைவதற்கும், மாநிலத்தின் சுற்றுலாத் தலங்கள், தனித்துவமான அனுபவங்கள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

8.3.1 நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பு

இந்திய நாட்டிய விழா மற்றும் நம்ம ஊரு திருவிழா போன்ற தமிழ்நாட்டின் சில முக்கிய சுற்றுலா நிகழ்வுகளை பேஸ்புக், ட்விட்டர் மற்றும் யூடியூப் போன்ற சமூக ஊடகங்களில் நேரலையாக ஒளிபரப்பு செய்வதற்கு தமிழ்நாடு சுற்றுலாத் துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிகழ்வுகள் தமிழ்நாட்டின் வளமான கலாச்சாரத்தையும், பன்முகத் தன்மையையும் பறைசாற்றும் வகையில் உள்ளதால் அதிகளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைச் சென்றடைகின்றன. தமிழ்நாடு சுற்றுலாத் துறை பிரபலமான சமூக ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு செய்வதன்மூலம், இம்முக்கியச் சுற்றுலா நிகழ்வுகள் அதிகளவில் பார்வையாளர்களைச் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

8.3.2 உலகளாவிய ஊடகம்

நேஷனல் ஜியோகிராஃபிக் டிராவலர் (NatGeo) மற்றும் டிராவல் அண்ட் ஃபுட் நெட்வொர்க் (TFN)

நேஷனல் ஜியோகிராஃபிக் டிராவலர் (NatGeo) மற்றும் டிராவல் அண்ட் ஃபுட் நெட்வொர்க் (TFN) ஆகியவை உயர்தரத்திலான பயணம் தொடர்பான தகவல்களை அறிவதற்கான பிரபலமான ஊடகங்களாகும். தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது NatGeo மற்றும் TFN உடன் இணைந்து மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத் தலங்களைச் சிறப்பித்துக் காட்டும், மனதைக் கவரும் மற்றும் சுற்றுலாப் பற்றிய தகவல்கள் தரும் பயணக் காணொலிகளை உருவாக்கியுள்ளது.

இந்த ஊடகங்களால் தயாரிக்கப்பட்ட மணல் நிறைந்த கடற்கரைகள் முதல் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மூடுபனி மலைகள் வரையிலான காணொலிகள் தமிழ்நாட்டின் பல தனித்துவமான தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. பிரமிக்க வைக்கும் சிறந்த காட்சிகள் மற்றும் மனதைக் கவரும் வகையில்

2023 ஏப்ரல் 19]

அமைக்கப்பட்ட விவரிப்பு ஆகியவை இந்த காணொலிகளை உத்வேகம் அடையவும், தமிழ்நாட்டைப் பற்றிய தகவல்களைத் தேடும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த தளமாகவும் அமைகிறது.

மேலும், தமிழ்நாடு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான புகைப்படக் கதைகள் NatGeo, TFN *மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டுள்ளன. இது தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் பற்றிய விவரங்களை அதிகளவில் பார்வையாளர்களைச் சென்றடைவதை அதிகரிக்கவும், தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும் உதவுகிறது. இக்காணொலிகள் 10 மில்லியன் பார்வையாளர்களைச் சென்றடைந்துள்ளன.*

Travel XP

Travelxp *என்பது சுற்றுலாத் துறையில் ஒரு புகழ்பெற்ற பயண உள்ளடக்கம் மற்றும் வசீகரிக்கும் நிகழ்ச்சிகளுக்காக புகழ்பெற்ற ஒரு உலகளாவிய தொலைக்காட்சி சேனலாகும். தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது,* Travelxp *சேனல்கள் மற்றும்* Travelxp *சமூக ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகைச் சித்தரிக்கும் உயர்தரத்திலான காணொலிகளை உருவாக்கியுள்ளது. இந்த காணொலிகள்* Travelxp *உலகளாவிய தளங்களில் ஒளிபரப்பப்பட்டு, தமிழ்நாட்டின் அழகையும், கலாச்சாரத்தையும் 21 மொழிகளில் உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களுக்கு வழங்கியது.* Travelxp-*ன் ஆழ்ந்த பயண அனுபவங்கள் மற்றும் கதைக்கூறல் ஆகியவை சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஆர்வலர்கள் இடையே கவனத்தைப் பெற்ற முக்கிய இடமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.*

8.3.3 இணை வர்த்தக முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது "ஸ்டோரி டிரெயில்ஸ்" நிறுவனத்துடன் இணைந்து, தமிழ்நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் இயற்கை வளங்களை வெளிப்படுத்தும் வகையில் சுற்றுலா குறித்த தகவல்களை அளிக்கும் காணொலிகளை உருவாக்கியது. இந்த காணொலிகள் பார்வையாளர்களைக் கவரவும், தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சமூக ஊடகங்களில் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 19

8.4 பத்திரிகைகளில் விளம்பரங்கள்

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களைப் பிரபலப்படுத்துவதற்காக, சுற்றுலாத் துறையின்மூலம் முன்னணிச் சுற்றுலாப் பத்திரிகைகள், சிறந்த சஞ்சிகைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான பத்திரிகைகளில் ஆண்டு முழுவதும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

தி வீக், டிராவல் ஹைட்ஸ் மாத இதழ், ஓபன் மேகசின், ஸ்வர் சரிதா (இந்தி), குங்குமம் வார இதழ் (தமிழ்), இந்தியா டுடே, டிராவல்டைன், T3FS *இதழ் சிறப்பு வெளியீடு (*WTM *– 2022),* AutoX *இதழ்,* BW *பிஸினஸ் வேர்ல்ட் இதழ், இந்தியா டுடே (சுதந்திர தின சிறப்பு வெளியீடு, அவுட்லுக் இதழ்,* T3FS *இதழ் சிறப்பு வெளியீடு (*WTM *லண்டன்-2022) போன்ற சர்வதேச மற்றும் தேசிய இதழ்களில் தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் குறித்து விளம்பரப்படுத்தப்படுகின்றன.*

8.5 வானொலிப் பிரச்சாரங்கள்

வானொலிப் பிரச்சாரங்கள் அதிகப் பயனாளர்களை சென்றடைவதற்கான ஒரு மதிப்புமிக்க ஊடகமாகும். அகமதாபாத், லக்னோ, புனே மற்றும் கான்பூர் ஆகிய இடங்களில் தமிழ்நாட்டை ஒரு சிறந்த சுற்றுலா இடமாக விளம்பரப்படுத்த வானொலி பிரச்சாரங்கள் வெளியிடப்பட்டன.

8.6 சமூக ஊடகப் பிரச்சாரங்கள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதில் சிறந்த அணுகுமுறையை வெளிப்படுத்தியுள்ளது. சமூக ஊடகங்களில் அதிக பின்தொடர்பவர்களைக் கொண்ட நபர்களுடன் இணைந்து போட்டிகள் நடத்துதல் போன்ற பல்வேறு சமூக ஊடக உத்திகளைச் செயல்படுத்தி வருவதன்மூலம், தமிழ்நாடு சுற்றுலாத் துறை தனது பார்வையாளர்களுடன் வெற்றிகரமாக அதன் வரம்பை விரிவுபடுத்தியுள்ளது. இம்முயற்சிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், தமிழ்நாட்டிற்கு அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. சமூக ஊடகங்களைத் திறம்பட பயன்படுத்தியதன்மூலம், மாநிலத்தின் தனித்துவமான சலுகைகளை வெற்றிகரமாகக்

2023 ஏப்ரல் 19]

காட்சிப்படுத்தியதுடன் பயணிகளின் மனதை மயக்கும் சுற்றுலாத் தலமாகத் தமிழ்நாடு சுற்றுலா தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

தமிழ்நாடு வன விலங்குப் புகைப்படப் போட்டி

My Wild Tamil Nadu *புகைப்படப் போட்டி வனவிலங்குப் புகைப்பட ஆர்வலர்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றது. இது தமிழ்நாட்டின் வளமான பல்லுயிர் மற்றும் இயற்கை வளங்களின் அழகைக் காட்டும் வகையில் அமைந்தது.*

கிறிஸ்துமஸ் புகைப்படப் போட்டி

இந்தப் போட்டியில் தமிழ்நாட்டின் மதம் சார்ந்த மற்றும் வளமான கட்டடக் கலைப் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் தேவாலயங்களின் சிறந்த படங்களைப் பகிர்ந்துகொள்ள புகைப்படக் கலைஞர்கள் அழைக்கப்பட்டனர்.

அற்புதமான ஏப்ரல் பிரச்சாரம்

இந்தப் பிரச்சாரம் மாநிலத்தின் தனித்துவமான தகவல்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கியது. இது தமிழ்நாட்டின் அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களை உலகளாவிய பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்தியது.

பொங்கல் குறித்த பிரச்சாரம்

பொங்கல் குறித்த பிரச்சாரத் தொடரில் திறமையான புகைப்படக் கலைஞர்களால் பொங்கல் பண்டிகையின்போது எடுக்கப்பட்ட சிறந்த புகைப்படங்கள் இடம்பெற்றன. இப்புகைப்படங்கள் மாநிலத்தின் பண்டிகை குறித்த துடிப்பான உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்தன.

Explore தமிழ்நாடு பிரச்சாரம்

தமிழ்நாட்டின் பல்வேறு மற்றும் தனித்துவமான இடங்களை சிறப்பித்துக் காட்டும் வகையில், தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பார்வையிடப்படவேண்டிய இடங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விரிவான வழிகாட்டியை பார்வையாளர்களுக்கு Explore *தமிழ்நாடு பிரச்சாரம் வழங்கியது.*

[*2023 ஏப்ரல் 19*

சதுரங்க ஒலிம்பியாட் (Chess Olympiad) பிரச்சாரம்

மாமல்லபுரத்தில் நடந்து முடிந்த சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின்போது, சமூக ஊடகங்களில் மாமல்லபுரத்தை விளம்பரப்படுத்துவதற்காகவும், சுற்றுலாப் பயணிகளையும், சதுரங்க ஆர்வலர்களையும் ஈர்க்கும் வகையில், நகரத்தில் நேரத்தை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்த யோசனைகளைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கிலும் சதுரங்க ஒலிம்பியாட் பிரச்சாரம் நடத்தப்பட்டது.

பிரிட்டிஷ் கட்டடங்கள் குறித்த பிரச்சாரம்

உலகப் பயணச் சந்தையின்போது (WTM), தமிழ்நாடு சுற்றுலாத் துறை பிரிட்டிஷ் கட்டடங்கள் பிரச்சாரத்தின்மூலம் தமிழ்நாட்டின் அற்புதமான பிரிட்டிஷ் கட்டடக் கலைகளை விளம்பரப்படுத்தியது, இப்பிரச்சாரம் மாநிலத்தின் சிறப்பான மற்றும் மாறுபட்ட கட்டடக் கலைப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்தது.

8.7 Out of Home (OOH) விளம்பரம்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் பல்வேறு வெளியூர் விளம்பர உத்திகள் 2022-2023 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவியது.

- *இரயில் நிலையங்களில் காட்சிப்படுத்தப்படும் ஒலி-ஒளி விளம்பரங்கள் மற்றும் எல்.சி.டி. டி.வி. திரைகள், அதிவேக இரயில் என்ஜின்களின்மீது விளம்பரங்கள், இரயில் பெட்டிகளுக்குள், இருக்கை பின்பக்கம், உணவுத் தட்டுகள் மற்றும் இரயில் பயணச்சீட்டுகளில் விளம்பரங்கள் ஆகியவை இவ்விளம்பரங்களில் அடங்கும். முக்கிய இரயில் நிலையங்களில் சுற்றுலா விளம்பரக் காணொளிகள் காட்சிப்படுத்தப்பட்டன.*

- *தில்லி மெட்ரோ நிலையங்களிலும் ஒளிரும் திரைகளில் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.*

- *சென்னை உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிலையங்களின் உட்புறங்களில் அழகியல் மேம்பாட்டின்மூலம் மறுசீரமைக்கப்பட்டன.*

2023 ஏப்ரல் 19]

தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களை விளம்பரப்படுத்த மற்றும் காட்சிப்படுத்த விமான நிலைய வளாகத்தில் கண்கவரும் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

- இந்தூர், கொச்சின், கோவா, சூரத் மற்றும் வதோதரா விமான நிலையங்களில் காணொலித் திரைகளின்மூலம் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- தனித்துவமான மற்றும் வசீகரிக்கும் வடிவமைப்புகளுடன்கூடிய கூடார வடிவ அட்டைகள் பயணச் சந்தைகளில் காட்சிப்படுத்தப்படுவதற்காக வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

9. மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (SIHMCT), துவாக்குடி, திருச்சிராப்பள்ளி

'உணவுக் கைவினை நிறுவனம்' என்று முன்னாளில் அழைக்கப்பட்ட மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள துவாக்குடியில் 1-10-1981 அன்று நிறுவப்பட்டது. ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து நிதியுதவி செய்யும் இந்த நிறுவனத்தை உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியலுக்கான நிறுவனங்களின் தேசியக் குழு (NIHMCT) ஒரு நிறுவனமாக அங்கீகரித்துள்ளது. இந்நிறுவனம் பின்வரும் படிப்புகளில் தரமான பயிற்சியினை அளிக்கிறது:-

- உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் குறித்த மூன்றாண்டு பட்டப் படிப்பு.
- உணவுத் தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடப் பராமரிப்பு, அடுமனைப் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் குறித்த ஒன்றரை ஆண்டு பட்டயப் படிப்பு.
- உணவுத் தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடப் பராமரிப்பு, பேக்கரிப் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் பற்றிய சான்றிதழ் படிப்பு.

மேலும், ஒன்றிய அரசின் 'ஹுனார் சே ரோஜ்கார்' திட்டத்தின்கீழ் வழக்கமானப் பயிற்சிகளுடன் குறுகிய காலப் பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்நிறுவனத்திற்கு அத்தியாவசியச் செலவுகள் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ள மாநில அரசால் ஒவ்வோர் ஆண்டும் ரூ.5.00 இலட்சம் தொடர் மானியமாக வழங்கப்படுகிறது.

10. சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு

சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்யும் முதன்மை நோக்கத்துடன் சுற்றுலாத் துறையின்கீழ், 2010 ஆம் ஆண்டு முதல் சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களின் உள்ளூர் மொழியில் தகவல்களை வழங்குவதும், அவர்களின் வருகையின்போது தேவையான தகவல் மற்றும் உதவிகளை வழங்குவதும், எதிர்பாராத நிகழ்வுகளின்போது உதவிகளை வழங்குவதும் இதன் நோக்கமாகும்.

11. தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்

சுற்றுலாத் துறையானது 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள்/இடங்களைக் கண்டறிந்து மேம்படுத்த "தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம" என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் சுற்றுலா ஆதாரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களின் நிபுணத்துவத்துடன் அடையாளம் காணப்பட்ட சுற்றுலாத் தலங்களின் முழுமையான வளர்ச்சியை அடைய இத்திட்டம் வழிவகுக்கிறது.

2022-2023 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், பின்வரும் பணிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன:-

வ. எண்	பணியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	தமிழ்நாட்டிலுள்ள அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்துதல்.	806.00

2023 ஏப்ரல் 19]

வ. எண்	பணியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
2.	பூண்டி அணைக்கட்டு பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	*300.00*
3.	ஆண்டிபாளையம் ஏரிப்பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	*147.00*
4.	கொளவாய் ஏரிப் பகுதியினைப் பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	*144.10*
5.	ஒகேனக்கல் அருவிப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	*1757.65*
6.	முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு அருவி பகுதியை மேம்படுத்துதல்	*715.06*
7.	பாரம்பரிய நகரமான பூம்புகாரை புதுப்பித்தல்	*2360.00*
8.	குற்றாலம் அருவிப் பகுதியில் சுற்றுலா வசதிகள் ஏற்படுத்துதல்	*1134.56*
9.	பிச்சாவரம் படகு இல்லப் பகுதியினைப் பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	*1407.00*
10.	முத்துப்பேட்டை மாங்குரோவ் காடுகள் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	*400.00*
11.	முத்துக்குடாப் பகுதியினைப் பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	*306.31*

[2023 ஏப்ரல் 19

வ. எண்	பணியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
12.	வத்தல்மலை பகுதியினைப் பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.	223.00
மொத்தம்		9700.68

பிற திட்டங்கள்

வ. எண்	பணியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	மதுரை அலங்காநல்லூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டுதல்	4406.00
2.	சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் "ஆன்மிக மற்றும் கலாச்சார சுற்றுச்சூழல் பூங்கா" அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல்.	177.83
3.	இராமேஸ்வரம் மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைக்க விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்	112.10

12. கட்டுப்பாடுகள்

12.1 சுற்றுலாச் செயல்பாட்டாளர்களுக்குப் பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம்

பல்வேறு சுற்றுலாச் செயல்பாட்டாளர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், பாதுகாப்பான சுற்றுலா நடைமுறைகளை மேம்படுத்தவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளவும் புதிய திட்டத்தை சுற்றுலாத் துறை

2023 ஏப்ரல் 19]

அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டங்கள் சுற்றுலாத் தொழிலில் பாதுகாப்பான அணுகுமுறையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு உலக சுற்றுலா தினமான 27.9.2022 அன்று வெளியிடப்பட்டது.

சுற்றுலாச் செயல்பாட்டாளர்களுக்கு பின்வரும் பிரிவுகளில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன:-

1. *சாகசச் சுற்றுலா (காற்று, நிலம் மற்றும் நீர் சார்ந்த செயல்பாடுகள்)*
2. *கேரவன் சுற்றுலா மற்றும் கேரவன் பூங்காக்கள்*
3. *முகாம் தலங்கள்*
4. *தங்கும் விடுதிகள் மற்றும் படுக்கை மற்றும் காலை உணவு வழங்கும் ஓய்விடங்கள்.*

சுற்றுலாப் பங்குதாரர்கள் எளிதில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக செயல்முறைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இணையதளம்மூலம் பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் வெளிமுகமைமூலம் ஆய்வுகள் செய்வதும் அடங்கும். 2022-2023 ஆம் ஆண்டில், 350-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 160-க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தொழில் முனைவோர்களுக்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

12.2 சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பதிவுத் திட்டம்

சுற்றுலாப் பயணத்தின்போது சுற்றுலாக் குறித்த தகவல்கள் மற்றும் பிற அனுபவங்களை வழங்குவதில் சுற்றுலா வழிகாட்டிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். சுற்றுலா வழிகாட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் "தமிழ்நாடு சுற்றுலா வழிகாட்டி பதிவு திட்டம்-2023" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலா வழிகாட்டிகள் பதிவுகளை மேற்கொள்ளவும், சிறந்த பயிற்சி பெறவும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தரமான சேவைகளை அளிப்பதற்கும் இத்திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்கீழ், சுற்றுலா வழிகாட்டிகள், பொது, நிபுணர் மற்றும் மொழியியல் வழிகாட்டி என மூன்றுப் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

[2023 ஏப்ரல் 19

12.3 சுற்றுலாச் சேவை வழங்குபவர்களுக்குப் பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம்

தமிழ்நாட்டில், சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தொழிலில் இடையீட்டாளர்களான பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள் மற்றும் சுற்றுலாப் பேருந்து இயக்குபவர்கள் சுற்றுலா விநியோகத் தொடரின் முக்கியப் பங்களிப்பாளராக உள்ளனர். இவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளவும், தமிழ்நாட்டிற்கு வருகைப் புரியும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தரமான சேவைகளை வழங்குவதற்கும் இனிமையான அனுபவங்கள் வழங்குவதை உறுதி செய்யவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, "தமிழ்நாடு சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், சுற்றுலாப் பேருந்து இயக்குபவர்களுக்கான திட்டம்–2023"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் இரண்டு பிரிவான வகைப்பாடுகளுக்கு Standard, Premium என அங்கீகாரம் வழங்கப்படும்.

13. சுற்றுலாக் கொள்கை

சுற்றுலாத் தொழிலில் வேலைவாய்ப்புகளை வழங்குவதில் ஒரு முன்னணி மாநிலமாகத் திகழவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் புதிய சுற்றுலாக் கொள்கை தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்படும். இக்கொள்கை, சுற்றுலாவிற்கு தொழில் துறை தகுதிநிலை வழங்குவதிலும், சலுகைகள், ஊக்கத்தொகைகள், தனியார் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் தனியரை சுற்றுலாத் தொழிலில் பங்குகொள்ள செய்வதிலும் முக்கியப் பங்காற்றும். தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு நிலையான சூழலை ஏற்படுத்துவதுடன், பாதுகாப்பான மற்றும் தரமான சுற்றுலாச் சேவைகளை வழங்குவதற்கும், சுற்றுலா முதலீடுகளை ஈர்ப்பதற்கும் உகந்த சூழலை உருவாக்குதே இக்கொள்கையின் இலக்காகும்.

14. தமிழ்நாடு சுற்றுலா விருதுகள்

27.9.2022 அன்று உலகச் சுற்றுலா தினத்தை முன்னிட்டு சுற்றுலாத் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக முதன்முதலாக தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் சுற்றுலாச் செயல்பாட்டாளர்கள், விமான நிறுவனங்கள், விடுதிகள், உணவகங்கள், வழிகாட்டிகள் போன்ற

2023 ஏப்ரல் 19]

பல்வேறு சுற்றுலாப் பங்குதாரர்களை உள்ளடக்கிய பதினேழு வெவ்வேறு பிரிவுகளில் 52 விருதுகள் வழங்கப்பட்டன.

15. சொகுசுக் கப்பல் சுற்றுலா அறிமுகப்படுத்துதல்

உலகளாவிய சுற்றுலாத் தொழிலில் சொகுசுக் கப்பல் சுற்றுலா ஒரு முக்கியப் பிரிவாகும். சுமார் 1,076 கி.மீ. நீளமுள்ள நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழ்நாட்டில் சொகுசுக் கப்பல் சுற்றுலாவை மேம்படுத்த அதிகளவில் சாத்தியக்கூறுகள் உள்ளன. பல்வேறு ஆடம்பர வசதிகளுடன்கூடிய Cordelia Cruises *என்ற சொகுசுக் கப்பல் சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை துறைமுகத்திலிருந்து துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஒரு முக்கிய மைல் கல்லாக அமைகிறது.*

16. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு

மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக "தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு" மறுசீரமைக்கப்பட்டது. 13.12.2022 அன்று நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில், சுற்றுலாத் தொழிலின் வளர்ச்சிக்குப் பல்வேறு ஆலோசனைகள் சுற்றுலாத் தொழில் வல்லுநர்களால் வழங்கப்பட்டன.

17. சுற்றுலாப் பணிக் குழு (Tourism Task Force)

தமிழ்நாட்டில் முதன்முறையாக சுற்றுலாப் பணிக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பணிக் குழுவில் கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் பங்குதாரர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழில் துறையின் தற்போதைய நிலையை மதிப்பீடு செய்யவும் மற்றும் வளமான இடங்களைக் கண்டறிந்து சுற்றுலாவை மேம்படுத்தவும் இக்குழுவின் பங்குதாரர்களின் அனுபவ வளங்கள் உதவி புரிகின்றன. இப்பணிக் குழுவின் முதல் கூட்டம் 13.12.2022 அன்று நடைபெற்றது.

18. சென்னை விழா

சென்னை விழாவின் 1-வது பதிப்பு – தேசியக் கைவினைப் பொருட்கள், கைத்தறி மற்றும் உணவுக் கண்காட்சி கோடை

விடுமுறை நாட்களில் ஏப்ரல் 29 முதல் மே 14, 2023 வரை சென்னையில் உள்ள தீவுத்திடலில் நடைபெறவுள்ளது. இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள கைவினைப்பொருட்கள் மற்றும் கைத்தறிகளின் சிறந்த வகைகளை வெளிப்படுத்தும் இந்தக் கண்காட்சி 16 நாட்களுக்கு நடைபெறும்.

19. 44-வது சதுரங்க ஒலிம்பியாட்

44-வது FIDE சதுரங்க ஒலிம்பியாட் மாமல்லபுரத்தில் ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 10, 2022 வரை நடைபெற்றது. மேலும், இந்நிகழ்வின் வெற்றியை உறுதி செய்வதில் சுற்றுலாத் துறை முக்கியப் பங்காற்றியது.

19.1 பதக்கங்கள்

செஸ் ஒலிம்பியாட்டின் முதன்மை முயற்சியாக, தமிழ்நாட்டின் வளமான பாரம்பரியத்தின் கூறுகளை உட்கொண்டு சுற்றுலாத் துறை இந்த நிகழ்ச்சிக்கானப் பதக்கங்களை வடிவமைத்தது.

19.2 வரவேற்புப் பைகள்

தமிழ்நாடு பொக்கிஷங்கள் புத்தகம், கடற்கரைக் கோயிலின் மாதிரி நினைவுப் பரிசு, செஸ் கிட், தொப்பியுடன் சென்னை மற்றும் மாமல்லபுரத்தின் சுற்றுலாத் தகவல் கையேடு அடங்கிய மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் வரைபடத்துடன் அமைக்கப்பட்ட பையை வீரர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான வரவேற்புப் பையாக இத்துறை வடிவமைத்து தயாரித்தது.

19.3 கலாச்சார நிகழ்ச்சிகள்

பங்கேற்பாளர்களை மயக்கும் வண்ணம் இந்திய மற்றும் மேற்கத்திய நாட்டியக் கலை வடிவங்களைக் கொண்டு கலாச்சார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

19.4 சுற்றுலா அரங்கம்

தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் முப்பரிமாண சுற்றுலா அனுபவங்களை வழங்கும் மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்கள் மற்றும் மேஜிக் புத்தகம் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டன. சுற்றுலாப் பயணிகள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தைச் சுற்றியுள்ள

2023 ஏப்ரல் 19]

பல்வேறு இடங்களுக்குச் செல்வதை எளிதாக்க, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் ஹாப்-ஆன் ஹாப்-ஆஃப் பேருந்துகள் மற்றும் சுற்றுலா நட்பு ஆட்டோக்கள் இயக்கப்பட்டன.

19.5 விளம்பர வீடியோ

சென்னையின் அழகு, பாரம்பரியம், கலாச்சாரம், சுற்றுலாத் தலங்கள், உணவு மற்றும் செயல்பாடுகளைக் குறித்த "ஆட்டோ அண்ணாவுடன் சென்னையைச் சுற்றிப் பார்க்கலாம்" என்ற வீடியோ சுற்றுலாப் பயணிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்குப் பயன்படும் வகையில் செஸ் ஒலிம்பியாட் 2022-ல் வெளியிடப்பட்டது.

19.6 வீரர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களுக்கான சுற்றுலாத் தொகுப்புகள்

சென்னை மற்றும் மாமல்லபுரத்தின் வளமான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை உலகெங்கிலும் உள்ள வீரர்களுக்குக் காட்சிப்படுத்தும் வகையில், ஒரு நாள் சிறப்புச் சுற்றுலாத் தொகுப்பு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இயக்கப்பட்டது.

19.7 ஹாப்-ஆன் ஹாப்-ஆஃப் சேவை

44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின்போது ஹாப்-ஆன் ஹாப்-ஆஃப் சேவையைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியதன்மூலம் வசதியான மற்றும் தொடர் போக்குவரத்துச் சேவையை வழங்கியது. சோழமண்டலம் கலைஞர்களின் கிராமத்திலிருந்து மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நிகழ்வு நடைபெறும் இடம் வரை, பல்வேறு இடங்களில் பேருந்து நிறுத்தங்களுடன் இச்சேவை வழங்கப்பட்டது. இந்தச் சேவை பொதுமக்கள் மற்றும் நிகழ்வில் பங்கேற்றவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

19.8 சுற்றுலா நட்பு வாகனம்

சுற்றுலாப் பயணிகள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தைச் சுற்றியுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வதற்கு வசதியாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா நட்பு வாகனத்தை அறிமுகப்படுத்தியதுடன் நட்பு வாகன ஆட்டோ ஓட்டுநர்களுக்கு உரிய பயிற்சியும் வழங்கப்பட்டது.

[2023 ஏப்ரல் 19

20. ஜி20 உச்சி மாநாடு

சர்வதேசப் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்னணி அமைப்பான ஜி20-ன் தலைமைப் பொறுப்பை இந்தியா தற்போது வகித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, முதல் ஜி20-ன் கல்வி பணிக் குழு சென்னை ஐ.ஐ.டி.-ல், "கல்வியில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பங்கு" என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 30 நாடுகளைச் சார்ந்த 80 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை மாநிலத்தின் விருந்தோம்பல்களை வெளிப்படுத்தும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டது. சென்னை ஐ.ஐ.டி. மற்றும் தாஜ் கோரமண்டல் ஓட்டல் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட அரங்குகளில், தமிழ்நாட்டின் கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மாமல்லபுரத்தில் பிரதிநிதிகளுக்காகப் பாரம்பரிய நடைப்பயணமும் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் வளமான கட்டடக் கலைப் பாரம்பரியத்தை அறிந்துகொள்வதற்காக, யுனெஸ்கோ பாரம்பரியச் சின்னமான மாமல்லபுரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கோயில் வளாகம், அர்ஜுனன் தபசு மற்றும் ஐந்து ரதங்கள் ஆகிய இடங்களுக்குப் பிரதிநிதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

தமிழ்நாட்டின் துடிப்பான கலாச்சாரத்தைப் பறைசாற்றும் வகையில் கலாச்சார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுலாத் தலங்களைச் சிறப்பித்துக் காட்டும் முப்பரிமாண சுற்றுலா அனுபவங்களை வழங்கும் மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்கள் அரங்குகளில் அமைக்கப்பட்டன.

21 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டம்

21.1 சுதேஷ் தர்ஷன் 2.0 திட்டம்

சுற்றுலாத் தலங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் (MoT, GoI) சுதேஷ் தர்ஷன் 2.0 என்ற மேம்படுத்தப்பட்ட திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் ஒருங்கிணைந்த அணுகுமுறைமூலம் சுற்றுலாத் தல மேம்பாடு, சுற்றுலாத் தலங்களுக்குத் தேவையான இணைப்புச் சாலை,

2023 ஏப்ரல் 19]

கலாச்சாரக் கட்டமைப்பு, பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பிற வசதிகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டின் மாமல்லபுரம் மற்றும் நீலகிரி ஆகிய இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

21.2 பிரசாத் (PRASHAD) திட்டம்

*ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் (*MoT, GoI*) நன்கு திட்டமிடப்பட்ட சுற்றுலா உள்கட்டமைப்பை வழங்குவதன்மூலம் அடையாளம் காணப்பட்ட யாத்திரைத் தலங்களின் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த 'புனித யாத்திரைப் புத்தாக்கம் மற்றும் ஆன்மிகம், பாரம்பரியம் பெருக்க இயக்கம்' (*Pilgrimage Rejuvenation and Spiritual, Heritage Augmentation Drive – PRASHAD*) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.*

21.2.1 நவக்கிரக திருக்கோயில்களில் பிரசாத் (PRASHAD) திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு மேம்பாடு

இந்து மதத்தில், ஒன்பது கிரகங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நவக்கிரகக் கோயில்கள் முக்கிய வழிபாட்டுத் தலங்களாகும். இத்திருக்கோயில்கள் பக்தர்களை மட்டுமல்லாமல், இந்தியாவின் வளமான கலாச்சாரம் மற்றும் கட்டடக் கலைப் பாரம்பரியத்தை ஆராய்வதில் ஆர்வமுள்ள சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கின்றன.

இத்திட்டத்தின்கீழ், உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஆலங்குடி, கஞ்சனூர், திங்களூர் மற்றும் திருவெண்காடு ஆகிய நவக்கிரகக் கோயில்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை, நவக்கிரகக் கோயில்களின் சுற்றுலாத் திறனை மேம்படுத்துவதையும், தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன்மூலம் அதிகமான சுற்றுலாப் பயணிகளுக்கு மேம்பட்ட அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ரூ.17.53 கோடிக்கான ஆரம்ப திட்ட அறிக்கை, ஒன்றிய அரசு, சுற்றுலா அமைச்சகத்தின் ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

21.3 சுவச்தா பக்வாடா பிரச்சாரம்

*ஒன்றிய அரசின் சுவச்தா பக்வாடா (*Swachhata Pakhwada*) பிரச்சாரம் என்பது நாட்டில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு*

பிரச்சாரம் ஆகும். இது தூய்மையான மற்றும் ஆரோக்கியமான இந்தியாவை அதன் குடிமக்கள் அனைவருக்கும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சுவச் பாரத் பணியின் (Swachh Bharat Mission) இன்றியமையாத அங்கமாகும். சுவச்தா பக்வாடா (Swachhata Pakhwada) பிரச்சாரம் குடிமக்களுடன் தொடர்ந்து ஈடுபடுவதன்மூலம், மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தி, நாடு முழுவதும் தூய்மை மற்றும் சுகாதாரக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் வகையில், 2022 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 16 முதல் 30 வரையிலான கால அவகாசத்தில் ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம், சுவச்தா பக்வாடா பிரச்சாரத்தை மேற்கொண்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுவச்தா பக்வாடா பிரச்சார நிகழ்ச்சி சுற்றுலாத் துறைமூலம் நடத்தப்பட்டது.

22. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 30.6.1971 அன்று நிறுவப்பட்டது, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தங்குமிட வசதிகள், பல்வேறு தொகுப்புச் சுற்றுலாக்கள், படகு குழாம்கள், பொருட்காட்சி மற்றும் திருவிழாக்கள் போன்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியச் செயல்பாடுகளாகும்.

வணிக செயல்பாடுகள்	எண்ணிக்கை
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நேரடியாக நிருவகிக்கப்படும் ஓட்டல்கள்	28
அறைகள்	844
குத்தகைக்கு விடப்பட்டுள்ள ஓட்டல்கள்	12
படகு குழாம்கள்	09
உணவகங்கள்	05
ஆலயம் (பக்தர்கள் தங்கும் விடுதி)	03
தொலைநோக்கி இல்லங்கள்	03
நீலக்கொடி கடற்கரை	01
பேருந்துகள்	14

2023 ஏப்ரல் 19]

மேலும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற கோடைவாழிடங்களில் மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைக் குறைந்த செலவில் (Budget Tourist) நிறைவு செய்திட இளைஞர் விடுதிகளை நடத்துகிறது.

23. ஓட்டல் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகிறது, சுற்றுலாப் பயணிகள், விருந்தினர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும், சேவைகளையும் மேம்படுத்துவதற்காக நிலையான நடவடிக்கைகளையும், உறுதியான முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களின் தொழில்நுட்ப அறிவு, செயல் மற்றும் மேலாண்மைத் திறனை மேம்படுத்துவதற்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஓட்டல் தமிழ்நாடு, திருநெல்வேலியின் குத்தகைக் காலம் நிறைவடைந்த நிலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டினை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

23.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை மேம்படுத்துதல்

2022-2023 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஓட்டல்கள் புதுப்பிக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டன:

1. ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம், தீவுத்திடல், சென்னை.
2. கடற்கரை ஓய்வு வளாகம், மாமல்லபுரம்.
3. ஓட்டல் தமிழ்நாடு, மதுரை-II.
4. ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரி.
5. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூர்.
6. ஓட்டல் தமிழ்நாடு, திருச்சி.

7. ஓட்டல் தமிழ்நாடு, ராணிப்பேட்டை.

8. ஓட்டல் தமிழ்நாடு, திருநெல்வேலி.

23.2 உணவு மற்றும் பானம் பிரிவிற்கு "அமுதகம்" என்ற புதிய வணிகப் பெயரை உருவாக்குதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்களில் உணவு மற்றும் பானத்தின் (F&B) விற்பனையை மேம்படுத்துவதற்காக "அமுதகம்" என்ற பெயரில் வணிகப் பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சியானது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் பிரிவினைப் பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் எளிதில் அடையாளம் காணவும், விளம்பரப்படுத்தவும், தெளிவான புள்ளிவிவரங்களோடு சரியான முடிவு எடுக்கவும் வணிகம் மற்றும் சேவையை மேம்படுத்தவும் உதவும். தற்போது 35 உணவகங்கள் அமுதகம் என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

23.3 குயிக் பைட்ஸ் (துரித உணவு)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முக்கியமான சுற்றுலாத் தலங்களில் உயர்தர துரித உணவு விற்பனை நிலையங்களை நிறுவும் நோக்கத்துடன் குயிக் பைட்ஸ் என்ற வணிகப் பெயரில் துரித உணவகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. முக்கியச் சுற்றுலாத் தலங்களான வண்டலூர், கோவளம், ஏற்காடு மற்றும் வாலாங்குளம் ஏரி ஆகிய இடங்களில் இவை திறக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாயை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் மக்களிடையே துரித உணவுப் பண்டங்களை எளிதில் அடையாளம் கண்டு தேர்வு செய்யும் நிலையை ஏற்படுத்துகின்றது. 2022-2023 ஆம் ஆண்டு வண்டலூர், கோவளம், ஏற்காடு மற்றும் வாலாங்குளம் ஆகிய நான்கு இடங்களில் நிறுவப்பட்டு 2023 மார்ச் மாதம் வரை ரூ.56.59 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

23.4 ஆலயம் (பக்தர்கள் தங்கும் விடுதி)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், "ஆலயம்" என்ற பெயரில் இராமேஸ்வரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பக்தர்கள் தங்கும் மூன்று விடுதிகளை 50:50 என்ற இலாபப் பகிர்வு அடிப்படையில்

2023 ஏப்ரல் 19]

இந்து சமய அறநிலையங்கள் துறையுடன் இணைந்து நடத்தி வருகின்றது. கடந்த 2022-2023 ஆம் ஆண்டு ஆலயம் விடுதிகள்மூலம் ரூ.291.54 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

23.5 ஓட்டல் தமிழ்நாடு திருச்சி புதிய கட்டடம்

15 அறைகள் மற்றும் பல்நோக்கு அரங்கம் கொண்ட ஓட்டல் தமிழ்நாடு புதிய கட்டடத் தொகுதி 27.9.2022 அன்று திருச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

23.6 பயிற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சேவைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்த ஒரு சிறப்பு நிறுவனத்தின்மூலம் சென்னை தீவுத்திடல் ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம், மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு வளாகம், கன்னியாகுமரி ஓட்டல் தமிழ்நாடு, ஏற்காடு, மதுரை-I & II மற்றும் இராமேஸ்வரம் ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தொழில்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

24. படகு குழாம்கள்

படகு சவாரி மற்றும் சாகச நீர் விளையாட்டுகள் நடத்துவதற்கு உகந்த பல நீர்நிலைகளை உள்ளடக்கிய மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தைத் தரும் வகையில், சாகசப் படகுச் சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன்கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஆகிய 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது.

24.1. முட்டுக்காடு படகு குழாம்

முட்டுக்காடு படகு குழாமானது, சென்னையில் வசிக்கும் மக்களின் வார விடுமுறை நாட்களைக் கழிப்பதற்கு மிகச் சிறந்த பொழுதுபோக்குத் தலமாக விளங்குகிறது. முட்டுக்காடு உப்பங்கழியில் அமைந்துள்ள இந்த படகு குழாமில், சாகச நீர்

[*2023 ஏப்ரல் 19*

விளையாட்டுகள் மெய் சிலிர்க்கும் அனுபவத்தைத் தருகின்றன. சுற்றுலாப் பயணிகள் நாள் முழுவதும் செலவிடக்கூடிய வகையில் இயந்திரப் படகு, துடுப்புப் படகு, விரைவுப் படகு மற்றும் வாட்டர் ஸ்கூட்டர் போன்ற படகுகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக நீர் மிதிவண்டி மற்றும் குழந்தைகளுக்கான மிதிப்படகும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்தாண்டு ஐந்து எண்ணிக்கையில் 8 இருக்கைகள் கொண்ட புதிய இயந்திரப் படகுகள் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்காக வாங்கப்பட்டன. 2022-2023 ஆம் ஆண்டு முட்டுக்காடு படகு குழாம்மூலம் ரூ.485.82 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.2. முதலியார்குப்பம் படகு குழாம்

ஓடியூர் உப்பங்கழி ஏரியில் அமைந்துள்ள முதலியார்குப்பம் படகு குழாம் "மழைத்துளி படகு குழாம்" என்றும் அழைக்கப்படுகிறது. மிகவும் இயற்கையான சூழலில் அமையப்பெற்று, பறவைகளைப் பார்வையிடுவோரின் சொர்க்கமாகவும், சுற்றுலாப் பயணிகள் புத்துணர்வு பெறும் தலமாகவும் விளங்குகிறது. இந்தப் படகு குழாமானது சென்னையிலிருந்து 92 கி.மீ. தொலைவிலும், மாமல்லபுரத்திற்கு தெற்கே 36 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

*இங்கிருந்து வண்ணமயமானக் கடற்கரைத் தீவிற்கு இயந்திரப் படகுமூலம் சென்று வர ஏற்பாடு செய்து தரப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள் இந்தத் தீவில் சில மணி நேரம் தங்கி இயற்கைச் சூழலைக் கண்டுகளிக்கும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது இந்தப் படகு குழாமின் சிறப்பம்சமாகும். படகில் பயணிக்கும்போது புலம்பெயர் பறவைகளைக் கண்டுகளித்தும், படகு குழாம் உணவகத்தில் சுவையான கடல் உணவுகளை உண்டு சுவைத்தும் மகிழலாம். நீர் விளையாட்டு வசதிகள் கொண்ட முதலியார்குப்பம் படகு குழாமில் விசைப் படகு, மிதிப் படகு, ஓரிருக்கைப் படகு (*Kayak*), வாழைப்பழ வடிவிலான படகு, இயந்திரப் படகு மற்றும் அதிவேக ஜெட் ஸ்கி (*Jet Ski*) வாட்டர் ஸ்கூட்டர் படகுகள் உள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகப் புதிய வகையான கேனோ துடுப்புப் படகு (*Canoe Boat*) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 19]

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வண்ணம், சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் விளையாட்டுகள் அமைக்கப்பட்டு, முதலியார்குப்பம் படகு குழாமானது தனித்துவமான பொழுதுபோக்குத் தலமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டு முதலியார்குப்பம் படகு குழாம்மூலம் ரூ.117.20 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.3. உதகமண்டலம் படகு குழாம்

"மலைகளின் ராணி" என்று அழைக்கப்படும் உதகமண்டலத்தின் மையப் பகுதியில் 85 ஏக்கர் பரப்பளவில் உள்ள ரம்மியமான உதகமண்டல் ஏரியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் படகு குழாம் அமைந்துள்ளது. இந்தப் படகு குழாமில் மிதிப் படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப் படகு போன்ற படகுகள் பிரதான சுற்றுலா அம்சமாக உள்ளன. மேலும், படகு குழாமில் நாவிற்கு இனிய சுவையான உணவு வகைகளை வழங்கும் உணவகமும் உள்ளது. நீர் விளையாட்டுகளுடன் அழகான பூங்காவும், இயற்கை எழில் சூழல்களைக் கண்டுகளிக்க சிறிய தொடர்வண்டி வசதியும் இந்தப் படகு குழாமிற்கு மேலும் மெருகூட்டுகின்றன. மாநிலத்தில் சாகசச் சுற்றுலாவினை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உதகமண்டலம் படகு இல்லத்தில் கூடாரம் அமைத்து சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம்கள் மூலமாகச் சுற்றுலாப் பயணிகளுக்கு மாற்றுப் பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தவுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டு உதகமண்டலம் படகு குழாம்மூலம் ரூ.1375.95 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.4. பைக்காரா படகு குழாம்

உதகமண்டலம்-மைசூர் சாலையில் உதகமண்டலத்திலிருந்து 21 கி.மீ. தொலைவில் அடர்ந்த காடுகளின் நடுவே பைக்காரா நீர்த்தேக்கம் எழில் கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலா மையமாக அமைந்துள்ளது. இங்கு இயந்திரப் படகு, அதிவேகப் படகு போன்ற படகுகள் மற்றும் உணவகம் ஆகியவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் இயக்கப்படுகின்றன. இந்தப் படகுச் சவாரி பைக்காரா பகுதியின் இயற்கை எழிலை முழுமையாக அனுபவிக்க ஏதுவாக உள்ளது.

[2023 ஏப்ரல் 19

இங்குள்ள உணவகத்தில் சுவையானச் சிற்றுண்டிகள் மற்றும் தின்பண்டங்கள் வழங்கப்படுகின்றன. இந்தாண்டு சுற்றுலாப் பயணிகளின் கூடுதல் வசதிக்காக இரண்டு புதிய இயந்திரப் படகுகள் வாங்கப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டு பைக்காரா படகு குழாம்மூலம் ரூ.390.00 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.5 கொடைக்கானல் படகு குழாம்

"மலைகளின் இளவரசி" என்று அழைக்கப்படும் கொடைக்கானல் ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கு இரண்டு படகு குழாம்களை நடத்துகிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணமாக, 59 ஏக்கர் நிலப்பரப்பில் நட்சத்திர வடிவிலான ஏரியில் இப்படகு இல்லம் அமைந்துள்ளது. மேலும், நவீன நீர்சாகச விளையாட்டு உபகரணங்களான நீர் மிதிவண்டி (Water Cycle) மற்றும் கேனோ துடுப்புப் படகு (Canoe Boat) ஆகியவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டு கொடைக்கானல் படகு குழாம்மூலம் ரூ.452.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.6. ஏற்காடு படகு குழாம்

கிழக்குத் தொடர்ச்சி மலைகளின், சேர்வராயன் மலைத் தொடரில் "தென்னகத்தின் அணிகலன்" என அழைக்கப்படும் ஏற்காடு அமைந்துள்ளது. தொலை தூரங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் முக்கிய சுற்றுலாத் தலமாக, 28.40 ஏக்கர் பரப்பளவில் ஏற்காடு ஏரி அமைந்துள்ளது. மனதைக் கொள்ளை கொள்ளும் இந்த ஏரியில் மிதிப் படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப்படகு போன்ற படகுகள் உள்ளன. தற்பொழுது சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக இரண்டு மற்றும் நான்கு இருக்கைகள் கொண்ட அன்னப்பறவை வடிவிலான நவீன மிதிப்படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டு ஏற்காடு படகு குழாம் மூலம் ரூ.364.17 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.7 பிச்சாவரம் படகு குழாம்

பெரிய அலையாத்திக் காடுகள் சூழ்ந்துள்ள பிச்சாவரம், சுற்றுலாத் தலமாகவும், புலம் பெயரும் பறவைகளின் புகலிடமாகவும் திகழ்கிறது. பிச்சாவரம் படகு குழாம் சுமார்

2023 ஏப்ரல் 19]

5.27 ஏக்கர் பரப்பளவில் அலையாத்திக் காடுகளின் மத்தியில் இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகளை இரசித்த வண்ணம் படகுச் சவாரியை அனுபவிக்க உகந்த இடமாக உள்ளது. தற்பொழுது பிச்சாவரம் படகு குழாமில் உள்ள உணவகம் மற்றும் சமையல் அறையை சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காகப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டு பிச்சாவரம் படகு குழாம்மூலம் ரூ.466.87 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.8 குற்றாலம் படகு குழாம்

"தென்னகத்தின் நீருற்று" (Spa of South India) என்று அழைக்கப்படும் தென்காசி மாவட்டத்தில் உள்ள குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் அழகுற அமைந்துள்ளது. இது கண்களைக் கவரும் இயற்கை எழில்மிகும் காட்சிகள் மற்றும் அருவிகள் நிறைந்த சுற்றுலாத் தலமாக தென்னகத்தில் அமைந்துள்ளது. குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாத பருவகாலத்தின்போது சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக படகுச் சவாரி வசதி செய்யப்படுகின்றது. இங்கு துடுப்புப் படகு, மிதிப் படகு மற்றும் ஓரிருக்கைப் படகு போன்ற படகுகள் உள்ளன.

24.9 வாலாங்குளம் படகு குழாம்

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய படகு குழாம் 24.8.2022 அன்று வாலாங்குளம் ஏரியில் திறக்கப்பட்டது. பறவை மற்றும் இயற்கை ஆர்வலர்களுக்கு விருப்பமான கோயம்புத்தூரில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்கும் வாலாங்குளம் ஏரியில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஒரு புதிய பான்டுன் படகு (Pontoon Boat) மற்றும் ஜெட் ஸ்கி (Jet ski) வாங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டு வாலாங்குளம் படகு குழாம்மூலம் ரூ.29.85 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.10 தொலைநோக்கி இல்லம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உதகமண்டலத்தில் உள்ள தொட்டபெட்டாவிலும், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலைவாழிடங்களிலும் தொலைநோக்கி இல்லங்களை இயக்கி வருகிறது. பரந்து விரிந்த இயற்கை எழில் கொண்ட காட்சிகளையும், பள்ளத்தாக்குகளையும் கண்டுகளிக்க ஏதுவாக

உள்ள தொலைநோக்கி இல்லங்கள், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதியின்மூலம் தொட்டபெட்டா தொலைநோக்கி இல்லச் சிற்றுண்டிக் கூடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டு தொலைநோக்கி இல்லம்மூலம் ரூ.299.55 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

24.11 கோவளம் நீலக்கொடி கடற்கரை

கோவளம் கடற்கரை சென்னையிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்த கோவளம் கடற்கரை டென்மார்க்கைச் சேர்ந்த சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையின்மூலம் நீலக்கொடி சான்றிதழ் பெற்ற தமிழ்நாட்டின் முதல் மற்றும் இந்தியாவில் 9-வது கடற்கரை என்ற பெருமையைப் பெற்றுள்ளது. உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் தூய்மையான, நன்கு நிர்வகிக்கப்படும் கடற்கரைகள் மற்றும் கடலோரப் பகுதிகளுக்கு நீலக்கொடி சுற்றுச்சூழல் தரக்குறியீடு வழங்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த சூழல், பாதுகாப்பு சேவைகள், நீரின் தரம், கல்வி, அணுகும் வசதிகள் ஆகியவை இந்த தரச்சான்றிதழ் தகுதிக்கான அளவுகோல்களாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 23.10.2021 அன்று செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகத்திடமிருந்து நீலக்கொடி கடற்கரையின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

கோவளம் கடற்கரையின் பாதுகாப்பு கண்காணிப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பான நீச்சல் பகுதி, ஆடை மாற்றும் பகுதி, குடிநீர் வசதி, வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பூங்கா, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வண்ணம் மூங்கிலால் செய்யப்பட்ட நாற்காலிகள், ஊஞ்சல் படுக்கைகள், நிழற் குடைகள், கழிப்பறைத் தொகுதிகள் மற்றும் குப்பைத் தொட்டிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உயிர்காப்புக் காவலர்கள், மேலிருந்து கண்காணிப்பதற்காக கண்காணிப்புக் கோபுரம் மற்றும் அவசரக்கால உதவிக்காக முதலுதவி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2023 ஏப்ரல் 19]

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நீலக்கொடி கடற்கரையைச் சிறந்த பொழுதுபோக்குத் தலமாக பிரபலப்படுத்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் ஒரு பகுதியாக கடற்கரைக் கைப்பந்து போட்டிகள், 'கடற்கரை யோகாசனம்' மற்றும் கடற்கரையைச் சுத்தம் செய்வது போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டு கோவளம் நீலக்கொடி கடற்கரைமூலம் ரூ.178.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

25. விற்பனை மற்றும் போக்குவரத்துப் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வளங்களைச் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிப்புறும் வகையில் பல்வேறு தொகுப்புப் பயணங்களை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமாக 14 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. அதில் 35 இருக்கைகள் கொண்ட குளிர்சாதனப் பேருந்துகள்-4, 35 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதி அல்லாத பேருந்துகள்-3, 18 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன பேருந்துகள்-3, 45 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வால்வோ பேருந்து-1, 43 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வால்வோ பேருந்துகள்-3 என சொகுசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்துகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் நடத்தப்படும் சுற்றுலாக்களில் ஒருநாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரகச் சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு-மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் புகழ்பெற்ற சுற்றுலாக்களாகும்.

25.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொகுப்புப் பயணச் சுற்றுலாக்கள்

25.1.1 திருப்பதி சுற்றுலா

பொதுமக்களின் அமோக வரவேற்பினைப் பெற்ற சென்னை-திருப்பதி ஒருநாள் தினசரி சுற்றுலாவை தமிழ்நாடு சுற்றுலா

வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது. இச்சுற்றுலாவினை இணையவழி முன்பதிவுமூலம் பதிவு செய்து திருமலை திருப்பதி தேவஸ்தான கணினியுடன் இணைக்கப்பட்டு விரைவு தரிசனத்திற்கான முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது.

சென்னையிலிருந்து தினசரி 150 விரைவு தரிசன சீட்டுகளைப் பெற்று இயக்கப்பட்டு வந்த இச்சுற்றுலா, பொதுமக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு தினசரி 1000 விரைவு தரிசன சீட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டில் உள்ள பிற நகரங்களான திருச்சி, கோவை, மதுரை, சேலம், ஒசூர் மற்றும் கடலூரில் இருந்து சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் தினசரி இச்சுற்றுலாவை இயக்கி வருகிறது.

25.1.2. ஆன்மிகச் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகள் இந்து சமய அறநிலையங்கள் துறை கட்டுப்பாட்டில் உள்ள முக்கியமான 33 திருக்கோயில்களில் உடனடி சிறப்பு தரிசனம் மேற்கொள்ள சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

25.1.3. பிற தொகுப்பு சுற்றுலாக்கள்

2022-2023 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய சுற்றுலாக்களைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது:-

1. அம்மன் மற்றும் பெருமாள் திருக்கோயில்கள் சிறப்பு தரிசனச் சுற்றுலா

ஆடி மாத அம்மன் மற்றும் புரட்டாசி மாத பெருமாள் திருக்கோயில்கள் சிறப்பு தரிசனச் சுற்றுலா ஆகியவை ஆன்மிகப் பயணிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்பால் கவரும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது. இந்து சமய அறநிலையங்கள் துறையோடு இணைந்து ஆடி மாதத்தில் ஒருநாள் அம்மன் திருக்கோயில்கள் சிறப்புச் சுற்றுலா மற்றும் புரட்டாசி மாதங்களில் ஒரு நாள் பெருமாள் திருக்கோயில்கள் சிறப்பு தரிசனச் சுற்றுலாவினை மதுரை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் சென்னை ஆகிய நகரங்களிலிருந்து இயக்கியதன்மூலம் பொதுமக்களின் அமோக வரவேற்பினை ஈர்த்துள்ளது.

2023 ஏப்ரல் 19]

2. பொன்னியின் செல்வன் சுற்றுலா

வரலாற்றுச் சிறப்புமிக்க "பொன்னியின் செல்வன்" என்ற நாவலில் இடம்பெற்றுள்ள சோழப் பேரரசின் வரலாற்றுத் தடங்களை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் "பொன்னியின் செல்வன் சுற்றுலா" என்ற சிறப்புமிக்க வரலாற்றுச் சுற்றுலாவினைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தி இயக்கி வருகிறது.

3. யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட புராதனச் சின்னங்களைக் காணும் சுற்றுலா

மாமல்லபுரத்திலுள்ள புராதன நினைவுச் சின்னங்கள் மற்றும் சோழப் பேரரசின் வரலாற்றுத் தொன்மைமிக்க புராதனக் கல்வெட்டுகள், கோயில்கள் மற்றும் சிற்பங்களை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வண்ணம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட புராதனச் சின்னங்கள் நிறைந்த மாமல்லபுரம் மற்றும் சோழ மண்டலச் சுற்றுலாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

4. புராதன நடை பயணம்

புராதனங்களை மையக் கருவாகக் கொண்டு பல்வேறு நடை பயணச் சுற்றுலாக்கள் சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பொதுமக்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களின் பெருமைகளை உணரும் வகையில் உள்ளது.

5. சென்னையில் உள்ள தேவாலயங்களைக் காணும் சுற்றுலா

சென்னையில் உள்ள பல்வேறு தேவாலயங்களை பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் வழிகாட்டியுடன்கூடிய தேவாலயச் சுற்றுலாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

6. ஐந்து நாள் சமண மதச் சுற்றுலா

தமிழ்நாட்டில் சமண சமயம் தொடர்புடைய இடங்கள் அதிகம் உள்ளன. இந்த இடங்களைப் பிரபலப்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் வகையில் 5 நாள் சிறப்பு சமண சுற்றுலாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

25.2. இதர முன் முயற்சிகள்

1. சென்னை – மோட்டார் வாகனப் பேரணி

போதைப் பொருட்களின் பயன்பாட்டை எதிர்க்கும் வகையில் விழிப்புணர்வு மோட்டார் வாகன பேரணியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது திருவாளர்கள் ஆக்சண்டி எண்டர்டெயின்மெண்ட் (M/s Axandy Entertainment) என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து 25.2.2023 அன்று சென்னை தீவுத்திடலிலிருந்து முதலியார்குப்பம் படகு குழாம் வரை நடத்தியது.

2. 44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியாளர்களுக்கான சிறப்புச் சுற்றுலா

உயர்ந்த பாரம்பரியம் மற்றும் பண்பாடு வாய்ந்த மாமல்லபுரம் புராதனச் சின்னங்கள் மற்றும் சென்னை மாநகரின் சிறப்புகள் குறித்து உலகம் முழுவதுமிருந்து வருகை தந்த சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியாளர்கள் அறிந்துகொள்ளும் வகையில் ஒருநாள் சிறப்பு சென்னை-மாமல்லபுரம் சுற்றுலாக்கள் இயக்கப்பட்டன.

3. எங்கும் ஏறலாம்-எங்கும் இறங்கலாம் (Hop on Hop off)

44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியையொட்டி பொதுமக்கள் மற்றும் போட்டியாளர்கள் வசதிக்காக சோழமண்டலம் கலை கிராமத்திலிருந்து மாமல்லபுரத்தில் போட்டி நடைபெற்ற இடம் வரை எந்த இடத்திலும் ஏறி, எந்த இடத்திலும் இறங்கலாம் என்ற வசதியைக் கொண்ட “எங்கும் ஏறலாம்-எங்கும் இறங்கலாம்” என்ற பேருந்து சேவையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கியது. இந்த சேவையினைப் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு வருகைப் புரிந்த போட்டியாளர்கள் மிகவும் விரும்பி பயணம் செய்தார்கள்.

26. அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன்கூடிய திட்டங்கள்

தமிழ்நாட்டின் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதியைப் பெருக்குவதிலும், சுற்றுலாத் தொழில் முன்னேற்றத்திலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முக்கியப் பங்களிப்பை வழங்கி வருகிறது. தனியார் மற்றும் அரசுத் துறைகளின் வளங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு, அரசு மற்றும் தனியார்

2023 ஏப்ரல் 19]

பங்களிப்புடன்கூடிய திட்டங்களைச் (PPP) செயல்படுத்த முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்:-

1) *முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதக்கும் உணவகம் அமைக்கப்பட்டு வருகிறது.*

2) *உதகை படகு இல்லத்தில் சாகச விளையாட்டுகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.*

3) *மாமல்லபுரம் மரகதப் பூங்காவில் "ஒளிரும் பூங்கா" அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ள கீழ்க்கண்ட திட்டங்களின் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

1) *ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை ஆகிய சுற்றுலாத் தலங்களில் கம்பிவட ஊர்தி (Rope Car) நிறுவுவதற்கான விரிவான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.*

2) *சென்னையில் "எங்கும் ஏறலாம் எங்கும் இறங்கலாம்" என்ற பேருந்து வசதியினை அறிமுகப்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு குறித்து திட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

3) *தமிழ்நாட்டிலுள்ள ஐந்து திருக்கோயில்களை லேசர் ஒளிக்கற்றைமூலம் மிளிரும் வகையில் அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

27. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தக முன்முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தகப் பிரிவு மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு, தொகுப்புச் சுற்றுலாக்கள், ஓட்டல்கள் மற்றும் படகு குழாம்களின் வர்த்தகத்தைப் பெருக்கி வருகிறது. பல்வேறு வகையான உத்திகளைக் கையாண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் அறைகள் மற்றும் பல்வேறு சுற்றுலாக்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை மற்றும் வருவாயைப் பெருக்கியுள்ளது.

[2023 ஏப்ரல் 19

27.1. மின்னணு மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள், தொகுப்புச் சுற்றுலாக்கள் மற்றும் படகு இல்லங்களின் பயன்பாடுகளைப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக சமூக ஊடகங்களின் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகள், சுற்றுலாத் தலங்கள் குறித்த விவரங்கள் பற்றியும் இத்துறை பரப்புரை செய்து வருகின்றது.

மேலும் சமூக ஊடகங்களில் புகைப்படப் போட்டி, சிறப்புச் சலுகைகள் போன்ற பல்வேறு உத்திகளைப் பயன்படுத்திப் பொதுமக்களை அதிகளவில் சென்றடையும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சமூக வலைதளப் பக்கங்களில் திரைப்படத் திங்கள் தொடர், வினாடி வினாத் தொடர், சான்று வியாழன்கள், உண்மை வெள்ளித் தொடர் போன்ற பார்வையாளர்களை ஈர்க்கும் வகையிலான பல்வேறு போட்டி உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலாத் தலங்கள் குறித்த பார்வையாளர்களை ஈர்க்கும் வகையிலான வீடியோக்கள் உருவாக்கப்பட்டு, சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலாத் தலங்களை பிரபலபடுத்துவதற்குச் சமூக ஊடகத்தில் அதிகமான பின்தொடர்பவர்களைக் கொண்ட செல்வாக்குப் பெற்ற நபர்களுடன் இணைந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

27.2 வளர்ச்சிக்கான பிற முன்னெடுப்புகள்

திருப்பதி சுற்றுலாவினை மேலும் விளம்பரப்படுத்தும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலங்கள் மற்றும் ஓட்டல்களில் விளம்பரப் பதாகைகள், சுவரொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களுக்கு வருகைத் தரும் வாடிக்கையாளர்கள் பல்வேறு சுற்றுலாத் தொகுப்புத் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்ள இந்த உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 19]

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் படகு குழாம்கள் குறித்த விளம்பரப் பதாகைகள் அதிக பார்வையாளர்களைச் சென்றடையும் வகையில் முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருப்பதி சுற்றுலாப் பயணம் உட்பட வாலாங்குளம் படகு குழாம் தொடக்க விழா ஆகியவை குறித்து வானொலி மூலம் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுங்கத் துறை, தொழிலாளர் ஈட்டுறுதி நிறுவனம் மற்றும் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் ஆகிய துறைகளின் வைப்பு நிதி மூலமாக இந்நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தமிழ்நாடு ஓட்டல்களைப் பயன்படுத்த விடுமுறைகாலச்சலுகைதிட்ட ஒப்பந்தம்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

28. பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை சுற்றுலாப் பயணிகளுக்குக் கொண்டு சேர்க்க, பொருட்காட்சிகள் மற்றும் திருவிழாக்களை நடத்துவது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியச் செயல்பாடுகளில் ஒன்றாகும்.

28.1 தீவுத்திடல், சென்னை

சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தீவுத்திடல் மைதானம் ஆண்டு முழுவதும் பெரிய அளவிலான நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துவதற்கு பொருத்தமான இடமாக பிரபலமாகி வருகிறது. இவ்விடம் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் நகரத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் எளிதில் அணுகுவதற்கு வசதியான இடத்தில் அமைந்துள்ளது. பெரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் தேவையான மிகப் பெரிய பரப்பிலான இடத்தைக் கொண்டுள்ளது இந்த மைதானத்தின் சிறப்புகளாகும்.

28.1.1. 47-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி, 2023

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத்திடலில் கடந்த 1974 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசம்பர் முதல்

[2023 ஏப்ரல் 19

மார்ச் வரை 70 நாட்களுக்கு இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு 47-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தொடங்கி மார்ச் 23 ஆம் தேதி வரை "சுற்றுலா மறுசிந்தனை" என்ற கருப்பொருளை மையமாக வைத்து வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

இந்த வருட பொருட்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை உள்பட 51 அரசுத் துறைகளின் அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இந்த கண்காட்சியில் குடும்பத்தினர் மற்றும் சிறுவர், சிறுமிகளைக் கவரும் வகையில் பல்வேறு வணிக அரங்கங்கள் மற்றும் விளையாட்டு அரங்கங்கள் இடம்பெற்று இருந்தன. இந்தாண்டு பொருட்காட்சியை சுமார் 15 இலட்சம் பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

28.1.2 சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா

தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகுக்கு தெரியப்படுத்தும் விதமாக கலை பண்பாட்டுத் துறை மற்றும் சுற்றுலாத் துறை இணைந்து இந்த வருடம் ஜனவரி 13 முதல் 17 ஆம் தேதி வரை தொடர்ந்து 5 நாட்களுக்கு "நம்ம ஊரு திருவிழா" வருடாந்திரக் கலை விழாவைக் கொண்டாடியது. இந்த திருவிழாவில் 40-க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலை வடிவங்களில் 500-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று பார்வையாளர்களுக்குச் சிறப்பான கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வு சென்னையில் தீவுத்திடல் உள்பட 18 இடங்களில் நடைபெற்றது. இந்த விழாவில் பார்வையாளர்கள் நமது தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பாக உணவு அரங்குகள் அமைத்து சிறப்பாக நடத்தியது.

29. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின் ஆளுமைச் செயல்திறன்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது மின்னாளுமைச் செயல்பாடுகள்மூலம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய தகவல்களை வழங்குவதற்கும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை இணையவழி உடன் நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation) செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 19]

29.1. OTA-களின் பட்டியலுடன் இணைப்பு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சேனல் மேலாளரை நியமித்து பிரபலமான ஆன்லைன் பயணத் திரட்டிகள் (OTAs) இணைய தளங்களான Makemytrip, Goibibo, Booking.com மற்றும் இதர OTA-க்களில் தமிழ்நாடு ஓட்டல்களின் அறைகளை முன்பதிவு செய்ய வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னணி ஆன்லைன் பயணத் திரட்டிகள் (OTAs) இணையதளத்தில் தமிழ்நாடு ஓட்டல்களை பட்டியலிட்டதன்மூலம் தடையற்ற முன் பதிவிற்கும், உலகளவில் பிரபலப்படுத்தி வருவாயை அதிகரிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஆன்லைன் பயணத் திரட்டிகள் (OTAs) மூலம் 5096 முன்பதிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரையிலான காலக்கட்டத்தில் ரூ.1.85 கோடி வருவாயையும் ஈட்டியுள்ளது.

29.2 QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்ட வழிமுறை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அனைத்து ஓட்டல்களிலும், QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்டச் செயல்முறை (Feedback mechanism) அமைப்பை நிறுவியுள்ளது. இது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்கு உதவியாக உள்ளது. ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 1,323 வாடிக்கையாளர்களின் கருத்துக்கள் இச்சேவைமூலம் பெறப்பட்டது. வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை சிறப்பாக வழங்குவதற்கு இப்பின்னூட்டச் செயல்முறை பயன்படுத்தப்படுகிறது.

29.3 24 x 7 சுற்றுலா தகவல் உதவி (Helpline) சேவை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழ்நாட்டைப் பற்றிய பயணம் மற்றும் சுற்றுலாத் தொடர்பானத் தகவல்களைத் தொலைபேசிமூலம் வழங்குவதற்காக பிரத்தியேக அடிப்படையில் சுற்றுலாத் தகவல் உதவி (Helpline) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. 24 மணி நேரமும் செயல்படும் இந்த தகவல் உதவி (Helpline) சேவை, சுற்றுலாப் பயணிகளுக்கு உடனடி உதவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும்,

தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் இச்சேவை உள்ளது.

29.4 ஓட்டல் மின் ஆளுமை மென்பொருள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது அனைத்து தமிழ்நாடு ஓட்டல்களின் சேவை தரத்தை உயர்த்துவதற்கும், தரவு பகுப்பாய்வுகளை எளிதாக்குவதற்கும் ஒருங்கிணைந்த கிளவுட் (Cloud) அடிப்படையிலான ஓட்டல் மின் ஆளுமை மென்பொருள் அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

29.5 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இணையதளத்தைப் புதுப்பித்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணயதளத்தைப் புதுப்பித்து, பயனாளிகள் எளிதில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைத்துள்ளது.

30. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய முயற்சிகள்

30.1 டிரைவ்-இன் உணவகத்தைப் புதுப்பித்தல்

தீவுத்திடலில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் டிரைவ்-இன் உணவகமானது ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் டிரைவ்-இன் திரையரங்கம், பார்பிக்யூ நிலையம் மற்றும் தேநீர் விடுதி போன்ற பல்வேறு வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு 4.1.2023 அன்று முதல் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

30.2 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வணிகங்களை அதிகப்படுத்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் பதிவு மேற்கொள்வதற்காக வணிகத்துடன் வணிகம் என்ற புதிய திட்டம் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விற்பனை முகவர்கள் கீழ்க்காணும் இரண்டு பிரிவுகளில் பதிவு செய்யப்படுகின்றனர்

1. ஓட்டல்கள் மற்றும் தொகுப்புப் பயணங்கள் (திருப்பதி சுற்றுலாவைத் தவிர)

2023 ஏப்ரல் 19]

2. திருப்பதி சுற்றுலாப் பயணம்

இதனை நடைமுறைப்படுத்தியதால் கடந்த 3 மாதங்களில் 40-க்கும் மேற்பட்ட முகவர்கள் நியமிக்கப்பட்டு, ஓட்டல்கள் மற்றும் தொகுப்புப் பயணங்களின் முன்பதிவு கணிசமாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்தில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஏராளமான முகவர்கள் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

30.3 புதிய வகை படகுகள்

*அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யவும், தனித்துவமான சிலிர்ப்பூட்டும் அனுபவத்தை வழங்கவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் மாறுபட்ட, புதிய படகுகள் வாங்கப்பட்டு, படகு குழாம்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. கேனோ துடுப்புப் படகு (*Canoe Boats*), நீர் மிதிவண்டி (*Water cycle*), குழந்தைகள் படகு, அன்னவடிவப் படகு, சோர்பின் பந்து (*Zorbin ball*) ஆகியவை சில புதிய வகை படகுகள் ஆகும்.*

30.4. முன்னணிப் பயண ஏற்பாட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களின் வருவாயை உயர்த்தவும் தனது கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தவும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த முன்னணிப் பயண ஏற்பாட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது .

31. நிறுவனத்தின் மறுசீரமைப்பு

சமீபத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதன் நிறுவன கட்டமைப்பை ஒரு புகழ்பெற்ற ஆலோசனை நிறுவனம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் மறுசீரமைத்துள்ளது. இந்த மறுசீரமைப்புச் செயல்முறையானது சந்தைத் தேவைகள் குறித்த ஆய்வு மற்றும் தற்போதுள்ள நிறுவனக் கட்டமைப்பின் முழுமையான ஆய்வுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டது. நிறுவன மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, முக்கியமான தலங்களில் அனுபவம் வாய்ந்த பணியாளர்களை நியமிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் குழு பரிந்துரைத்தது.

அதன் அடிப்படையில் நடப்பு ஆண்டில் பின்வரும் வல்லுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:


வ எண்	வல்லுநர்கள்
1	உதவி பொது மேலாளர் (உணவு மற்றும் பானங்கள்)
2	உதவி பொது மேலாளர் (பராமரிப்பு பணிகள்)
3	உதவி பொது மேலாளர் (ஆலயம் – தங்கும் விடுதி)
4	மேலாளர் (தொகுப்புச் சுற்றுலாக்கள்)
5	உதவி பொது மேலாளர் (சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை)

32. முடிவுரை

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது முக்கிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கும், அதிகம் அறியப்படாத இடங்களைக் கண்டறிந்து பிரபலப்படுத்துவதற்கும் முக்கிய சுற்றுலா இனங்களில் பல்வேறு சுற்றுலாப் பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது. புதுமையான உத்திகள் மற்றும் சுற்றுலாத் திட்டங்களைப் பயன்படுத்தி, மாநிலத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் சுற்றுலா மேற்கொள்ளும் இடமாக தமிழ்நாட்டை மாற்றுவதையும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இணைப்பு-1


சுற்றுலாத்துறை நிர்வாக அமைப்பு



[2023 ஏப்ரல் 19

இணைப்பு-2

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக அமைப்பு



2023 ஏப்ரல் 19]

இணைப்பு-3

சுற்றுலா அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. அரியலூர்	12. மதுரை	23. திருவண்ணாமலை
2. சென்னை	13. மாமல்லபுரம்	24. திருவள்ளூர்
3. கோயம்புத்தூர்	14. நாமக்கல்	25. திருவாரூர்
4. சிதம்பரம்	15. பூம்புகார்	26. தேனி
5. தர்மபுரி	16. புதுக்கோட்டை	27. தூத்துக்குடி
6. ஈரோடு	17. பெரம்பலூர்	28. திருப்பூர்
7. காரைக்குடி	18. இராமேஸ்வரம்	29. உதகமண்டலம்
8. கன்னியாகுமரி	19. சேலம்	30. வேலூர்
9. கொடைக்கானல்	20. திருச்சிராப்பள்ளி	31. விருதுநகர்
10. கிருஷ்ணகிரி	21. திருநெல்வேலி	32. விழுப்புரம்
11. கரூர்	22. தஞ்சாவூர்	

வெளி மாநிலங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. புதுடெல்லி

2. ஆக்ரா

3. ஜெய்ப்பூர்

4. கொல்கத்தா

5. மும்பை

6. பனாஜி (கோவா)

[2023 ஏப்ரல் 19

இணைப்பு-4

சுற்றுலா தகவல் மையங்கள்

விமான நிலையத்தில் அமைந்துள்ளவை	இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை
1. சென்னை (பன்னாட்டு முனையம்) 2. சென்னை (உள்நாட்டு முனையம்) 3. கோயம்புத்தூர் 4. மதுரை 5. திருச்சிராப்பள்ளி 6. தூத்துக்குடி 7. சேலம்	1. சென்னை (எழும்பூர்) 2. கோயம்புத்தூர் 3. மதுரை 4. திருச்சிராப்பள்ளி 5. திருநெல்வேலி
பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளவை	**பிற இடங்களில் அமைந்துள்ளவை**
1. சென்னை (கோயம்பேடு)	1. கூடலூர் (நீலகிரி மாவட்டம்) 2. இராமேஸ்வரம் (கோயில் வளாகம்) 3. தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு) 4. பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

சுற்றுலா தகவல் மையங்கள்

வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை

1. பெங்களூரு இரயில் நிலையம் (கர்நாடக மாநிலம்)
2. ஐதராபாத் (ஆந்திர மாநிலம்)
3. திருவனந்தபுரம் (கேரள மாநிலம்)
4. அகமதாபாத் (குஜராத் மாநிலம்)
5. புவனேசுவரம் (ஒடிசா மாநிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-I

(*133 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 29-கலை பண்பாட்டுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

தமிழ்நாடு மிகச் சிறந்த வரலாற்றுப் பாரம்பரியம், மரபுகள் மற்றும் துடிப்பான பண்பாட்டின் தாயகமாகும். இந்த மாநிலம் தலைசிறந்த பண்பாடு, பிரம்மாண்டமான கோயில்கள், ஈர்ப்புமிகு கலைகள் மற்றும் வெண்கல சிற்பங்கள் உள்ளிட்ட எழில்மிகு கைவினைப் பொருட்களுக்கு புகழ் பெற்றது.

மொழி, இலக்கியம், கட்டடக்கலை, சிற்பம், இசை, நடனம், அரங்கக் கலைகள், நாட்டுப்புறக் கலைகள், தற்காப்புக் கலைகள் மற்றும் ஓவியம் போன்றவற்றில் இதன் பெருமைமிகு காட்சி வெளிப்படுகிறது. செவ்வியல் நடனமான பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புற நடனங்களான தப்பாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் போன்ற துடிப்பான நடன வடிவங்களை பெற்றுள்ள பெருமைக்குரியது இந்த மாநிலம்.

தமிழ் மக்களின் உயிர்ப்பும் பன்முகத் தன்மையும் கொண்ட வாழ்க்கை முறையையும், பண்பட்ட நிலையையும் சித்தரிக்கும் பல கலைத் திருவிழாக்களைக் கொண்டது தமிழ்நாடு. மண்டல மற்றும் மத எல்லைகளைக் கடந்து மாநிலத்தின் அனைத்து மக்களாலும் இப்பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

தமிழ் பண்பாட்டின் தனித்துவம், அதன் தொன்மை, உயிர்மை, தகவமைத்துக்கொள்ளும் தன்மை மற்றும் சமத்துவம் ஆகியவற்றில் உள்ளது. அதனாலேயே இந்த மாநிலம் இந்தியாவின் 'பண்பாட்டுத் தலைநகராக' மதிக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

1.1 கலை பண்பாட்டு இயக்ககம்


கலை பண்பாட்டு இயக்ககம் 1991 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இயக்குநர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இத்துறை

1. *ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்,*
2. *தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்,*
3. *இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள்,*
4. *ஒரு அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி,*
5. *நான்கு அரசு இசைக் கல்லூரிகள்,*
6. *ஒரு அரசு நிதியுதவி பெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி,*
7. *பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்,*
8. *தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,*
9. *தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்,*
10. *40 தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்கள்*

ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இயக்குநரகம், ஒரு இணை இயக்குநர், 3 துணை இயக்குநர்கள், 8 மண்டல உதவி இயக்குநர்கள், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் பிற அலுவலர்களைக் கொண்டுள்ளது.

[2023 ஏப்ரல் 19


துறையின் படிநிலை(Hierarchy)
கலை பண்பாட்டுத்துறை
மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்
1) காஞ்சிபுரம்
2) சேலம்
3) தஞ்சாவூர்
4) மதுரை
5) திருநெல்வேலி
6) திருச்சி
7) கோயம்புத்தூர்
மாவட்டக் கலை மன்றங்கள்
தமிழகத்தின் 37 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுதல்(மயிலாடுதுறை நீங்கலாக)
கலைக் கல்விநிறுவனங்கள்
தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம்
இசைக் கல்லூரிகள்
1) சென்னை
2) மதுரை
3) கோயம்புத்தூர்
4) திருவையாறு
அரசு நிதியுதவி பெறும் கல்லூரி
5) கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி
மாலைநேர இசைக்கல்லூரி மையங்கள்
1) சென்னை 2) மதுரை
3) கோயம்புத்தூர்
கவின்கலை க்கல்வி நிறுவனங்கள்
1) அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை
2) அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம்.
3) அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக்கல்லூரி, மாமல்லபுரம்
மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்
1) திருச்சி
2) திருநெல்வேலி
3) திருவாரூர்
4) சேலம்
5) புதுக்கோட்டை
6) விழுப்புரம்
7) கடலூர்
8) பெரம்பலூர்
9) தூத்துக்குடி
10) கரூர்
11) காஞ்சிபுரம்
12) திருவண்ணாமலை
13) சிவகங்கை
14) கிருஷ்ணகிரி
15) சீர்காழி
16) இராமநாதபுரம்
17) ஈரோடு
கலை நிறுவனங்கள்
1. தமிழ்நாடு இயல்இசை நாடகமன்றம்
2. தமிழ்நாடு ஜவகர்சிறுவர் மன்றம்
நலவாரியம்
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

2023 ஏப்ரல் 19]

1.2 துறையின் நோக்கங்கள்

கலை பண்பாட்டுத் துறையின் நோக்கங்கள்:—

- *கலை நிகழ்ச்சி வாயிலாக பல்வேறு கலை வடிவங்களைக் காட்சிப்படுத்துதல்.*
- *செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கி ஊக்குவித்தல்.*
- *கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.*
- *நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.*
- *நிகழ்த்துக்கலைகள் மற்றும் கவின் கலைக் கல்வியை ஊக்குவித்தல்.*
- *பல்வேறு கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.*
- *கண்காட்சிகள் நடத்துதல் மற்றும்*
- *சிறந்த சிற்பிகள், ஓவியர்கள், செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்.*

1.3 மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் ஏழு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு, உதவி இயக்குநர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலக் கலை பண்பாட்டு மையமும் நான்கு முதல் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியது. இம்மையங்கள் வாயிலாக கலை நிகழ்ச்சிகள், கலைப் போட்டிகள், கலைப் பயிற்சி முகாம்கள் மற்றும் ஓவிய-சிற்ப கலைக்காட்சிகள் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட கலை மன்றங்கள், சவகர் சிறுவர் மன்றங்கள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியவற்றின் திட்டங்கள் மண்டலக் கலை பண்பாட்டு மையங்களால் செயல்படுத்தப்படுகின்றன.

வ. எண்	மண்டலக் கலை பண்பாட்டு மையம்	மாவட்டங்கள்
1	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர்.
2	சேலம்	சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி.
3	தஞ்சாவூர்	தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை.
4	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர்.
5	மதுரை	மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் தேனி
6	திருநெல்வேலி	திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தென்காசி.
7	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர்.

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் கீழ்க்கண்ட கலை நிகழ்ச்சிகளை மாவட்டங்களில் நடத்துகின்றன:—

வ. எண்	மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள்	
1	**காஞ்சிபுரம் மண்டலம்:**	
	கார்த்திகை தீபம்	திருவண்ணாமலை மாவட்டம்
	ஆடிக்கிருத்திகை	திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்
	மகாசிவராத்திரி	காஞ்சிபுரம் மாவட்டம்
	கோடை விழா	ஏலகிரி, திருப்பத்தூர் மாவட்டம்
		ஜவ்வாது மலை, திருவண்ணாமலை மாவட்டம்

வ. எண்	மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள்	
2	**சேலம் மண்டலம்**	
	கோடை விழா	ஏற்காடு, சேலம் மாவட்டம்
	ஆடிப்பெருக்கு விழா	ஒகேனக்கல், தருமபுரி மாவட்டம்
	மாங்கனி விழா	கிருஷ்ணகிரி மாவட்டம்
	வல்வில் ஓரி விழா	கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம்
3	**தஞ்சாவூர் மண்டலம்**	
	சீர்காழி தமிழிசை மூவர் விழா	மயிலாடுதுறை மாவட்டம்
	இராஜராஜசோழன் சதய விழா	தஞ்சாவூர் மாவட்டம்
	ஆழித்தேர் விழா	திருவாரூர் மாவட்டம்
4	**திருச்சிராப்பள்ளி மண்டலம்**	
	வைகுண்ட ஏகாதசி விழா	திருச்சிராப்பள்ளி மாவட்டம்
	அருள்மிகு நந்திதேவர் திருக்கல்யாண விழா	திருமழப்பாடி, அரியலூர் மாவட்டம்
	திருநெடுங்குடி மகாசிவராத்திரி விழா	புதுக்கோட்டை மாவட்டம்
5	**மதுரை மண்டலம்**	
	கோடை விழா	கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்
	சித்திரைத் திருவிழா	மதுரை

[2023 ஏப்ரல் 19

வ. எண்	மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள்	
6	**திருநெல்வேலி மண்டலம்**	
	பாவை விழா	ஸ்ரீ வில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்
	சாரல் விழா	குற்றாலம், தென்காசி மாவட்டம்
	அருவித்திருவிழா	திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம்
	குமரித் திருவிழா	கன்னியாகுமரி மாவட்டம்
7	**கோயம்புத்தூர் மண்டலம்**	
	தீரன் சின்னமலை விழா	ஈரோடு மாவட்டம்
	ஆடிப்பெருந் திருவிழா	திருப்பூர் மாவட்டம்
	கோடை விழா	உதகை, நீலகிரி மாவட்டம்
		வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்

1.4 மாவட்ட கலை மன்றங்கள்

கலைகளை ஊக்கப்படுத்தவும், பரப்பவும், பேணிக் காக்கவும் 1994 ஆம் ஆண்டு மாவட்ட கலை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை கலைஞர்களிடம் உள்ள திறமைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. இம்மன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமை மிக்க பதினைந்து கலைஞர்களைக் கண்டறிந்து பின்வருமாறு பிரிவிற்கு 3 விருதுகள் வீதம் வழங்குகின்றன:—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

வ. எண்	வயதுப் பிரிவு	விருதின் பெயர்	விருதுத் தொகை (ரூ)
1	18 வயதிற்கு உட்பட்டவர்கள்	கலை இளமணி	4,000/-
2	19 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்கள்	கலை வளர்மணி	6,000/-
3	36 முதல்50 வயதிற்கு உட்பட்டவர்கள்	கலைச் சுடர்மணி	10,000/-
4	51 முதல்65 வயதிற்கு உட்பட்டவர்கள்	கலை நன்மணி	15,000/-
5	66 வயதிற்கு மேற்பட்டவர்கள்	கலை முதுமணி	20,000/-

கலைஞர்களுக்கு சீரான உதவியை உறுதி செய்யவும், அரசால் வழங்கப்படும் நிதியுதவிகளை எளிதாகப் பெறவும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறவும், கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. 73,348 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

1.5 கலைக் கல்வி

பல்வேறு நிலைகளில் நிகழ்த்துக்கலைகள் மற்றும் கவின் கலைகளை வளர்ப்பதற்காக பல கலைக் கல்வி நிறுவனங்களை அரசு நிறுவியுள்ளது.

1.5.1 தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகச் சட்டம், 2013 மூலம் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் 14.11.2013 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 'தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்' என 2020 ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

[2023 ஏப்ரல் 19

இப்பல்கலைக்கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் முதுகலை பட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப் படிப்புகள், ஆய்வியல் நிறைஞர் படிப்புகள் மற்றும் ஓவியம் மற்றும் காட்சி வழி தகவல் தொடர்பு வடிவமைப்பு பிரிவுகளில் மூன்றாண்டு பகுதி நேர முதுகலை பட்டப்படிப்புகள் (வார இறுதி நாட்களில்) பயிற்றுவிக்கப்படுகின்றன.

கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் நான்கு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் திருச்சிராப்பள்ளி, கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகள் செயல்படுகின்றன.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கல்லூரி மற்றும் 13 சுயநிதிக் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. அவை:

1. இராணி லேடி மெய்யம்மை ஆச்சி தமிழ் இசைக் கல்லூரி, மதுரை.
2. ஸ்ரீ அன்னை காமாக்ஷி இசை மற்றும் கவின் கலைக் கல்லூரி, கே.கே நகர், சென்னை.
3. பிரிட்ஜ் அகாடமி நுண்கலைக் கல்லூரி, சூளைமேடு, சென்னை.
4. பரதம், செனாய் நகர், சென்னை.
5. ஸ்ரீ தியாகராஜா இசைக் கல்லூரி, மார்த்தாண்டம், கன்னியாகுமரி.
6. ரவிராஜ் நுண்கலைக் கல்லூரி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்.
7. மெக்கன்ஸ் ஊட்டி கட்டடக் கலைக் கல்லூரி, உதகை, நீலகிரி மாவட்டம்.
8. பாமி டியோர் திரைப்படம் மற்றும் ஊடகக் கல்லூரி, தஞ்சாவூர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

9. பாமி டியோர் திரைப்படம் மற்றும் ஊடகக் கல்லூரி, மேற்கு தாம்பரம், சென்னை.

10. அழகப்பா நிகழ்த்துக்கலை அகாடமி கல்லூரி, காரைக்குடி.

11. சென்னை திரைப்பட தொழிற்பள்ளி, கொட்டிவாக்கம், சென்னை.

12. தமிழிசைக் கல்லூரி, இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை.

13. எம்.இ.டி. நுண்கலைக் கல்லூரி, செண்பகராமன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம்.

1.5.2 அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு இசைக் கல்லூரி 1949 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், நாதஸ்வரம், தவில், கிராமியக் கலை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்.

2. நட்டுவாங்கத்தில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு.

3. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு

4. குரலிசை, வயலின், வீணை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்.

5. மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள்.

1.5.3 அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை, அரசு இசைக் கல்லூரி 1979 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், தவில், புல்லாங்குழல், நாதஸ்வரம், பரதநாட்டியம் மற்றும்

கிராமியக் கலை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்

2. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு
3. குரலிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்.
4. மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள்.

1.5.4 அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர், அரசு இசைக் கல்லூரி 1993 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம், தவில் மற்றும் நாதஸ்வரம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்.
2. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு.
3. குரலிசை, வீணை, வயலின் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்.
4. மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை மற்றும் வயலின் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள்.

1.5.5 அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

திருவையாறு, அரசு இசைக் கல்லூரி 1997 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், நாதஸ்வரம், தவில் மற்றும் கிராமியக்கலை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்.
2. நட்டுவாங்கத்தில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு.
3. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு

2023 ஏப்ரல் 19]

4. குரலிசை, வீணை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்

5. குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில் இரண்டாண்டு முதுகலை பட்டப்படிப்புகள்

6. இசையில் முனைவர் பட்ட ஆய்வு படிப்புகள்.

அரசு இசைக்கல்லூரி மாணவர்களுக்கு ஒரு கல்வியாண்டில் மாதம் ரூ.500/ – வீதம் 10 மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1.5.6 அரசு இசைப்பள்ளிகள்

இசை மற்றும் கலைகளைப் பயிலும் வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்க 17 மாவட்டங்களில் அரசு இசைப்பள்ளிகள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகியவற்றில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

அரசு இசைப்பள்ளி மாணவர்களுக்கு ஒரு கல்வியாண்டில் மாதம் ரூ.400/ – வீதம் 10 மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1.5.7 அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி 1850 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள்.

[2023 ஏப்ரல் 19

2. சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக் கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகள்.

1.5.8 அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்

கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரி 1887 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள்.
2. வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள்.

1.5.9 அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் மரபு கட்டடக் கலையில் பி.டெக். (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக் கலையில் பி.எப்.ஏ. (கற்சிற்பம், சுதைச் சிற்பம், மரச் சிற்பம் மற்றும் உலோகச் சிற்பம்) (B.F.A. in Traditional Sculpture), மரபு ஓவியம் மற்றும் வண்ணக் கலையில் பி.எப்.ஏ. (B.F.A. in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

1.5.10 கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி, கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் கல்லூரி ஆகும். இக்கல்லூரியில் கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

2023 ஏப்ரல் 19]

1. *இசையில் முனைவர் பட்டப்படிப்பு.*
2. *இசையில் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டப்படிப்பு.*
3. *பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள்.*
4. *பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப் படிப்புகள் மற்றும் மூன்றாண்டு பட்டப் படிப்புகள்.*

1.6 தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்

ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு கலைப் பயிற்சிகள் வழங்குதல், அவர்களிடம் மறைந்துள்ள கலைத் திறன்களை வெளிக்கொணருதல், கலைக்கல்வி வழங்குதல் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு சவகர் சிறுவர் மன்றம் சென்னையில் தொடங்கப்பட்டது.

சவகர் சிறுவர் மன்றங்கள் 24 இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களாகவும், 14 இடங்களில் விரிவாக்க மையங்களாகவும், 2 இடங்களில் ஊரக மையங்களாகவும் மொத்தம் 40 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திற்கு ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்தை சென்னை, மயிலாப்பூரில் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி நடைபெறுகிறது.

1.6.1 சவகர் சிறுவர் மன்றங்களில் பகுதி நேர பயிற்சிகள்

குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, டிரம்ஸ், பேண்டு, தையல், ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பம் ஆகிய கலைகளில் சென்னையிலும், மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மேலுள்ள ஏதேனும் 4 கலைகளில் மாவட்ட மையங்களிலும் பகுதி நேரக் கலைப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

[*2023 ஏப்ரல் 19*

பயிற்சி திட்டங்கள்

1.6.2 மாவட்ட அளவிலான கோடைக்கால கலை பயிற்சி முகாம்

மாவட்ட அளவில் கோடைக்கால கலை பயிற்சி முகாம்கள் சவகர் சிறுவர் மன்ற மையங்களில் நடத்தப்படுகின்றன.

1.6.3 மாநில அளவிலான கோடைக்கால மற்றும் குளிர்கால பயிற்சி முகாம்கள்

ஆண்டுதோறும் கோடை விடுமுறையின்போது, ஏதாவது ஒரு மலைவாழிடத்தில் மாநில அளவிலான கோடைக்கால உண்டுறை முகாம் நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் அரையாண்டு விடுமுறையின்போது ஏதேனும் ஒரு மாவட்டத்தில் மாநில அளவிலான குளிர்கால உண்டுறை முகாம் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 100 சவகர் சிறுவர் மன்ற சிறார்கள் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, யோகா மற்றும் சிலம்பம் ஆகியவற்றில் ஆர்வத்துடன் பங்கேற்று பயிற்சி பெறுகின்றனர்.

1.6.4 மாநில அளவிலான கைவினை முகாம்

ஆண்டுதோறும் காலாண்டு விடுமுறையின்போது மாநில அளவிலான உண்டுறை முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாமில் சுடுமண் சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், பத்திக், கைவினை மற்றும் மெழுகுவர்த்தி செய்தல் போன்ற பல்வேறு கலைகளில் மாநிலத்திலுள்ள 100 சவகர் சிறுவர் மன்ற சிறார்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

1.6.5 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள்

குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 5 முதல் 8 வயது, 9 முதல் 12 வயது மற்றும் 13 முதல் 16 வயது பிரிவினர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவிலான கலைப் போட்டிகளில் முதல் பரிசு பெற்ற 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவு மாணாக்கர்களுக்கு இடையே மாநில அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் முதல் பரிசாக ரூ.10,000/– வீதம் 8 மாணாக்கர்களுக்கும்

2023 ஏப்ரல் 19]

(2 வயது பிரிவுகள் X 4 கலைப் பிரிவு), இரண்டாவது பரிசாக ரூ.7,500/– வீதம் 8 மாணாக்கர்களுக்கும் மற்றும் மூன்றாவது பரிசாக ரூ.5,000 வீதம் 8 மாணாக்கர்களுக்கும் என 24 மாணாக்கர்களுக்கு மொத்தம் ரூ.1,80,000/– பரிசுத் தொகையும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

1.6.6 தேசிய அளவிலான திட்டங்களில் சவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு

ஆண்டுதோறும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினத்தில் (நவம்பர்-14) புதுதில்லி, தேசிய சிறுவர் மன்றம் மூன்று நாட்கள் தேசிய ஒருமைப்பாட்டு கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது. இந்நிகழ்ச்சிகளில் தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று செயல்படும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து மாணவ, மாணவிகள் பங்கேற்கின்றனர்.

1.6.7 தேசிய பாலஸ்ரீ விருது

தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தகுதியானவர்களைத் தேர்வு செய்ய புதுதில்லி, தேசிய சிறுவர் மன்றம் போட்டிகளை நடத்துகிறது. இப்போட்டிகள் முறையே படைப்பாக்கச் செயல்திறன்—Creative Performance (Dance, Vocal Music, Percussion, Instrumental Music, Theatre Art, Puppetry), நுண்கலை படைப்பாற்றல்—Creative Arts (Painting, Craft, Sculpture, Visual Art), படைப்பாற்றல் மிக்க அறிவியல் புதுமைகள்—Creative Scientific Innovations (Scientific Model Making, Project Making, Scientific Innovations, Problem—solving) மற்றும் எழுத்துக்கலை படைப்பாற்றல்—Creative Writing (Story, Prose, Poem, Dialogue and Play) ஆகிய 4 வகையான முதன்மை கலைகளில், 16 வகை கலைப் பிரிவுகளில் நடத்தப்படுகின்றன.

முதற்கட்டமாக மாவட்ட அளவிலான போட்டிகளும், தொடர்ந்து மாநில அளவிலான போட்டிகளும், இறுதியாக தேசிய அளவிலான போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

1.7 கலைச்செம்மல் விருதுகள்

மரபுவழி மற்றும் நவீனபாணி கலைப் பிரிவுகளில் சிறந்து விளங்கும் ஓவியம் மற்றும் சிற்பக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் ‘கலைச்செம்மல்’ விருதுகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு

செப்புப் பட்டயமும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. கலைச்செம்மல் விருது பெறுபவர்களுக்கு வழங்கப்படும் விருதுத் தொகை ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், விருது பெறும் நபர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து ஆறாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை, புகழ்பெற்ற 21 மரபுவழி கலைஞர்களுக்கும், 52 நவீனபாணி கலைஞர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

1.8 மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் ஓவிய-சிற்பக் கலைக்காட்சி மற்றும் விருதுகள்

தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களிடமிருந்து ஓவியம் மற்றும் சிற்ப கலைப்படைப்புகள் பெறப்பட்டு, மிகச்சிறந்த கலைப்படைப்புகள் அரசால் அமைக்கப்படும் தெரிவுக் குழுவால் தேர்வு செய்யப்படுகின்றன. சிறந்த மரபுவழி, நவீனபாணி ஓவியம் மற்றும் சிற்ப கலைப்படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. மூத்தோர் பிரிவில் (30 வயதுக்கு மேற்பட்ட) 30 கலைஞர்களுக்கு ரூ.15,000/– வீதம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இளையோர் பிரிவில் (30 வயதிற்கு உட்பட்ட) 30 கலைஞர்களுக்கு ரூ.10,000/– வீதம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

1.9 தனி நபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (Group Show) நடத்திட கவின் கலைஞர்களுக்கு நிதியுதவி

ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க வளரும் கலைஞர்களை ஊக்கப்படுத்த தனி நபர் கலைக்காட்சிகள் மற்றும் கூட்டுக் கலைக்காட்சிகள் நடத்தப்படுகின்றன. தனி நபர் கலைக்காட்சி நடத்த ரூ.25,000/– வீதம் 10 கலைஞர்களுக்கும், கூட்டுக் கலைக்காட்சி நடத்த குழுவிற்கு ரூ.50,000/– வீதம் 5 குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1.10 கவின் கலை பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

அரசு கவின் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக சென்னை, அரசு கவின் கலைக்

2023 ஏப்ரல் 19]

கல்லூரியில், இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் சிறந்த 10 மாணவர்களுக்கு தலா ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின் கலை பயிலும் சிறந்த 4 மாணவர்களுக்கு தலா ரூ.5,000/– வீதமும் கல்வி உதவித்தொகை ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் சிறந்த 10 மாணவர்களுக்கு தலா ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின் கலை பயிலும் சிறந்த 2 மாணவர்களுக்கு தலா ரூ.5,000/– வீதமும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் 26 சிறந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. ரூ.90,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது.

1.11 தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கி நாட்டுப்புறக் கலைகளை வளர்க்கவும், மக்களிடையே அக்கலைகளைப் பிரபலப்படுத்தவும் மேலும், இந்த நாட்டுப்புறக் கலைகள் அழியாமல் பாதுகாத்து எதிர்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லவும் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், 2007 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு நாட்டுப்புறக் கலை வடிவங்களை நிகழ்த்தும் பணியில் நாட்டுப்புறக் கலைஞர்கள் ஈடுபடுகின்றனர். தமிழ்நாடு அரசு 99 நாட்டுப்புறக் கலை வடிவங்களை அடையாளம் கண்டு பட்டியலிட்டுள்ளது.

இதுவரை 51,403 நாட்டுப்புறக் கலைஞர்கள் வாரிய உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். ரூ.204.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 9,097 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் கீழ்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:

வ. எண்	நலத்திட்ட உதவிகள் விவரம்	பயனாளிகள் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)
1	மூக்குக் கண்ணாடி வாங்குதல்	3863	24.34

வ. எண்	நலத்திட்ட உதவிகள் விவரம்	பயனாளிகள் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)
2	கல்வி	3798	53.95
3	திருமணம்	653	17.13
4	மகப்பேறு	19	1.14
5	கருச்சிதைவு / கருக்கலைப்பு	1	0.03
6	இயற்கை மரணம் / ஈமச் சடங்கு செலவு	763	108.19
மொத்தம்		**9097**	**204.78**

நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு மற்றும் இறப்பு போன்றவற்றிற்குக் கீழ்வருமாறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:—

வ. எண்	நிதி உதவிகள் விவரம்	தொகை (ரூ.)
1	ஆண்டு கல்வி உதவித் தொகை (இரு வாரிசுகள்)	
	பத்தாம் வகுப்பு பயிலும் மகள்	1,000
	பத்தாம் வகுப்பு தேர்ச்சி	1,000
	பதினோராம் வகுப்பு பயிலும் மகள்	1,000
	பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மகள்	1,500
	பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி	1,500
	முழுநேர பட்டப் படிப்பு	1,500
	முழுநேர பட்டப் படிப்பு விடுதி வசதியுடன்	1,750
	முழுநேர முதுகலை பட்டப்படிப்பு	4,000
	முழுநேர முதுகலை பட்டப்படிப்பு விடுதி வசதியுடன்	5,000

2023 ஏப்ரல் 19]

வ. எண்	நிதி உதவிகள் விவரம்	தொகை (ரூ.)
	தொழில்நுட்பப் பட்டப்படிப்பு (சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்)	*4,000*
	தொழில்நுட்பப் பட்டப்படிப்பு விடுதி வசதியுடன்	*6,000*
	முழுநேர முதுகலை தொழில்நுட்பப் பட்டப்படிப்பு	*6,000*
	முழுநேர முதுகலை தொழில்நுட்பப் பட்டப்படிப்பு விடுதி வசதியுடன்	*8,000*
	தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ)	*1,000*
	தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) விடுதி வசதியுடன்	*1,200*
2	*திருமண நிதியுதவி உறுப்பினர்/ மகன்/மகள் (இரண்டு முறை மட்டும்)*	*5,000*
3	*மகப்பேறு/கருச்சிதைவு / கருக்கலைப்பு நிதியுதவி (பெண் உறுப்பினர்களுக்கு இருமுறை மட்டும்)*	
	அ) குழந்தை பிறப்பு	*6,000*
	ஆ) கருச்சிதைவு / கருக்கலைப்பு	*3,000*
4	*மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கான நிதியுதவி (மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மட்டும்)*	*1,500*
5	*இயற்கை மரணச் செலவுகள்*	*20,000*
6	*ஈமச்சடங்கு செலவுகள்*	*5,000*
7	*விபத்து மரணச் செலவுகள்*	*1,00,000*

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

1.12 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைகளைப் போற்றி பேணி பாதுகாத்து வளர்ப்பதற்கு தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டு தமிழின் மூன்று வடிவங்களான இயல், இசை, நாடகம் ஆகியவற்றிற்கு அங்கீகாரம் தரும் வகையில் 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1.12.1 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணிகள்

- மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம் செய்தல்.
- கலைஞர்களின் கலைச் சேவைக்காக அவர்களுக்கு மாநில அளவில் கலைமாமணி விருது வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
- அகில இந்திய அளவில் கீழ்க்கண்ட மூன்று விருதுகள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல்:
 - o இலக்கியத்திற்கான பாரதி விருது,
 - o இசைக்கான எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது
 - o நடனத்திற்கான பாலசரஸ்வதி விருது.
- தொழில்முறை நாடகக் குழுக்கள் மற்றும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி அளித்தல்.
- பல்வேறு கலை விழாக்கள் நடத்துதல் மற்றும் அயல்நாடுகளில் பாரம்பரிய தமிழ் கலைகளைப் பரப்புதல்.
- இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்தல்.
- அரிய கலை நூல்களைப் பதிப்பித்திட நல்கை வழங்குதல்
- அரிய கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.

1.12.2 கலைமாமணி விருது

5 சவரன் (40 கிராம்) தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் ஒவ்வொரு கலைமாமணி விருதாளருக்கும் வழங்கப்படுகின்றன. இதுவரை 1,924 கலைஞர்களுக்கு 'கலைமாமணி' விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]

1.12.3 இதர பணிகள்

- *நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1,00,000/– மதிப்பிலான பொற்கிழி வழங்குதல்.*
- *மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை ரூ.25,000/– குடும்பப் பராமரிப்பு நிதியுதவியாக வழங்குதல்.*
- *நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000/– நிதியுதவியாக வழங்குதல்.*
- *புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நல்கை வழங்குதல்.*
- *நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நல்கை வழங்குதல்.*
- *நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள், வெளியூர்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்த தொடர்வண்டி மற்றும் அரசுப் பேருந்துகளில் பயணிக்க பயணக் கட்டண சலுகை வழங்க பரிந்துரை செய்தல்.*

1.13 தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

இது தமிழ்நாடு அரசு மற்றும் நான்கு தென்னக மாநிலங்கள், மூன்று யூனியன் பிரதேசங்கள் உதவியுடன் 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய அரசின் கலாச்சாரத் துறையின் ஒரு தன்னாட்சி அமைப்பு. இவ்வமைப்பு உறுப்பு மாநிலங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

1.14 அறிவிப்புகள் 2022-2023:-

1. *சென்னை மற்றும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் 'நம்ம ஊரு திருவிழா' என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலைவிழாக்கள் நடத்த ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்னையில் சனவரி 2023-ல் இக்கலை விழா நடத்தப்பட்டது. பிற நான்கு நகரங்களில் இந்த ஆண்டில் நடத்தப்படும்.*

[2023 ஏப்ரல் 19

2. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பல்வேறு நலத் திட்டங்களைப் பெறுவதற்கான இணையவழி சேவைகளை ரூ.20 இலட்சம் மதிப்பில் தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2023 டிசம்பருக்குள் நிறைவு செய்யப்படும்.

3. பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மக்கள் கூடும் பல்வேறு இடங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன்மூலம் தமிழ் நாட்டுப்புற மற்றும் செவ்வியல் கலைகளை வளர்ப்பதற்காக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 163 நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு இதுவரை 64 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் ஒரு தொடர் திட்டமாகும். மீதமுள்ள நிகழ்ச்சிகள் 2023 ஜூலை மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படும்.

4. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி அரங்கத்தைப் புதுப்பிக்க ரூ.1.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதுப்பிக்கும் பணி 2023 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

5. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி கட்டடங்களை மேம்படுத்த ரூ.97.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணிகள் 2023 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

6. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் உள்ள பாரம்பரியக் கட்டடத்தைப் புதுப்பிக்க ரூ.7.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2024 ஆகஸ்டு மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

7. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்ட ரூ.15.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டடப் பணிகள் 2024 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

8. அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள் மற்றும் சவகர் சிறுவர் மன்றங்களுக்கு புதிய கருவிகள், ஆய்வுக்கூட வசதிகள், மென்பொருட்கள் மற்றும் பிற வசதிகள் வழங்கி கற்பித்தலின் தரத்தினை நவீனப்படுத்தி

2023 ஏப்ரல் 19]

மேம்படுத்திட ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023 டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

9. கடலூர் மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட ரூ.1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023 செப்டம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

10. சென்னை அரசு இசைக் கல்லூரியின் பாரம்பரிய கட்டடமான 'பிராடி கேசிலை' புதுப்பிக்க ரூ.2.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2024 டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

11. மாமல்லபுரம், அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரியின் சிற்பக்கலை அருங்காட்சியகத்தை மேம்படுத்தவும், விற்பனை மற்றும் காட்சிக் கூடம் அமைக்கவும் ரூ.49.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணிகள் 2023 மே மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

12. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகக் கட்டடம், கலைஞர்கள் தங்கும் விடுதி, படங்கள் காட்சிக்கூடம், கலையரங்கம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.1.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணிகள் 2023 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் சென்னை மற்றும் மற்ற பத்து மாவட்டங்களில் பொங்கல் கலை விழாக்கள் நடத்த ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்னை மற்றும் ஆறு மாவட்டங்களில் விழாக்கள் நடத்தப்பட்டன. எஞ்சிய நான்கு மாவட்டங்களில் 2023 மே மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படும்.

14. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு நல்கையினை ரூ.3 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1.15 சாதனைகள்:-

1. 'சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா' என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலை விழா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13.1.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. சென்னை மாநகரில் 18 இடங்களில் 14.1.2023 முதல் 17.1.2023 வரை 40-க்கும் மேற்பட்ட கலை வடிவங்களில் சுமார் 1,000 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

2. 'கலைச் சங்கமம்' என்னும் நாட்டுப்புறக் கலை மற்றும் செவ்வியல் கலைத் திருவிழா மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மக்கள் கூடும் பிற இடங்களில் வார இறுதி நாட்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

3. 23 நலிந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு ரூ.91.11 இலட்சம் மதிப்பில் நிதியுதவி வழங்கப்பட்டது.

4. மாவட்ட கலை விருதுகள் பெற்ற 500 கலைஞர்களுக்கு ரூ.70 இலட்சம் வழங்கப்பட்டது.

5. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின்மூலம் பதிவு செய்யப்பட்ட 733 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களுக்காக ரூ.31.19 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் நிதியுதவி வழங்கப்பட்டது.

7. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் நலிந்த நிலையில் வாழும் 10 மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் பொற்கிழி நிதியுதவி ரூ.10 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

2023 ஏப்ரல் 19]

1.16 பிற சாதனைகள்:-

1. *சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின்போது சென்னையில் ஏழு இடங்களில் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

2. *சண்டிகர் 'தமிழ் சங்க சித்திரை விழா'-வில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

3. *இந்திய விடுதலையின் 75 ஆவது ஆண்டைக் கொண்டாடும் வகையில் 'வேலு நாச்சியார்' நாட்டிய நாடகம் சென்னை மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டது.*

4. *முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

5. *சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட 'புதுமைப் பெண் திட்டம்' விழாவில் 90 பெண் கலைஞர்கள் மற்றும் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

6. *ஜெய்ப்பூர் 'தேசிய லோக்ரங் கலாச்சார விழா'–வில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

7. *'ஒன்றே பாரதம் ஒப்பிலா பாரதம்' திட்டத்தின்கீழ் ஜம்முவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

8. *மலேசியாவில் உள்ள பழமையான இந்திய புலம்பெயர் சங்கங்கள் நிறுவப்பட்ட 75 ஆம் ஆண்டு விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

9. *புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் மற்றும் மாநிலச் சட்டமன்றத்தில் பொங்கல் விழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

10. *சென்னை மற்றும் மாமல்லபுரத்தில் 31.1.2023 முதல் 2.2.2023 வரை நடைபெற்ற ஜி-20 கல்வி பணிக் குழுக்களுக்கான கூட்டங்களின்போது கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 19*

11. சென்னையில் 'அயலகத் தமிழர் திருநாள்' கொண்டாட்டத்தின்போது கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

12. சென்னை, மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், பழனி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் மற்றும் அரசு இசைக் கல்லூரிகளைச் சேர்ந்த 108 மாணவர்கள் குழுவால் செவ்வியல் குரலிசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

13. ஜனவரி 2023 இல் 'உலக மரபு வாரத்தின்' போது மதுரை, தஞ்சாவூர், மாமல்லபுரம் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

14. பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தில் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

15. புதுதில்லி, சென்னை மற்றும் 20 மாவட்டத் தலைநகரங்களில் 'தமிழ்நாடு நாள்' விழா கொண்டாட்டங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

16. இந்திய நாட்டிய விழாவின்போது மாமல்லபுரத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

17. துபாயில் நடைபெற்ற உலகப் பொருளாதார உச்சி மாநாடு மற்றும் ஒன்பதாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

18. அரசு இசை, கவின் கலை மற்றும் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலை கல்லூரிகளில் முதன்முறையாக வளாக நேர்காணல் நடத்தப்பட்டு 173 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

19. சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் அரசு கவின் கலை மற்றும் கட்டடக்கலை, சிற்பக்கலை கல்லூரி விரிவுரையாளர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

2023 ஏப்ரல் 19]

20. சிறந்த வல்லுநர்கள்மூலம் அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் இசைப் பள்ளிகளின் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

21. சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலை கல்லூரியில் மாணவர்களின் திறன்களை மேம்படுத்த 33 பயிலரங்குகளும், 6 கலை கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

22. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற மாணவர்களுக்காக தஞ்சாவூரில் மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி பட்டறையும், மதுரையில் மாநில அளவிலான குளிர்கால முகாமும் நடத்தப்பட்டன.

1.17 முடிவுரை

கலை மற்றும் பண்பாட்டுத் துறை கலைகளை ஊக்குவிக்கவும், கலைஞர்களுக்கு வாய்ப்புகளையும், பல்வேறு திட்டங்கள்மூலம் உதவிகளையும் வழங்கி அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்ய ஊக்கத்துடன் செயல்படுகிறது. பிரம்மாண்டமாக நிகழ்த்தப்படும் கலை நிகழ்ச்சிகள்மூலம் தமிழ்நாட்டின் கண்கவர் கலை வடிவங்கள் பெருமையுடன் உலகிற்கு காட்சிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளின் திறமைமிக்க வல்லுநர்களைக் கொண்டு ஈடுபடுத்தி தரமான கலைக்கல்வியை அடுத்த தலைமுறையினருக்கு வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. கலை வடிவங்களை ஆவணப்படுத்துவதன்மூலம் மாநிலத்தின் வளமான பண்பாட்டு பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் பணியிலும் இத்துறை ஈடுபட்டுள்ளது.

இணைப்பு

2022–2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1	*மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள்*	*தென்காசி 2-4-2022 கன்னியாகுமரி 9-4-2022 விருதுநகர் 30-4-2022*	*மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி*	*2.70*
2	*மாவட்ட கலைப் போட்டிகள்*	*விருதுநகர் 16-4-2022 சிவகாசி 25-5-2022 தூத்துக்குடி 13-5-2022 தென்காசி 16-5-2022 முதல் 21-5-2022 கன்னியாகுமரி 17-6-2022 அழகுநாச்சியாபுரம் 20-7-2022 முதல் 22-7-2022*	*மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி*	*3.50*
3	*மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள்*	*மயிலாடுதுறை 16-4-2022 நாகப்பட்டினம் 17-4-2022 விழுப்புரம் 23-4-2022 தஞ்சாவூர் 9-5-2022 கள்ளக்குறிச்சி 21-5-2022 கடலூர் 6-6-2022*	*மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்*	*8.10*

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
4	மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள்	திருவண்ணாமலை *22-4-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்	*1.35*
5	மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள்	திண்டுக்கல் *24-4-2022* சிவகங்கை *9-6-2022* மதுரை *10-6-2022* இராமநாதபுரம் *18-6-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை	*5.40*
6	*75*-வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா	பெரம்பலூர் *24-4-2022* முதல் *27-4-2022* வரை கரூர் *26-5-2022* மற்றும் *30-5-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி	*1.85*
7.	மாவட்ட கலை விழாக்கள்	நாகப்பட்டினம் *24-4-2022* கடலூர் *18-5-2022*, *25-5-2022* முதல் *27-5-2022* வரை திருவாரூர் *31-5-2022* மயிலாடுதுறை *31-5-2022* தஞ்சாவூர் *4-6-2022*, *28-6-2022*, *30-6-2022*,	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்	*3.22*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
		15-7-2022 முதல் *18-7-2022* விழுப்புரம் *13-6-2022,* *14-6-2022,* *11-2-2023.* கள்ளக்குறிச்சி *12-7-2022* *முதல் 14-7-2022*		
8	மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள்	கோயம்புத்தூர் *8-5-2022* ஈரோடு *13-5-2022* திருப்பூர் *9-7-2022* ஊட்டி *10-7-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்	*5.40*
9	கோடை விழா	(கொடைக்கானல்) திண்டுக்கல் *23-5-2022* *முதல் 31-5-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை	*2.43*
10	கோடை விழா	கோத்தகிரி நீலகிரி *7-5-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்	*1.00*
11	கோடை விழா	உதகை நீலகிரி *25-5-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்	*2.00*
12	கோடை விழா	(ஏற்காடு) சேலம் *29-5-2022 &* *31-5-2022*	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்	*1.00*

2023 ஏப்ரல் 19]

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
13	மாங்கனி விழா	கிருஷ்ணகிரி 6-7-2022 9-7-2022 10-7-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்	1.00
14	தமிழ்நாடு நாள் விழா	சென்னை 18-7-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர்	5.35
15	ஆடி கிருத்திகை விழா	திருவள்ளூர் (திருத்தணி) 23-7-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்	0.65
16	உலக செஸ் ஒலிம்பியாட்	மதுரை 25-7-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை	0.85
17	உலக செஸ் ஒலிம்பியாட்	சென்னை 26-7-2022 & 28-7-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்	1.56
18	வல்வில் ஓரி விழா	நாமக்கல் 2-8-2022 & 3-8-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்	1.50
19	ஆடிப் பெருக்கு விழா	ஒகேனக்கல் (தருமபுரி மாவட்டம்) 2-8-2022 முதல் 4-8-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்	1.50
20	ஆடிப் பெருக்கு விழா (கலைச் சங்கமம்)	ஈரோடு 3-8-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்	0.25

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
21	குற்றால சாரல் திருவிழா 2022	தென்காசி 5-8-2022 முதல் 12-8-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி	4.50
22	சுதந்திர தின விழா	பவானிசாகர், ஈரோடு மாவட்டம் 15-8-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்	1.00
23	புத்தக திருவிழா	மதுரை 26-9-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை	0.40
24	கலைச் சங்கமம்	நீலகிரி 27-9-2022 கள்ளக்குறிச்சி 19-12-2022 கோயம்புத்தூர் 11-1-2023 தஞ்சாவூர் 25-1-2023 முதல் 29-1-2023 திருப்பூர் 27-1-2023 பெரம்பலூர் 28-1-2023 & 29.01-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி	3.75
25	மாநில அளவில் கைவினை முகாம்	தஞ்சாவூர் 1-10-2022 முதல் 5-10-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்.	4.00
26	நவராத்திரி விழா	இராமநாதபுரம் 3-10-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை.	0.35
27	ராஜ ராஜ சோழன் சதய விழா	மயிலாடுதுறை 2-11-2022 முதல் 3-11-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்.	1.50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
28	மாவட்ட கலை விழாக்கள்	இராணிப்பேட்டை 17-12-2022 திருவள்ளூர் 17-12-2022 செங்கல்பட்டு 22-12-2022 காஞ்சிபுரம் 23-12-2022 முதல் 31-12-2022 திருப்பத்தூர் 30-12-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.	9.5
29	மண்டல அளவில் கலைக் கண்காட்சி	திருவாரூர் 13-12-2022 & 14-12-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்	1.00
30	குளிர்கால பயிற்சி முகாம்	மதுரை 24-12-2022 முதல் 1-1-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை	4.00
31	மார்கழி இசை விழா	ஸ்ரீ ரங்கம் 30-12-2022 முதல் 1-1-2023 மதுரை 2-1-2023 காஞ்சிபுரம் 4-1-2023 விருதுநகர் 8-1-2023 சேலம் 25-2-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி, மதுரை, காஞ்சிபுரம், திருநெல்வேலி, சேலம்	11.00
32	தை பூசம் விழா	திண்டுக்கல் 2-2-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை	3.00
மொத்தம்				**94.61**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள், (2022-2023)

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டி	சென்னை 28-7-2022	தென்னக பண்பாட்டு மையம், தஞ்சாவூர்	2.62
2.	வைகுந்த ஏகாதசி விழா	திருச்சிராப்பள்ளி 31-12-2022 & 1-1-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி	3.00
3.	சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா	சென்னை 14-1-2023 முதல் 17-1-2023 வரை	தென்னக பண்பாட்டு மையம், தஞ்சாவூர்	4.00
4.	களியூரன் காவிரி	திருச்சிராப்பள்ளி 10-1-2023 & 12-1-2023	தென்னக பண்பாட்டு மையம், தஞ்சாவூர்	1.20
5.	வயலூர் கிராம கோயில் திருவிழா	காஞ்சிபுரம் 30.01.2023 & 31.01.2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.	1.50
6.	மஹா சிவராத்திரி விழா	நெடுங்குடி 18-2-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி	1.00
7.	திருவேணி சங்கமம் கலை விழா	கன்னியாகுமரி 4-3-2023 & 5-3-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி	4.00

2023 ஏப்ரல் 19]

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
8.	*வசந்த விழா 2023*	*சென்னை 6-3-2023 முதல் 9-3-2023*	*தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் பல்கலைக் கழகம்*	*3.75*
9.	*கோடை விழா 2022*	*19-5-2022 முதல் 31-5-2022 வரை*	*மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்*	*5.86*
		மொத்தம்		**26.93**

மாநிலங்களுக்கிடையேயான கலை நிகழ்ச்சிகள் (2022-2023)

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	*சித்திரைத் திருவிழா*	*சண்டிகர் 28-5-2022 முதல் 01.06.2022*	*மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்*	*3.00*
2.	LBSNAA, *உத்தரகாண்ட்*	*முசௌரி 21-7-2022*	*மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்*	*1.14*
3	*தேசிய லோக்ராங் கலை திருவிழா*	*ஜெய்ப்பூர் 17-10-2022 மற்றும் 18-10-2022*	*மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை*	*9.90*

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
4	ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்	ஜம்மு-காஷ்மீர் 13-11-2022 முதல் 15-11-2022	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி	15.00
5	பொங்கல் கலை விழா	தமிழ்நாடு இல்லம், புதுதில்லி 14-1-2023 மற்றும் 15-1-2023 புதுதில்லி சட்டமன்றம் 17-1-2023	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்.	4.34
		மொத்தம்		**33.38**

வெளிநாடுகளில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் (2022-2023)

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம் & நாள்	நிகழ்த்துனர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	பாரம்பரிய கலை நிகழ்ச்சி	மலேசியா (சபா, சார்வாக்) 3-12-2022 முதல் 6-12-2022	இந்திய தூதரகம், மலேசியா	13.00
2.	நாட்டுப்புற & செவ்வியல் கலை நிகழ்ச்சி	துபாய் 18-3-2023, 19-3-2023	உலகப் பொருளாதார உச்சி மாநாடு மற்றும் ஒன்பதாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு, மெட்ராஸ் டெவலப்மென்ட் சொசைட்டி	11.50
		மொத்தம்		**24.50**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

மாவட்ட கலை விருதுகள் (2022-2023)

வ. எண்	மண்டலங்கள்	மாவட்டம்	விருதுக்கான வருடம்	விருது பெறுபவர் களின் எண்ணி க்கை	தொகை (ரூ. இலட்சத்தில்)
1	காஞ்சிபுரம்	சென்னை	2021-2022	15	2.10
		திருவள்ளூர்	2016-2017 முதல் 2018-2019, 2021-2022	30	4.05
		இராணிப் பேட்டை	2021-2022	15	2.10
		செங்கல்பட்டு	2021-2022	15	2.10
		திருப்பத்தூர்	2021-2022	15	2.10
		காஞ்சிபுரம்	2021-2022	15	2.10
2	சேலம்	தருமபுரி	2022-2023	15	2.10
		கிருஷ்ணகிரி	2022-2023	15	2.10
		நாமக்கல்	2022-2023	15	2.10
3	கோயம்புத்தூர்	ஈரோடு	2021-2022	15	2.10
		திருப்பூர்	2018-2019, 2021-2022	20	2.85
		நீலகிரி	2018-2019	5	0.75
		கோயம்புத்தூர்	2021-2022	15	2.10
4	தஞ்சாவூர்	திருவாரூர்	2021-2022	15	2.10
		நாகப்பட்டினம்	2021-2022	15	2.10
		கடலூர்	2021-2022	15	2.10
		விழுப்புரம்	2021-2022	15	2.10
		கள்ளக்குறிச்சி	2021-2022	15	2.10

வ. எண்	மண்டலங்கள்	மாவட்டம்	விருதுக்கான வருடம்	விருது பெறுபவர் களின் எண்ணி க்கை	தொகை (ரூ. இலட்சத்தில்)
5	திருச்சிராப் பள்ளி	திருச்சிராப் பள்ளி	2021-2022	15	2.10
		கரூர்	2021-2022	15	2.10
		புதுக் கோட்டை	2021-2022, 2022-2023	30	4.20
6	மதுரை	தேனி	2021-2022	15	2.10
		திண்டுக்கல்	2021-2022	15	2.10
		சிவகங்கை	2021-2022	15	2.10
		இராமநாதபுரம்	2018 – 2019, 2021-2022	20	2.85
		மதுரை	2018 – 2019, 2021-2022	20	2.85
7	திருநெல்வேலி	திருநெல் வேலி	2021-2022	15	2.10
		தூத்துக்குடி	2021-2022	15	2.10
		விருதுநகர்	2021-2022	15	2.10
		கன்னியா குமரி	2021-2022	15	2.10
		தென்காசி	2021-2022	15	2.10
மொத்தம்				**400**	**70.05**

2023 ஏப்ரல் 19]

அருங்காட்சியகங்கள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

2. முன்னுரை

அருங்காட்சியகங்கள் மனித வரலாறு மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன. அவற்றின் மதிப்புமிக்க சேகரிப்புகள், அழகியல் காட்சியமைப்பு மற்றும் பிரம்மாண்ட கண்காட்சிகள்மூலம் வருங்கால சந்ததியினருக்கு நம்முடைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை அறிமுகப்படுத்துகின்றன. பல்வேறு கலாச்சார வரிசைகளில் கிடைக்கப்பெற்ற பொருள் ஆதாரங்களை அங்கீகரித்து காட்சிப்படுத்துவதன்மூலம், நமது கடந்தகால வரலாற்றின் மதிப்பை வளர்ப்பதோடு, அனுபவக் கற்றலை ஊக்குவிக்கும் கல்வி நிறுவனங்களாகவும் செயல்படுகின்றன. வரலாற்றில் அருங்காட்சியகங்கள் சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சியின் குறிகாட்டிகளாக விளங்குகின்றன. அதே நேரத்தில், தங்கள் பார்வையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அவை தம் முதன்மை நோக்கத்திலும் கவனம் செலுத்துகின்றன.

2.1. துறையின் நோக்கங்கள்


அருங்காட்சியகங்கள் தாம் சேகரித்த அரும்பொருட்களைப் பகுப்பமைத்து, பாதுகாப்பதோடு, வருகை தரும் பார்வையாளர்களுக்கு நம் கலாச்சார வரலாற்றைப் பற்றி உரிய காட்சியமைப்பின்மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அருங்காட்சியகத் துறையின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. அரும்பொருட்களைச் சேகரித்தல்.
2. சந்ததியினருக்காக காட்சிப் பொருட்களைப் பாதுகாத்தல்.
3. சேமிப்பு மற்றும் ஆவணப்படுத்துதல்
4. ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றைப் பார்வையாளர்களுக்கு அறியத் தருதல்.
5. கருத்தியல் சார்ந்த (Theme Based) காட்சியமைப்பு மற்றும் சிறப்பு கண்காட்சிகள்மூலம் பொதுமக்களின் பார்வைக்காக சேகரிப்புகளைக் காட்சிப்படுத்துதல்.
6. கல்விப் பணிகளை நடத்துதல்

[2023 ஏப்ரல் 19

2.2. நிருவாக அமைப்பு

அருங்காட்சியகங்களின் இயக்குநர் சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்களின் தலைமை பொறுப்பில் உள்ளார். உதவி இயக்குநர்கள் (தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், காப்பாட்சியர்கள், உதவிக் காப்பாட்சியர்கள், வழிகாட்டிகள், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகப் பணியாளர்களைக் கொண்டு துறை நிருவகிக்கப்படுகிறது.



2023 ஏப்ரல் 19]

2.3 அரசு அருங்காட்சியகம், சென்னை

இந்தியாவின் இரண்டாவது மிகப்பழமையான சென்னை அரசு அருங்காட்சியகமானது 1857-ல் துவங்கப்பட்ட ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாகும். ஏழு கட்டடங்களில், 57 காட்சிக் கூடங்களில், கலை, தொல்லியல், நாணயவியல், மானுடவியல், புவியியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் உள்ளிட்ட பிரிவுகளைச் சேர்ந்த கலைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. கல்வி, வடிவமைப்பு, காட்சியமைத்தல் மற்றும் வேதியப் பாதுகாப்பு தொடர்பான பிரிவுகள் இந்த காட்சிக் கூடங்களுக்கு துணையாக பணிபுரிகின்றன. உலகப் புகழ் பெற்ற வெண்கலப் படிமங்கள், அமராவதி சுண்ணாம்புக் கற்சிற்பங்கள், ராபர்ட் ப்ரூஸ்ஃபுட் வரலாற்றுக்கு முந்தைய தொகுப்புகள், ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலத் தொகுப்புகள், தஞ்சாவூர் ஆயுதக் கிடங்கு, பல்வேறு வம்சங்களின் நாணயங்கள், ரோமானியப் பழங்காலச் சின்னங்கள், புதைப்படிவங்கள், 60 அடி நீளமுள்ள நீலத்திமிங்கலத்தின் எலும்புக்கூடு, இராஜா இரவிவர்மா ஓவியங்கள் போன்றவை சென்னை அருங்காட்சியகத்தில் பெருமையுடன் வைக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற சேகரிப்புகளுள் சிலவாகும். இங்குள்ள புவியியல் காட்சியகம் மற்றும் சிறுவர் அருங்காட்சியகத்தில் உள்ள ஊடாடும் கண்காட்சிகள் மற்றும் உயிரளவு இயங்கு மாதிரிகள், குழந்தைகளைக் கவர்கின்றன.

2.4. மாவட்ட அருங்காட்சியகங்கள்

புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர், ஆண்டிப்பட்டி, திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் 23 மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் தமிழக அரசின் அருங்காட்சியகத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு அருங்காட்சியகங்கள் அரசுக்குச் சொந்தமான பாரம்பரியக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

2.5. பல்வேறு பணிகளின் விவரங்கள்

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தை மேம்படுத்தவும், புராதன கட்டடத்தை ரூ.6 கோடி செலவில் புதுப்பிக்கவும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு, புனரமைப்புப் பணிகள் பொதுப் பணித் துறையின்மூலம் நடைபெறுகின்றன.

❖ ரூ.5.41 கோடி செலவில் பாந்தியன் பாரம்பரிய கட்டடத்தின் (கி.பி. 1780—ல் கட்டப்பட்டது) மறுசீரமைப்பு மற்றும் காட்சிக் கூடங்களைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

❖ தற்போதுள்ள பழைய புராதன கட்டடத்தை மாற்றியமைப்பதன்மூலம் பாரம்பரிய கட்டடத்தை மீட்டமைத்து அதில் சிற்றுண்டிச் சாலையை நிறுவும் பணி ரூ.2.81 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

❖ புதிய நிர்வாக அலுவலகக் கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதலுக்கான பணிகள், ரூ.4.80 கோடி செலவில் பொதுப் பணித் துறைமூலம் நடைபெற்று வருகின்றன.

❖ அரசு ஆணைமூலம் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில், அரியலூரில் உள்ள புதைப்படிவ அருங்காட்சியகத்தில், புதைப்படிவ நிலங்களை பாதுகாக்கும் வகையில் அவ்விடத்தின் இருபுறமும் சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

❖ விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு அருங்காட்சியகம் அமைப்பதற்காக பொதுப் பணித் துறையால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

❖ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் தரம் உயர்த்த விரிவான திட்ட அறிக்கை கட்டட வடிவமைப்பாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

❖ சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள படிமக்கூடம் சர்வதேச தரத்திற்கு இணையாக ரூ.7 கோடியில்

மேம்படுத்துவதற்கு கட்டட வடிவமைப்பாளரால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

❖ ரூ.3 கோடி செலவில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள அருங்காட்சியகத் திரையரங்கில் (பாரம்பரிய கட்டடம்) குளிரூட்டிகளைச் சரிசெய்தல் மற்றும் நீர்க்கசிவைத் தடுத்து நிறுத்துதல் போன்ற பணிகள் பொதுப் பணித் துறையின்மூலம் நடைபெறுகின்றன.

❖ காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகத்தினை, ரூ.2 கோடி செலவில் நவீன காட்சி மற்றும் ஊடாடும் கண்காட்சிகளுடன், அருள்மிகு ஏகாம்பரநாதர் கோயிலின் புதிய சுற்றுலா விளக்க மைய கட்டடத்திற்கு மாற்றியமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பொதுப் பணித் துறையின்மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது.

❖ நாகப்பட்டினத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையின் மூலம், பாரம்பரிய கட்டடத்திற்கு மாற்றி, புதிய காட்சி அமைப்புகளுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.

❖ சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வேதியப் பாதுகாப்பு ஆய்வகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பிலான நவீன உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன. இரண்டு முழுநேர ஆய்வக உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு, ஜனவரி மாதம் முதல் பணிபுரிந்து வருகின்றனர்.

❖ ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை அரசு அருங்காட்சியகம் முன்புறமுள்ள மணற்கல்லாலான மரபுச்சுவரைப் பழுதுபார்த்து புதுப்பிக்கும் பணி பொதுப் பணித் துறைமூலம் நடைபெற்று வருகிறது.

❖ தேசிய கலைக் கூடத்தின்மீது ரூ.8 கோடி மதிப்பீட்டில் முப்பரிமாண லேசர் ப்ரொஜெக்ஷன் மேப்பிங் (3D Laser Projection Mapping) பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள், கோரப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 19

2.6 சிறப்பு நிகழ்வுகள்

❖ *ஆகஸ்ட் 15, 2022 அன்று, இந்திய சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு நினைவாக, அருங்காட்சியக வளாகத்தில், மகாத்மா காந்தி சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் திறந்து வைத்து, தமிழக சுதந்திர இயக்கம் குறித்த சிறப்புக் கண்காட்சியைத் துவக்கி வைத்தார்கள்.*

❖ *ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் உள்ள லிண்டன் அருங்காட்சியகத்தில் தமிழ் கலாச்சாரத்தின் பாரம்பரியம் மற்றும் வரலாற்றை அறிமுகப்படுத்தும் "அகம்—புறம்" என்ற தலைப்பில் ஆறு மாத கண்காட்சி தொடங்கப்பட்டது. இக்கண்காட்சியானது 3,000 ஆண்டுகால "காதலும் போரும்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் தமிழர் நாகரிகத்தின் வரலாற்றைக் காட்டுகிறது.*

2.6.1. சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் மற்றும் ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் உள்ள லிண்டன் அருங்காட்சியகம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

❖ *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் மற்றும் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் ஜெர்மனிக்கு பயணம் மேற்கொண்டனர். 7.10.2022 அன்று சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் மற்றும் ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் உள்ள லிண்டன் அருங்காட்சியகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.*

❖ *புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சில நோக்கங்கள் பின்வருமாறு:*

1. *லிண்டன் அருங்காட்சியகம் மற்றும் சென்னை அரசு அருங்காட்சியகம் ஆகியவற்றின் கூட்டுத் திட்டங்களில் அறிஞர்களின் ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி மேம்பாடு.*

2. *மாநாடுகள், கருத்தரங்குகள், வசிப்பிட* (Residencies) *திட்டங்கள் மற்றும் பரிமாற்றங்கள் அல்லது கண்காட்சிகள் போன்ற கூட்டுக் கல்வி நடவடிக்கைகளை ஏற்படுத்துதல்.*

3. *பொதுவான ஆர்வத்துக்குரிய பொருட்கள் மற்றும் வெளியீடுகளின் பரிமாற்றம்.*

2023 ஏப்ரல் 19]

2.7. வெளியீடுகள்

சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் பதிப்பிக்கும் அருங்காட்சியகவியல்,தொல்லியல்,மானிடவியல்,கலை,தாவரவியல், புவியியல், விலங்கியல், நாணயவியல், கலைப்பொருட்களின் வேதியப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் புத்தகங்கள் மற்றும் பட்டியல்கள் பல வெளியீடுகள் சர்வதேச அருங்காட்சியகங்களால் வெளியிடப்பட்ட சிறந்த புத்தகங்களுக்கு இணையானவை. அருங்காட்சியகத்தின் சேகரிப்பிலுள்ள தொல்பொருட்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியின் விளைவாக, அவை உலகிற்கு குறிப்புப் புத்தகங்களாக சேவையாற்றுகின்றன.

2.8. அருங்காட்சியகத் துறையில் சமீபத்திய சேகரிப்புகள்

2022-2023 ஆம் ஆண்டில், அருங்காட்சியகத் துறையானது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு வெண்கலங்கள் மற்றும் கற்சிற்பங்களைச் சேகரித்துள்ளது.

2.8.1. அரசு அருங்காட்சியகம், சென்னை

சென்னை அரசு அருங்காட்சியகம் 6.4.2023 அன்று விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், கூனிமேடு கிராமத்திலிருந்து, நின்ற நிலையில் சிவன், பார்வதி, தேவி, கணேசர் வெண்கலபடிமங்கள், உடைந்த செம்புப் பாத்திரங்கள், பானை, திருவாட்சி, போன்ற பல்வேறு புதைப் பொருட்களைப் பெற்றது. காஞ்சிபுரம் மாவட்டம், மாகரல் கிராமத்திலிருந்து விஜயநகர காலத்து 106 பொற்காசுகள் புதைப்பொருளாகக் கிடைத்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தாலுக்கா, வேடப்பாளையம் கிராமத்திலிருந்து நகை, காது மடல் போன்ற தங்க ஆபரணங்கள் கிடைத்துள்ளன.

அருங்காட்சியக பார்வையாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 700 மெகாவாட் பி.எச்.ஆர்.ஐ. அணுமின்நிலைய மாதிரியை, இந்திய அணுசக்தி கழகம் லிமிடெட் மும்பை, சென்னை அருங்காட்சியகத் துறையிடம் ஒப்படைத்தது. 23.6.2022 அன்று நடைபெற்ற விழாவில், அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அருங்காட்சியக இயக்குநர் ஆகியோர் மாதிரியைப் பெற்றுக்கொண்டனர்.

2.8.2. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்

விருதுநகர் அருங்காட்சியகத்தில் மகாவீரர், முருகன், கருப்பண்ணசாமி, தலையில்லாத ஆண் உருவம், நாகர், அம்மன்,

சதிக்கல், பீடத்துடன் கூடிய பெருமாள், ராகவேந்திரர், பித்தளைப் பெருமாள் சிலைகள் புதைப்பொருட்களாகப் பெறப்பட்டன. திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் சண்டிகேஸ்வரர், கோமுகம், நந்தி, சிவலிங்கம் மற்றும் தீர்த்தங்கரர் கற்சிலைகள் பெறப்பட்டன. அரியலூர் மாவட்ட அருங்காட்சியகத்திற்கு சூரியன் கற்சிற்பம் கிடைத்தது. வேலூர் மாவட்ட அருங்காட்சியகத்துக்கு விஷ்ணு கற்சிற்பமும், காஞ்சிபுரம் மாவட்ட அருங்காட்சியகத்துக்கு ஜேஷ்டா கற்சிற்பமும் கிடைத்தன.

2.9 கல்விச் செயல்பாடுகள்

அரசு அருங்காட்சியகங்கள் துறை மாணவர்கள், ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பல்வேறு கல்வி நிகழ்வுகளை வழக்கமாக நடத்தி வருகிறது. கருத்தரங்குகள், பயிற்சி அமர்வுகள், பட்டறைகள் மற்றும் விரிவுரைகளை அருங்காட்சியகங்கள் துறை தொடர்ந்து செயல்படுத்துகின்றது. ஒவ்வோர் ஆண்டும், அருங்காட்சியகம் மற்றும் அதன் அரும்பொருட்களைப் புரிந்துகொள்வதற்கும், மாணவர்களை ஊக்குவிக்கவும் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவ்வருங்காட்சியகம் ஆராய்ச்சியாளர்கள், முதுகலை மற்றும் இளங்கலை மாணவர்களுக்கு அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளில் உதவுவதற்கும் அவர்களின் தொழில்முறை திறன்களை மேம்படுத்துவதற்கும் உள்விளக்கப் பயிற்சி வழங்குகிறது. சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்கள்மூலம் மாநிலத்தில் 75 கல்லூரிகளைச் சேர்ந்த 3,153 மாணவர்கள் தொல்லியல், மானிடவியல், கலை, நாணயவியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் புவியியல் போன்ற அறிவியல் பிரிவுகளில் உள்விளக்கப் பயிற்சி பெற்றுள்ளனர்.

2.9.1 சென்னை அரசு அருங்காட்சியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி நிகழ்ச்சிகள்:

- உலக பாரம்பரிய தினம் 18-4-2022 அன்று கொண்டாடப்பட்டது. அறிவுக்கண் பதிப்பகத்தின் ஒருங்கிணைப்பில் 300 கல்லூரி மாணவர்களுக்கு பாரம்பரிய நடைப்பயிற்சி நடத்தப்பட்டது.
- சர்வதேச அருங்காட்சியக தினம் 18-5-2022 அன்று கொண்டாடப்பட்டது. சென்னை மாநகரில் உள்ள கல்லூரி மாணவர்களுக்காக 'அருங்காட்சியகங்களில் கல்வெட்டுகளின் பங்கு' என்ற தலைப்பில் விரிவுரை நடத்தப்பட்டது.

2023 ஏப்ரல் 19]

- ❖ "சுற்றுச்சூழல் தினம்" 1-6-2022 அன்று கொண்டாடப்பட்டது. 'சுற்றுச்சூழல் கல்வியில் அருங்காட்சியகங்களின் பங்கு' என்ற தலைப்பில் ஒரு விரிவுரையும், அதனைத் தொடர்ந்து அருங்காட்சியக வளாகத்தில் மரங்கள் நடும் நடைப்பயணமும் (Tree Walk) ஏற்பாடு செய்யப்பட்டன.
- ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.8.2022 அன்று 'சுதந்திரப் போராட்டத்தில் தமிழகம்' என்ற காந்தியின் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள்.
- ❖ 'காந்தி ஜெயந்தி'-ஐ முன்னிட்டு சிறப்பு புகைப்படக் கண்காட்சி 1-10-2022 அன்று நடைபெற்றது. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 153 குழந்தைகள் காந்தி வேடமணிந்து பங்கேற்றனர்.
- ❖ 15-1-2023 அன்று பொங்கல் விழா சிறப்பு நிகழ்ச்சியுடன் ரங்கோலிப் போட்டி நடத்தப்பட்டது. நுழைவு வாயிலில் 15 அடி உயர பொங்கல் பானை மற்றும் ஜல்லிக்கட்டு மாதிரிகள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன, இவை பார்வையாளர்களை "செல்ஃபி ஸ்பாட்களாக" (Selfie spots) ஈர்த்தன.
- ❖ 22-2-2023 மற்றும் 4-3-2023 ஆகிய தேதிகளில் 'கன்சர்வேஷன் கான்க்ளேவ்' (Conservation Conclave), CSMVS (சத்ரபதி சிவாஜி மகாராஜ் வாஸ்து சங்க்ரஹாலயா), மும்பை மற்றும் குஜராத்தின் புஜ்-ல் உள்ள ஸ்மிருதிவன் அருங்காட்சியகத்தில் நடைபெற்ற 'அருங்காட்சியக பினாலே' ஆகியவற்றில் காப்பாட்சியர்கள் குழு விவாதங்களில் பங்கேற்றனர்.
- ❖ சென்னையில் உள்ள 5 கல்லூரிகளைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு தொல்லியல் பிரிவில் 7-3-2023 மற்றும் 8.3.2023 ஆகிய இரண்டு நாட்கள் கல்வெட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

2.9.2. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்

மாவட்ட அருங்காட்சியகங்களில் உலக பாரம்பரிய தினம், சர்வதேச அருங்காட்சியக தினம், உலக சுற்றுலா தினம், யோகா தினம், சுதந்திர தினம், குடியரசு தினம், உலக சுற்றுச்சூழல் தினம்,

[2023 ஏப்ரல் 19

தேசிய அறிவியல் தினம், குழந்தைகள் தினம், தபால் தலை நாள் போன்ற சிறப்பு நினைவு தினங்கள் கொண்டாடப்பட்டன. பார்வையாளர்கள் மற்றும் மாணவர்களைக் கவரும் வகையில் போட்டிகள், சிறப்புக் கண்காட்சிகள், பாரம்பரிய நடைப்பயிற்சிகள், பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. மேலும், கல்வெட்டுகள் மற்றும் பனை ஓலைகளை பாதுகாத்தல் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. சில நிகழ்வுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

❖ சர்வதேச அருங்காட்சியக தினமான 18-5-2022 அன்று, ஈரோடு அருங்காட்சியகம், "உலகிலிருந்து உள்ளூர் வரை" என்ற தலைப்பில், உலகம், இந்தியா மற்றும் தமிழகத்தின் முதல் அருங்காட்சியகங்களைச் சிறப்பிக்கும் வகையில் சிறப்புப் புகைப்படக் கண்காட்சியை நடத்தியது.

❖ 26-6-2022 அன்று திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில் 'நவீன இலக்கியத்தில் பாரதியின் தாக்கம்' என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட 160 பேர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

❖ தேசிய புத்தகக் கண்காட்சி திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தால் 18-6-2022 முதல் 30-6-2022 வரை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் உடன் இணைந்து நடத்தப்பட்டது. தினமும் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

❖ ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் 15-8-2022 அன்று "சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்ப்பெண்கள்" என்ற தலைப்பில் சிறப்புக் கண்காட்சி 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டது.

❖ ஜே.கே.கே.என். கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இறுதியாண்டு வரலாற்று மாணவர்களுக்காக, ஈரோடு கஸ்தூரி அரங்கநாதர் கோயில், பெரியார் நினைவு இல்லம், பாரதியார் அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு களப்பயணம் நடத்தப்பட்டது.

2023 ஏப்ரல் 19]

- ❖ *சேலம் அருங்காட்சியகத்தில், சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய ஓவியக் கண்காட்சி 15-8-2022 அன்று நடத்தப்பட்டது. 23-11-2022 அன்று பனை ஓலைச் சுவடிகள் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விரிவுரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.*

- ❖ *உலக யானைகள் தினத்தன்று (12-8-2022), நெல்லையப்பர் கோயிலில் உள்ள யானை சிற்பங்கள் கூறும் கதைகளை விளக்கும் பயிற்சி திருநெல்வேலி அருங்காட்சியகம்மூலம் பள்ளி மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. யானைச் சிற்பங்களை வரைவதற்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.*

- ❖ *வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஓவியப் போட்டியில் 62 பள்ளிகளைச் சேர்ந்த 186 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.*

- ❖ *மதுரை மற்றும் சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகங்களால், மதுரை லேடி டோக் கல்லூரியில் விலங்கியல் துறைக்காக மூன்று நாட்கள் டாக்ஸி டெர்மி (Taxidermi) பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது. 16-3-2023 முதல் 18-3-2023 வரை நாற்பது மாணவர்களும் ஏழு ஆசிரியர்களும் பங்கேற்றனர்.*

2.10. முடிவுரை

அருங்காட்சியகங்கள் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைக்கும் பாதையாகும். சென்னையிலுள்ள அருங்காட்சியகமானது, பார்வையாளர்களுக்கு உகந்த சூழலை வழங்குவதன்மூலம் நமது வளமான கலாச்சார பாரம்பரியத்தைப் பற்றி பொதுமக்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கும் மகிழ்விப்பதற்குமான அதன் நோக்கத்தில் புதிய பாதையைப் படைக்கிறது. இவ்வருங்காட்சியகம் ஆக்மென்டட் ரியாலிட்டி, 3டி ப்ராஜெக்ஷன் மேப்பிங், விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் சைகை அடிப்படையிலான காட்சிவடிவமைப்பு போன்ற நவீன தொழில்நுட்பங்களுடன் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு வருகிறது. அருங்காட்சியகத் துறை இத்தகைய தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பின்பற்றுவதன்மூலம், கலாச்சாரம், வரலாறு மற்றும் பாரம்பரியத்திற்கும் எதிர்கால சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் பங்களிக்கிறது.

[*2023 ஏப்ரல் 19*

தொல்லியல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024

3. முன்னுரை

தொல்லியல் என்பது பல்துறை செயல்பாடுகள் தொடர்பான பிரிவு. மேலும் ஒரு பகுதியின் வரலாற்றுச் சிறப்பினை மறுகட்டுமானம் செய்யவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. தொல்லியல் கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கப்படுகின்ற அரிய தொல்பொருட்களைக் கொண்டு இக்கால சமுதாய, அரசியல் மற்றும் கலாச்சார நிலைகளுக்கான ஆதாரங்களை வெளிக்கொணர உதவுகிறது. மேலும், தொல்லியல் என்பது படிமங்கள், தொல்பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகிய எச்சங்களைச் கொண்டு பண்டைய மனித வாழ்வு மற்றும் அவர்களின் செயல்பாடுகள் குறித்த அறிவியல் சார்ந்த கல்வி ஆகும். Archaeology *என்ற கிரேக்கச் சொல்லில்,* Archaeos *என்பதற்கு "பண்டைய" எனவும்,* Logos *என்பதற்கு "கற்றல், கலந்துரையாடல், காரணம் அல்லது அறிவியல்" எனவும் பொருள் கூறலாம்.*

3.1. துறையின் நோக்கங்கள்

மாநில தொல்லியல் துறையானது பின்வரும் நோக்கங்களுக்காக 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது:-

- *பண்டைய மற்றும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.*
- *மாநிலம் முழுவதும் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல்.*
- *கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்து பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்.*
- *அகழ்வைப்பகங்களை அமைத்தல்.*

2023 ஏப்ரல் 19]


3.2. நிர்வாக அமைப்பு

தொல்லியல் துறையானது, தொல்லியல் துறை இயக்குநரின் தலைமையின்கீழ் துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், மண்டல உதவி இயக்குநர்கள் மற்றும் தொல்லியல் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தொல்லியல் துறையில் தனித்துவமான அகழாய்வுப் பிரிவினை வலுப்படுத்தும் விதமாக ஓர் இணை இயக்குநர், மூன்று மண்டல உதவி இயக்குநர்கள், ஐந்து தொல்லியல் அலுவலர்கள், ஒரு செயற்பொறியாளர், இரண்டு உதவி செயற்பொறியாளர்கள், நான்கு இளநிலைப் பொறியாளர்கள், ஓர் இளநிலை மின்-பொறியாளர், நான்கு ஸ்தபதிகள், ஒரு துணை இயக்குநர் (நிர்வாகம்), இரண்டு உதவி இயக்குநர்கள் (நிர்வாகம்) என முக்கியத்துவம் வாய்ந்த 24 பணியிடங்கள் அரசால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

புதிதாக கட்டப்பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்திற்காக, 34 புதிய பணியிடங்கள் (தொல்லியல் அலுவலர்-2, உதவி தொல்லியல் அலுவலர்-2, கண்காணிப்பாளர்-1, உதவியாளர்-1, இளநிலை உதவியாளர்-2, அருங்காட்சியகப் பாதுகாப்பு அலுவலர்-2 மற்றும் அருங்காட்சியகப் பராமரிப்பாளர்-24) ஆகிய பணியிடங்கள் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தொல்லியல் துறை
நிர்வாகம் வரைபடம் – புதிய பணியிடங்களுடன்
ஆணையர் (1)
இணை இயக்குநர் –1
துணை இயக்குநர்(Admin)-1
உதவி இயக்குநர்(Admin)-3
உதவி கணக்கு அலுவலர் –1
சுருக்கெழுத்து தட்டச்சர் -2
கண்காணிப்பாளர் -7
உதவியர் -18
இளநிலை உதவியர் -10
தட்டச்சர் -10
ஓட்டுநர் -5
பதிவறை உதவியர் -1
விற்பனை கவனிப்பவர் -1
பதிவரு எழுத்தர் -5
விற்பனைச் சிற்றெழுத்தர் -11
அலுவலக உதவியாளர் -11
காவலர் -45
பெருக்குநர் -11
தோட்டக்காரர் -1
துணை இயக்குநர் (Technical)-1
உதவி இயக்குநர்(Technical)-(6)
தொல்லியல் அலுவலர் (39)
உதவி தொல்லியல் அலுவலர் (2)
தொழில்நுட்ப உதவியர் (1)
அருங்காட்சியகச் சிற்றெழுத்தர் -2
நிழற்படம் எடுப்பவர் (1)
நூலகர் (1)
அச்சுப்பிரிவு (2)
அகழ்வைப்பக பாதுகாப்பு அலுவலர் (2) (ரூபாய் 20,000 ஒட்டு மொத்த ஊதியம்)
அகழ்வைப்பக பாதுகாவலர் (24) (ரூபாய் 10,000 ஒட்டு மொத்த ஊதியம்)
நினைவுச்சின்ன பாதுகாவலர் (100) (ரூபாய் 5,000 ஒட்டு மொத்த ஊதியம்)
தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் -2
உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் –1
இளநிலை கல்வெட்டாய்வாளர் (2)
கல்வெட்டுச் சிற்றெழுத்தர் (5)
சிற்றெழுத்தர் (1)
செயற்பொறியாளர் -1
உதவிச் செயற் பொறியாளர் (4)
இளநிலைப் பொறியாளர் - Civil (10)
இளநிலைப் பொறியாளர் - Electrical (1)
ஸ்தபதி (10)
மேஸ்திரி (2)
இரசாயனர் (1)
உதவி இரசாயனர் (2)
ஆய்வக உதவியர் (1)
அ.கீ.தி.ஓ.சு நூலகம் (ம) ஆய்வு மையம் -33
தொல்லியல் துறை 253
வெளிமுகமை 126
அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம் 33
மொத்தம் 412
(குறிப்பு : அரசாணை எண் 48 நாள் 25.2.2021ன்படி துறையால் அச்சுப்பிரிவு 12 பணியிடங்கள் அரசு மைய அச்சகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது)

2023 ஏப்ரல் 19]

3.3. காலக்கணிப்பில் ஒரு திருப்புமுனை

கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியிருப்பதற்குச் சான்றாக கீழடி அகழாய்வில் சேகரிக்கப்பட்ட கரிம மாதிரிகள் காலப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் காலம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டு (கி.மு. 580) என காலவரையறை செய்யப்பட்டதன்மூலம் தமிழி (தமிழ்-பிராமி) எழுத்தின் காலம் கி.மு.6 ஆம் நூற்றாண்டு என அறிவியல் அடிப்படையில் முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது. இதுவரை தமிழி வரிவடிவத்தின் காலம் கி.மு.5 ஆம் நூற்றாண்டு என்று கருதப்பட்டு வந்த நிலையில், அதற்கு மாறாக மேலும் ஒரு நூற்றாண்டு காலம் முன்னோக்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் முழுமையான கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றாக இக்காலக்கணிப்பு திகழ்கிறது.

கங்கைச் சமவெளி மற்றும் அதே சமகாலகட்ட நாகரிகங்களில் ஏற்பட்ட இரண்டாம் நகரமயமாக்கல் தமிழ்நாட்டிலும் ஏற்பட்டுள்ளது என்பதைக் கீழடி அகழாய்வு முடிவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியுள்ளது.

மேலும், கங்கைச் சமவெளிப் பகுதியில் கண்டறியப்பட்ட இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்று அறிஞர்களிடையே பொதுவாக நிலவி வந்த கருத்தியலை முற்றிலுமாக நீக்கியுள்ளது.

ஆதிச்சநல்லூருக்கு அருகிலுள்ள சிவகளை ஈமச்சின்னத்தில் சேகரிக்கப்பட்ட நெல்மணிகளின் மாதிரிகள் அமெரிக்காவில் புளோரிடா மாகாணம், மியாமி நகரிலுள்ள புகழ் பெற்ற பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ஆய்வு முடிவானது தொல்லியலாளர்கள் இடையே ஒரு புதிய ஒளியைப் பாய்ச்சியது. சிவகளை அகழாய்வில் ஈமத்தாழியினுள் இருந்த ஈமச்சடங்குப் பானை ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட உமியுடன் கூடிய அரிசியின் காலம் கி.மு.1155 என்று காலவரையறை செய்யப்பட்டுள்ளது.

பொருநை ஆற்றங்கரை நாகரிகம் ஏறத்தாழ 3,200 ஆண்டுகள் பழமையானது என்று அறிவியல் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டமை மிகவும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் உலகிற்கு அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 110 விதியின்கீழ்

இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவியல் பூர்வமான அறிக்கையை 9.9.2021 அன்று வெளியிட்டார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறையில், 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அகழாய்வில், இரும்பின் அறிமுகம் மற்றும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் இருந்து இரும்புக் காலத்தின் துவக்க காலத்திற்கு மாறியதற்கான சான்றினை வழங்கும் இரண்டு முக்கியமான Accelerator Mass Spectrometry *காலக்கணிப்புகள் கிடைத்துள்ளன. மயிலாடும்பாறையில் இருந்து பெறப்பட்ட தற்போதைய இரண்டு* Accelerator Mass Spectrometry *காலக் கணிப்புகள், தமிழகத்தில் கி.மு. இரண்டாயிரத்தில் இரும்புக் காலமும் இக்காலத்திற்கு முன்பே புதிய கற்கால காலகட்டமும் இருந்துள்ளதை உறுதிப்படுத்துவதற்கு மேலும் வலுசேர்க்கின்றன.*

3.4. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

நாடு முழுவதும் கட்டி எழுப்பப்பட்ட மரபுச் சின்னங்களின் தொகுப்பினை விட்டுச் சென்றுள்ள அற்புதமான செழுமையும், பரந்த மற்றும் பன்முகத்தன்மையும் கொண்ட பண்பாட்டு மரபுச் சின்னங்களை இந்தியா பெற்றுள்ளது. பல்வேறு வகையான வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களின் செழுமையான தோற்றங்களைக் காணமுடிகிறது. தமிழ்நாடு வளமான மரபினையும் நவீன காலத்தில் அதன் வரலாற்றையும் உறுதியுடன் வெளிப்படுத்துகிறது. புகழ்மிக்க மற்றும் அழகிய கலை மற்றும் கட்டடக் கலை மரபுச் சின்னங்களைக் காண்பதற்காக தமிழ்நாட்டிற்கு மீண்டும் மீண்டும் பயணம் மேற்கொள்கின்றனர். காலம் கடந்து நிற்கும் வரலாற்றுச் சின்னங்களில் காணப்படும் கலைகள், சிற்பிகளின் நேர்த்தியையும் திறமைகளையும் கண்கூடாக வெளிக்காட்டுகின்றன. பண்டைய கட்டடக் கலையின் அழகிய சிறப்பியல்புகளைக் கோயில்களின் விமானங்களும் கோபுரங்களும் பெற்றுள்ளன. மேலும், இம்மாநிலத்தில் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள், கோட்டைகள், குளங்கள், கட்டடக் கோயில்கள், சத்திரங்கள் மற்றும் மண்டபங்கள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

இவை இயல்பாக சமய சார்பற்ற மற்றும் சமயம் சார்ந்தவையாக உள்ளன. பல்வேறு இயற்கைச் சீற்றங்களாலும் இயற்கைக்கு மாறான நிகழ்வுகளாலும் கோயில்கள் மற்றும் இதர கட்டடங்கள்

சேதமடைகின்றன. எனவே, அவற்றிற்கு முறையான பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு அவசியமாகிறது.

பண்டைய மரபுச் சின்னங்களிலும் தொல்லியல் சார் இடங்களிலும் பாதுகாப்பு முறைகள் மற்றும் தொல்லியல் நெறிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் தனித்தன்மை வாய்ந்தவையாகும். இந்த மாநிலத்திலுள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் புனரமைக்கவும் தமிழ்நாடு அரசு “தமிழ்நாடு புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம்-1966 மற்றும் விதிகள்–1971”–ஐ இயற்றியுள்ளது.

மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளின்படி “பண்டைய வரலாற்றுச் சின்னம்” என்பது, நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வரலாறு, தொல்லியல் அல்லது கலை முக்கியத்துவங்களை உள்ளடக்கிய, எந்தவொரு கட்டுமானச் சின்னம், மண்மேடு அல்லது ஈமக்காடு, குகை மற்றும் பாறைச் சிற்பம், கல்வெட்டு அல்லது ஒற்றைக்கல் நினைவுச் சின்னம் ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

தமிழ்நாடு அரசால் இதுவரையில், மொத்தம் 103 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் "பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக" அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 100 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் 3 தொல்லியல் பாதுகாக்கப்பட்ட தளங்களும் அடங்கும்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் மேற்கண்ட 103 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் மராத்தியர் அரண்மனை, மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை மற்றும் கவர்னர் மாளிகை, தஞ்சாவூர் மாவட்டம் சரபேந்திரராஜபட்டினத்திலுள்ள மனோரா நினைவுத் தூண் ஆகியவை முக்கிய சுற்றுலாத் தலமாகவும் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகவும் திகழ்கின்றன.

ஒன்றிய அரசு தொல்லியல் துறை (Archaeological Survey of India) இதுவரை 251 சின்னங்கள் மற்றும் 160 தொல்லியல் இடங்கள் என ஆக மொத்தம் 411 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்களைத் தமிழ்நாட்டில் பாதுகாத்து வருகின்றது.

[2023 ஏப்ரல் 19

3.5. புதிதாக அறிவிக்கப்பட்ட சின்னங்கள்

அண்மையில், பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், பங்குநத்தம் கிராமம், தருமபுரி மாவட்டம்; சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள், அனந்தமங்கலம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்; தமிழிக் கல்வெட்டு, நெகனூர்பட்டி கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்; தமிழிக் கல்வெட்டு, சமணத் தீர்த்தங்கரர் மற்றும் சமணர் படுக்கைகள், தொண்டூர் கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்; தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள், முதலைக்குளம் கிராமம், உசிலம்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்; தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணத் தீர்த்தங்கரர் சிற்பம், அரிட்டாப்பட்டி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் ஆகியவை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பட்டியலில் புதிதாக இடம் பெற்றுள்ளன.

3.6. புதிய தொல்லியல் தளங்கள்

சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டம், கொந்தகை மற்றும் அகரம் கிராமத்தில் காணப்படும் ஈமக்காடு மற்றும் வாழ்விடப் பகுதிகள்; தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், சிவகளை கிராமத்தில் உள்ள இரும்புக்கால தொல்லியல் தளங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணலில் தொல்லியல் தளங்கள் ஆகிய தொல்லியல் தளங்கள் புதிதாக பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, திருநெல்வேலி மாவட்டம் பதினாலாம்பேரி, சிவங்கை மாவட்டம் மகிபாலன்பட்டி, கன்னியாகுமரி மாவட்டம் குறத்தியறை மற்றும் சிவகிரி, விருதுநகர் மாவட்டத்திலுள்ள புதுப்பட்டி, செவிலிப்பட்டி, திருச்சுழி, மூவரைவென்றான், திருத்தங்கல், ஆனையூர் ஆகிய பத்து ஊர்களிலுள்ள முற்காலப் பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படவுள்ளன. அதன்படி, சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் பதினாலாம்பேரி ஆகிய இடங்களில் உள்ள முற்கால பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், முத்தம்மாள்புரம் கிராமத்தில் உள்ள முத்தம்மாள் சத்திரம் போன்ற வரலாற்றுச் சின்னங்களை

2023 ஏப்ரல் 19]

பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவித்திட ஏதுவாக முன்னிலை அறிவிப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

இவை தவிர, 83 வரலாற்றுச் சின்னங்கள் “பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தளங்களாக” அறிவிக்கப்படுவதற்காக தொல்லியல் துறையால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

3.7. வரலாற்றுச் சின்னங்களின் தொடர் பராமரிப்புப் பணிகளுக்கு நிதி

தமிழ்நாடு அரசு, பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களுக்கான தொடர் பராமரிப்புப் பணிகளுக்கு ரூ.2 கோடி நிதி வழங்கியுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.8. பழங்காலக் கோட்டைகள் மற்றும் அரண்மனைகளில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்

மேதகு ஆளுநர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில் தமிழ்நாட்டின் சுற்றுலாத் திறனை முழுமையாக வெளிக்கொணரும் வகையில், ஒரு பெருந்திட்டம் நடப்பாண்டில் வெளியிடப்படும் எனவும் பழங்காலக் கோட்டைகளும் அரண்மனைகளும் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு பராம்பரியச் சுற்றுலா ஊக்குவிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். அதன்படி, கீழ்க்காணும் மூன்று வரலாற்றுச் சின்னங்களில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் பொதுப் பணித் துறை வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ளன:—

வ. எண்	வரலாற்றுச் சின்னம்	திட்ட மதிப்பீடு ரூபாய் கோடியில்
1	சார்ஜா மாடி, தஞ்சாவூர்	9.4285
2	டேனிஷ் கோட்டை, தரங்கம்பாடி	3.7728
3	திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை	3.7276
	மொத்தம்	16.9289

[2023 ஏப்ரல் 19

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், சாத்தாங்குடி கிராமத்தில் உள்ள கவர்னர் மாளிகை ரூ.4.46 கோடி மதிப்பீட்டில் தொல்லியல் நெறிமுறையின்படி புதுப்பிக்கும் பணி பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் இடம்பெற்றுள்ள மராட்டா தர்பார் ஹாலில் உள்ள 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மராட்டியர் கால சுவரோவியங்களைப் புதுப்பிக்கும் பணி ரூ.6.948 கோடியில் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டையின் சுற்றுச் சுவரை மறுசீரமைக்கும் பணி ரூ.0.63 கோடியில் பொதுப் பணித் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.9. புதிதாக பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்ட தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகளைச் சுற்றுலா தலங்களாக மாற்றுதல்

விழுப்புரம் மாவட்டம் நெகனூர்பட்டி தமிழிக் கல்வெட்டு, விழுப்புரம் மாவட்டம் தொண்டூர் தமிழிக் கல்வெட்டு, மதுரை மாவட்டம் முதலைக்குளம் தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள், மதுரை மாவட்டம், அரிட்டாப்பட்டி தமிழிக் கல்வெட்டுகள், செங்கல்பட்டு மாவட்டம் அனந்தமங்கலம் சமணர் சிற்பங்கள் ஆகிய சின்னங்களை மேம்படுத்தி உட்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசியத் தேவைகள் ஏற்படுத்திடும் பணிகள் ரூ.3 கோடி செலவில் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.10. உதிரிச் சிற்பங்கள், கல்வெட்டுகள் போன்ற தொல்லியல் கலைச் செல்வங்களைப் பாதுகாத்தல்

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் தொல்லியல் சார் கலைச் செல்வங்களான உதிரிச் சிற்பங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றை அதே இடத்திலேயோ அல்லது வேறு பாதுகாப்பான இடத்திலேயோ பாதுகாத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்திட ரூ.3,22,05,547/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.1,38,45,547/– தொடராச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 19]

3.11. தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளில் தற்கால முன்னேற்றங்கள் என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம்

தொல்லியல் துறை, பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் நினைவாக "தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளில் தற்கால முன்னேற்றங்கள்" என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தியது. இக்கருத்தரங்கமானது சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 2023 மார்ச் 10 முதல் 12 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்வில் 55 ஆய்வாளர்கள், புகழ்வாய்ந்த தொல்லியலாளர்கள் மற்றும் வரலாற்றாய்வாளர்கள் நேரடியாகவும் இணைய வழியாகவும் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இந்த நிகழ்வுகள் யூடியூப் (Youtube) வழியாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டன.

3.12. தொல்லியல் அகழாய்வுகள்

ஒரு நாட்டின் பண்டைய பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்து எழுதுவதற்கு அகழாய்வுகள் ஓர் அறிவியல் கருவியாக பயன்படுகிறது. பண்டைய இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுப் பதிவுகள் பொதுவாக மேட்டுக்குடியினரின் நிர்வாக மற்றும் சமூக வாழ்க்கையைக் காட்டுகின்றன. அதேநேரத்தில் அகழ்வாராய்ச்சி விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையை வழங்குகிறது. மேலும், உயிரியல் மாதிரிகளானது பண்டையகால சுற்றுச் சூழலியல், வாழ்வாதார முறைகள் மற்றும் காலவாரியான வாழ்க்கைமுறை மாற்றங்கள் பற்றிய முக்கியத் தகவல்களை வழங்குகின்றன.

பல்கலைக்கழகங்கள், தொல்லியல் ஆய்வு நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகள் மற்றும் முகமைகளிடமிருந்து பெறப்படும் அகழாய்விற்கான செயற்குறிப்புகளை மாநில அரசின் பரிந்துரையுடன், மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (Central Advisiory Board of Archaeology) *நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கக்கூடிய ஒருங்கிணைப்பு முகமையாக மாநில தொல்லியல் துறை செயல்படுகிறது.*

இணைப்பில் உள்ளபடி, தொல்லியல் துறை இதுவரை 46 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 37 இடங்களின் அகழாய்வு

[2023 ஏப்ரல் 19

அறிக்கைகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர, ஒன்றிய அரசின் தொல்லியல் துறை (Archaeological Survey of India) இதுவரை 50-க்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது.

3.13. தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள்— 2022

2022 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஏழு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகளான கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் – சிவகங்கை மாவட்டம்
2. சிவகளை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகள் – தூத்துக்குடி மாவட்டம்
3. மயிலாடும்பாறை – கிருஷ்ணகிரி மாவட்டம்
4. கங்கைகொண்டசோழபுரம் – அரியலூர் மாவட்டம்
5. வெம்பக்கோட்டை – விருதுநகர் மாவட்டம்
6. பெரும்பாலை – தருமபுரி மாவட்டம்
7. துலுக்கர்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்

அகழாய்வுகள் மட்டுமின்றி கூடுதலாக, புதிய கற்கால இடங்களைக் கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் பொருநை (தாமிரபரணி) ஆற்றுச் சமவெளி பண்பாட்டின் தொல்லியல் வளத்தினைக் கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும் ஆக இரண்டு தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.13.1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் (கீழடி, அகரம் மற்றும் கொந்தகை) — 8 ஆம் கட்டம்

கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் தொடர்ந்து எட்டாவது ஆண்டாக நடைபெற்ற தொல்லியல் அகழாய்வில் வைகை ஆற்றங்கரையில் உள்ள சங்ககால நகரக் குடியேற்றத்தின் தொல்பொருட்கள் மற்றும் கட்டடப் பகுதிகள் தொடர்ந்து கிடைத்துள்ளன.

2023 ஏப்ரல் 19]

எட்டாம் கட்ட அகழாய்வில் கீழடியில் 10 அகழாய்வுக் குழிகளில், ஒரு குழியில் இருந்து 3 மீட்டர் நீளமுள்ள செங்கல் அமைப்பும், 3 அடி நீளமுள்ள செங்கல் சுவருக்கு அருகில் உள்ள மற்றொரு குழியில் இருந்து 3 மீட்டர் நீளமுள்ள செங்கல் அமைப்பும், 15 இடங்களில் சுடுமண் உறை கிணறும், கருப்பு சிவப்பு வண்ண மண்பாண்டங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கண்டெடுக்கப்பட்ட 1700 தொல்பொருட்களைத் தவிர, மேல் அடுக்கு கண்ணாடி மணி அதிகளவில் கிடைத்துள்ளன. யானை தந்தத்தால் செய்யப்பட்ட ஆட்டக்காய்கள், சுடுமண் ஆண்தலை, தந்தத்தால் செய்யப்பட்ட பகடைக்காய்கள், சுடுமண் காதணிகள், தக்களிகள், வட்டச்சில்லுகள், இரும்புக் கத்தி மற்றும் ஆணிகள், செப்பு நாணயங்கள், கண்ணாடி மணிகள் மற்றும் சூதுபவள மணிகள் போன்ற குறிப்பிடத்தக்க தொல்பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகரம் அகழாய்வில் ஆறு அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டு 4 சுடுமண் உறை கிணறுகள் மற்றும் 530 தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அகரம் அகழாய்வில் முதன்முறையாக சுடுமண் உறைக் கிணறு வெளிக்கொணரப்பட்டுள்ளது, உள்ளீடுபூட்டு முறையில் செயல்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

கொந்தகையில் 2 அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டு 59 தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. மனித எலும்புக்கூடுகள், 74 சூதுபவள மணிகள், 2 வாள்கள், 3 கத்திகள், 2 உளிகள் மற்றும் ஒரு கோடரி போன்ற இரும்புக் கருவிகள், அரிசி உமிகள் மற்றும் கருப்பு-சிவப்பு வண்ணப் பானைகள் 170-க்கும் மேற்பட்ட தாழிகளில் இருந்து கிடைத்துள்ளன. மெருகூட்டப்பட்ட கருப்பு வண்ணப் பானைகள் மற்றும் மெருகூட்டப்பட்ட சிவப்பு வண்ணப் பானைகள் ஆகியவை அகழாய்வில் கிடைத்துள்ளன. ஒரே தாழியில் 74 சூதுபவள மணிகள் கண்டெடுக்கப்பட்டது இக்கட்ட அகழாய்வின் குறிப்பிடத்தக்கக் கண்டுபிடிப்பாக இருந்தது.

3.13.2. சிவகளை – 3 ஆம் கட்ட அகழாய்வு

சிவகளை கிராமம் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டத்தில் பொருநை ஆற்றின் (தாமிரபரணி) இடது கரையில் அமைந்துள்ளது. இந்தப் புகழ்பெற்ற புதைவிடப்பகுதி இவ்வாற்றின் கரையில் மேற்கே அமைந்துள்ளது. சிவகளை மற்றும் அதன்

[2023 ஏப்ரல் 19

சுற்றுப்புறங்களில் தொடர்ந்து மூன்று கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிவகளை பரம்பு, பேட்மாநகர், மூலக்கரை ஆகிய இடங்களில் இரும்புக் காலத்தைச் சார்ந்த புதைவிடப் பகுதிகள் காணப்படுகின்றன.

வளப்பான்பிள்ளை திரடு, செக்கடி, ஆவாரங்காடு, பொட்டல்கோட்டை, பராக்கிரமபாண்டி திரடு ஆகிய இடங்களில் வாழ்விடப் பகுதிகள் காணப்படுகின்றன. புதைவிடப் பகுதியான சிவகளை பரம்பில்தான் முதலில் அகழாய்வு செய்யப்பட்டது. இந்த மூன்று கட்ட அகழாய்வில் 160 தாழிகளும், 583 தொல்பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. வாள்கள், கத்திகள், கோடாரிகள் போன்ற எண்பதுக்கும் மேற்பட்ட இரும்புப் பொருட்கள் தாழியின் உள்ளேயும் வெளியேயும் கண்டெடுக்கப்பட்டன. கிண்ணங்கள், மூடிகள், பானைகள், பிரிமனைகள் என மொத்தம் 750 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த இடத்தில் நடந்த அகழாய்வில் நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகளுடன் கூடிய பானை ஓடுகள், மூன்று புதிய கற்காலக் கருவிகள், ஐந்து தமிழி எழுத்துப் பொறிப்புள்ள (தமிழ்-பிராமி) பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தங்க ஆபரணங்கள், சீன நாணயங்கள் மற்றும் பானை ஓடுகளும் பராக்கிரமபாண்டி திரடில் கிடைக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கவை. புகைப்பான்கள், எலும்பிலான கூர்முனைப் பகுதிகள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல் துண்டுகள், வட்டச்சில்லுகள், மணிகள் மற்றும் செப்பு நாணயங்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய தொல்பொருட்கள் ஆகும். பராக்கிரமபாண்டி திரடு பகுதியில் வெளிப்படுத்தப்பட்ட செங்கல் கால்வாயில், சுத்தமான தண்ணீர் ஓடியது என்று இருகலப்பாசிகள் பகுப்பாய்வின்மூலம் தெரிய வந்துள்ளது.

ஒரு தாழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட நெல்லினைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி இதனின் காலம் கி.மு. 1155 எனவும் தாமிரபரணி ஆற்றங்கரையில் 3200 ஆண்டுகளுக்கு முன்பே நெல் சாகுபடி நடைபெற்றுள்ளது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

3.13.3. மயிலாடும்பாறை — 2 ஆவது கட்ட அகழாய்வு

மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், தொகரப்பள்ளி கிராமத்திற்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நுண் கற்காலம், புதிய கற்காலம், இரும்புக் காலம்,

2023 ஏப்ரல் 19]

தொடக்க வரலாற்றுக் காலம் மற்றும் இடைக்காலத்தைச் சார்ந்த பண்பாட்டுப் பொருட்கள் இருந்ததற்கான சான்றுகளை வழங்கும் தமிழ்நாட்டின் மிக முக்கியமான தளங்களில் இதுவும் ஒன்றாகும்.

சுமார் 100 புதைவிடக் குழிகள் கொண்ட புதைவிடப் பகுதி 40 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இரண்டு கட்ட அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் முதல் கட்டத்தில் கிடைத்த கரிம மாதிரிகள் கரிம பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டதில் இரும்புக் காலம் 4200 ஆண்டுகள் பழமையானது எனத் தெரியவருகிறது. மேலும் இந்த பகுதியில், சமூக உருவாக்கத்தைக் கண்டறிய அடுத்த கட்ட அகழாய்விற்கு நீட்டிக்கப்பட்டது. தற்போதைய அகழாய்வுக் கட்டத்தில், சரியான குடியேற்ற முறை மற்றும் சமூகத்தின் சமூகப் பொருளாதார நிலையை வெளிப்படுத்த முழுமையான பொருள் ஆதாரங்களை வெளிப்படுத்த மொத்தம் 30 அகழாய்வுக் குழிகள் அமைக்கப்பட்டன.

இந்த இடத்தில் தங்குமிடங்களில் நுண் கற்காலக் கருவிகள், அடிவாரத்தில் புதிய கற்காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள், புதிய கற்கால பள்ளங்கள், பாறை ஓவியங்கள், இரும்புக் கால பெருங்கற்காலப் புதைகுழிகள், குறியீடுகள், தமிழி எழுத்துப் பொறிப்பு கொண்ட (தமிழ்-பிராமி) பானை ஓடுகள் மற்றும் நினைவுக் கற்கள் போன்ற பழங்கால வரலாற்றுப் பண்பாட்டுப் பொருட்களும், இடைக்காலத்தின் வணிகக் கல்வெட்டுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது, நீண்டகாலங்களாக இத்தளம் பயன்பாட்டில் இருந்தமைக்கு சான்றாக விளங்குகிறது.

3.13.4. கங்கைகொண்டசோழபுரம் –2ம் கட்ட அகழாய்வு

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் கங்கைகொண்டசோழபுரம் அமைந்துள்ளது. இவ்வூர் முதலாம் இராசராசனின் (பொ.ஆ. 985-1014) வாரிசான முதலாம் இராசேந்திரனால் (பொ.ஆ. 1012-1044) சோழர்களின் தலைநகராக நிறுவப்பட்டது. அகழாய்வு தளம் மாளிகைமேடு, புகழ்பெற்ற கங்கைகொண்ட சோழேஸ்வரர் கோயிலுக்கு தென்மேற்கே 2 கி.மீ. தொலைவிலும், உட்கோட்டை கிராமத்திற்குத் தென்கிழக்கே சுமார் 2 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இப்பகுதி சோழ மன்னர்களின் வசிப்பிடமாக இருந்ததாக பரவலாக நம்பப்படுகிறது. இங்கு உள்ள மேட்டில் கிடைக்கும்

கட்டடப் பகுதி சான்றுகளின் தன்மையும் இந்தக் கருத்தை ஆதரிக்கிறது. கட்டுமான எச்சங்கள், கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் ஆகியவை சோழர்களின் தலைநகரான கங்கைகொண்டசோழபுரத்தின் அரண்மனையின் அடித்தளம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும், கட்டடப் பகுதிகள் அரண்மனையின் சாத்தியமான அடித்தளமாக இருக்கலாம் என்ற உண்மையை உறுதிப்படுத்துகின்றன. இதற்கு முன்னர் கங்கைகொண்டசோழபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1980, 1984, 1991, 1996, 2009 ஆகிய ஆண்டுகளில் அகழாய்வுகள் நடைபெற்றன. இதுவரை, மாளிகைமேட்டில் செங்கற்கள், கூரை ஓடுகள் உள்ளிட்ட ஏராளமான தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. பல செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இந்த இடத்தில் மேலும் அகழாய்வுகளை மேற்கொள்ள ஆர்வத்தைத் தூண்டின.

செங்கல் கட்டுமானங்களுடன், கூரை ஓடுகள் மற்றும் பானை ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இரும்புப் பொருட்கள், செம்புப் பொருட்கள், செப்பு நாணயங்கள், வெள்ளி நாணயம், தங்க வளையல், தந்தப் பொருட்கள், கண்ணாடி மணிகள் மற்றும் வளையல் துண்டுகள், வட்டச்சில்லுகள், சுடுமண் பொருட்கள் மற்றும் செலாடன் மற்றும் பீங்கான் போன்ற சீனப் பானை ஓடுகளும் சேகரிக்கப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்புகள் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் சீன நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை நிறுவுகின்றன. மேலும் தொடர் அகழாய்வுகளின் மூலமாக கட்டுமான நடவடிக்கைகளின் தன்மை, அரண்மனையின் முழுமையான திட்டம் மற்றும் அந்த இடத்தில் செழித்தோங்கிய அரசியல் மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளை அறிந்துகொள்ள கணிசமான சான்றுகளை வெளிக்கொணர இயலும்.

3.13.5. வெம்பக்கோட்டை – முதல் கட்ட அகழாய்வு

வெம்பக்கோட்டை விருதுநகர் மாவட்டத்தில் வைப்பாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. ஒரு ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்தக் குடியிருப்பு மேடு, தரை மட்டத்திலிருந்து சுமார் 6 மீட்டர் உயரம் கொண்டுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் வெம்பக்கோட்டையில் முதல் கட்ட அகழாய்வு மேட்டுக்காடு அல்லது உச்சிமேடு என்று அழைக்கப்படும் அகழாய்வு மேட்டில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இங்கு

2023 ஏப்ரல் 19]

வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் இடைக்காலம் வரை தொடர்ச்சியான தொல்பொருட்கள் கிடைக்கின்றன.

முதல் கட்ட அகழாய்வில் சூதுபவளம், அகேட், செவ்வந்திக்கல் மற்றும் படிகத்தால் செய்யப்பட்ட அரிய வகை கல் மணிகள் போன்ற 3254 தொல்பொருட்கள் கிடைத்தன. பல்வேறு வண்ணங்களில் அதிக எண்ணிக்கையிலான கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், கண்ணாடி வளையல்கள், சுடுமண் மணிகள், தக்களிகள், சுடுமண் ஆட்டக்காய்கள், புகைப்பான்கள், சுடுமண் பதக்கங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுடுமண் பொம்மைகள், சுடுமண் எடைக் கற்கள், சுடுமண் பந்துகள், சுடுமண் முத்திரைகள், சுடுமண் மனித மற்றும் விலங்கு உருவங்கள், பறவை உருவங்கள், திமிலுள்ள காளைகள், வட்டச்சில்லுகள், காதணிகள், சக்கரங்கள், தேய்ப்பான்கள், இரும்புப் பொருட்கள், தங்கத்தினால் ஆன பொருள் மற்றும் செம்புப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. பானைகள், கிண்ணங்கள், பாத்திரங்கள், மூடிகள், தட்டுகள், குவளைகள், கிண்ணங்கள், சேமிப்புக் கலன்கள் மற்றும் துளையிடப்பட்ட பானைகள், மெருகூட்டப்பட்ட சிவப்பு வண்ணப் பானைகள், மெருகூட்டப்பட்ட கருப்பு வண்ணப் பானைகள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணப் பானைகள் மற்றும் பழுப்பு நிற மட்கலன்கள் ஆகியவை அகழாய்வில் சேகரிக்கப்பட்டன. நுண் கற்கால மூலப்பொருட்கள் மற்றும் செர்ட் செதில்கள் போன்றவை நுண் கற்கால காலத்தின் சான்றுகளைப் பிரதிபலிக்கின்றன.

3.13.6. பெரும்பாலை – முதல் கட்ட அகழாய்வு

பாலாற்றின் கிளை நதியான நாகவதி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் பெரும்பாலை ஆகும். காவிரி ஆற்றின் முக்கிய கிளை ஆறுகளில் பாலாறும் ஒன்று. தருமபுரி-மேச்சேரி-பெண்ணாகரம் சாலையில் பெண்ணாகரத்திலிருந்து 25 கி.மீ. தொலைவிலும், தருமபுரி மாவட்டத்தில் இருந்து வடக்கே 42 கி.மீ. தொலைவிலும் பெரும்பாலை அமைந்துள்ளது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் விஜயமங்கலத்தைச் சேர்ந்த கார்மேகவைராயர் இயற்றிய கொங்கு மண்டல சதகம் என்னும் நூலில் இவ்வூர் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை என்றும், கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, சேலம் பகுதிகளின் ஒரு பகுதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 19

2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் 3 மீட்டர் பண்பாட்டு அடுக்கு கொண்ட குடியிருப்பு மேடு ஏ.எம்.எஸ் காலக்கணிப்பு மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின்படி கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 13 ஆம் நூற்றாண்டு வரையிலான ஒரு தொடர்ச்சியான குடியேற்றத்தைப் பதிவு செய்கிறது. ஏ.எம்.எஸ். காலக்கணிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொல்பொருட்களான பானைகள், சுடுமண் உருவங்கள், குறியீடுடன் கூடிய பானை ஓடுகள் மற்றும் பிற பொருட்களின் அடிப்படையில் பண்பாட்டு மண்ணடுக்கு மூன்று பண்பாட்டுக் காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன, அவை இரும்புக் காலம், தொடக்க வரலாற்றுக் காலம் மற்றும் தொடக்க இடைக்காலக் காலம் ஆகியவை முறையே கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு வரை, கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4 ஆம் நூற்றாண்டு வரை, கி.பி. 4 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை. இந்த இடத்தில் குறியீடுடன் கூடிய 1028 பானை ஓடுகள், 300-க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் மற்றும் 200-க்கும் மேற்பட்ட சுடுமண் பொருட்களும் கிடைத்துள்ளன.

3.13.7. துலுக்கர்பட்டி – முதல் கட்ட அகழாய்வு

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நம்பியாற்றின் கரையில் துலுக்கர்பட்டி அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூரின் அகழாய்வு, சமகாலத்தின் முக்கியமான பண்பாட்டுக் காட்சிகளை வெளிப்படுத்தியது. ஆதிச்சநல்லூரில் உள்ள வாழ்விடப் பகுதியில் நடைபெற்ற அகழாய்வில், நிலத்தடி நீர்மட்டம் அதிகமாக இருந்ததால் இயற்கை மண்ணை அடைய முடியவில்லை. தற்கால பண்பாட்டுப் பொருட்களைப் புரிந்துகொள்வதற்காக, துலுக்கர்பட்டி அகழாய்வுத் தளம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வெள்ளை வண்ணம் தீட்டப்பட்ட கருப்பு-சிவப்பு வண்ணப் பானைகள் மற்றும் கருப்பு-சிவப்பு வண்ணப் பானைகள், ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளையில் கண்டறியப்பட்ட பானைகள் போன்ற தொல்பொருட்கள் தொடக்கக் கால வரலாற்றுக் கால பண்பாட்டு அடுக்குகளின் கீழே கண்டுபிடிக்கப்பட்டன. இது இரும்பு காலத்தின் தொடர்பை எடுத்துரைக்கிறது. தொடக்கக் கால வரலாற்றுக் காலத்தில் ஏராளமான குறியீடுடன் கூடிய பானை ஓடுகளும், கணிசமான எண்ணிக்கையில் தமிழி (தமிழ்-பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன.

2023 ஏப்ரல் 19]

3.14. புதிய கற்கால தளங்கள் ஆய்வு

தமிழ்நாட்டின் புதிய கற்கால இடங்களை அடையாளம் காண இத்துறை சர்மா பாரம்பரிய கல்வி மையத்துடன் இணைந்து வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாட்டின் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் புதிய கற்கால தளங்களில் ஆய்வுகள் மற்றும் அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தள அமைப்புகள், புவி-ஒருங்கிணைப்புகள் மற்றும் அவற்றின் நிலஇயல் சார்ந்த புவியியல் மற்றும் புவி-உருவவியல் சூழல்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது போன்ற பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கண்ட தகவல்களைச் சேகரித்த பின்னர், இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் வல்லுநர் குழுவால் நடத்தப்பட்டது. கள ஆய்வுகள் தொல்லியல் மற்றும் புவியியல்/புவி-உருவவியல் அம்சங்களை உள்ளடக்கியது. கள ஆய்வில், செல்ட் உற்பத்தித் தளங்களை அடையாளம் காணுதல் மற்றும் அரைக்கும் தளங்களை மறு ஆய்வு செய்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. ஆய்வு நோக்கங்களுக்காக பல மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. தற்போது இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் (Indira Gandhi Centre for Atomic Research) (IGCAR) உதவியுடன் தொல்பொருட்கள் மற்றும் பாறை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

3.15. பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரை பள்ளத்தாக்குகளில் கள ஆய்வு

மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்மேற்கு பள்ளத்தாக்கில் பொதிகை மலையில் பொருநை (தாமிரபரணி) ஆறு உருவாகிறது. பொருநை (தாமிரபரணி) ஆற்றுப் பள்ளத்தாக்கினை மேல், இடை, கடைப் பகுதிகளாக பிரித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆற்றின் மேற்பகுதி முதல் இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கும் இடம் வரை 670 ஊர்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 160 தொல்லியல் இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இதில் பெருங்கற்காலச் சின்னங்கள் மற்றும் வாழ்விடங்களுடன், வீரக்கற்கள், பாறைகளில் கிண்ணம் போன்ற பதிவுகள், நுண்கற்காலக் கருவிகள்,

[2023 ஏப்ரல் 19

கல்வெட்டுகள், உதிரிச் சிற்பங்கள், மரபுச் சின்னங்கள் போன்ற பல்வேறு தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.

3.16. சங்க கால கொற்கை துறைமுகத்தின் கடலோரத்தில் முன்கள ஆய்வு

இடைச்சங்க கால பாண்டியர்களின் கொற்கை துறைமுகத்தை அடையாளம் காண இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் (Indian Maritime University) மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (National Institute of Ocean Technology) ஆகியவற்றுடன் இணைந்து ஒரு முதற்கட்ட முன்கள ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. திட்டப்பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 கோடியில் ரூ.0.64 கோடி நிதியினை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஏற்கவுள்ளது.

முதற்கட்ட ஆய்வு 2.9.2022 முதல் 9.9.2022 வரையும், இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு 23.1.2023 முதல் 16.2.2023 வரையும் நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளான கொங்சங் (Model Kongsberg EM712), சிகில் பீம் எக்கோசவுண்டர் (Model Kongsberg EA440) மற்றும் சப்பாட்டம் ப்ரொஃபைலர் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் தற்போது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளன.

3.17. தொல்லியல் அகழாய்வுகள் – 2023

இம்மாநிலத்தில் 2023 ஆம் ஆண்டு, தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள, தொடரும் செலவினமாக வழங்கப்படும் ரூ.5 கோடி நிதி ஆதாரத்தில், இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் எட்டு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன:-

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகளான கொந்தகை, மற்றும் அகரம் – சிவகங்கை மாவட்டம்

2. கங்கைகொண்டசோழபுரம் – அரியலூர் மாவட்டம்

2023 ஏப்ரல் 19]

3. வெம்பக்கோட்டை – விருதுநகர் மாவட்டம்

4. துலுக்கர்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்

5. கீழ்நமண்டி– திருவண்ணாமலை மாவட்டம்

6. பொற்பனைக்கோட்டை – புதுக்கோட்டை மாவட்டம்

7. பூதிநத்தம் – தருமபுரி மாவட்டம்

8. பட்டறைபெரும்புதூர் – திருவள்ளூர் மாவட்டம்

3.18. அறிவியல் ஆய்வுகள்

தொல்லியல் பொருட்களின் கால வரிசையை முறையாக மறுகட்டமைப்பு செய்திடவில்லையெனில் தொல்லியல் ஆய்வுகள் பொருளற்றதாகி விடும். தற்பொழுது நடைபெற்று வரும் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்படும் தொல்பொருட்கள் புகழ் பெற்ற ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் அறிவியல் நெறிமுறைகளின்படி பகுப்பாய்வுகள் செய்யப்படவுள்ளன.

பல்வேறு கட்டங்களில் கண்டெடுக்கப்படும் தொல்பொருட்களை மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கங்களை அளிப்பதற்கு விரிவான தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வுகள் தொல்லியல் ஆய்வுகளுக்கு அவசியமாகிறது. இத்தகைய ஆய்வுகள் தொல்லியல் தரவுகளைச் சரியான கால வரிசைப்படி வைப்பதற்கும், தொடர் பண்பாட்டு வளர்ச்சியினைப் புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

தொல்லியல் துறை தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (Ground Penetrating Radar), *காந்த அளவி மதிப்பாய்வு* (Magnetometer Survey), *ஆளில்லா வான்வழி வாகன மதிப்பாய்வு* (Unmanned Aerial Vehicle) *போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் களஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ள சரியான இடத்தை அடையாளம் காண்கிறது.*

அறிவியல் பகுப்பாய்வுகளைப் பொறுத்தவரை நில தொல்லியல் துறை கீழ்க்கண்ட பல்வேறு அறிவியல் நிறுவனங்களுடன் இணைந்து தமிழகத்தின் பண்பாட்டு வரலாற்றை அறிவியல் வரிசையில் மீண்டும் நிறுவி வருகிறது.

1. லக்னோவின் பீர்பால் சாஹ்ணி இன்ஸ்டிடியூட் ஆஃப் பேலியோ சயின்சஸ் மற்றும் ப்ரெஞ்ச் இன்ஸ்டிடியூட் ஆஃப் பாண்டிச்சேரி ஆகிய நிறுவனங்களின்மூலம் மகரந்தப் பகுப்பாய்வுகள் மற்றும் பைடோலித் ஆய்வுகள்மூலம் பண்டைய கால பருவநிலைகளைக் கண்டறிதல்

2. மனித மரபணுவைப் புரிந்துகொள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து DNA பகுப்பாய்வு

3. இரும்பு, எஃகு மற்றும் உயர்நிலை—தகரம் கொண்ட வெண்கலத் தொழில்நுட்பத்தைப் புரிந்து கொள்வதற்காக, பெங்களூருவின் தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து உலோகவியல் பகுப்பாய்வு

4. இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம், கல்பாக்கம் மற்றும் புனே பல்கலைக்கழகத்தின் உதவியுடன் மூலப் பொருட்களின் ஆதாரங்களைப் புரிந்து கொள்வதற்காக மட்கலன்கள் பகுப்பாய்வு

5. சமூக அமைப்புகளின் தன்மையை அடையாளம் காண்பதற்கு புனே டெக்கான் கல்லூரியுடன் இணைந்து ஈமஎலும்பு எச்சங்கள் ஆய்வு.

தனிச் சிறப்பான பிரிவுகளின் மதிப்பு வாய்ந்த பங்களிப்பினை ஆழமாக பகுத்தாய்ந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் தொல்-தாவரவியல், மூலக்கூறு உயிரியல், மக்கள் மரபியல், சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் மொழியியல் தொல்லியல் போன்ற துறைகளின் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்றினை அறிவியல் அடிப்படையில் மாற்றி எழுதிட தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.19. தொல்லியல் அகழ்வைப்பகங்கள்

கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கும் அரிய தொல் பொருட்கள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், இத்துறையின்கீழ் செயல்படும் 15 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]

வ. எண்	அகழ்வைப்பகங்கள்	இடம் / மாவட்டம்
1)	டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகம்	தரங்கம்பாடி / மயிலாடுதுறை
2)	ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம்	பூம்புகார் / மயிலாடுதுறை
3)	கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம்	கங்கைகொண்ட சோழபுரம் / அரியலூர்
4)	இராமலிங்கவிலாசம் அகழ்வைப்பகம்	இராமநாதபுரம் / இராமநாதபுரம்
5)	ஆற்காடு அகழ்வைப்பகம்	ஆற்காடு / ராணிப்பேட்டை
6)	வரலாற்றுக்கு முந்தைய கால அகழ்வைப்பகம்	பூண்டி / திருவள்ளூர்
7)	திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம்	மதுரை / மதுரை
8)	இராசராசன் அகழ்வைப்பகம்	தஞ்சாவூர் / தஞ்சாவூர்
9)	மராத்தியர் அகழ்வைப்பகம்	தஞ்சாவூர் / தஞ்சாவூர்
10)	கரூர் அகழ்வைப்பகம்	கரூர் / கரூர்
11)	கோயம்புத்தூர் அகழ்வைப்பகம்	கோயம்புத்தூர் / கோயம்புத்தூர்
12)	குற்றாலம் அகழ்வைப்பகம்	குற்றாலம் / தென்காசி
13)	திருக்கோவிலூர் அகழ்வைப்பகம்	திருக்கோவிலூர் / கள்ளக்குறிச்சி
14)	தருமபுரி அகழ்வைப்பகம்	தருமபுரி / தருமபுரி
15)	கீழடி அருங்காட்சியகம்	கொந்தகை / சிவகங்கை

3.20. கீழடியில் புதிய அகழ்வைப்பகம்

சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி தொல்பொருட்களைக் காட்சிப்படுத்திட உலகத் தரம் வாய்ந்த ஒரு

[2023 ஏப்ரல் 19

புதிய அகழ்வைப்பகம் அமைத்திட 2019-2020 ஆம் ஆண்டு அரசால் ரூ.12.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 2022-2023 ஆம் நிதியாண்டில் கூடுதலாக ரூ.6.21 கோடி ஒதுக்கீடு செய்தது. அருங்காட்சியகம் 2 ஏக்கர் பரப்பளவில் 31,000 சதுர அடியில் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் வகையில் உள்ளூர் கட்டடக்கலை பாணியைப் பின்பற்றியே இந்த அருங்காட்சியகம் வடிவமைக்கப்பட்டது. உள்ளூர் சூழலை மொழிசார் சூழலுடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு ரூ.18.42 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வடிவமைப்புத் தத்துவம், பார்வையாளர்களை மையமாக கொண்ட உலகளாவிய அணுகல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பலதரப்பட்ட அணுகு முறைகளைப் பின்பற்றி கீழடியின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணர்கிறது, மேலும், கட்டடக் கலையினை ஒரு கருவியாக பயன்படுத்தி இந்த வரலாற்றுத் தளத்துடன் மக்கள் கொண்டிருந்த பிரிக்க முடியாத பிணைப்பினை வெளிப்படுத்தியுள்ளது.

கீழடி அருங்காட்சியகம், 1) வைகை மற்றும் கீழடி 2) வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மை 3) மட்பாண்டத் தொழில்கள் 4) ஆடையும் அணிகலனும் 5) கடல் வாணிபம் 6) வாழ்வும் வளமும் ஆகிய கருப்பொருட்களின் அடிப்படையில் ஆறு முக்கியமான கட்டடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர, அருங்காட்சியக வளாகத்தில் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் பகுதியளவு திறந்த மற்றும் திறந்தவெளிகளில் பாரம்பரிய விளையாட்டுகள், கைவினைப் பட்டறைகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இடம் பெற்றுள்ளன. அகழாய்வுக் குழியின் மாதிரி வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியக கட்டமைப்பு உள்ளூர் கட்டடக்கலை வடிவமைப்பை வெளிப்படுத்துகின்ற வகையில் முற்றங்கள், தாழ்வாரங்கள், மண்டபங்கள் போன்றவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து சிறப்பம்சங்களுடன் கூடிய கீழடி அருங்காட்சியகத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5.3.2023 அன்று திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

2023 ஏப்ரல் 19]

அருங்காட்சியகம் பொது மக்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. வார நாட்களில் 2,000 பார்வையாளர்களும் வார இறுதி நாட்களில் 5,000 பார்வையாளர்களும் அருங்காட்சியகத்தினைப் பார்வையிடுகிறார்கள்.

3.21. பொருநை அருங்காட்சியகம், திருநெல்வேலி மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9.9.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் சிவகளை, கொற்கை, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் அகழாய்வுகளில் பெறப்பட்ட தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக திருநெல்வேலியில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். 2022 ஆம் ஆண்டில் அரசு, அருங்காட்சியகம் அமைக்க ரூ.33.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பொருநை அருங்காட்சியகம், திருநெல்வேலி நகருக்கு அருகில் ரெட்டியார்பட்டி என்னுமிடத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-க்கு அருகில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது. இந்த அருங்காட்சியகம் 55,500 சதுர அடி பரப்பளவில் முற்றங்கள், தூண்கள், தாழ்வாரங்கள் போன்றவற்றுடன் பாரம்பரிய கட்டடக்கலை பாணியில் கட்டப்படவுள்ளது. பொதுப் பணித் துறையின் (பாரம்பரிய பிரிவு) மூலம் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு, தற்போது தொழில்நுட்பக் கூர்ந்தாய்வில் உள்ளது.

3.22. கங்கைகொண்டசோழபுரம் அருங்காட்சியகம், அரியலூர் மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.11.2022 அன்று கங்கைகொண்டசோழபுரம் அகழாய்வுத் தளத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். "சோழ அரசர் பல நாடுகளைக் கைப்பற்றியதுடன், சீனா உட்பட பல நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்" என்றும் மேற்படி பெருமைகளை உலகிற்கு பறைசாற்றும் வகையில் தமிழ்நாடு அரசு ஓர் அருங்காட்சியகம் அமைக்கவுள்ளது என்றும் அறிவித்தார்கள்.

கங்கைகொண்டசோழபுரத்தில் அமைக்கப்படவுள்ள அருங்காட்சியகத்திற்காக, அரியலூர் மாவட்ட நிர்வாகம் 0.76.70 ஏர்ஸ் நிலம் தேர்வு செய்து உள்நுழைவு அனுமதி வழங்கியுள்ளது. தற்போது விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2023 ஏப்ரல் 19

3.23. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் மேம்பாடு

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகத்தினை மேம்படுத்திடவும் தொல் பொருட்களைக் காட்சிப்படுத்திடவும் ரூ.8.27 கோடிக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் அருங்காட்சியக நிதிநல்கை திட்டத்தின்கீழ் 80:20 என்ற பங்கீட்டு அடிப்படையில் (ஒன்றிய அரசு பங்கு 80% = ரூ.661.76 இலட்சம், மாநில அரசு பங்கு 20% = ரூ.165.44 இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது திருமலை நாயக்கர் அரண்மனையில் உள்ள பள்ளியறை, நாடகசாலை மற்றும் நூலகக் கட்டடம் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.24. அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல்:

2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின்போது, "தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் அகழ்வைப்பகம், திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள தொல்பழங்கால அகழ்வைப்பகம், தருமபுரியில் உள்ள நடுகல் அகழ்வைப்பகம் ஆகியவற்றை ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்" என அறிவித்தார்கள். இதன் அடிப்படையில் கீழ்க்காணும் மூன்று அகழ்வைப்பகங்களும் மேம்படுத்தப்படவுள்ளன.

1. பூண்டி அகழ்வைப்பகம்:

பட்டறைபெரும்புதூர் கிராமத்தில் ரூ.2.70 கோடியில் புதிய கட்டடம் கட்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

2. குற்றாலம் அகழ்வைப்பகம்:

தென்காசி மாவட்டம் குற்றாலம் கிராமத்தில் ரூ.2.52 கோடியில் புதிய கட்டடம் கட்ட நிர்வாக அனுமதிக்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. தருமபுரி அகழ்வைப்பகம்:

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் அதியமான் கோட்டையின் அருகில் உள்ள சித்தி விநாயகர் கோயில் நிலத்தில்

2023 ஏப்ரல் 19]

ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நடுகல் அகழ்வைப்பகத்திற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

3.25. கல்வெட்டியல்

கல்வெட்டியல் என்பது கற்பாறைகள், தூண்கள், கோயிற்சுவர்கள், செப்பேடுகள், காசுகள், கற்கள், உலோகங்கள், பானைகள், மரங்கள், ஓலைச்சுவடிகள், துணிகள், சங்குகள் மற்றும் ஓவியங்கள் மீதான எழுத்துப் பதிவுகள் பற்றிய ஆய்வாகும். இப்பதிவுகள் உள்ளத்தை வியக்க வைப்பதாகவும், தகவல் பொருந்தியதாகவும் விளங்குகிறது.

பண்டைய நாகரிகங்களின் வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்து கொள்ள உதவும் முக்கியமான முதன்மைச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது. நீதி இயல், சமுதாயப் பண்பாட்டியல், இலக்கியம், தொல்லியல் ஆகியவற்றின் வரலாற்றுத் தொன்மையை நிலைநிறுத்த முதன்மை ஆவணச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது.

இந்தியக் கல்வெட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தமிழகக் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. கல்வெட்டுகளின் எண்ணிக்கை, செப்பேடுகளின் எண்ணிக்கை ஆகிய எல்லா பிரிவுகளிலும் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாடு அரசால் தொல்லியல் துறையில் கல்வெட்டுகளுக்கென்று தனிப்பிரிவு, 1996-ல் தொடங்கப்பட்டது. இதன் முக்கியப் பணி தமிழகத்தில் கோயில் சுவர்களிலும், கற்றூண்களிலும், கற்பலகைகளிலும், குகைத் தளங்களிலும், செப்பேடுகளிலும் மற்றும் பிறவற்றிலும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுப்பதாகும்.

தற்போது, மொத்தம் 38 மாவட்டங்களில் உள்ள 25,642 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, அவற்றின் மைப்படித்தாட்கள் இத்துறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது புதுக்கோட்டை, சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. படியெடுக்கப்பட்டுள்ள 25,642 மைப்படிகளில் 13,577 கல்வெட்டுகள் படிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 8,775 கல்வெட்டுகள் 59 தொகுதிகளாக நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 19

கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்துப் பொருள் விளக்கம் செய்து நூல் வடிவில் வெளியிடுதல் போன்ற சீரிய பணிகளை மேற்கொள்ள 2019-2020 ஆம் ஆண்டில், ரூ.2 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஐந்து ஆண்டு காலத்திற்கு செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.40 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. படிக்கப்பட்ட கல்வெட்டுகள் "தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்" என்ற தலைப்பில் மாவட்ட வாரியாக பதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை மேற்கொள்ள 15 கல்வெட்டு வல்லுநர்கள் நியமிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 3,000 கல்வெட்டுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக இதுவரை 5,200 கல்வெட்டுகள் படிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 1,279 கல்வெட்டுகள் நூல் வடிவில் 6 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இதுவரை படியெடுக்கப்படாத கல்வெட்டுகளைப் படியெடுக்கவும், புதிய கல்வெட்டுகளைக் கண்டறியவும் ஐந்து கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2022-2023 ஆம் ஆண்டு 399 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

3.26. தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்

1974 ஆம் ஆண்டு முதல் தொல்லியல் துறையில் இயங்கி வந்த கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் மறுசீரமைக்கப்பட்டு 2020-2021 ஆம் ஆண்டு முதல் "தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இத்துறையின் சென்னை தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது.

"தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்", 2020-2021 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மானுடவியல்/ இயற்பியல்/ உயிரியல்/ நிலஇயல்/ பொறியியல்/ கணினி அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்ற 20 மாணவர்களுக்கு ஈராண்டு தொல்லியல் முதுநிலைப் பட்டயப் படிப்பினை நடத்தி வருகின்றது.

ஈராண்டு கல்வெட்டியல் முதுநிலைப் பட்டயப் படிப்பு 2021 – 2022 ஆம் ஆண்டு முதல் தமிழ் / இந்திய வரலாறு/

வரலாறு/பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல்/ வரலாறு மற்றும் தொல்லியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் முதுகலைப் பட்டம் பெற்ற 10 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

2022-2023 ஆம் ஆண்டில், இளங்கலைக் கட்டடப் பொறியியல் அல்லது மானுடவியல்/ சமூகவியல் / வேதியியல் / இயற்பியல் / உயிரியல் / நிலஇயல் ஆகிய ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் முதுகலைப் பட்டம் பெற்ற 10 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியலில் முதுநிலைப் பட்டயப் படிப்பு புதியதாகத் துவங்கப்பட்டது.

இப்படிப்புகளில் நான்கு பருவத் தேர்வுகள் என ஒவ்வொரு பருவத் தேர்வுக்கும் 6 தாள்கள் உள்ளன. மொத்தம் 24 தாள்கள் கொண்ட இந்தப் படிப்புகளில் தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் சார்ந்த அனைத்துப் பாடங்களுடன் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. பல்வேறு தொல்லியல் சார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.5,000/ - பயிலுதவித் தொகையாக வழங்கப்படுகிறது. எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் பட்டயப் படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம் கற்கருவிகள் தயாரித்தல், மணிகள் தயாரித்தல், வெண்கல வார்ப்பு, கட்டடம் மற்றும் இரசாயன பாதுகாப்பு முறைகள், அகழாய்வு மற்றும் கல்வெட்டுகள் படியெடுத்தல் மற்றும் படித்தல் குறித்து அந்தந்தத் துறை வல்லுநர்கள்மூலம் பட்டயப் படிப்பின்போது நேரடியாகப் பயிற்சி அளித்தது.

தஞ்சாவூர், கங்கைகொண்டசோழபுரம், தாராசுரம் போன்ற உலக மரபு நினைவுச் சின்னங்களுக்கும் (UNESCO Monuments) தமிழ்நாட்டின் கட்டடக்கலை, சிற்பக்கலை, கல்வெட்டு மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள ஏதுவாக திருவலஞ்சுழி மற்றும் திருபுவனம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துச் சென்று நேரடி பயிற்சியளிக்கப்பட்டது. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம், அரியலூர் மாவட்டம் மாளிகைமேடு மற்றும்

[*2023 ஏப்ரல் 19*

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அகழாய்வு தளங்கள், கழுகுமலை வெட்டுவான் கோயில், இராஜராஜன் அகழ்வைப்பகம், மராட்டா அகழ்வைப்பகம் மற்றும் தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் ஆகியவற்றையும் பார்வையிட்டனர். கொங்கர்புளியங்குளம், அரிட்டாப்பட்டி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், திருவாதவூர், திருமோகூர் முதலான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தமிழி, வட்டெழுத்து மற்றும் தமிழ்க் கல்வெட்டுகள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

3.27. தமிழ்நாட்டிலுள்ள பாறை ஓவியங்கள்

தமிழ்நாட்டின் பாறை ஓவியங்களை பாறை ஓவியங்கள் (Petrographs) *மற்றும் பாறை செதுக்கல்கள்* (Petroglyps) *என இரண்டு முக்கியப் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.*

1. பாறை ஓவியங்கள் காணப்படும் இடங்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- *இயற்கை குகைத்தளங்கள்*
- *பெருங்கற்கால கற்பதுக்கைகள்*
- *வரலாற்றுக் காலத்தில் மனிதனால் வெட்டப்பட்ட குகைத்தளங்கள்*

2. பாறைச் சுவடுகள் மற்றும் வெட்டுக் கீறல்கள்

தொல்லியல் துறை தமிழ்நாட்டில் உள்ள பாறை ஓவியங்களை ஆவணப்படுத்திட, தொல்லியல் ஆய்வாளர், மானுடவியலாளர், புவியியலாளர், நாட்டுப்புறவியலாளர் மற்றும் புகைப்படக் கலைஞர் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 8 உறுப்பினர்கள் கொண்ட குழுவினை அமைத்துள்ளது. இக்குழுவானது கீழ்க்காணும் இடங்களில் ஆய்வு செய்துள்ளது:-

1. *கருக்கியூர், நீலகிரி மாவட்டம்*
2. *சிறுமலை, திண்டுக்கல் மாவட்டம்*
3. *உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்*
4. *விழுப்புரம் மாவட்டத்தில் 6 இடங்கள்*
5. *கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30 இடங்கள்*

2023 ஏப்ரல் 19]

இவ்வாய்வின்போது, பாறை ஓவியங்களில் வேட்டைச் சமூகம், போர்க் காட்சிகள், கால்நடை பராமரிப்பாளர்கள், விலங்கின் மீது சவாரி செய்பவர் என பல்வேறு கருப் பொருள்களும் செவ்வண்ணம் மற்றும் வெள்ளை நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டன. இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட பாறை ஓவியங்களை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

3.28. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

ஓலைச்சுவடி என்பது காகிதம், பட்டை, துணி, உலோகம், பனை ஓலை அல்லது அறிவியல், வரலாற்று அல்லது அழகியல் மதிப்பு மிக்க பொருட்களில் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் அடங்கியவை. ஓலைச் சுவடிகள் நூற்றுக்கணக்கான வெவ்வேறு மொழிகளிலும் வரிவடிவங்களிலும் காணப்படுகின்றன.

வரலாற்று நிகழ்வுகள் அல்லது செயல்முறைகள் குறித்த நேரடித் தகவல்களை வழங்கும் பாறைகள், நிறுவனங்கள், வருவாய்ப் பதிவுகள் போன்ற வரலாற்றுப் பதிவுகளிலிருந்து ஓலைச் சுவடிகள் வேறுபடுகின்றன.

சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மைய உருவாக்கம் 1861 ஆம் ஆண்டு முதல் ஒரு தனித்துவமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது. இந்த நூலகம் கர்னல் கொலின் மெக்கன்சி, சி.பி.பிரவுன் மற்றும் பேராசிரியர் பிக்போர்டு ஆகியோரின் சேகரிப்புப் படைப்புகளால் உருவாக்கப்பட்டு, பின்னர் தமிழக அரசால் ஓலைச் சுவடிகள் கூடுதலாக சேகரிக்கப்பட்டும் வருகிறது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடத்தில் ஏழாவது தளத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் கணிதம், வானவியல், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகளில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அரபு மற்றும் பாரசீக மொழிகளில், 72,748 அரிய கையெழுத்துப் படிகள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் 25,373 மேற்கோள் நூல்கள்

நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஓலைச் சுவடிகளை அதிக கவனமுடன் பாதுகாக்க புதிதாக 50 மர அலமாரிகள் வாங்கப்பட்டுள்ளன.

இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக ஓலைச் சுவடிகளை அளித்து வருகின்றனர். நாகர்கோயில் மாண்பமை நீதிமன்றம் 43 பெட்டிகளில் ஓலைச் சுவடிகளை இந்நூலகத்திற்கு வழங்கியுள்ளது. இதுவரை 21,00,000 ஓலைச் சுவடி பக்கங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3,500 ஓலைச் சுவடிக் கட்டுகளின் 5,00,000 மின்னணுப் பக்கங்கள் www.tnarch.gov.in எனும் தொல்லியல் துறையின் வலைத்தளத்தில் கிடைக்கின்றன.

3.29. மாநில சுவடிக் குழுமம்

மாநிலத்தில் உள்ள ஓலைச் சுவடிகளை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் அவற்றை முறையாக மின்பதிப்பாக்கம் செய்திடவும் மாநில சுவடிக் குழுமம் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு 2019-2020 ஆம் ஆண்டு தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியது.

இத்திட்டத்தின்கீழ், அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் ஒரு தனித்துவமான சுவடி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் உள்ள 1,00,000 ஓலைச் சுவடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், இதன்மூலம் இச்சுவடிகள் முறையாக பாதுகாக்கப்பட்டு மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டு எதிர்கால தலைமுறையினரின் நலனுக்காக ஆவணப்படுத்தப்படும். ஐந்து மண்டலங்களின்மூலம் மாநில சுவடிக் குழுமம் செயல்படுத்தப்பட்டு இதுவரை 3,53,080 சுவடி தாள்கள் மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இம்மாநில சுவடிக் குழுமத்தின்மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் சர்வதேச தரத்துடன் கூடிய தரக்குறியீட்டுடன் அட்டவணைப்படுத்தப்பட்டு, இறுதியாக அறிஞர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளன.

2023 ஏப்ரல் 19]

3.30. சுவடிகள் வள ஆதார மையம் (Manuscripts Resource Centre)

புதுதில்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் "தேசிய சுவடிக் குழுமம்" [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச் சுவடிகளின் விவரங்களைத் திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச் சுவடிகளைச் சேகரித்து, அவற்றினைக் குறுந்தகடுகளில் மின்னணு வடிவில் பதிவு செய்யும் பணிக்காக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் "சுவடிகள் வள ஆதார மையமாக" (Manuscript Research Centre) அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 66,110 சுவடிகள் மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டு, புதுதில்லியிலுள்ள தேசிய சுவடிகள் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

3.31. முக்கியச் செயல்பாடுகள் 2022 – 2023

- உலக மரபு வார விழாவினை (2022 நவம்பர் 19-25) கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், யாக்கை மரபு அறக்கட்டளை மற்றும் பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்துடன் இணைந்து மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் தமிழக நடுகல் மரபு என்ற தலைப்பில் கண்காட்சியும் ஆய்வு உரைகளும் நடத்தியது. அனைத்து அகழ் வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்கள் வாயிலாக தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் குறித்தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பணிப்பட்டறைகள், போட்டிகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள் போன்றவை அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர் சமுதாயம் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நிகழ்த்தப்பட்டன.

- கங்கைகொண்டசோழபுரத்தில் நடைபெற்று வரும் 2 ஆம் கட்ட அகழாய்வுப் பணிகளையும் அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களின் சிறப்புக் கண்காட்சியினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.11.2022 அன்று பார்வையிட்டார்கள்.

[2023 ஏப்ரல் 19

மேலும், அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களின் சிறப்புக் கண்காட்சி சிவகங்கை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் நடைபெற்ற புத்தகக் காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டது.

- 2022 ஏப்ரல் 16 அன்று நடைபெறும் சித்திரை திருவிழா மற்றும் ஏப்ரல் 18 முதல் 24 முடிய நடைபெறவுள்ள "உலக மரபு தினவிழா"வினை முன்னிட்டு மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை மற்றும் தஞ்சாவூர் அரண்மனை ஆகிய பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் வளாகத்தில் கலை மற்றும் பண்பாட்டுத் துறைமூலம் மரபுசார் கலை நிகழ்ச்சிகளான காவடி ஆட்டம், காளியாட்டம், கரகாட்டம், மாடாட்டம், மயிலாட்டம், தேவராட்டம், மரக்காலாட்டம், மானாட்டம், நையாண்டி மேளம் ஆகியவை நடத்தப்பட்டன.
- தொல்லியல் அலுவலர்களுக்குக் கடல்சார் தொல்லியல் மற்றும் புவிசார் ஆய்வுகள் குறித்த பயிற்சி இந்திய கடல்சார் பல்கலைக்கழக வல்லுநர்கள் மற்றும் தொல்லியலின் சிறந்த அறிஞர்களுடன் இணைந்து நடத்தப்பட்டது. 10 தொல்லியல் அலுவலர்களுக்கான முதல் கட்ட "கடல்சார் தொல்லியல் மற்றும் புவிசார் ஆய்வுகள்" குறித்த பயிற்சி 28.11.2022 முதல் 2.12.2022 வரை 5 நாட்கள் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. தொல்லியல் அலுவலர்களின் நன்மை மற்றும் பயிற்சி அளிக்கும் வகையில் மேலும் இரண்டு கட்ட பயிற்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

3.32. முடிவுரை

தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ்நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. எனவே, கடந்த காலத்தைப் பற்றி கற்கவும், கண்டறியவும் அக்கறை கொள்ளவும் நமது பன்முகம் கொண்ட வளமையான பாரம்பரியத்தை உலகிற்கு அறியச் செய்யவும் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன என்றும் அதன்மூலம் நமது மேன்மைக்கும் அறிவுக்கும் வளம்

சேர்த்து இறுதியாக தமிழ்நாட்டின் வரலாற்றை உலக அரங்கில் நிலைநிறுத்தும் என்றும் கூறலாம்.

தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கம் அருகே உள்ள அத்திரம்பாக்கத்தில் 15 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் தோன்றினான் என்று சான்றுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. 15 இலட்சம் ஆண்டுகால வரலாற்றை மறுசீரமைப்பது இத்துறையின் முக்கிய மற்றும் சவாலான பணிகளில் ஒன்றாகும்.

உலகில் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்களுடன் பன்முக ஆராய்ச்சியினை ஊக்குவிக்கும் அகழாய்வுப் பணிகளை தமிழ்நாடு தொல்லியல் துறை மேற்கொள்ளும். தற்போது நடைபெற்று வரும் களப்பணிகளான பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களைப் பராமரித்தல், உள்ளூர் தொல்லியல் ஆய்வு மற்றும் அகழாய்வுப் பணிகள் மேம்பாடு, அகழ்வைப்பகம் நிறுவுதல், உள்ளூர் பல்கலைக்கழகங்கள் உடனான கூட்டு முயற்சியுடன் கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் பொருளுணர்தல் போன்ற ஆய்வுப் பணிகள் நமது ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 19*

இணைப்பு

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
1	கொற்கை	தூத்துக்குடி	1968-69 2020-21	வரலாற்றுத் தொடக்க காலம்
2	பாஞ்சாலங் குறிச்சி	தூத்துக்குடி	1968-69	நவீன காலம்
3	வசவசமுத்திரம்	காஞ்சிபுரம்	1969-70	வரலாற்றுத் தொடக்க காலம்
4	ஆனைமலை	கோயம்புத்தூர்	1969-70	பெருங் கற்காலம்
5	பல்லவமேடு	காஞ்சிபுரம்	1970-71	இடைக் காலம்
6	கரூர்	கரூர்	1973-74 1994-95	வரலாற்றுத் தொடக்க காலம்
7	பனையகுளம்	தருமபுரி	1979-80	வரலாற்றுத் தொடக்க காலம்
8	போளுவாம் பட்டி	கோயம் புத்தூர்	1979-80 1980-81	இடைக் காலம்
9	கோவலன் பொட்டல்	மதுரை	1980-81	பெருங்கற் காலம்
10	தொண்டி	இராமநாத புரம்	1980-81	வரலாற்றுத் தொடக்க காலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
11	கங்கை கொண்ட சோழபுரம்	அரியலூர்	1980-81 1986-87 2008-09 2020-21 2021-22 2022-23	இடைக் காலம்
12	கண்ணனூர்	திருச்சி	1982-83	இடைக் காலம்
13	குறும்பன்மேடு	தஞ்சாவூர்	1984-85	இடைக் காலம்
14	பழையாறை	தஞ்சாவூர்	1984-85	இடைக் காலம்
15	அழகன்குளம்	இராமநாத புரம்	1986-87 1990-91 1992-93 1994-95 1996-97 2014-15 2016-17	வரலாற்றுத் தொடக்க காலம்
16	திருக் கோவிலூர்	விழுப்புரம்	1992-93	வரலாற்றுத் தொடக்க காலம்
17	கொடுமணல்	ஈரோடு	1992-93 1996-97 2019-20 2020-21	பெருங்கற் காலம் & வரலாற்றுத் தொடக்க காலம்
18	சேந்தமங்கலம்	விழுப்புரம்	1992-93 1994-95	இடைக் காலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
19	படவேடு	திருவண்ணா மலை	1992-93	இடைக் காலம்
20	திருத்தங்கல்	விருதுநகர்	1994-95	நுண் கற்காலம்
21	பூம்புகார்	மயிலாடு துறை	1994-95 1997-98	வரலாற்றுத் தொடக்க காலம்
22	மாளிகைமேடு	கடலூர்	1999-2000	வரலாற்றுத் தொடக்க காலம்
23	தேரிருவேலி	இராமநாத புரம்	1999-2000	வரலாற்றுத் தொடக்க காலம்
24	மாங்குடி	திரு நெல்வேலி	2001-02	நுண் கற்காலம்
25	பேரூர்	கோயம் புத்தூர்	2001-02	வரலாற்றுத் தொடக்க காலம்
26	ஆண்டிபட்டி	திருவண்ணா மலை	2004-05	வரலாற்றுத் தொடக்க காலம்
27	மோதூர்	தருமபுரி	2004-05	புதிய கற்காலம்
28	மரக்காணம்	விழுப்புரம்	2005-06	இடைக் காலம்
29	பரிக்குளம்	திருவள்ளூர்	2005-06	பழைய கற்காலம்

2023 ஏப்ரல் 19]

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
30	நெடுங்கூர்	கரூர்	2006-07	பெருங் கற்காலம்
31	மாங்குளம்	மதுரை	2006-07	வரலாற்றுத் தொடக்க காலம்
32	செம்பியன் கண்டியூர்	நாகப் பட்டினம்	2007-08	பெருங் கற்காலம்
33	தரங்கம்பாடி	மயிலாடுதுறை	2008-09	நவீன காலம்
34	இராஜாக்க மங்கலம்	திருநெல்வேலி	2009-10	இடைக் காலம்
35	தலைச்சங்காடு	மயிலாடு துறை	2010-11	இடைக் காலம்
36	ஆலம்பரை	காஞ்சிபுரம்	2011-12	நவீன காலம்
37	ஸ்ரீரங்கம்	திருச்சிராப் பள்ளி	2013-14 2014-15	இடைக் காலம்
38	உக்கிரன் கோட்டை	திரு நெல்வேலி	2014-15	இடைக் காலம்
39	பட்டறை பெரும்புதூர்	திருவள்ளூர்	2015-16 2017-18 2022-23	கடைக் கற்காலம்
40	கீழடி	சிவகங்கை	2017-18 2018-19 2019-20 2020-21 2021-22 2022-23	வரலாற்றுத் தொடக்க காலம்

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
41	ஆதிச்சநல்லூர்	தூத்துக்குடி	2019-20 2020-21	இரும்புக் காலம்
42	சிவகளை	தூத்துக்குடி	2019-20 2020-21 2021-22	இரும்புக் காலம்
43	மயிலாடும் பாறை	கிருஷ்ணகிரி	2020-21 2021-22	புதிய கற்காலம்
44	வெம்பக் கோட்டை	விருதுநகர்	2021-22 2022-23	நுண்கற் காலம்
45	துலுக்கர்பட்டி	திரு நெல்வேலி	2021-22 2022-23	வரலாற்றுத் தொடக்க காலம்
46	பெரும்பாலை	தருமபுரி	2021-22	வரலாற்றுத் தொடக்க காலம்
47	கீழ்நமண்டி	திருவண்ணா மலை	2022-23	பெருங்கற் காலம்
48	பொற்பனைக் கோட்டை	புதுக் கோட்டை	2022-23	வரலாற்றுத் தொடக்க காலம்
49	பூதிநத்தம்	தருமபுரி	2022-23	புதிய கற்காலம்

2023 ஏப்ரல் 19]

இணைப்பு II

(133 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையங்கள் (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

-திருமூலர்

உலகத்தில் உள்ள மறைமொழிகள் எத்தனை வகையில் இருந்தாலும், அவற்றின் சாரம் அன்பும் கருணையுமே ஆகும். இதனால்தான் எல்லா மறைமொழிகளும் வேறுபாடின்றி ஒன்று போலவே அன்பே கடவுள் என்று கூறுகின்றன. ஒருவர் கடவுளை அடைந்து பேரின்பம் பெற அன்பு ஒன்றே வழி என்று திருமூலர் பாடிய திருமந்திரம் மிக அழகாக எடுத்துரைக்கிறது. அன்பின் வெளிப்பாடான இன்னுரைகளைப் பேசுக; அவற்றிலேதான் கடவுள் காட்சி அளிப்பான் என்பது மேற்கண்ட பாடலின் பொருள் ஆகும்.

கடவுள் எங்கே நிறைவாகக் காணப்படுவார் எனின் எண்ண வடிவில் அன்பாகவும் தூல வடிவில் திருக்கோயிலாகவும் காட்சி அளிப்பார். அதனால்தான், தமிழ்நாடு அரசின் முத்திரையிலேயே திருக்கோயில் கோபுரம் இடம் பெறுகிறது.

திருக்கோயில்களே கலாச்சாரத்தின் ஊற்றுக்கண்.

1.1. திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல், பழமை வாய்ந்த தமிழர் பண்பாடு மற்றும் கட்டடக் கலை முதலானவற்றைத் தன்னகத்தே கொண்டு ஓவியம், நடனம், இசை

போன்ற கலைகளைக் காக்கும் களஞ்சியங்களாகவும் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கு வழிபாட்டு அனுபவத்தை மேம்படுத்தும் பொருட்டு, அன்றாட பூசைகளை நடத்துதல், திருவிழாக்களைக் கொண்டாடுதல், பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்றவற்றில் பல முயற்சிகளை அரசு செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

1.2. உரிய கால இடைவெளியில் திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் திருக்குட நன்னீராட்டு செய்வதை உறுதி செய்யும் பொருட்டு திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு, புனரமைத்துப் புதுப்பித்தல் மற்றும் தொடர் பராமரிப்புப் பணிகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. திருக்கோயில் சொத்துகளைப் பேணிக் காத்தல், திருக்கோயில் சொத்துகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கான வசதிகளை வழங்குதல் போன்ற பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்கோயில்களில் இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்படும் அர்ச்சனைகள் பக்தர்கள் புரிந்துகொள்ளும் வகையில் தமிழில் செய்யப்படுகின்றன. மேலும், திருக்கோயில்களில் தேவாரமும், திவ்யபிரபந்தமும் இசைக்கப்படுகின்றன.

இந்து சமய அறநிலையத் துறையின் தோற்றமும் பங்களிப்பும்

2. தமிழ்நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற திருக்கோயில்களுக்கு மிகச் சிறந்த வரலாற்றுப் பின்னணி உள்ளது. இத்திருக்கோயில்கள் பண்டைக் காலத்தில் ஆட்சி புரிந்த அரசர்களால் அரசு கருவூலத்திலிருந்து வழங்கப்பட்ட தாராளமான நிதி உதவியால் கட்டப்பட்டவையாகும். திருக்கோயில்களைப் பல்லவ, சேர, சோழ, பாண்டியர், நாயக்க மன்னர்கள் கட்டிப் பராமரித்து மக்கள் வழிபாட்டிற்காக அர்ப்பணித்தனர். அண்மைக் காலத்தில், மைசூர், திருவனந்தபுரம் மற்றும் கொச்சி பகுதிகளில் ஆண்ட மன்னர்கள் திருக்கோயில்கள் கட்டுவதிலும், கட்டளைகள் ஏற்படுத்துவதிலும் மிகுந்த ஈடுபாடு காட்டினர்.

2.1. திருவனந்தபுரத்தை ஆண்ட மன்னர்கள், இறைவனின் பெயரால் “பத்மநாபதாசா” எனத் தங்களை அறிவித்துக் கொண்டு, தங்கள் ஆட்சியை நடத்தியதோடு மட்டுமல்லாமல் பிற மத வழிபாடுகளுக்கு நிலங்களைக் கொடைகளாக வழங்கினர். தஞ்சாவூரை ஆண்ட ஏக்கோஜி, துளஜாஜி ஆகிய மராட்டிய

2023 ஏப்ரல் 19]

மன்னர்கள் மசூதிகளுக்கும், தர்காவிற்கும் நிலங்களைக் கொடையாக வழங்கினர். மன்னர்கள் காஜி, முத்தாவலி ஆகியவர்களை நியமித்தனர்.

2.2. திருக்கோயில்களில் நடைபெறும் வழிபாடுகள் தங்குதடையின்றி நடப்பதற்காகவும் திருக்கோயில் பராமரிப்பினை உறுதி செய்வதற்காகவும் உரிய நிதிப் பற்றாக்குறையைத் தவிர்க்கும் பொருட்டு திருக்கோயில்களுக்குப் பெருமளவில் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன. அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் போன்றவர்களின் தடையில்லாத சேவையை உறுதி செய்யும் பொருட்டு திருக்கோயில்களில் சேவை புரிவது தொடர்பான கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. விளக்கேற்றுதல், மலர் மாலை கட்டி வழங்குதல், இறைவனை வீதி உலாவிற்கு எழுந்தருளச் செய்தல், திருவிழாக்கள் நடத்துதல், திருக்கோயில்களில் நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்றவற்றிற்கும் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டன.

இத்தகைய சேவைகளைத் தடையின்றி மேற்கொள்ளும் பொருட்டு நிலங்கள், கட்டடங்கள், பொன், வெள்ளி மற்றும் பல விலை உயர்ந்தவற்றைப் பெரும்பாலான பக்தர்கள் திருக்கோயிலுக்குக் கொடையாக வழங்கியுள்ளனர். மக்களின் வாழ்வில் முக்கியப் பங்களிப்பை நல்கி வரும் விலைமதிக்க முடியாத சொத்துகளான திருக்கோயில்களின் நிருவாகத்தை அரசர்களும், அரசாங்கத்தினரும் பன்னெடுங்காலமாகக் கண்காணித்து வருகின்றனர். சமயத் தலைவர்கள் நியமனத்தைப் பல தருணங்களில் அரசர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மேற்கொண்டனர்.

2.3. அரசர்கள் ஆட்சி முடிவுக்கு வந்து, கிழக்கிந்திய கம்பெனி வசம் ஆட்சி சென்றதைத் தொடர்ந்து, திருக்கோயில்களின் நிருவாகமும், அவற்றின் சொத்துகளும் தனி நபர்கள் வசமும் தனிக் குடும்பங்கள் வசமும் சென்றதனால் திருக்கோயில்கள் தனியார் நிறுவனங்களாகச் செயல்படும் நிலைக்குத் தள்ளப்பட்டன. திருக்கோயில்களின் சொத்துகளைத் தங்கள் சொந்த இலாபத்திற்காகத் தவறாகப் பயன்படுத்துவதாகப் புகார்கள் எழுந்தன. மேலும், விற்கப்படுதல் போன்ற புகார்கள் கிழக்கிந்திய கம்பெனிக்கு பக்தர்களால் கொடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, வங்கம், மதராஸ் மற்றும் பம்பாய் மாகாணங்கள் முறையே 1810, 1817 மற்றும் 1827-ஆம் ஆண்டுகளில்

[2023 ஏப்ரல் 19

திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகள் நிருவாகத்தைக் கண்காணிக்கும் பொருட்டு ஒழுங்குமுறைகளைப் பிறப்பித்தன. திருக்கோயிலில் வழிபாட்டில் உள்ள இறைவனின் திருவுருவமே நிலையான இளவல் மற்றும் சட்ட நபராகக் கருதப்பட்டார்.

2.4. திருக்கோயில்களின் சொத்துகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்ய 1817 ஆம் ஆண்டு, மதராஸ் நிலைக் கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்காற்று முறை எண்.VII, 1817-ன்படி வருவாய் வாரியத்திற்கு பொது மேற்பார்வை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த ஒழுங்காற்று முறை மூலமாகத் திருக்கோயில்களின் செலவினங்களை மேற்பார்வை செய்ய உள்ளூர் முகவர்கள் நியமனம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது. 46 ஆண்டுகள் கடந்த பின்னர், இந்த ஒழுங்காற்று முறை போதுமான செயல் திறன் இல்லாததாக உள்ளது என்று இந்து தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் காரணமாக, இந்த ஒழுங்காற்று முறை கைவிடப்பட்டு சமய கட்டளைகள் சட்டம் 1863 (சட்டம் XX/1863) இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின்கீழ் திருக்கோயில்களைக் கண்காணிப்பதற்காக உள்ளூர் குழுக்கள் நியமிக்க வழிவகை செய்யப்பட்டது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த சட்டமும் திறனற்றதாக இருந்தது.

2.5. இதனைத் தொடர்ந்து, 1908 உரிமையியல் விசாரணை முறைச் சட்டம், பிரிவு 92 உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. திருக்கோயில்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கக் கூடிய மைய முகமைகளாக உரிமையியல் நீதிமன்றங்கள் விளங்கின. உரிமையியல் மன்றங்களில் வழக்கு நடத்தும் நடைமுறை மந்தமாகவும் கடினமாகவும் இருந்த நிலையில், திருக்கோயில் நிருவாகத்திடம் இருந்த அபரிமிதமான வளங்கள் திருக்கோயில்களின் பெரும்பாலான சொத்துகள் தனியார் வசம் சென்றதைக் காணமுடிந்தது. திருக்கோயில்களின் மதிப்புமிக்க சொத்துகள் குறித்து ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை. அதனால் மதராஸ் மாகாண சட்ட மேலவையிலும் இம்பீரியல் சட்டமன்றத்திலும் திருக்கோயில்களில் நடக்கும் நிருவாகச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கும் களைவதற்கும் தனிநபர் மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

2.6. நீதிக் கட்சி ஆட்சியின் போது, முன்னோடிச் சட்டமாக, 1927 மதராஸ் இந்து சமய அறக்கொடைகள் சட்டம்

2023 ஏப்ரல் 19]

இயற்றப்பட்டு திருக்கோயில்களுக்குச் செயல் அலுவலர்கள் நியமனம் செய்யும் வகையில் 'மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம்' அமைக்கப்பட்டது. இச்சட்டத்திற்குச் சமுதாயத்தில் ஏற்கெனவே வலுவாக இருந்த அமைப்புகளிடமிருந்து பல எதிர்ப்புகள் எழுந்தன. மதராஸ் மாகாணத்தில் அப்போதைய முதல்வர் பனகல் ராஜா சர் பனங்கட்டி இராமராயனிங்கர் அப்போதைய ஆங்கிலேய வைசிராய் இர்வின் பிரபு அவர்களிடம் சட்டத்தின் அவசியத்தை ஏற்றுக்கொள்ளச் செய்து ஒப்புதலைப் பெற்றார்.

2.7. பின்னர், சட்டங்கள் I/1928, V/1929, IV/1930, XI/1931, XI/1934, XII/1935, XX/1938, XXII/1939, V/1944, X/1946, V/1947 *ஆகியன இயற்றப்பட்டன. 1950 ஆம் ஆண்டு, திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துகள் மற்றும் நிதி தவறாகப் பயன்படுத்துவது குறித்துப் பல்வேறு புகார்கள் குடிமக்களிடமிருந்து வந்தனவாக திரு. சி.ஆர். தாஸ் அவர்களின் தலைமையிலான சட்ட ஆணையம் குறிப்பிட்டது. தனது வரம்பிற்குள் இல்லையென்றாலும் முறைகேட்டைக் கட்டுப்படுத்தவும் வரன்முறை செய்யவும் சட்டம் இயற்றலாம் என்று சட்ட ஆணையம் பரிந்துரை செய்தது.*

2.8. 1951 ஆம் ஆண்டில் மதராஸ் இந்து சமய மற்றும் அறக்கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டு, ஆணையரைத் தலைவராகக் கொண்டு பல நிலைகளில் அலுவலர்களுக்கு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை உருவாக்கப்பட்டது. இந்து கோயில்கள் மற்றும் மடங்களின் மதச்சார்பற்ற விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் இத்துறைக்கு வழங்கப்பட்டது. திருக்கோயில் பணியாளர்களில் பரம்பரை முறை ஒழிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புகள் வகுக்கப்பட்டன. இந்த சட்டத்தைப் பல்வேறு ஆர்வமுள்ள அமைப்புகள் எதிர்த்தன. பல்வேறு நீதிமன்றங்களில் நீண்டகாலமாக நடந்த வழக்கினைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் ஷிரூர் மடம் வழக்கில் இந்த சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கது என அறிவித்துச் சில பிரிவுகளை மட்டும் நீக்கியது.

2.9. இந்நிலையில் முன் வகுத்த அனைத்துச் சட்டங்களையும் நீக்கிவிட்டு இறுதியாக தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தை 1959 ஆம் ஆண்டு தமிழக அரசு

[2023 ஏப்ரல் 19

நிறைவேற்றியது. புது சட்டத்தின் வரைவைச் சட்ட மன்றத்தில் அறிமுகப்படுத்தும் போது திருக்கோயில்களின் சொத்துகள் சட்ட விரோதமாக திருக்கோயில்களின் அறங்காவலர்கள் பெயர்களிலும் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் பெயர்களிலும் மாற்றப்பட்டு 600-க்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ளன என்று அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குறிப்பிடப்பட்டது.

இந்து சமய அறநிலையங்கள் ஆணையம் (1960 – 1962)

3. இந்து சமய அறநிலையங்கள் தொடர்புடைய பொருண்மைகள் குறித்து விசாரிப்பதற்காக இந்திய அரசாங்கம் இந்து சமய அறநிலையங்கள் ஆணையத்தை அமைத்தது. இந்த ஆணையத்தில் இடம் பெற்றிருந்த உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:-

தலைவர்

டாக்டர். C.P. இராமசுவாமி ஐயர்

உறுப்பினர்கள்

1. *ஸ்ரீசங்கர்சரண், ஓய்வுபெற்ற நீதிபதி, அலகாபாத் உயர்நீதிமன்றம்*
2. *ஸ்ரீமகாபிர் பிரசாத், தலைமை வழக்குரைஞர், பீகார்*
3. *சுவாமி ஹரிநாராயண் ஆனந்த், பொதுச் செயலாளர், பாரத் சாது சமாஜ்*
4. *ஸ்ரீ P. காமேஸ்வர ராவ், ஓய்வு பெற்ற ஆணையர், இந்து சமய அறநிலைய வாரியம், சென்னை*
5. *ஸ்ரீ கே. வேங்கட சுவாமி நாயுடு, வழக்குரைஞர், சென்னை*
6. *திரு. கே.சி. சென், ஓய்வு பெற்ற நீதிபதி, மும்பை உயர் நீதிமன்றம்*

குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ள பரிந்துரைகள்

1. இந்து சமய அறநிலையங்களை நிருவகிக்க தனிச் சட்டங்கள் இல்லாத அசாம், பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இதற்காக விரைந்து உரிய சட்டத்தை இயற்ற வேண்டும்.

2023 ஏப்ரல் 19]

2. இந்தியாவில் உள்ள அனைத்து சமூகத்தினருக்கான அறநிலையங்களை நிருவகிக்க மற்றும் மேலாண்மை செய்ய ஒரே மாதிரியான சட்டத்தை மத்திய அரசு அமலுக்கு கொண்டு வரவேண்டும்.

3. அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு ஆகமங்கள், அர்ச்சனைகள், பூசை முறைகள், சடங்குகள் போன்றவற்றை போதித்திட பள்ளிகள் அல்லது நிறுவனங்களை ஒவ்வொரு மாநிலமும் அமைக்க வேண்டும்.

4. சமய அறநிலையங்களைக் கண்காணிக்க சட்டப்படியான அமைப்புகள் இல்லாத அனைத்து மாநிலங்களிலும், அறங்காவலர்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த சட்டங்கள் அமலில் உள்ள மாநிலங்களில் உள்ளது போன்ற அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

5. 1959 ஆம் ஆண்டு சென்னை இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தில் பிரிவு 97-ல் வழங்கப்பட்டுள்ளபடி ஒரு பொது நல நிதி உருவாக்கிக் கொள்ளலாம்.

தற்போது ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி, ராஜஸ்தான், பீகார், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் இந்து சமய அறநிலையங்கள் தொடர்பான சட்டங்கள் உள்ளன. வெளிநாடுகளில், மலேசியாவில் 1906-ல் இயற்றப்பட்ட இந்து சமய அறநிலையச் சட்டம் உள்ளது மற்றும் சிங்கப்பூரில் 1968-ல் இயற்றப்பட்ட இந்து சமய அறநிலையச் சட்டம் உள்ளது.

சட்டம் மற்றும் நிருவாக அமைப்பு

தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959

4. இத்துறைக்கு ஆணையர் தலைவராக உள்ளார். பல்வேறு நிலைகளில் குறிப்பிட்ட ஆட்சி எல்லைகள் கொண்ட அதிகாரம் பெற்ற சார்நிலை அலுவலர்கள் ஆணையரின் தலைமையின்கீழ் பணியாற்றி வருகின்றனர். இந்தச் சட்டத்தின் அதிகார வரம்பு, சமண சமய மற்றும் அறநிறுவனங்களுக்கும் பொருந்தும் வகையில் வரையறுக்கப்பட்டது.

[2023 ஏப்ரல் 19

4.1. இந்தச் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகள் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களின் உரிமைகளையும், கடமைகளையும் விளக்கியுள்ளது. இந்து சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் நிருவாகத்திற்குத் தேவையான சட்டப்படியான வழிமுறைகளை வழங்கியுள்ளது. இந்து சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் நிதிநிலையை மேம்படுத்தவும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் பல்வேறு வழிமுறைகளை இந்த சட்டம் தெளிவுபடுத்துகிறது.

இந்து சமய நிறுவனங்கள்

5. இந்து சமய அறநிலையத் துறை நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் 45,809 அற நிறுவனங்கள் உள்ளன. இத்துறை ஆளுகையின்கீழ் உள்ள வழிபாட்டுத்தலங்கள், திருமடங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகிய நிறுவனங்களுக்கு அவற்றின் புவியியல் அமைவிடத்தினைச் சார்ந்த அட்ச, தீர்க்க ரேகைகளின் அடிப்படையில் புவி அமைவிட குறியீடு எண் வழங்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு I)

5.1. உபதிருக்கோயில்கள், கன்னியாகுமரி தேவசம் போர்டு சார்ந்த இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள், புதுக்கோட்டை சமஸ்தானம், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், சிவகங்கை சமஸ்தானம் மற்றும் இராமநாதபுரம் சமஸ்தானம் நிருவாகத்தில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகள் மேற்சொன்ன மொத்தத் திருக்கோயில்களின் எண்ணிக்கையை உயர்த்திக் காட்டுவனவாக உள்ளன.

இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு

6. இந்து சமய நிறுவனங்கள் அதன் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில், பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. பட்டியல் இணைப்பு II-ல் வழங்கப்பட்டுள்ளது.

6.1. துணை கோயில்களும், கன்னியாகுமரி தேவசம் போர்டு, புதுக்கோட்டை சமஸ்தானம், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், சிவகங்கை சமஸ்தானம் மற்றும் இராமநாதபுரம் சமஸ்தானம் ஆகியவற்றின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்களும் மேற்கண்ட வகைப்பாட்டினுள் அடங்கும்.

2023 ஏப்ரல் 19]

உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம்

7. சட்டப்பிரிவு 92(1)-ன்கீழ் உதவித் தொகையும், சட்டப்பிரிவு 92(2)-ன்கீழ் தணிக்கைக் கட்டணமும் சமய நிறுவனங்களிடமிருந்து இந்து சமய அறநிலையத் துறையின் உதவி ஆணையர்கள் வழியாக பெறப்பட்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் நிருவாக நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டண விகிதங்களின் அளவுப் பட்டியல் இணைப்பு III-ல் வழங்கப்பட்டுள்ளது.

நிருவாகக் கட்டமைப்பு

8. சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறைப்படுத்தவும் மற்றும் மேற்பார்வையிடவும், 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின்கீழ் இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகத் தலைவராக ஆணையர் உள்ளார்.

8.1. இந்து சமய அறநிலையத் துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மேலாண்மை, திருப்பணி, நீதிமன்ற வழக்குகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக ஆணையர் அலுவலகத்தில் பல்வேறு அலுவலர்கள் பணிபுரிகின்றனர். ஆணையர் அலுவலகத்தின் துறை அலுவலர்களின் பட்டியல் இணைப்பு IV-ல் வழங்கப்பட்டுள்ளது.

8.2. ஆணையர் அலுவலகத்தில் மாற்றுப் பணியில் பணிபுரியும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல் இணைப்பு V-ல் வழங்கப்பட்டுள்ளது.

8.3. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான நிலங்களின் விவரங்களை தேசிய தகவல் மையம் மூலம் வருவாய்த் துறை தமிழ் நில ஆவணங்களுடன் சரிபார்த்து ஒப்புநோக்கும் பணிகள், கணினி சிட்டா தயாரிப்பின்போது தனிநபர் பெயரில் திருக்கோயில் நிலங்கள் தவறுதலாக பட்டா மாறுதல் செய்யப்பட்ட இனங்கள் குறித்து மேல்முறையீடு மேற்கொள்ளவும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை நேரடியாக அளவீடு செய்திடும் பணியில் உரிமம் பெற்ற நில அளவர்கள் அளித்திடும் அறிக்கைகளை சரிபார்த்து அவற்றை உறுதி செய்திடவும், துறை கட்டுப்பாட்டில் உள்ள

[2023 ஏப்ரல் 19

திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை மேலாண்மை செய்வது தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், ஆணையர் அலுவலகத்தில் 4 துணை ஆட்சியர் பணியிடங்களும் மற்றும் 4 வட்டத் துணை ஆய்வாளர் பணியிடங்களும் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. துணை ஆட்சியர் பணியிடங்கள் வருவாய்த் துறையிலிருந்தும், வட்டத் துணை ஆய்வர் பணியிடங்கள் நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையிலிருந்தும் மாற்றுப் பணி மூலம் நியமனம் செய்து கொள்ளவும் ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

8.4. மேலும், திருக்கோயில் நிலங்களைப் பாதுகாத்து மீட்பதற்கு ஒவ்வொரு உதவி ஆணையர் அலுவலகத்திற்கும் ஒரு சிறப்பு வட்டாட்சியர் மற்றும் அதன் துணைப் பணியிடங்களாகத் தலா ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணியாற்றி வருகின்றனர்.

மண்டல மற்றும் கோட்ட அளவிலான நிருவாகம்

9. இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகம் மாநில அளவில் 20 மண்டலங்களையும், 36 கோட்டங்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் இணை ஆணையரும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு நிருவாகம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்களின் வட்டார ஆளுகை எல்லை குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல் இணைப்பு VI-ல் வழங்கப்பட்டுள்ளது.

இணை ஆணையரின் பணிகள்

10. இந்து சமய அறநிலையத் துறையில் மண்டல அலுவலராக இணை ஆணையர் உள்ளார். சட்டப்பிரிவு 46-ன்கீழ் வெளியிடப்பட்ட இந்து சமய அறநிறுவனங்கள் இணை ஆணையரின் ஆளுகையின்கீழ் உள்ளன. சட்டப்பிரிவு 46(i)-ன்கீழ் வெளியிடப்பட்ட சமய நிறுவனங்களுக்குப் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிக்கவும், சமய நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டத்தினை அங்கீகரிக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

10.1. சட்டப்பிரிவு 63-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள வரம்புகளின் அடிப்படையில் மனுக்களை விசாரித்து முடிவு எடுக்கவும்,

2023 ஏப்ரல் 19]

சட்டப்பிரிவு 64-ன்கீழ் எந்தவொரு சமய நிறுவனத்திற்கும் நிருவாகத் திட்டம் வகுக்கவும் சட்டப்பிரிவு 21A-ன்கீழ் உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை சீராய்வு செய்திடவும் சட்டப்பிரிவு 46(i)-ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட சமய நிறுவனங்களில் தவறிழைக்கும் அறங்காவலர்களை சட்டப்பிரிவு 53-ன்கீழ் பணியிடை நீக்கம், பணி நீக்கம் அல்லது பணியறவு செய்யவும் இணை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

10.2. சட்டப்பிரிவு 54-ன்கீழ் பரம்பரை அறங்காவலர் பதவியில் ஏற்படும் காலியிடத்திற்கு வாரிசுதாரரை அங்கீகரித்துப் பதிவு செய்து கொள்ளவும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளைச் சட்டப்பிரிவு 78-ன்கீழ் விசாரித்து வெளியேற்றுவதற்கு உத்தரவிடவும் மேலும், அவ்வப்போது ஆணையரால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் இணை ஆணையருக்கு உள்ளது.

உதவி ஆணையரின் பணிகள்

11. இந்து சமய அறநிலையத் துறையில் உதவி ஆணையர் என்பவர் ஒரு மாவட்ட நிலை அலுவலராவார். சட்டப்பிரிவு 46-ன்கீழ் வெளியிடப்படாத இந்து சமய நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரமும், பட்டியலைச் சாராத சமய நிறுவனங்களுக்கு வரவு செலவுத் திட்ட அங்கீகாரம் மற்றும் பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமனம் குறித்து ஆணை பிறப்பிக்கவும், சமய நிறுவனங்கள் தொடர்பாகப் புகார்கள் வரப்பெறின் அவற்றின் மீது விசாரணை மேற்கொண்டு துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவர முதல் அறிக்கை அளிக்கும் அதிகாரம் உதவி ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளன.

11.1. சட்டப்பிரிவு 92-ன்கீழ் உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணங்களை வசூல் செய்வதற்காக சமய நிறுவனங்களை உதவி ஆணையர் மதிப்பீடு செய்து அதனை ஆணையருக்கு அறிக்கையாக வழங்குவார். மேலும், அவர் சட்டப்பிரிவுகள் 93 மற்றும் 102-ன்கீழ் சட்ட நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவுத் தொகைகளை வசூல் செய்து, தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதிக் கணக்கில் செலுத்திடவும், ஆணையரால் அவ்வப்போது

[2023 ஏப்ரல் 19

ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் உதவி ஆணையருக்கு உள்ளது.

ஆய்வரின் பணிகள்

12. இந்து சமய அறநிலையத் துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவி புரிய வட்ட அளவில் 264 ஆய்வர் பணியிடங்கள், துறை சார்ந்த வழக்குகளைக் கையாள 29 வழக்கு ஆய்வர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. தலைமையிட நிருவாக நலனை மேம்படுத்தும் பொருட்டு கோட்ட அளவில் இயங்கிவந்த 10 ஆய்வர் பணியிடங்கள் ஆணையர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

12.1. சமய நிறுவனங்கள் தொடர்பாக வரப்பெறும் புகார்கள் மீது விசாரணை மேற்கொண்டு, துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவர முதல் அறிக்கையை உதவி ஆணையருக்கு அளிப்பதும் சமய நிறுவனங்களைக் காலமுறைப்படி ஆய்வு மேற்கொள்வதும், உதவித் தொகை, தணிக்கைக் கட்டணம், பரிசீலனைக் கட்டணம் மற்றும் நீதிமன்றங்களால் விதிக்கப்படும் செலவு தொகைகளை வசூல் செய்வதும் ஆய்வரின் பணிகளாகும்.

12.2. சமய நிறுவனங்களால் தயாரித்து அளிக்கப்பட்ட சொத்துப் பதிவேடு, திட்டப் பதிவேடு மற்றும் மரப் பதிவேடு ஆகியவற்றைப் பெற்று, அவற்றைச் சரிபார்த்து உதவி ஆணையரின் ஒப்புதலுக்கு அளித்தல், இத்துறை அலுவலர்களிடமிருந்து வரப்பெறும் அனைத்து மனுக்கள் மற்றும் குறிப்புகளின்மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளித்தல், அறங்காவலர்கள் நியமனத்திற்கான விண்ணப்பங்களை விசாரித்து சரிபார்த்து அறிக்கை அனுப்புதல், ஏலம், ஒப்பந்தப்புள்ளி திறப்பு, உண்டியல் திறப்பு போன்றவற்றைக் கண்காணித்தல், துறை ஆளுகையின்கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்கு உதவித் தொகை நிர்ணயம் செய்வதற்காக அவற்றின் வரவு செலவு பட்டியல்களைச் சரிபார்த்து அறிக்கை அளித்தல், உயர் அதிகாரிகளால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியனவும் ஆய்வரின் பணிகளாகும்.

சரிபார்ப்பு அலுவலர்கள்

13. சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலை உயர்ந்த பொருட்கள் தொடர்பான அறிக்கைகளைச் சரிபார்த்திட தலைமையிடத்தில் இணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலர் உள்ளார். சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களைச் சரிபார்த்து மதிப்பீடு அறிக்கை தயாரித்திட ஏதுவாக துணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலரை மண்டல இணை ஆணையர் கொண்டுள்ளார். மேற்கண்ட வழிமுறையில், தங்கம், வெள்ளி மற்றும் வைர மதிப்பீட்டு நிபுணர் ஒருவரும் இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரும் அவர்களுக்கு உதவுகின்றனர். அவர்களுக்கு ஒதுக்கப்படும் சிறப்பு பணிகளுக்கும் பொறுப்புடையவர்கள் ஆவர்.

பொறியியல் பிரிவு

14. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீடுகளைக் கூர்ந்தாய்வு செய்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடுகளைக் குறித்தல், குறிக்கப்பட்ட அளவீடுகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளைப் பொறியாளர்கள் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் மேற்கொள்கின்றனர். இதற்காக இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 226 பணியிடங்கள் கொண்ட திருக்கோயில் புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல் பணிக்கான பணித் தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு குறித்த விவரப்பட்டியல் இணைப்பு VII-ல் வழங்கப்பட்டுள்ளது.

(i) பாரம்பரியமிக்க திருக்கோயில்களைப் புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல் பணி மேற்கொள்ளும் போது கருத்து வழங்குவதற்காக இந்திய தொல்லியல் துறையில் அலுவலர்களாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களில் 19 பேர் ஒப்பந்த அடிப்படையில் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ii) திருக்கோயில் திருக்குளங்களைப் பராமரித்துப் பேணுவதற்காகப் பொதுப் பணித் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்கள் திருக்கோயில் திருக்குள ஆலோசகர்களாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

[2023 ஏப்ரல் 19

துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்காக புதிய ஊர்திகள் கொள்முதல்

15. 2021-2022 ஆம் நிதி ஆண்டிற்கான சட்டப் பேரவை அறிவிப்பின்படி, ரூ.8 கோடி செலவில் 108 ஊர்திகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கரங்களால் அலுவலர்களுக்கு துறைப் பணிகளில் மேம்பாடான செயல்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டன.

திருக்கோயில் நிருவாகம்

16. ஒவ்வொரு சமய அறநிறுவனங்களும் அதன் நிருவாக அடிப்படையில் தனித் தன்மை கொண்டதாக விளங்குவதோடு அறங்காவலர்களால் நிருவகிக்கப்பட்டு அதற்கான பணியாளர்களை அவர்களே நியமித்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். எனினும், இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 45(1) மற்றும் அப்பிரிவின்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி செயல் அலுவலரை நியமிக்கும் அதிகாரம் ஆணையருக்கு உள்ளது.

செயல் அலுவலர்கள்

17. திருக்கோயில்களின் வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துகள், அவற்றின் முக்கியத்துவம், பணிச்சுமை மற்றும் இதர பணிகளைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மையுடன் நிருவகிக்க 668 செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. செயல் அலுவலர்கள் குறித்த விவரப்பட்டியல் இணைப்பு VIII-ல் வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் பொறியியல் பிரிவு

18. முக்கிய திருக்கோயில்களில் கோயில்களைப் பழமை மாறாமல் பாதுகாத்தல், பழுதுபார்த்தல், புதுப்பித்தல், சீரமைத்தல் மற்றும் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கென பொறியியல் பிரிவு தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருமடங்கள்

19. முன்பு 56 திருமடங்கள் இந்து சமய அறநிலையத் துறையின் மேற்பார்வையின்கீழ் இருந்து வந்துள்ளன. தற்போது

2023 ஏப்ரல் 19]

45 திருமடங்கள் மட்டுமே உள்ளன. மீதமுள்ள 11 திருமடங்கள், தங்களுடைய தனித் தன்மையினை இழந்துவிட்ட காரணத்தால் அவை திருக்கோயில்கள் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் 45 திருமடங்களுள் சைவ நெறியை வளர்க்கும் பணியில் மதுரை ஆதீனம் என்றழைக்கப்படும் திருஞானசம்பந்தர் சுவாமிகள் மடம், திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், பேரூர் ஆதீனம் போன்றவையும், வைணவ நெறியை வளர்க்கும் பணியில் அகோபில மடம், வானமாமலை மடம், திருக்குறுங்குடி ஜீயர் மடம், எம்பார் ஜீயர் மடம் போன்றவையும், அத்வைத நெறியை வளர்க்கும் பணியில் காஞ்சிபுரம் சங்கர மடமும் தொன்றுதொட்டு தொண்டாற்றி வருகின்றன.

19.1. இறை வழிபாட்டுக்குரிய புகழ்மிக்கதொரு மொழியாக தமிழ் மொழியினை மேம்படுத்தியதில் திருமடங்களின் பங்களிப்பு மதிப்பிட முடியாததாகும். தலைமுறை தலைமுறையாக சங்க இலக்கியத்தைப் படித்துப் பயன்பெறுவதற்கு ஏதுவாக திருமடங்கள் தமிழ் ஓலைச் சுவடிகளைத் தளரா ஊக்கத்துடன் பாதுகாத்து வந்துள்ளனர். உலகிலேயே மிகப் பழமையான மொழியாகிய தமிழின் ஓலைச் சுவடிகளைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் சமயத்தைப் பின்பற்றுவோருடைய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் திருமடங்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. இவ்வாறு மடங்கள் இலக்கிய சுவடிகளைப் பாதுகாக்கும் முயற்சி எடுக்காமல் இருந்திருந்தால், சுவடிகள் கிடைக்காமல் இருந்திருக்கும்.

19.2. சைவ போற்றி பாடல்களான பன்னிரு திருமுறைகளைப் பலமுறை பதிப்பித்து வெளியிட்டு திருமடங்கள் சமுதாயத்திற்கு மிக முக்கிய தொண்டாற்றி வருகின்றன.

19.3. மேலும், திருமடங்கள் சமயத்தைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு நற்பண்புகளையும், நல்லொழுக்கத்தையும் மக்கள் மனதில் விதைத்து ஒரு பொறுப்புள்ள சமுதாயத்திற்கு வழிவகுக்கின்றன. திருமடங்கள் மற்ற கல்வி நிறுவனங்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் உதாரணமாகவும் விளங்கக்கூடிய கல்வி நிறுவனங்களை நடத்தி வருகின்றன. அக்கல்வி நிறுவனங்கள் சிறந்த கல்வியாளர்கள் மற்றும் சிறந்த பண்பாளர்களை உருவாக்க உதவியாக உள்ளன. திருமடங்களின் பங்களிப்பு சிறந்த கல்வியாளர்களை வளர்ப்பதிலும் பண்பட்ட எதிர்காலச் சந்ததிகளை உருவாக்குவதிலும் ஆற்றும் பணி அளவிட முடியாதது ஆகும்.

[2023 ஏப்ரல் 19

19.4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உள்ள ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாக மடாதிபதிகளான தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், ஸ்ரீமத் வராக மகா தேசிகன், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் முதலானவர்கள் இடம் பெற்று திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கும், மேலாண்மைக்கும் மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கி முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை

20. இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் பிரிவு 87(3)-ன்கீழ் ஆண்டு வருமானம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மிகுதியாக பெறும் திருக்கோயில்கள் கணக்குகளை உடனிகழ் (concurrent) தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், ரூ.1,000/-த்திற்கும் அதிகமாக வருமானம் பெறும் திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதற்கான தணிக்கை அறிக்கைகள் சட்டப்பிரிவு 88-ன்கீழ் உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தணிக்கைப் பணிக்காக திருக்கோயிலின் உதவித் தொகை நிர்ணய வருவாயிலிருந்து சட்டப் பிரிவு 92(2)-ன்படி 1.5 விழுக்காடு முதல் 4 விழுக்காடு வரை தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

20.1. தணிக்கையாளர்கள் சுதந்திரமாகத் தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் விரைவாகத் தணிக்கைத் தடைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டும் அரசாணை (நிலை) எண் 181, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 2.2) துறை, நாள் 25.11.2021-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டவாறு, இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து தணிக்கைப் பிரிவு பிரிக்கப்பட்டு, நிதித் துறையின்கீழ் தனிப் பிரிவாகத் தணிக்கைத் துறை செயல்பட்டு வருகிறது.

20.2. உள்ளாட்சி நிதித் தணிக்கையில் மேற்கொள்வது போல் இத்துறையிலும் தணிக்கைத் தடைகளில் தீர்வு காணும் பொருட்டு தணிக்கைக் குழுக்களில் 3 நிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]

இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, சட்டப்பிரிவு 87-ன்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளில் இதற்காக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலோசனைக் குழு

21. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959-ல் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்குழு அரசாணை (நிலை) எண் 04, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4.2) துறை, நாள் 06.01.2022-ல் அமைக்கப்பட்டுள்ளது,

இக்குழுவில் தற்போது இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:-

அலுவல்சார் உறுப்பினர்கள்

வ. எண்	பதவி	பெயர்
1	தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்	திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
2	துணைத் தலைவர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்	திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்
3	உறுப்பினர் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர்	டாக்டர். சந்திரமோகன். B. இ.ஆ.ப.
4	உறுப்பினர்-செயலர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர்	திரு.க.வீ.முரளீதரன், இ.ஆ.ப.

[2023 ஏப்ரல் 19

அலுவல் சாரா உறுப்பினர்கள்

வ. எண்	பெயர்
1	தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
2	ஶ்ரீமத் வராக மகா தேசிகன்
3	ஶ்ரீலஶ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
4	முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்
5	நீதியரசர் திரு.டி.மதிவாணன் (ஓய்வு)
6	திரு. சுகி சிவம்
7	திரு. கருமுத்து தி.கண்ணன்
8	முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார்
9	திரு. என்.ராம சுப்பிரமணியன்
10	திரு. தரணிபதி ராஜ்குமார்
11	திரு. மல்லிகார்ஜுன் சந்தான கிருஷ்ணன்
12	திருமதி ஶ்ரீமதி சிவசங்கர்
13	திருமதி தேச மங்கையர்க்கரசி

21.1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 20.01.2022 அன்று நடைபெற்ற ஆலோசனைக் குழு கூட்டத்தில் 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த தீர்மானங்களை திருக்கோயில்களில் அமல்படுத்தும் பொருட்டு துறை அலுவலர்கள், குறிப்பிட்ட புலம் சார்ந்த வல்லுநர்கள் மற்றும் ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றுள்ள அலுவல் சாரா உறுப்பினர்கள் இந்த தீர்மானங்களில் இடம் பெற்றுள்ள பொருண்மைகளுக்குச் செயல் வடிவம் தரும் வகையில் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]

வ. எண்	பொருண்மை	அலுவல் சாரா உறுப்பினர்
1.	அறங்காவலர்கள் நியமனம் செய்திட அமைக்கப்படும் மாநில குழுவிற்கு, ஆலோசனைக் குழுவிலிருந்து மூன்று உறுப்பினர்களை நியமனம் செய்தல்	1. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் 2. திரு. தரணிபதி ராஜ்குமார் 3. திருமதி தேச மங்கையர்க்கரசி 4. கூடுதல் ஆணையர் (விசாரணை)
2.	தல புராணம்/தல வரலாறு ஆவணப்படுத்துதல் மற்றும் வெளியிடுதல்	1. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் 2. ஸ்ரீமத் வராக மகா தேசிகன் 3. கூடுதல் ஆணையர் (கல்வி)
3.	ஓலைச்சுவடிகள்/செப்பேடுகள்/ அரிய புத்தகங்கள் பாதுகாத்திடல்	1. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 2. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் 3. கூடுதல் ஆணையர் (கல்வி)
4.	பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்துதல்	1. முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் 2. திரு. கருமுத்து தி.கண்ணன் 3. கூடுதல் ஆணையர் (கல்வி)

வ. எண்	பொருண்மை	அலுவல் சாரா உறுப்பினர்
5.	இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959—ல் திருத்தங்களைப் பரிந்துரைத்தல்	1. நீதியரசர் டி. மதிவாணன் (ஓய்வு) 2. இணை ஆணையர் (சட்டச் சேர்மம்)
6.	ஆகம நூல்களை ஆவணப்படுத்துதல் மற்றும் வெளியிடுதல்	1. திரு. சு.கி. சிவம் 2. முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் 3. கூடுதல் ஆணையர் (கல்வி)
7.	ஆன்மிகச் சொற்பொழிவுகள் மற்றும் வகுப்புகள் நடத்துதல்	1. திரு. ந.இராம சுப்பிரமணியன் 2. திருமதி தேச மங்கையர்க்கரசி 3. கூடுதல் ஆணையர் (விசாரணை)
8.	திருக்கோயில் சேவைகளைக் கணினி மயமாக்குதல்	1. திரு. தரணிபதி ராஜ்குமார் 2. திருமதி. ஸ்ரீமதி சிவசங்கர் 3. கூடுதல் ஆணையர் (விசாரணை)
9.	திருக்கோயில்களில் நிதி மேலாண்மையினை மேம்படுத்துதல்	1. திரு. மல்லிகார்ஜுன் சந்தான கிருஷ்ணன் 2. கூடுதல் ஆணையர் (விசாரணை)

மாவட்ட குழு

22. 1959 இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 7A-ன்படி இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், பிரிவு 46(i), 46(ii) மற்றும் 49(1)-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள

2023 ஏப்ரல் 19]

ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க மூன்றுக்கு குறையாத ஐந்துக்கு மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட குழு அரசால் அமைக்கப்படும். சட்ட விதிகளின்படி, சமய நிறுவனங்களுக்கான பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்களை நியமனம் செய்வதற்காக தகுதிவாய்ந்தோரின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை இக்குழு தயாரிக்கும். மாவட்ட குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும். அவ்வகையில் இதுநாள் வரை 28 வருவாய் மாவட்டத்திற்கு மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அறங்காவலர்கள் நியமனம்

23. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 47-ன்படி இந்து சமய அறநிறுவனங்களை நிருவகிக்க பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் மூன்று அறங்காவலர்களுக்கு குறையாமலும் ஐந்து அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். இக்குழுவில் பட்டியல் இனத்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும், பெண் உறுப்பினர் ஒருவரும் இடம்பெற வேண்டும். இக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டாண்டுகள் ஆகும். இதுவரை 780 திருக்கோயில்களுக்கு அறங்காவலர் குழு நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறங்காவலர் நியமனத் தகுதிகள்

24. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 25A-*ன்கீழ் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் செய்யப்படுவதற்கு கீழ்க்காணும் தகுதி வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:-*

அ. கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்;

ஆ. நன்னடத்தை மற்றும் நற்பெயர் கொண்டவராக இருத்தல் வேண்டும். மேலும் சமய நிறுவனம் அமைந்துள்ள பகுதியில் மரியாதைக்குரியவராக இருத்தல் வேண்டும்;

இ. திருக்கோயில் அறங்காவலர் பணியினை செய்வதற்கு தேவையான நேரத்தையும் ஆர்வத்தையும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

அறங்காவலர்களை நியமிப்பதற்கான அதிகாரம்

25. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 49(1)-ன்படி, ரூ.10,000/-க்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட உதவி ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

25.1. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(i)-ன்கீழ் உள்ள, ரூ.10,000/-க்கு குறையாமல் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட இணை ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

25.2. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(ii)-ன்கீழ் உள்ள, ரூ.2 இலட்சத்திற்கு குறையாமல் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

25.3. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் உள்ள, ரூ.10 இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு ஐந்து பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்கள் கொண்ட அறங்காவலர் குழுவை அமைத்திடும் அதிகாரம் அரசிடம் உள்ளது.

25.4. ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்களுக்கும் கூடுதலாக தேவைப்படின் இரண்டு நபர்களை அறங்காவலர் குழுவின் உறுப்பினர்களாக அரசு நியமிக்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

தக்கார் நியமனம்

26. அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அல்லது தற்காலிகமாக காலியிடம் ஏற்படும்பொழுது அரசு, ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அதிகாரவரம்பிற்குட்பட்டு அடுத்த அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும் வரை, திருக்கோயிலின் அறங்காவலருக்குரிய கடமைகளை செய்திட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

மாநிலக் குழு

27. சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட திருக்கோயில்களுக்கு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் நியமனம் செய்யப்படும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் விண்ணப்பதாரர்களில் இருந்து அறங்காவலர்களை தெரிவு செய்து, பெயர்ப் பட்டியல் அளித்திட குன்றக்குடி ஆதீன கர்த்தர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களின் தலைமையின்கீழ் மாநிலக் குழு அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 49, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி3-1) துறை, நாள் 30.03.2022).

இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்களின் நிருவாகம்

நில விவரங்கள்

28. இந்து சமய மற்றும் அறநிறுவனங்கள் மிகப் பெரிய பரப்புக் கொண்ட வேளாண் நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ளன.

திருக்கோயில் நிலங்களின் வகைப்பாடு மற்றும் பரப்பளவு:-

நிலத்தின் வகைப்பாடு	திருக்கோயில் நிலங்கள்	திருமடம் நிலங்கள்	மொத்த நிலங்கள்
	ஏக்கர் இலட்சத்தில்		
நன்செய்	1.83	0.21	2.04
புன்செய்	2.18	0.35	2.53
மானாவாரி	0.21	இல்லை	0.21
கூடுதல்	4.22	0.56	4.78 *

[2023 ஏப்ரல் 19

*திருக்கோயில் நிலங்களின் வகைப்பாடு மற்றும் பரப்பளவில் சில குறைபாடுகள் இருப்பதைக் கண்டறிந்த காரணத்தால் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் சரிபார்ப்பு மற்றும் ஒப்புநோக்குதல் செய்யும் பொருட்டு சரிபார்ப்பு மற்றும் ஒப்பு நோக்குதல் குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டு ஒப்பு நோக்குதல் பணி நடைபெற்று வருகிறது.

29. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நில விவரங்கள் வருவாய்த் துறையின் ”தமிழ் நிலம்” வலைதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள பதிவுகளோடு ஒப்புநோக்குதல் மற்றும் சரிபார்த்தல் பணியானது தற்போது நடைபெற்று வருகிறது. இந்தப் பணி இந்து சமய அறநிலையத் துறை சார்நிலை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில், மேற்சொல்லப்பட்ட மொத்தப் பரப்பளவு நிலங்களில் 3.43 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலங்கள் வருவாய்த் துறை ஆவணங்களோடு முழுமையாக ஒத்துப்போகும் இனங்கள் (fully matched items) என உறுதி செய்யப்பட்டு மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் 09.06.2021 அன்று இத்துறை இணையதளத்தில் பொது மக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளது.

29.1. மேற்கண்டவாறு நடைபெறும் நில விவரங்கள் ஒப்புநோக்கும் பணியில் பகுதியாக ஒத்துப்போகும் நிலங்கள் (Partially matched) குறித்தும், அதுபோல் தமிழ் நிலப் பதிவில் இல்லாத புதிய இனங்கள் குறித்தும் தொடர்புடைய சமய நிறுவனங்களால் முழுமையாக ஒத்துப்போகும் இனங்களாக மாற்றுவதற்கு வருவாய்த் துறையின் தகுதியான அலுவலர் முன்பு மேல்முறையீடு செய்யப்பட்டு வருகிறது.

29.2. இந்து சமய அறநிலையத் துறையின் நிலங்கள் தொடர்பான தரவுத் தளத்துடன் (data base) வருவாய்த் துறையின் ”தமிழ் நிலம்” வலைதளத்துடன் ஒப்பு நோக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்த ஒப்பு நோக்குதல் மூலமாக அறியப்படும் விவரங்கள் இந்து சமய அறநிலையத் துறை தரவு தளத்தில் சரிபார்த்துப் பதிவேற்றப்படும்.

29.3. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச்

2023 ஏப்ரல் 19]

சொத்துக்களைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் ஆகியவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் 2021-2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, இத்துறையின் ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் ஒரு தனி வட்டாட்சியர் வீதம் 36 தனி வட்டாட்சியர்களும் மற்றும் தலைமையிடத்தில் இரு தனி வட்டாட்சியர்களும் இப்பணிக்காக வருவாய்த் துறை மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் திருக்கோயில் நிலங்களைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தனியார் வசமுள்ள நிலங்களை மீட்டெடுத்தல் போன்ற பணிகளில் உதவி புரிவார்கள். இவ்வலுவலர்கள் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகைத் தொகை வசூல் செய்தல், உரிமம் பெற்ற நில அளவீட்டாளர்கள் பணிகளை மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளைக் கண்காணிப்பார்கள். மேலே குறிப்பிடப்பட்ட வட்டாட்சியர்கள் பணிகளை ஆணையர் அலுவலகத்தில் பணியாற்றி வரும் 4 மாவட்ட வருவாய் அலுவலர்களின் கண்காணிப்பின்கீழ் பணியாற்றுகிறார்கள்.

29.4. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான 21933 கட்டடங்களும், 70738 மனைகளும் மற்றும் 39171 விவசாய நிலங்களும் குத்தகை/வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பசலி ஆண்டு 1432-ல் 01.07.2022 முதல் 21.03.2023 வரையிலான காலத்திற்கு மட்டும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான மேற்கண்ட அசையாச் சொத்துகளிலிருந்து, ரூபாய் 117.63 கோடி வாடகையாக வருமானம் ஈட்டப் பெற்றுள்ளது.

நியாய வாடகை நிர்ணயம்

30. இந்து சமய அறநிலையங்கள் சட்டம் 1959 பிரிவு 34A திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய வழிவகை செய்கிறது. மண்டல இணை ஆணையர், திருக்கோயில் செயல் அலுவலர்/அறங்காவலர்/அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் பதிவுத் துறை மாவட்டப் பதிவாளர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு திருக்கோயில்களுக்குச் சொந்தமான வணிகம் மற்றும்

குடியிருப்புகளாகப் பயன்படும் கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யும் பணியில் ஈடுபடுகிறது.

வருவாய் நீதிமன்றங்கள்

31. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், மதுரை, லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. கும்பகோணம், சேலம் மற்றும் தென்காசி ஆகிய இடங்களில் வருவாய் நீதிமன்றங்களின் முகாம் இயங்கி வருகின்றன.

31.1. இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான வேளாண் நிலங்களுக்கு வரவேண்டிய குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யவும், வேளாண் நிலங்களுக்கு குத்தகைத் தொகை நிர்ணயிக்கவும், குத்தகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களை வெளியேற்றவும், 1961-ம் ஆண்டு தமிழ்நாடு பொது பொறுப்புரிமை (வேளாண்மை நிலங்களின் ஒழுங்குமுறை) சட்டத்தின்கீழ், [Tamil Nadu Public Trusts (Regulation and Administration of Agricultural Lands)] இந்து சமய அறநிறுவனங்களால் தனி துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் நீதிமன்றங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவை தீர்வு செய்யப்படுகின்றன.

31.2. வருவாய் நீதிமன்றங்களின் முன்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை மொத்தம் 7192 ஆகும். இவற்றில், 3463 வழக்குகளில் 28.02.2023 தேதி வரை தீர்வு காணப்பட்டுள்ளன.

31.3. ரூபாய் 781.31 இலட்சம் குத்தகை நிலுவைத் தொகைக்குத் தீர்ப்பாணை பெறப்பட்டு, இதுவரை, தொகை ரூபாய் 266.12 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

நிலங்களை மீட்டல்

32. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், நிலவுடமை பதிவு மேம்பாட்டுத் திட்ட நடவடிக்கையின்போது, தனி நபர் பெயரில் தவறுதலாகப் பட்டா மாற்றம் செய்யப்பட்ட இனங்களைக் கண்டறிந்து திருக்கோயில் நிருவாகத்தால் சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்து உத்தரவு பெற்று நிலங்கள் மீட்கப்படுகிறது. இவ்வரசு

2023 ஏப்ரல் 19]

பொறுப்பேற்ற 07.05.2021 முதல் 28.02.2023 வரையிலான காலத்தில் 162 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 932.40 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

32.1. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், வருவாய்த் துறையில் கணினி சிட்டா தயாரிக்கும்போது தவறுதலாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறான இனங்களைக் கண்டறிந்து திருக்கோயில் நிருவாகத்தால் சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்து உத்தரவு பெற்று நிலங்கள் மீட்கப்படுகின்றன. 28.02.2023 வரையில் 185 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1123.70 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற வருவாய் அலுவலர்களை பணியமர்த்துதல்

33. சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து மீட்டெடுத்தல், குத்தகை மற்றும் குத்தகை நிலுவைகளை வசூல் செய்தல் மற்றும் வருவாய்த் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படும் பொருட்டு, அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற, 4 துணை ஆட்சியர்கள், 13 வட்டாட்சியர்கள், 7 நில அளவையர்கள் மற்றும் 8 கிராம நிருவாக அலுவலர்கள் ஆகியோர்களும் தொகுப்பூதிய அடிப்படையில் இத்துறையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

34. 07.05.2021 முதல் 19.03.2023 வரையிலான காலத்தில் 502 திருக்கோயில்களின் அசையாச் சொத்துகளில் ஏற்பட்டிருந்த ஆக்கிரமிப்பில் இருந்து 4501.82 ஏக்கர் அளவிலான வேளாண் நிலங்களும், 809.2102 கிரவுண்டு அளவிலான காலிமனைகளும், 156.1246 கிரவுண்டு பரப்பிலான கட்டடங்களும் மற்றும் 134.0414 கிரவுண்டு அளவிலான திருக்கோயில் குளக்கரைப் பகுதிகளும் மீட்டு எடுக்கப்பட்டு அந்தந்த திருக்கோயில்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட சொத்துகளின் மதிப்பு ரூபாய் 4236 கோடி ஆகும்.

34.1. இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு 79(b)-ல் ஆக்கிரமிப்புத் தொடர்பான குற்றங்களுக்குத் தண்டனை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்சொல்லப்பட்ட சட்டப்பிரிவு

79(b)-க்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் சட்டத் திருத்தம் 29/2021 மூலம் சட்டப்பிரிவு 79(b)(3) திருத்தப்பட்டது. இதன் மூலம், பிணையில் வெளிவர முடியாத புலன்கொள் குற்றமாகக் (Cognizable offence) குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 (ஒன்றியச் சட்டம் 2/1974)-ல் உள்ள அதற்குரிய பிரிவுகள் பொருந்தும் வகையில் மாற்றப்பட்டுள்ளன. இந்தத் திருத்தத்தின் மூலம் திருக்கோயில் அறங்காவலர்கள், இந்தச் சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் ஈடுபாடுடைய நபர்கள் ஆக்கிரமிப்புத் தொடர்பான புகாரினை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்

35. கூட்டாக திருக்கோயில்களின் நிலங்களை ஆக்கிரமித்து, அவ்விடங்களை தங்கள் குடியிருப்பு பகுதிகளாக மாற்றிக்கொண்டு, நீண்ட காலமாக தொடர்ந்து வசித்து வருபவர்களைத் திருக்கோயில் வாடகைதாரர்களாக ஏற்றுக்கொள்ள பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, 01.04.2022 முதல் 05.03.2023 வரையிலான காலத்தில் 3 திருக்கோயில்களில் 9.85 ஏக்கர் நிலப்பரப்பில் கூட்டாக ஆக்கிரமித்து வந்த 150 நபர்களை வாடகைதாரர்களாக வரன்முறை செய்து ஆணையரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்தல் (08.09.2021 முதல் 31.03.2023 வரை)

36. கடந்த 08.09.2021 நாளன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் திருக்கோயில் நிலங்களை நவீன புவியிடங்காட்டி உபகரணங்கள் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளும் திட்டத்தினை சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் தொடங்கி வைத்தார்கள்.

36.1. ஆரம்ப நிலையில், 150 உரிமம் பெற்ற நில அளவர்களை நியமனம் செய்து, 56 குழுக்களாக அமைத்து, 56 DGPS கருவிகளை உபயோகப்படுத்தி நிலங்களை அளவீடு செய்வதற்கு 20 மண்டலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டனர். 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நில அளவை மற்றும் நிலவரி திட்டத் துறையிலிருந்து கூடுதலாக 16 DGPS கருவிகள் பெறப்பட்டன.

2023 ஏப்ரல் 19]

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 22 உரிமம் பெற்ற நில அளவர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டனர். தற்போது, 132 நில அளவர்கள் 66 DGPS *கருவிகளை கொண்டு நிலங்கள் அளவிடும் பணியை செய்து வருகின்றனர், 38 நில அளவர்கள் உதவி ஆணையர் அலுவலகங்களில் ஆவணங்கள் தயாரிக்கும் பணியை செய்து வருகின்றனர், 2 நில அளவர்கள் சென்னை இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் பணி செய்து வருகின்றனர். மொத்தம் 172 நில அளவர்கள் திருக்கோயில் நிலங்கள் அளவீடு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*

36.2. நில அளவீட்டாளர்களின் அளவீட்டுப் பணிகளைக் கண்காணிக்கவும் நில அளவீட்டாளர்களுக்கு அவர்கள் பணிகள் குறித்துத் தேவையான அறிவுரைகள் வழங்கவும் முதன்மை ஆலோசகர்களாக நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற துணை இயக்குநர் ஒருவரும் உதவி இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

36.3. திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்வதுடன் திருக்கோயில் நிலங்களின் எல்லைகளிலும், வளைவுகளிலும் சிமெண்டினாலான எல்லைத் தூண்கள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராமங்களில் திருக்கோயில் அளவீட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட நில அளவீட்டாளர்கள் நில அளவீடு செய்ததற்கான வரைபடங்களைக் COLLABLAND SOFTWARE *கொண்டு தயாரிக்கின்றனர்.*

36.4. அரசாணை (நிலை) எண் 266, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.2-1) துறை, நாள் 4.11.2022-ல் மாற்றுப் பணி அடிப்படையில் நான்கு துணை ஆட்சியர் பணியிடங்களும், மற்றும் நான்கு நில அளவை துணை ஆய்வர் பணியிடங்களும் மாற்றுப் பணி மூலம் நியமனம் செய்து கொள்ள அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது, ஒரு துணை ஆட்சியரும், நான்கு நில அளவை துணை ஆய்வாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

36.5. 08.09.2021 முதல் 18.03.2023 வரை 1432 கிராமங்களில் 43,427 புல எண்கள்/ உட்பிரிவுகளில் உள்ள 1,08,000 ஏக்கர் நிலங்களில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 19

திருப்பணி

திருப்பணி (புதுப்பித்தல், புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல்)

37. பழங்காலத்தில் ஆட்சியாளர்கள் திருக்கோயில்களைக் கட்டியதுடன் பராமரித்தும் வந்துள்ளனர். அதனை தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் பாரம்பரியமிக்க திருக்கோயில் அமைப்புகளைப் பராமரித்ததுடன் மேம்படுத்தியும் வந்துள்ளனர். அதன் மரபு கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரம்பரிய வழிபாட்டில் உள்ள வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் திருக்கோயில்களின் தொன்மைக்கு ஊறு விளைவிக்காமல் பராமரிக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டு திருப்பணிகளை மேற்கொள்ள உத்திரவிட்டார். திருக்கோயில்கள் மற்றும் கட்டடங்களின் கட்டுமானம், பழுதுபார்த்தல், பாதுகாத்தல், பேணிக்காத்தல், மீட்டெடுத்தல் மற்றும் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் திருப்பணியில் அடங்குவனவாகும். வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் கொண்டு ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் போற்றிப் பாடப்பட்ட திருக்கோயில்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் அமைந்துள்ள திருக்கோயில்களின் மீதும் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள்

38. திருக்கோயில் பாதுகாத்தல், பேணிக்காத்தல், மீட்டெடுத்தல் (திருப்பணிகள்) பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கான நிதி ஆதாரங்கள் பின்வருமாறு.

- *அரசு மானியம்*
- *இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி*
- *இந்து சமய அறநிலைக் கொடைகள் பொது நல நிதி*
- *ஆலய மேம்பாட்டு நிதி*
- *பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்*
- *கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி*
- *திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி*
- *நன்கொடைகள்*

2023 ஏப்ரல் 19]

- *சுற்றுலாத் துறை நிதி*
- *அரசு நிதி*

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் நிருவாக நிதி

39. சட்டப்பிரிவு 92(1) மற்றும் 92(2)-ன்படி உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் ஆகியன திருக்கோயில்களிலிருந்து வசூலிக்கப்பட்டு, இத்துறையின் உதவி ஆணையர்கள் மூலம் அரசு கணக்கில் செலுத்தப்பட்டு இந்நிதியில் வரவு வைக்கப்படுகிறது. சட்டப்பிரிவு 96(2)-ன்படி இத்துறையின் நிருவாகச் செலவு, ஓய்வூதியப் பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்நிதியில் பற்று வைக்கப்படுகிறது.

39.1. இத்துறையால் இந்நிதியின் பரிவர்த்தனைகள் ஒத்திசைவு செய்யப்பட்டு சென்னையில் உள்ள மாநிலக் கணக்காயரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலின் புனரமைப்புக்காக ஆணையர் கோரும் தொகை அரசால் நிதிமாற்றம் செய்யப்படுகிறது.

39.2. எந்த ஒரு காலகட்டத்திலும் இந்து சமய அறநிலைய சட்டத்தின்கீழ் இடம் பெறும் சமய நிறுவனங்களிடமிருந்து வரிகள் ஏதும் அரசாங்கத்தால் விதிக்கப்படவோ, வசூலிக்கப்படவோ இல்லை.

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் பொது நல நிதி

40. நிதிப் பற்றாக்குறையுள்ள அல்லது நிதிநிலையில் நலிவடைந்துள்ள திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, சமய நிறுவனங்களின் உபரி நிதி அல்லது தானாக முன்வந்து அளிக்கும் தனியர்களின் நன்கொடைகள் மூலம் சட்டப்பிரிவு 97-ன்படி "பொது நல நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆலய மேம்பாட்டு நிதி

41. நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி வசதியற்ற திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக ரூ.8 கோடி பெற்று மைய நிதி ஏற்படுத்தப்பட்டு. அந்நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 19

பிற திருக்கோயில்களின் உபரி நிதிமாற்றம்

42. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி வசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள சட்டப்பிரிவு 36-ன் கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி

43. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கிட "கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2.00 கோடி நிதி மாற்றம் செய்து மைய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

43.1. இத்திட்டத்தின்கீழ் திருக்கோயில் ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 1250 திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2022–2023 ஆம் ஆண்டிற்கு 1250 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் ரூ.25.00 கோடி நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

44. "முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என்று தற்போது அழைக்கப்படும் இந்நிதியில் தற்போது ரூ.8.93 கோடி உள்ளது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

நன்கொடைகள் மற்றும் உபயதாரர் பணிகள்

45. பக்தர்கள் தாமே முன்வந்து தமது சொந்த செலவில், துறை மேற்பார்வையில், திருக்கோயில்களின் திருப்பணிகளான பாதுகாத்தல், புனரமைத்தல் மற்றும் புத்தாக்கம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வது பொதுவானதொரு நடைமுறையாக இருந்து வருகிறது. தற்போது, நன்கொடை வழங்குவோர்

2023 ஏப்ரல் 19]

இணையம் வாயிலாக எளிதில் நன்கொடை அளிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி

46. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 1250 சிறு திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றிற்கு ரூ.2,00,000/– வீதம் நிதியுதவி வழங்கப்பட்டன.

46.1. 2022–2023 ஆம் ஆண்டில் 1250 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் ரூ.25.00 கோடி நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

சுற்றுலாத் துறை நிதி

47. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்பு தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறைகள், குளியலறைகள், குடிநீர்வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத் துறையும் இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன.

அரசு நிதி

48. தமிழ்நாட்டில் உள்ள ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாது புனரமைத்தல், புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வது மிகவும் இன்றியமையாதது ஆகும். எனவே, பழமை வாய்ந்த திருக்கோயில்களை தொன்மை மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு அரசின் நிதியுதவி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு கையேடு

49. பழமை வாய்ந்த திருக்கோயில்களில் அவற்றின் பழமை மாறாது புனரமைத்தல், புதுப்பித்தல், பேணிக்காத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளைத் துறையில் உள்ளோர்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மேற்கொள்வதற்காக ஸ்தபதிகள் மற்றும் பொறியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளைக் கொண்ட "பாதுகாப்பு கையேடு" (Conservation Manual) தயாரிக்கப்பட்டுள்ளது.

49.1. இந்தப் பாதுகாப்புக் கையேடு, 1923 ஆம் ஆண்டு சர்.ஜான் மார்ஷல் எழுதிய பாதுகாப்புக் கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்புக் கையேட்டினைப் பயன்படுத்துபவர்களின் பயன்பாட்டிற்காக விளக்க இணைப்புகளும் இந்தப் பாதுகாப்பு கையேட்டில் வழங்கப்பட்டுள்ளன.

49.2. மேற்படி பாதுகாப்பு கையேடு தமிழாக்கம் செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில அளவிலான வல்லுநர் குழு

50. இந்து சமய அறநிலையத் துறை, திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ள தொன்மை மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளில் நிபுணத்துவம் வாய்ந்த மண்டல அளவிலான வல்லுநர் குழு, மாநில அளவிலான வல்லுநர் குழு மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவால் வழங்கப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

50.1. மாநில அளவிலான பாரம்பரிய பரிசீலனைக் குழு (Heritage Screening Committee) மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு ஒருங்கிணைக்கப்பட்டு அரசால் 11 வல்லுநர்களைக் கொண்ட மாநில அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, திருப்பணிக்கான ஆலோசனைகள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரைபடக் குழு

51. மாமல்லபுரத்தில் உள்ள அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலை கல்லூரியின் முதல்வர் வரைபடக் குழுவின் தலைவராக உள்ளார். மாமல்லபுரத்தில் உள்ள அரசு கட்டடக்

2023 ஏப்ரல் 19]

கலை மற்றும் சிற்பக் கலை கல்லூரியில் உள்ள ஒரு நிபுணத்துவம் வாய்ந்த பேராசிரியர்/உதவி பேராசிரியர், இந்து சமய அறநிலையத் துறையின் மண்டல ஸ்தபதி மற்றும் ஒருங்கிணைப்பாளராக இணை ஆணையர் (திருப்பணி) ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். திருக்கோயில்களின் உட்பகுதியில் ஏற்படுத்தவுள்ள புதிய கட்டமைப்புகள் மற்றும் புதிய திருத்தேர் குறித்த வரைபடங்களைக் கூர்ந்தாய்வு செய்து மேலோப்பம் செய்யும் பணியையும் இக்குழு மேற்கொள்கிறது.

சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்

*52. திருக்கோயில்களின் பழைமையான சுவரோவியங்களை பழைமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்வதற்கு உரிய பரிந்துரைகளை வழங்கும் பொருட்டு இரண்டு புனரமைப்பு ஓவியர்கள் (*Conservation Artist*) ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

திருக்குளங்களைச் சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல்

53. மாநிலம் முழுவதும் 1586 திருக்கோயில்களில் 2359 திருக்குளங்கள் உள்ளன. திருக்கோயில் திருக்குள வல்லுநர்கள்/ஆலோசகர்கள் ஆலோசனைப் பெற்றுச் சீரமைப்பு மற்றும் புனரமைப்பு காலமுறைதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்கோயில் திருக்குளங்களில் மேற்கொள்ளப்படும் சீரமைப்புப் பணிகளின் நடவடிக்கை விவரம் பின்வருமாறு:-

- *திருக்குளங்களில் உள்ள உட்புறம் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.*
- *திருக்குளங்களைச் சுற்றிச் சுற்றுச்சுவர் அமைத்தல்.*
- *தூர் வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல்.*
- *திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்.*
- *திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கும் உபரி நீர் வெளியேறுவதற்கும் வழி ஏற்படுத்துதல்.*

53.1. 2022-2023 ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், இடும்பாவனம், அருள்மிகு சற்குணநாதசுவாமி திருக்கோயில் மற்றும் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், அச்சுதமங்கலம், அருள்மிகு சோமநாதசுவாமி

[2023 ஏப்ரல் 19

திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களுக்கு சொந்தமான இடத்தில் புதியதாகத் திருக்குளம் அமைப்பதற்காக ரூ.49.95 இலட்சம் பொது நல நிதி ஒதுக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

53.2. 2022-2023 ஆம் ஆண்டில் திருக்கோயில்களுக்கு சொந்தமான 40 திருக்குளங்கள் சீரமைக்க ரூ.35.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர் பட்டியல்

54. 2021 ஆம் ஆண்டுவரை மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட பட்டய பொறியாளர்களின் பட்டியல் ஆணையரால் தயாரிக்கப்பட்டது. திருக்கோயில்களைப் பாதுகாப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு மாவட்ட நிலையில் மாவட்ட ஆட்சியரால் பட்டியலிடப்பட்டுள்ள பொதுப் பணித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் பொறியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களின் நிருவாகிகள் திருப்பணிக்குத் தேவையான வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்க ஆணையர் நிர்ணயிக்கும் கட்டணத்தில் இந்தப் பொறியாளர்கள் பயன்படுத்தப்படுவர்.

ஸ்தபதிகளைப் பட்டியலிடுதல்

55. சிற்ப சாஸ்திர மற்றும் ஆகம சாஸ்திர விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், பள்ளிக் கல்வியறிவைக் குறைவாகப் பெற்றிருந்த போதிலும் தம் முன்னோர் மூலம் வழிவழியாக சிற்பக்கலையில் பட்டறிவு பெற்றவர்கள் ஸ்தபதி/ சிற்பிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 241 ஸ்தபதி/ சிற்பிகளின் பெயர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

55.1. தகுதியான ஸ்தபதி/சிற்பிகளை தேர்வு செய்து மேற்படி பட்டியலில் கூடுதலாக சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கட்டடக்கலை வல்லுநர்களைப் பட்டியலிடுதல்

56. திருக்கோயில் மற்றும் திருக்கோயிலை சார்ந்த பகுதிகளில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள பெருந்திட்ட வரைபடம்

2023 ஏப்ரல் 19]

தயார் செய்தலுக்கு இத்துறைக்கென தகுதியான கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு நிறுவனங்கள் தேர்வு செய்து பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் 12 நிறுவனங்கள் உள்ளன. திருக்கோயில்களுக்குத் தேவையான ஒருங்கிணைந்த பெருந்திட்டம் தயாரிப்பதற்கு இந்த நிறுவனங்களில் ஒன்றினை திருக்கோயில் நிருவாகம் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

திருக்குட நன்னீராட்டல்

57. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆகம விதிப்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் திருக்குட நன்னீராட்டு நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் திருக்கோயில்கள் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுத் திருக்குட நன்னீராட்டு நடத்தப்படுகின்றன.

57.1. இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 31.03.2023 வரை 615 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருக்குட நன்னீராட்டு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

57.2. 01.04.2023 முதல் 01.06.2023 தேதிக்குள் 14 திருக்கோயில்களுக்கு திருக்குட நன்னீராட்டு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில் திருப்பணி செய்து திருக்குட நன்னீராட்டு நடத்துதல்

57.3. திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் நமது நாட்டின் 108 வைணவத் திருத்தலங்களுள் 68-வதும், மலைநாட்டு திருப்பதிகளில் ஒன்றானதும், 8 ஆம் நூற்றாண்டில் நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற தலமும் ஆகும். இந்த திருக்கோயிலுக்கு கி.பி.1604-ல் குடமுழுக்கு நடைபெற்று 400 ஆண்டுகளுக்கும் மேலான நிலையில் தமிழக அரசால் முதற்கட்டமாக 12-வது ஆணைய நிதியுதவி ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு திருப்பணிகள் துவங்கிட முடிவு செய்யப்பட்டதன்படியும், தொடர்ந்து ஒதுக்கீடு செய்து கிடைக்கப்பெற்ற அரசு மானியம், சட்டப்பிரிவு 36-ன்கீழ் நிதி மாற்றம், திருப்பணி நிதி, ஆணையர் பொதுநல நிதி, ஆலய மேம்பாட்டு நிதி, உபயதாரர் நிதி, சிறப்பு திருப்பணி நிதி, திருக்கோயில் நிதி போன்ற நிதியுதவிக்கு ஏற்றவாறு திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

400 ஆண்டுகளுக்கு பின்னர் திருவட்டார், அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலுக்கு ரூ.750.00/ இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்று 06.07.2022 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

மரத்திருத்தேர்

58. ஆண்டுதோறும் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் தேரோட்டம் என்பது முக்கியத்துவம் பெற்ற திருவிழாவாகும். திருவாரூரில் அமைந்துள்ள அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் ஆழித்தேர் ஆசியாவிலேயே மிகப்பெரும் திருத்தேராக விளங்கி வருகிறது. திருக்கோயில்களில் தேர்த் திருவிழாவின்போது பக்தர்களுக்கு அருள்பாலிப்பதற்காக இறைவனே திருக்கோயிலுக்கு வெளியே உலா வருவதாக நம்பப்படுகிறது. மொத்தம் 854 திருக்கோயில்களில் 1097 மரத் திருத்தேர்கள் உள்ளன.

58.1. 2022-2023 ஆம் ஆண்டிற்கு 32 திருக்கோயில்களுக்கு 34 திருத்தேர் திருப்பணி மேற்கொள்வதற்காக ரூ.20.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தங்க ரதங்கள் மற்றும் வெள்ளி ரதங்கள்

59. திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியைத் தங்கரதம் அல்லது வெள்ளிரதத்தில் எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது. தற்போது 68 திருக்கோயில்களில் தங்கரதங்களும் 57 திருக்கோயில்களில் வெள்ளி ரதங்களும் உள்ளன. தங்கரதங்கள் மற்றும் வெள்ளி ரதங்கள் உள்ள திருக்கோயில்கள் பட்டியல் இணைப்பு IX மற்றும் இணைப்பு X-ல் உள்ளது.

59.1. விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் 301.563 கிலோ கிராம் வெள்ளி பயன்படுத்தி தமிழ்நாடு கைவினை பொருட்கள் கழகம் (பூம்புகார்) மூலம் புதிய வெள்ளிரதம் செய்வதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

59.2. சென்னை, அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் 277.53 கிலோ கிராம்

2023 ஏப்ரல் 19]

வெள்ளி பயன்படுத்தி வெள்ளிரதம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான மரவேலை நிறைவுறும் தருவாயில் உள்ளது.

59.3. பின்வரும் திருக்கோயில்களில் உள்ள தங்கரதங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வைத் தொடர்ந்து வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி செயல்பாட்டில் உள்ளன:-

வ. எண்	திருக்கோயில்களின் பெயர்	புறப்பாடு தொடங்கப்பட்ட நாள்
1	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, பொள்ளாச்சி. கோயம்புத்தூர்	20.01.2021
2	அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை	27.01.2021
3	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர்	14.12.2021
4	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி	15.12.2021
5	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, ஈரோடு	15.12.2021
6	அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர், பெரம்பலூர்	11.07.2022
7	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி	23.10.2022
8	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம், இராமநாதபுரம்	31.10.2022
9	அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை	20.11.2022

தங்க முதலீட்டுத் திட்டம்

60. திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்பட்டு பயன்பாட்டில் இல்லாத பலமாற்று பொன் இனங்கள், பாரத

ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டு திட்டத்தின்கீழ் முதலீடு செய்யும் பொருட்டு 24 காரட் தங்கக் கட்டிகளாக மாற்றப்படுகின்றன. இந்த முதலீட்டின் மூலம் கிடைக்கப் பெறும் வட்டித் தொகை குறிப்பிட்ட திருக்கோயிலின் வளர்ச்சி பணிகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தை 3 மண்டலங்களாக ஓய்வு பெற்ற நீதியரசர்கள் தலைமையில் 3 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தில் பணி ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரும், சென்னை உயர் நீதிமன்றத்தில் பணி ஓய்வு பெற்ற நீதியரசர்கள் இருவரும் அந்த குழுக்களுக்குத் தலைவர்களாக உள்ளனர்.

60.1. திருக்கோயிலுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத தங்கக் காணிக்கைகளில் இருந்து இந்திய அரசின் நாணயச் சாலையில் உருக்கப்பட்ட தங்கக் கட்டிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	திருக்கோயில்கள்	பெறப்பட்ட தூய தங்கம் (கிராம் அளவில்)	தோராயமான வட்டித் தொகை வருடத்திற்கு (ரூபாய் இலட்சத்தில்)
1.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி	20567.89	24.09
2.	அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம்	91061.098	104
3.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு	31938.77	39 *
4.	அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு	32700.00	39

(*தங்கத்தின் மதிப்பு உயர்வின் காரணமாக வரிசை எண்.4-க்கு இணையான தொகை)

2023 ஏப்ரல் 19]

சிறப்புத் திட்டங்கள்

அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமனம்

61. திருக்கோயில்களில் சமூக நீதியை நிலைநாட்ட மற்றும் இறைவனுக்காற்றும் சேவையில் அனைவருக்கும் சம வாய்ப்பினை உறுதி செய்ய 2006 ஆம் ஆண்டில் அரசால் தீர்மானிக்கப்பட்டது. திருக்கோயில்களில் இறைவனுக்குப் பூஜை செய்யும் வாய்ப்பு சாதி பாகுபாட்டின் அடிப்படையில் மறுக்கப்படக் கூடாது.

61.1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 14.08.2021 ஆம் தேதி 56 நபர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கினார்கள். அவர்களில் 24 பயனாளிகள் 6 திருக்கோயில்களால் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயின்றவர்கள் ஆவார்கள். மேற்சொல்லப்பட்ட 6 பயிற்சிப் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:-

1. *அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.*
2. *அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.*
3. *அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.*
4. *அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.*
5. *அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்.*
6. *அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், திருவல்லிக்கேணி.*

61.2. மேலும் ஒரு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியை ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயிலில் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

'கலைஞர் தல மரக் கன்றுகள்' நடும் திட்டம்

62. தொன்றுதொட்டு மரங்கள் இறைவன்/இறைவியை குறிக்கும் சின்னங்களாகவும், பல்வேறு பூஜைகளின் அங்கமாக விளங்குகின்றன. ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஒரு

[*2023 ஏப்ரல் 19*

குறிப்பிட்ட மரம் புனிதமாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை நினைவுகூரும் வகையில் "கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் உள்ள திருக்கோயில்களில் ஒரு இலட்சம் தல மரக்கன்றுகளை நட திட்டமிடப்பட்டது.

62.1. 07.08.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் நாகலிங்க மரக்கன்றினை நட்டு இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

62.2. தற்போது வரை 20 இணை ஆணையர் மண்டலத்தில் 2597 திருக்கோயில்களில் 99,970 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

அன்னைத் தமிழில் அர்ச்சனை

63. தமிழ் அருளாளர்கள் இறைவனைத் தமிழில் போற்றி பாடியுள்ளனர். அருளாளர்கள் அருளிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ் போன்றவை தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்துரைத்தது மட்டுமல்லாமல் தமிழின் வளர்ச்சிக்கும், தங்களது பங்களிப்பை அளித்துள்ளன.

63.1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருக்கோயில்களில் 'அன்னைத் தமிழில் அர்ச்சனை' செய்யப்படும் என்ற அறிவிப்பு பதாகையினை 03.08.2021 அன்று வெளியிட்டார். இத்திட்டம் முதற்கட்டமாக 48 முதுநிலை திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புப் பதாகையில், தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களின் பெயர் மற்றும் அவரது தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் 48 முதுநிலை திருக்கோயில்களிலும் அன்னைத்தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவித்து, உறுதிப்படுத்தும் வகையில் பற்று அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

63.2. தமிழ் அர்ச்சனை நூல்களை பதிப்பிக்கச் செய்து இவ்வரசு 'அன்னைத் தமிழில் அர்ச்சனைத்' திட்டத்திற்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது.

1. *அருள்மிகு விநாயகர் போற்றி*
2. *அருள்மிகு முருகவேள் போற்றி*

2023 ஏப்ரல் 19]

3. அருள்மிகு உமையம்மை போற்றி
4. அருள்மிகு நடராசர் போற்றி
5. அருள்மிகு தென்முக கடவுள் போற்றி
6. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
7. அருள்மிகு தாயார் போற்றி
8. அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி
9. அருள்மிகு காளியம்மன் போற்றி
10. அருள்மிகு மாரியம்மன் போற்றி
11. அருள்மிகு அனுமன் போற்றி
12. அருள்மிகு சிவன் போற்றி
13. அருள்மிகு திருமால் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி

ஆகிய 108 போற்றிகள் அடங்கிய நூல்களும், 1008 போற்றிகள் அடங்கிய 'அருள்மிகு சிவன் போற்றி' நூலும், ஆக 12 போற்றி நூல்களும் திருக்கோயில்கள் அனைத்திலும் கிடைக்கச் செய்யும் திட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.08.2021 அன்று தொடங்கி வைத்தார்கள். மேலும் இரண்டு போற்றி நூல்களான 'அருள்மிகு திருமால் போற்றி' மற்றும் 'அருள்மிகு நவ கோள்கள் போற்றி' ஆகியனவும் வெளியிடப்பட்டுள்ளன.

63.3. மேலும் தமிழில் வழிபாடு செய்யப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு அர்ச்சனை கட்டணச்சீட்டில் 60% தொகை பங்குத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி 2023 மார்ச் மாதம் வரை ரூ.24.51 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கப்பட்டது.

அன்னதானத் திட்டம்

64. இறையருள் பெற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நிறைவான உணவு இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. பக்தர்களது நம்பிக்கை மற்றும் எண்ணங்களுக்கேற்ப இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவு புனிதமானது. இத்திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டு 764 திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம் வழங்குதல்

65. ஶ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்களில் 13.09.2012 முதல் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

65.1. 2021–2022 ஆம் ஆண்டில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

65.2. 2022-2023 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாணாக்கர்களுக்கான காலை சிற்றுண்டி திட்டம்

65.3. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச காலை உணவு வழங்கும் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 4000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர்.

உணவு தரப் பாதுகாப்புச் சான்றிதழ் (BHOG Certification)

66. திருக்கோயில்களில் தயாரிக்கப்படும் பிரசாதம் மற்றும் அன்னதானம் தரத்துடனும், சுகாதாரமான முறையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்திட இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையத்தால் வழங்கப்படும் தரச்சான்றினை (BHOG) 511 திருக்கோயில்கள் பெற்றுள்ளன.

2023 ஏப்ரல் 19]

வஸ்திர மரியாதை

67. 2022-2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள் மூலம் பிற மாநிலங்களில் உள்ள கோயில்களுடன் சமயப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில், திருக்கோயில் மரியாதைகள் அனுப்பப்பட்டுள்ளன. வஸ்திர மரியாதை பரிமாறிக்கொள்ளப்பட்ட திருக்கோயில்களின் விவரம் பின்வருமாறு:-

1. *அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயில், மைசூர், கர்நாடகா.*
2. *அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீசைலம், ஆந்திரப் பிரதேசம்.*
3. *அருள்மிகு யோக நரசிம்மர் திருக்கோயில், சோளிங்கர் மற்றும் அருள்மிகு அகோபிலம் திருக்கோயில், ஆந்திரப் பிரதேசம்.*
4. *அருள்மிகு ஒப்பிலியப்பன் திருக்கோயில், கும்பகோணம் மற்றும் அருள்மிகு ராகவேந்திரர் பிருந்தாவனம், மந்திராலயம், ஆந்திரப் பிரதேசம்.*
5. *அருள்மிகு எம்பார் சுவாமிகள் திருக்கோயில், காஞ்சிபுரம் மற்றும் அருள்மிகு செழுவ நாராயணப் பெருமாள் திருக்கோயில், மேல்கோட், கர்நாடகா.*

ஆன்மிகம் மற்றும் நீதிநெறி வகுப்புகள்

68. பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நமது கலாச்சார, பாரம்பரியம் மற்றும் மரபுகளை கதைகள் வாயிலாக குழந்தைகளின் மனதில் ஆழப்பதிந்திட, ஆன்மிக மற்றும் நீதிநெறி வகுப்புகள் முக்கிய திருக்கோயில்கள் அனைத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

69. ஆண்டுதோறும் முக்கியத் திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய தினங்களில் அனைத்துச் சமுதாய மக்களுக்கும் சிறப்பு விருந்து வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 19

யானைகள் சிறப்பு நலவாழ்வு

70. 27 திருக்கோயில்களில் 29 யானைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. திருக்கோயில் யானைகளுக்கு மாதம் இருமுறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிறப்பு இயற்கை உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

70.1. தற்போது திருக்கோயில்கள் மற்றும் மடங்களில் உள்ள யானைகளை இயற்கைச் சூழலில் நன்றாகப் பாராமரிக்கும் பொருட்டு குளியல் தொட்டி, சேற்றுக் குளியல் மற்றும் நடைபாதை போன்றவை அமைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு XI).

முக்தியடைந்த யானைகளுக்கு மணிமண்டபம்

70.2. திருக்கோயில்களில் நீண்ட காலம் சேவை புரிந்த முக்தியடைந்த யானைகளுக்கு அவற்றின் சேவையை போற்றும் விதமாக திருக்கோயிலுக்கு சொந்தமான நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்படும் என சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. நினைவு மண்டபம் அமைக்கப்படும் திருக்கோயில்கள் விவரம் பின்வருமாறு :

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
2. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமநாதபுரம்.
3. அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
5. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.
6. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
7. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.
8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்,

2023 ஏப்ரல் 19]

9. அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில், மன்னார்குடி.

10. அருள்மிகு திருத்தளிநாத சுவாமி திருக்கோயில், திருப்பத்தூர், சிவகங்கை.

பசுக்கள் காப்பகம்

71. திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க 4 ஒருங்கிணைந்த பசுக்கள் காப்பகம், பழநி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களால் நன்கொடையாக பெறப்படும் உபரி கால்நடைகள், மகளிர் சுய உதவி குழுக்களுக்கும், திருக்கோயில் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகின்றன. இப்பசுக்கள் காப்பகங்களை நல்ல முறையில் பராமரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. (இணைப்பு XII)

71.1. ஆவடி தாலுகா, கோயில் பதாகை, அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில் வளாகத்தில், 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பசுக்கள் காப்பகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மின்கலச் சிற்றுந்துகள்

72. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் நலனுக்காக திருக்கோயில்களில் மின்கலச் சிற்றுந்துகள் பயன்பாட்டில் உள்ளன. மின்கலச் சிற்றுந்துகள் பயன்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பட்டியல் இணைப்பு XIII-ல் வழங்கப்பட்டுள்ளது.

கம்பிவட ஊர்திகள்

73. பக்தர்கள் மலைமீதுள்ள திருக்கோயில்களுக்கு விரைவாக சென்று தரிசனம் செய்வதற்காக பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி வசதி இயக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று மலை மேல் உள்ள கரூர் மாவட்டம், ஐயர்மலை, அருள்மிகு இரத்தினகிரிசுவரர் திருக்கோயில் மற்றும் சோளிங்கர், அருள்மிகு யோகநரசிம்மர் திருக்கோயில் ஆகியவற்றில் பக்தர்கள் விரைவாக சென்று சுவாமி

[2023 ஏப்ரல் 19

தரிசனம் செய்வதற்காக கம்பி வட ஊர்தி அமைக்கும் பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது.

73.1. மேலும், திருநீர்மலை திருக்கழுக்குன்றம் மற்றும் அனுவாவியில் மலைமீது அமையப்பெற்றுள்ள திருக்கோயில்கள் பக்தர்கள் எளிதில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏதுவாக கம்பிவட ஊர்தி அமைத்திட சாத்தியக்கூறு ஆராயப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

73.2. இதேபோன்று, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் மற்றும் இடும்பன் கோயில் இடையே கம்பிவட ஊர்தி அமைத்திட சாத்தியக்கூறு ஆராயப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

ஒரு கால பூஜை திட்டம் (ஒரு கால பூஜை தேவைப்படும் கோயில்களுக்கான திட்டம்)

74. நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு நாளொன்றுக்கு ஒரு முறையாவது ஒருகால பூஜை நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 1986 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதற்காக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.2 இலட்சம் வீதம் 15,000 திருக்கோயில்களுக்கு வைப்புநிதி ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகை மூலம் ஒரு கால பூஜை நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

74.1. மேற்கண்ட ஒரு கால பூஜை நடைபெறும் 15,000 திருக்கோயில்களில் பூஜை செய்யும் அர்ச்சகர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தில், மாதத்திற்கு ஊக்கத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் செப்டம்பர் 2021 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு மானியம்

கன்னியாகுமரி மாவட்ட இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களுக்கு மானியம்

75. கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிருவாகத்தின்கீழ் உள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒரு மகளிர் கல்லூரி, ஒரு மேல்நிலைப் பள்ளி

2023 ஏப்ரல் 19]

மற்றும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு ஆண்டு மானியமாக ரூ.3 கோடி வழங்கப்படுகிறது.

விலைவாசி உயர்வு மற்றும் திருக்கோயில்களின் நிருவாக செலவுகளில் ஏற்படும் உயர்வினைக் கருதி, இந்த அரசு மானியம் ரூ.3 கோடியிலிருந்து ரூ.6 கோடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை திருக்கோயில்களுக்கு மானியம்

75.1. முன்பு புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கட்டுப்பாட்டிலிருந்த 225 திருக்கோயில்களுக்கு ஆண்டொன்றிற்கு அரசு மானியமாக ரூ.1 கோடி வழங்கப்பட்டது. தற்போதுள்ள விலைவாசி உயர்வு மற்றும் நிருவாக செலவுகளில் ஏற்படும் உயர்வினைக் கருதி, மானியம் ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையிலிருந்து திருக்கோயில் பணியாளர்கள் சம்பளம், ஓய்வூதியம், மின்கட்டணம், பூஜைப்படித்தரம், திருப்பணி, திருவிழாச் செலவு போன்ற செலவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

தஞ்சாவூர் அரண்மனை திருக்கோயில்களுக்கு மானியம்

75.2. தஞ்சாவூர் அரண்மனை திருக்கோயில்களின் நிதிப்பற்றாக்குறையினை கருத்தில்கொண்டு, நிருவாகத்திலுள்ள 88 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கென 2022–2023 ஆம் நிதியாண்டு முதன்முறையாக ரூ.3 கோடி தொகையானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், ஆண்டுதோறும் ரூ.3 கோடி தொகை அரசு மானியமாக தொடர்ந்து வழங்கப்படும்.

திருப்பணிகளுக்கான மானியம்

75.3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொன்மை வாய்ந்த பாரம்பரியமிக்க திருக்கோயில்களை அதன் பழைமை மாறாது புதுப்பித்தல்/புனரமைத்தல்/மறுசீரமைப்பு செய்யும் திருப்பணிகளுக்கென ஆண்டுதோறும் ரூ.6 கோடி அரசு மானியமாக வழங்கப்படுகிறது.

மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணங்களுக்கான அரசு மானியம்

75.4. இந்து மதத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும், அவர்களது வாழ்நாளில் ஒருமுறையாவது மானசரோவர் மற்றும் முக்திநாத்திற்கு புனிதப் பயணம் செல்வதை ஆன்மிகக் கடமையாக கருதுகின்றனர். தமிழ்நாட்டில் வசித்து வருபவர்கள், சீனாவில் உள்ள மானசரோவருக்கு புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் ரூ.40,000/– அரசால் மானியம் வழங்கப்படுகிறது. அதுபோன்றே, நேபாளத்தில் உள்ள முக்திநாத்திற்கு புனித பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– அரசு மானியம் வழங்கப்படுகிறது. மேற்கண்ட இரு பயணங்களுக்கும் ஆண்டொன்றுக்கு தலா 500 நபர்களுக்கு, இந்த அரசு மானியம் புனிதப் பயணம் முடித்து மானியம் வேண்டி விண்ணப்பிக்கும் பக்தர்களுக்கு வாழ்நாளில் ஒருமுறை மட்டும் வழங்கப்படுகிறது.

இராமேசுவரம் முதல் காசி வரை ஆன்மிகப் பயணம்

75.5. 2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலிலிருந்து காசி, அருள்மிகு விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு 200 பக்தர்கள் அரசு மானியமாக ரூ.50 இலட்சம் அரசு மானிய செலவில் அழைத்து சென்று வரப்படுவார்கள் என்று அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாண்டில் 200 பக்தர்கள் இராமேஸ்வரத்திலிருந்து காசி வரையான ஆன்மிகப் பயணத்திற்கு அழைத்து சென்று வரப்பெற்று பயனடைந்துள்ளனர்.

தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் பழைமை மாறாது புதுப்பிக்கும் திருப்பணிகளுக்குச் சிறப்பு மானியம்

75.6. ஆயிரம் வருட தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் பழைமை மாறாது புதுப்பிக்கும் திருப்பணிகளுக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் ரூ.100 கோடி சிறப்பு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த திருக்கோயில்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.

2023 ஏப்ரல் 19]

பக்தர்களுக்கான வசதிகள்

திருக்கோயில்களில் நவீனத் தொழில்நுட்ப முறையில் விபூதி மற்றும் குங்குமம் தயாரித்தல்

76. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தனித்துவத்துடன் கூடிய அபிஷேக விபூதி தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் திருச்செந்தூர், அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல், அருள்மிகு ஜெம்புகேஸ்வரர் சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நவீன தொழில்நுட்ப முறையில் விபூதி தயாரிக்கப்பட்டு அத்திருக்கோயில்களின் தேவைக்கும், பிற திருக்கோயில்களின் தேவைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

நவீனத் தொழில்நுட்ப முறையில் விபூதி தயாரிக்கும் திருக்கோயில்கள் பட்டியல்

வ. எண்.	திருக்கோயில்கள்	பகிர்ந்தளிக்கப்படும் மண்டலங்களின் பெயர்கள்
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி	சேலம், திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், தஞ்சாவூர்.
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்	சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர்.
3.	அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை	சென்னை-1, சென்னை-2, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை.
4.	அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல்	திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, விழுப்புரம், கடலூர்.

76.1. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்,

சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் தரமான குங்குமம் நவீன தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டு அத்திருக்கோயில்களின் தேவைக்கும், பிற திருக்கோயில்களின் தேவைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

நவீனத் தொழில்நுட்ப முறையில் குங்குமம் தயாரிக்கும் திருக்கோயில்கள் பட்டியல்

வ. எண்	திருக்கோயில்கள்	பகிர்ந்தளிக்கப்படும் மண்டலங்களின் பெயர்கள்
1.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை	மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி
2.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்	திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை
3.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி	சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர்
4.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு	சென்னை-1, சென்னை-2, காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர்.

சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்குதல்

77. திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் நூல் சேலைகள் மற்றும் வேட்டிகள், சுதந்திர தினம் மற்றும் 'பேரறிஞர் அண்ணா' நினைவு நாள் ஆகிய தினங்களில் பக்தர்களில், மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

77.1. 2022-2023 ஆம் ஆண்டில் 26771 சேலைகள் மற்றும் 3239 வேட்டிகள் சுதந்திர தினத்தன்றும் 19148 சேலைகள் மற்றும் 3356 வேட்டிகள் பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும் வழங்கப்பட்டன.

2023 ஏப்ரல் 19]

திருக்கோயில்களில் நூலகங்கள்

78. திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கு ஆன்மிக உணர்வை வளர்க்கும் வகையில் 114 திருக்கோயில்களில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

78.1. 114 நூலகங்கள் உள்ள திருக்கோயில்களில், 87 நூலகங்கள் புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஏற்கெனவே உள்ள புத்தகங்களோடு புதிதாக பக்தி இலக்கியங்களும் ஆன்மிக இதழ்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆணையர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை

79. திருக்கோயில் வளாகக் கண்காணிப்பு மேற்கொள்வதற்காக, 48 முதுநிலைத் திருக்கோயில்களில் 2,064 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, ஆணையர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

79.1. ஆணையர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.1.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மேற்கண்ட 48 முதுநிலைத் திருக்கோயில்களில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் அனைத்தும் உதவிப் பாதுகாப்பு அலுவலர்களாலும், ஆணையர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறையில் திட்ட அலுவலர் ஒருவராலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பெருந்திட்ட அடிப்படையில் மேம்பாட்டு பணிகள்

80. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக தரிசன வழி கட்டடம், சுகாதார வளாகங்கள், அன்னதான மண்டபம், சூரசம்ஹார மண்டபம், தங்கும் விடுதி உட்பட பல்வேறு மேம்பாட்டு பணிகள் ரூ.305 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

80.1. பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதி, புதியதாக வரிசை மண்டபம், திருமண மண்டபத்துடன் கூடிய அன்னதானக் கூடம் கட்டும் பணி உட்பட பல்வேறு மேம்பாட்டு பணிகள் ரூ.170.11 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 19

80.2. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் திருப்பணி மற்றும் பக்தர்கள் வசதிக்காக அடிப்படை வசதிகள், இராமர் பாதம் திருக்கோயில், கோதண்டராமர் திருக்கோயில் திருப்பணி உள்ளிட்ட மேம்பாட்டு பணிகள் ரூ.146.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வள்ளலார் சர்வதேச மையம்

80.3. திருவருட்பிரகாச வள்ளலார் அவர்களின் ஆன்மிக கோட்பாடுகள் உலகறியும் பொருட்டு வள்ளலார் சர்வதேச மையம் வடலூரில் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரூ.100 கோடி மதிப்பீட்டில், சத்திய ஞான சபை ஜோதி தரிசனம் மற்றும் சத்திய தரும சாலை அமைந்துள்ள பகுதியில் தியான மண்டபம், மின்னணுமயமாக்கப்பட்ட நூலகம், பாடசாலை, அரங்கம், அருங்காட்சியகம் மற்றும் அடிப்படை வசதிகள் போன்றவையும் அருகாமையில் உள்ள வேறொரு பகுதியில் மூத்த குடிமக்கள், மூலிகை பூங்கா, தங்குமிடங்கள் மற்றும் உணவகம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பக்தர்கள் தங்குமிடங்கள்

81. ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேசுவரர் திருக்கோயில் மற்றும் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்கள் தங்குவதற்காக தங்குமிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

81.1. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.29.16 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ரூ.35 கோடி மதிப்பீட்டில் 'பக்தர்கள் தங்குமிடங்கள்' கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

81.2. 2022-2023 ஆம் ஆண்டிற்கு 7 திருக்கோயில்களில் 8 பக்தர்கள் தங்கும் விடுதிகள் / இளைப்பாறும் மண்டபங்கள் கட்டும் பணி மேற்கொள்வதற்கு ரூ.9.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 19]

பக்தர்களுக்கான சிறப்பு அடிப்படை வசதிகள்

82. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், பக்தர்களின் வசதிக்காக ரூ.23.81 கோடி செலவில் புதிய குடிநீர் திட்டம், அன்னதான உணவருந்தும் கூடம், மேல் கம்பிவட ஊர்தி நிலையத்தில் மின் தூக்கி வசதி மற்றும் நாதமணி மண்டபம் ஆகிய சிறப்பு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திருக்கோயில்களில் இலவச முடிகாணிக்கை

83. திருக்கோயில்களில் முடிகாணிக்கை செலுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இதில் பக்தர்களுக்கு உள்ள இன்னலைக் கருதி, திருக்கோயில் நிருவாகம் முடிகாணிக்கை செலுத்துவதற்கான கட்டணத்தை ஏற்றுக்கொண்டு கட்டணமின்றி முடிகாணிக்கை செலுத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

83.1. தற்போது முடி இறக்கும் தொழிலாளிகளுக்கு ஒரு முடி காணிக்கைக்கு ரூ.30/– திருக்கோயில் சார்பாக வழங்கப்படுவதோடு, மாத ஊக்கத் தொகையாக ரூ.5000/-மும் திருக்கோயில் நிருவாகத்தால் வழங்கப்படுகிறது.

முடி இறக்கும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.5000/– ஊக்கத் தொகை அந்தந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கும் திட்டம் 5.10.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கான இலவசத் திருமணத் திட்டம்

84. திருக்கோயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கென இலவசத் திருமணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மணமக்கள் இருவரில், ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருந்தால், திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 88 திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

இலவச திருமணத் திட்டம்

85. 2022-2023 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் 500 இலவசத் திருமணங்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்றுவரை 434 ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 19

திருக்கோயில்களில் தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

உழவாரப் பணி

86. திருக்கோயில்களில் துறையின் ஆளுகைக்குட்பட்ட அனைத்து திருக்கோயில்களிலும் "திங்கள்தோறும் தூய்மைப் பணி" என்ற திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் புதன்கிழமை திருக்கோயில்களில் அனைத்து இடங்களிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், உழவாரப் பணி மேற்கொள்ள ஆர்வம் காட்டும் தன்னார்வலர்கள் தொண்டு நிறுவனங்கள், சமூக சேவை அமைப்புகளும் திருக்கோயில்களில் முன் அனுமதிப்பெற்று உழவாரப் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றன. 48 முதுநிலை திருக்கோயில்களிலும் இணைய வழியில் முன்பதிவு செய்து உழவாரப் பணியினை மேற்கொள்ளும் வசதி நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இணையவழி முறையில் தன்னார்வலர்கள் உழவாரப் பணி செய்வதற்கு தங்களைப் பதிவு செய்துகொள்ளும் புதிய வசதி 27.7.2021 அன்று தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

86.1. தற்போது வரை 18,215 திருக்கோயில்களில் 35,781 உழவாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்கோயில் வளாகத்தில் நெகிழி பயன்பாட்டினைத் தவிர்த்தல்

87. திருக்கோயில்களில் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக பராமரித்து பாதுகாக்கும் வகையில், திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் நெகிழி (பாலிதீன்) பைகள் பயன்பாடு தவிர்க்கப்பட்டு, அதற்கு மாற்றாக துணிப்பைகள் மற்றும் பாக்குமட்டைத் தட்டுகள் ஆகியவற்றின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு நடவடிக்கைகள்

திருக்கோயில்கள் பாதுகாப்பு

*88. திருக்கோயில்களின் பாதுகாப்பிற்காக, மின்னணு பாதுகாப்பு உபகரணங்களான கள்வர் எச்சரிக்கை மணி, பரிசோதனைக் கருவி (*Metal Detector*), நவீன ஒளிப்பதிவுக் கருவி*

2023 ஏப்ரல் 19]

*(*Digital Video*), கண்காணிப்பு கேமராக்கள் (*CCTV Cameras*) மற்றும் உறுதியான கம்பித் தடுப்புக் கதவுகள் (*Grill Gates*) போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயில்களின் பாதுகாப்பு பணியில் இரவு மற்றும் பகல் நேரக் காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.*

உலோகத் திருமேனிகள் மற்றும் மதிப்புமிகு பொருட்கள் பாதுகாப்பு

89. திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகளையும் அணிகலன்களையும், மதிப்புமிகு பொருள்களையும் பாதுகாத்திட, உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள், பாதுகாப்பு அறைகள் உருவாக்கப்பட்டு, கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல், உள்பூட்டு (தொட்டிப்பூட்டு) அமைப்பு ஏற்படுத்துதல், இரும்பு வாயிற்கதவுகள் பொருத்துதல், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் பொருத்துதல் ஆகிய பணிகளும், பகல்/இரவு நேரக் காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சிலைகள், உலோகத் திருமேனிகளைப் பதிவு செய்து ஆவணப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

90. திருக்கோயில்களில் உள்ள விலை மதிப்புமிக்க உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்க 34 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் தொலைதூர பகுதிகளில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள் இந்த மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் இத்திருமேனிகள், தொடர்புடைய திருக்கோயில்களுக்குக் கொண்டு சென்று திருவிழா முடிந்த பின்பு, மீண்டும் அத்திருமேனிகளை உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்திற்குக் கொண்டு வந்து பாதுகாப்பாக வைப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

90.1. தற்போது 8,693 உலோக சிலைகள் 23 உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த திருமேனிகள் பாதுகாப்பு மையங்களுக்கு கண்காணிப்பு கேமரா, கள்வர் எச்சரிக்கை மணி மற்றும் ஆயுதம் ஏந்திய

காவலர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையப் பட்டியல் இணைப்பு XIV-ல் வழங்கப்பட்டுள்ளது.

90.2. மேலும், 11 உலோகத் திருமேனி மையங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த 11 உலோகத் திருமேனி மையங்களுக்கும் முழுநேரப் (24X7) பாதுகாப்பு அளிக்குமாறு காவல் துறையிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. புதிய உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தின் பட்டியல் இணைப்பு XV-ல் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அறைகள்

91. திருக்கோயில்களில் உள்ள உலோக திருமேனிகளை பாதுகாக்க கண்காணிப்பு கேமரா மற்றும் கள்வர் எச்சரிக்கை மணி போன்ற நவீன பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய பாதுகாப்பு அறை ரூ.308.70 கோடி செலவில் இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாக நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

91.1. முதற்கட்டமாக, ரூ.22.57 இலட்சத்தில் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் பாதுகாப்பு அறை கட்டப்பட்டுள்ளது.

91.2. மேலும், சென்னை, புலியூர் அருள்மிகு பரத்வாஜேஸ்வரர் திருக்கோயில் உட்பட நான்கு திருக்கோயில்களில் ரூ.29.11 இலட்சம் மதிப்பில் பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 1793 திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம்

92. கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டத்திற்காக, ரூ.5 கோடி மையநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துவதற்கு நிதிவசதி இல்லாத திருக்கோயில்களுக்கு இம்மையநிதியின் மூலம் நிதியுதவி வழங்கப்படும். இதுவரை 1,645 திருக்கோயில்களுக்கு ரூ.2.05 கோடி மானியம் வழங்கப்பட்டு, அத்திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]

திருக்கோயில் பாதுகாப்புப் படை

93. திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள், உண்டியல்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக "திருக்கோயில் பாதுகாப்புப் படை" என்ற ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 1,000 நிலை-II காவலர்கள், 3,000 முன்னாள் இராணுவத்தினர் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டு வந்த மாதத் தொகுப்பூதியத்தை ரூ.1,500/-லிருந்து ரூ.5,000/- ஆக அரசு உயர்த்தியுள்ளது.

திருக்கோயில்களில் தீ-தடுப்பு நடவடிக்கைகள்

94. திருக்கோயில்களில் தீ விபத்து மற்றும் இதர பேரிடர்களை தவிர்க்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துறையின் ஆளுகைக்குட்பட்ட சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட அனைத்து திருக்கோயில்களிலும் தீயணைப்புத் துறையின் உதவிகளுடன் 6 மாதங்களுக்கு ஒருமுறை தீ-தடுப்பு தணிக்கை (Fire Audit) செய்யப்பட்டு வருகிறது. மேலும், தீயணைப்பு கருவிகள், மணல்/தண்ணீர் வாளிகள், மின்தடை கருவிகள், நீர்தும்பிகள் முதலிய தீ-தடுப்பு சாதனங்கள் திருக்கோயில்களில் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளன.

தீ விபத்து ஏற்படும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தீ-தடுப்பு பயிற்சி திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது வரை சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள 286 திருக்கோயில்களில் தீ-தடுப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அருளாளர்கள் விழா

வள்ளலார் முப்பெரும் விழா

95. 2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வள்ளலார் நெறியினை கடைப்பிடிப்பவர்களை கொண்ட சிறப்புக் குழு அமைக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 52 வாரங்கள் வள்ளலாரின் 200-வது ஆண்டு பிறந்தநாள், தர்ம சாலை தொடங்கி 156-வது ஆண்டு

மற்றும் ஜோதி தரிசனத்தின் 152-வது ஆண்டு ஆகிய முப்பெரும் விழா கொண்டாடப்படுகிறது. இதற்காக ரூ.3.25 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது. விழாவின் போது அன்னதானம் வழங்கப்படுகிறது.

சித்தர் விழா

95.1. கமலமுனி சித்தருக்கு 4.6.2022 அன்று திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் சார்பிலும், சுந்தரானந்த சித்தருக்கு 12.9.2022 அன்று மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சார்பிலும், பாம்பாட்டி சித்தருக்கு 9.12.2022 அன்று சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் சார்பிலும் சித்தர் விழா சிறப்புற நடத்தப்படுகின்றன.

சேக்கிழார் விழா

95.2. சேக்கிழார் ஒரு புனிதத் துறவி. சிவபெருமானைப் போற்றி அவர் எழுதிய 'பெரிய புராணம்' எனும் நூல் 63 நாயன்மார்களை பற்றிய ஒரு தொகுப்பாகும். அவர் சிறந்த நல்லொழுக்கம் உள்ள பக்திமானாகத் திகழ்ந்தவர்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னைக்கு அருகில் உள்ள குன்றத்தூரில் சேக்கிழாரின் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா ஒரு நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. 2022-2023 ஆம் ஆண்டிலிருந்து இவ்விழா மூன்று நாட்கள் அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்கு இதற்கென ஏற்படுத்தப்பட்ட மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்ட் மாதத்தில் 12 நாட்கள் பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

திருஞானசம்பந்தர் இசை விழா

95.3. சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா ஆண்டுதோறும் வைகாசி மாதம் மூல நட்சத்திர தினத்தன்று கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு

2023 ஏப்ரல் 19]

இந்து சமய அறநிலையத் துறையின் பொது நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

ஔவையார் விழா

95.4. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 3 நாட்கள் இவ்விழா தொடர்ச்சியாக கொண்டாடப்படுகிறது.

தாயுமானவர் விழா

95.5. தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில் தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானவ சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

திருவள்ளுவர் திருநாள்

95.6. உலக வழக்கிலுள்ள பெரும்பாலான மொழிகளில் தெய்வப் புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

உலக வாழ்வியல் நெறிகளை ஒருங்கே ஈரடியில் 1330 குறட்பாக்களாக கொண்டுள்ள திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என 3 பகுதிகளாக அமையப்பெற்றுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் திருவள்ளுவர் பிறந்த நாளாக நம்பப்படும், தைத் திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது

[2023 ஏப்ரல் 19

பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அருணகிரிநாதர் விழா

95.7. அருளாளர் அருணகிரிநாதர் அருள்மிகு முருகப்பெருமானைப் போற்றிப் பாடிய திருப்புகழ் சந்தக்கவியில் தனித்தன்மை பெற்று விளங்குகிறது. இவ்வருளாளருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலில் ஆவணி மாதம், "கேட்டை" நட்சத்திரத்தன்று "முக்திப்பேறுவிழா" ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும், திருவண்ணாமலையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் நிதி மூலம் அருணகிரிநாதர் மணி மண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

கோச்செங்கட்சோழ நாயனார் விழா

95.8. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், சதய நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் "கோச்செங்கட்சோழ நாயனார் விழா" திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

மங்கையர்க்கரசியார் விழா

95.9 தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பழையாறை கிராமம் அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயிலானது, சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த உபகோயிலாகும். இந்த பழையாறை கிராமத்தில் சைவ சமயத்தைச் சார்ந்த 63 நாயன்மார்களில் ஒருவரான மங்கையர்க்கரசியார் மணிமுடிசோழனின் மகளாகப் பிறந்தார்.

இங்கு அமைந்துள்ள அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயிலில் அவருக்கு தனியாக திருவுருவம் உள்ளது. மங்கையர்க்கரசியார் சித்திரை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர் என்பதால், ஆண்டுதோறும் மேற்காணும் நட்சத்திர தினத்தில் அவருக்கு விழா எடுக்கப்படுகிறது. அன்றைய தினத்தில் மங்கையர்க்கரசியாருக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் செய்யப்பட்டு ஓதுவார்கள் சைவ திருமுறைகள் பாட, வீதி உலா

2023 ஏப்ரல் 19]

நடைபெற்று விழா நிறைவு பெறும். தற்போது ஆண்டுதோறும் இவ்விழா திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக நடத்தப்படுகிறது.

ஆழ்வார்கள் விழா

95.10. பன்னிரண்டு ஆழ்வார்களால் திருமாலின் வைபவங்களை மங்களாசாசனம் செய்த பாசுரங்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்று போற்றப்படுகிறது. ஆண்டுதோறும் பன்னிரு ஆழ்வார்களுக்கும் அவரவர் திருநட்சத்திர நாளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் "ஆழ்வார்கள் விழா" சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பாவை விழா

95.11. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள், 'திருப்பாவை' என்ற தலைப்பின்கீழ் 30 பாசுரங்கள் அருளியுள்ளார். இப்பாசுரங்கள் தமிழ் மாதம் மார்கழியில் முப்பது நாட்களிலும் பக்தர்களால் பாடப்படுகின்றன.

மாணிக்கவாசகர் சிவபெருமானைத் துதித்து அருளிய திருவெம்பாவை மற்றும் திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் பக்தர்களால் மார்கழி மாதத்தில் பாடப்படுகின்றன.

ஆண்டுதோறும் 'மார்கழி' திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. பாவை விழா மாவட்ட அளவில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஐந்தாம் வகுப்பு வரை, ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை மற்றும் ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான பல்வேறு பிரிவுகளில் திருப்பாவை, திருவெம்பாவை பண்ணோடு பாடும் போட்டி, கட்டுரைப் போட்டி என தனித் தனியாக போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அறிவிக்கப்பட்ட திருக்கோயில் திருவிழாக்கள்

96. முக்கியத் திருக்கோயில்களில் அறிவிக்கப்பட்ட விழாக்கள் கீழ்க்கண்டவாறு கொண்டாடப்படுகின்றன.

[*2023 ஏப்ரல் 19*

வ. எண்	திருவிழா மற்றும் திருக்கோயில் பெயர்	இடம்	தமிழ் மாதம்
1.	மீனாட்சி திருக்கல்யாணம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்	மதுரை	சித்திரை
2.	கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்.	மதுரை	சித்திரை
3.	சித்திரைத் திருத்தேர் விழா அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்	ஸ்ரீரங்கம்	சித்திரை
4.	சித்திரைத் திருத்தேர் விழா அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்	சமயபுரம்	சித்திரை
5.	ஆடிக் கிருத்திகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்	திருத்தணி	ஆடி
6.	தசரா திருவிழா அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயில்	குலசேகரப் பட்டணம்	புரட்டாசி
7.	கந்தசஷ்டி, சூரசம்ஹாரம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்	திருச்செந்தூர்	ஐப்பசி – கார்த்திகை
8.	கார்த்திகை தீபம் அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில்	திருவண்ணா-மலை	கார்த்திகை
9.	வைகுண்ட ஏகாதசி அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்	ஸ்ரீரங்கம்	மார்கழி

வ. எண்	திருவிழா மற்றும் திருக்கோயில் பெயர்	இடம்	தமிழ் மாதம்
10.	பூ சொரிதல் விழா அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்	சமயபுரம்	மாசி
11.	மாசிக் கொடை விழா அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு	மண்டைக் காடு	மாசி
12.	குண்டம் திருவிழா அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில்	பண்ணாரி, சத்திய மங்கலம்	பங்குனி

மகா சிவராத்திரி கொண்டாடுதல்

97. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மகா சிவராத்திரி விழா, நாட்டியம், நாடகம், பட்டிமன்றம், கிராமிய கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பான முறையில் 2021-2022 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. அதுபோன்றே 2022-2023 ஆம் ஆண்டில் பின்வரும் 5 திருக்கோயில்களில் சிறந்த முறையில் மகா சிவராத்திரி விழா பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது.

வ. எண்	திருக்கோயில்கள்
1.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்
2.	அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில், பேரூர்
3.	அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி
4.	அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
5.	அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில், தஞ்சாவூர்

[2023 ஏப்ரல் 19

பௌர்ணமி நாளில் 108 திருவிளக்கு பூஜை செய்தல்

98. அம்மன் திருக்கோயில்களில் பௌர்ணமி நாளில் 108 திருவிளக்கு பூஜை செய்தல் நடைமுறையில் உள்ளது. பௌர்ணமி நாள் திருவிளக்கு பூஜையில் பெண் பக்தர்கள் அதிக அளவில் பங்கேற்கும் வகையில் பெரும்பாலான அம்மன் திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் அறப்பணிகள்

கல்வி நிறுவனங்கள்

99. திருக்கோயில்களில் உபரி நிதியை தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம், 1959 பிரிவு 66(1)-ன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக பயன்படுத்த சட்டப்பிரிவு 36 வழிவகை செய்கிறது. பொது கல்வியோடு, ஆன்மிக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் நடத்தி வருகின்றன. (இணைப்பு – XVI)

கல்வி நிறுவனங்களின் வகைப்பாடு

வ. எண்	கல்வி நிறுவனங்கள்	எண்ணிக்கை
1.	கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்	9
2.	பல்தொழில்நுட்பக் கல்லூரி	1
3.	மேல்நிலைப் பள்ளிகள்	11
4.	உயர்நிலைப் பள்ளிகள்	5
5.	தொடக்கப் பள்ளிகள்	6
6.	மெட்ரிகுலேஷன் பள்ளி	2
7.	சி.பி.எஸ்.இ. பள்ளி	1
8.	திருமடங்களால் நடத்தப்படும் பள்ளிகள்	6
9.	அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள்	6
10.	ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்	3

2023 ஏப்ரல் 19]

வ. எண்	கல்வி நிறுவனங்கள்	எண்ணிக்கை
11.	நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள்	2
12.	வேத ஆகம பாடசாலைகள்	3
13.	நாலாயிர திவ்ய பிரபந்த பயிற்சிப் பள்ளி	1
	கூடுதல்	56

கல்லூரிகள்	எண்ணிக்கை	மாணவ/ மாணவியர்கள்	ஆசிரியர்கள்
கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்	9	12240	493
பல்தொழில்-நுட்பக் கல்லூரி	1	826	31
கூடுதல்	10	13066	524

பள்ளிகள்	எண்ணிக்கை	மாணவ/ மாணவியர்கள்	ஆசிரியர்கள்
மேல்நிலைப் பள்ளிகள்	11	6581	215
உயர்நிலைப் பள்ளிகள்	5	1426	39
தொடக்கப் பள்ளிகள்	6	606	25
மெட்ரிகுலேஷன் பள்ளி	2	1846	57
சி.பி.எஸ்.இ. பள்ளி	1	1206	56
கூடுதல்	25	11665	392

திருமடங்களால் நடத்தப்படும் பள்ளிகள்

99.1. தருமபுரம் ஆதீனத்தால் ஒரு தொடக்கப் பள்ளி மற்றும் ஒரு மேல்நிலைப் பள்ளியும், திருவாவடுதுறை ஆதீனத்தால்

இரண்டு நடுநிலைப் பள்ளிகள், ஒரு மேல்நிலைப் பள்ளி மற்றும் பேரூர் ஆதீனத்தால் ஒரு மேல்நிலைப் பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன.

100. கடந்த 21.10.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கொளத்தூர், அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும் கடந்த 1.12.2021 அன்று திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒட்டன்சத்திரம், அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் விளாத்திகுளம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றையும் தொடங்கி வைத்தார்கள். அறிவிக்கப்பட்ட 10 புதிய கல்லூரிகளில் மேற்சொல்லப்பட்ட 4 கல்லூரிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்

101. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு, நிதி வசதிமிக்க திருக்கோயில்களிடமிருந்து உபரி நிதியை பெற்று, ரூ.10 கோடி அளவிலான ஒரு மூலதன நிதி ஏற்படுத்தப்படும். இம்மூலதன நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் திரள் வட்டித் தொகையினைக் கொண்டு கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர் மற்றும் கழிப்பறைகள் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கென அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வளர்ச்சி பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	தொகை (கோடியில்)
2021-2022 கல்லூரி மேம்பாட்டு பணிகள்	23	10.66
2022-2023 கல்லூரி மேம்பாட்டு பணிகள்	6	10.87

2023 ஏப்ரல் 19]

கல்வி ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	தொகை (கோடியில்)
2021-2022 பள்ளிகள் மேம்பாட்டு பணிகள்	52	14.47
2022-2023 பள்ளிகள் மேம்பாட்டு பணிகள்	4	1.78

காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

101.1. சென்னையில் உள்ள காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 32 கிரவுண்டு நிலம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 13.6.2021 அன்று திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இவ்விடத்தில் செயல்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி திடீரென்று தனது செயல்பாட்டை நிறுத்திக் கொண்டதால், பள்ளியில் பயின்று வந்துள்ள மாணவ, மாணவியரின் நலனையும், பணிபுரிந்து வந்துள்ள ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளியின் நிருவாகப் பொறுப்பை, திருக்கோயிலே தன்வசம் எடுத்துக் கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தார். தற்போது இப்பள்ளி காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு திருக்கோயிலின் பொறுப்பில் திறம்படச் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் தற்போது 1173 மாணவர்களும், 49 ஆசிரியர்களும் உள்ளனர். இப்பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 1.43 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

பயிற்சிப் பள்ளிகள்

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி

102. 2006 ஆம் ஆண்டு, கோயில்களில் சமூக நீதிக் கொள்கையை அமல்படுத்தவும், கடவுளின் சேவையில் அனைவரும் சமமாக நடத்தப்படுவதை உறுதி செய்யவும் அரசு தீர்மானித்தது. கோயிலில் பூஜை செய்யும் வாய்ப்பை சாதியின் அடிப்படையில் மட்டும் யாரும் மறுக்கக் கூடாது.

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியானது கீழ்க்கண்ட விவரப்படியான 6 திருக்கோயில்கள் சார்பாக நடைபெற்று வருகிறது:

I. *அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை*

II. *அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை*

III. *அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி*

IV. *அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்*

V. *அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை*

VI. *அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்*

மேற்கண்ட 6 திருக்கோயில்களில் 100 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இந்த பள்ளிகள் குருகுல அடிப்படையில் உணவு மற்றும் தங்கும் வசதியுடன் நடத்தப்படுகின்றன. இங்கு பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.3000/– மட்டும் பயிற்சி காலமான ஓராண்டிற்கு வழங்கப்படுகிறது.

வேத ஆகம பயிற்சிப் பள்ளி

102.1. வேத ஆகம பயிற்சிப் பள்ளியானது கீழ்க்கண்ட விவரப்படியான 3 திருக்கோயில்கள் சார்பாக நடைபெற்று வருகிறது:

I. *அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி*

II. *அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்*

III. *அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம்*

பழனியிலுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வேத ஆகம பயிற்சிப் பள்ளி 19 மாணவர்களுடன் குருகுல அமைப்பில் நடைபெற்று வருகிறது. மற்ற இரு திருக்கோயில்களில் பகுதி நேர பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த 3 பயிற்சிகளில் 35 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்கு தங்கும் வசதி மற்றும் உணவுடன் மாதம் ரூ.3000/– மட்டும் பயிற்சி காலமான 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

ஓதுவார் பயிற்சிப் பள்ளி

102.2. ஓதுவார் என்பவர் சிவன், அம்பாள் மற்றும் முருகன் திருக்கோயில்களில் தேவார பாடல்களை பாடுபவர் ஆவார். திருக்கோயில்களில் தேவாரம் மற்றும் திருமுறைகள் ஓங்கி ஒலித்திட ஏதுவாக வழிவகை செய்யும் பொருட்டு கீழ்க்காணும் விவரப்படியான 3 திருக்கோயில்கள் சார்பாக ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன:

I. *அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை*

II. *அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை*

III. *அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்*

2022-2023 ஆம் ஆண்டில் சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிர்வாகத்தால் தொடங்கப்பட்ட ஓதுவார் பயிற்சி பள்ளி 9 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது.

மொத்தம் 21 மாணவர்கள் மேற்சொன்ன 3 திருக்கோயில்களில் பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு தங்கும் வசதி மற்றும் உணவுடன் மாதம் ரூ.3000/- மட்டும் பயிற்சி காலமான 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

தவில் மற்றும் நாதசுவரம் பயிற்சிப் பள்ளி

102.3. திருக்கோயில்களில் கால பூஜை மற்றும் திருவிழாக் காலங்களில் தவில் மற்றும் நாதசுவரம் இசைக்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறை சமய பழக்க வழக்கங்களில் ஒன்றாகும் இதன் காரணமாக, 1957 முதல் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தவில் மற்றும் நாதசுவரம் பயிற்சிப் பள்ளி நடைபெற்று வருகிறது. இந்த பள்ளியில் தற்போது 19 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இந்நிலையில் கடந்த 2021-2022 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற அறிவிப்பின்படி, திருநாகேசுவரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் நடத்தும் தவில் மற்றும் நாதசுவர பயிற்சி பள்ளி மேம்படுத்தப்பட்டு தற்போது 5 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது. மொத்தம் 24 மாணவர்கள் இந்த பயிற்சி பள்ளிகளில் பயின்று வருகின்றார்கள். இவர்களுக்கு தங்கும் வசதி மற்றும்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உணவுடன் மாதம் ரூ.3000/– மட்டும் பயிற்சி காலமான 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

நாலாயிர திவ்யபிரபந்த பயிற்சிப் பள்ளி

102.4. நாலாயிர திவ்யபிரபந்தங்கள் என்பது 12 ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யப்பட்ட பாசுரங்கள் ஆகும். உற்சவ மூர்த்தி புறப்பாடு ஆகும்போது மண்டபத்தில் வைத்து பூஜை செய்யும்போதும் திவ்யபிரபந்த பாசுரங்கள் பாராயணம் செய்யப்படும்.

102.5. 2022-2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இப்பயிற்சிப் பள்ளி (பகுதி நேரம்) திருவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலுக்கு சொந்தமான மாதவபந்தல் மண்டபத்தில் இயங்கி வருகிறது. பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 31 ஆகும். பயிற்சிக்காலம் 4 வருடங்கள் ஆகும்.

2021–2022 ஆம் ஆண்டில் மாமல்லபுரத்தில் உள்ள ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் புதிய வைணவ பிரபந்த பாடசாலை துவங்குவதற்கு ரூ. 96 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன

சமூக நல நிறுவனங்கள்

103. திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு மூத்த குடிமக்கள் இல்லம், மருத்துவமனைகள் போன்றவற்றை நடத்தும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. தற்போது 4 கருணை இல்லங்கள் மட்டும் செயல்பாட்டில் உள்ளன. 6 சித்த மருத்துவமனைகள், 2 ஆங்கில முறை மருத்துவமனைகள் மற்றும் ஒரு மனநலக் காப்பகம் ஆகியன திருக்கோயில்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்புகளின்படி 2 மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர் உள்ளிட்டோருடன் போதுமான மருத்துவ உபகரணங்களுடன் கூடிய 15 மருத்துவ மையங்கள் முக்கிய திருக்கோயில்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

1. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி

2. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்

3. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

4. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி

5. அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை

6. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்

7. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம்

8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை

9. அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர்

10. அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர்

11. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

12. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி

13. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோவில், பண்ணாரி

14. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோவில், மதுரை

15. அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோவில், சங்கரன்கோவில்

புதிய சித்த மருத்துவமனை

104. 2021-2022 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பாக சித்த மருத்துவ கல்லூரி தொடங்கும் பொருட்டு, சித்த மருத்துவமனை குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு நடத்தினால் மட்டுமே சித்த மருத்துவ கல்லூரி தொடங்க அனுமதி கிடைக்கும் என்ற நிபந்தனையை நிறைவேற்றும் பொருட்டு சித்த மருத்துவமனை

25.12.2022 அன்று போதிய மருத்துவர் மற்றும் செவிலியர்களுடன் தொடங்கப்பட்டது.

பதிப்பக வெளியீடுகள்

தல வரலாறு மற்றும் தலபுராணம்

105. 2021-2022 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பு மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையிலான ஆலோசனைக் குழுவின் தீர்மானங்களின்படி, பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு எளிதில் கிடைக்காத பழைய, அரிய சமய நூல்களை மறுபதிப்பு செய்ய இத்துறையின் பதிப்பகப் பிரிவு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் திருக்கோயில்களின் தலவரலாறு (கோயில்களின் வரலாறு) மற்றும் தலபுராணம் (கோயில்களின் புராணங்கள்) ஆகியவற்றைப் படிக்கத் தெரிந்துகொள்ளவும் பழங்கால கோவில்களின் பாரம்பரியம், முக்கியத்துவம், கட்டடக் கலை, கல்வெட்டுகள் மற்றும் வழிபாட்டின் முக்கியத்துவத்தை பொதுமக்கள் அறிந்துகொள்ளவும் முடியும்.

19.1.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 108 அரிய பழைய சமயத் தமிழ் நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டன. முதற்கட்டமாக, மறுபிரசுரம் செய்யப்பட்ட சில நூல்கள் சிற்ப சாஸ்திர நூல்கள், ஆலய நிர்மாண பிம்ப லட்சண நூல், சிற்பச் செந்நூல், இந்து மத இணைப்பு விளக்கம், சைவமும் வைணவமும் முதலானவை. மேலும் 108 புத்தகங்களும் பெருமளவில் அச்சிடப்பட்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில், திருக்கோயில் புத்தகக் கடைகளிலும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள புத்தக விற்பனைக் கூடத்திலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

“திருக்கோயில்” திங்களிதழ்

106. இந்து சமய அறநிலையத் துறையால் 1958 ஆம் ஆண்டு முதல் “திருக்கோயில்” என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்படுகிறது. இந்த மாத இதழ் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள், துணுக்கு செய்திகள் மற்றும் ஆன்மிக வினா-விடைகள் என எழில்மிகு வண்ணங்களுடன் வெளியிடப்படுகின்றன. சந்தாதாரர்கள் பயனடையும் வகையில்

2023 ஏப்ரல் 19]

இணைய வழியாக (online) சந்தா செலுத்தி இவ்விதழை பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி

107. திருக்கோயில்கள் நமது தொன்மத்தின் அடையாளம் என தமிழ் மொழி பதிவு செய்கிறது. இதனால் இம்மொழி மதிப்பார்ந்த பக்தி மொழியாகக் கருதப்படுகிறது. பழங்காலச் சிற்பங்கள், உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் உள்ளிட்டவைகளை தன்னகத்தே கொண்டு திருக்கோயில்கள் பாதுகாத்து வருகின்றன. ஆவணப்படுத்த வேண்டிய தகவல்களை முன்னோர்கள் காகிதப் பயன்பாடு வருவதற்கு முன் பனைவோலைகளையே பதிவுத்தாள்களாக பயன்படுத்தி வந்தனர். திருக்கோயில்கள் சார்ந்த ஆவணப் பதிவுகளுக்கு திருக்கோயில்களே பாதுகாப்பு பெட்டகங்களாக இருந்துள்ளன.

அந்நாளில் அன்றாடம் நடைபெற்ற திருக்கோயில் நிர்வாகம், மன்னர்களால் திருக்கோயில்களுக்கு வழங்கிய கொடை முதலிய விவரங்களை ஓலைச்சுவடிகள் தெரிவிப்பதால் பண்டைய கால காலாசாரத்தின் பிம்பங்களாக ஓலைச்சுவடிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்விவரங்களை வருங்கால தலைமுறை அறிந்துகொள்ளும் வகையில் ஓலைச்சுவடிகளை மின்பதிவாக்கி தற்கால தமிழுக்கு மாற்றும் நடவடிக்கையில் உள்ளது.

இந்து சமய அறநிலையத் துறையால் இப்பணி உலக தமிழாராய்ச்சி நிறுவன சுவடியியல் துறையில் ஒப்படைக்கப்பட்டு 21 திருக்கோயில்கள் கள ஆய்வு செய்யப்பட்டது. இதில், இதுவரை 1,76,469 ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதனோடு 21 பட்டயங்கள் மற்றும் இலக்கியச் சுவடிகளும் கிடைத்துள்ளன. இதில், மொத்தம் 26,734 சுவடிகள் அறிவியல் முறைப்படி உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயிற்சி திட்டங்கள்

புத்தொளி பயிற்சி

108. திருக்கோயில்களில் பணிபுரியும் 'அர்ச்சகர்கள்', 'பட்டாச்சாரியார்கள்', 'ஓதுவார்கள்' தங்கள் பணிகளைத்

திறம்பட செய்திட ஏதுவாக 1991 ஆம் ஆண்டு "புத்தொளி பயிற்சி திட்டம்" தொடங்கப்பட்டது. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

108.1. துறைப் பணியாளர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு வகுப்புகள் நடத்த முடிவு செய்யப்பட்டு இதற்காக திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ஒரு நிருவாக பயிற்சி மையம் கட்டப்படவுள்ளது.

யோகா வகுப்புகள்

108.2. பொதுமக்கள்/இறை அன்பர்கள் உடல் மற்றும் மனநலத்தை முறையாகப் பேணிவரும்பொருட்டு, போதிய நிதிவசதியும் இடவசதியும் கிடைக்கக்கூடிய, தூய்மையான மற்றும் காற்றோட்டமான இடங்களில், பயிற்சியும் தகுதியும் பெற்றுள்ளவர்களைக் கொண்டு ஒவ்வொரு நாள் காலையிலும் 52 திருக்கோயில்களில் தியான வகுப்புகளும், யோகா பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்

109. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பல்வேறு வகையான பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களது நலன் காத்திட பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

குடும்ப நல நிதித் திட்டம்

109.1. பணிக்காலத்தில் இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக "குடும்ப நல நிதித் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.15 கோடி மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பணிக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.3 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

திருக்கோயில் பணியாளர்கள் நல நிதி

109.2. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.6.5 கோடி பெறப்பட்டு "திருக்கோயில் பணியாளர்கள் நல நிதி" என்ற ஒரு மைய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு வருவாய் ரூ.1 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில், ரூ.750/-க்கும் குறைவாக மாத ஊதியம் பெறுகின்றவர்களின் ஊதிய நிலுவைத் தொகை மேற்கண்ட மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் திரள் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

109.3. மேலும், ஆண்டு வருவாய் 1 இலட்சம் ரூபாய் மற்றும் அதற்கு மேலாக உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, அவர்கள் தங்களது சேவைக் காலத்தின்போது செலுத்தி வந்துள்ள சந்தா தொகையுடன் ரூ.5,000/-ம் சேர்த்து ஓய்வு பெறும் போது சிறப்பு வருங்கால சேமநல நிதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த மைய நிதியிலிருந்து பெறப்படுகின்ற திரள் வட்டித் தொகையினைக் கொண்டு திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் இசைவாணர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கருணை அடிப்படையில் பணி நியமனம்

109.4. திருக்கோயில்களில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு "கருணை அடிப்படையில் பணி நியமனம்" வழங்கப்படுகிறது. திருக்கோயில்களில் பணியின்போது இறந்த 95 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இசைவாணர்கள் மற்றும் ஓதுவார்கள் நியமனம்

109.5. திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கல இசை இசைக்கப்படுவது வழக்கத்தில் உள்ளது. இந்த நோக்கத்திற்காக, திருக்கோயில்களில் போதிய எண்ணிக்கையிலான இசைக்கலைஞர்கள் மற்றும் ஓதுவார்கள் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள்.

[2023 ஏப்ரல் 19

ஓய்வூதியத் திட்டம்

110. 'அர்ச்சகர்', 'ஓதுவார்', 'வேதபாராயணர்', 'அரையர்', 'திவ்ய பிரபந்தம் பாடுவோர்' மற்றும் 'இசைக் கலைஞர்கள்' ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம் வகுக்கப்பட்டது. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்றுள்ள அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்ய பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு மாதந்தோறும் ரூபாய் 1,000 ஓய்வூதியமாக அரசால் வழங்கப்பட்டு வந்தது.

அரசு நிதியிலிருந்து மாதந்தோறும் ரூ.1,000/– வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம், ரூ.3000/- ஆக 2021-2022 ஆம் நிதியாண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 100 ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

110.1. திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) பணியாளர் சேமநல நிதித் திட்டம்

நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்தக் கூடியதாகும். இத்திட்டத்தின்படி, வருங்கால சேமநல நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள திருக்கோயில் பணியாளர்களில், 13.2.2006 முதல் ஓய்வுபெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்கள், பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின்கீழ், ஓய்வூதியம் மற்றும் குடும்ப நல ஓய்வூதியம் ஆகிய பயன்களைப் பெறுவர்.

(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்

1.1.2006 முதல் ஓய்வு பெறுவதற்கு பத்து ஆண்டிற்குகீழ் பணிக்காலம் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கும், பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் இருந்தும் பணியாளர் சேமநல நிதித் திட்டத்தில் சேர்க்கும் அளவிற்கு நிதி வசதியில்லாத திருக்கோயில்களில் பணியாற்றுபவர்களுக்கும், துறை நிலையிலான

2023 ஏப்ரல் 19]

ஒய்வூதியம் பெறும் திட்டம் 2006 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இதுவரையில், 5,059 ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

(iii) குடும்ப ஓய்வூதியம்

துறை நிலையிலான ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால், அவரது நேரடி வாரிசுதாரர்களான கணவனோ, மனைவியோ வாழ்நாள் முழுவதும் பயன்பெறும் விதத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து குடும்ப ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்கள் இறுதியாக பெற்று வந்துள்ள ஓய்வூதியத் தொகையில் 50 விழுக்காடு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 303 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

2022-2023 ஆம் ஆண்டில், 56 காலஞ்சென்ற துறை நிலை ஓய்வூதியதாரர் குடும்பத்தினருக்கு குடும்ப ஓய்வூதிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடை மற்றும் பணியாளர்களுக்குச் சீருடை

110.2. இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தமிழர் திருநாளாம் தைத் திருநாளில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடைகள் மற்றும் பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 17,655 திருக்கோயில் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

திருக்கோயில் பணியாளர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து வழங்குதல்

110.3. அரசு பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழுவின் பரிந்துரையின்படி திருத்திய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டதுபோல 48 முதுநிலை திருக்கோயில்களில் பணிபுரியும் 2293 திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு அகவிலைப் படி உயர்வு

110.4. அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ரூபாய் ஒரு இலட்சம்

மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருவாய் வரப்பெறும் திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் நிரந்தர பணியாளர்களுக்கு 1.1.2023 முதல் அகவிலைப் படியை 34 விழுக்காட்டிலிருந்து, 4 விழுக்காடு உயர்வு செய்து, 38 விழுக்காடாக நிர்ணயம் செய்து வழங்கிட உத்தரவிடப்பட்டது. இதன் மூலம் சுமார் 12,000 திருக்கோயில் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

திருக்கோயில் பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக்கொடை உயர்வு

110.5. அரசு ஊழியர்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படுவது போல் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் முழுநேரம், பகுதிநேரம், தொகுப்பூதியம், தினக்கூலி பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கும் ரூ.2000/– ஆக வழங்கப்பட்டு வந்த பொங்கல் கருணைக் கொடை இவ்வாண்டிலிருந்து ரூ.3000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இதனால் சுமார் 15,000 திருக்கோயில் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

திருக்கோயிலில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்தல்

110.6. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பல ஆண்டுகளாக தினக்கூலி/தொகுப்பூதிய அடிப்படையில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்து பணியாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கில் 2021-2022 ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது 4.9.2021 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் “திருக்கோயில்களில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் தற்காலிகமாக பணிபுரியும் சுமார் 1500 தகுதியான பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்படுவர்” எனும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பினை செயல்படுத்தும்பொருட்டு துறையின் கட்டுப்பாட்டில் உள்ள

2023 ஏப்ரல் 19]

திருக்கோயில்களில் காலியாக உள்ள அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களில் தினக்கூலி/தொகுப்பூதிய அடிப்படையில் ஐந்து வருடங்களுக்கு மேலாக தற்காலிகமாக பணிபுரியும் தகுதி வாய்ந்த பணியாளர்களின் பணியினை நிபந்தனைகளுக்குட்பட்டு பரிசீலித்து ஒவ்வொரு பணியாளராக ஆய்வு செய்து பணி வரன்முறை செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. தற்போது வரை 1173 பணியாளர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.4.2022 அன்று 33 நபர்களுக்குப் பணி வரன்முறை ஆணை வழங்கினார்கள்.

கிராமக்கோயில் பூசாரிகள் நலத் திட்டங்கள்

கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

111. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமத் திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகளுக்கென 'கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்' ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலமாக நலத் திட்ட உதவிகள் பூசாரிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புற பூசாரிகள் நல வாரிய உறுப்பினர்கள் மரணமடைந்தால் அன்னாரின் இறுதிச் சடங்கிற்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ.2,000/-லிருந்து ரூ.5,000/- ஆகவும் மற்றும் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.15,000/-லிருந்து ரூ.50,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்ட உறுப்பினர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள், திருமண நிதியுதவி, கல்வியுதவி மற்றும் மகளிர் நல உதவிகள் வழங்கப்படுகின்றன.

கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

111.1. இந்து சமய அறநிலையத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு, கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் மாத ஓய்வூதியம் ரூ.3,000/- வழங்கப்பட்டு வந்தது.

இத்திட்டத்தினை பரிசீலித்து 2021-2022 ஆம் நிதியாண்டில் கிராமக்கோயில் பூசாரிகளுக்கான மாத ஓய்வூதியத்தினை ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 19

இத்திட்டத்தின்கீழ் தற்போதுள்ள நிலையில் 5,450 கிராமக்கோயில் பூசாரிகள் பயனடைந்து வருகின்றனர்.

துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்

112. திருக்கோயிலில் வழிபடுவோருக்கான சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டம் (Integrated Temple Management System) ஆகியவற்றிற்கான வலைதள முகப்பு இத்துறையால் 2021 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையில் தொடங்கப்பட்டது. தற்போதுள்ள மின்னணு காலத்திற்கேற்ற வகையில் மின்னணு உலகத்தில் உள்ள நற்பயன்களைப் பயன்படுத்தி வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் தகவல் பாதுகாப்பு போன்ற தரவுகளை முறைப்படுத்தி பக்தர்கள் பார்வைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் இந்த மின்னணுவியல் காலத்தில் திருக்கோயில் அனுபவத்தை முழுமையாகப் பெறவைப்பதே ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) நோக்கமாகும். தமிழ்நாட்டின் ஒவ்வொரு திருக்கோயிலிலும் உள்ள பல்வேறு சேவைகளை ஒரு வலைதள முகப்பில் ஒருங்கிணைத்து வங்கிகளின் மூலமாகக் கட்டணம் செலுத்தி பக்தர்கள் எளிதில் சேவைகளைப் பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எந்தெந்த சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) கீழ் கொண்டு வரவேண்டும், எந்தெந்த சேவைகளை திருக்கோயில் பக்தர்களுக்கு இணையம் வழியாக வழங்க வேண்டும், திருக்கோயில் சிலைகள்/உலோகத் திருமேனிகள் குறித்த தகவல்கள் மற்றும் நில ஆவணங்கள் பதிவேற்றம் செய்தல் போன்றவைகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தைப் (Integrated Temple Management System) பயன்படுத்திக்கொள்ள தேவையான முடிவுகள் எடுக்கும் வாய்ப்புகள் திருக்கோயில் நிருவாகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. தேசிய தகவல்கள் மையத்தின் (NIC) உதவியுடன், திருக்கோயில் நிருவாகம் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான பல்வேறு அம்சங்களுக்குத் தனித் தனியாக

2023 ஏப்ரல் 19]

தொகுப்புகள் உருவாக்கப்பட்டு தகவல்கள் தனித் தனியாகத் தொகுக்கப்படுகின்றன. நிலங்கள் மீட்பு, புவியியல் தகவமைப்பு (Geographic Information System) வழக்குகள், திருக்கோயில் சொத்துகள், இணையம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோருதல், கைப்பேசி செயலி, அன்னதானத் திட்டம், திருக்கோயில் மற்றும் உலோகத் திருமேனி விவரம், கேட்பு நிலுவை வசூல் விவரம், இணையம் மூலம் மின்னணு சேவை போன்றவைகளுக்குத் தனித் தனி தொகுப்புகள் (modules) நடைமுறையில் உள்ளன.

நிருவாகம் தொடர்பான தொகுப்புகளில் உள்ளவை

- சொத்துப் பதிவேடுகள்
- அங்கீகரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டங்கள் மற்றும் தணிக்கை அறிக்கைகள்
- நிலங்கள் விவரம்
- திருப்பணி
- நீதிமன்ற வழக்குகள் தொகுப்பு
- புவியியல் தகவமைப்புப் பதிவுகள் ஒருங்கிணைப்பு
- இணையம்மூலம் ஒப்பந்தப்புள்ளிகள்
- திருக்கோயில் வரவு-செலவு
- ஓய்வூதியம் வழங்குதல்
- அறங்காவலர்கள் விவரம்
- பூசாரி நல வாரியம்

பக்தர்கள் தொடர்புடைய தொகுப்புகளில் உள்ளவை

- திருக்கோயில் குறித்த தகவல்கள்
- இணைய சேவைமூலம் முன்பதிவுகள்
- கைப்பேசிச் செயலி ஒருங்கிணைப்பு
- இணையம்மூலம் கோரிக்கை நிறைவேற்றும் அழைப்பு மையம்
- அன்னதானம்

[2023 ஏப்ரல் 19

திருக்கோயில்களில் நெடுங்காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் பாரம்பரியத்தையும் பழக்கங்களையும் ஆகம விதிகளையும் காப்பதுடன், மின்னணுப் பரிமாற்றங்களைப் பயன்படுத்தி பக்தர்களுக்கு மேம்பட்ட ஆன்மிக அனுபவத்தையும் வசதிகளையும் வழங்குவது ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) அடிப்படை நோக்கமாகும். இந்தத் திருக்கோயில் ஆவணங்களைப் பாதுகாத்தல், நிதி நிருவாகத்தைக் கண்காணித்தல், திருக்கோயில் சொத்துகள் கொள்ளை போவதிலிருந்து தடுப்பதை உறுதி செய்தல், திருக்கோயில் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகளைச் சேகரித்துக் காத்தல், திருக்கோயிலுக்குச் சொந்தமான கற்சிலைகள்/உலோகத் திருமேனிகள் உள்ளிட்ட சொத்துகள் குறித்து விவரங்கள் சேகரிக்கும்பொருட்டு பதிவிடுதல், திருக்கோயில் நிலங்கள் மற்றும் நில வருவாய்கள் மின்னணு வசதியுடன் கண்காணித்தல், பொதுமக்களையும் திருக்கோயில்களின் சுற்றுச்சூழலையும் ஒருங்கிணைத்தல் போன்ற பணிகள் ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) முக்கிய பணியாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த 8.10.2021 அன்று, கேட்பு வசூல் நிலுவை தொடர்பான தொகுப்புகளுடன் இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதுவரை ரூபாய் 362.96 கோடி நிலுவை வசூலாகி உள்ளது. 11.4.2022 ஆம் தேதியில் தொடங்கி வைக்கப்பட்ட இணையவழி திருக்கோயில் சேவைகள் மூலம் 33,394 தொகைப் பரிவர்த்தனைகள் மூலம் ரூ.2.75 கோடி வசூலாகியுள்ளது.

பக்தர்கள் திருக்கோயில்களில் சுலபமான தரிசனம் செய்வதற்கான வாய்ப்புகளை ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) மூலம் மேற்கொள்ள இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது. இந்த மின்னணுக் காலத்தில் திருக்கோயில் நிருவாகத்தின் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புணர்ச்சியையும் இத்துறை உறுதி செய்து நிருவாகத்தை மேம்படுத்தி பக்தி உணர்வையும் போற்றி வருகிறது.

2023 ஏப்ரல் 19]

கட்டணமில்லாத் தொலைபேசி சேவை

113. திருக்கோயில்களுக்கு செல்லும் பக்தர்கள் தங்களது ஆலோசனைகள் மற்றும் குறைகளை தெரிவிக்க ஆணையர் அலுவலகத்தில் கட்டணமில்லாத் தொலைபேசி கடந்த 4.1.2023 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டணமில்லாத் தொலைபேசி எண்-1800 425 1757 ஆகும். கடந்த 24.3.2023 தேதி வரை 270 புகார்கள் பதிவு செய்யப்பட்டு தீர்வு காண்பதற்காக உரிய அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நிறைவுரை

'கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி'

-திருவள்ளுவர்

கொடைக்குணம், கருணை மனப்பான்மை, நீதி தவறாத செங்கோல், குடிகள் நலம் காத்தல் ஆகிய இந்நான்கு குணப்பாங்குகளும் யாரிடம் மிளிர்கிறதோ அவரே உண்மையான அரசன் என்கிறது குறள்.

இதனை உளங்கொண்டு உரசிப்பார்த்தால் இன்றைய தமிழ்நாடு அரசு மேற்கூறிய நான்கு குணப்பாங்குகளையும் குறைவின்றி தன்னகத்தே கொண்டு வழுவற அவற்றை செயல்படுத்தி வருவது கண்கூடு. இன்று அதனால் இந்து சமய அறநிலையத் துறை எதிர்காலத்தை மிகத் துல்லியமாக அளந்தறியும் பார்வையையும், துரிதமாக கடமையாற்றும் வல்லமையையும் பெற்றிருக்கிறது.

திருக்கோயில்களைப் புதுப்பித்தல், நூற்றுக்கணக்கான திருக்கோயில்களில் திருக்குட நன்னீராட்டு நடத்துதல், சாதி வேறுபாடின்றி அர்ச்சகர் நியமனம் மற்றும் தமிழ் மரபை மீட்டெடுக்கும் வகையில் கோயில் வழிபாட்டின் முக்கியத்துவம் உணர்ந்து தமிழில் அர்ச்சனை, சமயம் சார்ந்த இலக்கிய நூல்களை வெளியிடுதல், கோயில்களில் அன்னதான திட்டத்தின்கீழ் நாள் முழுவதும் ஏழை எளியோருக்கு உணவளித்தல் உள்ளிட்ட பல திட்டங்களைத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பாளர்களால் அபகரித்து வைக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்

[2023 ஏப்ரல் 19

சரியான புள்ளிவிவரங்களுடன் அனைத்து சிக்கல்களையும் களைந்து வெற்றிகரமாக மீட்கப்பட்டுள்ளன என்பது நாடறிந்த செய்தியாகும். இச்செய்தியானது மாநிலம் மற்றும் பல்வேறு நாட்டு மக்களால் பாராட்டிப் பேசப்பட்டதாகும்.

மேலும் தமிழக அரசு மேற்கொண்ட முயற்சியால் ஒரு நாள் பூசை கூட செய்ய வாய்ப்பு இல்லாத பல திருக்கோயில்களைக் கண்டறிந்து அவற்றில் முறையாக ஒரு கால பூசை நடைபெற அரசே நிதி வழங்கி தற்போது ஒரு கால பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் இறைவனின் திருவருளை நிறைவாகப் பெற்று, பயனடைந்து வருகின்றனர்.

ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்பதற்குத் தேவையான அளவீட்டுக் கருவிகள் மற்றும் நில அளவைக்குரிய துணைக் கருவிகளைக் கொண்டு போர்க்கால அடிப்படையில் நிலங்களை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநிலம் முழுவதும் உள்ள சிதிலமடைந்த கோயில்களைக் கண்டறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு துரிதமான முறையில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்து சமய அறநிலையத் துறையானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அக்கறை காரணமாக ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளிலேயே பல புதிய அத்தியாயங்களைப் படைத்து பல சாதனைகளைப் புரிந்துள்ளது. இனிவரும் காலங்களிலும் இத்துறை தனது வெற்றிப்பாதையில் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

இணைப்பு – I

இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள நிறுவனங்கள்

1.	திருக்கோயில்கள்	43283
2.	மடங்கள்	45
3.	திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள்	68
4.	குறிப்பிட்ட அறக்கட்டளைகள்	1127
5.	அறக்கட்டளைகள்	1264
6.	சமணத் திருக்கோயில்கள்	22
	கூடுதல்	45809

இணைப்பு – II

இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு

வ. எண்	வகைப்பாடு	ஆண்டு வருமானம்	நிறுவனங்கள் எண்ணிக்கை
1.	சட்டப்பிரிவு 49(1)-ன் கீழ் பட்டியலைச் சாராத நிறுவனங்கள்	ரூ.10,000/–க்கும் குறைவாக	34,649
2.	பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் சட்டப்பிரிவு 46(i)	ரூ.10,000/-லிருந்து ரூ.2 இலட்சத்திற்கு குறைவாக	3,770
3.	சட்டப்பிரிவு 46(ii)	ரூ.2 இலட்சத்தி லிருந்து ரூ.10 இலட்சத்திற்கு குறைவாக	595
4.	சட்டப்பிரிவு 46(iii)	ரூ.10 இலட்சமும் அதற்கு மேலும்	578
5.	உபகோயில்கள்	—	6,385
6.	மடங்கள்	—	45
		கூடுதல்	45,809

[2023 ஏப்ரல் 19

இணைப்பு–III

உதவித் தொகை சட்டப்பிரிவு 92(1)

வ. எண்	ஆண்டு வருமானம்	விழுக்காடு (%)
1.	ரூ.5,000/-க்கும் குறைவாக உள்ளவற்றிற்கு	—
2.	ரூ.5,000/-க்கும் மேலாக, ரூ.20,000/-க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு	4%
3.	ரூ.20,000/-க்கும் மேலாக ரூ.60,000/-க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு	5%
4.	ரூ.60,000/-க்கும் மேலாக ரூ.2,00,000/-க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு	6%
5.	ரூ.2,00,000/-க்கும் மேலாக ரூ.5,00,000/-க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு	7%
6.	ரூ.5,00,000/ – மற்றும் அதற்கு மேல்	12%

தணிக்கைக் கட்டணம் சட்டப்பிரிவு 92 (2)

வ. எண்	ஆண்டு வருமானம்	விழுக்காடு (%)
1	ரூ.5000/-க்கு குறைவாக உள்ளவற்றிற்கு	—
2	ரூ.5000/-க்கு மேலாக ரூ.5,00,000/-க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு	1.5%
3	ரூ.5,00,000/– மற்றும் அதற்கு மேல்	4%

2023 ஏப்ரல் 19]

இணைப்பு – IV

தலைமை அலுவலகத்தின் பணியாளர் அமைப்பு

துறை அலுவலர்கள்

வ. எண்	பதவி	பணியிடங்களின் எண்ணிக்கை
1.	கூடுதல் ஆணையர் (நிருவாகம்) – (இ.ஆ.ப.)	1
2.	கூடுதல் ஆணையர் (விசாரணை)	1
3.	கூடுதல் ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்)	1
4.	கூடுதல் ஆணையர் (பொது)	1
5.	இணை ஆணையர் (தலைமையிடம்)	1
6.	இணை ஆணையர் (சட்டச்சேர்மம்)	1
7.	இணை ஆணையர் (திருப்பணி)	1
8.	இணை ஆணையர் (சரிபார்ப்பு)	1
9.	உதவி ஆணையர் (சட்டச்சேர்மம்)	1
10.	உதவி ஆணையர்/நிருவாக அலுவலர் (கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்)	1
11.	உதவி ஆணையர்	8
12.	ஆசிரியர், திருக்கோயில் திங்களிதழ்	1

[2023 ஏப்ரல் 19

இணைப்பு—V

தலைமை அலுவலகத்தின் பணியாளர் அமைப்பு மாற்றுப் பணியில் பணிபுரியும் அலுவலர்கள்

வ. எண்	பதவி	பணி இடங்களின் எண்ணிக்கை	தாய்த் துறை
1.	தலைமைப் பொறியாளர்	1	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை
2.	கண்காணிப்புப் பொறியாளர்	1	பொதுப் பணித் துறை/ நெடுஞ்சாலைத் துறை
3.	தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை)	4	வருவாய்த் துறை
4.	செயற்பொறியாளர்	2	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை
5.	உதவிக் கோட்டப் பொறியாளர்	3	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை
6.	துணை ஆட்சியர்	4	வருவாய்த் துறை
7.	சிறப்பு வட்டாட்சியர்	2	வருவாய்த் துறை
8.	உதவிப் பொறியாளர்	1	தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம்
9.	உதவிப் பொறியாளர் (கட்டுமானம்)	3	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

வ. எண்	பதவி	பணி இடங்களின் எண்ணிக்கை	தாய்த் துறை
10.	உதவிப் பொறியாளர் (மின்)	2	எரிசக்தித் துறை
11.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	2	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை
12.	வரைதொழில் அலுவலர்	2	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை
13.	இளநிலை வரைதொழில் அலுவலர்	4	நீர்வளத் துறை
14.	முதுநிலை கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத் துறை
15.	உதவி கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத் துறை
16.	இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்	1	செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை
17.	வட்டத் துணை ஆய்வர்	4	நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை

[2023 ஏப்ரல் 19

இணைப்பு–VI

அலுவலர்களின் ஆளுகை எல்லை

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
1.	இணை ஆணையர், சென்னை–1	1. உதவி ஆணையர், சென்னை	சென்னை மாவட்டத்தில் திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, மாதவரம், பெரம்பூர், புரசைவாக்கம், எழும்பூர், அம்பத்தூர் மற்றும் அயனாவரம் ஆகிய வருவாய் வட்டங்கள்
2.	இணை ஆணையர், சென்னை-2		சென்னை மாவட்டத்தில் மயிலாப்பூர், அமைந்தகரை, மதுரவாயல், மாம்பலம், கிண்டி, வேளச்சேரி, ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய வருவாய் வட்டங்கள்
3.	இணை ஆணையர், காஞ்சிபுரம்	2. உதவி ஆணையர், காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் மாவட்டம்
		3. உதவி ஆணையர், செங்கல்பட்டு	செங்கல்பட்டு மாவட்டம்
4.	இணை ஆணையர், வேலூர்	4. உதவி ஆணையர், திருவள்ளூர்	திருவள்ளூர் மாவட்டம்
		5. உதவி ஆணையர், வேலூர்	வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள்

2023 ஏப்ரல் 19]

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
5.	இணை ஆணையர், திருவண்ணா மலை	6. உதவி ஆணையர், திருவண்ணா மலை	திருவண்ணாமலை மாவட்டம்
		7. உதவி ஆணையர், கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி மாவட்டம்
6.	இணை ஆணையர், சேலம்	8. உதவி ஆணையர், சேலம்	சேலம் மாவட்டம்
		9. உதவி ஆணையர், தருமபுரி	தருமபுரி மாவட்டம்
7.	இணை ஆணையர், ஈரோடு	10. உதவி ஆணையர், ஈரோடு	ஈரோடு மாவட்டம்
		11. உதவி ஆணையர், நாமக்கல்	நாமக்கல் மாவட்டம்
8.	இணை ஆணையர், கோயம்புத்தூர்	12. உதவி ஆணையர், கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்
9.	இணை ஆணையர், மயிலாடுதுறை	13. உதவி ஆணையர், மயிலாடுதுறை	மயிலாடுதுறை மாவட்டம்
		14. உதவி ஆணையர், கும்பகோணம்	தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் வருவாய் வட்டங்கள்

[2023 ஏப்ரல் 19

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
10.	இணை ஆணையர், நாகப்பட்டினம்	15. உதவி ஆணையர், நாகப்பட்டினம்	நாகப்பட்டினம் மாவட்டம்
		16. உதவி ஆணையர், திருவாரூர்	திருவாரூர் மாவட்டம்
11.	இணை ஆணையர், தஞ்சாவூர்	17. உதவி ஆணையர், தஞ்சாவூர்	தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் நீங்கலாக
		18. உதவி ஆணையர், புதுக்கோட்டை	புதுக்கோட்டை மாவட்டம்
12.	இணை ஆணையர், திருச்சிராப் பள்ளி	19. உதவி ஆணையர், திருச்சிராப் பள்ளி	திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி மற்றும் துறையூர் வருவாய் வட்டங்கள் நீங்கலாக
		20. உதவி ஆணையர், பெரம்பலூர்	பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி மற்றும் துறையூர் வருவாய் வட்டங்கள்
13.	இணை ஆணையர், திருப்பூர்	21. உதவி ஆணையர், திருப்பூர்	திருப்பூர் மாவட்டம்
		22. உதவி ஆணையர், கரூர்	கரூர் மாவட்டம்

2023 ஏப்ரல் 19]

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
14.	இணை ஆணையர், திண்டுக்கல்	*23.* உதவி ஆணையர், திண்டுக்கல்	திண்டுக்கல் மாவட்டம்
		24. உதவி ஆணையர், தேனி	தேனி மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி மற்றும் பேரையூர் வருவாய் வட்டங்கள் நீங்கலாக
15.	இணை ஆணையர், சிவகங்கை	*25.* உதவி ஆணையர், இராமநாதபுரம்	இராமநாதபுரம் மாவட்டம்
		26. உதவி ஆணையர், சிவகங்கை	சிவகங்கை மாவட்டம்
16.	இணை ஆணையர், மதுரை	*27.* உதவி ஆணையர், மதுரை	மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி மற்றும் பேரையூர் வருவாய் வட்டங்கள் நீங்கலாக
		28. உதவி ஆணையர், விருதுநகர்	விருதுநகர் மாவட்டம்
17.	இணை ஆணையர், திருநெல்வேலி	*29.* உதவி ஆணையர், திருநெல்வேலி	திருநெல்வேலி மாவட்டம்
		30. உதவி ஆணையர், நாகர்கோவில்	கன்னியாகுமரி மாவட்டம்

[2023 ஏப்ரல் 19

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
18.	இணை ஆணையர், தூத்துக்குடி	31. உதவி ஆணையர், தூத்துக்குடி	தூத்துக்குடி மாவட்டம்
		32. உதவி ஆணையர், தென்காசி	தென்காசி மாவட்டம்
19.	இணை ஆணையர், விழுப்புரம்	33. உதவி ஆணையர், விழுப்புரம்	விழுப்புரம் மாவட்டம்
		34. உதவி ஆணையர், கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி மாவட்டம்
20.	இணை ஆணையர், கடலூர்	35. உதவி ஆணையர், கடலூர்	கடலூர் மாவட்டம்
		36. உதவி ஆணையர், அரியலூர்	அரியலூர் மாவட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

இணைப்பு – VII

புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு

வ. எண்	பதவி	எண்ணிக்கை
1.	தலைமைப் பொறியாளர்	1
2.	கண்காணிப்புப் பொறியாளர்	1
3.	செயற்பொறியாளர்	8
4.	உதவி செயற்பொறியாளர் / உதவி கோட்டப் பொறியாளர் (கட்டுமானம்)	22
5.	உதவி செயற்பொறியாளர் / உதவிக் கோட்டப் பொறியாளர் (மின்)	7
6.	உதவி பொறியாளர் (கட்டுமானம்)	40
7.	உதவி பொறியாளர் (மின்)	13
8.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	2
9.	வரைதொழில் அலுவலர்	22
10.	இளநிலை வரைதொழில் அலுவலர்	40
11.	தலைமை ஸ்தபதி (செயற்பொறியாளர் நிலையில்)	1
12.	மண்டல ஸ்தபதி (உதவி செயற்பொறியாளர் நிலையில்)	21
13.	உதவி ஸ்தபதி (உதவி பொறியாளர் நிலையில்)	38
14.	தட்டச்சர்	6
15.	ஓட்டுநர்	2
16.	அலுவலக உதவியாளர்	2
	கூடுதல்	226

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

இணைப்பு—VIII

செயல் அலுவலர்கள் வகைப்பாடு

வ. எண்	செயல் அலுவலர் நிலை	பணியிடங்கள்
1.	இணை ஆணையர்	11
2.	துணை ஆணையர்	9
3.	உதவி ஆணையர்	27
4.	செயல் அலுவலர்-நிலை 1	100
5.	செயல் அலுவலர்-நிலை 2	117
6.	செயல் அலுவலர்-நிலை 3	250
7.	செயல் அலுவலர்-நிலை 4	154
	கூடுதல்	668

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

இணைப்பு—IX

தங்கரதம் உள்ள திருக்கோயில்கள்

வ. எண்	திருக்கோயில் பெயர்
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி
2.	அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை
3.	அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
6.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை
7.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோவில்
8.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர்
9.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்
10.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
11.	அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில்
12.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
13.	அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி
14.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
15.	அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி

[2023 ஏப்ரல் 19

வ. எண்	திருக்கோயில் பெயர்
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை
17.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு
19.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
20.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை
22.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி
23.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
24.	அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை
25.	அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு
26.	அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை
27.	அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி
28.	அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை
29.	அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம்
30.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
31.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர்

2023 ஏப்ரல் 19]

வ. எண்	திருக்கோயில் பெயர்
32.	அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர்
33.	அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர்
34.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல்
35.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல்
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம்
37.	அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி
38.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி.
39.	அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை
40.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்
41.	அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி
42.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
43.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம்
44.	அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோவில், மதுரை
45.	அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், ராணிப்பேட்டை
46.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை
47.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்

வ. எண்	திருக்கோயில் பெயர்
48.	அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம்
49.	அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு
50.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம்
51.	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர்
52.	அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி
53.	அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்
54.	அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை
55.	அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம்
56.	அருள்மிகு பாலதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சுக்கிரவாரபேட்டை, கோயம்புத்தூர்
57.	அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், சிவகாசி, விருதுநகர்
58.	அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோயில், தேரழுந்தூர், நாகப்பட்டினம்
59.	அருள்மிகு பூங்கா முருகன் திருக்கோயில், தல்லாகுளம், மதுரை
60.	அருள்மிகு வாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், விருதுநகர்
61.	அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி

2023 ஏப்ரல் 19]

வ. எண்	திருக்கோயில் பெயர்
62.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருவப்பூர், புதுக்கோட்டை
63.	அருள்மிகு சௌந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம்
64.	அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி
65.	அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், கல்விடங்கம், சங்ககிரி வட்டம், சேலம்
66.	அருள்மிகு வரசாகி திருக்கோயில், அடையாறு, சென்னை
67.	அருள்மிகு வஞ்சியம்மன் திருக்கோயில், மூலனூர், தாராபுரம், திருப்பூர்
68.	அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீஸ்வரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

இணைப்பு–X

வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள்

வ. எண்	திருக்கோயில் பெயர்
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
3.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
7.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை
8.	அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம்
9.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்
10.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில்
11.	அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி
12.	அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை
13.	அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி
14.	அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை
15.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
16.	அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர்
17.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்

2023 ஏப்ரல் 19]

வ. எண்	திருக்கோயில் பெயர்
19.	அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை
20.	அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி
21.	அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி
22.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்சேவல்பட்டி
23.	அருள்மிகு கண்ணுடையநாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை
24.	அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி
25.	அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவகோட்டை
26.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம்
27.	அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு
28.	அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி
29.	அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயில், பவானி
30.	அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆயக்குடி, தென்காசி
31.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம், திருச்சிராப்பள்ளி
32.	அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி
33.	அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம்
34.	அருள்மிகு சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்

வ. எண்	திருக்கோயில் பெயர்
35.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம்
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம்
37.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர்
38.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை
39.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்க சாலை, சென்னை
40.	அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்
41.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், விராலிமலை
42.	அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், திருவண்ணாமலை
43.	அருள்மிகு சேவுகப் பெருமாள் திருக்கோயில், சிங்கம்புணரி, சிவகங்கை
44.	அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில், பாலாற்றங்கரை, வேலூர்
45.	அருள்மிகு நவநீதேஸ்வரர் திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம்
46.	அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில், சென்னை
47.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சைதாப்பேட்டை, சென்னை
48.	அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை
49.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கோயில்கந்தன்குடி, திருவாரூர்

2023 ஏப்ரல் 19]

வ. எண்	திருக்கோயில் பெயர்
50.	அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி ஆலயம், கடைவீதி, சேலம்
51.	அருள்மிகு கம்பரேசுவரர் திருக்கோயில், திருப்புவனம், தஞ்சாவூர்
52.	அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில், திருவிடைமருதூர், தஞ்சாவூர்
53.	அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தலூர், மயிலாடுதுறை
54.	அருள்மிகு வளரொளீசுவரர் திருக்கோயில், நகரவைரவன்பட்டி, சிவகங்கை
55.	அருள்மிகு மெய்கண்டநாதசுவாமி திருக்கோயில், பிரான்மலை, சிவகங்கை
56.	அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், உத்திரமேரூர்
57.	அருள்மிகு ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள் திருமடம், பொம்மையார்பாளையம், விழுப்புரம்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

இணைப்பு–XI

திருக்கோயிலில் யானைகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள்

வ. எண்	திருக்கோயில் பெயர்	யானையின் பெயர் மற்றும் வயது	மண் தரை	குளியல் தொட்டி	நடை பாதை
1	அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.	கஸ்தூரி 56	✓	✓	✓
2	அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.	பார்வதி 26	✓	✓	✓
3	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.	இராமலட்சுமி 21		✓	✓
4	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.	தெய்வானை 25	✓		
5	அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில்.	கோமதி 29	✓	✓	✓
6	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.	தெய்வானை 13	✓	✓	✓
7	அருள்மிகு கள்ளழகர் சுவாமி திருக்கோயில், அழகர்கோவில்.	சுந்தரவள்ளி தாயார் 16	✓	✓	✓

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

வ. எண்	திருக்கோயில் பெயர்	யானையின் பெயர் மற்றும் வயது	மண் தரை	குளியல் தொட்டி	நடை பாதை
8	அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை	இலட்சுமி 32	✓	✓	✓
9	அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன் கோயில்.	பூமா 25	✓	✓	✓
10	அருள்மிகு பட்டீஸ்வரர்சுவாமி திருக்கோயில், பேரூர்.	கல்யாணி 31		✓	
11	அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவரங்கம்.	ஆண்டாள், 42 பிரேமி என்கிற இலட்சுமி 22	✓	✓	✓
12	அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல்.	அகிலா 19	✓	✓	✓
13	அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் மற்றும் பாஷ்யகாரசுவாமி திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர்	கோதை 24	✓	✓	✓
14	அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில், இணைந்த அருளாகுராயர் திருக்கோயில், படவேடு	இலட்சுமி 27	✓	✓	✓

[2023 ஏப்ரல் 19

வ. எண்	திருக்கோயில் பெயர்	யானையின் பெயர் மற்றும் வயது	மண் தரை	குளியல் தொட்டி	நடை பாதை
15	அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை	அபயாம்பிகை 56	✓	✓	✓
16	அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருக்கடையூர்	அபிராமி 17	✓	✓	✓
17	அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் சுவாமி திருக்கோயில், கும்பகோணம்	மங்களம் 56	✓	✓	✓
18	அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், மன்னார்குடி	செங்கமலம் 35	✓	✓	✓
19	அருள்மிகு பஞ்சாநதீஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருவையாறு (தருமபுர ஆதீனம்)	தர்மாம்பாள் 38			✓
20	அருள்மிகு சொர்ண காளீஸ்வரர் திருக்கோயில், காளையார்கோயில்	சொர்ணவள்ளி என்கிற காந்தி 29		✓	✓
21	அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்	ஜெயமாலா என்கிற ஜெயமால்யதா 20	✓	✓	✓

2023 ஏப்ரல் 19]

வ. எண்	திருக்கோயில் பெயர்	யானையின் பெயர் மற்றும் வயது	மண் தரை	குளியல் தொட்டி	நடை பாதை
22	அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி	சுப்புலட்சுமி *59*		✓	✓
23	அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி	காந்திமதி *52*	✓	✓	✓
24	அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், திருநகிரி	ஆதிநாயகி *22*	✓	✓	✓
25	அருள்மிகு வைத்தமாநிதி பெருமாள் திருக்கோயில், திருக்கோளூர்	குமதவள்ளி *26*	✓	✓	✓
26	அருள்மிகு அரவிந்த லோச்சனார் திருக்கோயில், இரட்டைத் திருப்பதி (ஸ்ரீவைகுண்டம்)	இலட்சுமி *19*	✓	✓	✓
27	அருள்மிகு அழகிய நம்பிராயர் திருக்கோயில், திருக்குறுங்குடி (ஜீயர் மடம்)	குறுங்குடிவல்லி *27* சுந்தரவல்லி *17*	✓	✓	✓

இணைப்பு—XII

பசுக்கள் காப்பகம் விவரம்

வ. எண்	மண்டலங்கள்	பசுக்கள் காப்பகம் எண்ணிக்கை	பசுக்களின் எண்ணிக்கை
1	சென்னை 1	14	86
2	சென்னை 2	12	115
3	வேலூர்	7	708
4	சேலம்	1	15
5	கோயம்புத்தூர்	6	46
6	தஞ்சாவூர்	4	71
7	மயிலாடுதுறை	14	163
8	விழுப்புரம்	1	23
9	திருச்சிராப்பள்ளி	9	179
10	மதுரை	3	156
11	சிவகங்கை	1	24
12	திருநெல்வேலி	3	70
13	காஞ்சிபுரம்	6	146
14	ஈரோடு	11	109
15	திருப்பூர்	6	66
16	திருவண்ணாமலை	3	85
17	கடலூர்	5	211
18	தூத்துக்குடி	12	40
19	நாகப்பட்டினம்	10	89
20	திண்டுக்கல்	2	640
	கூடுதல்	130	3042

2023 ஏப்ரல் 19]

இணைப்பு—XIII

மின்கலச் சிற்றுந்துகள் வசதிகள் உள்ள திருக்கோயில்கள்

வ. எண்	திருக்கோயில் பெயர்	எண்ணிக்கை
1.	அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்	*4*
2.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி	*4*
3.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்	*5*
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி	*1*
5.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர்	*1*
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை	*2*
7.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்	*1*
8.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல்	*1*
9.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை	*2*
10.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்	*4*
11.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்	*2*

வ. எண்	திருக்கோயில் பெயர்	எண்ணிக்கை
12.	அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், மதுரை	*3*
13.	அருள்மிகு பட்டேஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர்	*1*
14.	அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம்	*1*
	கூடுதல்	*32*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–XIV

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

1.	திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்)
2.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி
3.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
4.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
5.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர்
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
7.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்
8.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர்
9.	அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம்
10.	அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர்
11.	அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை
12.	அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை
13.	அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை
14.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்)
15.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி

[*2023 ஏப்ரல் 19*

17.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான்கோட்டை, தருமபுரி
18.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம்
19.	அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர்
20.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர்
22.	அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை, ஈரோடு
23.	அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

இணைப்பு –XV

புதிய உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

1.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர்
2.	அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர்
3.	அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோவில், கன்னியாகுமரி
4.	இணை ஆணையர் அலுவலக வளாகம், இந்து சமய அறநிலையத் துறை, தஞ்சாவூர்
5.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர்
6.	அருள்மிகு ஆலந்துறையார் மற்றும் கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர்
7.	அருள்மிகு காயாரோகணசுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம்
8.	அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்
9.	அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை (திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயில்)
10.	அருள்மிகு பரிமள ரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர், மயிலாடுதுறை
11.	அருள்மிகு கபர்தீஸ்வரசுவாமி திருக்கோயில், திருவலஞ்சுழி, கும்பகோணம்

[2023 ஏப்ரல் 19

இணைப்பு–XVI

கல்வி நிறுவனங்களின் பட்டியல்

கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்

1.	அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்.
2.	அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்.
3.	ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி.
4.	ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி.
5.	பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம்.
6	அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொளத்தூர், சென்னை.
7	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு.
8	அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம்.
9	திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விளாத்திக்குளம்.

பல்தொழில்நுட்பக் கல்லூரி

1.	அருள்மிகு பழநியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்.

மேல்நிலைப் பள்ளிகள்

1.	அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர்.
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர்.

2023 ஏப்ரல் 19]

3.	அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேல்நிலைப் பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர்.
4.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை.
5.	அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை.
6.	அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குற்றாலம், தென்காசி.
7.	தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி.
8.	ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.
9.	அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம்.
10.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்.
11.	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேல்நிலைப் பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம்.

உயர்நிலைப் பள்ளிகள்

1.	அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர்.
2.	அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர்.
3.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்.
4.	அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப் பள்ளி, அழகர்கோவில், மதுரை.
5.	தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி.

தொடக்கப் பள்ளிகள்

1.	சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப் பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
2.	சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப் பள்ளி, சங்கரன் திருக்கோயில், தென்காசி.
3.	ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்.
4.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் தொடக்கப் பள்ளி, பழநி, திண்டுக்கல்.
5.	அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப் பள்ளி, அழகர்கோயில், மதுரை.
6.	அஞ்சுகம் தொடக்கப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

1	பழநி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழநி, திண்டுக்கல்.
2	காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

சி.பி.எஸ்.இ. பள்ளி

1	பராசக்தி வித்யாலயா, குற்றாலம், தென்காசி.

திருமடங்களால் நடத்தப்படும் பள்ளிகள்

வ. எண்	கல்வி நிறுவனங்கள்	திருமடம்	எண்ணிக்கை
1.	குருஞான சம்பந்தர் தொடக்கப் பள்ளி	தருமபுரம் ஆதீனம்	1
2.	குருஞான சம்பந்தர் மேல்நிலைப் பள்ளி	தருமபுரம் ஆதீனம்	1

2023 ஏப்ரல் 19]

வ. எண்	கல்வி நிறுவனங்கள்	திருமடம்	எண்ணிக்கை
3.	திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப் பள்ளிகள்	தருமபுரம் ஆதீனம்	1
4.	நடுநிலைப் பள்ளிகள்	திருவாவடுதுறை ஆதீனம்	1
5.	அம்பலவான தேசிகர் நடுநிலைப் பள்ளி	திருவாவடுதுறை ஆதீனம்	1
6.	திருவாவடுதுறை ஆதீனம் மேல்நிலைப் பள்ளி	திருவாவடுதுறை ஆதீனம்	1
7.	அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப் பள்ளி	பேரூர் ஆதினம்	1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

இணைப்பு-III

(475 பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து அலுவலகங்களையும், இணைந்து பணியாற்ற வேண்டிய இன்னபிற துறைகளையும் ஒருங்கிணைக்கின்ற ஒப்பற்றப் பணியை தலைமைச் செயலகம் நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாடு அரசின் நரம்பு மண்டலமாக மட்டும் செயல்படாமல், ஒன்றிய அரசின் துறைகளையும், பாதுகாப்புப் படைகளின் செயல்பாடுகளையும், நுண்ணறிவுப் பிரிவின் நுட்பங்களையும், அரசுசாரா நிறுவனங்களின் பங்களிப்பையும் ஒருங்கிணைப்பதோடு, வெளிநாட்டுத் தூதரகங்களைத் தொடர்புகொள்வது போன்ற பல்வேறு பணிகளைத் தலைமைச் செயலகம் ஆற்றுவதற்கு முக்கியச் செயலியாய் இருப்பது பொதுத் துறை.

அனைத்துத் துறைகளும் பொதுத் துறையின் பங்களிப்பைப் பொருத்தே தங்களைச் செழுமையாக்கிக்கொண்டும், செம்மைப்படுத்திக்கொண்டும், கூர்மைப்படுத்திக்கொண்டும் செயல்படுகின்றன. அத்தனை பணிகளை ஒருங்கிணைத்தாலும் விழிகளுக்குத் தெரியாமல் இருக்கின்ற அவயங்களைப்போல பொதுத் துறை செயல்படுகிறது. அலைகடல் போலின்றி ஆழ்கடல்போல மௌனமாக வினையாற்றுகிறது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பதவியேற்பு விழாவையும், அமைச்சரவை பதவியேற்கும் நிகழ்ச்சியையும், மாண்புமிகு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பொறுப்பேற்கும் மரபையும் நெறிபடவும் நேர்த்தியாகவும் கையாளும் பொறுப்பு பொதுத் துறையைச் சார்ந்தது.

மரபுசார் அனைத்துப் பணிகளையும் முக்கியப் பெருமக்கள் வருகையின்போது சிவப்புக் கம்பளம் விரித்து, மகிழ்ச்சியோடு

2023 ஏப்ரல் 19]

திரும்பும்வரை விருந்தோம்பியும், தேசிய அரசு விழாக்களைச் செவ்வனே நடத்தி நாட்டுப் பற்றை நாடி நரம்புகளிலெல்லாம் பாய்ச்சியும், தேசப் பாதுகாப்பிற்குத் தேவையான முன்நடவடிக்கைகளை எடுத்தும், ஆரவாரமின்றி அமைதியாக அரும்பணியாற்றும் துறையாகத் திகழ்கிறது பொதுத் துறை. அது விடுமுறை நாட்களுக்கு விடுப்பு கொடுத்துவிட்டு அனைத்து நாட்களிலும் அல்லும்பகலும் வெள்ளத்தனைய மலர்நீட்டம்போல கடின உழைப்பை மேற்கொள்கிறது.

சட்டம்-ஒழுங்காக இருந்தாலும், மாவட்டத்தில் சிக்கல்கள் ஏற்பட்டாலும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர் இடங்களை நிரப்புவதானாலும், மாவட்ட வருவாய் அலுவலர்கள் பணியமைப்பாக இருந்தாலும், அரசின் உயர் அலுவலர்களுக்குப் பல அனுமதிகளை வழங்குவதாக இருந்தாலும், அமைச்சர் பெருமக்களின் அலுவலகத் தேவைகளை நிறைவேற்றுவதாக இருந்தாலும், மாவட்ட நீதிபதிகள், உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்களின் நியமனமாக இருந்தாலும், அயலகத் தமிழர்களின் நலனாக இருந்தாலும், இலங்கைத் தமிழர்களின் நலனைக் கட்டிக்காப்பதாக இருந்தாலும், மனித உரிமைகளில் அத்துமீறல்கள் நிகழும்போது அவற்றில் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், அவற்றைக் கையாளுவது பொதுத் துறையின் கடமையாகும்.

புது தில்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லத்தையும், உதகமண்டலத்தில் இருக்கும் தமிழகம் விருந்தினர் இல்லத்தையும், சென்னையில் அமைந்துள்ள சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்தையும், தலைமைச் செயலகத்தையும் பராமரித்துப் பளபளவென பரிமளிக்கச் செய்யும் பொறுப்பு பொதுத் துறைக்கே உள்ளது.

தாய் மண்ணிற்காகத் தன்னுயிரை ஈந்த விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நன்றிக் கடனையும், கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் பனியிலும் எல்லையில் போராடி 'நம் இன்று'க்காகத் 'தங்கள் நேற்றை'த் தியாகம் செய்த முன்னாள் படைவீரர்கள் நல வாழ்வைப் பேணும் அர்ப்பணிப்பையும் அக்கறையோடு ஆற்றுவது பொதுத் துறையே.

தமிழ்நாட்டில் மூலைமுடுக்குகளில் இருப்பவர்களுக்கும், "முதல்வரின் முகவரி" கலங்கரை விளக்காகத் திகழ்கிறது.

[2023 ஏப்ரல் 19

தங்கள் குறைகளை மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்கே அனுப்பி வைத்துத் தங்கள் கண்ணீருக்குப் பரிகாரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் பொதுமக்கள். அவற்றை வரி விடாமல் படித்துத் தொடர்புடைய துறையைத் தொடர்புகொண்டு எளியவர்களின் இன்னல்களைப் போக்கும் இனிய துறையாக இருக்கும் முதல்வரின் முகவரி துறையை வழிநடத்துவதும் பொதுத் துறையே.

முக்கியமான முடிவுகளை அரசு மேற்கொள்ளும்போதெல்லாம் அமைச்சரவைக் கூட்டத்தில் அதை முன்மொழிந்து விவாதித்து முடிவெடுப்பதே நடைமுறை. அமைச்சரவைக் கூட்டங்களைத் திறம்பட நடத்தி கூட்டக் குறிப்புகளைத் தயாரித்து ஒப்புதல் பெற்று அரசாணைகளாக அவற்றை வெளியிடச் செய்யும் செயலையும் பொதுத் துறையே மேற்கொள்கிறது.

அரசு அறிவிக்கின்ற பொது விடுமுறைகளையும், உள்ளூர் விடுமுறைகளையும் தொகுத்துத் தருகிற துறையாக இருக்கிறது பொதுத் துறை. அத்துடன் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் பட்டியலையும் அவ்வப்போது பணி விவரங்களோடு வெளியிட்டு அவர்களுடன் தொடர்புகொள்வதை எளிதாக்குவதும் பொதுத் துறை.

தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980, அந்நியச் செலாவணி பாதுகாப்பு, கள்ளக் கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1974-ஐ நடைமுறைப்படுத்துதல் மற்றும் சட்டம்-ஒழுங்கு தொடர்பான விசாரணை ஆணையங்களை அமைக்கும் பணியையும் பொதுத் துறை மேற்கொள்கிறது.

தேசிய அளவில் வழங்கப்படுகிற பத்ம விருதுகளுக்கும், மற்ற விருதுகளுக்கும் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்கிற பணியையும் பொதுத் துறையே தோள்களில் சுமக்கிறது.

இவை தவிர, மற்ற துறைகளால் ஆற்ற முடியாத எந்தப் பணியாக இருந்தாலும் அதை நிறைவேற்றுகிற பணியைச் சிரமேற்கொண்டு செய்து வருகிறது பொதுத் துறை.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இருப்பதனால் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2023 ஏப்ரல் 19]

2. தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள்

மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு இந்திய பிரதமர், வெளிநாட்டு அரசின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் பிரமுகர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள்/உயர் ஆணையர்கள் ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகைபுரியும்போது மரபு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள் துறை, மருத்துவத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து சுமுகமான முறையில் பொது (மரபு)த் துறையால் செய்யப்படுகின்றது. மேலும், மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோருடன் வெளிநாட்டு அமைச்சர்கள்/தூதுவர்கள்/ முக்கிய பிரமுகர்களுக்கு சந்திப்பு ஏற்பாடுகள் ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் இசைவுடன் செய்யப்படுகின்றது.

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த முக்கிய தகைசால் பெருமக்களின் விவரம் பின்வருமாறு:-

மிக, மிக முக்கிய நபர்களின் விவரம்	*வருகையின் எண்ணிக்கை*
மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர்	*2*
மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர்	*6*
மாண்புமிகு இந்திய பிரதமர்	*3*
வெளிநாட்டு முக்கிய தகைசால் பெருமக்கள்	*3*

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்த முக்கிய பிரமுகர்களின் விவரம் பின்வருமாறு:-

மிக, மிக முக்கிய நபர்களின் விவரம்	வருகையின் எண்ணிக்கை
வெளிநாட்டுத் தூதுவர்கள்	10
வெளிநாட்டு அமைச்சர்	3
வெளிநாட்டுத் துணைத் தூதுவர்கள்	5

3. தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள் மற்றும் பொது விடுமுறை அறிவிப்பு; விருதுகள்

3.1. தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள் அறிவிப்பு மற்றும் விருதுகள்

இந்திய தேசிய விழாக்களான "சுதந்திரத் திருநாள்" மற்றும் "குடியரசுத் திருநாள்" விழாக்களை, மாநில அளவில் நாட்டுப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைப் பொது (பொது-I)த் துறை செய்கிறது.

ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் ஜூன் மாதம், மத்தியில் தொடங்கி தேவையான முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் ஒத்திகைகள் குறித்து தொடர்புடைய துறைகளுக்கு தகவல் அனுப்புதல் மற்றும் செயலாளர், பொதுத் துறை அவர்களின் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்துதல் உள்ளிட்ட பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. சுதந்திரத் திருநாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவல் துறையின் 13 படைப் பிரிவுகளைச் சார்ந்த சம்பிரதாய அணிவகுப்பு மரியாதையை ஏற்று புனித ஜார்ஜ் கோட்டை, கோட்டைக் கொத்தளத்தில் உள்ள தேசிய கொடியினை ஏற்றி வைப்பார். இவ்விழாவில் தமிழ்நாட்டிற்கும், தமிழ் இன வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவருக்கு வழங்கப்படும் "தகைசால் தமிழர்" விருது வழங்கப்படுகிறது. இவ்விருதானது தமிழக அரசால் 2021 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு ரொக்கப் பரிசாக ரூ.10 இலட்சம் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. துணிவு மற்றும் சாகசச் செயலுக்காக பெண்களுக்கு "கல்பனா சாவ்லா விருது" போன்ற இதர விருதுகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சுதந்திரத் திருநாளன்று வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

குடியரசு திருநாள் விழா ஏற்பாடுகள் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் மத்தியில் தொடங்கி தேவையான முன்னேற்பாட்டு பணிகள் மற்றும் ஒத்திகைகள் குறித்து தொடர்புடைய துறைகளுக்கு தகவல் அனுப்புதல் மற்றும் செயலாளர், பொதுத் துறை அவர்களின் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்துதல் உள்ளிட்ட பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. இவ்விழா நிகழ்வுகள் சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் மாண்புமிகு ஆளுநர் அவர்களால் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டு, முப்படைகளான இராணுவப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக்காவல் படை, துணை இராணுவப்படை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் படை, தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்ட மாணவர் படை மற்றும் பள்ளி கல்லூரிகளின் இசை வாத்தியக்குழு உள்ளிட்ட 49 படைப் பிரிவுகளின் அணிவகுப்பு மரியாதையுடன் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. மேலும், பல்வேறு துறைகளைச் சார்ந்த வண்ணமயமான அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெறும். இவ்விழாவில், வீரதீர செயலுக்கான "அண்ணா விருது", "சிறந்த அணிவகுப்பு படையினருக்கான விருது" போன்ற பிற விருதுகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகின்றன.

விருதுகளுக்கான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம், "தகைசால் விருது" தவிர பிற விருதுகளுக்கு awards.tn.gov.in *என்ற இணையதளம் வழியாக பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பரிசீலிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்களில், தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்படும் விண்ணப்பங்கள் குறித்து புலனாய்வுத் துறையின் அறிக்கை பெறப்பட்டு, அதனடிப்படையில் விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.*

மேலும், ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளான பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக் சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா, சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதி பரிசு போன்ற விருதுகளுக்கான பரிந்துரைகள் இத்துறையின்மூலம் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 19

ஒவ்வோர் ஆண்டும் மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினமான ஜனவரி 30 ஆம் நாளினை ஒன்றிய அரசின் அறிவிப்பின்படி, "தியாகிகள் தினமாகவும்", 2021 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டபடி, தந்தை பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17 ஆம் நாளினை, ஒவ்வோர் ஆண்டும் "சமூகநீதி தினமாகவும்" அனுசரிக்கும்பொருட்டு, தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உறுதிமொழியேற்பு செய்து வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளும் இத்துறையால் செய்யப்படுகின்றன. மேலும், 2022 ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டபடி, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாளினை, ஆண்டுதோறும் "சமத்துவ நாள்" ஆக அனுசரிக்கப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகம் முதல் அனைத்து அரசு அலுவலகங்களிலும் "சமத்துவ நாள்" உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் அறிவிக்கும்போது, மாவட்ட ஆட்சியர்கள்/காவல்/வன அலுவலர்கள் மாநாட்டை ஒருங்கிணைத்து நடத்துவது இத்துறையின் பொறுப்பாகும். கடந்த ஆண்டு மார்ச் 2022-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள்/காவல்/வன அலுவலர்கள் மாநாடு நடத்தப்பட்டது.

3.2. பொது விடுமுறை அறிவிப்பு

மாநிலத்தின் பொது விடுமுறை தொடர்பான அறிவிப்புகள் செலாவணி முறிச்சட்டம் 1881-ன்கீழ் இத்துறையால் அறிவிக்கப்படுகிறது. 1957 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால், மாநில அரசுகள் தத்தம் மாநிலங்களுக்குச் செலாவணி முறிச்சட்டம், 1881-ன்கீழ் பொது விடுமுறை நாட்களை அறிவிக்க (வங்கிகள் உட்பட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செலாவணி முறிச்சட்டம் 1881-ன்படி, கீழ்க்காணும் அதிகார அமைப்புகளிடமிருந்து அறிக்கைப் பெற்று, அதன் அடிப்படையில் பொது விடுமுறை நாட்களின் பட்டியல் முடிவு செய்து ஒவ்வோர் ஆண்டும் அரசு ஆணை வெளியிடப்படுகிறது:

2023 ஏப்ரல் 19]

ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை; தமிழக அரசின் தலைமைக் காஜி; தென்னிந்தியக் கிறிஸ்துவ திருச்சபையின் மதராஸ் மறை மாவட்டப் பேராயர்; மயிலாப்பூரில் உள்ள மதராஸ் மறை மாவட்டப் பேராயர்; பாரத ரிசர்வ் வங்கி, சென்னை; வான் கோளியல் மையம், கொல்கத்தா; இந்திய வானிலை ஆய்வுத் துறை, கொல்கத்தா; இந்திய வானியற்வியல் நிறுவனம், பெங்களூரு; தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில் சபை, சென்னை மற்றும் பகவான் மகாவீர் அகிம்சா பிரச்சார சங்கம், சென்னை.

4. அரசு விருந்தினர் இல்லங்கள்

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை; புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை; அரசு ஓய்வு இல்லம் சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்; வைகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி; பொதிகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி ஆகிய அரசு விருந்தினர் இல்லங்கள் பொதுத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

4.1. அரசு விருந்தினர்கள் மற்றும் தொகை தரு விருந்தினர்கள்

4.1.1. அரசு விருந்தினர்கள்

தமிழகத்திற்கு வருகை தரும் மிக முக்கிய, முக்கியப் பிரமுகர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவர்; மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர்; மாண்புமிகு பாரதப் பிரதமர்; உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி; பிற மாநில ஆளுநர்கள்; முன்னாள் குடியரசுத் தலைவர்; முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர்; முன்னாள் பாரதப் பிரதமர்; மக்களவையின் சபாநாயகர்; துணை சபாநாயகர்; ஒன்றிய அமைச்சர்கள்; மக்களவை மற்றும் மாநிலங்களவையின் எதிர்க்கட்சித் தலைவர்; பிற மாநில முதலமைச்சர்கள்; அமைச்சர்கள்; நிதி ஆயோக் துணைத் தலைவர்; பிற மாநில சபாநாயகர்கள்; துணைச் சபாநாயகர்கள்; இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்; ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர்கள்/உறுப்பினர்கள்; அயல் நாட்டுப் பிரமுகர்கள்; மாண்புமிகு உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள்; ஒன்றிய அரசின் செயலாளர்கள் ஆகிய அனைவரும் அரசு விருந்தினர்களாகக் கருதப்பட்டு

அவர்களுக்கு வரவேற்பு, உணவு, மருத்துவச் சேவை, தொலைபேசி கட்டணம், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு வசதிகள் ஒன்றிய அரசின் உள் துறை நிர்ணயித்துள்ள பட்டியலின்படி கொடுக்கப்படுகின்றன.

4.1.2. தொகை தரு விருந்தினர்கள்

மரபு கையேட்டின்படி, அரசு விருந்தினர் பிரிவின்கீழ் வராதவர்கள் தொகை தரு விருந்தினர்களாக கருதப்படுவர். கட்டணம் செலுத்துதல் அடிப்படையில், தங்கும் வசதி, போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

4.2. அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை

சென்னை, சேப்பாக்கம், அரசு விருந்தினர் இல்லம் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது, இவ்வில்லத்தில் 6 தொகுப்பு அறைகள், 11 சொகுசு அறைகள், 16 நிலையான அறைகள் ஆகிய 33 அறைகள் உள்ளன.

4.3. புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை

சென்னை, ஓமந்தூரார் தோட்டம், புதிய அரசு விருந்தினர் இல்லமானது, 2018 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவ்வில்லத்தில், 40 சொகுசு அறைகள், 4 சிறிய கூட்டரங்கங்கள் 2 பெரிய கூட்டரங்கங்கள், 2 உணவு அருந்தும் அறைகள் மற்றும் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைந்துள்ளன.

வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை மற்றும் புதிய அரசு விருத்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை ஆகியவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார். அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம் ஆகிய விருந்தினர் இல்லங்களில் அரசு விருந்தினர்கள் மற்றும் தொகை தரு விருந்தினர்கள் தங்குவதற்கு www.sgh.tn.gov.in என்னும் இணையத்தின் வலைதளப் பக்கத்தின் வாயிலாக முன்பதிவினைச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023 மார்ச் 31 ஆம் நாள்வரை அரசு விருந்தினர் இல்லங்களில் தங்குமிட வசதி வழங்கப்பட்ட விவரம்:-

2023 ஏப்ரல் 19]

வ. எண்	விருந்தினர்கள்	அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை	புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை
1.	அரசு விருந்தினர்கள்	34	54
2.	தொகை தரு விருந்தினர்கள்	519	1791

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, இவ்வரசு விருந்தினர் இல்லங்களில் அரசால் பெறப்பட்ட வருவாய் ரூ.30,26,247/- ஆகும்.

4.4. அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அரசு ஓய்வு இல்லம், சென்னைக்கு வருகைபுரியும் இளநிலை அரசு அலுவலர்கள் தங்குவதற்காக 25 அறைகளுடன் 1981 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அக்கட்டடம் மிகவும் பழுதடைந்ததால், பிப்ரவரி 2021-ல் இடிக்கப்பட்டு, தற்போது புதிய அரசு ஓய்வு இல்லம் கட்டுவதற்கான பணி முடியும் தருவாயில் உள்ளது. இவ்வில்லம், 55 நிலையான அறைகள், 4 சொகுசு அறைகள், உணவு அருந்தும் கூடம், சலவையகம், சமையல் அறை, அலுவலக அறை, நுழைவுக் கூடம் மற்றும் 2 மின்தூக்கிகள் ஆகியவற்றினைக் கொண்டதாக இருக்கும்.

4.5. தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்

அரண்மோர் அரண்மனை என்று அறியப்பட்ட உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் மாளிகையானது மரங்கள் சூழ்ந்த பகுதிக்கு மத்தியில் உதகமண்டலம் இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றிற்கு 2.8 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இம்மாளிகையானது, ஜோத்பூர் மகாராஜாவால் 1925 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஜோத்பூர் மகாராஜாவிடமிருந்து தமிழ்நாடு அரசு இவ்வரண்மனையை

28.12.1958 அன்று விலைக்கு வாங்கி அரசுடைமையாக்கியது. இவ்வரண்மனை 36 ஏக்கர் நிலப்பரப்பில் அழகிய கட்டடங்கள், பசுமையான புல்வெளிகள் மற்றும் தோட்டங்களால் சூழப்பட்டு தோட்டக்கலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வரண்மனையில் 18 முக்கிய விருந்தினர் அறைகள், 20 அறைகள், 2 விடுதி அறைகள், 200 நபர்கள் அமரக்கூடிய அழகிய அவைக் கூடம் மற்றும் 30 பேர் அமரக்கூடிய சிறிய அவைக் கூடமும் உள்ளன.

உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் மாளிகையில் மிக முக்கிய விருந்தினர்கள், அமைச்சர்கள், நீதித் துறை உயர் அதிகாரிகள், அரசு அதிகாரிகள் மற்றும் அரசின்கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பின்கீழ் பணியாற்றுபவர்கள் அரசு பணி நிமித்தமாக தங்குவதற்கு ஏதுவாக வசதிகள் செய்து தரப்படுகிறது. இவ்விருந்தினர் மாளிகை வட்டாட்சியர் நிலையில் உள்ள வரவேற்பு அலுவலர் மற்றும் 13 ஊழியர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்விருந்தினர் மாளிகையில், நவீன உடற்பயிற்சிக் கூடம், பில்லியட்ஸ் மேசை, டென்னிஸ் மைதானம் போன்ற சிறப்பு வசதிகளும் உள்ளன. இவ்விருந்தினர் மாளிகையில், அறைகள் ஒதுக்கீடு https://tamizhagamguesthouse.tn.gov.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, உதகமண்டலம், தமிழக விருந்தினர் மாளிகையில் தங்கிச் சென்ற விருந்தினர்களின் விவரம் கீழ்வருமாறு:-

வரிசை எண்	விருந்தினர்கள்	எண்ணிக்கை
1.	அரசு விருந்தினர்கள்	-
2.	பிற விருந்தினர்கள்	3926

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, அரசால் பெறப்பட்ட வருவாய் ரூ.75,09,047/- ஆகும்.

4.6. தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி

புதுடெல்லியில் அமைந்துள்ள தமிழ்நாடு, இல்லம், தமிழ்நாடு அரசினுடைய பெருமையைப் பறைசாற்றும் மதிப்புமிக்க

2023 ஏப்ரல் 19]

இல்லமாகும். தமிழ்நாடு இல்லமானது, வைகை தமிழ்நாடு இல்லம் மற்றும் பொதிகை தமிழ்நாடு இல்லம் என இரண்டு இல்லங்களாக, முதன்மை உள்ளுறை ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாடு இல்லமானது வரவேற்பு, சமையல், பராமரிப்பு, பொறியியல், தொடர்பு, நிர்வாகம் மற்றும் கணக்கு போன்ற பல்வேறு பிரிவுகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்விருந்தினர் மாளிகையில், அறைகள் ஒதுக்கீடு https://tnhouse.tn.gov.in/ *என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது.*

4.6.1. வைகை தமிழ்நாடு இல்லம்

வைகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லியிலுள்ள சாணக்யபுரி கௌடில்யமார்க் எண் 6-ல் 1.757 ஏக்கர் நிலத்தில் 1962 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1976 ஆம் ஆண்டு அதே வளாகத்தில் மூன்று அடுக்குமாடிகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. வைகை தமிழ்நாடு இல்லத்தில் 7 சொகுசு அறைகளும் மற்றும் 40 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில், முக்கியப் பணிகள் அனைத்தும் அதாவது வரவேற்பு, உணவகம், இல்லக் காப்பகம், மின்சாரம், குழாய்ப் பணிகள் மற்றும் குளிர்சாதனம் ஆகியவை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லிக்கான நிரந்தர அரசு ஊழியர்களால் செயல்படுத்தப்படுகிறது. தற்போது, வைகை தமிழ்நாடு இல்லம் முழுவதையும் ரூ.257 கோடி திட்ட மதிப்பீட்டில் மூன்று தொகுதிகளாக (மிகமிக முக்கிய விருந்தினர்கள் தங்கும் இடம், புதிய விருந்தினர் இல்லம் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு) மறுகட்டமைப்பு செய்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

4.6.2. பொதிகை தமிழ்நாடு இல்லம்

பொதிகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லியிலுள்ள சாணக்யபுரி திக்கேந்தர்ஜித் மார்க், எண் 9-ல் 1.966 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு, 16.9.2004 முதல் பயன்பாட்டில் உள்ளது. பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் 25 சொகுசு அறைகள் மற்றும் 45 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில் சமையல், இல்லக் காப்பகம், பாதுகாப்பு, குளிர்சாதன பராமரிப்பு, குழாய்ப் பணிகள், தீயணைப்பு மற்றும் தோட்டக்கலை போன்றவை அனைத்தும் தனியாரின் ஒப்பந்தத்தின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 19

நவீன ஒலி-ஒளி கருவிகளுடன் 90 பார்வையாளர்கள் அமரும் வசதி கொண்ட அரங்கம் பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் பயன்பாட்டில் உள்ளது. பொதிகை தமிழ்நாடு இல்லத்திலுள்ள மருத்துவ உதவி மையம் விருந்தினர்களுக்கும், அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் குறைந்தபட்ச மருத்துவ உதவி வழங்கி வருகிறது. பொது மருத்துவர், திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 4.30 முதல் 6.00 மணி வரை பொதிகை-தமிழ்நாடு இல்லத்தில் மருத்துவ ஆலோசனை வழங்குகிறார். உள் அரங்கு உடல்நலம் மேம்பாட்டு மையமும் உள்ளது.

இரண்டு தமிழ்நாடு இல்லத்திலும் உரிய வசதிகளுடன் வணிக மையம் கம்பியில்லாத இணையத் தொடர்பு வசதி, உள், வெளியரங்கு உடல் நலம் மேம்பாட்டு மையம். குழந்தைகள் மற்றும் விருந்தினர்களுக்கான பொழுதுபோக்கு மையம் ஆகியவை உள்ளன.

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, புதுடெல்லி, தமிழ்நாடு இல்லத்தில் தங்கிச் சென்ற விருந்தினர்களின் விவரம் பின்வருமாறு:-

வரிசை எண்	விருந்தினர்கள்	எண்ணிக்கை
1.	அரசு விருந்தினர்கள்	238
2.	பிற விருந்தினர்கள்	8692

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, அரசால் பெறப்பட்ட வருவாய் ரூ.4,19,00,073/- ஆகும்.

4.6.3. புதுடெல்லி, துவாரகா பகுதியில் மூன்றாவது விருந்தினர் இல்லம் அமைப்பது

மூன்றாவது விருந்தினர் இல்லம் கட்டுவதற்காக டெல்லி வளர்ச்சிக் குழுமத்தால் (Delhi Development Authority) புதுடெல்லியில் துவாரகா பகுதியில் மனை எண் 4 இல் பிரிவு 19-ல் 3197.58 சதுர மீட்டர் நிலம் ரூ.25.82 கோடி நிரந்தர குத்தகைக்கு தமிழ்நாடு அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 19]

5. அயல்நாட்டினர்

5.1. அயல்நாட்டினர் சட்டம், 1946

அயல்நாட்டினர் சட்டம் 1946 இன்கீழ் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, கடவுச்சீட்டு சட்டத்தினை மீறி சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும், நுழைவிசைவு(visa) விதிகளை மீறும் அயல்நாட்டினர் மீதுள்ள வழக்கில் அவர்கள் பிணையில் வரும்போதும், தண்டனைக் காலம் முடிவுற்று வெளிவரும்போதும், அயல்நாட்டினர் சட்டம், 1946, 3(2)(e) இன்கீழ் அவர்களது இருப்பினை உறுதி செய்யும் வகையில் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, திருச்சிராப்பள்ளி சிறப்புமுகாமில் தங்கவைத்து, அயல்நாட்டினர் சட்டம், 1946, 3(2)(c) இன்கீழ் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர். 2022 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023 மார்ச் 31 ஆம் நாள்வரை, 73 அயல்நாட்டினர் அவர் தம் தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

5.2. தங்கும்காலத்தை நீட்டித்தல், நுழைவிசைவு வசதியுடன் தாய்நாடு சென்றுவர அனுமதித்தல்

இந்தியாவில் உரிய பயண ஆவணங்களுடன் தங்கியிருக்கும் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த குடிமக்கள் நுழைவிசைவு கையேட்டின்படி தங்கும் காலத்தை நீட்டிப்பதற்கு அனுமதி கோரி, மண்டல அயல்நாட்டு பதிவு அலுவலக இணைய முகப்பு (IVFRT) மூலமாக பெறப்படும் முன்மொழிவுகள், மாநில அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. விதி விலக்கு தேவைப்படும் இனங்கள், ஒன்றிய உள் துறை அமைச்சகத்திற்கு இணையமுகப்பு (IVFRT) மூலமாக அனுப்பப்படுகிறது. இதன்மூலம், இவர்கள் தங்களது தாய்நாட்டிற்கு நுழைவிசைவு வசதியுடன் ஆண்டிற்கு ஒருமுறை சென்று வர அனுமதி வழங்கப்படுகிறது.

5.3. தாய்நாடு திரும்ப விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு நுழைவிசைவுக் கட்டணம்/மிகைத் தங்கல் தண்டத் தொகை விலக்களித்தல்

தமிழ்நாட்டில் 9.1.2015-க்கு முன்பே வருகை புரிந்து தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள், தன்விருப்ப அடிப்படையில் தங்களது தாய்நாட்டிற்கு திரும்ப விண்ணப்பிக்கும்போது,

அரசிற்குச் செலுத்த வேண்டிய நுழைவிசைவுக் கட்டணம், மிகைத் தங்கல் தண்டத் தொகை ஆகியவற்றை ஒன்றிய அரசின் உள் துறை அமைச்சகத்தால் அரசு கடித எண் 250211/11/2014-எப்1, நாள் 16.12.2015-ன்படி நியமிக்கப்பட்ட பொதுத் துறைச் செயலாளர், கூடுதல் காவல் துறை இயக்குநர் (க்யூ பிரிவு) மற்றும் மண்டல அயல்நாட்டினர் பதிவு அலுவலரை உள்ளடக்கிய குழு இவ்விண்ணப்பங்களை ஒவ்வொரு நேர்வாகப் பரிசீலித்து, தொகை செலுத்துவதிலிருந்து, விலக்களித்து உரிய ஆணையிடுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 162 இலங்கைத் தமிழர்களுக்கு தங்கள் தாயகம் திரும்ப செலுத்த வேண்டிய நுழைவிசைவு கட்டணம் மற்றும் மிகைத்தங்கல் கட்டணமாக ரூ.1,48,78,800/- தொகையானது விலக்களிக்கப்பட்டுள்ளது.

5.4. இ-சனட்

நேரடி தொடர்பற்ற மற்றும் காகிதமற்ற முறையில் முத்திரையிடும் சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் "இ-சனட்" http://esanad.nic.in என்ற இணையதள முகப்பில், தேசிய தகவல் தொடர்பு மையம் (National Informatics Centre) மூலமாக மாநில அளவில், பொதுத் துறையானது அரசு துறைகள், தன்னாட்சி அமைப்புகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், தமிழ்நாட்டிலுள்ள தேசிய கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை இவ்விணையதளத்தில் ஒருங்கிணைத்து சேவை வழங்கி வருகிறது. இவ்வதிகார அமைப்புகளால் வழங்கப்படும் ஆவணங்கள், வெளிநாடுகளில் கல்வி பயில்வது, பணிபுரிவது உள்ளிட்ட நேர்வுகளுக்காக அயல்நாட்டுத் தூதரகங்களில், சமர்ப்பிக்க வேண்டி இவ்விணையம் வழியாக விண்ணப்பிக்கும்போது இணையதளம் மூலமாகவே சரிபார்க்கப்பட்டு இத் துறையில் சான்றொப்பமிட்டு வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்படுகிறது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பதாரருக்கு விரைவு அஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இச்சேவை முறையில் 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 17,360 ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு சான்றொப்பமிடப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]

6. முதல்வரின் முகவரித் துறை

முதல்வரின் முகவரித் துறையானது அரசாணை (நிலை) எண் 944, பொது (Spl-A) துறை, நாள் 3.11.2021மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு (IIPGCMS), முதலமைச்சரின் தனிப் பிரிவு மற்றும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. இத் துறையானது மாநிலத்தில் உள்ள பொதுக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒருங்கிணைப்பு அமைப்பாகும். இத் துறையின் முக்கிய நோக்கம், ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை (IIPGCMS) தளத்தை அமைப்பது, பல வழிகளில் புகார்களைப் பதிவு செய்வதற்கான அணுகுமுறைகளை அதிகரிப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் குறை தீர்க்கும் தரத்தை மேம்படுத்துதல் ஆகும். இதுவரை இத் துறை 38 இலட்சம் மனுக்களைப் பரிசீலித்து, அவற்றுள் 36.5 இலட்சம் மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட்டுள்ளன.

இத் துறை, 'முதலமைச்சரின் உதவி மையம்' என்ற இணையதள அடிப்படையிலான தளத்தை உருவாக்கி குறைகளைப் பதிவு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் வசதிகள் ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மக்கள் குறை தீர்வு தினம், முதலமைச்சரின் தனிப் பிரிவில் நேரடியாக பெறப்பட்ட மனுக்கள், தபால், ஆன்லைன் இணையதள போர்டல் போன்றவற்றில் பெறப்படும் மனுக்களை புகார் மனுக்களாகப் பதிவு செய்வதற்கான அனைத்து முறைகளையும், வழிமுறைகளையும் ஒருங்கிணைத்துள்ளது. முதலமைச்சரின் உதவி மையம், குடிமக்கள் விண்ணப்பத்தின்மூலம் பெறப்படும் செயலி(App) அடிப்படையிலான குறைகளைப் பதிவு செய்வது எளிதாக்கப்படுகிறது. முறைமையால் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட குறைதீர்வு எண் (Grievance ID)மூலம் குறைகள் கண்காணிக்கப்படுகிறது. குறைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு, நேரடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்படுவதால், குறைகளைத் தீர்ப்பதில் இடைநிலை அலுவலர்கள் தலையீடின்றி தீர்வுக்கான காலதாமதம் தவிர்க்கப்படுகிறது.

மேற்கூறியவற்றைத் தவிர, இத்துறையில் ஒரு மையப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் உதவி மைய அழைப்பு மையம் உருவாக்கப்பட்டு 1100 என்ற கட்டணமில்லா

[2023 ஏப்ரல் 19

எண்ணில் செயல்படுகிறது. இங்கு குடிமக்கள் வாரத்தின் அனைத்து நாட்களிலும் அழைத்து, தங்கள் குறைகளைப் பதிவு செய்யலாம். நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைக் கொண்டு புகார்களைப் பதிவு செய்தல் மற்றும் வழிபடுத்துவதோடு ஒவ்வொரு நாளும் சுமார் 7,000 அழைப்புகளைக் கையாளுகிறது. மேலும், அரசால் புதிய திட்டங்கள் தொடங்கப்படும் போதெல்லாம் இது ஒரு விசாரணை தளமாக செயல்படுவதுடன், தகுதி மற்றும் பிற அம்சங்கள் தொடர்பான விளக்கங்களை அளிக்கிறது. இத்துறை, பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அதன் பயனாளிகளிடமிருந்து கருத்துகளை சேகரிப்பதன்மூலம் மற்ற துறைகளுக்கும் அதன் சேவைகளை விரிவுபடுத்துகிறது. மேலும், கொள்கை அமலாக்கத்தில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிய உதவுகிறது. பேரிடர்களின் போது, மாவட்டங்களில் உள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு புகார்களைத் தெரிவிப்பதன்மூலம் மாநில அவசரக் கட்டுப்பாட்டு அறைக்கு இது துணைபுரிகிறது.

முதலமைச்சரின் உ தவி மைய முகப்பு, துறைகள் மற்றும் மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள் குறைகளை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்க உதவுகிறது. தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் முதலமைச்சரின் உதவி மைய முகப்பு (Dash Board) வாயிலாகக் குறை தீர்வுகளைக் கண்காணிக்கின்றனர். பொதுமக்களின் குறைகளை திறம்பட நிவர்த்தி செய்வதற்காக, மாநில அளவில் செயலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களால் முன்னேற்றம் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த முதலமைச்சரின் உதவி மைய முகப்பு, மாண்புமிகு முதலமைச்சரின் முகப்புடன் இணைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தால் நேரடியாகக் கண்காணிக்கப்படுகிறது இந்த அமைப்பு, அதிகாரிகளுக்கு எளிதான மற்றும் தேவையான அறிக்கைகளை வழங்குகிறது. மேலும், கள அளவில் குறைகளை அகற்றுவதற்கான தரத்தைக் கண்காணிக்கும் நுண்ணிய நிலை பகுப்பாய்வை எளிதாக்குகிறது. எனவே, அரசின் குறைதீர்க்கும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் திறம்படக் கண்காணித்தல் ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன.

2023 ஏப்ரல் 19]

பொதுவாக, எந்தவொரு குறை தீர்க்கும் தளத்திலும், ஒரு கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், மனுதாரரர் உயர் அதிகாரிக்கு ஒரு புதிய கோரிக்கையை தாக்கல் செய்கிறார் அல்லது நேர்மறையான பதில்/தீர்வைக் கோரி அதே அதிகாரியிடம் ஒரு மனுவை சமர்ப்பிக்கிறார். முதலமைச்சரின் உதவி மையத்தில் மேல்முறையீடு செய்வதற்கான வழிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மனுதாரரர், தீர்வு திருப்திகரமாக இல்லை என உணர்ந்தால், உயர்மட்ட அலுவலரிடம் மேல்முறையீடு செய்யலாம். இதன்மூலம் மனுவானது தரமான முறையில் தீர்க்கப்படுவதை உறுதிசெய்து, புகார்கள் மிக மேல் நிலைக்கு அனுப்பப்படுவது தவிர்க்கப்படும். மேலும், மேல்முறையீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அலுவலர்களின் செயல்பாடு மாவட்ட ஆட்சியர்களால் மதிப்பிடப்படுகிறது.

ஒரு சிறந்த குறை தீர்க்கும் செயல்முறையானது, எண்ணிக்கையைக் குறைப்பதைக் காட்டிலும் தரத்தில் கவனம் செலுத்துவதாகும். மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, செப்டம்பர், 2022 இல் மாநில மற்றும் மாவட்ட அளவில் தரக் கண்காணிப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள குறைகளைச் சரியான முறையில் தீர்வு காண்பதை உறுதிசெய்து, தரமான தீர்வில் நிலைத்தன்மையை அடைவதே இதன் நோக்கம். மாவட்ட அளவிலான கண்காணிப்புப் பிரிவுகள், குறை தீர்வு செய்யப்பட்டவுடன் பொதுமக்களைத் தொடர்பு கொண்டு, தீர்வு குறித்த கருத்துகளைச் சேகரித்து, அவை, A, B, C என வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள், வகை-A என்பது குறை திருப்திகரமாக நிவர்த்தி செய்யப்பட்டு, உரிய நடைமுறை பின்பற்றப்பட்ட தீர்வுகளைக் குறிக்கிறது. வகை-B என்பது குறைகளைத் தீர்ப்பதற்கு நிதி அனுமதி தேவைப்படும் நிலையில் உள்ளது. இந்த வகை திட்டங்கள் தகுதியான பயனாளிகளின் 'முதுநிலை பட்டியலாக' செயல்படுகிறது. வகை-C என்பது மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டவையாகும். இவற்றுள், முறையாக ஆய்வு செய்யப்படாத மனுக்கள், உயர் அதிகாரிகளால் மறுபரிசீலனை செய்யப்பட்டு, மனுதாரருக்கு இறுதியான பதில் வழங்கப்படுகிறது.

முதல்வரின் முகவரித் துறை, குறை தீர்க்கும் அலுவலர்களின் திறனை மேம்படுத்துவதை மேற்கொள்வதோடு, ஒவ்வொரு

மாவட்டத்திலும் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள் பரவலாக்க வழிவகை செய்கிறது.

7. முன்னாள் படைவீரர் நலத் துறை

முப்படை வீரர்கள் நமது தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குகின்றனர். இம்முப்படை வீரர்களின் வீரதீரச் செயல்களை மதித்து போற்றுவதுடன், அவர்களின் மறுவாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்கள், மானியங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கி அவர்களின் துயர்களைக் களைவதிலும், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகளை அளித்து, முன்னாள் படை வீரர்களின் நலனைக் காப்பதிலும் நாட்டிலேயே பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. மேலும், இந்திய இராணுவத்தில் சேர்வதற்கு இளைஞர்களை அனுப்புவதிலும் தமிழ்நாடு பெரும்பங்கு வகிக்கிறது.

7.1. முப்படை வீரர்கள் வாரியம்

முப்படையில் பணிபுரியும் வீரர்களின் பணியினைப் போற்றவும், ஓய்வுபெற்ற வீரர்களின் நலன்களைக் காக்கவும் முதன்முதலில் 1919 ஆம் ஆண்டில் மெட்ராஸ் தரைப் படை வீரர் வாரியம் அமைக்கப்பட்டு, அதற்கான தேவைகள் முடிக்கப்பட்ட நிலையில் 1930 ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர், 1943 ஆம் ஆண்டில், மெட்ராஸ் மாகாண தரைப் படை, கப்பற்படை மற்றும் விமானப் படை வீரர்கள் வாரியம் உருவாக்கப்பட்டபோது பழைய மெட்ராஸ் தரைப் படை வாரியம் இணைத்துக்கொள்ளப்பட்டது. 1956 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநில தரைப் படை, கப்பற்படை, விமானப் படை வீரர்கள் வாரியம் எனவும், பின்னர், 1969 ஆம் ஆண்டில் “தமிழ்நாடு மாநில முப்படை வீரர்கள் வாரியம்" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாரியம், மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களைத் தலைவராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

7.2. முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம்

1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முப்படை வீரர்கள் வாரியம் மற்றும் மெட்ராஸ் தொகுப்பு நிதி அலுவலகம்

2023 ஏப்ரல் 19]

ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் உருவாக்கப்பட்டு, சமூக நலத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. பிறகு, 1976 ஆம் ஆண்டில் இம்முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் பொதுத் துறையின் நிர்வாகக் கட்டுபாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. இத் துறையின் நிர்வாகச் செலவுகள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற பங்கீட்டு விகிதத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர் மற்றும் படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில் அரசு வகுக்கும் பல்வேறு கொள்கைகளையும், நலத் திட்டங்களையும் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 2500 படைவீரர்கள் ஒவ்வோர் ஆண்டும் படைப்பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் 1,27,454 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 58,479 கைம்பெண்கள் என மொத்தம் 1,85,933 நபர்கள் பதிவு செய்துள்ளனர். முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்ற 30 முன்னாள் படைவீரர் நல மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

7.3. முன்னாள் படைவீரர் நலத் துறையின் முக்கியத் திட்டங்கள்/ நிதியுதவிகள்

1. *தமிழ்நாடு அரசுத் திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்*
2. *முன்னாள் படைவீரர் நலத் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்*

7.3.1. தமிழ்நாடு அரசுத் திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்

7.3.1.1. வீரதீரச் செயல்களுக்கான விருது, போற்றத்தக்க பணிக்கான பதக்கம் பெற்றவர்களுக்கு பண முடிப்பு

வீரதீரச் செயல்களுக்கான விருது மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு அரசால் பணமுடிப்பு வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, வீரதீர செயல்களுக்கான விருது மற்றும் போற்றத்தக்க

பணிபுரிந்தமைக்கான பதக்கம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 படைவீரர்களுக்கு ரூ.5.08 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிராந்திய இராணுவத்தில் பதக்கம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 வீரர்களுக்கு தலா ரூ.4,000/-வீதம் மொத்தம் ரூ.48,000/- பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

7.3.1.2. போரில் உயிர்நீத்தோருக்கான கருணைத்தொகை

போர் அல்லது குடிமையியல் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின்போது உயிரிழந்த/ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.20 இலட்சம் வரை கருணைத் தொகை தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. மேலும், இக்கருணைத் தொகை தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப் படையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, உயிரிழந்த படைவீரர்களின் வாரிசுதாரர் ஒவ்வொருவருக்கும் ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் 7 வாரிசுதாரர்களுக்கு ரூ.1.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

7.3.1.3. போர்ப் பணி ஊக்க மானியம்

தமது ஒரே மகன்/மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோரைக் கௌரவிக்கும் வகையில் ரூ.20,000/- ரொக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ரூ.25,000/- ரொக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கமும் ஒருமுறை மட்டும் வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 140 பெற்றோர்களுக்கு ரூ.79.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

7.3.1.4. இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொகுப்பு மானியம்

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும், இராணுவப் பணிப் பயிற்சியின்போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும் பின்வருமாறு தொகுப்பு மானியம் (Lumpsum Grant) வழங்கப்பட்டு வருகிறது:-

2023 ஏப்ரல் 19]

வ. எண்	வகை	தொகை ரூ.
1.	முப்படையில் நிரந்தர படைத் துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் (NDA/IMA/Naval/Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	1,00,000/-
2.	முப்படையில் குறுகியகால படைத் துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	50,000/-
3.	இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள், இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	25,000/-

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 17 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ரூ.10 இலட்சம் தொகுப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

7.3.1.5. கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு

படைப்பணியில் உயிர்நீத்தோர், போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர் ஒருவருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 32 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

7.3.1.6. மறு வேலை வாய்ப்பு அளித்தல்

முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக்காலத்தினை மீதமாகக் கொண்டு படைப்பணியிலிருந்து விலகுவதால்,

[2023 ஏப்ரல் 19

அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசுத் துறை/அரசு சார்ந்த துறைகளிலும் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	வகை	இட ஒதுக்கீடு சதவீதம்
1.	பிரிவு "சி" பணியிடங்கள்	5
2.	அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்கள்	10
3.	வனக்காவலர் பணியிடங்கள்	10
4.	வனப்பாதுகாவலர் பணியிடங்கள்	5
5.	தேசிய மாணவர் படை அலுவலகங்களில் இலஸ்கர், ஓட்டுநர், இரவுக் காவலர்கள் பணியிடங்கள்	25
6.	சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" பணியிடங்கள்	5
7.	கால்நடை ஆய்வாளர்	5

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, அரசு/அரசு சார்ந்த/வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் "சி" பிரிவில் 50 நபர்களும், "டி" பிரிவில் 41 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

7.3.1.7. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

பல்வேறு கல்வி நிலையங்களில் உயர் கல்விக்கு (மருத்துவம்/பொறியியல் உட்பட) முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது:-

வரிசை எண்	கல்வியின் பெயர்	இட ஒதுக்கீடு
1.	பி.இ (பொது) (அண்ணா பல்கலைக்கழகம்)	150

2023 ஏப்ரல் 19]

வரிசை எண்	கல்வியின் பெயர்	இட ஒதுக்கீடு
2.	பி.இ. (லேட்டரல் என்ட்ரி) (அண்ணா பல்கலைக்கழகம்)	15
3.	எம்.பி.பி.எஸ்.	10
4.	பி.டி.எஸ்.	1
5.	பி. பார்மஸி	1
6.	டி. பார்மஸி 1. மதுரை	4
	2.கோயம்புத்தூர்	2
	3. தஞ்சாவூர்	2
7.	பி.எஸ்சி. நர்சிங்	4
8.	டிப்ளமா நர்சிங்	57
9.	பி.பி.டி.	1
10.	இந்திய மருத்துவம் பி.எஸ்.எம்.எஸ். (B.S.M.S.)	1
	பி.ஏ.எம்.எஸ். (B.A.M.S.)	1
	பி.யு.எம்.எஸ். (B.U.M.S.)	1
	பி.எச்.எம்.எஸ். (B.H.M.S.)	1
	பி.ஒய்.என்.எஸ். (B.Y.N.S.)	2
11.	பி.எட்., (இளநிலை கல்வியியல்) ஒவ்வோர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில்	1
	அண்ணாமலை பல்கலைக்கழகம்	2
	அழகப்பா பல்கலைக்கழகம்	1
	அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்	1

[2023 ஏப்ரல் 19

வரிசை எண்	கல்வியின் பெயர்	இட ஒதுக்கீடு
12.	டி.டி.எட். (ஆசிரியர் பட்டயப் பயிற்சி)	ஒவ்வொரு கல்வி நிறுவனங்களில் தலா 3 இடங்கள்
13.	பி.எஸ்ஸி. (வேளாண்மை)	6
14.	பி.எஸ்ஸி. (தோட்டக்கலை)	1
15.	பி.இ.(வேளாண்மை)	1
16.	ஐ.டி.ஐ. (தொழிற்பயிற்சி பயிலகம்)	ஒவ்வோர் ஐ,டி.ஐ.பயிற்சி நிறுவனத்திலும் தலா 5 இடங்கள்
17.	பாலிடெக்னிக் (தொழில்நுட்பப் பட்டயப்படிப்பு)	80
18.	இளங்கலை (ம) கிராப்ட்ஸ்	
19.	பி.வி.எஸ்ஸி. & ஏ.எச்.	2
20.	பி.எப்.எஸ்ஸி.	1
21.	பி.டெக். (உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம்)	1
22.	இளங்கலை பட்டப்படிப்பு	ஒவ்வொரு கல்லூரியிலும் தலா 6 இடங்கள்
		இரண்டு கிளைகளுக்கு மேல் கொண்டுள்ள கல்லூரிகளில் தலா 2 இடங்கள்
23.	பாலிடெக்னிக் (பகுதி நேரம்)	1
24.	பி.எல். (3/5 ஆண்டுகள்)	1 சதவீதம்
25.	பி.ஏ.பி.எல். (ஆனர்ஸ்)	1 சதவீதம்

2023 ஏப்ரல் 19]

7.3.1.8. இரு குடும்ப ஓய்வூதியம்

முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு அரசில் மறுவேலைவாய்ப்பினைப் பெற்று, ஓய்வு பெற்று மாநில ஓய்வூதியம் பெற்றவர்களின் வாரிசுதாரர்களுக்கு இரு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

7.3.1.9. பதினைந்து ஆண்டு கால இராணுவப் பணியினைப் பட்டதாரி கல்விக்கு இணையாகக் கருதுதல்

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று (இந்திய இராணுவத்தின் சிறப்பு சான்றிதழ் அல்லது கப்பல் படை/விமானப் படை ஆகியவற்றில் அதற்கு இணையான தகுதி) இராணுவத்தில் பதினைந்து ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்கள் பட்டப்படிப்பு தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள குரூப் 'சி' பணியிடங்களில் நியமனம் செய்ய தகுதியுடையவராகிறார்கள்.

7.3.1.10. கோயில் பாதுகாப்புப் படை

தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாக்கும் பொருட்டு கோயில் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாப்புப் பணியில் 1100 முன்னாள் படைவீரர்கள் தொகுப்பூதியத்தில் கோயில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

7.3.1.11. தேர்தல் பாதுகாப்புப் பணி

நாடாளுமன்றம்/சட்டமன்றம்/உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின் போது பாதுகாப்புப் பணியில் இருக்கும் காவல் துறையினருக்கு உதவிடும் வகையில் முன்னாள் படைவீரர்கள் தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அந்த வகையில், சுமார் 10,000 முன்னாள் படைவீரர்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் மதிப்பூதியம் அடிப்படையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

7.3.2. முன்னாள் படைவீரர் நலத் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்

7.3.2.1. கொடி நாள் நிதி

இந்நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு கொடி நாள் நிலைக்குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்கள் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவார்.

முன்னாள் படைவீரர்களுக்கு, திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம் தொடர்பான மானியங்கள், சிறார்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவி, பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல் ஆகியவற்றை நிறைவேற்றிட கொடி நாள் நிதி திரட்டப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் தொடங்கி அதற்கடுத்த ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் நாள் வரை கொடி நாள் நிதி திரட்டப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் கொடி நாள் நிதியானது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி, தொகுப்பு நிதி ஆகிய இருநல நிதிகள்மூலம் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்குமான நலத் திட்ட உதவிகளைச் செயல்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கொடி நாள் வசூல் நிதியின் 5 சதவீதம் தொகுப்பு நிதிக்கும், எஞ்சிய வசூல் தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு (7.12.2021 முதல் 6.12.2022 வரை) கொடிநாள் நிதியாக இதுவரை இல்லாத வகையில் ரூ.53.66 கோடி வசூல் செய்யப்பட்டது, 2022 ஆம் ஆண்டில் (7.12.2022 முதல் 6.12.2023 வரை) ரூ.4.67 கோடி கொடிநாள் நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது. 31.3.2023 வரை.

தற்பொழுது முப்படைகளின் கொடி நாள் நிதியானது www.flagday.tn.gov.in *என்ற இணையதளத்தின் மூலமாகவும் செலுத்தப்பட்டு வருகிறது.*

கொடி நாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 80G *(5)* (Vi)*-இன்கீழ் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 19]

முன்னாள் படைவீரர்களுக்கான நலத் திட்டங்கள், சலுகைகள் பற்றிய விரிவான விவரங்களை உள்ளடக்கிய கொடிநாள் மலர், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6,76,98,000 ஆகும். மத்திய முப்படை வாரியத்தின் கடித எண் 532 (5) கே.எஸ்.பி./டி, நாள். 02.03.2021-ன்படி, குடிமகனுக்கு ஒரு காசு வீதம் கணக்கீடு செய்து ஒன்றிய அரசின் பங்குத் தொகையாக, 2017 முதல் 2021 வரை, ஆண்டுக்கு ரூ. 6,76,980/- வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.33,84,900/- மத்திய முப்படை வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

7.3.2.2. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு முப்படைவீரர் வாரியம் செயல்படுகிறது. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இவ்வாரியத்தின் புரவலர் ஆவார். மேலும், அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் துணைத் தலைவராகவும், ஒன்றிய/மாநில அரசு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

அரசுச் சிறப்புச் செயலாளர் அவர்களை அலுவலால் தலைவராகக் கொண்டு, தமிழ்நாடு முப்படைவீரர் வாரியத்தின் உட்குழுவான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக் குழு செயல்படுகிறது.

கொடி நாள் நிதி வசூல், வைப்பு நிதியின் வட்டி, சொத்துகளிலிருந்து பெறப்படும் உரிமக் கட்டணம் ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரமாக உள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் இரண்டாம் உலகப்போர் நிதியுதவி, ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவிகள், திருமண நிதியுதவி, செயற்கை உபகரணங்களுக்கான நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவிகள் போன்ற உதவிகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு:-

(அ) மாதாந்திர நிதியுதவி

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தற்போது வழங்கப் படும் மாதாந்திர நிதியுதவி (ரூ.)	பயனாளர்-களின் எண்ணிக்கை	தொகை (ரூ.)
1.	இரண்டாம் உலகப்போர் (முன்னாள் படைவீரர்) நிதியுதவி	10,000/-	50	51,90,000/-
2.	உலகப்போர் (கைம்பெண்கள்) நிதியுதவி	4,000/-	2112	9,53,73,000/-
3.	முதியோர் நிதியுதவி	4,000/-	999	4,80,43,000/-
4.	தொழுநோய்/ காசநோயாளிகளுக்கான நிவாரணம்/ மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணம்	5,000/-	173	99,26,000/-
5.	பக்கவாத நிவாரணம்/ பார்வையற்றோருக்கான நிவாரணம்/ புற்றுநோய் நிவாரணம்/ மனவளர்ச்சிக் குன்றிய சிறார்களுக்கான நிவாரணம், மனநோய் கொண்ட முன்னாள் படைவீரரின் மனைவி, கைம்பெண்களுக்கான நிவாரணம்	7,000/-	882	7,24,13,500/-
	மொத்தம்		4216	23,09,45,500/-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

(ஆ) இதர நிதி உதவிகள்

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தற்போது வழங்கப் படும் தொகை ரூ.	பயனாளர்-களின் எண்ணிக்கை	தொகை (ரூ.)
1.	திருமண மானியம் (இரண்டு மகள்கள்)	25,000/-	458	1,14,50,000/-
2.	ஈமச்சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்களுக்கு)	10,000/-	2091	2,09,10,000/-
3	ஈமச்சடங்கு மானியம் (கைம்பெண்கள்)	7,000/-	708	49,56,000/-
4.	மொத்த மானியம் – செயற்கை உபகரணங்கள் மற்றும் கண் கண்ணாடி மானியங்கள்	-	2031	70,31,838/-
5.	வீட்டு கடன் மானியம், வீட்டு வரி மீளப் பெறுதல் மற்றும் வேலைவாய்ப்பு முன் பயிற்சி	-	129	25,94,192/-
6.	நிம்மதி இல்லம் மற்றும் புனே பக்கவாத மறுவாழ்வு மைய உள்நோயாளி செலவினம் ஆகியவை	-	52	26,82,624/-
	மொத்தம்		5469	4,96,24,654/-
	பெரு மொத்தம் (அ + ஆ)		9685	28,05,70,154/-

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 9,685 முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் மேற்கண்ட நிதியிலிருந்து பல்வேறு

நிதியுதவிகளும் மானியங்களும் ரூ. 28.05 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

7.3.2.3. தொகுப்பு நிதி

மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவால் தொகுப்பு நிதி நிருவகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன், அரசு தலைமைச் செயலாளர், தென்மண்டல இராணுவத் தளபதி ஆகியோர் இக்குழுவின் துணைத் தலைவர்கள் ஆவர். இந்நிதியின் நிலையான உட்குழு அரசு தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்நிதியிலிருந்து போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்குவதுடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெறும் வங்கிக் கடன்களுக்கு வட்டி மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி மானியம் ரூ.2,000/- முதல் ரூ.25,000/- வரை பள்ளிக் கல்வியிலிருந்து முதுகலைக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி வரை வழங்கப்படுகிறது.

2022-23 முதல் இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IITs) இந்திய மேலாண்மை கழகங்கள் (IIMs) மற்றும் தேசிய சட்டப் பள்ளியில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 50 ஆயிரமும், சைனிக் பள்ளியில் சேரும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களின் சிறார்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 25 ஆயிரமும் வழங்கப்படுகிறது.

தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு:-

2023 ஏப்ரல் 19]

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தற்போது வழங்கப்-படும் தொகை (ரூ.)	பயனாளர்-களின் எண்ணிக்கை	தொகை (ரூ.)
1.	போரில் வீர மரணம் அடைந்தோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை	1,00,000/-	8	8,00,000/-
2.	போரில் ஊனமுற்றோருக்குக் கருணைத் தொகை	30,000/- (ம) 50,000/-	11	4,10,000/-
3.	போரில் வீர மரணம் அடைந்தோர், 50%-க்கு மேல் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி	1,00,000/- மற்றும் 8 கிராம் தங்கம்	4	4,00,000/-
4.	போரில் 50%-க்குகீழ் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி	50,000/- மற்றும் 8 கிராம் தங்கம்	2	1,00,000/-
5.	கல்வி உதவித் தொகை (பள்ளி கல்வி முதல் தொழிற் கல்வி வரையில்)	2,000/- முதல் 25,000/- வரை	4766	9,61,52,439/-
6.	போரில் வீர மரணம் அடைந்தோர்/ ஊனமுற்றோருக்கு வீடு கட்ட மானியம்	50,000/-	1	50,000/-

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தற்போது வழங்கப்-படும் தொகை (ரூ.)	பயனாளர்-களின் எண்ணிக்கை	தொகை (ரூ.)
7.	வருடாந்திர பராமரிப்பு மானியம் (அரசிடமிருந்து அடுத்து வரும் நிதியாண்டில் மீளப் பெறப்படும்)	25,000/-	472	1,19,50,000/-
8.	வங்கி கடன் வட்டி மானியம் (தனி நபர்)	-	366	31,19,864/-
9.	வங்கி கடன் வட்டி மானியம் (சுயஉதவி குழு)	-	3	2,03,880/-
10.	தொகுப்பு மானியம்	-	17	10,00,000/-
11.	முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் தேசிய சட்ட பள்ளியில் பயில்வதற்கான ஊக்கத் தொகை	50,000/-	1	50,000/-
		மொத்தம்	5651	11,42,36,183/-

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 5,651 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு இந்நிதியிலிருந்து ரூ.11.42 கோடி நிதியுதவிகள்/ மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.4. இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்

இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்களுக்கு மாவட்ட நிருவாகம்மூலம் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்காக முகாம் ஒன்றுக்கு ரூ.6 இலட்சம் வீதம் ஐந்து முகாம்களுக்கு ஆண்டிற்கு ரூ.30 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து

2023 ஏப்ரல் 19]

வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில், நாகர்கோவில், திருப்பூர் மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்ற இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்களுக்காக ரூ.18 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.5. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரில் மகளிருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்குத் தையற்பயிற்சி அளிப்பதற்காக வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையல் அலகு செயல்பட்டு வருகிறது. இத்தையல் அலகுகளில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்களைச் சார்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள்/மனைவி/திருமணமாகாத மகள்/ திருமணமாகாத சகோதரிகள்/விவாகரத்தான மகள்/விவாகரத்தான சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாத காலத் தையற் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுபவர்களுக்குப் பயிற்சி உதவித் தொகையாக நாளொன்றுக்கு 50 ரூபாயும், கச்சாப் பொருள் வாங்குவதற்காக மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு ஒரு விலையில்லா தையல் இயந்திரமும் வழங்கப்பட்டு வருகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, இத்திட்டத்தின்கீழ் 35 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

7.6. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்கான உதவித் தொகை

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற தொழில்நுட்பப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	வகை	தொகை (ரூ.)
1.	தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு (கீழ்நிலை)	ரூ.3,000/-

வ. எண்	வகை	தொகை (ரூ.)
2.	தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு (மேல்நிலை)	ரூ.5,000/-
3.	தமிழ் மற்றும் ஆங்கிலம் சுருக்கெழுத்து தட்டச்சு (கீழ்நிலை)	ரூ. 7,000/-
4.	தமிழ் மற்றும் ஆங்கிலம் சுருக்கெழுத்து தட்டச்சு (மேல்நிலை)	ரூ. 10,000/-

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, இத்திட்டத்தின்கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.11 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

7.7. வீட்டு கடன் மானியம்

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் கைம்பெண்கள் (அவில்தார் படைத்தரம் வரையில்) வீடு கட்ட/வீடு வாங்க பெறப்படும் கடன் தொகைக்கு ரூ.1 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, 24 நபர்களுக்கு ரூ. 24 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

7.8. படைவீரர் மாளிகை/முன்னாள் படைவீரர் மையம்/முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

நலத் திட்டங்களுக்காக நிதி திரட்டும் வகையில், படைவீரர் மாளிகை-10, முன்னாள் படைவீரர் மையம்-20, முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்-1 ஆகிய கட்டடங்கள் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் கிடைக்கும் வருவாய், முன்னாள் படைவீரர் நல நிதியுடன் சேர்க்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, இச்சொத்துகள்மூலம் ரூ.3 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

7.9. மின் ஆளுமைத் திட்டம்

முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசியத் தகவல் மையத்தின்மூலம் மின் ஆளுமைத் திட்டம்

2023 ஏப்ரல் 19]

செயல்படுத்தப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்களைச் சார்ந்த கைம்பெண்களின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு பணியாளர் நியமனம் செய்யப்பட்டு மின் ஆளுமையில் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், கணினியில் நேரடியாகப் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் ஆகியவை மின் ஆளுமைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை பெறுவதற்கு முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் இணையவழிமூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7.10. சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் பல்வேறு சுயவேலைவாய்ப்புகளை அதிகரித்திட அரசு முனைப்பாக உள்ளது. சுயவேலைவாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 75 சதவீதம் வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ரூ.15 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 100 சதவீதம் வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, இத்திட்டங்களின்மூலம் ரூ.33.23 இலட்சம் மானியமாக 366 முன்னாள் படைவீரர்களுக்கும், 3 சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம்

(டெக்ஸ்கோ)

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மறுவேலைவாய்ப்பு வழங்கவும், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (TEXCO), நிறுவன (கம்பெனிகள்) சட்டம்

1956-ன்படி, 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகமானது, முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள முன்னாள் படைவீரர்களைப் பல்வேறு ஒன்றிய, மாநில அரசு நிர்வாகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய வாரியங்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலிய உதவியாளர்கள், தீயணைப்பாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள் ஆகிய பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி மறுவேலைவாய்ப்பு வழங்கும் “மனித வள முகமையாக” செயல்பட்டு வருகிறது.

இக்கழகம், தற்சார்பு பெற்ற இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் ஆகும். 31.3.2023 அன்றைய நிலவரப்படி, 6,732 பாதுகாவலர்கள், 1,244 ஓட்டுநர்கள், 172 இளநிலை உதவியாளர்கள், 11 தொலைபேசி இயக்குபவர்கள், 52 துப்பாக்கி ஏந்திய காவலர்கள், 27 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 8 செவிலிய உதவியாளர்கள் உட்பட மொத்தம் 8,226 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒன்றிய மற்றும் மாநில அரசு நிர்வாகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய வாரியங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், இந்து சமய அறநிலையத் துறையை சார்ந்த கோயில்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி.-க்களைக் கண்காணிக்கும் பொருட்டு, 49 முன்னாள் படைவீரர்கள் உதவி பாதுகாப்பு அலுவலர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதேபோன்று, ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) கல்குவாரிகளில் கற்கள் கொண்டு செல்வதை கண்காணிக்கும் பொருட்டு 6 முன்னாள் படைவீரர்கள் உதவி பாதுகாப்பு அலுவலர்களாகவும், சென்னை துறைமுகத்தில் நிர்வாக அலுவலர்களாக 4 முன்னாள் படைவீரர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதில், 2,616 முன்னாள் படைவீரர்கள் ஒன்றியப் புனரமைப்புத் தலைவர் ஊதிய விகிதத்தில் 10 சதவீதம் சேவை கட்டணத்துடனும், 5,610 முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு குறைந்தபட்ச ஊதிய விகிதத்தில் 8 சதவீதம் சேவை கட்டணத்துடனும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

8.1. மின் திருட்டுத் தடுக்கும் படை

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகத்தில் நடைபெறும் மின் திருட்டைத் தடுக்கும் பொருட்டு, அவில்தார்கள் மற்றும் இளநிலை படை அலுவலர்கள் நிலையில் 215 முன்னாள் படைவீரர்களைக் கொண்டு, “மின் திருட்டுத் தடுக்கும் படை” அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள்மூலம் ரூ.223.35 கோடி அளவிற்கு மின் திருட்டு தடுக்கப்படுகிறது.

8.2. சுற்றுலா பாதுகாப்புப் படை

தமிழ்நாடு சுற்றுலாத் துறையில், அவில்தார்கள் மற்றும் இளநிலை படை அலுவலர்கள் நிலையில், 31 முன்னாள் படைவீரர்களைக் கொண்டு “சுற்றுலா பாதுகாப்புப் படை” அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரம், உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி மற்றும் கொடைக்கானல் ஆகிய ஐந்து முக்கியச் சுற்றுலா தலங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

8.3. டெக்ஸ்கோவிற்கு புதிய சொந்தக் கட்டடம்

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், ரூ. 19.19 கோடி செலவில் 760.16 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் வாங்குவதற்கும், அதில், 15,708.98 சதுர அடியில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்த நிலையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து புதிய கட்டட ஒப்படைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், டெக்ஸ்கோ, புதிய கட்டடத்தில், ரூ. 2.20 கோடி செலவில் கட்டட உள்கட்டமைப்பு வேலைப்பாடுகள் செய்யும் பணியை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு வழங்கி, அதன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

8.4. இதர நலத்திட்டங்கள்

முன்னாள் படைவீரர்களின் நலன் கருதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் கீழ்க்காணும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:-

விபத்துக் காப்பீட்டுத் திட்டம். தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் "விபத்துக் காப்பீட்டுத் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு, இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம். தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்கள் ஓய்வு பெற்ற பின்னர் பணப்பயன் அடையும் வகையில் "தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.250/- செலுத்தப்பட்டு வருகிறது. இதனால், ஆண்டுக்குத் தோராயமாக ரூ.2.50 கோடி செலவிடப்படுகிறது.

ஈமச்சடங்கு நிதி. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்கள் மரணமடைந்தால் ஈமச்சடங்கு நிதி ரூ.5,000/- வழங்கப்பட்டு வருகிறது.

9. மாநில மனித உரிமைகள் ஆணையம்

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், 1993 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகவும், மாநில மனித உரிமைகள் ஆணையம் 1997 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

மனித உரிமைகள் பாதுகாப்புத் திருத்தப்பட்ட சட்டம், 2006 (மத்திய சட்டம் 43/2006) இன் சட்டப்பிரிவு 21(2) இன்படி, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக அல்லது உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஒருவரை தலைவராகவும்; உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த அல்லது இருக்கும் ஒருவர் அல்லது மாவட்ட நீதிபதியாக ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தவரை ஓர் உறுப்பினராகவும்; மற்றும் மனித உரிமைகள் துறை பற்றி அறிந்தவர் அல்லது நேரடியாக மனித உரிமைகள் பற்றிய அனுபவமுடையவரை மற்றோர் உறுப்பினராகவும் கொண்டிருக்கும்.

மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டுள்ள காரணத்தினால் புகார்களின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணம் உள்ளது. தமிழகத்தில் மாநில மனித

2023 ஏப்ரல் 19]

உரிமைகள் ஆணையம் செயல்படுத்தத் துவங்கிய முதல் ஆண்டிலேயே 2,162 புகார்கள் ஆணையத்தால் பெறப்பட்டு அடுத்தடுத்த ஆண்டுகளில் புகார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31 ஆம் நாள்வரை, இவ்வாணையத்திற்கு 5,501 புகார்கள் வரப்பெற்று அதனில் 4,096 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் குறித்த பின்வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்கங்கள் ஆகியவை ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகின்றன:-

அ) சுகாதார உரிமை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 8.2.2022 அன்று நடத்தப்பட்டது.

ஆ) பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதற்கான போலீஸ் பாய்ஸ் கிளப்பை மேம்படுத்துவதற்காக 5.3.2022 அன்று விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இ) சர்வதேச மகளிர் தினம் 8.3.2022 அன்று கொண்டாடப்பட்டது.

ஈ) மனித உரிமை மேற்கோள்கள் குறித்த ஒரு நாள் பயிலரங்கம் 24.3.2022 அன்று நடைபெற்றது.

உ) "மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி" குறித்த வெள்ளி விழா ஆண்டு கருத்தரங்கு 18.4.2022 அன்று நடைபெற்றது.

ஊ) "மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு" என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கிடையே வினாடி-வினா போட்டி 23.5.2022 அன்று நடைபெற்றது.

எ) சர்வதேச மனித உரிமைகள் தினம், டிசம்பர் 10, 2022 அன்று கொண்டாடப்பட்டது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மனித உரிமை உறுதிமொழி எடுத்துக்கொள்வதோடு, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 10 ஆம் தேதி மனித உரிமைகள் தினத்தை விமர்சையாகக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில், கல்லூரி மாணவர்களுக்கிடையே பேச்சுப் போட்டி, கருத்தரங்கு, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், நேரடியாக பணி நியமனம் பெறும்

காவல் துறை மற்றும் சிறைத் துறை அதிகாரிகளுக்கு பயிற்சியும் மற்றும் சட்டம், உளவியல், குற்றவியல், மனித உரிமைகள் குறித்த கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு நிலையப் பயிற்சியும் (Internship training) ஆணையத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

மாநில மனித உரிமைகள் ஆணையம் தொடங்கி 25 ஆண்டுகள் முடிந்த நிலையில் வெள்ளிவிழா ஆண்டு 6.8.2022 அன்று சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. அதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, நினைவு புத்தகம் மற்றும் அஞ்சல் தலைகளை வெளியிட்டார். மேலும், அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மாநில மனித உரிமைகள் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

அ. ஒருநாள் கருத்தரங்கு மற்றும் ஆலோசனைக் கூட்டம் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆ. ஆணையத்தின் இணையதளம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இ. மனித உரிமைகள் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் குறித்த பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

10. முடிவுரை

கல் வீடாக இருந்த நிர்வாகம் இன்று கண்ணாடிக் கூண்டாக ஆகிவிட்டது. திறந்த நிர்வாகமே சிறந்த நிர்வாகமாகச் செயல்பட முடியும், வெளிப்படையான நிர்வாகமே வேகமாகப் பணியாற்ற முடியும் என்பது இன்றைய நடைமுறை. மின்னணுச் சாதனங்கள் எதிர்பார்ப்புகளை எகிற வைத்து விட்டன. மக்கள் மின்னல் வேகத்தில் தீர்வுகளை எதிர்பார்க்கிறார்கள். அலுவலர்கள் நேர்மையாகவும், விரைவாகவும், விழிப்புணர்வுடனும், அக்கறையுடனும், பரிவுடனும், பண்புடனும், சமூக உணர்வுடனும் செயல்பட வேண்டும் என்பதே இன்று பொது மக்களின் தேவை. அதை நெறிப்படுத்துவற்குப் பொதுத் துறையே முதுகுத்தண்டாய் முன் நிற்கிறது. அத்தனை துறைகளையும் மூளையின் இரு கோளங்களையும் ஒருங்கிணைக்கின்ற

2023 ஏப்ரல் 19]

பெருமூளை பிணைப்பியைப்போல பொதுத் துறை செயல்படுகிறது. அரசின் திட்டங்கள் உரியவர்களைச் சென்றடைய அலுவலர்கள் ஆற்றும் கடமை முக்கியம். அவர்கள் நேர்மையாகச் செயல்படுகிறார்களா என்பதை நுட்பமாகக் கண்காணிக்கும் பணியைப் பொதுத் துறை செய்து வருகிறது. கமுக்கமான பல கோப்புகள் சிறிதும் வெளியே கசியாமல் கையாளப்படுகின்றன.

பொதுத் துறையின் அலுவலர்கள் இராணுவக் கட்டுப்பாட்டோடு செயல்படுகிற சீருடை அணியாத சிப்பாய்கள். பல நிகழ்வுகளில் உறக்கமின்றி, பசியை மறந்து பணியாற்றுகிறவர்கள். எப்பணியை ஒப்படைத்தாலும் அப்பணியை அறப்பணியாக ஆற்றும் அர்ப்பணிப்பாளர்கள். இத் துறை பல துறைகளுக்குச் சக்தியைப் பாய்ச்சும் இதயமாகவும், சுவாசத்தை அளிக்கும் நுரையீரலாகவும் செயல்படுவதால் அரசு இயந்திரம் எப்போதும் ஆயத்த நிலையில் இருக்க முடிகிறது. பரிசுகளோ பதக்கங்களோ வழங்கப்படாமல் பணியையே பதக்கமாக, வியர்வையையே பன்னீராகக் கருதி பணியாற்றும் துறை, பொதுத் துறை.

———

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 19*

இணைப்பு-III

(*475 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் தேர்தல்கள் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும், உரிமையையும் பொறுத்து, ஒரு நாட்டின் வளர்ச்சி நிர்ணயிக்கப்படுகிறது. இந்தியா, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஒரு ஜனநாயக நாடாக இருந்துவரும் நிலையில், சாதாரண குடிமக்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தவும், எடுத்துரைக்கவும் மற்றும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் வாய்ப்பளிக்கிறது.

இந்தியத் தேர்தல் ஆணையமானது, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்ட அமைப்பாகும். இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 324-ன்கீழ், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான அனைத்துத் தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

மாநிலத்தில், தேர்தல் துறையின் தலைவராகச் செயல்படும் தலைமைத் தேர்தல் அதிகாரி, 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளை ஏற்று செயல்படுத்துகின்றார். மாவட்ட அளவில், பொதுத் (தேர்தல்கள்)துறை மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, அனைத்து பணிகளையும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின்

ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பின்வரும் பணியாளர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு உதவுகின்றனர்:

i) வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Electoral Registration Officers-EROs) மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Assistant Electoral Registration Officers-AEROs).

ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Returning Officers-ROs) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Assistant Returning Officers-AROs).

iii) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer-BLO).

பொதுவாக வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நிலையில் உள்ளோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், மாநகராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் உள்ளனர். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர்கள், அந்தந்த மண்டலங்களுக்குரிய வாக்காளர் பதிவு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள், மாநகராட்சி மண்டலப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1. 2023-2024 இன் முக்கிய நிகழ்வுகள்

1.1. வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்,2023

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 21-ன்படி, ஒவ்வொரு மக்களவை அல்லது மாநில சட்டமன்றப் பேரவைப் பொதுத் தேர்தல்கள் மற்றும் தற்காலிகமாக ஏற்படும் காலியிடத்திற்கான இடைத் தேர்தலுக்கு முன்பு சட்டமன்றத்

தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்படுகிறது. சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் எந்த ஒரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

பொதுவாக வாக்காளர் பட்டியலின் வருடாந்திர திருத்தமானது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. குடிமக்கள், வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்குரிய தகுதியேற்படுத்தும் நாள் குறித்து, 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 14(b)-ல் திருத்தம் செய்யப்பட்டது. இதன்படி, 2023 ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்திலிருந்து ஜனவரி 1 ஆம் தேதி மட்டுமல்லாது, தகுதியேற்படுத்தும் நாள் ஜனவரி 1, ஏப்ரல் 1, ஜூலை 1 மற்றும் அக்டோபர் 1 ஆகிய நான்கு தகுதியேற்படுத்தும் நாள்கள் என்று நடைமுறைப்படுத்தப்பட்டது

1-1-2023-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:-

வரைவுப் பட்டியல் வெளியீடு	9-11-2022
கோரிக்கை/மறுப்புரை அளிக்க கடைசி தேதி	8-12-2022
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு	5-1-2023

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மேற்குறிப்பிட்ட வாக்காளர் பட்டியல் திருத்தத்தில், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற சேர்த்தல்கள்/நீக்குதல்கள்/ திருத்தங்கள் பின்வருமாறு:-

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
சேர்த்தல்கள்	4,70,283	5,46,225	625	10,17,133
நீக்குதல்கள்	3,75,520	4,26,260	356	8,02,136
திருத்தங்கள்	1,13,047	1,02,165	96	2,15,308

2023 ஏப்ரல் 19]

கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி, 5-1-2023 அன்று இறுதி வாக்காளர் பட்டியலில் மொத்தம் 6.21 கோடி வாக்காளர்கள் இருந்தனர்:-

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
பொது வாக்காளர்கள்	*3,04,89,866*	*3,15,43,286*	*8,027*	*6,20,41,179*
பணித் தொகுதி வாக்காளர்கள்	*71,946*	*1,912*	*0*	*73,858*
மொத்தம்	*3,05,61,812*	*3,15,45,198*	*8,027*	*6,21,15,037*

1.2. வாக்குச்சாவடிகள் சீரமைப்பு, 2023

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2023-ன் முன்-திருத்த நடவடிக்கையாக, வாக்குச்சாவடிகளின் சீரமைப்பு மற்றும் பிரிவுகளை உருவாக்குதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கும், கிராம மற்றும் நகரப் பகுதிகளில் 1500 வாக்காளர்களுக்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட அனைத்து வாக்குச் சாவடிகளை சீரமைக்கவும்/ திருத்தியமைக்கவும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. 1500-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் கொண்ட வாக்குச் சாவடிகளுக்கு புதிய பகுதிகளை உருவாக்குதல்/ இடம்மாற்றம்/கட்டடம்/பிரிவுகளின்மறுசீரமைப்பு/இணைப்பு/ வாக்குச் சாவடிகளின் பெயர் மாற்றம் ஆகியவற்றுக்காக அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளிடமிருந்தும் பெறப்பட்ட கருத்துருக்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரைக்கப்பட்டன. கட்டுப்பாட்டு அட்டவணை தரவுதளத்தில் மாற்றங்களை மேற்கொள்ளக் கோரி, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அக்கருத்துருக்கள், அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டன. புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2023-ன்படி வாக்குச்சாவடி நிலைய சீரமைப்பிற்குப் பின், மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 68019-லிருந்து 68036 ஆக உயர்ந்துள்ளது.

[2023 ஏப்ரல் 19

1.3. தேசிய வாக்காளர் தினம், 2023

இந்தியத் தேர்தல் ஆணையம், தன்னுடைய நிறுவன தினமான ஜனவரி 25 ஆம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக, 2011 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி வருகின்றது. 2023 ஆம் ஆண்டின் 13-வது தேசிய வாக்காளர் தினத்தின் முக்கியக் குறிக்கோள், "வாக்களிப்பதே சிறந்தது, நிச்சயம் வாக்களிப்பேன்" என்பதாகும்.

பதின்மூன்றாவது தேசிய வாக்காளர் தினமானது மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநிலத்தின் அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் என தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு ஜனவரி 25 ஆம் நாள் மாநில அளவிலான தேசிய வாக்காளர் தினம் கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டது. இத்தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டம் தொடர்பாக பல்வேறு போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள், சிறப்புப் பள்ளி குழந்தைகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநில அளவில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும், 2023 ஆம் ஆண்டு குடியரசு தின விழா அணி வகுப்பின்போது பொதுத் (தேர்தல்கள்) துறையின் சார்பில் அலங்கார ஊர்தியும் இடம்பெற்றது. வாக்காளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான வழிமுறைகள், வாக்காளர் கட்டணமில்லா உதவிஎண் 1950, வாக்காளர்களின் ஆதார் இணைப்பு, மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் வாக்காளர் உறுதிமொழி தொடர்பான விவரச் சுவரொட்டிகள், பதாகைகள், காட்சிப் பலகைகள் வைக்கப்பட்டன.

1.4. வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP)

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க, தமிழ்நாட்டில் பொதுமக்களிடையே வாக்காளராகப் பதிவு செய்வது மற்றும் மனசாட்சிப்படி வாக்களிப்பது ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள்

2023 ஏப்ரல் 19]

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 100 சதவீத வாக்காளர் பதிவு, என்னும் இலக்கின் அடிப்படையில் பல்வேறு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. வாக்காளர் விழிப்புணர்வு செயல்பாடுகளில் ஒரு பகுதியாக ஓவியப் போட்டி, பாட்டுப் போட்டி, இணையவழி வினாடி-வினாப் போட்டி ஆகிய பல்வேறு போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், சிறப்பு பள்ளிக் குழந்தைகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்டன. மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2023 தொடர்பான செயல்பாடுகள் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்களின் சமூகவலைதளப் பக்கங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பதிவேற்றம் செய்யப்பட்டது.

1.5. 98. ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல்

இந்தியத் தேர்தல் ஆணையம், 98. ஈரோடு (கிழக்கு) *சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு 27-2-2023 அன்று நடத்தப்பட்டு, 2-3-2023 அன்று வாக்கு எண்ணிக்கையை நடத்த தேர்தல் அட்டவணையை வெளியிட்டது.*

இந்த இடைத் தேர்தலில், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தேர்தல் நடத்தைக்கான விதிமுறைகள் மற்றும் தேர்தல் செலவின கட்டுப்பாடு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பொதுப் பார்வையாளர், செலவினப் பார்வையாளர், காவல் பார்வையாளர் என முறையே அதிகாரிகள் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டனர். சுதந்திரமாகவும், நேர்மையாகவும் மற்றும் அமைதியான முறையில் தேர்தலை நடத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேற்கூறிய தொகுதியில் 5 கம்பெனி மத்திய ஆயுத பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், பதற்றமான மற்றும் அதிக பதற்றமான வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டன. மாவட்ட படைப் பரவலாக்கத் திட்டத்தின் அடிப்படையில், மண்டல அளவில் போதுமான நிலைப் படைகளைத் தேவையான சுற்றுக்காவல் படைகளின்மூலம் வலுவூட்டி அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது. வாக்குப் பதிவு முடிவுற்றபிறகு,

வாக்களிக்கப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் வைக்கப்பட்ட அறைகளின் பாதுகாப்புக்காக 2 கம்பெனி மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படையினர் தக்க வைத்துக்கொள்ளப்பட்டனர்.

இடைத் தேர்தல் அமைதியாகவும், சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவ்வித அசம்பாவிதமின்றியும் நடைபெற்றது. 98. ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் 74.96 சதவீத வாக்குகள் பதிவு செய்யப்பட்டன.

1.6. தேர்தல் பார்வையாளர்கள்

இந்தியத் தேர்தல் ஆணையம், மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா மாநிலங்களின் சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் மற்றும் 98. ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் அட்டவணையை 18-1-2023 அன்று வெளியிட்டது. இதற்காக, தமிழ்நாட்டிலிருந்து பொதுப் பார்வையாளர்களாக இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளும் மற்றும் காவல் பார்வையாளராக இந்திய காவல் பணி அதிகாரியும், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் மத்திய பார்வையாளர்களாக அனுப்பப்பட்டனர்.

1.7. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) சேமிப்பதற்கான கிடங்குகள்

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) முறையாக மற்றும் பாதுகாப்பாக சேமிப்பதற்குரிய போதுமான கிடங்குகளை உருவாக்குவதென இந்தியத் தேர்தல் ஆணையத்தால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, தலைமைத் தேர்தல் அதிகாரிகளை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை பாதுகாப்பான முறையில் சேமிப்பதற்கு அனைத்து மாவட்டங்களின் தலைமை இடங்களில் தனி கிடங்குகளைக் கட்டுமாறு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டது.

2023 ஏப்ரல் 19]

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை சேமிப்பதற்குரிய கிடங்கு கட்டுமானப் பணி 31 மாவட்டங்களில் நிறைவுற்றது (முன்பிருந்த 32 மாவட்டங்களில்), சென்னை மாவட்டத்தில் மட்டும் தற்போது பணி நடைபெற்று வருகிறது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ராணிப்பேட்டை, தென்காசி, செங்கல்பட்டு, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மேற்கூறிய கிடங்குகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.8. தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு

இந்தியத் தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணியை செம்மையாகவும், பயனுள்ள வகையிலும் நிர்வகிக்க ஏதுவாக கணினியில் பல மென் பொருட்கள் மற்றும் புதிய தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகங்களிலும் தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அடங்கிய தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியதன் அடிப்படையில் 4 இருக்கைகளுடன், 1800 4252 1950 என்ற எண் கொண்ட கட்டணமில்லாத் தொலைபேசி அழைப்பு மையம் வருடம் முழுவதும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் இயங்கி வருகிறது.

1.9. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

இந்தியத் தேர்தல் ஆணைய அறிவுறுத்தலுக்கு இணங்க வாக்காளர் அடையாள அட்டைகள் PVC *அட்டைகளுக்குப் பதிலாக* PVC + PETG *அட்டைகளாக வழங்கப்பட்டு வருகின்றன. தொடர் திருத்தம், 2022 மற்றும் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2023-ல் 21.99 இலட்சம் புதிய வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் புதிய வாக்காளர்களுக்கு அஞ்சல் துறையின் விரைவு அஞ்சல்மூலம் வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்படும்.*

[*2023 ஏப்ரல் 19*

2. நிதி ஒதுக்கீடு

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு “2015.00. தேர்தல்கள்” என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38.02.-ல் இடம் பெற்றுள்ளது. 2023-2024 ஆம் நிதியாண்டில், தேர்தல் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல் ஆகிய செலவினங்களுக்காக ரூ.332,76,66,000/- (ரூபாய் முந்நூற்று முப்பத்திரண்டு கோடியே எழுபத்தாறு இலட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சில முக்கிய இனங்களுக்கு தலைப்பு வாரியாக கீழே விவரமாக கொடுக்கப்பட்டுள்ளன:

102. தேர்தல் அதிகாரிகள்

AA. சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியம் மற்றும் படிகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லரைச் செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் ஆகிய செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.33,24,38,000/- (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே இருபத்து நான்கு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

AA. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத்

2023 ஏப்ரல் 19]

தயாரித்தல், திருத்துதல் மற்றும் அச்சிடுவதற்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் ஆகியவையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள ஓர் உதவியாளர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் படித்தொகைகள் ஆகியவை இத்துணைத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, வாக்காளர் பட்டியல் தரவுதளத்தை பராமரித்தல் மற்றும் தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள் ஆகிய செலவினங்களும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.159,11,46,000/- (ரூபாய் நூற்று ஐம்பத்தொன்பது கோடியே பதினொன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

AC. மேலவைத் தொகுதிகள்

மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல் ஆகிய செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள நிதியாக ரூ.12,000/- (ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

AA. மக்களவைக்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு

இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் (VVPATs) ஆகியன ராணிப்பேட்டை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு வேளாண்பொருள் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளிலும், திருவள்ளூர், சென்னை, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளுக்கான வாடகைக் கட்டணம் வழங்குவதற்கான செலவுகள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2,72,51,000/- (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்திரண்டு இலட்சத்து ஐம்பத்தொன்றாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

105. மக்களவைத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

AA. இடைத்தேர்தல்கள்

மக்களவைத் தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும். 2023-2024ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அடையாள நிதியாக ரூ.18,000/- (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 17-வது மக்களவைக்கான பொதுத் தேர்தல் 18-4-2019 அன்று நடைபெற்றது. மேலும், தற்பொழுது தமிழ்நாட்டில் மக்களவைத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை.

AB. மக்களவைத் தேர்தல்

மக்களவைக்கு தனியாக பொதுத்தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 17-வது மக்களவைக்கான பொதுத் தேர்தல் 18-4-2019 அன்று நடைபெற்றது.

வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகைப் பணியாளர்கள் ஊதியம், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர், ஓய்வுபெற்ற காவலர்கள், தேர்தல் பணியில்

2023 ஏப்ரல் 19]

ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கான ஓட்டுநர் ஊதியம், தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் மற்றும் மாவட்டங்களில், சிறப்பு/தற்காலிகப் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் மிகை ஊதியம், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தடுப்பு அரண் ஏற்படுத்துவதற்கான செலவு மற்றும் இதர செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டன.

2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான செலவினத்தொகை ரூ.121,82,39,000/- (ரூபாய் நூற்று இருபத்தொன்று கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களவை பொதுத் தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களையும் ஒன்றிய அரசே ஏற்கின்றது. இச்செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் ஒன்றிய அரசிடமிருந்து முழுமையாக திரும்பப் பெறப்படும்.

106. மாநில சட்டமன்றப் பேரவை தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

AA. மாநில சட்டமன்றப் பேரவை

மாநில சட்டமன்றப் பேரவைக்கு நடைபெறும் பொதுத்தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தலுக்குரிய செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.55,28,000/- (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் மாநில அரசே ஏற்கும். 16-வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல் 6-4-2021 அன்று நடைபெற்றது.

27-2-2023 அன்று நடைபெற்ற 98. ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகைப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்கான ஊதியம், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தடுப்பு அரண் அமைத்தல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம்

அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் (VVPATs) ஆய்வு மேற்கொள்ள ஈடுபடுத்தப்பட்ட தொழில்நுட்பப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.3,04,17,470/- (ரூபாய் மூன்று கோடியே நான்கு இலட்சத்து பதினேழாயிரத்து நானூற்று எழுபது மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டது தற்பொழுது தமிழ்நாடு சட்டமன்றத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை.

AB. மாநில சட்டமன்ற மேலவை

மாநில சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். 2022-2023-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அடையாள நிதியாக ரூ.17,000/- (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

AA. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கான செலவினம் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.15,30,17,000/- (ரூபாய் பதினைந்து கோடியே முப்பது இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழு தேர்தல் நிர்வாக அமைப்பும், தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இத்தகு மிகப்பொறுப்பான குறிக்கோளை அடைவதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.

2023 ஏப்ரல் 19]

இணைப்பு-III

(*475 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 38-பொது (மறுவாழ்வு)த் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

இலங்கைத் தமிழரின் நலன், அயலகத் தமிழர் நலன் மற்றும் தாயகம் திரும்பியோரின் மறுவாழ்வினைப் பேணிப் பாதுகாத்திடுவது தொடர்பான பணிகளும், திட்டங்களும் தலைமைச் செயலகத்தின் பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மறுவாழ்வு ஆணையரகம் 1969 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன்மூலம் பர்மா, வியட்நாம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழியினருக்கான நலத் திட்டம் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இலங்கையில் மூண்ட உள்நாட்டுப் போர், இனக்கலவரம் காரணமாக பல்வேறு காலகட்டங்களில் 3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக 1983-ல் தமிழ்நாட்டிற்கு வந்தனர். அந்த சமயத்தில், இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பணிகளும் இத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டன.

பன்னெடுங்காலந்தொட்டு தமிழர்கள் கல்வி, வணிகம் மற்றும் வாழ்வாதாரத்திற்கான வேலைவாய்ப்பினைத் தேடி உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு, புலம்பெயர்ந்த அயலகத் தமிழர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்திட 2010 ஆம் ஆண்டு மறுவாழ்வுத் துறை இயக்குநரகத்தை வலுப்படுத்த "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும், 2021 ஆம் ஆண்டு இவ்வாணையரகம் "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

தற்போது, அரசின் தொலைநோக்குத் திட்டத்தின்படி, வெளிநாடுகளில் பாதிக்கப்படும் அயலக தமிழர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு போதுமான உதவிகளைச் செய்திடல், வெளிநாடுகளில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகள் மற்றும் வாழ்வாதாரத்தினைப் பேணிக் காத்தல் தொடர்பான பொருண்மை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சரின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

2. அயலகத் தமிழர்கள் நலன்

புலம் பெயர்ந்தோரது பாதுகாப்பிற்குப் போதுமான உதவிகளைச் செய்வதில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. வெளிநாடுகளுக்கு சென்றவர்களிடமிருந்தோ அல்லது அவர்களது குடும்பங்களிலிருந்தோ இன்னல்படுவது தொடர்பாக தொலைபேசி அழைப்பு வரும் நேரங்களில் வெளிநாடுகளில் துன்புறும் நேர்வுகளில் அவர்களை மீட்டு தாயகம் அழைத்து வரவும், வேலை செய்யும் இடங்களில் வரவேண்டிய தீர்வுகளைப் பெற்று வழங்கிடவும், வெளிநாடுகளில் இறந்தவர்களின் பூத உடல்களை ஒன்றிய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் சொந்த ஊர்களுக்குக் கொண்டு வரவும் இத்துறை உதவி செய்து வருகிறது.

மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் "மாவட்ட நல அலுவலர் (அயலகத் தமிழர்கள்)" ஆக நியமிக்கப்பட்டுள்ளதுடன், தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவானது "மாவட்ட நல மையம் (அயலகத் தமிழர்கள்)" ஆகவும் செயல்பட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அயலகத் தமிழர்களுக்காக அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2.1. அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6.10.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர் நலன்

2023 ஏப்ரல் 19]

காக்க "அயலகத் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

மேலும், 2011 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வெளிநாடுவாழ் தமிழர் நலச் சட்டம், உட்பிரிவு 10(1)-அயலகத் தமிழர் நலன்களுக்காக வாரியம் உருவாக்கிட வழிவகை செய்கிறது.

இதன் அடிப்படையில், அரசாணையின்வழி தலைவர் உள்ளடக்கிய 15 உறுப்பினர்கள் கொண்ட "அயலகத் தமிழர் நல வாரியம்" அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் முதல் கூட்டம் 28.2.2023 அன்று நடைபெற்றது. இவ்வாரியத்தின்மூலம் கீழ்க்காணும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்:

- *அயலகத் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்துதல்; வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு காப்பீடு திட்டம் மற்றும் அடையாள அட்டை வழங்குதல்.*

- *வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்குதல்.*

- *சென்னை மட்டுமின்றி இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை, விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம் அமைத்தல்.*

- *அயலகத் தமிழர்களுக்கு ஆலோசனை வழங்க கட்டணமில்லாத் தொலைபேசி வசதி, வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகள் ஏற்படுத்துதல்.*

- *அயலகத் தமிழர்களுக்கான சட்ட உதவி மையம் அமைத்தல்.*

2.2. அயலகத் தமிழர்களுக்கான இதர நலத் திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, அயலகத் தமிழர்களுக்குக் கீழ்க்காணும் உதவிகளுக்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன:

- கொரோனா பெருந்தொற்று காரணமாக சுமார் 7 இலட்சம் தமிழர்கள் தாயகம் திரும்பி உள்ளனர். இவர்களில் பலர் வேலை இழந்தும் திரும்பி உள்ளனர். இவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் "புலம்பெயர்ந்தோர் வேலைவாய்ப்பு திட்டத்தின்"கீழ் சிறு மற்றும் குறு தொழில்கள் செய்திட அதிகபட்சமாக 2.5 இலட்சம் ரூபாய் மானியத்துடன்கூடிய கடன் வசதி செய்து தரப்படுகிறது.
- அயலகத் தமிழர்கள் தமிழ்நாட்டில் பாதுகாப்பான முதலீடு செய்ய வழிவகை செய்தல்.
- "எனது கிராமம்" திட்டத்தின்கீழ், புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்களது சொந்த ஊரில் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்திட வழிவகை செய்தல்.

2.3. பண்பாடு மற்றும் அறிவுசார் நிகழ்வுகளை ஊக்குவிப்பதில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பினை அங்கீகரித்தல்

அ) அயலகத் தமிழர் தினம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 12 ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வானது பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் பங்களிப்புடன் அவர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், ஊக்குவிக்கும் விதமாகவும் அமையும். மேலும், நமது நாட்டின் பாரம்பரியம், கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டினை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

2022 ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்று காரணமாக இந்நாள் "தமிழால் இணைவோம்" என்ற கருப்பொருளில் இணையவழி மூலமாகக் கொண்டாடப்பட்டது.

அயலகத் தமிழர் தினம் 2023, "உலகெங்கும் தமிழ்" என்ற கருப்பொருளில் 11.1.2023, 12.1.2023 ஆகிய நாட்களில் சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மலேசிய நாட்டு அமைச்சர்

2023 ஏப்ரல் 19]

திரு. சிவகுமார் வரதராஜ்; மாண்புமிகு இலங்கை நாட்டு அமைச்சர் திரு. அரவிந்த்குமார்; மாண்புமிகு பப்புவா நியு கினியா நாட்டு ஆளுநர் திரு. சசீந்திரன் முத்துவேல்; கயானா நாட்டு முன்னாள் பிரதமர் டாக்டர் மோசஸ் வீராசாமி நாகமுத்து; மொரிஷியஸ் நாட்டு இடைக்கால அதிபர் டாக்டர் பரமசிவம்பிள்ளை வையாபுரி; இலங்கை நாட்டு முன்னாள் முதலமைச்சர் திரு. செந்தில் தொண்டைமான்; மலேசிய நாட்டு முன்னாள் அமைச்சர் திரு. சரவணன்; இலங்கை நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. சுமந்திரன், திரு. மனோ கணேசன்; மேற்கு ஆஸ்திரேலியா, ரிவர்டன் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெகதீஷ் கிருஷ்ணன் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து முக்கியமான தமிழ் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். மேலும், பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்க நிர்வாகிகள் பங்கேற்று, வெவ்வேறு தலைப்புகளில் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவைதவிர, கலை பண்பாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

ஆ) அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவித்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் பயிற்றுவிப்பதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆசிரியர்களுக்கு பயிற்சி மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 2022-2023 ஆம் நிதி ஆண்டிற்கு ரூபாய் 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மெய்நிகர் கலைக்கூடம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.4 சுழல் நிதி

சுழல் நிதியாக ரூபாய் 1 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, அதிலிருந்து கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இத்தொகையானது ஒவ்வோர் ஆண்டும் மீளப்பெறப்பட்டு வருகிறது:

- *2022-2023 ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 145 தமிழர்கள் இந்திய தூதரகங்கள் வாயிலாக மீட்டு தாயகம் அழைத்து வரப்பட்டனர்.*
- *வெளிநாடுகளில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கான மருத்துவச் செலவினங்களை மேற்கொள்ளுதல்.*

- *2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு சென்று உயிரிழந்த 158 தமிழர்களின் பூத உடல்கள் இந்தியா கொண்டு வரப்பட்டு, மாநில அரசின் இலவச அமரர் ஊர்தி சேவை எண் (155377) மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.*

மேற்கண்ட காரணங்களுக்காக, 2022-2023 ஆம் நிதியாண்டில் சுழல் நிதியிலிருந்து ரூபாய் 57.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2.5. கம்போடியா, தாய்லாந்து–மியான்மர் எல்லையிலிருந்து தமிழர்களை மீட்டெடுத்தல்

தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் உட்பட பல இந்தியர்கள், தகவல் தொழில்நுட்ப வேலைகளில் பணியமர்த்துவதாகக் கூறி கம்போடியா, தாய்லாந்து-மியான்மர் எல்லைப் பகுதிகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டு சட்டவிரோத இணையதள வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுவதாகவும், அவ்வேலைகளைச் செய்ய மறுத்தால், கடுமையாக தாக்கப்படுவதாகவும் தகவல்கள் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வரப்பெற்றதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள இந்திய தூதரகங்களுடன் இணைந்து மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் விளைவாக, 31.3.2023 வரை 73 தமிழர்கள் கம்போடியா, தாய்லாந்து-மியான்மர் எல்லையிலிருந்து மீட்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் செலவில் விமானப் பயணச்சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு தமிழ்நாட்டிற்கு பத்திரமாக அழைத்து வரப்பட்டுள்ளனர்.

2.6. உத்தரகாண்ட் மாநிலத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்களை மீட்டெடுத்தல்

உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள கேதார்நாத் கோவிலுக்குப் புனித யாத்திரை சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூவர் 18.10.2022 அன்று நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தனர். அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின்மூலம் அரசு செலவில் இறந்தவர்களின் பூத உடல்கள் 20.10.2022 அன்று விமானங்கள்மூலம் சென்னை கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

2023 ஏப்ரல் 19]

3. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்

மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் 106 முகாம்களில் (திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) 31.3.2023 அன்றுள்ள நிலவரப்படி 19,408 குடும்பங்களைச் சேர்ந்த 58,457 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒன்றிய அரசு, மாநில அரசின் வழிகாட்டுதல்களுடன் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, இருப்பிடம், குடிநீர், மின்சாரம் எனப் பல்வேறு நிவாரண உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்யும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.8.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, "இலங்கை அகதிகள் முகாம்" என்பதை "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டதுடன், பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

3.1. வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 7,469 புதிய வீடுகள் கட்டப்படும் என சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்படி, முதற்கட்டமாக, 3,510 புதிய வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக, அதாவது நான்கு வீடுகள் (868X4= 3,472) கொண்ட 868 தொகுப்பு வீடுகள் கட்டட ரூபாய் 173.60 கோடியும், 38 தனிவீடுகள் கட்டட ரூபாய் 2.14 கோடியும், அடித்தளம், சரக்கு மற்றும் சேவை வரி உயர்வு, மேற்பார்வைப் பணிகள், ஆவணப்படுத்துதல் மற்றும் வரைபடம் தயாரித்தல் ஆகிய பணிகளுக்காக ரூபாய் 11.5 கோடியும் ஆக மொத்தம் ரூபாய் 187.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வீடுகள் கட்டும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் தொடர்புடைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், அடியனூத்து, தோட்டனூத்து மற்றும் கோபால்பட்டி ஆகிய மூன்று மறுவாழ்வு முகாம்களை ஒருங்கிணைத்து தோட்டனூத்து கிராமத்தில் புதிதாக 321 வீடுகள் கட்ட ரூபாய் 17.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு

[2023 ஏப்ரல் 19

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.9.2022 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 3,959 வீடுகள் கட்டுவதற்கு மொத்த மதிப்பீடான ரூபாய் 223 கோடியில், 2023-2024 ஆம் நிதியாண்டில் முதல் தவணையாக ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முகாம்களில் குடிநீர், கழிவறை, மின்சாரம் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் வசதிகள் கூடுதலாக செய்து கொடுக்க ஏதுவாக ரூபாய் 30 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில், முதற்கட்டமாக 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன.

3.2. இலங்கைத் தமிழர் வாழ்வாதார மேம்பாட்டு நிதி

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 2021-2022 ஆம் நிதியாண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.8.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 29 மாவட்டங்களில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் பின்வருமாறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

வ. எண்	பணி விவரம்	தொகை (ரூபாய்)
1.	குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்	74,51,250
2.	சுகாதார வசதிகள்	1,95,94,800
3.	மின்சார வசதிகள்	1,92,63,950
4.	சாலைகள் பழுதுபார்த்தல்	36,90,000
	மொத்தம்	5,00,00,000

3.3. மகளிர் சுய உதவிக் குழுக்கள்

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்படும் 321 சுய உதவிக் குழுக்களுக்கு முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த "சமூக முதலீட்டு நிதியாக" தலா ரூபாய் 50,000 வீதம்

2023 ஏப்ரல் 19]

2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழான அறிவிப்பின்படி, ரூபாய் 75,000 வீதம் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 2.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புதிதாக உருவாக்கப்பட்ட 300 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, சமுதாய முதலீட்டு நிதியாக ரூபாய் 1.25 இலட்சம் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பணிக்காக இதுவரை ரூபாய் 3.25 கோடி மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

3.4. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி 5,000 முகாம்வாழ் இளைஞர்களுக்கு அளிக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.8.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக்கொள்ளவும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, ஆணை வெளியிடப்பட்டு முகாம்வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க திறன் மேம்பாட்டுத் துறையின்மூலம் மாவட்டந்தோறும் முகாம்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 3,289 நபர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

3.5. துணிமணிகள்

ஆடைகள் மற்றும் போர்வைகளை ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையின் அடிப்படையில் தற்போது கொள்முதல் செய்து வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.8.2021 அன்று அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், உயர்த்தப்பட்ட விலையில் இலவச ஆடைகள் 2021-2022 ஆம் நிதியாண்டில் கோ-ஆப்டெக்ஸ் மூலமாகவும், 2022-2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு துணிநூல் கழகம் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இலவசப் போர்வைகளும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கோ-ஆப்டெக்ஸ்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

3.6. பாத்திரங்கள்

ரூபாய் 250 மதிப்பிலான, 8 வகையான சமையல் பாத்திரங்கள் ஒவ்வொரு முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்திற்கும் இலவசமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, ரூபாய் 250 மதிப்பில் பாத்திரங்கள் வாங்கி வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.8.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு, 2021-2022 ஆம் நிதியாண்டில் 8 வகையான எவர்சில்வர் பாத்திரங்கள் ரூபாய் 1,285 மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனத்திடமிருந்து (SAIL) கொள்முதல் செய்யப்பட்டு முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

3.7. விலையில்லா சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு, மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.8.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது; பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின்கீழ் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே, ரூபாய் 7 கோடி செலவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும் என்றும், ஒரு குடும்பத்திற்கு வருடம் ஒன்றிற்கு அதிகபட்சம் 5 எரிவாயு உருளைகளுக்குத் தலா ரூபாய் 400 வீதம் மானியத் தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 6,582 குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் மற்றும் அடுப்பு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூபாய் 3.36 கோடி செலவில் 5 எரிவாயு உருளைகளுக்குத் தலா ரூபாய் 400 மானியத் தொகை வீதம் 16,801 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

3.8. பணக்கொடை

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர பணக்கொடை மாநில அரசால் உயர்த்தி வழங்கப்படும்

2023 ஏப்ரல் 19]

என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.8.2021 அன்று அறிவித்தார். அவ்வறிவிப்பின்படி கீழ்க்காணும் உயர்த்தப்பட்ட வீதத்தில் மாதாந்திர பணக்கொடை வழங்க ஆணை வெளியிடப்பட்டது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூபாய் 21.29 கோடி செலவாகும்:

வ. எண்	பிரிவு	பழைய தொகை ரூ.	1.9.2021 முதல் புதிதாக உயர்த்தப்பட்ட தொகை ரூ.
1.	குடும்பத் தலைவர்	1,000/-	1,500/-
2.	ஒவ்வொரு கூடுதல் உறுப்பினர் (12 வயது அதற்கு மேல்)	750/-	1,000/-
3.	சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்)	400/-	500/-

3.9. அரிசி மானியம்

முகாம்களில் வசிக்கும் ஒவ்வோர் இலங்கைத் தமிழர் குடும்பங்களில் பெரியவர்களுக்கும், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் ஒவ்வொரு மாதமும், ஒருவருக்கு முறையே 12 கிலோ மற்றும் 6 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இதில், ஒவ்வொரு குடும்பத்திற்கும், முதல் 20 கிலோ அரிசி இலவசமாகவும், கூடுதல் அரிசி ஒரு கிலோ ரூ.0.57 என்ற விலையிலும் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110-ன்கீழ் 27.8.2021 அன்று முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கான மொத்த அரிசியும் இலவசமாக வழங்கப்படும் எனவும், இதற்கான கூடுதல் செலவினம் ரூ.19 இலட்சத்தினை மாநில அரசே ஏற்கும் எனவும் அறிவித்து, அதன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, எண்ணெய், சர்க்கரை என அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இலங்கைத் தமிழர்களுக்கு சலுகை விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

3.10. கல்வி உதவித் தொகை

12 ஆம் வகுப்பு வரை படிக்கும் 11,973 மாணவ-மாணவியர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ளனர். இவர்களுக்கு, இலவசக் கல்வித் திட்டம் 12 ஆம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படுவது போல் இலவச சீருடைகள், மதிய உணவு, புத்தகங்கள் மற்றும் இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் உயர் கல்விக்காக இலங்கைத் தமிழ் மாணவர்கள் பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வுமூலம் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.8.2021 அன்று அறிவித்தவாறு உயர்த்தப்பட்ட வீதத்தில் கல்வி உதவித் தொகை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

வ. எண்	படிப்பு	கல்வித் தொகை ரூ.	உயர்த்தப்பட்ட கல்வித் தொகை (2021-2022 முதல்) ரூ.
1.	பட்டயப்படிப்பு	2,500/-	10,000/-
2.	இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு	3,000/-	12,000/-
3.	இளநிலை தொழிற்கல்வி பட்டப்படிப்பு	5,000/-	20,000/-
4.	இளநிலை பொறியியல் படிப்பு	5,000/-	முழுச் செலவினம்
5.	முதுநிலை பட்டப்படிப்பு	6,000/-	முழுச் செலவினம்

மேலும், பொறியியல் படிப்புகளில் சேரும், மதிப்பெண் அடிப்படையில் முதல் 50 மாணவர்களுக்கான முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே

2023 ஏப்ரல் 19]

ஏற்றுக்கொள்ளும் என்றும், அதுமட்டுமின்றி, வேளாண்மை/ வேளாண்மைப் பொறியியல் படிக்கும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், இவை தவிர, மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக முதுகலை பட்டப்படிப்பில் சேரும் அனைத்து முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உயர்த்தப்பட்ட விகிதத்தில் கல்வி உதவித் தொகை வழங்கும்பொருட்டு ரூபாய் 2.71 கோடி நிதி தமிழக அரசிடமிருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது 2021-2022 ஆம் ஆண்டில் 1,504 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2022-2023 ஆம் ஆண்டிற்கு முதற்கட்டமாக 1,778 மாணவர்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3.11. நீண்ட நாள் தீர்வுகளுக்கான ஆலோசனைக் குழு

முகாமிற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால சவால்களுக்குத் தீர்வுகாண ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.8.2021 அன்றைய அறிவிப்பின்படி, ஆலோசனைக் குழு அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இக்குழு குடியுரிமை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், இலங்கைத் தமிழர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்புவதற்கு உதவுவதற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கான செயல்திட்டத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவினைத் தயார் செய்து வருகிறது. முதல் ஆலோசனைக் குழுக் கூட்டம் 29.12.2021 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 11.7.2022, 12.7.2022, 7.10.2022 மற்றும் 11.11.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சட்ட ஆலோசனைக் கூட்டங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

3.12. விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகை தள்ளுபடி செய்தல்

தமிழ்நாடு அரசின் முன்மொழிவுகளின் அடிப்படையில் ஒன்றிய அரசு சுயவிருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்பிச் செல்பவர்களுக்கு விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையினை இனம் வாரியாக தள்ளுபடி செய்து

வருகிறது. 31.3.2023 அன்றுள்ளவாறு, 920 குடும்பங்களைச் சார்ந்த 1,748 இலங்கைத் தமிழர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து தாய்நாடு திரும்பியுள்ளனர்.

3.13. சிறப்பு முகாம்

தற்சமயம் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்பு முகாம் உள்ளது. இந்த முகாம்களில், குற்றப் பின்னணி உள்ள/விசாரணையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் அல்லது பிணையில் வந்துள்ளவர்களுக்குத் தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது. 31.3.2023 அன்றைய நிலவரப்படி, இந்தச் சிறப்பு முகாமில் 81 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம், 1946-ன் பிரிவு 3(2)(e)-ன்கீழ் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிறப்பு முகாம்களில் அவர்களின் நடமாட்டம் முகாமிற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், அவர்களுக்கு உணவுக்காக ஒரு நாளைக்கு ரூபாய் 175 வழங்கப்படுகிறது.

4. முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.3.2023 அன்றைய நிலவரப்படி, 13,320 குடும்பங்களைச் சேர்ந்த 33,375 இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்துகொண்டு முகாமிற்கு வெளியே வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

5. பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்கள்

5.1. பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண பொருளாதார சூழ்நிலையால் 31.3.2023 அன்றைய நிலவரப்படி, 236 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் தினசரி உணவு, இதர அத்தியாவசியப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கான செலவினமாக, ரூபாய் 49.95 இலட்சம் மாநில அரசு விடுவித்துள்ளது.

2023 ஏப்ரல் 19]

5.2. இலங்கைக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குதல்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு பொருட்கள் தட்டுப்பாட்டில் இன்னலுறும் மக்களுக்கு 40,000 டன் அரிசி, ரூபாய் 15 கோடி மதிப்பிலான 500 டன் ஆவின் பால்பவுடர் மற்றும் ரூபாய் 27 கோடி மதிப்பிலான 101 டன் உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு ரூபாய் 196.83 கோடி மொத்த மதிப்பில் 3 கட்டங்களாக தமிழ்நாடு அரசின் சார்பில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

6. தாயகம் திரும்பியோர்

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த 4,61,639 நபர்கள் இலங்கையிலிருந்தும், 1,44,445 நபர்கள் பர்மாவிலிருந்தும், 2,055 நபர்கள் வியட்நாமிலிருந்தும் இந்தியாவிற்குத் திரும்பியுள்ளனர். தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட இத்தமிழர்களின் நலன் பேணவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் தனியாக இத்துறை உருவாக்கப்பட்டது. இவர்களில், பெரும்பான்மையினர் தமிழ்நாட்டிலும், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களிலும் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

6.1. ரெப்கோ வங்கி

இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக ரெப்கோ வங்கி 1969 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் நிறுவப்பட்டது. தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி, சென்னை, சுருக்கமாக ரெப்கோ வங்கி என அழைக்கப்படுகிறது. ரெப்கோ வங்கி ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய 5 மாநில அரசுகளின் பங்கு முதலீடு கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கி 1961 ஆம் ஆண்டின் மெட்ராஸ் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் (தற்போது, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம்) பதிவு செய்யப்பட்டுள்ளது. வங்கியின் நடவடிக்கை 19.11.1969 முதல் தொடங்கப்பட்டது. பல மாநில கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1984 மற்றும் 2002 அமலுக்கு வந்தது முதல், இந்த வங்கி மேற்படிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. தற்பொழுது இந்த வங்கி பல மாநில கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 2002-ன்கீழ் செயல்பட்டு

வருகிறது. இந்த வங்கி ஒன்றிய உள் துறை அமைச்சகத்தின் FFR பிரிவின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது ரெப்கோ வங்கிக்கு, தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 108 கிளைகள் உள்ளன. இந்த வங்கியின் தலைமையிடம் சென்னையில் உள்ளது.

31.03.2023 அன்று வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	முதலீட்டாளர்கள்	மூலதன தொகை (இலட்சங்களில்)	சதவீதம் %
1.	ஒன்றிய அரசு	7,632.00	50.07
2.	தமிழக அரசு	713.00	4.68
3.	ஆந்திரப் பிரதேச அரசு	104.77	0.69
4.	தெலுங்கானா அரசு	74.88	0.49
5.	கேரள அரசு	61.16	0.40
6.	கர்நாடக அரசு	17.47	0.11
7.	தனி நபர்கள்	6,639.60	43.56
	மொத்தம்	15,242.88	100.00

ஆரம்பகால கட்டத்தில், தாயகம் திரும்பியோர் தேயிலை, சின்கோனா மற்றும் இரப்பர் தோட்டங்களில் மறுவாழ்விற்காகக் குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கு நூற்பாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பிற்கான பல திட்டங்களை இந்த வங்கியின் துணை கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி உள்ளது.

6.1.1. 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான ரெப்கோ வங்கியின் செயல்பாடுகள்

- வங்கியின் வர்த்தகம் 8% வளர்ச்சி கண்டு ரூபாய் 17,746 கோடியை எட்டியுள்ளது.
- வங்கியின் நிகர லாபம் சுமார் 15% வளர்ச்சி பெற்று ரூபாய் 70 கோடியாக உள்ளது.

2023 ஏப்ரல் 19]

- *தாயகம் திரும்பிய பயனாளிகளின் எண்ணிக்கை இந்த வருடம் 45,000 ஆக உயர்ந்துள்ளது.*
- *தாயகம் திரும்பிய பட்டதாரி இளைஞர்கள் 30 பேருக்கு வங்கியில் பயிற்சி முறையில்* Graduate Apprentice *என்ற திட்டத்தின்கீழ் நியமன ஆணை வழங்கப்பட உள்ளது.*

6.1.2. 2023-2024 ஆம் நிதியாண்டுக்கான ரெப்கோ வங்கி குறித்த கண்ணோட்டம்

- *வங்கியின் வர்த்தகம் 9% வளர்ச்சி வீதத்தில் ரூபாய் 19,000 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*
- *வங்கியின் நிகர லாபம் 14% வளர்ச்சியோடு ரூபாய் 80 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
- *தாயகம் திரும்பிய பயனாளிகளின் எண்ணிக்கை இந்த வருடம் 52,000 ஆக உயர்த்த வேண்டும் எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது.*

6.1.3. தாயகம் திரும்பியோர் அறக்கட்டளை

கடந்த இரண்டு ஆண்டுகளில் தாயகம் திரும்பியோர் அறக்கட்டளையின் மூலமாக செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:

வ. எண்	*வருடம்*	*தொகை (ரூ.இலட்சத்தில்)*
1.	*2021-2022*	*907.00*
2.	*2022-2023*	*780.50*

7. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிறுவனமாக தொடங்கப்பட்டு வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய குடிபெயர்வோர் சட்டம் 1983-ன்கீழ் ஆட்சேர்ப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, வெளிநாட்டு

[2023 ஏப்ரல் 19

வேலைகளில் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் உரிமம் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 15 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 50 இலட்சம் ஆகும்.

7.1. செயல்பாடுகள்

- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாம்கள் நடத்துதல்.
- வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு வேலைநாடுநர்களை நேர்காணல் மற்றும் தேர்வு செய்வதற்கு கலந்துகொள்ளச் செய்தல்.
- வெளிநாட்டு வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவி புரிதல்.
- ECR நாடுகளுக்கான ECR கடவுச்சீட்டுகளுக்கு சென்னையில் உள்ள குடிபெயர்வோர் பாதுகாப்பு அலுவலகம்மூலம் குடியேற்ற அனுமதியைப் பெற்றுத் தருதல்.
- தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்குத் தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல்.

7.2. பதிவு

வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி பதிவு செய்வதற்கேதுவாக URL: https://www.omcmanpower.com என்ற வலைதளம் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. 31.3.2023 அன்றமைந்தவாறு 5,397 நபர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி தங்களது பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

7.3. பணியமர்த்தல்

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1978 ஆம் ஆண்டு முதல் இதுநாள்வரை 10,849 நபர்களை வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் 2022-2023 ஆம் நிதியாண்டில் 31.3.2023 அன்றமைந்தவாறு 310 நபர்களை சவூதி அரேபியா, குவைத் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

2023 ஏப்ரல் 19]

7.4. வருவாய்

2022-2023 ஆம் நிதியாண்டில் 31.3.2023 வரையிலான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தணிக்கைக்கு முந்தைய வருவாய் ரூபாய் 1.33 கோடியாகவும் மற்றும் தணிக்கைக்கு முந்தைய இலாபம் ரூபாய் 11 இலட்சமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

7.5. புதிய முயற்சிகள்

- *அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, 15 செவிலியர் கல்லூரிகளில் இறுதியாண்டு படித்த செவிலிய மாணவர் 481 பேருக்கு* (Occupational English Test) *தொழில்சார்ந்த ஆங்கிலத் தேர்வுப் பயிற்சியினை வழங்கியுள்ளது.*
- *இந்நிறுவன இணையதளத்தில், சேவைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான வழிமுறைகள்* (Payment Gateway) *உருவாக்கப்பட்டுள்ளன.*

8. முடிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயலகத் தமிழர்கள் நலன் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழரின் நலன்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இத்திட்டங்கள் அயலகத் தமிழர் நலனுக்காகவும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்காகவும் பொது மற்றும் மறுவாழ்வுத் துறையால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மறுவாழ்வு முகாம்களில், இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, பாதுகாப்பான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் விதமாக தமிழ்நாட்டில் அவர்களுக்குப் போதுமான இருப்பிட வசதி, குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடைய கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், கல்வி, வேலைவாய்ப்பு, வணிகம் மற்றும் வியாபாரம் காரணமாக அயல்நாடுகளுக்குச் சென்றுள்ள அயலகத் தமிழர்கள் நலன் காத்திடவும், தமிழ் மொழியின் தொன்மை, வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின்

பெருமைகளை நிலைப்படுத்துவதுடன், அடுத்தத் தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பணிகளுக்காகவும் அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அயலகத் தமிழர் மற்றும் இலங்கைத் தமிழர் நலன் காக்கும்பொருட்டு இந்த அரசு அக்கறையுடன் முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

———

2023 ஏப்ரல் 19]

இணைப்பு-IV

(*476 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முகவுரை

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்."

(*திருக்குறள் 462*)

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும், மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்வதற்காகவும் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது ஆரம்ப கால கட்டத்தில் உருவாக்கப்பட்டது. மத்திய திட்டக் குழு கலைக்கப்பட்டு, வரவு-செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்துறையின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் இலக்கு நிர்ணயித்தல், இடைப்பட்ட காலங்களில் செயல்படுத்தத் தேவையான வளர்ச்சி சார்ந்த திட்டங்களை முன்னிலைப்படுத்தல் மற்றும் அம்முயற்சிகளில் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியன இத்துறையின் பணிகளாக நிர்ணயிக்கப்பட்டன. இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மாநிலத் திட்டக் குழு, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளிலுள்ள வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளைப் பயன்படுத்தி, பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாநிலத்தில் முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான கொள்கைகளை இத்துறை வகுக்கிறது. மேலும், மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான நிதி

[2023 ஏப்ரல் 19

ஆயோக் (NITI Aayog) உடன் கலந்துரையாடும் மாநில அரசின் ஒருங்கிணைப்புத் துறையாகவும் மற்றும் ஒன்றிய அரசுடனான பல்வேறு தொடர்புகளுக்கான தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைப்புத் துறையாகவும் இத்துறை செயல்படுகிறது.

மத்திய திட்டக் குழுவிற்குப் பதிலாக நிதி ஆயோக் (NITI Aayog) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் முதன்மையான நோக்கமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், ஒன்றிய மற்றும் மாநில அளவிலான திட்ட அமைப்புகளின் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செலவினங்களைக் கண்காணித்தல் ஆகிய செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் வெளியீடுகள் அடிப்படையில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளில் கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை உள்ளடக்கிய, 'நாம் விரும்பும் எதிர்காலத்தை' நோக்கி செயல்படும், பிரபஞ்ச வெளிப்பாடுடன்கூடிய, உலகளாவிய தரத்திலான நீடித்த வளர்ச்சி இலக்குகளில் கவனம் செலுத்துவதாக இத்துறையின் செயல்பாடுகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இத்துடன், நீடித்த வளர்ச்சி இலக்கினை அடைவதற்கான சிந்தனை மற்றும் முன்னேற்றத்தை அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து இத்துறை கண்காணிக்கிறது.

இ-சமிக்ஷா மற்றும் பிரகதி (PRAGATI-Pro-Active Governance and Timely Implementation) வலைதளம் வாயிலாக நிதி ஆயோக் (NITI Aayog) மற்றும் ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாக இத்துறை செயல்படுகிறது. பிரகதி வலைதளம் வாயிலாக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், ஒன்றிய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் உயர் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னோடித் திட்டங்கள் குறித்து நேரடியாக விவாதித்து அறிந்துகொள்கிறார். மேலும், பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்படும் திட்டங்கள் குறித்த தற்போதைய நிலை பிரகதியின் (PRAGATI) வலைதளத்தில் இத்துறையால் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்படுகிறது.

மேலும், சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2023 ஏப்ரல் 19]

துறையின் வலைதளமான www.tn.gov.in/department/*23-இல் இத்துறையின் செயல்பாடுகள் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.*

1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. *மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்டுள்ள நிதி ஆயோக்* (NITI Aayog) *அமைப்புடன் ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;*

ii. *நீண்ட மற்றும் நடுத்தர கால செயல் உத்திகளை மாநில திட்டக் குழு மூலமாக வகுத்தல்;*

iii. *மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலமாக பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் அடிப்படையில் மாநிலத்தின் சீரான வளர்ச்சியை உறுதி செய்தல்;*

iv. *தமிழ்நாடு புத்தாக்க முயற்சியின்கீழ் திட்டங்களைப் பரிந்துரை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்;*

v. *மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் வாயிலாக நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்த திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், காற்றுமாசடைதல், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்;*

vi. *கட்டணமில்லாப் பேருந்து பயணம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி போன்ற மாநில அரசின் முதன்மை திட்டங்களை மாநில திட்டக் குழு மூலமாக மதிப்பீடு செய்தல்;*

vii. *மாநில திட்டக் குழு வாயிலாக, மாநில அளவில் முன்னேற விழையும் மாவட்டங்களுக்கான திட்டத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்;*

viii. *"நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை" 2030-ல் அடையும் மாநில அரசின் முயற்சிகளுக்கு அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளைக் கண்காணித்தல்;*

[2023 ஏப்ரல் 19

ix. நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டுடன் தொடர்புடைய பெரிய திட்டங்களை அளவிடுதல், இணைத்தல் மற்றும் கண்காணித்து மதிப்பீடு செய்தல்;

x. 11 மாவட்டங்களை உள்ளடக்கிய மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்துதல்;

xi. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

xii. மாவட்ட திட்டக் குழுவின் ஓர் அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை உருவாக்கி மேற்பார்வையிடுதல்;

xiii. மாநில திட்டக் குழு, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான நிர்வாக வசதிகள் செய்தல்;

xiv. பொது மற்றும் தனியார் துறைகள்மூலம் பெறப்படும் மாநில வருவாயினை மதிப்பீடு செய்தல், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், வயது முதிர்ந்தோரின் வாழ்வாதாரம் குறித்த ஆய்வு, மாநில பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல் போன்ற பணிகளை பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மூலமாக மேற்கொள்ளுதல்;

xv. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் புள்ளிவிவர பகுப்பாய்வு மையம்மூலம் தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு, தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலை குறித்த ஆய்வு மற்றும் தேர்தலுக்கான அறிவுத்திறன், அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்தான ஆய்வு போன்ற ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

2023 ஏப்ரல் 19]

xvi. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை மூலமாக ஒன்றிய/மாநில அரசுகள் மற்றும் வெளி நிறுவனங்களால் நிதியுதவி செய்யப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

xvii. மாநிலத்தின் பல்வேறு முக்கியப் பிரச்சினைகள் தொடர்பாக, மாநில அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து கோரிக்கை மனு தயாரித்து ஒன்றிய அரசுக்கும் தொடர்புடைய அமைச்சகங்களுக்கும் வழங்குதல்;

xviii. இருபது அம்சத் திட்டத்தின்கீழ் பல்வேறு துறை மற்றும் நிறுவனங்களில் செயல்படுத்தப்படும் கண்காணிக்கப்பட வேண்டிய திட்டங்களைச் சேகரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்;

xix. ரூ.100 கோடிக்கு மேலான பெரிய உள் கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றத்தைச் சீராய்வு செய்தல்;

xx. சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;

xxi. சிறப்பு முயற்சிகள் பிரிவின்கீழ் மெட்ரோ இரயில் திட்டத்தினைச் செயல்படுத்துதல்.

2.0 துறையின் செயல்பாடுகள்

2.1 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளானது, முன்மாதிரியற்ற மற்றும் அதி முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு மாநிலங்களின் நடப்பு நிலையைக் கருத்திற்கொண்டும், அவற்றின் செயல்திறன், வளர்ச்சி நிலை, உள்ளூர் கொள்கைகள் மற்றும் அவற்றின் முன்னுரிமைகளைக் கருத்திற்கொண்டும், அனைத்து நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு திட்டமாகும். இவை வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் என்ற வேறுபாடின்றி உலகளாவிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை உள்ளடக்கியதாகும்.

இந்த நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்ததாகவும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாததுமாகவும் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான மூன்று

பரிமாணங்களான, சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றைச் சமநிலைப்படுத்துவதாகவும் உள்ளன. ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர், திரு. அந்தோனியா கட்டரஸ், 2023 ஆம் ஆண்டினை "கணக்கெடுப்பிற்கான ஆண்டாக" அறிவிக்கும்போது, சமூக, பொருளாதார மற்றும் வளர்ச்சிக்கான உரிமைக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், அவர் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் கொள்கை முடிவெடுக்கும்போது குறுகிய கால கண்ணோட்டத்திலிருந்து நீண்ட கால கண்ணோட்டத்திற்கு மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியதோடு, பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்கும் தன்மையோடும் பண்பாட்டு உரிமைகளின் பொதுத்தன்மையைப் பேணிடும் வகையிலும், ஆழமான மற்றும் முறையான வழிகளில் முடிவெடுக்கும் தன்மையுடன் இயங்குவதற்காக, வளர்ச்சிக்கான செயல் உத்திகளுடன் கூடிய தொலைநோக்குத் தன்மையை வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இதன்மூலம் முழு பாலினச் சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்திற்காக, சமூக மற்றும் அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படும் மற்றும் எதிர்கால சந்ததியினரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சரின் சமூக நீதி மற்றும் சமத்துவத்தின் தொலைநோக்குப் பார்வையால் வழிநடத்தப்படும் தமிழ்நாடு அரசு, "எல்லோருக்கும் எல்லாமும்" வழங்க உறுதி பூண்டு தனித்துவமான மற்றும் அரசின் திராவிட மாதிரி அடிப்படையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கி செயலாற்றி வருகிறது.

2.1.1. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து முக்கிய கொள்கைகள்

இம்மாநிலமானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முதல் ஆறு இலக்குகளான, வறுமையில்லா வாழ்வு, பட்டினியில்லா நிலை, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, தரமான கல்வி, பாலினச் சமத்துவம் மற்றும் தூய குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய, மக்களை மையப்படுத்திய அணுகுமுறையுடன் கூடிய நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து கொள்கைகளையும் நிறைவேற்றிடும் உறுதிப்பாட்டுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முன்னேற விழைதலுக்கான வழிமுறைகளை அறிந்துள்ளதால் மாநிலத்தின் செழுமைக்கு தொடர்புடைய இலக்குகளான, தூய மற்றும் எளிய வகையில் பெறத்தக்க எரிசக்தி, கண்ணியமான வேலை (ம) பொருளாதார வளர்ச்சி, தொழில்,

2023 ஏப்ரல் 19]

கட்டமைப்பு மற்றும் புதுமை முயற்சிகள், ஏற்றத்தாழ்வைக் குறைத்தல் மற்றும் நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகிய இலக்குகளில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநிலமானது உயரிய பல்லுயிர் தன்மையுடன், பருவ நிலை மாற்றம், நில வளம் மற்றும் நீர் வளம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் கண்ணோட்டத்துடன் புவிக் கோளை பாதுகாப்பதற்கான தனது தொடர் முயற்சிகளில் உறுதிப்பாட்டுடன் உள்ளது மற்றும் இம்மாநில அரசு, தொழில், கல்வி மற்றும் குடிமை சமூக அமைப்புகளுடன் கூட்டாண்மை முறையில் நல்ல நிருவாகம் மற்றும் திறன்மிகு நிறுவனங்களுடன் அமைதிக்கு உறுதியளிக்கும் ஒரு நிலையான வளர்ச்சிக்கான பாதையை அடைய செயல்பட்டு வருகிறது.

நிதி ஆயோக் அமைப்பினால் வெளியிடப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய தரவரிசை குறியீடு அடிப்படை அறிக்கையில் தமிழ்நாடு 66 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் இருந்தது. 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அதனுடைய இரண்டாம் அறிக்கையில் ஒரு புள்ளி கூடுதலாகப் பெற்று 67 புள்ளிகளுடன் அதே மூன்றாம் இடத்தைத் தக்க வைத்திருந்தது. 2020-21 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அதன் மூன்றாவது விரிவான அறிக்கையில் தமிழ்நாடு 74 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய தரவரிசை குறியீட்டின் அடுத்த வெளியீடு எதிர்நோக்கப்படுகிறது.

2.1.2 திறன் வளர்ப்பு

2030-க்குள் உலகை மாற்றுவோம் என்ற பொருளுரையின் நோக்கமான மனதில் மாற்றம் இருந்தால் அனைத்தும் சாத்தியம் என்பதைச் செயல்படுத்தும் நோக்கில் இத்துறையானது, அதுகுறித்து உணர வைக்கவும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. சென்னையில் உள்ள அண்ணா நிருவாக பணியாளர்கள் பயிற்சி கல்லூரியில் ஐதராபாத்தைச் சார்ந்த இந்திய நிருவாகப் பணியாளர்கள் கல்லூரி நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகளுடன் தொடர்புடைய துறைகளின் முகமை அலுவலர்களுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் நல் ஆளுமை ஆகியவை குறித்து நான்கு நாட்கள் பயிற்சியானது, இரண்டு நாட்கள் காணொலிக் காட்சி வாயிலாகவும், இரண்டு நாட்கள் நேரடி பயிற்சியாகவும் நடத்தப்பட்டது.

மேலும், இத்துறையால் மாநிலத்திற்கென தயாரிக்கப்பட்டுள்ள மாவட்ட நல் ஆளுமை குறியீடு வாயிலாக, மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கும் மாவட்ட நல் ஆளுமை குறியீடு வரையறையின்கீழ் தரவுகளை எளிதாக சேகரிப்பதன் பயன் குறித்தும், அதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவது குறித்தும் புத்தாக்கப் பயிற்சியானது அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீட்டு அடிப்படையிலான தரவரிசையின் முடிவுகள் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

கேரள மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் உள்ளூர் அளவில் செயற்படுத்தப்படுவது குறித்து களப்பார்வையுடன் கூடிய 2 நாட்கள் பயிற்சியானது கேரளா இன்ஸ்டிடியூட் ஆஃப் லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷனில் நடத்தப்பட்டது. உள்ளூர்மயமாக்கல் முயற்சியை வலுப்படுத்தும் நோக்கத்துடன் நடைபெற்ற இப்பயிற்சியில் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஏறக்குறைய 100 அலுவலர்கள் வரை பயிற்சி பெற்றுள்ளனர்.

நிதி ஆயோக் அமைப்பின் ஓர் அலுவலகமான Development Monitoring and Evaluation Office (DMEO) *உடன் இணைந்து, திட்டங்களின் வெளிப்பாடு மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்த வரையறை பற்றிய 2 நாட்கள் பயிற்சியில் புள்ளியியல் பயிற்சி நிறுவனத்தால் அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் நடத்தப்பட்ட பயிற்சியில் மாநில அளவில் அலுவலர்கள் பங்கேற்றனர். இது பல்வேறு துறைகளின் திட்டங்களுக்கு, விளைவுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கு மாநிலத்தின் திறனை வலுப்படுத்தும்.*

2.1.3 தொகுப்பு மாவட்ட கூட்டங்கள்

தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் என்பது நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஊரக அளவில் உள்ளூர்மயமாக்கும் பொருட்டு மாவட்ட அளவில் உள்ள அலுவலர்கள் மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட நிலைகளில் ஒருங்கிணைந்து வடிவமைத்தல் மற்றும் திட்டமிடலின் அவசியத்தை உணர்த்துவதையும், அவற்றினை அறிந்துகொள்ளச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன் தொடர்பாக 100 நாட்களில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 8 தொகுப்பு

2023 ஏப்ரல் 19]

மாவட்டக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் முதல்நிலை அலுவலர்களுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கலுக்கான முக்கியமான குறிகாட்டிகள் மற்றும் திட்டங்கள் குறித்து நடத்தப்பட்டன. இத்தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விருதுநகர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டன. பல்வேறு நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய குறிகாட்டிகள், திட்டங்கள் மற்றும் ஊரக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கருப்பொருட்கள் ஆகியவை தொடர்பாக விவாதிக்கப்பெற்ற இக்கூட்டங்களில் சுமார் 1000 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2.1.4 திறன்களை மேம்படுத்த ஒருங்கிணைப்பு

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஊரக அளவில் உள்ளூர்மயமாக்கலுக்கு ஊரக நிலையை நோக்கி என்ற உத்தி அணுகுமுறையினை பின்பற்றி பல்வேறு நிலைகளில்-வட்டார அலுவலர்களுக்கும், பின்னர் வட்டார அலுவலர்கள் ஊரக அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கும் வகையில் மாவட்ட அலுவலர்களைக் கொண்ட ஒரு முக்கிய பயிற்சிக் குழுவினை உருவாக்கி மேற்கொண்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குவதற்கான முயற்சியினை கீழிருந்து மேல் அணுகுமுறையில் ஊரக அளவில் சுமார் ஒரு இலட்சம் ஊரக செயற்பாட்டாளர்களுக்கும், 200 பயிற்சியாளர்களுக்கும் பயிற்சியளித்து, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஒன்பது கருப்பொருட்கள் சார்ந்த வல்லுநர்களாக செய்து, அவற்றை வட்டாரம் மற்றும் ஊரக அளவில் முன்னெடுத்து செல்கிறது. தவிர, நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகளுக்கும் மகளிர் மற்றும் குழந்தைநேய பஞ்சாயத்துகளை உருவாக்குவதற்கான சிறப்புத் திறன் வளர்ப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பால சபாக்கள் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் நேய பஞ்சாயத்துகளுக்கான சிறப்புப் பயிற்சிகள் உள்ளூர் அளவில் மகளிர் நலன் மற்றும் குழந்தைகள் தொடர்பான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உதவும். 50-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைகளின் துறை

அலுவலர்களுக்கும் மற்றும் திட்டம் (ம) வளர்ச்சித் துறையின்கீழ் உள்ள துறைத் தலைமையின் அலுவலர்களுக்கும் Kerala Institute of Local Administration பயிற்சி நிலையத்தின் மூலமாக பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிக்கான நோக்கமே நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதலுக்கான ஒருங்கிணைப்புப் பணிகளை கட்டமைப்பதாகும். நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதலுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டும் மற்றும் உள்ளூர்மயமாக்குதலுக்கு ஒரு வழிகாட்டும் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

2.1.5 மாவட்ட நல் ஆளுமை குறியீடு

மத்திய அரசின் பணியாளர் சீர்திருத்தம் மற்றும் பொது குறைதீர் துறையால் தயாரிக்கப்பட்ட நல் ஆளுமை குறியீடு 2021-ஐப் பின்பற்றி மாவட்ட நல் ஆளுமை குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் மாநிலத்தின் தரவரிசையின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்காக, தேவைப்படும் பகுதிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அடிப்படையில், இம்மாநிலத்தின் மாவட்ட நல் ஆளுமைக் குறியீடானது 0.2 நிறையுடன் கூடிய 25 விளைவுகளை உண்டாக்கக்கூடிய குறிகாட்டிகள் மற்றும் 0.1 நிறையுடன் கூடிய துணை குறிகாட்டிகள் என 75 குறிகாட்டிகளைக் கண்டறிந்து வகைப்படுத்தியுள்ளது. இதற்கான ஓர் அடிப்படை அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது. இம்முறையின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் மாவட்டங்கள் செயல்திறனின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படும்.

2.1.6 மாநில சீர்திருத்த செயல் திட்டம்

பற்பரிமாண வறுமை குறியீட்டில் உள்ள குறிகாட்டிகள் குறித்த மாநில சீர்திருத்த செயல் திட்டமானது தொடர்புடைய துறைகளுடனான ஆலோசனைகளுக்குப் பிறகு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கொள்கை வகுப்பாளர்களுக்கும் திட்டமிடுபவர்களுக்கும் மற்றும் ஆராய்ச்சி வல்லுநர்களுக்கும் வரும் ஆண்டுகளில் மாநிலத்தின் வறுமை குறித்த நுண்ணறிவை வழங்குவதற்கும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தினைக் கட்டமைப்பதற்கும் வழிவகுக்கிறது. இந்த

2023 ஏப்ரல் 19]

மாநில சீர்திருத்த செயல் திட்டமானது நிதி ஆயோக்குடன் பகிரப்பட்டுள்ளது.

2.1.7 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான கொள்கை வடிவமைக்கும் திட்டம்

தமிழ்நாடு, செயல்பாடுகளில் உள்ள சிக்கல்களை முற்றாக களைவதற்கு தொடர்ந்து பல்வேறு கொள்கைகளை உருவாக்கி வருகிறது. பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகியோரின் நலனுக்கான கொள்கைகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை உருவாக்கியுள்ளது. அதேபோல், மாநிலத்திற்கான பருவநிலை மாற்றத்திற்கான இயக்கம், தமிழ்நாடு பருவநிலை மாற்றங்களைத் திறம்பட எதிர்கொள்ளும் மாநிலமாகவும் 2070 ஆம் ஆண்டிற்கு வெகு முன்பாகவே கார்பன் உமிழ்வை பெருமளவில் மட்டுப்படுத்திடுவதற்கான செயல் திட்டத்துடன் குறிக்கோளுடனும் செயல்புரிந்து வருகிறது. இந்த இயக்கம் பருவநிலை மாற்றத்தினைக் கையாள்வதற்கான திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து, மாவட்ட அளவில் உரிய அலுவலர்களைக் கொண்ட மாவட்ட மையங்களை மாநிலத்தில் ஏற்படுத்தி வருகிறது.

தொழில் துறை முன்னேற்றத்தினைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள, ஃபின்டெக் கொள்கை, காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை, வானவியல் மற்றும் பாதுகாப்புத் துறை போன்றவற்றிற்கான தொழில் கொள்கைகள் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்துடன், தொழில் வளர்ச்சி முன்னேற்றத்தையும், மாநிலத்தின் பொருளாதாரம் டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை எட்டுவதன் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

இதேபோல், பள்ளிக் கல்வித் துறையால், நீடித்த வளர்ச்சி இலக்கின் ஒரு முக்கிய குறிக்கோளான, கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கையை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் மற்றும் நான் முதல்வன் உள்ளிட்ட புதுமைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதேபோன்று, உயர் கல்வி பெறுவதில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்திடும் முகமாக, புதுமைப் பெண் எனும் திட்டம் அவர்களின் உயர் கல்வியினை உறுதி செய்திடும் வகையில் அமைந்துள்ளதும்,

மகளிருக்கான இலவசப் பேருந்து பயணச் சலுகை திட்டம் ஆகியன, பெண்கள் முன்னேற்றத்தினையும் பெண் பணியாளர்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.1.8 நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான செயல்பாடுகளைத் தெரிவிப்பதற்கும் மற்றும் பரப்புவதற்கும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் பற்றிய புத்தகங்கள் திட்டம் மற்றும் வளர்ச்சி துறையால் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4-3-2023 அன்று வெளியிடப்பட்டன. புத்தகங்கள் தவிர, நீடித்த வளர்ச்சி இலக்கு மேசை நாட்காட்டி ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நாட்காட்டியானது, ஒவ்வொரு மாதமும் ஒரு நீடித்த வளர்ச்சி இலக்கில் கவனம் செலுத்தும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச முக்கிய தினங்கள் குறிப்பிடப்பட்டு அந்நாட்களுக்கான இலக்கின் முக்கியத்துவத்தைப் பரப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தந்த இலக்கிற்கு தொடர்புடைய துறைகளும் மற்றும் மாவட்டங்களும் அந்தந்த மாதங்களுக்குரிய கருப்பொருள் சார்ந்து செயல்படும்போது, அனைவரிடத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதோடு, அந்தந்த இலக்கிற்கான குறிகாட்டிகளின் செயல்பாடுகளில் முன்னேற்றமும் காண இயலும். இந்தப் புத்தகங்கள் பின்வருமாறு:

- **"தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் - நீடித்த வளர்ச்சி இலக்கினை உள்ளூர்மயமாக்கல்"** எனும் புத்தகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளைப் பற்றி அறிந்துகொள்வதற்காக மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட அளவில் மாநிலம் முழுவதும் திறன்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் குறித்த தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

- **"நீடித்த வளர்ச்சி இலக்கு தரவு தாள்"** எனும் புத்தகத்தின் வாயிலாக, நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ் வரும் பல்வேறு குறிகாட்டிகளில் மாநிலத்தின் முன்னேற்றத்தை அறிய இயலும். மேலும், குறிகாட்டிகளுடன் தொடர்புடைய துறைகள் அவற்றின்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

தொடர் நடவடிக்கைக்காக, மாநில குறிகாட்டி வரையறையில் உள்ள அனைத்து குறிகாட்டிகளும் அளிக்கப்பட்டுள்ளன மற்றும் அந்தந்த குறிகாட்டிகளில் துறைகளின் செயல்பாட்டினை அறிந்துக்கொள்ள இயலுகிறது.

- **“நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள முதலீடுகள்-100 முயற்சிகள்”** *எனும் புத்தகம் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து முக்கியக் கொள்கைகளான, மக்கள், செழிப்பு, புவி, அமைதி மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய கண்ணோட்டத்தில், பல்வேறு துறைகளில் 100 சிறப்பு முயற்சிகளைப் பற்றி தெரிவிக்கிறது.*

- **“நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான கருப்பொருள் சார்ந்த அணுகுமுறை”** *எனும் புத்தகம், பஞ்சாயத்து அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான அணுகுமுறையை விவரிக்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பஞ்சாயத்து அளவிலான ஒன்பது கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டது – வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், நல்வாழ்வு, குழந்தைநேயம், மகளிர் நேயம், குடிநீர் வழங்கலில் தன்னிறைவு, தூய்மை மற்றும் பசுமையான, தன்னிறைவு பெற்ற, சமூகநீதி மற்றும் சமூக பாதுகாப்பு, மற்றும் நல் ஆளுமை பேணக்கூடிய கிராமமாக இருத்தல் ஆகியனவாகும்.*

- **நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயல்பாட்டிற்கான சமூக ஊடகங்களை உருவாக்குதல்**

சமூக ஊடகங்களின் தாக்கம், பல்வேறு தகவல் தொடர்புகளுக்கு வழிவகுத்துள்ளது. இதன் வாயிலாக, உரையாடல்கள் விரைவாக தகவல்கள் எளிதில் சேர்ப்பிக்கப்படுகிறது என்பதால், நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. நீடித்த வளர்ச்சி இலக்கு இலச்சினை உருவாக்கப்பட்டு மற்றும் #tnsdggoalkeepers *எனும் சமூக ஊடகங்களின் கணக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும்,*

இன்ஸ்ட்ராகிராம் கணக்கு	https://instagram.com/tamilnadusdg?igshid=MWI4MTIyMDE=
லிங்க்டுன்	https://www.linkedin.com/company/tamilnadusdg/
முகநூல் கணக்கு	https://www.facebook.com/profile.php?id=100089661429180&sk=about
மற்றும் டிவிட்டர் கணக்கு	https://twitter.com/tamilnadusdg?s=11&t=mkPi9vbm4sE4x1_Sy_i9Yg

வாயிலாக நிறுவப்பட்டுள்ளது.

- **எழுத்துப் பட்டறை**

 நடத்தை மாற்ற தகவல் தொடர்பு செய்திகளைப் பரப்புவதற்கும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான முக்கியமான செயல் நடவடிக்கைகளுக்கும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் அச்சு மற்றும் உள்ளூர் ஊடகங்கள் மூலம் பரப்புவதற்கான கருத்துகளை உருவாக்க ஓர் எழுத்துப் பட்டறை நடத்தப்பட்டது.

2.1.9 நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையம் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் கூட்டாண்மை

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின்கீழ் விரைவில் தனது செயல்பாட்டினைத் துவங்கவுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையமானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பல்வேறு குறிகாட்டிகளில் துறைகளின் செயல்பாட்டினைத் துரிதப்படுத்தி அவற்றில் முன்னேற்றம் காண முற்படுவதோடு, 2030 ஆம் ஆண்டிற்கு முன்பாகவே நீடித்த வளர்ச்சி இலக்குகளை மாநிலம் எய்திட உறுதுணை புரியும். இந்த நீடித்த வளர்ச்சி இலக்கு ஒருங்கிணைப்பு மையத்தினைச் செயல்படுத்தும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டமானது (UNDP) உதவிபுரியும். மேலும், மற்ற ஐ.நா. முகமைகளான யுனிசெஃப் மற்றும் ஐ.நா. மகளிர் அமைப்பிலிருந்து பெறப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்களுடன் இதற்காக இணைந்து செயல்படும்.

2.2 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 2.9.2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை)

2023 ஏப்ரல் 19]

எண் 81 இல் ஆணைகள் வெளியிடப்பட்டு ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிகப் பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக தமிழ்நாடு அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்–வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக (Abdul Latif Jameel - Poverty Action Lab) (J-PAL-SA) *அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில்* (Massachusets Institute of Technology, USA) *செயல்படும் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையிலும் வறுமையைக் குறைக்கின்ற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகின்ற உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் உள்ள சில சிறந்த பொருளாதார மேம்பாட்டு வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஒரு கட்டமைப்பாகும். தெற்கு ஆசிய மண்டலத்தில் உள்ள ஜே-பாலின் பணிகளை இந்தியாவின் நிதி மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்ட ஜே-பால் தெற்கு ஆசியா வழி நடத்துகிறது,*

தமிழ்நாடு அரசிற்கு திட்டங்களின் மதிப்பீட்டாய்வுகளைத் திறமையாகச் செய்வதற்கு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு, நான்கு முக்கிய நடவடிக்கைகளின் வாயிலாக உதவி செய்து வருகிறது.

(i) *நடப்பு ஆய்வுகளிலிருந்து உள்ளூர் சவால்களுக்கான நுண்ணறிவைச் செயல்படுத்த கொள்கை ஆய்வு உரையாடல்களை ஈடுபடுத்துவது* (ii) *சாத்தியமான அளவீட்டிற்கு ஏற்றபடி புத்தாக்கங்களைச் சோதித்து வடிவமைப்பது* (iii) *ஆதாரங்களை உருவாக்கவும் நுகரவும் அரசுத் திறனை வலுப்படுத்துவது* (iv) *முடிவு எடுத்தலில் நிர்வாகத் தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்துவது.*

இப்பணி 13 அரசுத் துறைகள் மற்றும் ஜே-பாலை சேர்ந்த 20-க்கும் மேலான ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட, 60 ஆராய்ச்சியாளர்களைக் கொண்டது. தலைமைச் செயலாளரின்கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவால், 2014 ஆம் ஆண்டிலிருந்து நடந்த 7 வழிகாட்டும் குழுக் கூட்டங்களில்,

[*2023 ஏப்ரல் 19*

25 ஆய்வுகளும் மற்றும் அளவீட்டிற்கான ஒரு முன்னோடி ஆய்வும் ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் 13 முன்னோடி மற்றும் வாய்ப்பு அறியும் ஆய்வுகளும், மூன்று முழு அளவிலான தாக்க விளைவுகளின் மதிப்பீட்டாய்வுகளும் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (ICDS) *மூலமாக தொற்றா நோய்களின் தாக்கத்தை குறைப்பதற்கான தலைப்புகள் முதல் சிறார் நலன் பாதுகாப்பு மற்றும் கல்வியும் முன் ஆரம்பப் பள்ளியில் கணித விளையாட்டு அடிப்படையிலான ஒரு புத்தாக்க ஆய்வும் முடிக்கப்பட்டுள்ளது.*

தற்போது, இக்கூட்டாண்மையின்கீழ் முதியோர்களின் நல்வாழ்வு குறித்த குழு ஆய்வு, சொத்து வரி வசூலை மேம்படுத்துதல் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் தாக்கம் பற்றிய இரண்டு சீரற்ற மதிப்பீடுகள், குழந்தை பருவ பெற்றோரின் ஈடுபாட்டை மேம்படுத்துதல், உயர்நிலைப் பள்ளி மாணவர்களைத் தக்கவைத்தல், இரத்த சோகையைக் குறைத்தல் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துதல், மருத்துவப் பரிசோதனைக்காக இயந்திரக் கற்றலைப் பயன்படுத்துதல் மற்றும் நிர்வாகத் தரவுகளைப் பயன்படுத்துதல், தொலைநிலைத் திட்டத்தைச் சுற்றி ஆறு வாய்ப்பறியும் ஆய்வுகள், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு (Education Management Information Systems (EMIS)) *ஆகியவற்றிலிருந்து முடிவெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

மாநிலத்தின் முக்கிய முன்னுரிமைகளுக்காக 13 துறைகளுடன் இணைந்து ஆதரவுப் பகிர்வு, புதிய தலையீடுகளைச் சோதனை செய்தல் மற்றும் இணை வடிவமைத்தல் ஆகிய பணிகளை ஜே-பால் நடத்துகிறது. மேலும், கூட்டுக் கொள்கை உரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் சேர்ந்து ஜே-பால், மூத்த குடிமக்கள் மற்றும் மாநில கொள்கை வரைவு ஆகியவற்றை முறையே சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளுடன் இணைந்து செயல்படுத்துகிறது. ஜே-பால், தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவன ஒத்துழைப்புடன் முடிவெடுத்தலுக்கான நிர்வாகத் தரவுகளின் சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்துகிறது. மேலும், உட்கட்டமைப்பை ஆதரிப்பதன்மூலம் உள்மதிப்பீடுகளிலிருந்து ஆதாரங்களைப் பயன்படுத்தவும், உருவாக்கம், பகுப்பாய்வு செய்யவும் பதினைந்து தனிப்

2023 ஏப்ரல் 19]

பயனாக்கப்பட்ட பட்டறைகள் வாயிலாக பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இப்பயிற்சி, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, சமூக நலத் துறை பணியாளர்களுக்கும் மற்றும் இந்திய குடிமையியல் பயிற்சியாளர்களுக்கும் கூடுதலான ஆலோசனையும் ஆதரவும் அளிக்கிறது. கருத்துகளுக்கு மாற்றாக மேம்பட்ட தரவு இயக்க முடிவு எடுத்தல் வழிகளுக்கான கருத்துகளை பரிமாற்றம் செய்ய ஜே-பால், புள்ளிவிவரப் பகுப்பாய்வு மையத்துடன் (J-PAL – DAU) இணைந்து தற்போது கொள்கை வலை கூட்டத் தொடர்களுக்கான தரவுகளை நடத்துகிறது.

முடிவுகளும் பரிந்துரைகளும் வழிகாட்டும் குழு மற்றும் ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் கண்டுபிடிப்பின் அடிப்படையிலான புத்தாக்கங்களும் மேம்பாடுகளும் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இக்கொள்கை ஆராய்ச்சி ஆய்வில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, பள்ளிக் கல்வி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, பொருளியல் மற்றும் புள்ளியியல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனங்கள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆகிய துறைகள் ஈடுபட்டுள்ளன.

2.2.1 முக்கிய சாதனைகள்

ஜே-பாலுடனான தமிழ்நாட்டின் முறையான கொள்கை ஆராய்ச்சிக் கூட்டாண்மை, முக்கிய கொள்கைக் கேள்விகளைத் தெரிவிக்கவும், மதிப்பீடுகளின் பயன்பாட்டை ஒருங்கிணைக்கவும் பல துறைகளுக்கு முறையான கட்டமைப்பை வழங்கியுள்ளது. முடிவெடுப்பதைத் தெரிவிக்க, தரவு மற்றும் ஆதாரங்களுக்கான தீவிர கோரிக்கையுடன் அரசாங்கம், தற்போது ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சுகாதார மற்றும் குடும்ப நலம், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை மற்றும் பள்ளிக் கல்வித் துறைகளில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அடிப்படை சிக்கல்களை நன்கு புரிந்து கொள்வதற்கும் மேம்பாடுகளைச் செய்வதற்கும் ஆராய்ச்சி நுண்ணறிவுகளைப்

பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பள்ளிகளில் எல்கேஜி/ யுகேஜி முன்னோடித் திட்டத்தை மதிப்பிடுவதன் ஒரு பகுதியாக சேகரிக்கப்பட்ட தரவுகள், கோவிட் காலங்களில் பள்ளிகள் மூடப்பட்டதால் ஏற்படும் கற்றல் இழப்பு மற்றும் பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்ட பிறகு கற்றல் மீட்பு மற்றும் அதற்கு அரசின் முதன்மையான 'இல்லம் தேடிக் கல்வி' திட்டத்தின் நேரிடையான பங்களிப்பு பற்றிய முக்கியமான நுண்ணறிவுகளை வழங்கியது.

முதியோர் குழு கணக்கெடுப்பின் அடிப்படை மற்றும் முதல் அலையின் ஒரு பகுதியாக சேகரிக்கப்பட்ட தரவு, குறிப்பாக தனியாக வாழும் முதியோர்கள் எதிர்கொள்ளும் சவால்களின் போக்குகளைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், முதியோர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான சாத்தியமான கொள்கை நடவடிக்கைகளை அரசிற்குத் தெரிவிக்கிறது.

அரசுக் கொள்கை வகுப்பில் மதிப்பீடுகள் மற்றும் தரவின் பயன்பாட்டை வலுப்படுத்தவும், நிறுவனமயமாக்கவும் நிரல் மதிப்பீடுகளுக்கான வழிகாட்டுதல்களை வெளியிடுவதன்மூலம், கொள்கை வகுப்பில் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் பயனுள்ள முடிவெடுப்பதற்கு நிர்வாகத் தரவைப் பயன்படுத்துவதை ஆதரிக்க தரவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மற்றும் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறைகளால் உருவாக்கப்பட்ட தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்த டிஜிட்டல் தரவு சேகரிப்பு தளங்களையும் மற்றும் ஒருங்கிணைந்த புதிய உத்தரவாதமான வழிமுறைகளையும் மேற்கொள்கிறது. தமிழக அரசின் மிக முன்னுரிமையான கொள்கைத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை விரிவுபடுத்துவதற்கு முன்பு, அவற்றின்மீது கள ஆய்வு மேற்கொண்டும், விவாதக் கூட்டங்கள் நடத்துவதன் மூலமும், இந்தியாவின் பிற பகுதிகளிலோ அல்லது உலகளவிலோ பரிசோதிக்கப்பட்ட புதுமையான கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றினை தமிழகத்தில் ஆய்வுக்குட்படுத்திட, தமிழக அரசும் தெற்காசியாவிற்கான அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் (J-PAL-SA) தொடர்புடைய முக்கிய துறைகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

2023 ஏப்ரல் 19]

2.3 சிறப்பு முயற்சிகள்

அரசு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 2.11.2006 ஆம் நாளிட்ட 146 ஆம் (நிலை) எண் அரசாணையில், "பொது அதிகார பொருண்மைகளின்" கீழ்வரும் அலுவல் விதிகளின் முதலாவது அட்டவணையில் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மையைச் சேர்ப்பதற்கு ஆணைகள் பிறப்பித்தது. வெவ்வேறு துறைகளிடமிருந்து வரப்பெற்ற புத்தாக்கத் திட்டங்களைச் செயல்முறைப்படுத்துவதும் அரசின் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிப்பதும் சிறப்பு முயற்சிகள் பிரிவின் பொருண்மையாகும். நோக்கத்தினை சிறப்பு முயற்சியாக செயல்படுத்துவதற்கான விரிவான நடைமுறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் ஒருங்கிணைக்கப்படலாம். அதன் அடிப்படையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18.1.2007 ஆம் நாளிட்ட 10 ஆம் (நிலை) எண் அரசாணையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், இத்துறையின்கீழ், 'சிறப்பு முயற்சியாக' செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2.4 இருபது அம்சத் திட்டம்-2006

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்புத் திட்ட நடவடிக்கையாக, 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது "இருபது அம்சத் திட்டம்-2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினைக் குறைத்தல், வேலைவாய்ப்பினைப் பெருக்குதல், கல்வி, வீட்டுவசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப் பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்-2006-இன்கீழ் குறித்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் செயல்பாடுகள் குறித்த காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், திட்டங்களைச் செயல்படுத்தும் துறைகள்/ நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால்

[2023 ஏப்ரல் 19

சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு மத்திய புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

2.5 முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள்

தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகளான எரிசக்தித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் பொதுப் பணித் துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களான மதிப்பீடு ரூ.100 கோடிக்கு மேலானத் திட்டங்களின் (Major Infrastructure Projects) முன்னேற்றம் குறித்து வலைதளத்தில் (Web-portal) “இ-முன்னேற்றம்” தரவுதளத்தில் பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் (MIP's) தரவுகள், துறைத் தலைமைகளின் (HoD's)மூலம் உள்ளீடு செய்யப்படுகின்றன. மேலும், தரவுகளின் ஆய்வுக் கூட்டம் இரண்டு மாத இடைவெளியில் மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றன. பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் தரவுகளை மேலும் சீரமைக்க, இணையதள பகுதிகளிலுள்ள சில அறிக்கைகளை திருத்தம் செய்ய திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் தரவுகளைக் கண்காணிப்பு மற்றும் தரவுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய உதவும் முதன்மை துறையாக திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயல்படுகிறது.

3.0 துறைத் தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் / நிறுவனங்கள் பின்வருமாறு:

i. மாநில திட்டக் குழு

ii. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

iv. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

2023 ஏப்ரல் 19]

V. *சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்* (CMRL), *ஒரு கூட்டுத் துறை நிறுவனம்.*

இத்துறைகளின் நடவடிக்கைகள் கீழ்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:

3.1 மாநிலத் திட்டக் குழு

மாநில திட்டக் குழு (மாதிகு) மாநிலத்தின் வளர்ச்சி குறித்த செயல்பாடுகளின்மீது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும் ஆலோசனை அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

தற்போதைய மாநில திட்டக் குழுவானது, ஜுன் 2021 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவல்சாரா தலைவராகவும், துணைத் தலைவர், இரண்டு முழு நேர உறுப்பினர்கள் மற்றும் ஏழு பகுதி நேர உறுப்பினர்களைக் கொண்ட 10 உறுப்பினர்களுடன் மறுசீரமைக்கப்பட்டது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை ஆகியோர் மாநில திட்டக் குழுவின் அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் செயலாளர், மாநில திட்டக் குழு அவர்கள் நிர்வாகத்தின் பொறுப்பாளர் ஆவார்.

3.1.1 மாநில திட்டக் குழுவின் முதன்மையான பணிகள்

(i) *பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை போன்றபேரியல் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளைக் கண்காணித்தல் மற்றும் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களைத் திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்;*

(ii) *தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து அதன் வளர்ச்சிக்கான அறிக்கைகளை அரசுக்கு தேவைப்படும்பொழுது அனுப்புதல்;*

(iii) *நீடித்த வளர்ச்சி இலக்குகள்–2030 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கும், ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிகாட்ட நீண்ட, நடுத்தர மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுப்பதில் மாநில அரசுக்கு உதவுதல்;*

(iv) *ஐக்கிய நாட்டு பொது சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2030-இல் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகள்*

நிதிக் குழுவின் குறிக்கோள்களுக்கு ஏற்ப துறைசார்ந்த செயல்பாட்டு திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்;

(v) கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கும் அவற்றைச் செயல்படுத்துவதைத் துரிதப்படுத்துவதற்கும், "கொள்கை ஒத்திசைவு சிக்கல்களை" முறையாக நிவர்த்தி செய்து, துறை மற்றும் துறை சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு தளத்தை வழங்கும்;

(vi) பல்வேறு துறைகளில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டு அதன் ஒப்புமைகளை அரசு சார்ந்த தேசிய, பன்னாட்டு வல்லுநர்கள், கல்வி மற்றும் கொள்கை ஆராய்ச்சி வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டமைப்பை ஊக்குவித்தல்;

(vii) தகுந்த உள்ளீடுகள் மற்றும் அளவீடுகளை மாநிலத்திற்கு அளித்து மனித வள மேம்பாடு குறியீடு, பாலின குறியீடு மற்றும் இதர குறியீடுகள் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை அணுகுதல் மற்றும் உகந்த திட்டங்களுடன் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

(viii) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் செயல்பட்டுவரும் பல முன்னோடியான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து ஆய்வின் வாயிலாக அத்துறைகளில் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டிய நுட்பமான விவரங்களை அரசுக்கு பரிந்துரைத்தல்;

(ix) தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் கூட்டு சமூகத்தின்மூலம் அறிவு, புதுமை மற்றும் தொழில் முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்க உதவுதல்;

(x) துறைகளுக்கு இடையேயான வேறுபாடுகள் மற்றும் ஒதுக்கீடுகள், ஒழுங்கு முறை ஆகியவற்றின் இலக்குகளை அடைவதற்கான கட்டாய கட்டமைப்பு உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவு ஆலோசனைகளை வழங்குதல்;

2023 ஏப்ரல் 19]

(xi) இதேபோல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் ஒருவரும் விடுபடாமல் இருத்தல் என்ற கருத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்;

(xii) நல்ல உள்ளாட்சி நிர்வாகத்திற்கான பரவலாக்கப்பட்ட திட்டமிடல் கருத்தின்கீழ் கட்டாயப்படுத்தப்பட்ட அமைப்புகளைச் செயல்படுத்துவதன் செயல்திறன் குறித்து ஆலோசனை வழங்குதல்;

(xiii) மேற்படி பணிகளுடன் மாநில திட்டக் குழு கீழ்க்கண்டுள்ள திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது:

அ. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

ஆ. மாநில புதுமை முயற்சிகள் திட்டம்

இ. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் திட்டங்கள்

3.1.2 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

அரசாணை (நிலை) எண் 108, தி.வ.(ம).சி.மு துறை, நாள் 15.9.2022 இன்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம் மறுசீர்திருத்தம்/ மறுவடிவமைப்பு செய்யப்பட்டது. மாவட்டங்களுக்கிடையே கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்ற வளர்ச்சி குறியீடுகளில் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பின்தங்கிய நிலையைக் குறைப்பதே இத்திட்டத்தின் குறிப்பிட்ட நோக்கமாகும். பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான குறியீடுகளை வடிவமைக்க முதல் இரண்டு ஆண்டுகளுக்கு (2022-23 மற்றும் 2023-24) தேர்ந்தெடுக்கப்பட்ட குறியீடுகள்:

1. முதல் 1000 நாட்களில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் மற்றும் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.

2. ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளின் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் படிக்கும் மற்றும் எழுதும் திறனை மேம்படுத்துதல்.

[2023 ஏப்ரல் 19

மாவட்ட அளவிலான அறிக்கையின்படி தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-5 மற்றும் கற்றல் முடிவுகள் குறித்த தரவுகளின் அடிப்படையில், முறையே கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்த பின்வரும் மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

முதல் திட்டத்தில் பின்வரும் 14 மாவட்டங்களில் உள்ள 23 வட்டாரங்களில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நடைமுறைப்படுத்தப்படும். அவை:

வ. எண்	மாவட்டம்	வட்டாரங்கள்
1.	பெரம்பலூர்	1. ஆலத்தூர் 2. பெரம்பலூர்
2.	கரூர்	3. கிருஷ்ணராயபுரம் 4. தோகைமலை
3.	திருச்சிராப்பள்ளி	5. துறையூர் 6. மண்ணச்சநல்லூர்
4.	அரியலூர்	7. ஆண்டிமடம் 8. திருமானூர்
5.	சிவகங்கை	9. எஸ்.புதூர் 10. திருப்பத்தூர்
6.	கள்ளக்குறிச்சி / விழுப்புரம்	11. கல்வராயன்மலை 12. திருவெண்ணெய்நல்லூர்
7.	புதுக்கோட்டை	13. அன்னவாசல் 14. திருவரங்குளம்
8.	திருவண்ணாமலை	15. ஜவ்வாதுமலை 16. கலசப்பாக்கம்
9.	வேலூர் / ராணிப்பேட்டை	17. கே.வி.குப்பம் 18. திமிரி
10.	திருநெல்வேலி / தென்காசி	19. அம்பாசமுத்திரம் 20. நாங்குநேரி 21. சங்கரன்கோவில் 22. மேலநீலிதநல்லூர்
11.	நீலகிரி	23. கோத்தகிரி

2023 ஏப்ரல் 19]

இரண்டாவது திட்டத்தில் பின்வரும் 6 மாவட்டங்களில் கல்வி நடைமுறைப்படுத்தப்படும். அவை:

1. விழுப்புரம், 2. சேலம், 3. கடலூர், 4. நாகப்பட்டினம், 5. அரியலூர் மற்றும் 6. திருவாரூர்

திட்டங்களைச் செயல்படுத்தவும், முன்னோக்கு திட்டங்களின் ஒப்புதல் மற்றும் திட்டங்களின் ஒப்புதல் ஆகியவற்றை வழிகாட்டவும் மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான அதிகாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், கோட்டத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளை இணைத்து, மாவட்ட ஆட்சியர்கள் திட்டத்தைக் கண்காணிப்பார்கள்.

3.1.2.1 திட்டங்களுக்கு ஒப்புதல்

இத்திட்டத்திற்காக அமைக்கப்பட்ட மாநில அளவிலான அதிகாரக் குழு திட்டங்களுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. 2022-2023 ஆம் நிதியாண்டில், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வி ஆகிய குறியீடுகளில் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க ரூ.39.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மூன்று திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவை:

வ. எண்	திட்ட விவரங்கள்	தொகை ரூ.
1.	2757 அங்கன்வாடி மையங்களுக்கு வளர்ச்சி கண்காணிப்புக் கருவிகள் வழங்குதல் (ஊட்டச்சத்து)	2,75,70,000
2.	ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளின் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் படிக்கும் மற்றும் எழுதும் திறனை மேம்படுத்துதல் (கல்வி)	25,49,81,134
3.	முதல் 1000 நாட்களில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் (சுகாதாரம்)	11,62,00,000

[*2023 ஏப்ரல் 19*

3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே புத்தாக்கத்தின் இருப்பிடமாக உருவாக்குவதற்கும், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் செப்டம்பர் 2014-ல் ஏற்படுத்தப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டம், புதுமைகளை வளர்ப்பதற்கான செயல்முறை மற்றும் நிதி உதவி அளிக்கின்றது. புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு, மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, தொடக்க நிதியாக ரூ.150 கோடி அல்லது அரசு நிர்ணயித்தபடி தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வருகிறது.

2015-16 ஆம் ஆண்டு முதல் 2020-21 வரை 330 திட்டங்கள் சுமார் ரூ. 696.90 கோடி மதிப்பில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டங்களின்கீழ் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2022-23 ஆம் நிதியாண்டின் முதல் சுற்றில் ரூ.107.39 கோடி அளவில் 29 திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தற்பொழுது, மாநிலத் திட்டக் குழுவில் இத்திட்டத்தின்கீழ் ஆண்டு முழுவதும் துறைகளிடமிருந்தும், மாவட்ட ஆட்சியாளரிடமிருந்தும் முன்வரைவுகள் நேரடியாக பெறப்பட்டு ஒப்புதல் வழங்கி புத்தாக்க திட்டங்களை ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து தலைமைச் செயலக துறைகளால் மட்டும் வழங்கப்பட்டு வந்த திட்ட ஒப்புதல், தற்பொழுது மாநிலத் திட்டக் குழுவின் வாயிலாகவே புத்தாக்கத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கும் வகையில் வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளும் மாநில மற்றும் ஒன்றிய அரசு திட்டங்களைச் செயல்படுத்தும் பணிச்சுமை காரணமாக, குறைந்த நிதி ஒதுக்கீட்டில் புத்தாக்க முயற்சி திட்டங்களைச் செயல்படுத்துவதில் சுணக்கமும், தொய்வும் ஏற்படுகிறது. எனவே, புத்தாக்க முயற்சியை செயல்படுத்தும் திட்ட வடிவமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், மாநிலத்

2023 ஏப்ரல் 19]

திட்டக்குழு அளவில் புத்தாக்க முயற்சிகள் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

3.1.4 தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் (TNSLURB) *2011 ஆம் ஆண்டு மாநில திட்டக் குழுவிற்குள் நிரந்தர அமைப்பாக அமைக்கப்பட்டது. இது, நில வளங்களை மதிப்பிடுவதற்கும், நிலம் மற்றும் நீர் வளங்களின் கொள்கை தலையீடுகளுக்கு அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் உருவாக்கப்பட்டது.*

நிலப் பயன்பாடு, நீர், விவசாயம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல், சதுப்பு நிலம், காலநிலை மாற்றம், நகரமயமாக்கல், வனம், கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் ஆகிய தொடர்புடைய துறைகளில் 2011-12 ஆம் ஆண்டு முதல் 2022-23 ஆம் ஆண்டு வரை ரூ.786.94 இலட்சம் செலவில் மொத்தம் 73 ஆராய்ச்சி ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

இதேபோல், பல்வேறு தொடர்புடைய கருப்பொருள் தலைப்புகளில் 15 பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் புகழ் பெற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் ரூ.83.47 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன.

3.1.5 முன்னேற விழையும் மாவட்டங்களின் நிலையை மாற்றியமைக்கும் திட்டம்

முன்னேற விழையும் மாவட்டங்களின் நிலையை மாற்றுதல் என்ற திட்டம் 2017 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் கூட்டுறவு கூட்டாட்சி, ஒருங்கிணைப்பு (ஒன்றிய மற்றும் மாநில திட்டங்களின் ஒருங்கிணைப்பு), ஒத்துழைப்பு (ஒன்றிய, மாநில அளவிலான அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள்), அனைவருக்குமான வளர்ச்சியை உறுதிசெய்தல், குடிமக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உறுதியான ஈடுபாட்டுடன் கூடிய மக்கள் இயக்கத்தால் உந்தப்படுகின்ற மாவட்டங்களுக்கிடையேயான போட்டி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த குறியீட்டின் அடிப்படையில், அடையாளம் காணப்பட்ட 115 முன்னேற விழையும் மாவட்டங்களின் பட்டியலில் தமிழ்நாட்டிலிருந்து இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. வறுமை, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் எதிர்கொள்ளும் சவால்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

3.1.5.1 கவனம் செலுத்தும் அம்சங்கள்

சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை (ம) நீர்வளங்கள், நிதி உள்ளடக்கம், திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கவனம் செலுத்தும் அம்சங்களாகும்.

3.1.5.2 நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் தரவரிசை

மாவட்டங்கள் முதலில் தங்கள் மாநிலத்திற்குள் உள்ள சிறந்த மாவட்டத்திற்கு இணையாக முன்னேறுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. பின்னர், மற்றவர்களுடன் போட்டியிடுவதன் மூலமும், மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதன் மூலமும் நாட்டின் சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக மாற ஊக்குவிக்கப்படுகின்றன.

49 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளில் மாவட்டங்களில் மாதந்தோறும் ஏற்படும் முன்னேற்றத்தைப் பதிவு செய்வதற்காக ஓர் (online) கண்காணிப்பு இணையதளம் நிதி ஆயோக்கினால் (NITI Aayog) நிறுவப்பட்டுள்ளது.

மாவட்டங்கள் தங்கள் இலக்குகளுக்கு எதிராக அடைந்துள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில், மாவட்டங்களின் ஒட்டு மொத்த முன்னேற்றமும் துறைசார் செயல்திறனும் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவரிசைப்படுத்துதல் மாவட்டங்களுக்கிடையே போட்டியை உருவாக்குகின்றது.

தேசிய அளவில் முதலிடம் பெறும் மாவட்டத்திற்கு விருதும், ரூ.10 கோடி தொகையும் மேலும், இரண்டாமிடம் பெறும் மாவட்டத்திற்கு விருதும், ரூ.5 கோடி தொகையும் வழங்கப்படுகின்றன. இத்தொகை அந்த மாவட்டத்திற்குத் தேவையான திட்டங்களைச் செயல்படுத்த பயன்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

3.1.5.3 நிதி ஆதரவு

மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் (ம.பொ.நி), அவற்றின் பெருநிறுவன சமூகப்பொறுப்பு (Corporate Social Resposibility) *நிதிமூலம் மாவட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றன.*

மேலும், முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு மாவட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியுதவித் திட்டம் (EAP), *ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை* (JICA) *ஆகியவற்றின்மூலம் நிதி ஆயோக்* (NITI Aayog) *ஊக்குவிப்பு நிதி வழங்குகிறது.*

3.1.5.4 மாவட்டங்களின் செயல்பாடு

தொடக்கத்திலிருந்தே படிப்படியாக முன்னேறி வரும் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள், கடந்த 2018 ஏப்ரலில் முறையே 45.6 மற்றும் 46.8 என்ற அடிப்படை மதிப்பிலிருந்து, 2023 ஜனவரியில் முறையே 64.8 மற்றும் 64.1 என்ற கூட்டு குறியீட்டுப் புள்ளிகளை எட்டியுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் வேளாண்மை மற்றும் நீர்வள ஆதாரத் துறையில் முறையே ஏப்ரல் - மே 2019 மற்றும் பிப்ரவரி – மார்ச் 2021 இல் அதன் செயல்திறனுக்காக முதல் இடத்தைப் பெற்றது. இதற்காக திட்டம் சாரா நிதியாக தலா ரூ.3 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒட்டுமொத்த டெல்டா தர வரிசையில் முன்னணியில் இருந்த காரணத்தால் அம்மாவட்டத்திற்கு ரூ.4 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2019 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு, அத்துடன் 2020 ஜுன்- ஜுலை மாதங்களில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துத் துறையில் முதல் இடத்தையும், 2021 அக்டோபரில் ஒட்டுமொத்த செயல்திறனில் இரண்டாவது இடத்தையும் பெற்றதற்காக விருதுநகர் மாவட்டத்திற்கு ரூ.7 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2021 டிசம்பரில் ஒட்டுமொத்த டெல்டா தரவரிசையில் விருதுநகர் மாவட்டம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதன் பொருட்டு இம்மாவட்டத்திற்கு

ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், விருதுநகர் மாவட்டம் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒட்டுமொத்த டெல்டா தர வரிசையில் முன்னணியில் இருந்த காரணத்தால் அம்மாவட்டத்திற்கு ரூ.4 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

3.1.5.5 முன்னேற விழையும் வட்டாரங்கள் திட்டம்

முன்னேற விழையும் மாவட்டங்கள் அடைந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தற்போது, முன்னேற விழையும் மாவட்டங்கள் திட்டத்தின் மாதிரியானது வட்டார அளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நிதி ஆயோக் ஜனவரி 2023 ஆம் ஆண்டு முன்னேற விழையும் வட்டாரங்கள் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 500 பின்தங்கிய வட்டாரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவ்வட்டாரங்களின் முன்னேற்றமானது சுகாதாரம் (ம) ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை (ம) நீர்வள மேலாண்மை, திறன்மேம்பாடு மற்றும் நிதி உள்ளடக்கம், அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மாநிலத்திற்கென தனிப்பட்ட ஐந்து குறிகாட்டிகளாலும் கண்காணிக்கப்படும்.

இவ்வட்டாரங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புப் பலகை தேசிய தகவல் மையத்தால் (NIC) வடிவமைக்கப்பட்டுள்ளது.

முன்னேற விழையும் மாவட்டங்களிலிருந்து தலா ஒரு வட்டாரம் உட்பட தமிழ்நாட்டிலிருந்து 16 முன்னேற விழையும் வட்டாரங்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முன்னேற விழையும் வட்டாரங்கள் திட்டத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள வட்டாரங்களின் பட்டியல்		
வ. எண்	மாவட்டம்	வட்டாரம்
1	அரியலூர்	ஆண்டிமடம்
2	கள்ளக்குறிச்சி	கல்வராயன்மலை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	வட்டாரம்
3	கரூர்	தோகைமலை
4	பெரம்பலூர்	ஆலத்தூர்
5	புதுக்கோட்டை	திருவரங்குளம்
6	இராமநாதபுரம்	திருவாடனை
7	ராணிப்பேட்டை	திமிரி
8	சிவகங்கை	திருப்பத்தூர்
9	நீலகிரி	கோத்தகிரி
10	தென்காசி	மேலநீலிதநல்லூர்
11	திருவண்ணாமலை	ஜவ்வாதுமலை
12	திருச்சிராப்பள்ளி	துறையூர்
13	திருநெல்வேலி	நாங்குநேரி
14	வேலூர்	கே.வி.குப்பம்
15	விழுப்புரம்	திருவெண்ணெய்நல்லூர்
16	விருதுநகர்	திருச்சுழி

3.1.6 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளைச் செயல்படுத்துவதில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் வழிகாட்டுதலின்படி, மாநிலத் திட்டக் குழுவானது, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையுடன் இணைந்து, தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புடன் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

3.1.6.1 உயர்மட்டக் குழு மற்றும் பணிக்குழுக்கள்

மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுவதற்காக முகமை துறைகளின் அரசுச் செயலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர் மட்டக் குழுவானது அரசாணை நிலை எண் 73, திவ(ம)சிமு (நீவஇ) துறை, நாள் 2.6.2022 வாயிலாக மாநிலத்

[*2023 ஏப்ரல் 19*

திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்களை இந்த உயர்மட்டக் குழுவின் இணைத் தலைவராகவும் மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் அவர்களை இதன் உறுப்பினராகவும் சேர்த்து மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. குறிக்கோள்களையும், இலக்குகளையும் அடையும் பொருட்டு தொடர் ஆய்வு செய்து கண்காணிப்பதற்காக, 17 இலக்குகளையும் உள்ளடக்கி, எட்டு பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்புடைய துறைகளின் செயலர்கள் இப்பணிக்குழுக்களின் தலைவர்களாக உள்ளனர். இப்பணிக்குழுக்கள் விதிமுறைகளின்படி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை இணைத்தல், குறிகாட்டிகளின் மேம்பாட்டினைக் கண்காணித்தல், ஒவ்வொரு இலக்கிற்கான நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான தமிழ்நாட்டின் பார்வை ஆவணத்தைத் தயாரித்தல், 17 இலக்குகளை அடைவதை அவ்வப்போது மதிப்பாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றன. இப்பணிக்குழுக்களானது, அந்தந்த பணிக்குழுக்களில் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் விதமாக, அவர்களின் துறை சார்ந்த இலக்குகளைக் கொண்ட பணிக்குழுக்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, இப்பணிக்குழுக்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மேலும், தொடர்புடைய துறைகள் பணிக்குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளன. மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர்கள் உறுப்பினர் அமைப்பாளர்களாக உள்ளனர். இந்தப் பணிக்குழுக்கள் ஒவ்வொன்றும் அனைத்து வெவ்வேறு துறைகளையும் உள்ளடக்கியதாகவும் அரசின் உயர் மட்டத்தில் முடிவுகள் மேற்கொள்வதற்கான விவரங்களை அளிக்கக் கூடியதாகவும், அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் அம்சங்களை மேற்பார்வையிடுவதாகவும் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான பணி வரையறைகளை நிறைவு செய்திடும் வகையிலும் உள்ளன. மாநிலத்தில் துறைத் தலைவர்கள் / பொதுத் துறை நிறுவனங்கள் பணிக்குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளுக்கு இணைந்து செயல்பட வேண்டும்.

3.1.6.2 தமிழ்நாட்டின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தொலைநோக்கு ஆவணம்

பணிக்குழுக்களுக்கான பணி வரையறையில் முக்கியமான ஒரு பொறுப்பு ஒவ்வோர் இலக்கிற்கும் தொலைநோக்கு ஆவணம் தயார் செய்ய வேண்டியது. இந்த தொலைநோக்கு ஆவணத்தின்

2023 ஏப்ரல் 19]

குறிக்கோள், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகளில் மாநிலத்தின் நிலைமையை எடுத்துக்காட்டுவதோடு, தமிழகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான பொருத்தமான உத்திகளையும் செயல் திட்டங்களையும் வடிவமைத்து வழங்குவதாகும்.

பணிக்குழுக்களின் கூட்டங்களும் மற்றும் உறுப்பினர் அமைப்பாளர்கள் அளவில் பங்கு பெறும் கூட்டங்களும் நடத்தப்பட்டு, அந்தந்த இலக்குகளுக்கான வரைவு தொலைநோக்கு ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டக் குழு இந்த ஆவணத்தின் பல்வேறு அத்தியாயங்களைத் தொகுத்து ஒரு விரிவான ஆவணமாக தயாரித்து விரைவில் வெளியிடப்படவுள்ளது.

3.1.6.3 மாநில / மாவட்ட / வட்டார குறிகாட்டி வரையறை

புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள தேசிய குறிகாட்டி வரையறையை அடிப்படையாகக் கொண்டு, தொடர் ஆலோசனைக் கூட்டங்கள் தொடர்புடைய துறைகளின் செயலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்புடன் மாநிலத்திற்கான குறிகாட்டி வரையறை இறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் இறுதி செய்யப்பட்டவாறு, 314 குறிகாட்டிகளுடன் கூடிய தமிழ்நாடு மாநில குறிகாட்டி வரையறை எனும் ஆவணத்தினை புள்ளியியல் மற்றும் பொருளியல் துறையானது மாநில திட்டக்குழுவுடன் இணைந்து வெளியிட்டுள்ளது.

மேலும், இதில் மாவட்ட அளவில் தரவுகளைக் கொண்டுள்ள 104 குறிகாட்டிகளும் வட்டார அளவில் தரவுகளைக் கொண்டுள்ள 93 குறிகாட்டிகளும் கண்டறியப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்த மாநில குறிகாட்டி வரையறையானது,செயல்படுத்தப்படும் திட்டங்களின் தேவைக்கேற்ப குறிகாட்டிகளைச் சேர்த்தோ அல்லது நீக்கியோ திருத்தி அமைக்கப்படக் கூடும்.

3.1.6.4 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதளம் மற்றும் கண்காணிப்புப் பலகை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது கண்காணிப்புப் பலகையுடன் கூடிய பிரத்யேக இணைய தளத்தினை துறைகள் மற்றும் மாநிலத்திற்கான குறிக்கோள்கள் மற்றும்

குறிகாட்டிகளுக்கான தரவுகளைச் சேகரிக்கவும் அவற்றின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் பொருட்டும் உருவாக்கியுள்ளது.

தொடர்புடைய ஒவ்வொரு துறைக்கும் அத்துறைகளுக்கான குறிகாட்டிகளின் தரவுகளை அத்துறை அலுவலர்களே நேரடியாக பதிவேற்றம் செய்வதற்காக இணையதள பயனாளர் நுழைவு குறியீடு உருவாக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தரவு மைய புள்ளியாக உள்ள பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை இந்த இணையதளத்தை பராமரித்திடும் பொறுப்பினை மேற்கொள்கிறது. துறைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பயனாளர் நுழைவு குறியீட்டின் வாயிலாக, மாநில குறிகாட்டி வரையறையில் உள்ள அனைத்து குறிகாட்டிகளுக்கான தரவுகள் அவ்வப்போது அந்தந்தத் துறையால் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.மேலும்,மாவட்ட மற்றும்வட்டார குறிகாட்டிகளுக்கான தரவுகளும் இவற்றில் பதிவேற்றம் செய்வதற்கான வசதி உள்ளது. இக்கண்காணிப்புப் பலகையானது நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாநிலம் முதல் உள்ளூர் வரை எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிவதற்கான ஒரு கருவியாகும். இந்த இணையதள வாயிலான தரவுகளின் கண்காணிப்பு முறை சீரிய முறையில் செயல்பட, தொடர்புடைய துறைகள் அவற்றிற்குரிய குறிகாட்டிகளின் தரவுகளை, அவற்றின் காலமுறையில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

3.1.6.5 துறைகளில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் அலகு

ஒவ்வொரு நிருவாகத் தொடர்புத் துறையிலும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்துவதற்கான அமைப்பு மற்றும் வழிமுறைகளைச் செயல்படுத்தும் பொருட்டு நிருவாகத் துறை அலுவலர்கள் மற்றும் துறைத் தலைமைகளின் அலுவலர்களையும் உள்ளடக்கியதான நீடித்த வளர்ச்சி இலக்குகள் அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகள், துறைகளுக்கு உதவியாகவும் நீடித்த வளர்ச்சி இலக்கு பணிகளில் துறைகளின் செயல்பாட்டினைச் செம்மைப்படுத்துவதாகவும் உள்ளது. துறைகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான அலகுகள், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, பணிக்குழுக்கள், மாநில, மாவட்ட மற்றும் கள அலுவலகங்களுடனும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் செயலாற்றி வரும் இதர நிறுவனங்களுடனும் மாநிலத்தில்

2023 ஏப்ரல் 19]

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக அவ்வப்போது ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன.

3.1.6.6 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான உயர் மட்டக் குழு, மாவட்ட அளவிலான செயற்குழு மற்றும் மாவட்டங்களில் நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவுகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாவட்டங்களின் செயல்பாடே மாநிலத்தின் ஒட்டுமொத்த செயல்பாடாக பிரதிபலிக்கிறது. மேலும், மாநிலத்தின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றமானது, மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும், கிராம அளவிலும் மற்றும் பெருநகரம்/நகராட்சி/பேரூராட்சி அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குவதைப் பொருத்தே உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதலை நிறைவேற்றிடும் பொருட்டு, நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான உயர் மட்டக் குழு, மாவட்ட அளவிலான செயற்குழு மற்றும் மாவட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அ) அந்தந்த மாவட்டத்தினைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவின் தலைவராகவும், மாவட்ட ஆட்சியர் உறுப்பினர் செயலராகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அதன் அமைப்பாளராகவும் உள்ளனர். மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலர்கள் இதன் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

ஆ) நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான செயற்குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகவும் மாவட்ட திட்ட அலுவலர் உறுப்பினர் அமைப்பாளராகவும் மற்றும் மாவட்ட புள்ளியியல் துறை துணை இயக்குநர் அதன் தரவு ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளனர். நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான செயற்குழுவின் வரையறை செய்யப்பட்டுள்ள விதிமுறைகள், மாநில அளவில் உள்ள பணிக்குழுக்களைப் போலவே, மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட நிலைகளுக்குப் பொருந்தக்கூடிய

அனைத்து இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகளை உள்ளடக்கியது.

இ) மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவானது மாவட்டத்திற்கு உறுதுணை அமைப்பாகவும் கண்காணிப்பு அமைப்பாகவும் உள்ளது. இதற்கு தரவு மேலாளராக உள்ள புள்ளியியல் துணை இயக்குநர் தலைவர் ஆவார். மாவட்ட திட்ட அலுவலர் இதன் அமைப்பாளராக உள்ளார்.

மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவானது, அதற்கான கண்காணிப்புப் பலகையில் அனைத்துத் தரவுகளும் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்திடவும், மாவட்ட அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய மாவட்ட அளவிலான குழுவின் வழிகாட்டுதல்களை முன்னெடுப்பதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

3.1.6.7 நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு - மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தரவரிசை

இந்திய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 ஆம் ஆண்டிற்குள் எட்டப்படுவதற்கான பணிகளை மேற்பார்வை செய்திடும் முகமையாக உள்ள ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பால், நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு எனும் அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

உலகளாவிய இலக்குகளை அடைவதை நோக்கி மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதும், அதிக கவனம் தேவைப்படும் முன்னுரிமைப் பகுதிகளை அடையாளம் காண்பதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை ஆதரிப்பதும் குறியீட்டின் நோக்கமாகும். இந்த அறிக்கையானது மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் புள்ளிவிவர அமைப்பில் உள்ள தரவு இடைவெளிகளை எடுத்துக்காட்டுகிறது மற்றும் முக்கியமான, அடிக்கடி தரவு சேகரிக்கப்பட வேண்டிய துறைகளையும் அடையாளம் காட்டுகிறது. இதன் மூன்றாம் பதிப்பான, நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு 3.0 (2020-21), ஜூன், 2021-ல் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகளில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கண்டறியப்பட்ட குறிகாட்டிகளின் செயல்பாட்டின் அடிப்படையில் அவற்றினை தரவரிசைப்படுத்தி

2023 ஏப்ரல் 19]

வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் தமிழ்நாடு 74 ஒட்டுமொத்த குறியீட்டுப் புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு மற்றும் பற்பரிமாண வறுமை குறியீடு தொடர்பான மாநில அளவிலான பணிப்பட்டறை 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 மற்றும் 13 ஆம் தேதிகளில் சென்னை தலைமைச் செயலகத்தில், நிதி ஆயோக் அமைப்புடன் இணைந்து, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையால் நடத்தப்பட்டது. இந்தப் பணிப்பட்டறையில், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் தரவரிசைக்கு எடுக்கப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் தரவு கணக்கிடப்படவுள்ள கால வரையறை, தரவுகளுக்கான ஆதாரம் ஆகியவைக் குறித்து விரிவான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

3.1.6.8. நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு-4.0 பணிப்பட்டறை

நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு 4.0-ற்காக உத்தேசிக்கப்பட்ட குறிகாட்டிகள் குறித்த மாநிலத்தின் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வதற்காக, 2022 ஜனவரி 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில், சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய மாநிலத் திட்டக் குழுவால் சென்னையில் இரண்டு நாள் மாநில அளவிலான பணிப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பணிப்பட்டறையில் நிதி ஆயோக் அமைப்பின் ஆலோசகர் (நீடித்த வளர்ச்சி இலக்கு) அவர்களின் தலைமையிலான குழுவினர் குறியீட்டிற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள், தரவு கணக்கிடப்படவுள்ள ஆண்டு, தரவுகளின் ஆதாரம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விளக்கப்படக் காட்சி மூலமாக கலந்துரையாடல் மேற்கொண்டனர். மேலும், தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பு 5 (2019-20)ன் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள பற்பரிமாண வறுமை குறியீடு மற்றும் அதன் அம்சங்கள் குறித்து தொடர்புடைய துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

மாநிலத்திற்கான உத்தேசிக்கப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் தரவுகளுக்கான காலவரையறைக் குறித்து (அனைத்து துறைகளால்) தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் தொகுக்கப்பட்டு,

உரிய பரிசீலனைக்காக நிதி ஆயோக் அமைப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு 4.0 விரைவில் நிதி ஆயோக் அமைப்பால் வெளியிடப்படவுள்ளது.

3.1.6.9 திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளைக் கண்காணிப்பதற்கான வரையறை (Output Outcome Monitoring Framework (OOMF))

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் ஓர் அங்கமான வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகம் (DMEO) திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளைக் கண்காணிப்பதற்கான வரையறையை (OOMF) தயாரித்துள்ளது. இந்த வரையறையைப் பல்வேறு மாநிலங்களும் திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கான திட்டமிடல் மற்றும் வெளியீடு, விளைவுகளைக் கண்காணிப்பதற்கான ஒரு முக்கிய கருவியாக பயன்படுத்த முயற்சித்துள்ளன. இதன் முக்கிய நோக்கங்கள், சிறந்த நிதி மேலாண்மை மற்றும் மேற்பார்வைக்கு அனுமதிப்பதால், அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்துவது குறித்து பங்குதாரர்களிடையே சிறந்த புரிதலை மேம்படுத்துவதாகும். இதன்மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயலாக்கத்திற்கான இலக்கு நோக்கிய அணுகுமுறையை உருவாக்குவதும் சாத்தியமாகிறது.

இச்சூழ்நிலையில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, இந்த வரையறையை (OOMF) நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைச் செயல்படுத்துதலில் திட்டமிடுதல் மற்றும் கண்காணிப்பிற்கான ஒரு கருவியாகவும் மற்றும் அதன்மூலம் சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றின் குறிக்கோள்களை அடைவதற்குரிய வழிமுறையாகவும் பயன்படுத்திட உத்தேசித்துள்ளது. இந்த வரையறையை மாநில நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான குறிகாட்டிகளுக்கான வரையறையுடன் இணைக்கலாம்.

இது குறித்து, தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு விளக்கிடும் பொருட்டு பிப்ரவரி, 2022 இல் மாநிலத் திட்டக்குழுவில் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2023 ஏப்ரல் 19]

மேலும், நிதி ஆயோக் அமைப்பின் ஓர் அங்கமான, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகத்தின் (DMEO) *மூலமாக பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையானது மாநிலத் திட்டக்குழுவுடன் இணைந்து 9.2.2023 மற்றும் 10.2.2023 அன்று அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் நடத்தப்பட்ட பணிப்பட்டறையில் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கு தொடர்புடைய துறைகளிலிருந்து உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.*

இந்த பணிப்பட்டறையைத் தொடர்ந்து, தொடர்புடைய துறைகள் அந்தந்தத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளை மதிப்பிடுவதற்கான வரையறையை வரும் ஆண்டுகளில் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.1.7 கொள்கை ஆவணங்களைத் தயாரித்தல்

தமிழகத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் பகுதிகளில் ஒன்பது கொள்கை ஆவணங்களைத் தயாரிக்கும் பணி மாநிலத் திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுகாதார உரிமைக் கொள்கை, திருநர்+ (LGBTQIA+) *கொள்கை, பொருளாதாரத்திற்கான தொழில்மயமாக்கல் கொள்கை ஆகிய மூன்று கொள்கைகள் மாண்புமிகு முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், அவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. வீட்டுவசதி, நிலப்பயன்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் திறன், நீர்வளம், கழிவு மேலாண்மை மற்றும் சமூக நீதி தொடர்பான பிற கொள்கைகள் முடிவுறும் நிலையில் உள்ளன. அவை உரிய நேரத்தில் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும்.*

3.1.8 தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள்

மாநிலத் திட்டக் குழுவானது, அரசின் முதன்மைத் திட்டங்களுக்கான தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதன்மூலம், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், சிறந்த பொதுச் சேவை வழங்கலுக்கான திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படுகிறது. மாநில திட்டக் குழு பின்வரும் திட்டங்களுக்கான தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளை நடத்தியது:

[2023 ஏப்ரல் 19

- மகளிருக்கான கட்டணமில்லா நகரப் பேருந்து பயணத் திட்டம்
- இல்லம் தேடிக் கல்வி
- மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்

3.2 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையானது தலைமை புள்ளியியல் நிறுவனமாக செயல்படுகிறது. மாநிலத்தின் ஒட்டுமொத்த புள்ளியியல் விவர செயல்பாடுகளை ஒருங்கிணைத்து முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தரமான புள்ளிவிவரங்களை வழங்குகிறது. மேலும், கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும், பல்வேறு சமூகப் பொருளாதார மாறுபாடுகள் குறித்த நம்பகமான,போதுமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களை மாநில மற்றும் ஒன்றிய அரசுக்கும் இத்துறை வழங்குகிறது.

3.2.1 துறையின் செயல்பாடுகள்

இத்துறையின் முக்கிய பணியானது, வேளாண் புள்ளிவிவரங்கள், தொழில் துறை புள்ளிவிவரங்கள், வீட்டுவசதி புள்ளிவிவரங்கள், விலைப் புள்ளிவிவரம், மாநில வருவாய் போன்றவற்றின் தரவுகளை சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்து அறிக்கைகள் வெளியிடுதல் ஆகும். சமூகப் பொருளாதார ஆய்வுகள் முறையான மாதிரி சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி, அர்ப்பணிப்புள்ள களப்பணியாளர்களைக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

மேலும், மாநில வருவாய், மாவட்ட வருவாய், பயிர் மதிப்பீட்டாய்வு, தொழில் உற்பத்திக் குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண் மற்றும் மொத்த விலை குறியீட்டெண் போன்ற பல்வேறு பொருளாதார அளவுருக்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், பல்வேறு வேளாண்மை மற்றும் தொழில் புள்ளியியல் திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் கணக்கெடுப்புகள் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் தலையாயப்

2023 ஏப்ரல் 19]

பணியாகும். ஆண்டு தோறும், தமிழ்நாடு புள்ளியியல் கையேடு மற்றும் தமிழ்நாடு பருவம் மற்றும் பயிர் அறிக்கை துறையினால் வெளியிடப்படுகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வேளாண் கணக்கெடுப்பு/ பொருளாதாரக் கணக்கெடுப்பு மேற்கொண்டு அறிக்கைகளை வெளியிடுவதும், திட்டவாரியான மாதாந்திர மற்றும் ஆண்டறிக்கைகள் இத்துறையால் வெளியிடப்படுகிறது. இவ்வறிக்கைகளின் முடிவுகள் மாநில அரசின் பல்வேறு துறைகளாலும், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களாலும் பயன்படுத்தப்படுகிறது. இத்துறையிலுள்ள திறமையான தொழில்நுட்ப அலுவலர்கள், மாற்றுப் பணியில் தொடர்புடைய துறைகளில் பணிபுரிந்து அத்துறைகளால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் மற்றும் சமூகப் பொருளாதார திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்வதில் பயனுள்ள பங்கை ஆற்றி வருகின்றனர்.

தற்போது அனைத்து மாநிலங்களும், சிறந்த ஆளுமை மற்றும் பொதுமக்களுக்கு சேவையை வழங்குவதற்கு, ஆதார அடிப்படையிலான கொள்கைகளைச் செயல்படுத்த துவங்கியுள்ளன. இவ்விலக்கை அடைய அரசு இத்துறையில் தரவு பகுப்பாய்வு மையம் அமைத்துள்ளது.

3.2.2 துறையின் முயற்சிகள்

3.2.2.1 புள்ளிவிவர பகுப்பாய்வு பிரிவு (DAU)

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையுடன் இணைந்து புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு மையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையம் புள்ளிவிவரங்கள் அடிப்படையிலான உள்ளீடுகளை, உயர்மட்டக் கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகளுக்கு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பை அளிக்க உதவுகின்றது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் புள்ளிவிவர பகுப்பாய்வுப் பிரிவு உலக சூழலுக்கேற்ப புள்ளிவிவரங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவற்றைச் சிறப்பாக ஆய்வு செய்யும் ஒரு பிரிவாகவும் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாட்டின்போது உருவாகும் அளவற்ற புள்ளிவிவரங்களை ஆராய்ந்து அரிதாக ஒழுங்கமைக்கப்பட்ட அவற்றின்மூலம் செயல்படுத்தக்கூடிய

பயனுள்ள அறிக்கைகளை அளிக்கிறது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

நவீன தகவல் தொழில்நுட்பங்களை மற்றும் பயன்பாட்டு மென்பொருளைப் பயன்படுத்தி தொடர்புடைய புள்ளிவிவரங்களை அனுமான அடிப்படையிலான பகுப்பாய்வு செய்து விரைவில் முடிவெடுக்க இம்மையம் உதவுகிறது.

புள்ளிவிவர பகுப்பாய்வு மையம் பின்வரும் நான்கு ஆய்வுத் திட்டங்களை ஜே-பாலுடன் (தெற்கு ஆசியா) இணைந்து செயல்படுத்தி முடித்துள்ளது:

(i) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையால் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கூறுகளின் தரவரிசைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் புள்ளிவிவரங்களை ஆய்வு செய்து ஐந்தாவது மாநில நிதி ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(iii) காணாமல் போன நபர்களின் புள்ளிவிவரங்களை வைத்து அடையாளம் காணப்படாத இறந்த உடல்களுடன் ஒப்பிட்டு, காவல் துறையின் மாநில குற்ற ஆவணக் காப்பகத்திற்காக பகுப்பாய்வு செய்யப்பட்டது.

(iv) சென்னை பெருநகர காவல் துறைக்கு அவசர கால எண் 100-ல் பெறப்பட்ட அழைப்புகள் தொடர்பான விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

சம்பந்தப்பட்ட துறைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில்கீழ்க்கண்ட இரண்டு ஆய்வுத் திட்டங்களுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

I. புவியியல் தகவல் அமைவிடப் பரப்பு சார்ந்த புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தி குற்ற வரைபடம் தயாரிக்கவும், குற்றப் பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் குற்றம் நடைபெற்ற இடத்தினை அறியவும் காவல் துறையின் மாநில குற்ற ஆவணக் காப்பகம்மூலம் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2023 ஏப்ரல் 19]

II. இயந்திரங்கள் வழி கற்பித்தல் வாயிலாக தமிழ்நாட்டில் சரக்கு மற்றும் சேவை வரி சேகரிப்பை மேம்படுத்த வணிகவரி மற்றும் பதிவுத் துறைமூலம் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

3.2.2.2. தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNHPS)

தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது இவ்வாய்வின் நோக்கமாகும். தனிநபர் மற்றும் குடும்பங்கள் ஆகியவற்றை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியைக் கண்டறியும் வகையில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கான உரிய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வடிவமைப்பதற்கு இவ்வாய்வு விவரங்கள் பேருதவியாக இருக்கும்.

தமிழ்நாடு குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வுத் திட்டத்திற்கு அரசாணை (நிலை) எண் 19, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.கு) துறை, நாள் 26.2.2016மூலம் தமிழக அரசு ஒப்புதல் அளித்து தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து ரூ.390.00 இலட்சம் மொத்த திட்ட மதிப்பு தொகையாக மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டம்:- முன் அடிப்படை ஆய்வு/ வீடுகளைப் பட்டியலிடுதல், இரண்டாம் கட்டம்:- அடிப்படை ஆய்வு மற்றும் மூன்றாம் கட்டம்:- இறுதி நிலை ஆய்வு. இந்த ஆய்வு சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இவ்வாய்வின் முக்கிய அம்சமானது கணக்கெடுப்பில் கையடக்கக் கணினியைப் (Tablets) பயன்படுத்தி டிஜிட்டல் பயன்முறையில், அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (CAPI) முறையில் புள்ளிவிவரம் சேகரிக்கப்படுகிறது.

முன் அடிப்படை ஆய்வு / வீடுகளைப் பட்டியலிடும் பணி 2018-ல் நிறைவடைந்து மொத்தம் 2,51,594 குடும்பங்கள்

கணக்கிடப்பட்டுள்ளன. மேலும், வீடுகளைப் பட்டியலிடுதலில் புதியதாக இரண்டு / மூன்றாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலும் மொத்தம் 42,452 குடும்பங்களின் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஜனவரி 2022 இல் நிறைவடைந்தது. முன் அடிப்படை ஆய்வு அறிக்கை செப்டம்பர் 2022 இல் வெளியிடப்பட்டது.

இக்கணக்கெடுப்பின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான அடிப்படை ஆய்வு தற்போது அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு முடிவடைந்துள்ளது. தரவுகள் கூர்ந்தாய்வு மற்றும் செயலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.2.2.3 தமிழ்நாடு கோவிட் கள நிலவர ஆய்வு (TNCPS)

தமிழ்நாடு கோவிட் கள நிலவர ஆய்வு என்பது 2020-2021 ஆம் ஆண்டில் உலகளாவிய தொற்று நோய்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக ஒருவருட காலத்திற்கு (ஒவ்வொரு 3-4 மாதங்களுக்கு ஒருமுறை) மாநிலத்தில் தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் (TNCPS) ஆய்வின்கீழ் உள்ள மாதிரி வீடுகளில் வழக்கமான இடைவெளியில் நடத்தப்படும் விரைவான பதில் தொலைபேசி கணக்கெடுப்பாகும். பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை சென்னை வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து மாநில அளவில் விரைவான மறுமொழி பெற தொலைபேசி வாயிலாக இக்கணக்கெடுப்பை நடத்தியது.

வேலை நிலை (வேலை இழப்பு) மற்றும் வீட்டு வருமானம் போன்ற முக்கியக் குறியீடுகள் குறித்த புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு எண்ணிக்கை வழிமுறை பயன்படுத்தப்பட்டது. இத்தொற்றுநோய் காலத்தில் நேர்காணல் அட்டவணையை நிர்வகிக்க கணினி உதவி தொலைபேசி நேர்காணல் முறை (CATI) பயன்படுத்தப்பட்டது. உலகளாவிய கோவிட் தொற்றுநோயின் மோசமான தாக்கத்தை மாற்றியமைக்கத் தகுந்த கொள்கை நடவடிக்கைகளை வடிவமைக்க கோவிட் கள நிலவர ஆய்வின் முதன்மை நோக்கத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு உடனடி நம்பகமான பயனுள்ள தரவுகளைக் கொண்ட அறிக்கைகள் ஜூலை 2020,

2023 ஏப்ரல் 19]

அக்டோபர் 2020, பிப்ரவரி 2021 மற்றும் அக்டோபர் 2021-இல் அளிக்கப்பட்டது.

3.2.2.4 தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNEPS)

தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியலின் (TNEPS) நோக்கமானது வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலை, உடல் ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக மற்றவர்களைச் சார்ந்திருத்தல், அறிவாற்றல் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கிய சுகாதார நிலையை அறிதல் மற்றும் சுகாதார அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்வதாகும். வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலையினைக் குறித்து தரவு தளம் உருவாக்கப்பட்டு வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தத் தேவைப்படும் இலக்குகளை அடைய ஒரு தனித்துவமான தளத்தை இந்த ஆய்வு வழங்கும்.

வயதானவர்களுக்கு பொருத்தமான ஆதாரத்தின் அடிப்படையில் கொள்கைகளை வடிவமைப்பதற்கும், முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது. சமூக பாதுகாப்புக் கொள்கை மற்றும் செயல்முறைத் திட்டத்தின் தலையீடுகளை வடிவமைப்பதற்கும், ஆராய்ச்சிக்கான தளத்தை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது.

இந்தக் குழு ஆய்வு, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம், தெற்கு ஆசியா (J-PAL-SA) *நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து எட்டு ஆண்டுகள் தொடர் ஆய்வாக இரண்டு வருட கால இடைவெளியுடன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது.* J-PAL-SA *நிறுவனமானது, இந்த ஆய்விற்கு தொழில்நுட்ப ஆலோசகராக செயல்படுகின்றது.*

இந்தக் கணக்கெடுப்பில் கை அடக்கக் கணினியைப் (Tablets) *பயன்படுத்தி டிஜிட்டல் பயன்முறையில், அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல்* (CAPI) *முறையில் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.*

ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

இந்தக் கணக்கெடுப்பின்கீழ் சுகாதார அளவீடுகள் மற்றும் உயிர் குறிப்பான்கள் முதன்முறையாக தமிழ்நாட்டில் சேகரிக்கப்படுகின்றன. இக்கணக்கெடுப்பில், நோய்சுமை, மனநலம் மற்றும் செயல்பாட்டு ஆரோக்கியம், சுகாதாரப் பாதுகாப்பு, முதியோரின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வு குறித்த நம்பகமான அறிவியல் தகவல்களும் அடங்கும்.

தமிழ்நாடு வயது முதிர்ந்தோர் சமூகப் பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியல் ஆய்வுக்கு அரசாணை (நிலை) எண் 21, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 27.2.2016-ன்மூலம் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்து மொத்த திட்டத் தொகையாக ரூ.606.00 இலட்சம் புத்தாக்க முயற்சிகள் திட்டத்திலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனித மேம்பாட்டு குறியீடு மற்றும் சார்பு விகிதத்தின் அடிப்படையில் கணக்கெடுப்புக்கு சென்னை (பெருநகர சென்னை பகுதி), திருவண்ணாமலை, தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த 5 மாவட்டங்களில் வீடுகளைப் பட்டியலிடும் பணி ஜூலை 2018 மத்தியில் நிறைவடைந்து சுமார் 92,000 குடும்பங்கள் ஆய்வுமூலம் கணக்கெடுக்கப்பட்டன.

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்களால் 4739 வீட்டு பட்டியலில், 6294 முதியோர்களிடம் இவ்வாய்வு தொடர்பான முன் அடிப்படை கணக்கெடுப்பு 2019 ஜூன் மாதம் நிறைவு செய்யப்பட்டது. இதில் 4496 வயதான முதியவர்களிடமிருந்து சுகாதார அளவீடுகளைப் பொது சுகாதாரத் துறை சேகரித்துள்ளது. அடிப்படை கணக்கெடுப்பின் முடிவுகள் சார்புத் துறைகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. 3881 குடும்பங்களிலிருந்து 4892 முதியோர்களுக்கான அலை-1 கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

3.2.2.5 வாக்காளர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த ஆய்வு (KAP)

வாக்காளர் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த அடிப்படைக் கணக்கெடுப்பு (KAP) இந்திய தேர்தல் ஆணையத்தால் முன்மொழியப்பட்டதுபோல் முறையான

2023 ஏப்ரல் 19]

வாக்காளர் கல்வி மற்றும் தேர்தலில் பங்கேற்பு திட்டம் (SVEEP) குறித்த ஆய்வு, தமிழ்நாடு சட்டமன்ற மாநிலத் தேர்தல் 2021-க்கு முன்னர் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் நடத்தப்பட்டு, 18.2.2021 அன்று தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வடிப்படைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட முறையான வாக்காளர்கள் கல்வி மற்றும் தேர்தலில் பங்கேற்பு திட்டத்தின் (SVEEP) வாயிலாக பெறப்பட்ட கருத்தின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டமன்ற மாநிலத் தேர்தல்-2021-க்குப் பிறகு, தமிழ்நாட்டில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை (DOES) மூலம் முடிவுநிலை ஆய்வு நடத்தப்பட்டது. 23.11.2022 அன்று தலைமை தேர்தல் அதிகாரியிடம் முடிவு நிலையின் வரைவு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.2.3 துறையின் புதிய முயற்சிகள்

3.2.3.1 வெளிப்படையான புள்ளிவிவரங்கள்

தமிழக அரசின் வெளிப்படையான அரசு புள்ளிவிவரங்கள் (TNOGD) திட்டத்தின் வடிவமைப்பாக (Nodal Organization) இந்திய அரசின் தேசிய புள்ளிவிவர பகிர்வு மற்றும் அணுகும் கொள்கையுடன் (NDSAP) இணைந்து பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை செயல்படுகிறது. TNOGD திட்டத்திற்காக https://tn.data.gov.in M/S ELCOT நிறுவனத்தினரால் இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. TNOGD அரசாங்க புள்ளிவிவரங்களை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதன்மூலம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. துறைகள் மற்றும் பயனாளிகள் புள்ளிவிவரங்களைப் பதிவிறக்கம் செய்து காட்சிப்படுத்த முடியும் என்பதால், ஒரே இடத்தில் இணையத்தில் புள்ளிவிவரங்களை பொதுமக்களுக்கு வெளியிட இந்த இணையதளம் பயனுள்ளதாக இருக்கும். பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் வெளியிடப்படும் புள்ளியியல் கையேடு 2009 முதல் 2019 வரை, 11 ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்களை TNOGD இணையதளத்தில் வழங்கியுள்ளது. இவற்றை பகுப்பாய்வு நோக்கங்களுக்காக பதிவிறக்கம் செய்யப்படும் வகையில் பகிரக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டப் புள்ளியியல் கையேடுகளும் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. புள்ளியியல் கையேட்டில் 42 அத்தியாயங்களுடன் 200-க்கும் மேற்பட்ட நிறுவனம்/ துறைகளிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களை உள்ளடக்கியுள்ளது.

3.2.3.2 வலைதளம்

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறைக்கான வலைதளம் M/S ELCOT நிறுவனம்மூலம் உருவாக்கப்பட்டு 2021-22 ஆம் ஆண்டு முதல் https://des.tn.gov.in வலைதள முகவரியில் செயல்பட்டு வருகிறது.

3.2.4 சமூக புள்ளியியல்

3.2.4.1 தேசிய மாதிரி ஆய்வு

தேசிய மாதிரி ஆய்வு சமூகப் பொருளாதார ஆய்வுகளில் முக்கியமானது, தேசிய புள்ளியியல் அலுவலகம், மத்திய அரசின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் அடுத்தடுத்த சுற்றுகளில் நடத்தப்பட்ட ஒரு சமூகப் பொருளாதார ஆய்வு ஆகும். முதல் கணக்கெடுப்பு 1950 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல்வேறு நிலைகள் கொண்ட ஓரடுக்கு வடிவமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு பல்வேறு பொருட்கள் குறித்து சேகரிக்கப்பட்ட மாதிரி தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை வழங்குகிறது. இந்தக் கணக்கெடுப்பில் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு முதல் 18 ஆம் சுற்றிலிருந்து கலந்து கொள்கிறது.

ஒவ்வொரு சுற்றும் வெவ்வேறு தலைப்புகள் கொண்டது. சில முக்கியமான உள்ளடக்கிய தலைப்புகள்

1. வீட்டு நுகர்வோர் செலவினங்கள்
2. வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை
3. ஒருங்கிணைக்கப்படாத விவசாயம் சாரா நிறுவனங்கள்
4. நிலம் மற்றும் கால்நடை உரிமையாளர்
5. கடன் மற்றும் முதலீடு
6. சுகாதாரம்

2023 ஏப்ரல் 19]

7. கல்வி

8. வீட்டு அமைப்பு

9. நகர்ப்புற குடிசைவாழ்வோர் விவரங்கள்

10. இடம்பெயர்வு

11. உள்நாட்டு சுற்றுலா

இதுவரை தேசிய மாதிரி ஆய்வு 78 சுற்றுகளுக்கான கணக்கெடுப்பு நிறைவு செய்யப்பட்டது. 79-வது சுற்றிற்கான கணக்கெடுப்பு விரிவான வருடாந்திர மாற்றத் தகுந்த இணக்கமான ஆய்வு (CAMS) *மற்றும் "ஆயுஷ்* (AYUSH) *பற்றிய ஆய்வு" ஆகிய தலைப்புகளை உள்ளடக்கி களப்பணி நடைபெற்று வருகிறது.*

3.2.4.2 வீட்டுவசதி புள்ளியியல்

தேசிய அளவில் வீட்டுவசதி கொள்கை மற்றும் வீட்டுவசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளில் வீட்டுவசதி மற்றும் கட்டடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்தத் தரவு பரவலாக கட்டுமானத்தின் தன்மை மற்றும் வகை, கட்டடத்தின் சுற்றுப்பரப்பு மற்றும் உட்பரப்பு, வசிப்பிடங்களின் எண்ணிக்கை, குடியிருப்பு மற்றும் மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை போன்றவற்றை கொண்டுள்ளது.

பொதுத் துறை விவரங்கள் அரசு கட்டுமான நிறுவனங்களிலிருந்தும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலிருந்தும் சேகரிக்கப்படுகின்றன. தனியார் துறை விவரங்கள் 151 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. 2020-21 ஆம் ஆண்டு வரையில் ஆண்டறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3.2.4.3 வீட்டுவசதி மற்றும் கட்டட புள்ளியியல்

இத்திட்டம் மத்திய அரசின் திட்டமாகும். புள்ளியியல் அமைப்பை வலுப்படுத்துவதன்மூலம் வீட்டுவசதி மற்றும் கட்டடக் கட்டுமானத் துறை பற்றிய தரவு சேகரிப்பின் ஒத்திசைவான மற்றும் நிலையான அமைப்பை உருவாக்குதல் மற்றும் வீட்டுவசதி மற்றும் கட்டடக் கட்டுமானம் தொடர்பான தரவுகளை தேசிய அளவில் இணையவழி வாயிலாக

[2023 ஏப்ரல் 19

தேசிய கட்டட நிறுவனம் (NBO), வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகம் (MoHUA), புதுதில்லிக்கு அனுப்புதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில், 2014-15 ஆம் ஆண்டில் தரவு சேகரிப்புக்காக 17 நகரங்கள் (2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை) இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

வீட்டுவசதி மற்றும் கட்டடக் கட்டுமானம் தொடர்பான நடவடிக்கைகள் குறித்த முதன்மைத் தரவுகள், தேசிய கட்டட அமைப்பு வழங்கிய அறிவுறுத்தல்/வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பரிந்துரைக்கப்பட்ட கால அட்டவணைகளைப் பின்பற்றி வடிவமைக்கப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி மாநிலங்களில் உள்ள பல்வேறு அமைப்புகளிலிருந்து பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் சேகரிக்கப்படுகிறது. டிசம்பர் 2022 காலாண்டு வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 நகரங்களிலிருந்து வீட்டுவசதி மற்றும் கட்டட புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு இணையவழி வாயிலாக தேசிய கட்டட நிறுவனம் (NBO) புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

3.2.4.4 கட்டடக் கட்டுமான குறியீட்டெண் (BCCI)

முக்கியமான கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் தமிழ்நாட்டில் 16 மாவட்ட மையங்களான சென்னை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், பாளையங்கோட்டை, நாகர்கோவில் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் சேகரிக்கப்பட்டு கட்டடக் கட்டுமான குறியீட்டெண் (அடிப்படை ஆண்டு: 2011-12) ஒவ்வொரு காலாண்டுக்கும் கணிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

3.2.5 தொழிற் புள்ளிவிவரங்கள்

3.2.5.1 ஆண்டுத் தொழில் ஆய்வு

ஆண்டுத் தொழில் ஆய்வு என்பது உற்பத்தி பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட/ஒழுங்குப்படுத்தப்பட்ட தொழிற் துறை புள்ளிவிவரங்களின் முக்கிய ஆதாரமாகும். ஆண்டுதோறும், ஒன்றிய அரசின் தேசிய புள்ளியியல் அலுவலகத்தால்

2023 ஏப்ரல் 19]

ஆண்டுத் தொழில் ஆய்வு கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாநிலமும் இந்த ஆய்வில் பங்கேற்கிறது. தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii) கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் கணக்கெடுப்பு நடத்துவதற்காக தேர்தெடுக்கப்படுகின்றன. ஆண்டுத் தொழில் ஆய்வில் வெளியிடப்படும் முடிவுகள் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளின் முக்கிய பண்புகளை உள்ளடக்கியதாகவும், மாநில மற்றும் மாவட்ட அளவிலான தொழில்களின், தேசிய தொழிற்துறை வகைப்பாடு (NIC) 2 மற்றும் 3 இலக்க அளவிலான வகைப்பாட்டின்கீழ் உருவாக்கப்பட்ட 27 முக்கியக் குறிகாட்டிகளுக்கான தரவை இக்கணக்கெடுப்பு வழங்குகிறது. 2019-20 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது மற்றும் 2020-21 ஆம் ஆண்டிற்கான களப்பணி முடிக்கப்பட்டு, தரவுகள் சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.2.5.2 தொழில் உற்பத்தி குறியீட்டெண்

தொழில் உற்பத்தி குறியீட்டெண் (அடிப்படை ஆண்டு 2011-12), பொருளாதாரத்தில் தொழில் துறை செயல்திறனின் பொதுவான நிலைமையினை மதிப்பிட உதவுகிறது. ஒவ்வொரு மாதமும், கனிமம், தொழில், மின்சாரம் ஆகிய மூன்று முக்கிய துறைகளிலிருந்து, 253 இனங்களுக்கு உற்பத்தி விவரங்கள் பெறப்பட்டு, உற்பத்தி குறியீட்டெண் கணிக்கப்படுகிறது.

கனிம உற்பத்தி விவரங்கள் 8 இனங்களுக்கு மாநில கனிமம் மற்றும் சுரங்கத் துறை மற்றும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திலிருந்தும் பெறப்படுகின்றன. தொழில் துறை உற்பத்தி விவரங்கள் 244 இனங்களுக்கு, நேரடியாக 1244 தொழிற்சாலைகளிடமிருந்து உரிய படிவங்களில் பெறப்படுகின்றன. மின்சார உற்பத்தி, மத்திய மின் வாரியம், புது டெல்லியிலிருந்தும் பெறப்படுகின்றது. இந்த உற்பத்தி விவரங்களைக் கொண்டு துறை வாரியான மற்றும் பயன்பாடு வாரியான குறியீட்டெண்கள் ஒவ்வொரு மாதமும் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. மாநில தொழில் உற்பத்தி குறியீட்டெண் (SIIP) மாநிலத்திற்கான குறியீட்டெண் நவம்பர் 2022 வரை வெளியிடப்பட்டுள்ளது.


3.2.6 வேளாண்மை புள்ளிவிவரங்கள் சேகரித்தல்

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, மாநில வேளாண்மை புள்ளியியல் ஆணைக்குழுவாக (State Agricultural Statistics Authority–

SASA) செயல்பட்டு வருகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மை துறையைச் சார்ந்துள்ளதால், விவசாயப் புள்ளிவிவரங்களைச் சேகரித்தல் மற்றும் பராமரித்தல் மாநில பொருளாதாரத்தினை கண்காணிக்க அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. இத்துறையில் வேளாண்மைப் புள்ளிவிவரம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப் பயன்பாடு, நீர்ப் பாசனம், நில உடைமை, பயிர்க் காப்பீடு, விவசாயகூலி, விவசாயிகளின் விளைச்சலின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுகிறது.

இத்துறையில் கீழ்க்கண்ட பல்வேறு விவசாயம் சார்ந்த புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.2.6.1 பருவமும் பயிரும் அறிக்கை (2021-22)



2023 ஏப்ரல் 19]

நிலப் பயன்பாடு, நீர்ப் பாசன ஆதாரங்கள், நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி விகிதம் மற்றும் மாவட்ட வாரியாக உணவுப் பயிர் மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பு ஆகியவற்றினை மதிப்பீடு செய்து ஒவ்வோர் ஆண்டும் வெளியீடு செய்யப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் இதர துறைகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வறிக்கையில் மழைப் புள்ளிவிவரம், வேளாண் சார்ந்த பொருட்களின் விலைவாசி நிலவரம், விவசாயக் கூலி மற்றும் விவசாயப் பொருளாதார குறியீடு ஆகிய விவரங்களும் அளிக்கப்படுகின்றன. 2020-21 ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டிற்கான அறிக்கை வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.2.6.2 பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு

ஜமாபந்தியில் பயிர்ப் பரப்பு விவரங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன்பாகவும், பயிர் அறுவடை பரிசோதனைகளின் அடிப்படையில் இறுதி உற்பத்தி விகிதம் கணக்கிடப்படும் முன்னர், 56 முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு செய்யப்பட்டு குறித்த காலங்களில் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

3.2.6.3 பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டம் (நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி)

பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும், உணவு மற்றும் உணவல்லாத 17 முதன்மைப் பயிர்களுக்கு மொத்தம் 9,500 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைகள் வேளாண் துறை அலுவலர்களால் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்களால் இப்பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் விளைச்சல் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ்

2022-23 (பசலி-1432) ஆம் ஆண்டு 9500 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.2.6.4 பழம் மற்றும் காய்கறி பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகள்

பழம் மற்றும் காய்கறி பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒவ்வொரு ஹெக்டேர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதாகும்.

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வோர் ஆண்டும் முக்கிய தோட்டக்கலை பயிர்களான மா, வாழை, பலா, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய 8 பழவகைப் பயிர்களும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோஸ் மற்றும் சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஆகிய 5 காய்கறிப் பயிர்களும் அறுவடைப் பரிசோதனைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2022-23 (பசலி-1432) ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 750 கிராமங்களில், 1500 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழங்கள் மற்றும் காய்கறிகள்	உற்பத்தி (டன்களில்)		
	2019-20	2020-21	2021-22
மா	494728	639574	481818
வாழை	3987895	3895645	3945223
பலா	50056	69007	79524
திராட்சை	33106	50009	64681
கொய்யா	41504	92609	105726
ஆரஞ்சு	4723	2492	2394
எலுமிச்சை	15658	34786	45226
அன்னாசி	32463	41439	21083
தக்காளி	575141	935194	815478
வெண்டை	175243	204166	184541

2023 ஏப்ரல் 19]

பழங்கள் மற்றும் காய்கறிகள்	உற்பத்தி (டன்களில்)		
	2019-20	*2020-21*	*2021-22*
கத்தரி	*275956*	*346053*	*278612*
முட்டைகோஸ்	*185961*	*251982*	*251525*
சர்க்கரைவள்ளிக் கிழங்கு	*14383*	*12920*	*8095*

3.2.6.5 சிறுபான்மைப் பயிர்

சிறுபான்மைப் பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒரு ஹெக்டேர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதாகும்.


சிறுபான்மைப் பயிர் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக் கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய 8 சிறுபான்மைப் பயிர்களுக்கு அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2022-23 (பசலி-1432) ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 665 கிராமங்களில், 1330 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுபான்மைப் பயிர்	உற்பத்தி (டன்களில்)		
	2019-20	*2020-21*	*2021-22*
மிளகாய்	*29618*	*25057*	*26381*
வெங்காயம்	*261835*	*356939*	*398809*
மஞ்சள்	*96254*	*97830*	*124917*
உருளைக் கிழங்கு	*84720*	*73014*	*100890*
கொத்தமல்லி	*3675*	*1627*	*2364*
மரவள்ளிக் கிழங்கு	*3065106*	*3893338*	*3055454*
முந்திரி	*25687*	*25459*	*36184*
இஞ்சி	*3038*	*5991*	*7369*

3.2.6.6 பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

"பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்"கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணக்கிடப்பட்டு வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்ற பாதிப்புகள் ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிர்களுக்கு சேதம் ஏற்படும் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையினரால் பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு மேற்பார்வையிடப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டுக்கு சிறப்புப் பருவத்தில் 4 பயிர்களுக்கு 43842 பரிசோதனைகளும் மற்றும் ராபி பருவத்தில் 32 பயிர்களுக்கு 55932 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு சராசரி விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவினால் ஒத்திசைவு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்ட பயிர் பரப்பு விவரங்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் காப்பீட்டுக் கழகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. 2023-24 ஆம் ஆண்டு வேளாண் துறையினரால் பயிர்கள் அறிவிக்கை செய்யப்பட்டு பயிர்களுக்கு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.2.6.7 தென்னை மற்றும் கமுகு பயிர் மதிப்பீட்டாய்வு



2023 ஏப்ரல் 19]

தென்னை மற்றும் கமுகு மரங்களின் எண்ணிக்கை, காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை, ஒரு தென்னை மற்றும் கமுகு மரத்தின் சராசரி உற்பத்தி விகிதம், மாநில/மாவட்ட அளவில் ஒரு ஆண்டிற்கான மொத்த உற்பத்தி ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை மற்றும் கமுகு பயிரின் ஆய்வுக் காலம் ஜூலை முதல் ஜூன் வரை ஆகும். இத்திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டு தென்னை பயிருக்கு 382 கிராமங்களிலும், கமுகு பயிருக்கு 99 கிராமங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.2.6.8 மழைப் புள்ளிவிவரம்

மழைப் புள்ளிவிவரங்கள் வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, வனத் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இந்திய வானியல் ஆய்வுத் துறை போன்ற துறைகளால் பேணப்படுகின்றன. 604 சாதாரண/தானியங்கி மழைமானி நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. இம்மழைப் புள்ளிவிவரங்கள் மாதம், பருவம் மற்றும் ஆண்டு வாரியாக தொகுக்கப்பட்டு அறிக்கையாக பேணப்பட்டு வருகின்றன.

3.2.6.9 நீர்ப் பாசனம் மற்றும் நீர்த்தேக்கத் தரவுகள்

நீர்ப் பாசன தரவுகள் மூன்று தலைப்புகளின்கீழ் சேகரிக்கப்படுகின்றன. அவை, ஆதார வாரியாக நீர்ப் பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர் வாரியாக நீர்ப் பாய்ச்சப்பட்ட பரப்பு மற்றும் நீர்த்தேக்கங்கள் மூலமாக பாசனத்திற்குப் பயன்படும் பரப்பு போன்றவையாகும். இத்தரவுகள் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பொதுப் பணித் துறை ஆகிய துறைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் நீர்ப் பாசனச் சிற்றேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

3.2.6.10 விவசாயக் கூலி

விவசாயக்கூலி விவரங்கள் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தலா ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அக்கிராமங்களில் விவசாயத் தொழில்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் கூலி விவரங்கள் களப் பணியாளர்களால் நேரடியாகச் சென்று சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் கணிக்கப்பட்டு

அறிக்கைகளாக ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. 2023-24 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.2.6.11 விற்பனை மிகுதித் திட்டம்

விற்பனை மிகுதித் திட்டத்தின் நோக்கம் மூன்று பருவங்களின் (குறுவை, சம்பா மற்றும் கோடை) இறுதியில், நெல் உற்பத்திக்காக வழங்கப்பட்ட கூலிக்கான நெல், விதைக்க மற்றும் சொந்த நுகர்வுக்கான நெல் போன்றவைகள் தவிர்த்து, உற்பத்தியில் விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல்லின் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றது. இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.2.7 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள்

3.2.7.1 பயிர் பரப்பு விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் (TRS)

ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டம் ஒவ்வோர் ஆண்டும் எதேச்சை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கிராமங்களில் நிலப் பயன்பாட்டு புள்ளிவிவரங்கள் பயிர் வாரியாக நீர்ப் பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர் பரப்பில், உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் பயிர் விவரங்கள், ஒன்பது முக்கிய பயிர்களுக்கு காரிப், ராபி மற்றும் கோடை ஆகிய மூன்று பருவங்களுக்கு சேகரிக்கப்படுகின்றன. கிராமப் பதிவேடுகள் சரிவர பேணப்பட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வருவாய்த் துறைமூலம் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டு 3,480 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பயிர் பரப்பு விவரங்கள் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு, மாநில அளவிலான விவரங்களுடன் தொகுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன. 2023-24 ஆம் ஆண்டு இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மாநிலத்தில் செயல்படுத்தப்படும்.

3.2.7.2 பயிர் மேம்பாட்டுத் திட்டம் (ICS)

பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் மாநில அளவில் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் மாதிரி சோதனையாக கிராம நிர்வாக அலுவலர்களால் பேணப்படும் பதிவேடுகளில் பயிர் பரப்பு மற்றும்

2023 ஏப்ரல் 19]

அடங்கலில் கிராமத்திற்கான பக்கவாரியான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என ஆராயவும், முக்கிய உணவுப் பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் ஆகும்.

இத்திட்டத்தின் நோக்கமானது, முதன்மை களப் பணியாளர்களாகிய கிராம நிர்வாக அலுவலர்களால் மாநில அளவில் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளிவிவரங்களின் முறையில் காணப்படும் குறைபாடுகளை, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு அலுவலர்களால் மேற்பார்வைமூலம் கண்டறிந்து அவற்றைக் களைய தக்க வழிவகைகளை இத்திட்டத்தின் மேம்பாட்டிற்காக பரிந்துரை செய்வதாகும்.

இத்திட்டத்தின் முடிவுகள், ஒன்றிய அரசின் தேசிய புள்ளியியல் அலுவலகம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடுகள் ஆகிய முதன்மைத் தரவுகளின் தரத்தை மேம்படுத்த பயன்படுகின்றது. 2023-24 ஆம் ஆண்டு இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் மாநிலத்தில் செயல்படுத்தப்படும்.

3.2.7.3 வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு 1970-1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மைக் கணக்கெடுப்பின் முக்கியக் காரணிகளான வேளாண் கைப்பற்றுகளின் வகைகள் (தனி, கூட்டு மற்றும் நிறுவனம்) குத்தகைத் தன்மை, நிலக்கைப்பற்றுதாரர்களின் சமூக நிலை, நிலப் பயன்பாடு, நீர்ப் பாசனத் தன்மை, பயிரிடும் வகை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடு போன்ற முக்கியத் தகவல்களை அளிக்கின்றன.

இதுவரை, பத்து வேளாண்மைக் கணக்கெடுப்புகள் முடிவடைந்த நிலையில், 2021-22 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு பதினொன்றாவது கணக்கெடுப்பின் முதற்கட்ட களப்பணி ஜூலை 2022-ல் தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்ட களப் பணி மார்ச்-2023-ல் முடிவடையும்.

[2023 ஏப்ரல் 19

3.2.8 மாநில வருவாய் மதிப்பீடு

மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை அளவிடுவதற்கான காரணியாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பிற தொடர்புடைய பொருளாதார பெருமொத்தக் காரணிகள், மாநிலத்தின் பொருளாதார நிலையை கணிக்க உதவும் ஒரு கருவியாக விளங்குகின்றன. மேலும், அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களைக் கணிக்கவும் அரசு நிதிநிலை தேவைகளைக் கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

3.2.8.1 மாநில வருவாய்

மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின்கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011-12 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு 2019-20 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2020-21 ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், 2021-22 ஆம் ஆண்டிற்கு முன்மதிப்பீடும் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கு தற்காலிக முன்மதிப்பீடு ஆகிய மதிப்பீடுகள் நடப்பு மற்றும் நிலையான (2011-12) விலையில் கணிக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு
(அடிப்படை ஆண்டு 2011-12)

(ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு				நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு			
		நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நிலையான (2011-12) விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நிலையான (2011-12) விலையில்	வளர்ச்சி விகிதம் (%)
1	2011-12	751486	-	751486	-	674478	-	674478	-

வ. எண்	ஆண்டு	மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு				நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு			
		நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நிலையான (2011-12) விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நிலையான (2011-12) விலையில்	வளர்ச்சி விகிதம் (%)
2	2012-13	854825	13.75	791824	5.37	768295	13.91	709343	5.17
3	2013-14	968530	13.3	851976	7.6	858870	11.79	750416	5.79
4	2014-15	1072678	10.75	893915	4.92	957350	11.47	791915	5.53
5	2015-16	1176500	9.68	967562	8.24	1057084	10.42	862437	8.91
6	2016-17	1302639	10.72	1036762	7.15	1171973	10.87	922084	6.92
7	2017-18	1465051	12.47	1125793	8.59	1317984	12.46	1000308	8.48
8	2018-19	1630209	11.27	1204667	7.01	1468449	11.42	1071602	7.13
9	2019-20 (தி.ம)	1743144	6.93	1243836	3.25	1564831	6.56	1099402	2.59
10	2020-21 (து.ம.)	1808239	3.73	1245595	0.14	1617931	3.39	1094471	-0.45
11	2021-22 (மு.ம.)	2065436	14.22	1345108	7.99	1845519	14.07	1181923	7.99
12	2022-23 (த.மு.ம.)	2349143	13.74	1453125	8.03	2097892	13.67	1277855	8.12

தி.ம. - திருத்திய மதிப்பீடு; து.ம - துரித மதிப்பீடு; மு.ம.- முன் மதிப்பீடு

த.மு.ம.: தற்காலிக முன் மதிப்பீடு

[2023 ஏப்ரல் 19

தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி NSDP)

(ரூபாயில்)

வ. எண்	ஆண்டு	நடப்பு விலையில்	நிலையான (2011-12) விலையில்
1	2011-12	93112	93112
2	2012-13	105340	97257
3	2013-14	116960	102191
4	2014-15	129494	107117
5	2015-16	142028	115875
6	2016-17	156595	123206
7	2017-18	175276	133029
8	2018-19	194373	141844
9	2019-20 (தி.ம.)	206165	144845
10	2020-21 (து.ம)	212174	143528
11	2021-22 (மு.ம.)	241131	154427
12	2022-23 (த.மு.ம.)	273288	166463

தி.ம.- திருத்திய மதிப்பீடு; து.ம. - துரித மதிப்பீடு; மு.ம.- முன் மதிப்பீடு; த.மு.ம.: தற்காலிக முன் மதிப்பீடு

மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் 2011-12 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2011-12-லிருந்து 2019-20 (தற்காலிகம்) வரை, நடப்பு மற்றும் நிலையான விலையில் மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது,

3.2.8.2 மாநில கணக்கு

மாநில கணக்குப் பிரிவில் மத்திய புள்ளியியல் அலுவலக வழிகாட்டுதலின்படி பொருளாதார மற்றும் செயல் நோக்கம் அடிப்படையில் (Economic cum purpose Classification) *தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு*

2023 ஏப்ரல் 19]

செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் வரவு-செலவு குறித்த நிதிநிலை அறிக்கைகள் 2020-21 (கணக்கு), 2021-22 (திருத்த மதிப்பீடு), 2022-23 (திட்ட மதிப்பீடு) தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், மாநில வருவாய் மதிப்பீட்டைக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள் பொருளாதார மற்றும் செயல் நோக்கம் அடிப்படையில் பகுப்பாய்வு பணி நிறைவு செய்யப்பட்டு 2020-21 ஆம் ஆண்டிற்கு உரிய அட்டவணைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், 2021-22 ஆம் ஆண்டிற்கு பகுப்பாய்வு பணி நடைபெற்று வருகிறது.

3.2.8.3 மூலதன ஆக்கம்

தமிழ்நாட்டின், மாநில/ஒன்றிய அரசு துறை சாரா வணிக நிறுவனங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் (பொதுத் துறை மற்றும் கல்வி நிறுவனங்கள்) ஆகியவற்றின் கணக்குகள் 2020-21 ஆம் ஆண்டிற்கு பகுப்பாய்வுப் பணி நிறைவு செய்யப்பட்டு, உரிய அட்டவணைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், 2021-22 ஆம் ஆண்டிற்கு பகுப்பாய்வு பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டிற்கான பொதுத் துறையின் மொத்த நிலையான மூலதன ஆக்க (GFCF) மதிப்பீடுகள் புதிய அடிப்படை ஆண்டை (2011-12), கொண்டு 2011-12 முதல் 2019-20 ஆண்டுகள் வரை கணிக்கப்பட்டு வருகின்றன.

3.2.9 விலைவாசி மற்றும் விலைக் குறியீட்டெண்கள்

3.2.9.1 அங்காடி புலனாய்வு மற்றும் விலைப் புள்ளிவிவரம்:

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள்மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண் சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. மாதாந்திர விலை விவர அறிக்கைகள் வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தேங்காய் மேம்பாட்டு வாரியம், இந்திய உணவுக் கழகம் ஆகிய துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும், சிறைத் துறை,

அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் பிற துறைகளிலிருந்து விலை விவரங்கள் கோரப்படும்போது அவ்விவரங்கள் அளிக்கப்படுகின்றன.

3.2.9.2 மொத்த விலைக் குறியீட்டெண்

தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் 2011-12-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் கணித்து வெளியிடப்படுகிறது. சில்லறை விலை விவரங்களில் ஏற்படும் மாற்றங்களை முன்கூட்டியே கணிப்பதற்கு மொத்த விலைக் குறியீட்டெண் பயன்படுகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மை தொழில் சாராத பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் 83 மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது.

3.2.9.3 தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, சேலம், மதுரை, குன்னூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய 7 மத்திய மையங்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் செயலகத்தால் 2016 = 100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. அதற்கான விலை விவரங்கள் அந்தந்த மையங்களிலிருந்து 14 அங்காடிகளில் விலை சேகரித்து நேரடியாக சிம்லாவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கடலூர், நாகர்கோவில், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 4 மாநில மையங்களுக்கு 2011=100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகின்றன. இந்த விலைக் குறியீட்டெண்ணைக் கொண்டு அகவிலைப்படி, தினக்கூலி மற்றும் குறைந்தபட்ச கூலி ஆகியவை கணக்கிடப்படுகின்றன.

3.2.9.4 மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் (கிராமப்புறம், நகர்ப்புறம், இணைந்தது)

தமிழ்நாட்டில் மாவட்டங்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண் (கிராமப்புறம், நகர்புறம், இணைந்தது) அக்டோபர் 2022 முதல் மாதந்தோறும் 2019-2020=100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. தமிழ்நாடு

2023 ஏப்ரல் 19]

முழுவதும் உள்ள 153 கிராமப்புற அங்காடிகள் மற்றும் 190 நகர்ப்புற அங்காடிகளிலிருந்து விலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது. திட்டங்களைப் பரவலாக்குவதற்கும் மாவட்ட அளவிலான விலை நிலவரப் போக்கினை அறிந்து கொள்வதற்கும் (கிராமப்புறம் நகர்புறம் இணைந்தது) நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் பயன்படுகின்றன.

3.2.10 ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பானது மாநிலத்தின் புவியியல் எல்லைக்குள் அமைந்திருக்கும் அனைத்து நிறுவனங்களின் (பயிர் உற்பத்தி, மலைத் தோட்டப்பயிர், பொது நிர்வாகம், இராணுவம், கட்டாய சமூகப் பாதுகாப்பு ஆகியவை தவிர) எண்ணிக்கையினை வழங்குகிறது, இது நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட சட்டகத்தை உருவாக்கும் நோக்கில் நடத்தப்படுகிறது. பொருளாதார செயல்பாடு, உரிமையாளர் வகை, முக்கிய நிதி ஆதாரம், வேலைவாய்ப்பு, பதிவு விவரங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களின் பண்புகள் பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படுகின்றன. இது குறிப்பாக அமைப்புச் சாரா துறையில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை, தொழில் முனைவோர் குறித்த அடிப்படை விவரம் மற்றும் பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளின் வேலைவாய்ப்பு நிலை போன்ற தரவுகளை வழங்குகிறது. பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள், மாநில மற்றும் மாவட்ட அளவில் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மிகவும் பயன்படுகின்றன.

பொருளாதாரக் கணக்கெடுப்பானது இந்திய அரசின் திட்டமாகும், இந்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இதுவரை ஆறு பொருளாதாரக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இந்திய அரசினால் இதுவரை நடத்தப்பட்டுள்ள அனைத்து பொருளாதாரக் கணக்கெடுப்புகளிலும் தமிழ்நாடு பங்கு பெற்றுள்ளது. தற்போது நடைபெறுவது ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

- *இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்தினால் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.* Common Service

Centre (CSC) e-Governance Services India Limited, a Special Purpose Vehicle (CSC-SPV) என்ற நிறுவனம் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பைச் செயல்படுத்தும் நிறுவனமாகும். இதில் தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைக்கும் துறையாக பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை உள்ளது.

- கணக்கெடுப்புப் பணி மற்றும் முதல் நிலை மேற்பார்வை பணி (100% மேற்பார்வை) Common Service Centre, e-Governance Services India Limited நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் 10%, இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்பட்டது. இரண்டாம் நிலை மேற்பார்வை பணியில் தேசிய மாதிரி ஆய்வு அலுவலக அலுவலர்கள் மற்றும் மாநில பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மற்றும் தொழில் மற்றும் வர்த்தகத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.
- ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பின், நிகழ் நேர தரவு சரிபார்ப்புப் (real-time data validation) பணிகள் அதிநவீன தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணி தமிழ்நாட்டில் சுமூகமாக நடைபெற, மாநில ஒருங்கிணைப்புக் குழு (SLCC), மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு (DLCC) – (சென்னை நீங்கலாக) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்புக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி 2019 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, களப்பணி நிறைவடைந்து தற்காலிக முடிவு விவரங்களை சரிபார்க்கும் பணி, இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 19]

3.2.11 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

3.2.11.1 குறிகாட்டிகளின் வரையறை

நீடித்த வளர்ச்சி இலக்குகள் அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான ஆதார செயல் திட்டமாகும். இந்நீடித்த வளர்ச்சி இலக்குகள் மக்கள் சந்திக்கும் வறுமை, சமத்துவமின்மை, காலநிலை, சுற்றுச்சூழல் சீரழிவு, செழிப்பு, அமைதி மற்றும் நீதி ஆகியவை தொடர்பான உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள உதவுகின்றன.

நீடித்த வளர்ச்சி இலக்குகளைக் கண்காணிப்பதற்கு குறிகாட்டிகள் முதுகெலும்பாகத் திகழ்கின்றன.

மாநில குறிகாட்டி வரையறை 314 குறிகாட்டிகளையும், மாவட்டக் குறிகாட்டி வரையறை 104 குறிகாட்டிகளையும் மற்றும் வட்டாரக் குறிகாட்டி வரையறை 93 குறிகாட்டிகளையும் கொண்டுள்ளது.

இம்மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதலின் ஒரு பகுதியாக, 60 நகர்ப்புற மற்றும் 32 மீள்குடியேற்றப் பகுதிகள் மேம்பாட்டிற்கான குறிகாட்டிகளின் வரையறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

3.2.11.2 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கண்காணிப்புப் பலகை (SDG Dashboard)

சம்பந்தப்பட்ட தொடர்புத் துறைகள் (Line Department) தங்களுடைய குறிகாட்டிகளின் புள்ளிவிவரங்களை இணையவழிமூலம் கண்காணிப்புப் பலகையில் உள்ளீடு செய்ய ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)யால் உருவாக்கப்பட்ட கண்காணிப்புப் பலகையானது இத்துறையின் மையக் குழு பங்களிப்புடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஜனவரி 2021 முதல் பயன்பாட்டில் உள்ளது. மாவட்டக் குறிகாட்டிகள் மற்றும் வட்டார குறிகாட்டிகளின் புள்ளிவிவரங்களை நிகழ்நிலைப் பதிவேற்றம் (Online Uploading) செய்வதற்கு மறுசீரமைப்பு செய்யப்பட்ட கண்காணிப்புப் பலகையில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பலகையில் இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகளின் செயல்திறனைக் காட்சிப்படுத்துவதற்கான கருவிகள் (Visualization Tools) உள்ளன.

3.2.11.3 திறன் மேம்பாடு

கண்காணிப்புப் பலகையில் குறிகாட்டிகளின் புள்ளிவிவரங்களை உள்ளீடு செய்வதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகள் தொடர்பு அலுவலர்கள், தொடர்புத் துறைகளின் தகவல் அமைப்பு மேலாண்மை அலுவலர்கள் (ம) இத்துறையின் மாவட்ட அலுவலர்களுக்கு நடத்தப்பட்டன.

3.2.11.4 கண்காணித்தல்

இத்துறை ஆண்டுதோறும் நிதி ஆயோக் வெளியிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இந்திய குறியீட்டு அறிக்கையைப் பயன்படுத்தி பல்வேறு இலக்குகளின் செயல்திறனைப் பகுப்பாய்வு செய்வதோடு மட்டுமின்றி அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகளைக் கண்டறிந்து தொடர்புடைய துறைகளுக்கு அவற்றினைத் தெரிவித்து மாநிலத்தின் முன்னேத்திற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ், தொடர்புத் துறைகளுடன் ஒருங்கிணைந்து தரவுகள் சேகரிக்கும் பணியில் இத்துறையின் பங்களிப்பு முதன்மையானது.

தமிழ்நாட்டின் 2021 ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தரவுத் தாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.3.2023 அன்று வெளியிடப்பட்டது. இந்த தரவு தாள் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் உள்ள பல்வேறு குறிகாட்டிகளின்கீழ் இம்மாநிலத்தின் வளர்ச்சியை முன்வைக்கிறது.

குறிக்கோள்களை அடைவதில் உரிய தொடர்பு துறைகள் வகுத்துள்ள செயல்பாடுகளை உள்ளடக்கிய பற்பரிமாண வறுமைக் குறியீட்டெண் (Multidimentional Poverty Index) குறியீடுகளைக் கொண்டு மாநில சீர்திருத்த செயல் திட்டத்தினை (State Reform Action Plan) இத்துறை தயாரித்துள்ளது. இந்திய அரசின் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைகள் தீர்க்கும் துறையின் நல்லாட்சிக் குறியீடு-2021-ன் அடிப்படையில் தமிழ்நாட்டின் 2021 ஆம் ஆண்டிற்கான மாவட்ட நல்லாட்சி குறியீடு வடிவமைக்கும் பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

2023 ஏப்ரல் 19]

3.2.12 வெளியீடுகள்

இத்துறையிலிருந்து மாநில, மாவட்ட, வட்டார அளவில் ஏறத்தாழ 500 அறிக்கைகள் பருவ வாரியாக வெளியாகின்றன. மேலும், பருவமும், பயிரும் அறிக்கை, மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள், பொருளாதார மற்றும் செயல்நோக்கம் அடிப்படையிலான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கைகளை வெளியிடுகின்றன.

மேலும், "தமிழ்நாடு புள்ளியியல் கையேடு", "தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம்", "மாவட்ட புள்ளியியல் கையேடு", "வட்டார புள்ளியியல் கையேடு" ஆகிய முக்கிய வெளியீடுகள் ஆண்டு தோறும் வெளியிடப்படுகின்றன.

"தமிழ்நாடு புள்ளியியல் கையேடு 2020-21", "மாவட்ட புள்ளியியல் கையேடு 2021-22", "வட்டார புள்ளியியல் கையேடு 2021-22" மற்றும் "தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம் 2021-22" ஆகியவை வெளியிடப்பட்டன.

3.2.13 சிறுபாசன புள்ளிவிவர பகுத்தாய்வு (RMIS)

சிறுபாசன புள்ளிவிவர பகுத்தாய்வுத் திட்டமானது நூறு சதவிகித மத்திய அரசு நிதியுதவியுடன், ஜலசக்தி அமைச்சகத்தின் நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்புத் துறையின்கீழ் சிறுபாசனத் திட்டங்கள் குறித்த விரிவான புள்ளிவிவரத் தொகுப்பினை உருவாக்கும்பொருட்டு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய நோக்கமானது, சிறுபாசனக் கணக்கெடுப்பினை நடத்தி, அதன்மூலம் தெளிவான தரவுகளைத் தொகுத்து அளிப்பதோடு, நிலத்தடி நீர் குறித்து ஆய்வு செய்தும், அவை கிடைக்கப் பெறும் தன்மையை மதிப்பீடு செய்தும், நீர்வள மேம்பாடு குறித்தத் திட்டமிடுதலுக்கு உதவியாக இருப்பதாகும்.

3.2.13.1 ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (2017-18) மற்றும் முதலாம் நீர் நிலை கணக்கெடுப்பு

1986-87 ஆம் ஆண்டினை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு இதுவரை ஐந்து சிறுபாசனக் கணக்கெடுப்புகள்

நடத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக 2017-18 ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்புப் பணி நடைப்பெற்றது.

ஒன்றிய அரசு, சிறுபாசனக் கணக்கெடுப்பின் நோக்கத்தினை மேலும், விரிவுபடுத்தி நீர் நிலைகள் குறித்த கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தத் தீர்மானித்தது. இதன் நோக்கமானது, நீர் நிலைகள் குறித்த முக்கிய விவரங்களாகிய, நீர் நிலைகளின் எண்ணிக்கை, அளவு, அவற்றின் நிலை, வகை, பயன்பாடு, நீரைத் தேக்கி வைக்கும் திறன் போன்ற விவரங்களைச் சேகரிப்பதே ஆகும். இந்தக் கணக்கெடுப்பில், அனைத்து நீர் நிலைகளும், அவை எவ்வித உபயோகமாக இருந்தாலும் கணக்கெடுக்கப்படுகின்றன. இத்தகைய தெளிவான, விரிவான புள்ளியியல் தரவுகள், நீர் நிலைகள் குறித்த திட்டமிடலுக்கும், கொள்கை வகுத்தலுக்கும் பயனுள்ளதாக இருக்கும். நீர் நிலைகளின் புகைப்படங்கள் மற்றும் அட்ச ரேகை தீர்க்க ரேகை, விவரங்கள் பிரத்யேக கைபேசிச் செயலிமூலம் எடுக்கப்பட்டு அவை மத்திய அரசின் வலைசேவையகத்தில் (Web Server) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு 2017-18-ல், முதன் முதலாக நீர்நிலைக் கணக்கெடுப்பும் நடத்தப்பட்டு தற்போது அட்டவணை இறுதியாக்குதல் மற்றும் இறுதி அறிக்கை தயாரித்தல் எனும் முடிவுறும் தருவாயில் உள்ளது. அரசாணை (2ப) எண் 143, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [LA-I(2)] துறை, நாள் 4.4.2022-ன்படி இப்பிரிவானது, நில நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து ஏப்ரல் 2022 முதல் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

3.2.14 தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிலையம், 2012 ஆம் ஆண்டில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் செயல்திறனை மேம்படுத்தவும், புள்ளியியல் அறிவை வளப்படுத்துவதற்கு புள்ளியியல் பயிற்சி வழங்குவதற்காக நிறுவப்பட்டது. இந்த நிலையம் 1.5.2012 முதல் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை வளாகத்தில் இயக்குநர் மற்றும் துணை பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 19]

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் பல்வேறு பணியாளர்களுக்கான பயிற்சி தேவைகளை மதிப்பிடுவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் பணிபுரியும் பல்வேறு புள்ளியியல் பணியாளர்களுக்கு 30 பயிற்சித் திட்டங்களைக் குழு பரிந்துரைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிலையத்தில் உள்ள உள்கட்டமைப்புகளின் அடிப்படையில், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் மொத்த பயிற்சித் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மதிப்பீட்டின்படி, புதிதாக பணியமர்த்தப்பட்ட புள்ளியியல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் புள்ளியியல் உதவி இயக்குநர்களுக்கான அறிமுக பயிற்சித் திட்டங்களைத் தவிர 145 அணிகளில் 5,029 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட விரிவான பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:

- பொருளியல், புள்ளியியல் மற்றும் மக்கள் தொகையியல் ஆய்வு பற்றிய அடிப்படைக் கருத்துகள் மற்றும் மேம்பட்ட புள்ளியியல் முறைகள்.
- துறை சார் திட்டங்கள்
- தகவல் தொழில்நுட்ப வழிமுறைகள்.
- நிர்வாகம் மற்றும் நிதி தொடர்பான அலுவலக நடைமுறைகள்.
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் தரவு பகுப்பாய்வு குறித்த சிறப்புப் பயிற்சி
- பெண்களுக்கு அதிகாரமளித்தல், தகவல் அறியும் உரிமைச் சட்டம் போன்ற பொதுவான தலைப்புகள்.

2022-23 ஆம் ஆண்டில், 746 அலுவலர்களுக்கு, 21 அணிகளில், 18 பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில், 1291 பயிற்சியாளர்களுக்கு, 35 அணிகளில், 10 பயிற்சி திட்டங்கள், பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மாநில

அரசு செயல்படுத்தி வருகிறது. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 1974 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கி அதன் பணியாக, மக்களின் கருத்து மற்றும் தரவு அடிப்படையிலும் திட்டத்தைச் செயல்படுத்தும் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்தும் திட்டங்களின் விளைவுகள் மற்றும் தாக்கம் குறித்து மதிப்பீடு செய்து அரசுக்கு தெரிவித்து வருகிறது. மதிப்பீட்டு அறிக்கைகள், அரசு கொள்கை முடிவு எடுத்தல், கொள்கை உருவாக்கம் மற்றும் திட்ட மேம்பாட்டிற்கான திருத்தம் மேற்கொள்ள உதவுகிறது. இத்துறை சமூக நலன், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, நீர்ப் பாசனம், தோட்டக்கலை, வனம், வீட்டு வசதி, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் போன்ற பல்வேறு துறைகளில் இதுவரை 797 மதிப்பீட்டாய்வு அறிக்கைகள் முடிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

3.3.1 துறையின் முக்கியப் பணிகள்

i) ஒன்றிய, மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

ii) 'தமிழ்நாடு-பொருளாதார ஆய்வறிக்கை' வருடாந்திர ஆவணத்தைத் தயாரித்து வெளியிடுதல்.

3.3.2 துறையின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையானது மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் நிர்வாகத் தலைமையாகவும் மற்றும் துறையின் செயல்பாட்டை நிர்வகிப்பது, வழிநடத்துவது, ஊக்குவிப்பது மற்றும் மேம்படுத்துவது போன்ற பணிகளைச் செய்கின்றது. இத்துறையின் செயல்பாடுகள் மாநில மதிப்பீட்டுக் குழு (SEC) மற்றும் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB) போன்ற மாநில அளவிலான அமைப்புகள்மூலம் மேற்பார்வையிடப்படுகின்றன.

3.3.2.1 மாநில மதிப்பீட்டுக் குழு (SEC)

அரசு கூடுதல் தலைமை செயலாளர், நிதித் துறை, மாநில மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக செயல்படுகிறார். இக்குழு ஆய்வுக்கான மதிப்பீட்டு ஆய்வுகளின் பட்டியலை தெரிவு செய்கின்றது.

2023 ஏப்ரல் 19]

3.3.2.2 மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB)

மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவானது (SEAB) மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது. இக்குழுவில் பல்வேறு கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாநில மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டு இத்துறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு ஆய்வுகளின் செயல்முறையியல்கள் மற்றும் ஆய்வின் நோக்கங்கள் மற்றும் மாதிரி வரைவு குறித்து கலந்தாலோசித்து விவாதித்து முடிவு செய்கிறது. மேலும், இறுதி முடிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாய்வின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை விவாதித்து இறுதி செய்கிறது. இக்குழு, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையினால் கூட்டத்தின் முன் வைக்கப்படும் செயல்முறையியல்கள் மற்றும் ஆய்வு அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கிறது. 2022 ஆம் ஆண்டில் இக்குழு ஏழு மதிப்பீட்டு ஆய்வறிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

3.3.3 செயல்திறன்

தற்பொழுது, 28 மதிப்பீட்டு ஆய்வுகள் ஆய்விற்காக உள்ளன. அவற்றில் 5 மதிப்பீட்டு ஆய்வுகள் வரைவு அறிக்கை நிலையிலும், 2 ஆய்வுகள் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு மற்றும் அட்டவணைப்படுத்தும் செயல்பாட்டிலும், 3 ஆய்வுகள் களப் பணி நிலையிலும், 1 ஆய்வு வினாத்தாள் தயாரிப்பு மற்றும் இறுதி செய்யும் பணியிலும் உள்ளன. 3 ஆய்வுகள் வெளிநிறுவனங்கள்மூலம் மதிப்பீட்டு ஆய்வு செய்யப்படுகிறது. 4 ஆய்வுக்கான செயல்முறையியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 3 ஆய்வுகள் மாநில மதிப்பீட்டுக் குழுவில் வைத்து கைவிட முன்மொழியப்பட உள்ளன மற்றும் 7 ஆய்வுகளுக்கான அடிப்படை விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

3.3.4 மதிப்பீட்டு ஆய்வு முறை

மாநில மதிப்பீட்டுக் குழு இத்துறையிடம் மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும் பணியினை ஒப்படைத்துள்ளது. இப்பணியில் அடிப்படை விவரங்கள் மற்றும் ஆய்வுக்கான தேவை ஆகியவை திட்டத்தை செயல்படுத்தும் துறையிலிருந்து சேகரிக்கப்பட்டு மாதிரி வடிவமைப்புடன் கூடிய செயல்முறையியல்கள் வடிவமைக்கப்படுகின்றன. மாநில

[2023 ஏப்ரல் 19

மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் இச்செயல்முறையியல்கள் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டு, ஒப்புதல் பெற்ற பின்பு ஆய்வின் நோக்கங்களின் அடிப்படையில் கேள்வித்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. கேள்வித்தாள் மென்பொருள் பயன்பாட்டில் பதிவேற்றப்பட்டு, ஓட்டம் மற்றும் சரியான தன்மையை சரிபார்க்க மாதிரி களப் பணியின்போது கேள்வித்தாள் சோதனை செய்யப்படுகிறது. மேலும், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளைச் சேகரிக்க தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் களப் பணிகள் நடத்தப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்டு வரைவு அறிக்கைத் தயாரிக்கப்பட்டு, கருத்துகேட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகிறது. இறுதி செய்யப்பட்ட ஆய்வு வரைவு ஆய்வறிக்கை ஒப்புதலுக்காக மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் வைக்கப்படுகிறது.

3.3.5 மின்னணு மதிப்பீட்டு ஆய்வு முறை

மின்னணு மதிப்பீட்டு ஆய்வு முறையின் ஒரு செயல்பாடாக இத்துறைக்கான வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தரமான தரவு சேகரிப்பு மற்றும் தரவு சேகரிப்பு செயல்திறனை மேம்படுத்த, வினாத்தாள் வடிவமைக்க மற்றும் வரைப்பட்டிகைகளில் வினாக்களை பதிவேற்ற மென்பொருள் பயன்பாட்டில் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்துறைமூலம் 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை களப் பணியில் அனைத்து முதல்நிலை விவரங்களும் வரைப்பட்டிகைகளைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு 22 மதிப்பீட்டு ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன.

3.3.6 மதிப்பீடு ஆய்வுக்கான வழிகாட்டி முறை

கொள்கை முடிவெடுப்பதில் மதிப்பீட்டின் பங்கை வலுப்படுத்தவும், செயல்பாட்டில் உள்ள திட்டங்களை ஆய்வு செய்யவும் மற்றும் திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் அல்லது நீக்கம் செய்யவும், பல்வேறு அரசு துறைகளால் மதிப்பீட்டு ஆய்வுகளை வடிவமைக்கவும், புரிந்துகொள்ளவும் மற்றும் செயல்படுத்துவதற்கான பொதுவான மதிப்பீட்டாய்வு வழிகாட்டுதல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

26.7.2021 அன்று நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில், ஆண்டுக்கு ரூ.150.00

2023 ஏப்ரல் 19]

கோடிக்குமேல் நிதியுதவி பெற்றுள்ள அனைத்து அரசு நிதியுதவி திட்டங்களுக்கான தாக்க மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ள இந்தத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், மதிப்பீட்டு வழிகாட்டுதலின்படி எந்தவிதமான தாமதமும் இன்றி மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு திட்ட நிதியில் 2 சதவிகித கட்டாயக் கட்டணத்தைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், 14.12.2021 அன்று நடைபெற்ற அரசு தலைமைச் செயலாளரின் ஆய்வுக் கூட்டத்தில், ரூ.150 கோடிக்குமேல் செலவாகும் திட்டங்களுக்காக மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ள வெளி மதிப்பீட்டாய்வு நிறுவனங்களை அமர்த்திக் கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன்படி ரூபாய் 150 கோடி மற்றும் அதற்குமேல் செலவாகும் மாநிலத் திட்டங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு செலவு மதிப்பீட்டுத் தொகை மற்றும் காலக்கெடு பிற துறைகளிலிருந்து பெறப்பட்டு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

3.3.7 வெளி நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள்

வெளிநிறுவன மதிப்பீட்டாய்வு மேற்கொள்வதற்கான வெளி நிறுவனங்களின் பட்டியலில் உள்ள மதிப்பீட்டு ஆய்வு நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் பணி நிறைவடைந்துள்ளது. மூன்று ஆய்வுகளின் கோரிக்கைக்கான வேண்டுகோள் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பரிசீலனைக்குப்பின் ஆய்வு மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

3.4 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வந்த மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP) *மத்திய அரசின் உதவியிலிருந்து விலக்கப்பட்டதன் விளைவாக, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்* (SADP) *தமிழ்நாட்டில் 2015-16 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, ரூ.75.00 கோடி ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்றுவரை செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் பணிகள் கீழ்க்கண்ட 11 மாவட்டங்களில் அரசின் ஒப்புதலின் அடிப்படையில், திட்ட இயக்குநர், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், உதகமண்டலம் அவர்களின் மேற்பார்வையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. நீலகிரி

2. கோயம்புத்தூர்

3. திருப்பூர்

4. ஈரோடு

5. திண்டுக்கல்

6. கன்னியாகுமரி

7. மதுரை

8. தேனி

9. திருநெல்வேலி

10. விருதுநகர்

11. தென்காசி

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் கடல் மட்டத்திலிருந்து 600 மீட்டருக்கு மேல் உள்ள மலைப் பகுதிகளில் மட்டுமே சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் வரையறுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, மண், ஈரப்பதம் மற்றும் காடுகளைப் பாதுகாத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த பணிகள்/திட்டங்களைச் செயல்படுத்துவதே ஆகும். மேலும், இத்திட்டத்தின் நோக்கமானது, சுற்றுச்சூழல் பூர்வீக தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பதற்கும், நுண் நீர்ப்பிடிப்புப் பகுதி அளவில் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் சிறப்பு முக்கியத்துவம் அளித்து, மனித வாழ்வாதார மேம்பாட்டுடன் நீர் மற்றும் நில மேம்பாட்டு நடவடிக்கைகளின் பிணைப்பை ஏற்படுத்துவதாகும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் மட்டுமின்றி, தோட்டக்கலை, பழங்குடியினர் நலன், கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்புகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையில் பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகம், மீன்வளர்ப்பு மேம்பாடு ஆகியவற்றுடன்

2023 ஏப்ரல் 19]

தொடர்புடைய பணிகளுக்கும் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் போதுமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நிர்வாகத் துறைகளால் பரிந்துரைக்கப்பட்டு, இறுதியாக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையிலான திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவால் (PSMC) *அங்கீகரிக்கப்படுகின்றன.*

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை விரைவாகக் கண்காணிக்கும் பொருட்டு இணையதளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.75.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2841 திட்டப் பணிகளுக்கு மார்ச் 2023 வரை ரூ.497.864 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில் இன்று வரை ரூ.465.296 கோடி செலவில் 2430 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

4.0 சிறப்பு முயற்சிகள் துறை

2003 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள் துறை, பல்வேறு தரப்புகளில் உருவாகும் புத்தாக்கத் திட்டங்களை, தலைமைச் செயலகத்திலுள்ள சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகள் மற்றும் அவற்றின் தொடர்புடைய துறைகளைக் கலந்தாலோசித்து செயல்படுத்தி வருகிறது. அவ்வாறாக, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் பெயர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை என்று மாற்றம் செய்யப்பட்டது. இத்துறை தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் முதன்மையான சிறப்பு முயற்சி திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர்ப் பகுதியில் பொதுப் போக்குவரத்து அமைப்பு

சென்னை பெருநகர்ப் பகுதி, சென்னை மெட்ரோ இரயில் (கட்டம்-I), மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், புறநகர் இரயில் அமைப்பு மற்றும் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பு உள்ளிட்ட விரிவான பொதுப் போக்குவரத்து கட்டமைப்பைக் கொண்டதாகும். தற்போதுள்ள பொதுப் போக்குவரத்து அமைப்பு, பெருகிவரும் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யவும் மற்றும் போக்குவரத்து

[2023 ஏப்ரல் 19

நெரிசல் மற்றும் மாசினைக் குறைப்பதற்கும் போதாது எனக் கருதப்படுகிறது. மேலும், பொதுப் போக்குவரத்தின் பங்கினை 28 சதவிகிதத்திலிருந்து (2018) 50 சதவிகிதமாக 2048 இல் உயர்த்த அரசு கடமைப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு, 118.9 கி.மீ. மெட்ரோ இரயில் கட்டமைப்புடன்கூடிய சென்னை மெட்ரோ இரயிலின் கட்டம்-II-ஐச் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

1. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிறுவனங்கள் சட்டத்தின்படி, (Companies Act) மாநில அரசிற்கு சொந்தமான சிறப்பு வகை நிறுவனமாக, டிசம்பர் 2007-ல் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற சமபங்கு வீதத்தில் இந்நிறுவனம் கூட்டு முயற்சி நிறுவனமாக 2009-ல் மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி, ஒன்றிய அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் அரசு செயலாளரைத் தலைவராகக் கொண்டு ஐந்து இயக்குநர்களை நியமனம் செய்கிறது. அதேபோன்று, மாநில அரசு மேலாண்மை இயக்குநர் உட்பட ஐந்து இயக்குநர்களை நியமிக்கிறது.

2. சென்னை மெட்ரோ இரயில் திட்டங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டமானது, விமானப் போக்குவரத்து, தொலைதூர இரயில்கள் மற்றும் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய பொது மற்றும் தனியார் போக்குவரத்து அமைப்புகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட விரைவான, நம்பத்தகுந்த, திறன்மிக்க, மாசற்ற மற்றும் நீடித்த பொதுப் போக்குவரத்தாகும். சென்னை மெட்ரோ இரயில் திட்டம் வாழ்க்கையில் வசதிகள் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடல்லாமல் நகரத்தின் மாசினையும் குறைக்கின்றது. சென்னையின் மெட்ரோ இரயில் கட்டமைப்பிற்கு மிக அதிக முதலீடுகள் தேவைப்படுவதால் சில கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 19]

2.1 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்- கட்டம்-I (நீட்டிப்புடன் சேர்த்து)

வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான ஒரு வழித்தடமும், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான மற்றொரு வழித்தடமும் என இரண்டு வழித்தடங்களைக் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-I, 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டது. மாநில அரசு, இத்திட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கி, ஒன்றிய அரசின் நிதியுதவியும் வெளிநாட்டு நிதியுதவியும் பெறுவதற்காக பரிந்துரைத்தது. ஒன்றிய அரசு, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், கட்டம்-I-ன்கீழ், இரண்டு வழித்தடங்களைச் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை வழங்கியது. 45.1 கி.மீ. நீளத்திலான இத்திட்டம் ரூ.14,600 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசும் ஒன்றிய அரசும் இணைந்து கூட்டு முயற்சியின் அடிப்படையில் செயல்படுத்தும் வகையில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–I-ன் வழித்தடம்-1-ஐ வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்/விம்கோ நகர் வரையில் 9.051 கி.மீ. நீளத்திற்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டக் கருத்துரு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காகவும் அதன் நிதியுதவிக்காகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறுவதற்காகவும் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தை ரூ.3,770 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 15-6-2016 அன்று ஒன்றிய அரசு வழங்கியது.

கட்டம்-I-ன் (நீட்டிப்பு உட்பட) கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ இரயில் வழித்தடங்களின் விவரங்கள் வருமாறு:

வழித்தடங்கள்	உயர்த்தப் பட்டவை	சுரங்கப் பாதை	மொத்தம்
சென்னை விமான நிலையம் முதல் விம்கோ நகர் வரையில் (கி.மீ.)	11.2	20.9	32.1
சென்னை சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரையில் (கி.மீ.)	12.3	9.7	22.0
மொத்த நீளம் (கி.மீ.)	23.5	30.6	54.1
மெட்ரோ இரயில் நிலையங்கள்	15	26	41

கட்டம்-I-ன்கீழ் பயணிகள் சேவைகள், பல்வேறு நிலைகளில் பணிகள் முடிவுற்றதையும் பணிமனைக்கு இணைப்பு ஏற்படுவதன் அடிப்படையிலும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொடங்கி வைக்கப்பட்டன:

தொடங்கி வைக்கப்பட்ட நாள்	கி.மீ.	வழித்தடப் பகுதி
29.6.2015	10.15	கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையில் (உயர்த்தப்பட்டவை)
21.9.2016	8.60	சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையில் (உயர்த்தப்பட்டவை)
	1.20	ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் (உயர்த்தப்பட்டவை)
14.5.2017	7.40	கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையில் (சுரங்கப்பாதை)

தொடங்கி வைக்கப்பட்ட நாள்	கி.மீ.	வழித்தடப் பகுதி
25.5.2018	2.50	நேரு பூங்கா முதல் சென்னை சென்ட்ரல் வரையில் (சுரங்கப்பாதை)
	4.35	சின்னமலை முதல் ஏஜி-டி.எம்.எஸ் வரையில் (சுரங்கப்பாதை)
10.2.2019	10.90	ஏஜி-டி.எம்.எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையில் (சுரங்கப்பாதை)
14.2.2021	9.05	வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை (சுரங்கப்பாதை மற்றும் உயர்த்தப்பட்டவை)
மொத்தம்	54.15	

கட்டம்-I திட்ட மதிப்பீடு ரூ.14,600 கோடியிலிருந்து ரூ.18,379.92 கோடியாக திருத்தியமைக்கப்பட்டு மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் ஒப்புதல் 2021-ல் பெறப்பட்டது. திருத்திய பங்களிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.00%), ரூ.2752.36 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (14.98%) வழங்கியுள்ளது. அதேபோன்று ஒன்றிய அரசு, ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.01%), ரூ.730.00 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (3.97%) வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள ரூ.8646.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனாக நேரடியாக செல்லும் நிதியுதவியாக (pass-through assistance) - 47.04% பெறப்பட்டது.

கட்டம்–I நீட்டிப்பைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு, ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.599.27 கோடியை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. அதேபோன்று, ஒன்றிய அரசு, ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.205.00 கோடியை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது.

ரூ.2141.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனாக நேரடியாகச் செல்லும் நிதியுதவியாக (pass-through assistance) பெறப்பட்டது.

2.2 கட்டம்-I-ன் இயக்கங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I-ன்கீழ், 54.1 கி.மீ. நீள வழித்தடங்களில் முழுமையான பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றது. பெருந்தொற்று மற்றும் அதற்கான கட்டுப்பாடுகள் குறையத் தொடங்கியவுடன், பயணிகள் எண்ணிக்கை, கடந்த சில மாதங்களில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்துதல், தள்ளுபடி கட்டணத்துடன்கூடிய பயண அட்டைகளை அறிமுகம் செய்தல், எளிதில் அணுகும் வகையில் மெட்ரோ நிலையங்களின் மேம்பாடு மற்றும் பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பு ஆகியவற்றின்மூலம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம் மற்றும் மத்திய சதுக்கம் போன்றவை பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பின் அடையாளங்கள் ஆகும். இதனால் ஒரு போக்குவரத்து அமைப்பிலிருந்து மற்றொரு போக்குவரத்து அமைப்பிற்கு பயணிகள் எளிதாக மாற இயலும். இத்திட்டங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்துவதற்காக சிறிய பேருந்துகளின் எண்ணிக்கையை அவற்றின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு அதிகரிக்கப்படுகிறது. கடைசி மைல் இணைப்பின் இதர முறைகளான மிடுக்கு இருசக்கர வாகனங்கள் (Smart Bikes), ஊபர் (Uber), ஓலா (Ola), ஷேர் ஆட்டோ (Share Auto) போன்றவை ஊக்குவிக்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2.3 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்-கட்டம்-II

மூன்று வழித்தடங்களை உள்ளடக்கிய 107.55 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II-க்கு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதி பங்களிப்பிற்காகவும் இருதரப்பு மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் நிதியுதவிக்காகவும் பரிந்துரை செய்யப்பட்டது.

2023 ஏப்ரல் 19]

அதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர்ப் பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கையின் அடிப்படையில், கட்டம்–II-ல் உள்ள வழித்தடங்களில் ஒன்றான வழித்தடம்-4-ஐ கலங்கரை விளக்கத்திலிருந்து வடபழனி மற்றும் போரூர் வழியாக பூவிருந்தவல்லி வரை நீட்டிப்பதற்கும், திட்டச் செலவினைக் குறைப்பதற்காக வழித்தடம்-5-ல் சில சுரங்கப்பாதை வழித்தடப் பகுதிகளை உயர்த்தப்பட்டவையாக மாற்றுவதற்கும் அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில் ஓர் ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை திருவாளர்கள் ரைட்ஸ் (RITES) *நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.*

2.4 கட்டம்-II திட்டத்திற்கான ஒப்புதல்

மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-II-க்கு கொள்கையளவிலான ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழ்நாடு அரசு வழங்கியது. கட்டம்–II-ன் திட்டம் ரூ.69,180 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டு நிதியுதவி மற்றும் வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

இதனிடையே, மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான மதிப்பீட்டு அளவுகோல் (Benchmarking cost) *குறித்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆலோசனைகளின் அடிப்படையிலும், ஒன்றிய அரசின் புதிய மெட்ரோ இரயில் கொள்கையின் அடிப்படையிலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II-ன் செலவு மதிப்பீடு ரூ.61,843 கோடியாகவும், கட்டுமான காலத்திற்கான வட்டி மற்றும் முன் இறுதிக் கட்டணத்தைச் சேர்த்து ரூ.63,246 கோடியாகவும் திருத்தியமைக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I-க்கு வழங்கியதைப்போல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II-க்கும் 50:50 என்ற சமவீதப் பங்களிப்பின் அடிப்படையில் ஒப்புதல் வழங்குமாறு ஒன்றிய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டமானது, இந்தியாவிலேயே ஒரே கட்டத்தில் செயல்படுத்தப்படுகின்ற மிகப்பெரிய மெட்ரோ இரயில் திட்டமாகும்.*

2021-2022 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் வரவு-செலவுத் திட்ட உரையில், கட்டம்–II திட்டத்திற்கான நிதிப் பங்களிப்பு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதைத்

[2023 ஏப்ரல் 19

தொடர்ந்து, இத்திட்டம் சம பங்களிப்பு முறையில் ஒன்றிய அரசின் திட்டமாக செயல்படுத்த பொது முதலீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆக, ஒன்றிய அரசின் இறுதி ஒப்புதல் தொடர்ந்து எதிர்பார்க்கப்படுகிறது.

2.5 ஒப்புதலளிக்கப்பட்ட கட்டம்–II வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களின் விவரங்கள்

- **வழித்தடம்-3:** மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையுள்ள (45.8 கி.மீ.) வடக்கு-தெற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில், மென்பொருள் வழித்தடம், அடையாறு, மயிலை மற்றும் புரசைவாக்கம் போன்ற முக்கியப் பகுதிகள் இணைக்கப்படுகின்றன.
- **வழித்தடம்-4:** கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச் சாலையானது (26.1 கி.மீ.) கிழக்கு-மேற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில் நகரின் வணிகப் பகுதிகளான நந்தனம், தியாகராயநகர், வடபழனி, போரூர் மற்றும் பூவிருந்தவல்லி ஆகியவை இணைக்கப்படுகின்றன.
- **வழித்தடம்-5:** மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை (47.0 கி.மீ.)-சுற்று வட்ட வழித்தடமான இவ்வழித்தடத்தில் வில்லிவாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், இராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகிய பகுதிகள் இணைக்கப்படுகின்றன.

கட்டம்-II-ன்கீழ் கருதப்பட்டுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வழித்தடங்கள்	உயர்த்தப்பட்ட நிலையங்கள்	சுரங்கப்பாதை நிலையங்கள்	மொத்தம்
வழித்தடம்-3	20	30	50
வழித்தடம்-4	18	12	30
வழித்தடம்-5	42	6	48
மொத்தம்	80	48	128

2023 ஏப்ரல் 19]

2.6 கட்டம்-II திட்டத்திற்கான நிதி ஒருங்கிணைப்பு

வழித்தடம்-3-ல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67 கி.மீ.), வழித்தடம்-5-ல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் வரையிலும் (16.34 கி.மீ.) மொத்தம் 52.01 கி.மீ. நீள வழித்தடப் பகுதிக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையுடன் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடன் வழங்க இறுதி செய்யப்பட்டுள்ளது. கடன் தொகையின் முதல் தவணை 75 பில்லியன் 519 மில்லியன் ஜப்பான் யென் ஆகும். இரண்டாவது தவணை கடனான 73 பில்லியன் ஜப்பான் யென்னுக்கும் 31-3-2022 அன்று கையெழுத்தாகியுள்ளது.

கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை வரையிலான (26.1 கி.மீ.) வழித்தடம்-4, வழித்தடம்-3-ல் சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி (சிப்காட்) வரை (10.13 கி.மீ.) மற்றும் வழித்தடம்-5-ல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான (30.66 கி.மீ.) எஞ்சிய வழித்தடப் பகுதிகளைச் செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் முதல் கடன் தவணையான 350 மில்லியன் டாலருக்கான கடன் ஒப்பந்தம் 29.12.2022 அன்று கையெழுத்தாகியுள்ளது. எஞ்சிய வங்கிகளின் கடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நடைமுறைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2.7 கட்டம்-II திட்டத்தை மாநில அரசு திட்டமாக செயல்படுத்துதல்

இத்திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரையில், இத்திட்டத்தை மாநில அரசு திட்டமாகக் கருதி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியளிக்கும் வழித்தடப் பகுதிகளைச் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாநில அரசு வழங்கியது. ஒன்றிய அரசு பின்னர் இத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில், தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், வழித்தடம்-4 முழுமையாகவும் வழித்தடம்-3

மற்றும் வழித்தடம்-5-ல் எஞ்சிய வழித்தடப் பகுதிகளையும் செயல்படுத்துவதற்காக அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தில் பங்கேற்பதற்கு எந்தத் தடையும் இருக்காது.

கட்டம்–II திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.1500 கோடியைப் பங்கு மூலதனமாகவும், ரூ.7100 கோடியை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மாநில அரசின் நிதியுதவியுடன் மண் பரிசோதனை மற்றும் விரிவான வடிவமைப்பு தயாரிப்புப் பணிகளை முடித்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கட்டம்–I-ஐ வெற்றிகரமாக செயல்படுத்தியதன் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற ஒட்டுமொத்த அனுபவத்தின் அடிப்படையில், மெட்ரோ நிலையங்களின் அளவினைச் சீரமைத்தல், நடைமேடை நீளம், காற்றுப் போக்கி அமைப்புகள் போன்றவற்றில் பல்வேறு புத்தாக்க வடிமைப்புகளைச் சட்டபூர்வமான அளவுகோலுக்குக் குந்தகம் இன்றி அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புத்தாக்கங்கள் இந்தியாவில் உருவாகிக் கொண்டிருக்கும் ஏனைய மெட்ரோ இரயில் நிறுவனங்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. அனைத்து நிலையங்களும், மாற்றுத் திறனாளிக்கு உகந்த வகையிலும் இந்திய பசுமை கட்டடக் குழுமத்தின் பசுமைக் கட்டட அளவுகோலின்படியும், அதாவது சமூக மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன.

மொத்த நீளமான 118.9 கி.மீ. வழித்தடப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, சீராக முன்னேறி வருகின்றன. கட்டுமான காலத்தின்போது நகரக் குடிமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் வகையிலும், பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்யும் வகையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

2.8 கட்டம்-I-ன் நீட்டிப்பு—விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை

தமிழ்நாட்டின் தென்பகுதிகளின் நுழைவாயிலான ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், உருவாகி வரும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திற்கு போக்குவரத்து

2023 ஏப்ரல் 19]

இணைப்பை ஏற்படுத்துவதற்கும் சென்னை மெட்ரோ இரயில் வழித்தடம்-1-ஐ விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு/ விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. திருவாளர்கள் ஏஇகாம் (M/s. AECOM) நிறுவனம் தயாரித்தளித்த விரிவான திட்ட அறிக்கை, ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காகவும், இருதரப்பு/பன்னாட்டு வங்கிகளின் வெளிநாட்டு நிதியுதவிக்கு பரிந்துரைப்பதற்காகவும் தற்போது மாநில அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

கட்டம்-II வழித்தட நீட்டிப்புகள்

கீழ்க்கண்ட கட்டம்-II வழித்தடங்களை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தயாரிப்பதற்கான ஆணைகளை ஜூலை 2022-ல் அரசு வெளியிட்டுள்ளது:

- *வழித்தடம்-3-ஐ சிறுசேரியிலிருந்து கேளம்பாக்கம் வரை நீட்டித்தல்.*
- *வழித்தடம்-3-ஐ கேளம்பாக்கத்திலிருந்து மாம்பாக்கம் மற்றும் வண்டலூர் வழியாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை நீட்டித்தல்.*
- *வழித்தடம்-4-ஐ பூவிருந்தவல்லி புறவழிச் சாலையிலிருந்து திருப்பெரும்புதூர் வரை நீட்டித்தல்.*
- *வழித்தடம்-5-ஐ திருமங்கலத்திலிருந்து முகப்பேர் மற்றும் அம்பத்தூர் வழியாக ஆவடி வரை நீட்டித்தல்.*

விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிப்பதற்கான ஆலோசகர் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, டிசம்பர் 2022-ல் ஒப்பந்த ஏற்புக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. சாத்தியக்கூறு ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

3. இரண்டாம் நிலை நகரங்களின் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டங்கள்

இரண்டாம் நிலை நகரங்களில் அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசல் மற்றும் போக்குவரத்துத் தேவைகளுக்கான தீர்வாக கோயம்புத்தூர், மதுரை, சேலம்,

திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி நகரங்களில் ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டங்களின் (Comprehensive Mobility Plans) அடிப்படையில் விரிவான சாத்தியக்கூறு/விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

3.1 கோயம்புத்தூர் பெருந்திரள் துரிதப் போக்குவரத்துத் திட்டம்

கோயம்புத்தூர் நகருக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்துத் திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை/விரிவான திட்ட அறிக்கையை ஜெர்மானிய நாட்டின் நிதியுதவி முகமையான கே.எப்.டபுள்யூ.வின் (KfW) நிதியுதவியுடன் தயாரிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அறிக்கைகள் தயாரிக்கும் பணி திருவாளர்கள் சிஸ்ட்ரா (SYSTRA) மற்றும் ரைட்ஸ் (RITES) கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கைக்கு ஜூலை 2021-ல் வழங்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆலோசகர்கள் இத்திட்டத்தை 3 கட்டங்களாகச் செயல்படுத்த பரிந்துரைத்துள்ளனர். கட்டம்–I-க்கான விரிவான திட்ட அறிக்கை மாநில அரசால் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது மொத்தம் 40 கி.மீ. நீளத்தில் இரண்டு மெட்ரோ இரயில் வழித்தடங்களைச் செயல்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கைக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இறுதியான விரிவான திட்ட அறிக்கை ஏப்ரல் 2023-ல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.2 மதுரையில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டம்

மதுரை நகரில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான ஆணைகளை ஆகஸ்ட் 2021-ல் அரசு வெளியிட்டுள்ளது. அரசு ஆணைகளின் அடிப்படையிலும் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் இருப்பதன் அடிப்படையிலும், இந்த ஆய்வு, திருவாளர்கள் பாலாஜி இரயில் ரோடு அமைப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

2023 ஏப்ரல் 19]

விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசால் டிசம்பர் 2022-ல் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது 29 கி.மீ. நீளத்திலான வழித்தடத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை மே 2023-ல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.3 சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி நகரங்களில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்துத் திட்டம்

சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கைகளை தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நகரங்களுக்காக ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கைகளின் அடிப்படையில் சாத்தியக்கூறு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்த நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டத்தை மேம்படுத்துதல்/தயாரித்தல் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு சேவைகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இறுதியான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டங்கள் விரைவில் தயாராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், செப்டம்பர் 2022-ல் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிப்பதற்கான ஆலோசகர் நிறுவனங்களுக்கு ஒப்பந்த ஏற்புக் கடிதங்களை வழங்கியுள்ளது. சாத்தியக்கூறு ஆய்வறிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

———

இணைப்பு-V

(476 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முகவுரை:

"பொருள்கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்."

(குறள் 675)

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. தமிழ்நாடு அரசின் பொது நிதியைச் செம்மையாக நிருவகிக்கும் பொறுப்பு நிதித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதித் துறையின் முக்கிய செயல்பாடுகள்:

i. இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 202-ன்படி அரசின் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

ii. மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழ்நாடு அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்.

iii. மாநில அரசின் நிதி நிலை மேலாண்மை தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்.

iv. அரசின் வரவுகளையும் அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராக பராமரித்தல்.

v. பல்வேறு துறைகளின் செலவின கருத்துருக்களை மதிப்பிட்டு கூர்ந்தாய்வு செய்தல்.

vi. உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நிதியளிப்பதற்கான மாற்று நிதி ஆதாரங்களைக் கண்டறிதல்.

2023 ஏப்ரல் 19]

தொலைநோக்குத் திட்டம்

3. துறைகளுக்கும் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து, திறன்மிக்க நிதி மேலாண்மையுடன், மாநிலத்தின் நிதிநிலையின் வளத்தைப் பேணிப் பாதுகாத்து முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளையும் முன்னெடுப்புகளையும் செயல்படுத்துவதே நிதித் துறையின் தொலைநோக்குத் திட்டமாகும். பெருகி வரும் சவால்களைச் சமாளிப்பதற்கு, தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான நவீன நடைமுறைகளை இத்துறை கடைபிடிக்கிறது. ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் பேரியல் கூறுகளான மொத்த வரவுகள் மற்றும் செலவினங்களை நிதித் துறை நிருவகிக்கிறது.

4. இந்தப் பரந்த கட்டமைப்பிற்குள், செலவினத்திற்கான முடிவுகள் குறித்து பிற துறைகளுக்கு அதிக தன்னதிகாரம் வழங்குவதுடன் அதற்கான பொறுப்பினையும் கணிசமாக உயர்த்துவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இத்துறையானது அரசின் நிதியைத் திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்வதுடன், தணிக்கை முறையை மிகவும் வலுவானதாகவும் செயல்திறன்மிக்கதாகவும் மாற்றுகிறது. இந்த நோக்கங்களை அடைய பல்வேறு முன்னெடுப்புகள் மற்றும் இடையீடுகள் செயல்படுத்தப்படும்:

- *கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்.*
- *ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் அதன் முழு பயன்பாட்டை உறுதி செய்தல்.*
- *ஏனைய துறைகளுக்கும் முகமைகளுக்குமான நிதிப்பாய்வினைக் கண்காணித்தல்.*
- *தணிக்கை முறைகளை மேம்படுத்துதல்.*
- *நவீன வரவு-செலவுத் திட்ட செயல்முறைகளை ஏற்றுக்கொள்ளுதல்.*
- *பொறுப்புடைமை மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.*
- *கொள்முதல் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.*

LEGISLATIVE
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

சிறப்பு முயற்சிகள்

5. மாநிலத்தின் சிறந்த நிதி நிருவாகத்திற்காக இத்துறை பின்வரும் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:

(i) பொருளாதார வல்லுநர் குழு

6. உலகின் தலைசிறந்த 5 பொருளாதார வல்லுநர்களைக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவினை கடந்த 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அரசு அமைத்தது.

இதுவரை இந்தப் பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் 2021-2023 ஆம் ஆண்டுகளில் மூன்று முறை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

கூடுதலாக, இந்தக் குழுவின் உறுப்பினர்கள் மாநிலத்திற்கு வருகை தந்து பல்வேறு துறைகளுடன் கலந்தாலோசித்து தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, போன்ற பல்வேறு நலத் திட்டங்களுக்கும், 1 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான வழிகள், மின் துறையில் சீர்திருத்தங்கள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு இக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். மேலும், இப்பொருளாதார ஆலோசனைக் குழுவின் வல்லுநர்களில் ஒருவரான திரு. அரவிந்த் சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் எரிசக்தித் துறை செயல்பாட்டில் நிலைத்த தன்மையை மேம்படுத்த பரிந்துரைகள் வழங்க துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(ii) கூட்டாட்சி நிதி வடிவம்

7. சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்க உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் திரு.அரவிந்த் பி. தத்தார் அவர்களின் தலைமையில் வருவாய் மற்றும் வரி விதிப்பு தொடர்பான சட்டமியற்றலில் புகழ்பெற்ற வல்லுநர்களைக் கொண்டு கூட்டாட்சி நிதி வடிவம் ஒன்றை உருவாக்க ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.

8. இக்குழுவின் முதல் அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி குறித்த

2023 ஏப்ரல் 19]

தீர்ப்பாயம் அமைப்பது தொடர்பாக, மாநில அரசின் கருத்துகள் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அமைச்சர்கள் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலோசனைக் குழுவின் ஏனைய பரிந்துரைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

(iii) புதிய சொத்து மேலாண்மை அமைப்பு

9. 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "அரசு சொத்துகளை முறையாகக் கணக்கிட அனைத்து அரசுத் துறைகளில் இருக்கும் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளின் விவரங்களைச் சேகரித்து, அவற்றின் பயன்பாட்டைக் கண்காணிக்க ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்துடன் (IFHRMS) இணைத்து ஒரு சொத்து மேலாண்மை மென்பொருள் (Asset Management Software) வரும் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

10. மேற்கூறிய அறிவிப்பின் அடிப்படையில், அரசுத் துறைகளில் உள்ள அனைத்து சொத்துகளின் வாழ்க்கை சுழற்சியினைக் கண்காணித்து வளப் பயன்பாட்டை மேம்படுத்த மேக கணினியம் அடிப்படையிலான சொத்து மேலாண்மை மென்பொருளானது (Cloud Based Asset Management Software) உருவாக்கப்பட்டுள்ளது.

11. இந்த மென்பொருள்மூலம் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சொத்துகளின் விவரப்பட்டியலை இணையம் வாயிலாகவே நிகழ்நிலையில் பெற இயலும். இதன்மூலம் சொத்துகளை உரிய கணக்குப் பதிவிற்கும் மற்றும் சரியான நேரத்தில் பராமரிப்பு மேற்கொள்வதையும் உறுதிபடுத்தும்.

(iv) மின் கொள்முதல்

12. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998-ன்கீழ் பொதுக் கொள்முதலில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வரவும், ஒப்பந்தப்புள்ளிகளை அழைக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் நடைமுறையை ஒழுங்குபடுத்தவும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள், 2000 உருவாக்கப்பட்டது.

13. 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "1.4.2023 முதல் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் அனைத்து கொள்முதல்களுக்கும் மின் கொள்முதல் முறை கட்டாயமாக்கப்படும் மற்றும் இதன்பொருட்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளில் தேவையான திருத்தங்களை அரசு மேற்கொள்ளும்" என்று அறிவிக்கப்பட்டது.

14. இந்த அறிவிப்பின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு விதிகளுக்கு ஏற்ப, ஒரு புதிய மின் கொள்முதல் வலைமுகப்பை "https://tntenders.gov.in" அரசு, தேசிய தகவல் மையத்தின் வாயிலாக (NIC) உருவாக்கி உள்ளது. பயனுக்கேற்ப மாற்றியமைத்தல் மற்றும் மாநிலம் முழுவதும் சேவையை அறிமுகப்படுத்துதல் உட்பட 3 ஆண்டுகளுக்கான (ஏப்ரல் 2022–மார்ச் 2025 வரை) இத்திட்ட மதிப்பீடு 501.51 இலட்சம் ரூபாய் ஆகும்.

15. தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் அனைத்து வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு இந்த மின்னணு கொள்முதல் செயல்பாட்டில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. 6.3.2023 முதல் இணையவழி கருத்தரங்கு வாயிலாக இணையவழிப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும், இது அடுத்து வரக்கூடிய 3 முதல் 6 மாத கால அளவில் இந்தப் பயிற்சி வலைமுகப்பு வாயிலாகவே கிடைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மின்னணு வலைமுகப்பைச் செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு 1998 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவுமறைவற்ற சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு விதிகள் ஆகியவற்றில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

16. புதுப்பிக்கப்பட்ட இணையதள முகப்பு https://tntenders.gov.in 1.4.2023 முதல் செயல்பாட்டில் உள்ளது.

(v) அதிக நிதிச்சுமையை ஏற்படுத்தும் வழக்குகளுக்கான மேலாண்மை அமைப்பு

17. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவுத் திட்ட உரையில் நிதிநிலை அறிக்கையில்

அறிவித்தபடி அதிக நிதிச்சுமைகளை உருவாக்கக்கூடிய வழக்குகள் குறித்து அரசிற்கு வழிகாட்டுவதற்காக அரசாணை (டி) எண்18, நிதித்(அ.ந.மு-பல்வகை) துறை, நாள் 19.3.2022-ல் உயர் அதிகாரம் கொண்ட வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழுவானது இதுவரை நடத்தியுள்ள 14 கூட்டங்களில், 14 துறைகள் தங்களின் 26 எண்ணிக்கையிலான அதிக நிதிச்சுமையுள்ள வழக்குகளுக்கு இக்குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளன.

18. மேலும், அரசிற்கு அதிக நிதிச்சுமையை உருவாக்கக்கூடிய வழக்குகள் அனைத்தையும் கூர்ந்து கண்காணிக்கும் பொருட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்குகள் கண்காணிப்பு அமைப்பில் இதற்கென தனியாக இணைய முகப்பு(portal) 14.9.2022 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(vi) நிதித்(பொதுத் துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்துதல்

19. நிதித்(பொதுத் துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்துதலின் ஒரு பகுதியாக, பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் ஆண்டு/ காலாண்டு அறிக்கைகளை ஆய்வு செய்யவும், இயக்குநர் குழுக் கூட்ட குறிப்புகள் மற்றும் நடுத்தர கால தொலைநோக்கு அறிக்கைகளை ஆய்வு செய்யவும், பொதுத் துறை நிறுவனங்களின் கடந்த கால மற்றும் தற்போதைய நிதி மற்றும் செயல்பாட்டு பகுப்பாய்வினை மேற்கொள்ளவும் ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான நிர்வாக மற்றும் நிதி அனுமதி அரசாணை எண்141/நிதி(பொ.மா.க)த் துறை, நாள் 24.5.2022-ன்படி வழங்கப்பட்டது. இதனடிப்படையில் M/s. எர்னஸ்ட் & யங் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, ஒப்புதல் கடிதம் 15.2.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.

(vii) நபார்டு திட்ட கண்காணிப்புப் பிரிவு

20. நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் செம்மையாக, உரிய காலத்தில் நிறைவேறுவதை உறுதி செய்யும் நோக்கத்தில், தற்போது நிலுவையில் உள்ள திட்டங்களின் முன்னேற்றத்தைக் கள அளவில் தொடர்ந்து கண்காணிக்கவும், நபார்டு மற்றும் பிற நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதியுதவியை விரைந்து விடுவிப்பதை உறுதிபடுத்தவும், “நபார்டு

திட்ட கண்காணிப்பு பிரிவு” ஏற்படுத்த அரசாணை நிலை எண் 213, நிதித் (வ.ஆ-2) துறை நாள் 14.7.2022-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு 8.8.2022 முதல் செயல்பாட்டில் உள்ளது.

(viii) வரவு-செலவுத் திட்ட முயற்சிகள்

தன்னதிகார வரவு-செலவுத் திட்டம்

21. வரவு-செலவுத் திட்ட உருவாக்கத்தில் நவீன நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், 2022-2023 வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் ஐந்து மானியங்களுக்கான கோரிக்கைகளில் தன்னதிகார வரவு-செலவுத் திட்ட நடைமுறை எனும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

(i) மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

(ii) பால்வளம்

(iii) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

(iv) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

(v) மாற்றுத் திறனாளிகள் நலன்

தன்னதிகார வரவு-செலவுத் திட்ட முறையானது, விரைவாக முடிவெடுத்தல், மேம்படுத்தப்பட்ட செயல்முறை, செலவினங்கள் குறைப்பு மற்றும் அதிக பொறுப்புணர்வை உறுதி செய்யும் அதே வேளையில் கால நேர விரயத்தைத் தவிர்ப்பதற்கும் துறைகளுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கவும் முயல்கிறது.

22. தற்போதுள்ள நடைமுறையில், வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் குறித்து முன்மொழிவுகள் வரப்பெற்று, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு நுணுக்கத் தலைப்புக்குண்டான செலவினத்தின் தேவைகள் ஆய்வு செய்யப்பட்டு, பின்னர் நிதித் துறையால் மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு இறுதி செய்யப்பட்ட தொகைகள் மொத்த நிதியொதுக்கீட்டிற்காக சேர்க்கப்படும்.

23. தன்னதிகார வரவு-செலவுத் திட்ட முறையில், ஒட்டுமொத்த ஆண்டிற்கான வருவாய், மூலதனம் மற்றும் கடன் செலவினங்களின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தீர்மானிக்கப்பட்டு, பின்னர் சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரிவிக்கப்படும். இந்த மொத்த

2023 ஏப்ரல் 19]

நிதியொதுக்கத்திலிருந்து உள்தலைப்புகள், நுணுக்கத் தலைப்புகள் மற்றும் உள்நுணுக்கத் தலைப்புகளுக்கு உண்டான பல்வேறு செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு துறைகளால் செய்ய இயலும். மேலும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, நிதியாண்டின்போது தேவைப்படும் நிதி, மறு நிதியொதுக்கம் வாயிலாக ஏனைய கணக்குத் தலைப்புகளுக்கும் துறை தலைமையே நிதியொதுக்கம் மேற்கொள்ள முடியும். மேற்கூறிய 5 மானியக் கோரிக்கைகளுக்கான தன்னதிகார வரவு-செலவுத் திட்ட நடைமுறையானது 2023-2024 நிதியாண்டிற்கும் தொடர்கிறது. இந்த முன்னோடி செயல்முறையை உறுதிப்படுத்திய பிறகு, வருங்காலங்களில் மற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் படிப்படியாக தன்னதிகார வரவு-செலவு திட்ட நடைமுறையை விரிவாக்கம் செய்ய பரிசீலனை செய்யப்படும்.

வரவு-செலவுத் திட்டம் குறித்த மக்கள் கையேடு

24. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு வெளியீடுகளில், ஒரு புதிய முயற்சியாக, வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன், 2022-2023 நிதியாண்டிற்கான 'வரவு-செலவுத் திட்டம்' குறித்த மக்களுக்கான கையேட்டினை முதன்முறையாக நிதித் துறையால் வெளியிடப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சத்தை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான வடிவிலும் வரைபட வடிவிலும் இந்த ஆவணம் வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஆவணம் வரவு-செலவுத் திட்டம் குறித்த மக்களின் விழிப்புணர்வை அதிகரிக்கவும், அரசின் நிதிநிலைக் குறித்த அறிவார்ந்த விவாதங்களை ஊக்குவிக்கவும் கருவியாக செயல்படும். இந்த ஆவணம் சமீபத்திய வரவு-செலவுத் திட்டத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி

25. மாநிலத்தின் பொது நிதி நிருவாகத்தில், குறிப்பாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு உருவாக்கம் மற்றும் நிதி இடர் மேலாண்மை ஆகியவற்றில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்துடன் நிதித் துறை இணைந்து செயல்பட்டு வருகின்றது.

[2023 ஏப்ரல் 19

பொது நிதி நிருவாக சீர்திருத்த நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்காக, பேரியல் நிதி பிரிவு, நிதி நெருக்கடி மேலாண்மை பிரிவு மற்றும் நிதி ஆதாரம்/கடன் மேலாண்மை பிரிவு என மூன்று சிறப்புப் பிரிவுகள் நிதித் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, 2022-2023 நிதியாண்டிலிருந்து வெளியிடப்பட்ட வரவு-செலவுத் திட்டம் குறித்து மக்களுக்கான கையேடு மற்றும் 5 மானியக் கோரிக்கைகளுக்கான தன்னதிகார வரவு-செலவுத் திட்ட நடைமுறையானது 2023-2024 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நிதித் துறையானது IMF-SARTTAC அதிகாரிகளுடன் சந்திப்புகள்/பயிற்சி அமர்வுகளை முனைப்பாக மேற்கொண்டு வருவதுடன், 2022-2023 ஆம் ஆண்டில் துறை வாரியான நிதி இடர் பகுப்பாய்வு செய்யத் தொடங்கியுள்ளது. இதேபோன்று, 2022-2023 ஆம் ஆண்டில் பேரியல் நிதி அளவுருக்களுடன் உள்ள ஒரு நடுத்தர கால நிதிக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு செயல்முறையும் நிதித் துறையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(ix) சிறப்புப் பணிக் குழு

26. சிறப்புப் பணிக் குழுவானது, (STF) வங்கிக் கணக்குகளில் உள்ள நிதியை முழுமையாகக் கண்டறிந்து, அதில் காலம் கடந்துவிட்ட, பயன்படுத்தப்படாத நிதியைக் கண்டறிதல், கணக்குகளை முழுமையாக சரிசெய்தல். அனைத்து அரசு நிதியைக் கருவூல அமைப்பின் பார்வை வரம்பிற்குள், கட்டுப்பாட்டில் வைக்கப்படுவதை உறுதி செய்யவும் செயல்பட்டு வருகிறது.

27. வங்கிக் கணக்கு விவரங்கள் வங்கிகள், துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. தொடர் முயற்சிகள்மூலம் சிறப்பு பணிக் குழுவானது மாநில கருவூலத்திற்கு மீள வரவேண்டிய நிதிகளை அடையாளம் கண்டுள்ளது.

நிதித் துறையின் அமைப்பு

28. பின்வரும் துறைகள்/முகமைகள் நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:-

2023 ஏப்ரல் 19]

தணிக்கைத் துறைகள்	
i.	உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை
ii.	கூட்டுறவுத் தணிக்கைத் துறை
iii.	மாநில அரசு தணிக்கைத் துறை
iv.	பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை
v.	இந்து சமய அறநிலையங்களின் தணிக்கைத் துறை
நிருவாகத் துறைகள்	
i.	கருவூலக் கணக்குத் துறை
ii.	அரசு தகவல் தொகுப்பு விவர மையம்
iii.	சிறுசேமிப்புத் துறை
iv.	ஓய்வூதிய இயக்ககம்
இதர முகமைகள்	
i.	தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)
ii.	தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககம் மற்றும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்50 “ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்” குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

தணிக்கைத் துறைகள்

29. நிதித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பின்வரும் தணிக்கைத் துறைகளின் மேற்பார்வை தலைவராக தலைமை தணிக்கை இயக்குநர் செயல்படுகிறார்.

வ. எண்	தணிக்கைத் துறைகளின் பெயர்கள்
1.	உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை
2.	கூட்டுறவு தணிக்கைத் துறை
3.	மாநில அரசு தணிக்கைத் துறை
4.	பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை
5.	இந்து சமய அறநிலையங்களின் தணிக்கைத் துறை

தலைமைத் தணிக்கை இயக்குநர்

30. தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஜூன் 21, 2021 அன்று இடம் பெற்ற ஆளுநர் உரையில், தணிக்கை மற்றும் மேற்பார்வை செயல்பாடுகளில் முழுமையான மறுசீரமைப்பு தேவை என்று சுட்டிக்காட்டப்பட்டது. 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில்,

“மாநில அரசின் தற்போதைய அனைத்து தணிக்கைத் துறைகளையும் மேற்பார்வையிட தலைமைத் தணிக்கை இயக்குநர் என்ற பதவி உருவாக்கப்படும். அவர் இந்திய தணிக்கை மற்றும் கணக்கு துறையிலிருந்து மாற்றுப்பணியில் பணியமர்த்தப்படுவார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட குறிப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 102, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 7.4.2022-ல் நிதித் துறையின்கீழ் செயல்படும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, கூட்டுறவு தணிக்கைத் துறை, மாநில அரசு தணிக்கைத் துறை, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை மற்றும் இந்து சமய அறநிலையங்களின் தணிக்கைத் துறை மற்றும் எதிர்காலத்தில் உருவாகும் பிற தணிக்கைத் துறைகளுக்கும் மேற்பார்வைத் துறைத் தலைவராக செயல்பட தலைமை தணிக்கை இயக்குநர் என்ற பதவி உருவாக்கப்பட்டுள்ளது. இவர் தமிழ்நாடு நிதித் தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 3-ன்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

2023 ஏப்ரல் 19]

புதிய முயற்சிகள்:

- *அனைத்துத் தணிக்கை செயல்பாடுகளையும் சீரிய முறையில் கண்காணிக்க, இணைய அடிப்படையிலான விரிவான தணிக்கை தகவல் மேலாண்மை முறையினை* (C-AIMS) *ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.*

- *தணிக்கைத் துறைகளின் தணிக்கை வரம்பின்கீழ் அனைத்து அமைப்புகளிலும் தணிக்கை மேற்கொள்ள சிறப்பான நடைமுறைகளைப் பயிற்றுவிக்கவும் நிபுணத்துவத்தைப் புகுத்தவும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தணிக்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒட்டுமொத்த தணிக்கைத் தர மேலாண்மை கட்டமைப்பை* (AQMF) *நிறுவுதல்; மற்றும் தணிக்கைத் தரவுகளான பொதுத் தரநிலைகள், கள தரநிலைகள் மற்றும் அறிக்கையிடல் தரநிலைகள் துறை சார்ந்த தணிக்கைக் கையேடுகள் போன்ற தணிக்கைத் தரவுகளை அறிமுகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.*

- *அரசின் தணிக்கை செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த, முன்னோக்கு தணிக்கைத் திட்டங்கள், வருடாந்திர தணிக்கைத் திட்டங்கள், இடர் அடிப்படையிலான தணிக்கை உத்திகள், புள்ளியியல் மாதிரி முறைகள்,* IDEA, Tableau *போன்ற தரவு பகுப்பாய்வு நுட்பங்கள் ஐந்து தணிக்கைத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, ஏப்ரல் 2023 முதல் செயல்திறன் தணிக்கைகள், இணக்கத் தணிக்கைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் தணிக்கைகளை மேற்கொள்வதற்கான கருப்பொருள்கள் மற்றும் தலைப்புகளின் தேர்வு, தணிக்கைக் குழுக்களின் அமைப்பு, சிறப்புக் குழுக்கள் போன்ற செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.*

- *தணிக்கைத் துறைகளின் அனைத்து பணியாளர்களின் திறனை வளர்ப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் ஏதுவாக முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பொது தணிக்கை தரநிலைகளுக்கு ஏற்ப அவர்களின் அறிவையும் திறனையும் மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

- *2020-2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் வருடாந்திர தொகுப்புத் தணிக்கை அறிக்கை அங்கீகரிக்கப்பட்டு, அச்சிடப்பட்ட நகல்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும்.*

- *பணியாளர்கள் அமைப்பினை சீரமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைத் துறையில் தற்போது அயற்பணியில் பணிபுரியும் கூட்டுறவுத் துறை பணியாளர்களை நிரந்தர அடிப்படையில் ஈர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.*

- *உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைமூலம் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வூதியத்தை அங்கீகரிக்கும் செயல்முறையை முழுமையாக கணினிமயமாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுபோலவே, மேற்குறிப்பிட்ட ஓய்வூதியதாரர்கள் டிஜிட்டல் வாழ்வு சான்றிதழ்கள் (டிஎல்சி)/வாழ்வு சான்றிதழ்களை இணையதளம் வழியாக தாக்கல் செய்வதற்கு ஏதுவாக ஜீவன் பிரமான் இணையதளத்தில் இணைக்கப்பட்ட நிறுவனங்களான இந்தியன் போஸ்ட் பேமென்ட் பேங்க் (IPPB) இருக்கும் இடத்திலேயே இச்சேவையைப் பெறுவதற்கு, இ-சேவை மையங்கள்/பொது சேவை மையங்களின் பயோ மெட்ரிக் சாதனத்தினைப் பயன்படுத்தி ஓய்வூதியதாரர்கள் சான்றிதழ்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *"பொது நகைக் கடன் தள்ளுபடி திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, மார்ச் 2022-ல் கூட்டுறவுத் தணிக்கைத் துறையால் நவீன தணிக்கைக் கருவிகளைப் பயன்படுத்தி சிறப்புத் தணிக்கை மேற்கொண்டதில் தகுதியற்ற 1,19,125 பயனாளிகள் (மொத்த பயனாளிகளில் சுமார் 9%) அடையாளம் காணப்பட்டனர். இதன்மூலம் அரசுக்கு 519.64 கோடி ரூபாய் சேமிப்பு கிடைக்கப்பெற்றது.*

- *மேலும், அக்டோபர் 2022-ல் மகளிர் சுய உதவிக் குழுக் கடன் தள்ளுபடி தணிக்கை கூட்டுறவுத் தணிக்கைத்*

துறையால் நடத்தப்பட்டு, சுய உதவிக் குழுக் கடன் தள்ளுபடித் தொகை தகுதியான பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்தது. இதன்மூலம் அரசுக்கு தோராயமாக ரூ.468 கோடி சேமிக்கப்பட்டுள்ளது.

o அரசின் அனைத்து தணிக்கைத் துறைகளின் செயல்முறைகளையும், செயல்பாடுகளையும் சீரமைக்க, உரிய பரிந்துரைகளை வழங்கிட அரசாணை எண்54, நிதி(உ.நி)த் துறை நாள் 26-2-2022-ல் தணிக்கை சீர்திருத்தக் குழு (Audit Reforms Committee) அரசால் அமைக்கப்பட்டது.

o உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் மாநில அரசு தணிக்கைத் துறைகளின் உதவி ஆய்வாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 30-1-2023 அன்று மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

o ஒழுக்கம், நன்னெறி மற்றும் நன்னடத்தை ஆகியவை பொதுத் தணிக்கையாளர்களின் அடித்தளமாக இருப்பதால், தணிக்கைப் பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும்.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

31. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 (த.நா. சட்ட எண்:24) 15-12-2014 மற்றும் 24-8-2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

32. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014-ன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு 5-ன்படி அரசின் முன் அனுமதியுடன் இதர

நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. இத்துறையால் உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும். தணிக்கையானது பின்தணிக்கைப் பணிகளை உறுதி செய்யக்கூடிய பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு-செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு-செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டும் விதிகளின்படியும், அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதை சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

33. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 20-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் ஆண்டுதோறும் தொகுப்புத் தணிக்கை அறிக்கை சட்டமன்றத்தில் வைப்பதற்காக அரசிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்வரும் தொகுப்புத் தணிக்கை அறிக்கைகள் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன:

வ. எண்	ஆண்டு	தற்போதைய நிலை
1)	2015-2016	9.7.2018 அன்று சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது
2)	2016-2017	5.2.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது
3)	2017-2018	13.9.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது
4)	2018-2019	
5)	2019-2020	24.3.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது
6)	2020-2021	நடைபெறும் சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

2023 ஏப்ரல் 19]

34. தற்போது உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் நிறுவனங்களின் விவரம் இணைப்பு-1(அ)-ல் உள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

35. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும் அவை உரிய பயனாளிகளின் நலனுக்கு பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

கிராம ஊராட்சி அமைப்புகளின் சோதனைத் தணிக்கை

36. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 12,525 ஊராட்சிகளில் ஆண்டு தோறும் 2,839 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)

37. தற்போது 19 மாநகராட்சிகளிலும், 09 நகராட்சிகளிலும் மற்றும் 13 பல்கலைக்கழகங்களிலும் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு முதல், 388 ஊராட்சி ஒன்றியங்களில் காலாண்டுத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஆய்வாளர் மற்றும் ஓர் துணை ஆய்வாளர் அல்லது ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன. உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் விவரம் இணைப்பு 1-(ஆ)-ல் காணலாம்.

[2023 ஏப்ரல் 19

உடன்பின்-தணிக்கை (Immediate Post Audit) முறை

38. உடன்நிகழ் தணிக்கைச் செயல்படுத்தப்படுகின்ற 19 மாநகராட்சிகளிலும் 10 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவுச் சீட்டுகள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிருவாகத்தால் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்தத் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளையும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும் இறுதி செய்யப்பட்டு அவற்றை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத பிற அமைப்புகளின் தணிக்கை

39. உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 2 மாநகராட்சிகள், 129 நகராட்சிகள், 10 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிகழ்வின் அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்

40. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நிகழ்வின் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999–2000, 2000-2001 ஆகிய கணக்காண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக

செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்கக் குறியீடுகளைக் கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

41. ஓர் ஆண்டின் நிதிசார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்டகால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உண்மையான நிலையை அறிந்து கொள்ள உதவும் இருப்புநிலைக் குறிப்புகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின்படி (GAAP) தயாரித்து கணக்குகள் பேணுவதே இந்த கணக்கு முறையின் உள்ளடக்கம் மற்றும் நோக்கமாகும்.

42. இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அவற்றின் சொத்துகளை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்துப் பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். வெளிப்படைத் தன்மையுள்ள இந்தப் புதிய கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு மூலதனத் திட்டங்களுக்கும் நலத் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க பல நிதி நிறுவனங்கள் முன் வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்கு தணிக்கைச் சான்று வழங்குதல்

43. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று, கடன் வழங்கும் பல்வேறு நிறுவனங்களிலிருந்து நிதி பெறுவதற்கு அத்தியாவசியமானதாகும். மேலும் தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அங்கீகாரமற்றது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். எனவே, அரசாணை (நிலை) எண்93, நிதி (நிதிக்குழு-IV)த் துறை, நாள் 28.3.2003-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகர்ப்புற

உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வரும் நிகழ்வின் அடிப்படையிலான கணக்குப்பதிவு (Accrual Based Accounting) முறைப்படி கணக்குகள் தயார் செய்யப்பட்டு இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

44. பல்கலைக்கழக மானியக்குழு, மாநில/ஒன்றிய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தபட்டதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

45. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் தனியறிக்கைகள்மூலம் அரசு மற்றும் நிர்வாக துறைகளின் தொடர் நடவடிக்கைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன.


46. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கத்தக்க விளக்கங்கள் அளிக்கும் நிலையில் தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. மேலும், தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

47. தணிக்கையின்போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.


2023 ஏப்ரல் 19]

48. மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு



மாநில அளவிலான உயர் நிலைக் குழு



- ❖ *ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.*

- ❖ *பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரைத் தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அரசு ஆணை எண் 1 நகராட்சி*

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ2), நாள் 4.1.2007-ல் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளன.

- அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட உயர்நிலைக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலைக் குழு நகராட்சி நிர்வாக இயக்குநரைத் தலைவராகக் கொண்டும் அரசாணை (நிலை) எண்65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.5.2007-ன்படி அமைக்கப்பட்டுள்ளது.
- நடப்பு நிதியாண்டில் 11 மாநகராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 9760 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 244 சிறப்புத் தணிக்கை தடைகள்மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.
- நடப்பு நிதியாண்டில் 41 நகராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 9477 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 1331 சிறப்புத் தணிக்கை தடைகள்மீது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பணிகள்

49. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

(i) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய/குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று/ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் 27,197 ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணையப் பகிர்வு நிதித் தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

(iii) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.5.1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1.8.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் ஓய்வூதியதாரர்கள் நலநிதித் திட்டத்தின்கீழ் 18 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 6.24 இலட்சம் ரூபாயும், ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 152 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 63.71 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7)த் துறை, நாள் 15.3.2013-ன்படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 1.4.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின்கீழ் நடப்பு நிதியாண்டில் ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தில் 179 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 75.18 இலட்சம் ரூபாயும், குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 405 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 4.71 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 19

(v) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.16.84 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

(vi) அறக்கட்டளைகளின் பொருளாளர்

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1.4.1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 23.25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அறக்கட்டளைகளும், 37.04 கோடி ரூபாய் மதிப்புள்ள 891 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை

50. அரசாணை (நிலை) எண் 260, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள் 15.10.2015-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் (Contributory Pension Scheme) *தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிர்வாக பங்களிப்பின் சரித்தன்மை உறுதி செய்யப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் 2021-2022 ஆம் ஆண்டிற்கு 288 ஊராட்சி ஒன்றியங்கள், 11 மாநகராட்சிகள், 79 நகராட்சிகள் மற்றும் 418 பேரூராட்சிகளின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட உள்ளாட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளையும் அதன் சரித்தன்மையினையும் தணிக்கைத்துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 19]

தணிக்கை நிலை

51. 2021-2022 ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் தணிக்கை முடிவுற்றுள்ளன. 2021-22 ஆம் ஆண்டிற்கான கிராம ஊராட்சிகளின் 22% சோதனைத் தணிக்கை முடிவுற்றது.

தணிக்கைக் கட்டணம்

52. பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் 2 சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 1.4.2022 முதல் 31.3.2023 வரை நடப்பு நிதியாண்டில், கேட்புத் தொகையான 6265.03 இலட்சம் ரூபாயில் மேற்படி நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக 3248.04 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

53. பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் நடப்பு நிதியாண்டில் 81729 தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் 5734.77 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் தணிக்கைத் துறை

54. சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவுத் தணிக்கைத் துறையானது 17.6.1981 முதல் தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983-ன் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, 14 நிருவாக பதிவாளர்கள் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

55. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்ட நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்கள் இணைப்பு 2-ல் உள்ளன.

கூட்டுறவுத் தணிக்கையின் நோக்கம்

56. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் நிதிநிலை அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988, சங்கங்களின் துணை விதிகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்களின்படி செயல்படுவதை உறுதி செய்கிறது. அரசின் மானியம், உதவித்தொகைகள் மற்றும் நிதியுதவி முறையாக பயன்படுத்தப்படுவதையும், பலன்கள் உறுப்பினர்களுக்கும் சமூகம் முழுமைக்கும் சென்றடைகின்றனவா என்பதையும் உறுதி செய்கிறது.

நகர வங்கிகள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

57. அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை, பட்டயக் கணக்காளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன்நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சட்டப்பூர்வ தணிக்கை மற்றும் தணிக்கைக் கட்டணம்

58. தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பூர்வ தணிக்கை, 45 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கு தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

அடிப்படைவிதி 127-ன்படி அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில், அதாவது தணிக்கைக்கு 45 மனித நாட்களுக்கு மேல் தேவைப்படும் நேர்வில் முழுநேர தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 27, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 12.2.2020-ன்படி இத்தணிக்கைக்குக் கட்டணமாக 35 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 19]

தணிக்கை முன்னேற்ற நிலை

59. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையிலான நிதியாண்டிற்கு உரியதாகும். எனவே அந்நிதியாண்டு முடிந்த பின்னரே தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 2020-2021 ஆம் ஆண்டிற்கான மொத்தம் உள்ள 13,573 சங்கங்களில் 5900 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை 2021-2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை 31.7.2023-க்குள் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 இன் பிரிவு 81-ன்கீழ் விசாரணையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவை மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை போன்ற காரணங்களினால் 2020-2021 ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை நிலுவையாக உள்ளது. இச்சங்கங்களின் தணிக்கையை முடிக்க சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தனியறிக்கைகள் (Special Reports)

60. தணிக்கையில் கையாடல், மோசடி, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதி மீறல், இருப்புக் குறைவு ஆகிய கடுங்குறைகள் கண்டறியும்போது அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள்மூலம் சம்பந்தப்பட்ட நிருவாகப் பதிவாளருக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உடன் தெரிவிக்கப்படுகிறது. அரசாணை எண் 267, நிதி(கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 06.08.2018-ன்படி தனியறிக்கைகள்மீது நிருவாக பதிவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் 2017-2018 ஆண்டுக்கு அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018-2019-ம் ஆண்டிலிருந்து நிருவாக பதிவாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த விவரம் எதிர் நோக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கான தனியறிக்கை விவரம் பின்வருமாறு:

வருடம்	**தனி அறிக்கைகள் எண்ணிக்கை**	**தொகை (ரூபாய் கோடியில்)**
2021-2022	*387*	*49.99*
2022-2023	*289*	*44.51*

பயிற்சி மற்றும் வளர்ச்சி

61. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான குறுகியகாலப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மாநில அரசு தணிக்கைத் துறை

62. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண் 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 3.8.1992-ன்படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டு அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையாக செயல்பட்டு வந்தது. பின்னர், இத்துறையின் பணி மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டு தனிச் சட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறைகளின் உட்தணிக்கை மற்றும் அரசின் நிதியுதவி பெறும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் தணிக்கை, வாரியங்களின் திட்ட தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதை கருத்திற்கொண்டு அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பெயர் 'மாநில அரசுத் தணிக்கைத் துறை' என அரசாணை எண் 264 நிதி(உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 16.8.2019-ன் வழி மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

63. தணிக்கையின் செயற்பரப்பு

- *தணிக்கை நிறுவனங்களின் அனைத்து வரவு மற்றும் செலவினங்களை முறையான ஆய்வு மற்றும் தணிக்கை மேற்கொள்ளுதல்.*
- *தணிக்கை நிறுவனங்களில் அனைத்து நிதி பரிவர்த்தனைகள் மற்றும் நிலையான ஒழுங்குமுறைகள் மற்றும் உரிய விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படுவது தொடர்பான கண்காணிப்புகளை உறுதிபடுத்துதல்.*
- *வாரிய பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்கள் (ம) பொது வருங்கால வைப்பு நிதி/சிறப்பு சேமநல நிதித் திட்டம் இறுதி இருப்புத் தொகைகள் ஆகியவற்றினை உறுதி செய்து தணிக்கைச் சான்று வழங்குதல்.*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

- வாரியங்கள்/நிறுவனங்களின் தணிக்கை தடைகளில் உள்ள கடுங்குறைபாடுகள் குறித்த அறிக்கையினை தொடர்ந்து கண்காணிக்க பொது நிறுவனங்கள் குழுவில் இறுதி தீர்மானம் நிறைவேற்றுதல்.

தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்கள்

64. இத்துறையால் தணிக்கை செய்யப்படும் முக்கியமான நிறுவனங்கள் மற்றும் திட்டங்களின் விவரங்கள் இணைப்பு–3-ல் உள்ளது.

மேற்கண்ட சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் தமிழ்நாடு சட்டசபையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

தணிக்கைச் சான்று

65. மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு உட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

இதர பணிகள்

66. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையால் மேற்பார்வை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

1. மருத்துவக் கல்வித் துறை

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை

3. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை

4. வேளாண்மைத் துறை

5. வேளாண்மை பொறியியல் துறை

6. புவியியல் மற்றும் சுரங்கத் துறை

7. வருவாய் நிருவாகத் துறை

8. போக்குவரத்துத் துறை

9. கல்லூரி கல்வித் துறை

10. தொழில்நுட்பக் கல்வித் துறை

11. சிறை மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை

12. காவல் துறை

13. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

14. அகதிகள் மறுவாழ்வுத் துறை

15. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

16. வனத் துறை

17. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

18. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

19. தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை

தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

67. தணிக்கையின்போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைவர்களுக்கும் அரசின் துறை செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

2022-2023-ல் நடத்தப்பட்ட சிறப்புத் தணிக்கைகள்

68. இத்துறையால் 2022-2023-ல் கீழ்க்காணும் சிறப்புத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

(i) அரசுக் கடிதம் எண்56431/நிதி(உ.நி)/2021, நாள் 31.01.2022-ன் வழி அரசால் ஆணையிடப்பட்டவாறு பி.வ./மி.பி.வ./ சிறும்பான்மையினர்/ஆ.தி/ப.கு மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை திட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட

வருமானச் சான்றிதழ் மற்றும் முதல் பட்டதாரி சான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்த்தல் தொடர்பான களஆய்வு மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(ii) கோவிட்-19 வரவு மற்றும் செலவினத் தணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு அரசிற்கு தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

தணிக்கைக் கட்டணம்

69. உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கை கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு 545.93 இலட்சம் ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

70. கூட்டமர்வின் வாயிலாக, பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அரசுக்கு வருவாய் இழப்புகளை உருவாக்கும் இனங்களின் 35593 தணிக்கைத் தடைகள் நீக்கம் செய்யப்பட்டு 1568.48 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

திறன் மேம்படுத்துதல்

71. இத்துறையின் தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரத்தினை மேம்படுத்த பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை நடைமுறை குறித்து வருடந்தோறும் மூன்று நாட்களுக்கு தணிக்கையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தலைமை தணிக்கை இயக்குநரால் உருவாக்கப்பட்ட பயிற்சி ஆலோசனை குழு (Training Advisory Committee)வின் வழிகாட்டுதல்களின்படி 2022-2023 ஆண்டிற்கான பயிற்சி நாட்காட்டி (Annual Training Calendar) தயாரிக்கப்பட்டு வருகின்றது. கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

i. பொதுத் தலைப்புகள் (General Courses)

ii. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தலைப்புகள் (IT related Courses)

iii. துறை சார்ந்த தலைப்புகள் (Domain Based Courses)

72. மின்ஆளுமை முயற்சிகள்

1. இத்துறைக்கான தனி வலைமுகப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.

2. இத்துறையின் செயல்பாடுகளை மின்னணுமயமாக்குவதற்காக ஒரு தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு தோற்றுவிக்கப்படவுள்ளது.

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை


73. பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்ள, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் 1987-ம் ஆண்டு தனித் துறையாக உருவாக்கப்பட்டது.

74. அரசாணை (நிலை) எண் 370, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 22.11.2019 வாயிலாக இத்துறை நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தனித் துறையாக செயல்படுகிறது.

பால் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு

75. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பாக, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட அளவிலான 27 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தொடக்க நிலையில் 10518 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 47 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 19]



பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்

76. பால் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது.

மேலும் பால் கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலை அறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கையை பயன்படுத்தும் சங்க உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு போதுமான நம்பகத் தன்மையை தணிக்கைத் துறை உறுதி செய்கிறது.

தணிக்கை முன்னேற்றம்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

77. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 2021-2022 தணிக்கை ஆண்டிற்கான இறுதித் தணிக்கை 10 அலகுகளிலும் நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 19

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்

78. 2020-2021 ஆம் தணிக்கை ஆண்டிற்கு மொத்தமுள்ள 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 23 ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 21 ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டு தருமபுரி, நாமக்கல் ஆகிய இரு ஒன்றியங்களில் தணிக்கை அறிக்கை இறுதியாக்கம் பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள, திருப்பூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஒன்றியங்களில் தணிக்கைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

79. 2021-2022 ஆம் தணிக்கையாண்டிற்கு 19 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஒன்றியங்களில் தணிக்கைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

80. 2021-2022 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 10565 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 6122 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு 3615 சங்கங்களுக்கு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 2507 சங்கங்களில் தணிக்கைச் சான்று வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள சங்கங்களில் தணிக்கை திட்டத்தின்படி தணிக்கைப் பணி நடைபெற்று வருகிறது.

தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படைவிதிக் கட்டணம்

81. 2021-2022 ஆம் நிதியாண்டில் உடன்நிகழ் தணிக்கைக் கட்டணமாக 153.47 இலட்சம் ரூபாயும், அடிப்படைவிதி கட்டணமாக 188.12 இலட்சம் ரூபாயும் பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு ஆக மொத்தம் 341.59 இலட்சம் ரூபாய் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

தனியறிக்கை

82. தணிக்கையில் காணப்படும் கடுங்குறைகள் மற்றும் நிதி சார்ந்த அனைத்து விவரங்களும் தனியறிக்கைகள்மூலம் இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை

2023 ஏப்ரல் 19]

மற்றும் பால் வளத் துறை துணைப் பதிவாளர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகின்றன.

பயிற்சி மற்றும் மேம்பாடு

83. பால் கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வோர் ஆண்டும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை தொடர்பாக பல்வேறு தணிக்கை சார்ந்த இனங்களில் 150 முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இத்துறை தணிக்கையாளர்களின் தணிக்கைத் திறனை அதிகரிக்க உரிய பயிற்சித் திட்டம் வகுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துறை அளவில் அமைக்கப்பட்ட பயிற்சி திட்டக்குழு நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிறுவனம் (NICM), *சென்னை, கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை, மண்டல பயிற்சி நிலையம் (மாநில கணக்காயர் அலுவலகம்) மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்* (TANUVAS) *ஆகியவற்றுடன் இணைந்து 2023-2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பயிற்சி அட்டவணை, ஒவ்வொரு பயிற்சிக்கும் நிலையான பயிற்சி தொகுதி மற்றும் புதிதாக நியமனம் செய்யப்படும் தணிக்கையாளர்களுக்கு அடிப்படை பட்டய பயிற்சி ஆகியவற்றைத் தயாரித்து வருகிறது.*

துறையின் புதிய முயற்சிகள்

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை கையேடு

84. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையின் வரைவு கையேடு தயாரிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் இறுதி செய்யப்பட்ட பால் கூட்டுறவுகளின் தணிக்கைக் கையேடு தணிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

தணிக்கைத் தரம் உயர்த்துதல்

85. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் தரத்தை உயர்த்துவதற்காக துறை அளவில் தணிக்கைத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு 2023-2024, 2024-2025 மற்றும் 2025-2026 ஆகிய மூன்று வருடங்களுக்கான முன்னோக்கு தணிக்கை திட்டம் தயாரித்தல், 2023-2024 ஆம் ஆண்டுக்கான தணிக்கை திட்டம் தயாரித்தல், செயல்திறன் தணிக்கை/இணக்க தணிக்கை மேற்கொள்ள தணிக்கைத் தலைப்புகள் தேர்வு செய்தல் மற்றும் தணிக்கை வடிவமைப்பு மாதிரி (Audit Design Matrix) தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை

86. இந்து சமய அறநிறுவனங்களின் வரவு-செலவு கணக்குகளை தணிக்கை செய்திட இந்து சமய அறநிறுவனங்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவந்த தணிக்கை பிரிவு அரசாணை (நிலை) எண் 181, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 25.11.2021-ன்படி இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை என தனித் துறையாக நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்படும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

87. தமிழ்நாடு முழுவதுமுள்ள இந்து சமய நிறுவனங்களின் தணிக்கையினை மேற்கொள்ள இத்துறை 19 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றுள் 4 மண்டலங்களில் துணை தலைமைத் தணிக்கை அலுவலர் தலைமையிலும் மற்றும் 15 மண்டலங்களில் மண்டல தணிக்கை அலுவலர் தலைமையிலும் தணிக்கை நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு உதவியாக 27 உதவி தணிக்கை அலுவலர்கள் உள்ளனர். இதனைத் தவிர்த்து ஒரு மண்டலத் தணிக்கை அலுவலரும் (நடமாடும் தணிக்கைக் குழு), ஒரு உதவி தணிக்கை அலுவலரும் தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

88. ஒவ்வொரு பசலி ஆண்டிலும் அனைத்து தணிக்கை மண்டலங்களுக்கும் மனித நாட்கள் மற்றும் தணிக்கை நிலுவைகளை அடிப்படையாகக் கொண்டு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு தணிக்கைப் பணி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு திருக்கோயிலின் வருவாய்கேற்ப திருக்கோயில்கள் இனம் வாரியாக பிரிக்கப்பட்டு தணிக்கைப் பணி நடைபெற்று வருகிறது.

அரசு திட்டங்களான ஒருகால பூஜை, அன்னதானம் மற்றும் கல்வி நிறுவனம், திருப்பணி ஆகிய இதர கணக்குகளும் தணிக்கை செய்யப்படுகின்றன.

2023 ஏப்ரல் 19]

89. 2022-2023 ஆம் ஆண்டில், ஒதுக்கப்பட்ட மனித நாட்களைக் கொண்டு, இந்து சமய நிறுவனங்களின் தணிக்கை மெற்கொள்ளப்பட்டு, அதிக ஆண்டு வருமானம் உள்ள குறிப்பிடத்தக்க நிறுவனங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து கீழ்க்கண்டவாறு முடிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	பிரிவு	2022-2023 ஆம் ஆண்டில் தணிக்கை முடிக்கப்பட்ட பசலிகள் எண்ணிக்கை
1	சிறப்பு நிலை – 1	7
2	சிறப்பு நிலை – 2	5
3	சிறப்பு நிலை – 3	23
4	பிரிவு – 1	580
5	பிரிவு – 2	490
6	பிரிவு – 3	944
7	பிரிவு – 4	1819
8	பிரிவு – 5	2875
9	அன்னதானத் திட்டம்	1115
10	ஒருகால பூஜை	30944
11	கல்வி நிறுவனங்கள்	211
12	திருப்பணி	68
13	கிராமப்புர திருப்பணி	31
14	பலவகை	14
	மொத்தம்	39126

[2023 ஏப்ரல் 19

கருவூலக் கணக்குத் துறை

90. முகவுரை

கருவூலங்கள் அரசாங்கத்தின் பழமையான செயல்பாட்டு அலகுகளில் ஒன்றாகும். முதலில் அவை ஆட்சியர் அலுவலகங்களின் ஒரு பகுதியாக செயல்பட்டன. 1.4.1962-ல் அவை தனித் துறையாக மறுசீரமைக்கப்பட்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன.

கருவூலக் கணக்குத் துறையானது, கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 3 சார்-சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 38 மாவட்டக் கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்களுடன் கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன. கருவூலக் கணக்குத் துறை அரசின் நிதி தொடர்பான பல்வேறு கருவூல செயல்பாடுகளை செய்கிறது. மேலும், நிதி தொடர்பான செயல்பாடுகளை செய்வதற்காக பல்வேறு துறைகள், வாரியங்கள் மற்றும் பெருநிறுவனங்களுக்கு தேர்ந்த மனிதவளத்தை வழங்குகிறது.

91. முதன்மைப் பணிகள்

1) அரசின் அனைத்து வரவு-செலவுகளைக் கையாளுதல்

2) 9.3 இலட்சத்திற்கும் மேலான பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல்

3) 7.07 இலட்சத்திற்கும் மேலான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல்

4) அரசின் திட்டம் மற்றும் மூலதன பணிகளுக்கான பட்டியல்களுக்கு பணம் வழங்குதல்

5) மாதாந்திர கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அனுப்புதல்

6) விற்பனையாளர்களுக்கு நீதி/நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பனை செய்வது.

2023 ஏப்ரல் 19]

7) பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் நலனுக்காக புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.

8) பணம் பெறும் அலுவலர்களின் தன் வைப்பு கணக்குகளையும், தலநிதிக்கான பல்வேறு வைப்பு கணக்குகளையும் பராமரித்தல்.

92. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம், நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருங்கிணைத்து, அரசின் செயல்திறன் மிக்க மற்றும் திறமையான செயல்பாட்டிற்கு உதவும் முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம் ஜனவரி 2021 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு, மனிதவள செயல்பாடுகள், பட்டியல்கள் உருவாக்கம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் நேரடி பயன்பாட்டில் உள்ளது.

- பொதுமக்கள், அரசு துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அரசின் வரவினங்களை மின்-வரவினங்களாக செலுத்த ஏதுவாக 8.2.2021 அன்று மின் செலுத்துச்சீட்டு (e-Challan) முறை நடைமுறைப்படுத்தப்பட்டு (e-Receipt) 24X7 மணிநேரமும் தங்குதடையின்றி (www.karuvoolam.tn.gov.in) இணையதளம்மூலம் செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- காப்பறை மற்றும் முத்திரைத் தாள் மேலாண்மை சார்ந்த வசதிகள் IFHRMS-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- சென்னை ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட கருவூலங்களில் ஓய்வூதியம் வழங்கும் பணிகள் நடைபெறுகின்றன.

- ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவருடைய வாரிசுதாரர்களுக்கு IFHRMS வாயிலாக பணப்பட்டுவாடா செய்யப்படுகிறது.

- மாதந்தோறும் 32.8 இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் (Old Age Pension) IFHRMS வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நலத் திட்டத்தின்கீழ் 6.50 இலட்சம் பயனாளிகளுக்கு IFHRMS வாயிலாக நிதி உதவி வழங்கப்படுகிறது.

- மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி-புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் IFHRMS வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

- ஓய்வூதியர்களின் வருடாந்திர நேர்காணலுக்கான (Mustering), வாழ்நாள் சான்றிதழை (Digital Life Certificate) மின்னணு முறையில் சமர்ப்பித்தல் தொடர்பாக ஜீவன் பிரமான் (Jeevan Praman) உடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஜூலை 2022 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- மாநிலக் கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்) மூலம் மேற்கொள்ளப்படும் கருவூலம் சாரா பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்தல்.

- மோசடி நடவடிக்கைகள் மற்றும் இரண்டாம் உள்ளீடுகளைத் (Duplicate Entries) தவிர்க்க, மாதாந்திர அடிப்படையில் பட்டியல்கள் சரிபார்க்கப்படுகின்றன (Validation).

செயல்படுத்தப்படும் நிலையில் உள்ள திட்டங்கள்

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (2.0) களஞ்சியம் எனும் பெயரில் தொழில்நுட்ப கொள்முதல் (Tech Refresh).

- கைப்பேசி செயலியை மேம்படுத்துதல்.

- நிதித் துறை மற்றும் அதன் கீழுள்ள துறைகளின் பணியாளர் பணி விவர நிகழ்நேர கையேடு (Online Directory).

- ஓய்வூதிய கருத்துரு மற்றும் பொதுவருங்கால வைப்பு நிதி கருத்துருக்களை நிகழ்நேரம்மூலம் அனுப்புதல் (OPAS).

2023 ஏப்ரல் 19]

- *மாநிலக் கணக்காயரின் கணக்குகள் மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகளை* (DASS) *மின்மயமாக்கல்.*
- *மின் செலுத்துச் சீட்டில்* (e-Challan) *பணம் செலுத்துவதற்குரிய வசதிகளை இந்திய ரிசர்வ் வங்கியின்* (RBI) NEFT/RTGS *மூலமாக ஏற்படுத்துதல்.*
- RBI-*ன் 2.0 பதிப்புடன்* (Version *2.0*) *மின் செலுத்துச்சீட்டு முறையை ஒருங்கிணைத்தல்.*
- *வருமான வரி* (Income Tax) *துறையுடன் ஒருங்கிணைத்தல்.*

புதிய கருவூலங்களின் உருவாக்கம் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுமானம்

93. தற்போது தமிழ்நாட்டில் 38 மாவட்ட கருவூலங்கள் மற்றும் 243 சார்நிலை கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. பழைய மற்றும் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 84 சார்நிலை கருவூலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 78 கட்டடங்களுக்கான பணிகள் முடிவுற்று செயல்பாட்டில் உள்ளன. 03 கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 03 சார் கருவூலங்களுக்கான நில மாற்றப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு நிதியியல் பகுப்பாய்வு

94. உள்ளுணர்வைக் காட்டிலும் நம்பகமான, தகவல்களின் அடிப்படையிலான நிதி மேலாண்மைக்கு உதவ, நிதிப் பகுப்பாய்வு அமைப்பை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. நிதிப் பகுப்பாய்வு முக்கிய பொருளாதார போக்குகள் பற்றிய ஆழமான அறிவைப் பெறுவதற்கும் செயல்திறனை மேம்படுத்தவும் மற்றும் எதிர்காலத்திற்கு திட்டமிடவும் உதவும்.

அமைப்பு ஒருங்கிணைப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு நிதிப் பகுப்பாய்வு அமைப்பின் (TNFAS) *வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக, அரசாணை (நிலை) எண் 377, நிதி (சிறு சேமிப்பு) துறை, தேதி 26-12-2022-ன்படி அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.*

[*2023 ஏப்ரல் 19*

கருவூலக் கணக்கு துறை, ஓய்வூதிய இயக்குநரகம், சிறு சேமிப்பு இயக்குநரகம் மற்றும் அரசு தரவு மையத்தை மறுசீரமைத்தல்

95. IFHRMS *மற்றும் பிற சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வரும் துறைகளுக்கான பணிச்சுமை மற்றும் பணி ஓட்டம் மாறியுள்ளது. எனவே, கருவூலக் கணக்குத் துறை, ஓய்வூதிய இயக்குநரகம், அரசு தரவு மையம் மற்றும் சிறுசேமிப்புத் துறை ஆகிய துறைகளின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் மறுசீரமைக்கப்பட வேண்டும்.*

மறுசீரமைப்புப் பணிக்காக அரசாணை எண் 49, நிதி (க.க-3) துறை, தேதி 22.02.2023-ல் அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான ஆய்வை மேற்கொள்ள நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

கருவூல கையேடுகள் மற்றும் விதித் தொகுப்புகளை திருத்தம் செய்தல்

96. தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு, கணக்கு விதித் தொகுப்பு, கருவூலக் கையேடு மற்றும் கருவூலக் கணக்குத் துறையின் ஊதியம் மற்றும் கணக்குக் கையேடு ஆகியவற்றில் உள்ள விதிகளை திருத்தம் செய்வதற்கு, இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தை (ICAI) *ஈடுபடுத்தி, இப்பணியை மேற்கொள்ள அரசு இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் கணக்கியல் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு* (ICAI ARF) *அரசாணை (நிலை) எண் 101, நிதி (க.க-3)த் துறை, நாள் 3.4.2023-ல் ஒப்புதல் அளித்துள்ளது.*

பொது நிதி மேலாண்மை திட்டம்

97. பொது நிதி மேலாண்மை திட்டத்தின் வாயிலாக, ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் நலத்திட்டங்கள் மற்றும் ஒன்றிய-மாநில அரசின் பங்களிப்புடைய நலத் திட்டங்களின் நிதி நிலையினைக் கண்காணித்தல், கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் கருவூலக் கணக்குத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படுகிறது. கருவூலம், பொது நிதி மேலாண்மை திட்டத்துடன் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டு,

2023 ஏப்ரல் 19]

இதுவரை இத்திட்டத்தின்கீழ் 51 அரசுத் துறைகளில் 185 ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொது நிதி மேலாண்மை திட்டத்தில் இதுவரை 156 ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை கணக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பு (TNPFTS)

98. அரசு நிதி கருவூல அமைப்பின் பார்வைக்கு வெளியே உள்ள கணக்குகளுக்கு அடிக்கடி மாற்றப்படுகின்றன என்பதை பல தரவு புள்ளிகள் குறிப்பிடுகின்றன. இந்த அரசு பதவியேற்றவுடன், அரசுத் துறைகள் மற்றும் முகமைகள் மூலமாகவும், அத்தகைய கணக்குகளை வைத்திருக்கும் வங்கிகள் மூலமாகவும் அத்தகைய நிதிகளைக் கண்டறிய இரு வழியான கணக்கெடுப்பைத் தொடங்கியது. நிதித் துறையின் மூத்த அதிகாரியின்கீழ் ஒரு சிறப்புப் பணிக் குழுவை, கணக்கை முழுமையாகச் சீரமைக்கவும், காலாவதியான மற்றும் பயன்படுத்தப்படும் நிதிகளைக் கண்டறியவும் அரசு நிறுவியுள்ளது. கூடுதலாக, IFHRMS *மற்றும்* PFMS *ஐப் பயன்படுத்தி, அரசாங்கத்தின் அனைத்து நிதிகளும் எப்போதும் கருவூல அமைப்பின் பார்வையில் வைக்கப்படுவது உறுதி செய்யப்படும்.*

தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பை உருவாக்க அரசாணை எண் 379 நிதி (சிறு சேமிப்பு) துறை, தேதி 28.12.2022-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, கணினி ஒருங்கிணைப்பாளராக M/s. *டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்* (TCS) *தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்நிறுவனம் அதற்கான ஆரம்பகட்ட ஆய்வினைத் தொடங்கியுள்ளது.*

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

99. கருவூலக் கணக்குத் துறையானது கூடுதல் இயக்குநர்கள்/இணை இயக்குநர்கள்/தலைமை கணக்கு அதிகாரிகள் மற்றும் கணக்கு அதிகாரிகள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்கள் ஆகிய நிலைகளில் உள்ள சுமார் 700 அதிகாரிகளை பல்வேறு துறைகள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றிற்கு நிதிக் கட்டுப்பாட்டாளர்/நிதி ஆலோசகர்/தலைமை கணக்கு அதிகாரிகளாக நியமிக்கிறது. நிதிச் சேவைகளைக் கையாளுதல், கணக்குகளை இறுதி செய்தல், உள் தணிக்கை செய்தல், வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், வரிக் கணக்கு தாக்கல் செய்தல் மற்றும் சட்டப்பூர்வ கடமைகள் ஆகியவை இந்த

அதிகாரிகளின் பொறுப்புகள் ஆகும். அதிகாரிகளின் செயல்திறன் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்காக, புத்தாக்கப் பயிற்சி வரும் ஆண்டுகளில் அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்கப்படும். இதற்காக தொழில்நுட்ப மேலாண்மை பயிற்சியை (Technical Managerial Training) தொழில்முறை முகவர்கள் (Professional agencies) மூலமாக வழங்க அரசாணை (நிலை) எண் 361, நிதி (க.க.3)த் துறை, நாள் 28.11.2022-ல் அனுமதி அளித்துள்ளது.

இதன் தொடர்பாக, தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. கருவூலக் கணக்குத் துறையில் உள்ள கூடுதல் இயக்குநர்கள் (15), இணை இயக்குநர்கள் (45) மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்களுக்கு (85) பொருட்கள் மற்றும் சேவை வரிக்கான பயிற்சி இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டது.

மேலும் 35 கணக்கு அலுவலர்கள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் (ICAI) வழங்கப்பட்டது.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2021

100. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின்கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், மாநில அரசு நிறுவனங்கள் (விரும்புவன மட்டும்) ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்காக தொகுப்பாண்டில் ஐந்து இலட்சம் ரூபாய் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீட்டு கட்டணமாக அரசு ஊழியரிடமிருந்து 300/ – ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டம் 30.6.2021-க்குப் பிறகு மேலும் நான்காண்டுகளுக்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் – 2021, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்மூலம் 1.7.2021 முதல் செயல்படுத்தப்படுகிறது.

இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற நிதி உச்சவரம்பு 10 இலட்சம் ரூபாயாக

2023 ஏப்ரல் 19]

உயர்த்தப்பட்டுள்ளது:

1) *புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்*

2) *கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை*

3) *சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை*

4) *விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு*

5) *இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி*

6) *தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை*

7) *உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நன்கொடையாளரின் உறுப்பு பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சைக்கான செலவுகள்*

மேலும், சில குறிப்பிட்ட நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு செலவினத்தைக் கூடுதலாக 10,00,000/ – ரூபாய் வரை மூலதன நிதியிலிருந்து வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 14.2.2022 முதல், கோவிட் நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்த்து 10 இலட்சம் ரூபாய் வரை கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின்கீழ் சிகிச்சை பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் விபத்தினால் ஏற்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non-Network) *மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*


மேலும், புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தவும் தகவல் தொழில்நுட்ப மென்பொருளைத்

தொடங்கவும், கைப்பேசி பயன்பாட்டினை (Mobile Application) மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021-ன்கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற அரசு ஊழியர்களுக்கு இதுவரை 6,60,960 காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 203 வகையான சிகிச்சைகள் (116 சிகிச்சைகள் மற்றும் 87 அறுவை சிகிச்சை நடைமுறைகள்) மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 1274 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசின் 16 கதிரியக்க சிகிச்சை மையங்களில் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021-ன்கீழ் 23.2.2023 வரை 1,08,022 பயனாளிகள் 506.41 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

பணியாளர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2021



2023 ஏப்ரல் 19]

இது தவிர, தற்போது கோவிட்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ள 5 கோடி ரூபாய் நிதிய மூலதனம் (Corpus Fund) *உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இதுநாள் வரை 80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11,321 பயனாளிகள் 74.79 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், உயிர்காக்கும் அவசரத்தன்மையற்ற நிலையில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் மேற்கொண்ட கோவிட் சிகிச்சைகளுக்கான மருத்துவ செலவினத்தை மீள வழங்க 4 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுநாள் வரை 529 பயனாளிகள் 3.88 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.*

துணை செலவுச்சீட்டு வரம்பு 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தப்பட்டது

101. சம்பளம் அல்லாத செலவுச்சீட்டு பட்டியில், துணை செலவுச்சீட்டு இணைப்பு 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக, தமிழ்நாடு கருவூல விதி பருமன் I-*ல் கருவூல விதி 16 துணை விதி 18* (e) *மற்றும் கருவூல விதி 16 துணை விதி 20* (i)-*ஐ திருத்தம் செய்ய அரசாணை (நிலை) எண் 54, நிதி (க.க.3) துறை, நாள் 24.2.2023-ன்மூலம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*

பணியாளர்களுக்கான இணையதள தகவல் தொகுப்பு

102. ஓர் ஊழியர் தமிழ்நாடு அரசுப் பணியில் சேர்ந்ததில் இருந்து ஓய்வுபெறும் வரையுள்ள பல்வேறு மனிதவளச் செயல்பாடுகள் இணையதள தகவல் தொகுப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது.

இணையதள தகவல் தொகுப்பில் உள்ள அம்சங்கள் பின்வருமாறு:-

- *ஒரு பணியாளரின் பெயர்*
- *பிறந்த தேதி*
- *ஓய்வு பெறும் தேதி*

- பணிநியமனம் செய்யப்பட்ட தேதி
- தாய் அலகு விவரம்
- சொந்த மாவட்டம்
- கல்வித் தகுதிகள்
- கணவன் அல்லது மனைவி விவரங்கள்
- சிறப்புத் தேவைகளுடைய குழந்தைகளின் விவரம்
- மாற்றுத்திறனாளிகள் விவரங்கள்
- பணி விவரங்கள்
- ஒழுங்கு நடவடிக்கை விவரங்கள்

இணையதள தகவல் தொகுப்பு உருவாக்குவதன் நன்மைகள் பின்வருமாறு:-

- ஊழியர்களின் அனுபவம் மற்றும் பணிவிவரங்களைப் புரிந்துகொண்டு ஆய்வு செய்தல்
- ஊழியர்களின் திறன், அனுபவம் மற்றும் வெளிப்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முறையாக முடிவெடுப்பது
- பணியிடமாற்றம் மற்றும் பணியமர்வில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல்

சிறுசேமிப்புத் துறை

103. சிறுசேமிப்பு திட்டங்கள் மிகவும் பாதுகாப்பாகவும், நியாயமான லாப விகிதத்தை அளிப்பதாலும் பொதுமக்கள் தங்கள் உபரி நிதியை இத்திட்டங்களில் முதலீடு செய்கிறார்கள். சிறு சேமிப்புத் திட்டங்கள் சிறு முதலீட்டாளர்களை ஈர்த்து, அவர்களின் முதலீட்டுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கின்றன. இந்தத் திட்டங்கள் இந்திய அரசின் நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு அஞ்சல் நிலையங்கள்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

சிறுசேமிப்புத் திட்டங்கள்

104. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், பலவிதமான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஒன்றிய அரசு ஒவ்வோர் ஆண்டும்

2023 ஏப்ரல் 19]

ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மற்றும் ஜனவரி மாதங்களில் 1 ஆம் தேதி சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை அவ்வப்போது அறிவிக்கிறது.

தற்போது 1.1.2023 முதல் நடைமுறையில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள் சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான (www.tnsmallsavings.org)*-ல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன.*

செல்வமகள் சேமிப்புத் திட்டம்

105. செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டத்தை ஒன்றிய அரசு 3.12.2014 முதல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திற்கான தற்போதைய வட்டி விகிதம் 1.1.2023 முதல் 7.6 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பத்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்காக மட்டும் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டிற்கு அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம்.

பொன்மகன் பொது வைப்புநிதி

106. செல்வமகள் சேமிப்புத் திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பையொட்டி, ஆண் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் பொது வருங்கால வைப்பு நிதித் (PPF) *திட்டம் “பொன்மகன் பொதுவைப்புநிதி” என பெயரிடப்பட்டு இந்திய அஞ்சல் துறைமூலம் 4.9.2015 முதல் மறுபடியும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பத்து வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், பத்து வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் வைப்புநிதிக் கணக்கைத் தொடங்கலாம். ஓர் ஆண்டிற்கு 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்ய வாய்ப்புள்ள இத்திட்டத்தில் 1.1.2023 முதல் 7.1 சதவீத வட்டி வழங்கப்படுகிறது.*

மூத்த குடிமக்கள் சேமிப்புத்திட்டம்

107. 5 ஆண்டுகள் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்தில் 1.1.2023 முதல் 8.0 சதவீத வட்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வட்டி வழங்கப்படும். கணக்கினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் வசதி உண்டு.

கணக்கினை முன்கூட்டியே முடிக்கும்பொழுது ஓராண்டிற்குப் பிறகு 1.5 சதவீதமும், இரண்டு ஆண்டிற்குப் பிறகு ஒரு சதவீதமும் முதலீட்டுத் தொகையில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.

வெகுமதிகள்

108. ஒரு சில சிறுசேமிப்புத் திட்டங்களின்கீழ் முகவர்கள் மூலமாக திரட்டப்படும் முதலீடுகளுக்கு ஒன்றிய அரசு தரகுத்தொகை வழங்குகிறது. சிறுசேமிப்பு முகவர்களை ஊக்குவிப்பதற்கும் பொதுமக்களின் மனங்களில் சேமிக்கும் பண்பை வளர்ப்பதற்கும், சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் மற்றும் நிலை முகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு அரசு வெகுமதிகளை வழங்கி வருகின்றது.

2022-23 ஆம் ஆண்டில், 709 முகவர்கள் 9,68,000/ – ரூபாய் அளவில் பயனடைந்துள்ளனர்.

உலக சிக்கன நாள்

109. சிறு சேமிப்புத் துறையானது சிறு சேமிப்புத் திட்டங்களின்கீழ் வசூல் செய்வதை ஊக்குவிப்பதிலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளை இணையம் வாயிலாக (www.tnsmallsavings.org) தீர்வு செய்வதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. ஒவ்வோர் ஆண்டும் உலக சிக்கன நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, நடனம், நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு, தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறைமூலம் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022-2023 நிதியாண்டில், அரசால் 3,30,000/ – ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 933 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

110. பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சிறுசேமிப்புத் துறை சார்பில், சென்னை மற்றும் மாவட்டங்களில் நடைபெறும் வர்த்தக கண்காட்சி/அரசு

2023 ஏப்ரல் 19]

கண்காட்சியில் சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், துண்டு பிரசுரங்களும் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், மாவட்ட அளவில் ஆண்டு தோறும் விழிப்புணர்வு நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

111. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-ன்கீழ் புதிய உட்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிதல், கருத்துருவாக்கல், முன்னுரிமை அளித்தல், செயல்படுத்துதல் போன்ற பணிகளை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த சட்டரீதியான வழிவகைகளை உருவாக்குகிறது. மேலும், உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான திட்ட தயாரிப்பு, கட்டமைப்பு, நிதியுதவி, செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கான அமைப்புசார் வழிவகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு உட்கட்டமைப்பு விதிகள் 2012, இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட நிதிகளை நிருவகிக்கவும், அதிலிருந்து திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் வழிமுறைகளை உருவாக்குகிறது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய ஒழுங்கு முறைகள் 2013-ன்கீழ் வாரியம் செயல்படுவதற்கான நடைமுறைகள் மற்றும் திட்ட ஆவணங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

112. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-ன்கீழ் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியம் தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தோற்றுவிக்கப்பட்ட முகமையாக செயல்படுகிறது. இவ்வாரியமானது மாநிலத்தில் உட்கட்டமைப்பு வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன், பொதுத் துறைகள் வாயிலாகவும் மற்றும் பொது தனியார் பங்களிப்பு முறையின் வாயிலாகவும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்கிறது.

113. இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சரும் (அலுவல்வழி) மற்றும் துணைத் தலைவராக மாண்புமிகு நிதி அமைச்சரும் (அலுவல்வழி) செயல்படுகின்றனர். இவ்வாரியத்தில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு உள்ளது.

[2023 ஏப்ரல் 19

114. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-ன்கீழ் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியானது திட்டங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, செயல்பாடு, நிருவாகம், மேலாண்மை ஆகியவற்றை எளிதாக்க நிதி உதவி அளிக்கிறது. திட்ட தயாரிப்பு நிதியானது ஆய்வுகள் நடத்துதல், நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவைகளை அமர்த்துவது, சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான திட்ட ஆய்வுகள், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி போன்ற நோக்கங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது.

115. மாநிலத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும், திறந்த சந்தையிலிருந்து வல்லுநர்களைப் பணியமர்த்துதல், வாரியத்தின் நடைமுறைகளை எளிதாக்குதல், அதிகாரப் பகிர்வை மேம்படுத்துதல் மற்றும் இது தொடர்பான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின்மூலம் வாரியத்தை மேலும், வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

116. இதுவரை தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த இவ்வாரியம், தற்போது தேவையான அலுவலர்கள் மற்றும் வல்லுநர்களோடு தனி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் தனியார் பங்களிப்புடன் திட்டங்கள் செயல்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ள முக்கிய துறைகளுக்கு உதவி செய்வதற்காக வாரியத்தின் மூலமாக வல்லுநர்களைப் பணியமர்த்த இவ்வாரியம் முடிவு செய்துள்ளது. இந்த வல்லுநர்கள் பொருத்தமான திட்டங்களைக் கண்டறிதல், ஆலோசகர்களைப் பணியமர்த்தல், ஆவணத் தயாரிப்பில் உதவி செய்தல் மற்றும் வாரியத்தின் ஒப்புதல்களை விரைவாகப் பெறுவதற்கு ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளில் துறைகளுக்கு உதவி புரிவார்கள். மேலும் வாரியத்தின் புதிய இணையதளம் நவீன வசதி மற்றும் வடிவமைப்புடன் தொடங்கப்பட்டுள்ளது.

117. முக்கிய அரசு தனியார் பங்களிப்புடன் செயல்படகீழ்க்காணும் திட்டங்களுக்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது:

2023 ஏப்ரல் 19]

- ➢ பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களின் வசதிக்காக கழிவறைகள் அமைத்தல்:
- ➢ சென்னையில் உள்ள காவல் துறை பொதுப் பள்ளியின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு
- ➢ மாமல்லபுரத்தில் மரகதப் பூங்கா (ஒளிரும் தோட்டம்) அமைத்தல்
- ➢ கடலூர் துறைமுகத்திற்கான துறைமுக ஆபரேட்டர் தேர்வு
- ➢ 6 நவீன அரிசி ஆலைகள் அமைத்தல்
- ➢ சென்னை வெளிப்புற 6 வழிசாலைகளில் சுங்கச்சாவடிகள் அமைத்தல்
- ➢ சென்னையில் 3 பேருந்து முனையங்களை நவீனப்படுத்தும் திட்டம்
- ➢ மாதவரம் மற்றும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தினை நிர்வகித்தல் மற்றும் செயல்படுத்துதல்
- ➢ சென்னையில் 9 பேருந்து முனையங்களை நவீனப்படுத்தும் திட்டம்
- ➢ இருக்கூரில் சைலோஸ் செயல்பாடு மற்றும் பராமரிப்பு

118. ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற தொலைநோக்குப் பார்வையை 2030 ஆம் ஆண்டுக்குள் நனவாக்க, ஒட்டுமொத்த உத்தி மற்றும் செயல்திட்டத்தை உருவாக்குவதற்கான ஆலோசனை நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் நியமிக்கப்பட்டுள்ளது.

119. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு அரசால் மேம்படுத்தப்படவுள்ள Greenfield/Brownfield உட்கட்டமைப்பு திட்டங்களின் மேம்பாட்டில் தனியார் துறை பங்கேற்பதற்கான வாய்ப்புகளை அடையாளம் காண, தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதி லிமிடெட் (NIIFL) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.

[*2023 ஏப்ரல் 19*

120. மேலும், அரசு தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தைப் பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் நேரத்தில், மறுபுறம் உட்கட்டமைப்புக்கான நிதியாதாரங்களை தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) *மூலமாக திரட்டுகிறது. இவ்விரு அமைப்புகளும் இணைந்து பணியாற்றுவதை அரசு உறுதி செய்யும்.*

121. தமிழ்நாட்டில் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படக்கூடிய உட்கட்டமைப்பு திட்டங்களை தரப்படுத்தல் மற்றும் முன்னுரிமை பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்காக இங்கிலாந்து அரசாங்கத்தின் தொழில்நுட்ப உதவியை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், திட்டத் தேர்வுக்கான ஒரு கட்டமைப்பை வடிவமைப்பதாகும் - தமிழ்நாடு அரசின் ஒட்டுமொத்த வளர்ச்சி நோக்கத்திற்கு ஏற்ப திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வடிவமைப்பை உருவாக்குவது மற்றும் அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படக்கூடிய சிறப்பான திட்டங்களுக்கான பட்டியலை உருவாக்குவது ஆகும். இதன் இறுதி அறிக்கை எதிர்நோக்கப்படுகிறது.

சென்னை மாநகர கூட்டாண்மை கட்டம் – 1.

நீடித்த நகர்புர சேவைகள் திட்டம்

122. சென்னை மாநகரம் தொடர்ந்து நிலைக்கத்தக்க வளர்ச்சி பெறுவதை உறுதி செய்வதற்கு சென்னை மாநகரக் கூட்டாண்மை என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டம் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் கடனுதவியுடன் நீடித்து நிலைக்கத்தக்க சேவைகளை சென்னை பெருநகர மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்ய பல் துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் இறுதி விளைவு சார்ந்த திட்டமாக (Program for Results) *செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் 701 மில்லியன் டாலர் ஆகும். இதில் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வளர்ச்சி முதலீட்டு வங்கியின் பங்களிப்புகள் தலா 150 மில்லியன் டாலர் ஆகும். தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்*

2023 ஏப்ரல் 19]

திட்டக்கண்காணிப்பு முகமையாக ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு பணியினை மேற்கொள்கிறது. முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் இத்திட்டத்தின் இயக்குநராக செயல்படுகிறார். திட்ட செயலாக்க நடவடிக்கைகள் மற்றும் வழங்கல் சார்ந்த குறியீடு சாதனைகள் கீழ்க்கண்ட முகமைகளின் பொறுப்பாகும்:

1. *பெருநகர சென்னை மாநகராட்சி*
2. *சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்*
3. *மாநகர போக்குவரத்துக் கழகம்*
4. *நீர்வளத் துறை*
5. *சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம்*

123. பெருநகர சென்னை மாநகராட்சியின்மூலம் (இரண்டு) வழங்கல் சார்ந்த சாதனை முடிவுகள் எய்தப்பட்டு, 54.63 கோடி ரூபாய் அரசுக்கு நிதியாக மீளப் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகர கூட்டாண்மை கட்டம் – 2.

124. சென்னை மாநகரக் கூட்டாண்மை கட்டம் – 2 ஆனது சென்னை பெருநகர பகுதியில் நிலையான இடம்சார்ந்த திட்டமிடல் மற்றும் நகர்ப்புர போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை வழங்குவதையும், நிறுவனங்களை வலுப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மொத்த திட்டச் செலவு 572 மில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் உலக வங்கியின் உதவி 400 மில்லியன் டாலராக இருக்கும் (அதாவது 70% கடன் கூறு). சென்னை மாநகரக் கூட்டாண்மை கட்டம்-2-க்கான கடன் வழங்கும் கருவி "முதலீட்டு திட்ட நிதியளிப்பாக" இருக்கும். உலக வங்கியின் கடன் நடைமுறைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

125. முதல்நிலை திட்ட அறிக்கைக்கு (மு.நி.தி.அ.எண் 11626) ஒன்றிய அரசினால் பிப்ரவரி 2023-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC)

126. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) *என்பது ஒரு மாற்று முதலீட்டு நிதி மேலாண்மை நிறுவனமாகும். இது தொழில் துறை மற்றும் வணிகத் துறைகளில் தமிழ்நாட்டின் தலைமையை வலுப்படுத்த, மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதன்மூலம் பொறுப்பான பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்த வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால்* (TNIDB) *உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் 49 சதவிகித பங்குகளை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமும் 51 சதவிகித பங்குகளை நிதி நிறுவனங்களும் வைத்துள்ளன. இந்நிறுவனம் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால்* (SEBI) *ஒழுங்குபடுத்தப்படுகிறது. தமிழ்நாடு உறைவிட நிதி* (Tamil Nadu Shelter Fund) *மற்றும் தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம்* (Tamil Nadu Emerging Sector Seed Fund) *ஆகிய நிதிகளை இந்நிறுவனம் மேலாண்மை செய்து வருகிறது.*

தமிழ்நாடு உறைவிட நிதி (TNSF)

127. தமிழ்நாடு உறைவிட நிதி, உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆதரவுடன், குறைந்த விலை வீட்டுத் திட்ட நிதியில் (வாடகை மற்றும் விற்பனை ஆகிய இரண்டு மாதிரிகளிலும்) கவனம் செலுத்துகிறது. இந்த நிதி 658 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. இந்த நிதி பணிபுரியும் பெண்கள் விடுதிகள் மற்றும் தொழில் துறை வீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட நான்கு குறைந்த விலை வீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்ய 291 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. 578 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை இந்த நிதி மதிப்பீடு செய்து வருகிறது.

தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம் (TNESSF)

128. தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 27, 2023 அன்று முறையாக தொடங்கப்பட்டு ஐந்து புத்தொழில் நிறுவனங்களுக்கு

2023 ஏப்ரல் 19]

13.4 கோடி ரூபாய்க்கான அனுமதி ஆணைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம் (TNESSF), வளர்ந்து வரும் துறைகளை மையமாக கொண்டு, மேம்பாட்டு மூலதன (Venture Capital) முதலீடுகள் வடிவில் இடர் மூலதனத்தை வழங்குகிறது. இந்த நிதியானது தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் டைடல் பூங்கா (TIDEL Park) ஆகியவற்றிலிருந்து 100 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளதுடன் மேலும் நிறுவன முதலீட்டாளர்களிடமிருந்து 400 கோடி ரூபாய் திரட்டுகிறது. இன்று வரை, இந்நிதி 27.4 கோடி ரூபாய் மதிப்பிலான எட்டு முதலீடுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாடு பசுமை காலநிலை நிதி (TNGCF)

129. தமிழ்நாட்டில் பசுமை உட்கட்டமைப்பில் முதலீடுகளை அதிகரிக்க, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையானது "தமிழ்நாடு பசுமை காலநிலை நிதி (TNGCF)" என்ற நிதியை 100 கோடி ரூபாயில் அமைக்க உறுதி செய்துள்ளது. 2000 கோடி ரூபாய் முதலீட்டு இலக்குடன்கூடிய இந்நிதி தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும். பல மேம்பாட்டு நிதி நிறுவனங்கள் இந்த நிதியில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF)

130. உட்கட்டமைப்பில் தனியார் துறை பங்களிப்பை ஈர்க்கும் வகையில், 8,000 கோடி ரூபாய் இலக்கு கொண்ட "தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF)" என்ற புதிய நிதியில் 1000 கோடி ரூபாய் முதலீடு செய்ய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)மூலம் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் தனியார் துறை முதலீடுகளுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும்.

[2023 ஏப்ரல் 19

இணைப்பு – 1

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

1 (அ). உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட நிறுவனங்கள்

வ. எண்	நிறுவனங்களின் பெயர்	மொத்த எண்ணிக்கை
1	மாநகராட்சிகள்	21
2	நகராட்சிகள்	138
3	பேரூராட்சிகள்	490
4	மாவட்ட ஊராட்சிகள்	36
5	ஊராட்சி ஒன்றியங்கள்	388
6	கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 22% முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை – 12525	2839
7	பல்கலைக் கழகங்கள்	23
8	நூலக ஆணைக் குழுக்கள்	32
9	மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுக்கள்	32
10	உள்ளூர் திட்டக் குழுமங்கள்	29
11	தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்	1
12	அறக்கட்டளை பொருளாளர்	1
13	அரசர் சத்திரம்	1
14	இராஜவேதபாடசாலை	1
	மொத்தம்	4032

2023 ஏப்ரல் 19]

1(ஆ). உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்

வ. எண்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்
1.	சென்னை	மறைமலைநகர்
2.	ஆவடி	திருவண்ணாமலை
3.	காஞ்சிபுரம்	பொள்ளாச்சி
4.	கடலூர்	உதகமண்டலம்
5.	தாம்பரம்	புதுக்கோட்டை
6.	வேலூர்	கொடைக்கானல்
7.	சேலம்	பழனி
8.	கரூர்	கோவில்பட்டி
9.	மதுரை	இராஜபாளையம்
10.	திண்டுக்கல்	
11.	கோயம்புத்தூர்	
12.	திருப்பூர்	
13.	ஈரோடு	
14.	திருச்சிராப்பள்ளி	
15.	தஞ்சாவூர்	
16.	கும்பகோணம்	
17.	திருநெல்வேலி	
18.	தூத்துக்குடி	
19.	நாகர்கோவில்	

[2023 ஏப்ரல் 19

இணைப்பு – 2

கூட்டுறவுத் தணிக்கைத் துறை

2. நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் விவரம்

வ. எண்	நிர்வாகப் பதிவாளர்களின் விவரம்	கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
1.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்	8459
2.	கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர்	1356
3.	தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்	302
4.	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்	175
5.	தலைமைச் செயல் அலுவலர், பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்	734
6.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)	712
7.	மீன் வளத் துறை இயக்குநர்	1398
8.	கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் ஆணையர்	111
9.	சர்க்கரைத் துறை ஆணையர்	17
10.	வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்)	1
11.	வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர்	102
12.	பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர்	25

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 19]

வ. எண்	**நிர்வாகப் பதிவாளர்களின் விவரம்**	**கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை**
13.	*சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர்*	*126*
14.	*ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர்*	*47*
15	*துணி நூல் இயக்குநர்*	*8*
	மொத்தம்	**13573**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

இணைப்பு – 3

மாநில அரசுத் தணிக்கைத் துறை

3. மாநில அரசுத் தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்படும் முக்கியமான நிறுவனங்கள்/திட்டங்களின் விவரம்.

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
2. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
3. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
5. தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம்
6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு (சமூக பாதுகாப்பு) திட்டம்
7. நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்
8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
9. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
10. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்
11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகைத் திட்டம்
12. அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி
13. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள்
14. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
15. ஆசிரியர் தேர்வு வாரியம்
16. நிகர்நிலை பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம்
17. தமிழ்நாடு அரசு மருத்துவ உதவித் திட்டம்
18. குடும்ப பாதுகாப்பு நல நிதி
19. மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி
20. அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் (ம) பொறியியல் கல்லூரிகள்
21. அனைத்து அரசு துறைகளின் ஊதிய நிர்ணயத் தணிக்கை
22. பாராளுமன்ற/சட்டமன்ற தேர்தல் செலவின தொகை

———

2023 ஏப்ரல் 19]

இணைப்பு VI

(476 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 35-மனித வள மேலாண்மைத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்".

(குறள் 501 –தெரிந்து வினையாடல்)

(அறவழியில் உறுதியானவனாகவும், பொருள் வகையில் நாணயமானவனாகவும், இன்பம் தேடி மயங்காதவனாகவும், தன்னுயிருக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனையே ஆய்ந்தறிந்து ஒரு பணிக்கு அமர்த்த வேண்டும்)

1 (1) அரசுப் பணியாளர்களின் நிர்வாகத்திற்கென சிறப்புக் கவனம் செலுத்த வேண்டி, 1973 ஆம் ஆண்டு மாநில நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் முக்கியப் பரிந்துரைகளில் ஒன்றாக, பொதுத் துறையிலிருந்து ஒரு புதிய ஒருங்கிணைந்த துறையாக, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை 1976 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட துறையில் இரண்டு அலகுகள் முறையே பணியாளர் அலகு மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (ம) பயிற்சி அலகு என்று துவக்கத்தில் செயல்பட்டு வந்தது. இந்த இரண்டு அலகுகளும் வெவ்வேறு செயலாளர்களின் கட்டுப்பாட்டில் இருவேறு துறைகளாக இயங்கி வந்தன.

அரசுப் பணியாளர்களின் சேவையின் தரத்தை உயர்த்துவதற்காக, அவர்களுடைய பணி மற்றும் பயிற்சிகள் தொடர்பான நிருவாக அமைப்புகளை வலுப்படுத்துவதும், பராமரிப்பதும் முக்கியப் பணிகளாக உள்ளன. அதன் காரணமாக, இத்துறையின் பணியமைப்பினைச் செம்மைப்படுத்துவதற்காக, தனித்தனியே இருவேறு துறைகளாக செயலாற்றி வந்த நிலையை

மாற்றி, இரு துறைகளையும் இணைத்து, ஒரே துறையாக, அதாவது, மனித வள மேலாண்மைத் துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதற்கேற்றவாறு, அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே கணித்தலும் மற்றும் மனித வளம் தொடர்புடைய வழிகாட்டு நெறிமுறைகள், விதிகள், நடைமுறைகளைப் பின்பற்றுதலும், அவற்றை தொடர்ச்சியாக கண்காணிப்பதும் இத்துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. பொது மக்களுக்காக ஆற்றும் சேவையைப் பொறுப்புடனும், அவர்களின் தேவைகளை முன்னரே அறிந்து செயல்படும் நோக்குடனும், அரசின் சேவைகளை அவர்கள் எளிதில் பெறுவதற்குரிய பணிகளை செவ்வனே ஆற்றும் அரசுப் பணியாளர்களை ஊக்கப்படுத்துவதும், பாராட்டுவதும் மனித வளத்தை மேம்படுத்தும் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

அரசுப் பணிக்கான உரிய நபர்களைத் தேர்ந்தெடுத்தலும், பயிற்சி அளித்தலும், ஒழுங்குபடுத்துதலும், அவர்களுக்கு உரிய பதவி உயர்வுகளை வழங்குதலும் மனித வள மேலாண்மைத் துறையின் உன்னதப் பணிகளாகும்.

பொது மக்களுக்கான சேவையை மேம்படுத்துதலில், சிறந்த முன்முயற்சிகள் குறித்த விவரங்களை மாநிலம் முழுவதும் பரவச் செய்தல் இத்துறையின் தலையாயக் கடமையாகும். அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் பரிசு அளிக்கப்படுகிறது. இவ்வாறு புதிய முயற்சிகளின் விவரங்கள் பகிரப்படுவதன் மற்றொரு பயனாக பிற அலுவலர்களின் சேவைத் திறனும் அனுபவப் பகிர்வுமூலம் மேம்படுகிறது.

அரசுப் பணியாளர்களின் திறன் மேம்பாடு என்பது பொது மக்களுக்கான சேவையின் தரத்தை உயர்த்தும் உயரிய நோக்கத்தினை உள்ளடக்கியது. இதனடிப்படையிலான இத்துறையின் குறிக்கோள் பின்வருமாறு:-

"மகத்தான மனித வளம்
அதன்மூலம் மக்கள் நலம்"

2023 ஏப்ரல் 19]

1(2) இத்துறை மேற்கொள்ளும் செயல்பாடுகள் பின்வருமாறு:

(அ) சட்டபூர்வ பணிகள்

(ஆ) நிருவாகப் பணிகள்

(இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்

(ஈ) பயிற்சி

1(2)(அ) சட்டபூர்வ பணிகள்

மனித வளங்களின் செம்மையான செயல்பாடுகள்மூலம் சேவைத் தரத்தை வழங்குவதற்கு, நிருவாகத்திலும், தெளிவுரை வழங்குவதிலும், சமத்துவத்தைக் கடைபிடிக்கும் வகையில் உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இத்துறையால் நிருவகிக்கப்படுகின்றன.

இத்துறையால் நிருவகிக்கப்படும் முக்கியச் சட்டங்கள் பின்வருமாறு:-

- *தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016* [*தமிழ்நாடு சட்டம் எண் 14/2016*];
- *தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் எண் 33/2018);*

1(2)(ஆ) நிருவாகப் பணிகள்

பணியாளர்கள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அனைத்துத் துறைகளும் பின்பற்றுவதை மனித வள மேலாண்மைத் துறை உறுதிப்படுத்துகிறது. இவற்றைத் திறம்பட செயலாக்கத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் புதுப்பித்திடவும், எளிமைப்படுத்திடவும் இத்துறை உரிய ஆலோசனைகளை வழங்குகிறது.

பணி விதிகள்

- *தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.*
- *தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.*

[2023 ஏப்ரல் 19

- *தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955.*

- *தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.*

- *தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.*

- *தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள், 1971.*

- *தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.*

- *தமிழ்நாடு பொதுப் பணிக்கான சிறப்பு விதிகள், 1969 இனம்* XII *மற்றும்* XII-A.

- *தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள்-இனம்* XXII

அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள் தொடர்பான விதிகள்

- *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954.*

- *தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005.*

- *தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012.*

- *தமிழ்நாடு தகவல் ஆணையப் பணி விதிகள், 2017.*

- *தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள், 2018.*

1(2)(இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்:-

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வரையறுத்து செயல்படுத்தும் துறையாக இத்துறை இருப்பதால்,

2023 ஏப்ரல் 19]

பல்வேறு வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டக் கூறுகள் உள்ளிட்ட ஏனைய பின்வரும் நேர்வுகளில் இத்துறையை தலைமைச் செயலகத் துறைகள் கலந்தாலோசிக்கின்றன:-

- *காலியிடங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பல்வேறு பதவிகளுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.*
- *பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவ விளம்பல் நேர்வுகளில் தெளிவுரைகள் வழங்குதல்.*
- *அடிப்படை விதிகளில் தெளிவுரைகள் வழங்குதல்.*
- *முதுநிலை திருத்தம் தொடர்பான கருத்துருக்களை ஆய்வு செய்தல்.*
- *சிறப்பு/தற்காலிக விதிகளை உருவாக்கவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும், ஆலோசனை வழங்குதல்.*
- *அரசுப் பணியாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்.*

1(2)(ஈ) பயிற்சி

அரசு ஊழியர்களின் திறமையையும் அறிவையும் தொடர்ந்து மேம்படுத்தி, அவர்களின் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றும் வகையில், அடிப்படை மற்றும் இடைநிலைப் பயிற்சிகளை அளிப்பது இத்துறையின் முக்கியச் செயலாகும்.

1 (3) இத்துறையின் குறிக்கோள்கள் பின்வரும் அரசமைப்பு, சட்டரீதியான அமைப்புகள் மற்றும் துறைத் தலைமையிலான நிருவாக அமைப்புகளால் செயல்படுத்தப்படுகின்றன:—

அ) அரசமைப்பு நிறுவனம்

- *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்*

ஆ) சட்டரீதியான அமைப்புகள்

- *தமிழ்நாடு தகவல் ஆணையம்*
- *தமிழ்நாடு லோக் ஆயுக்தா*
- *விழிப்புப் பணி ஆணையம்*

[2023 ஏப்ரல் 19

- ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

இ) துறைத் தலைமைகள்

- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்
- பயிற்சித் துறைத் தலைவர்

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன்கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், ஒரு தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டதாகும். தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள், 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் நிருவகிக்கப்படுகின்றன.

மாநில அரசுக்குத் தேவையான மனித வளத்தினை தெரிவு செய்து அளிக்கும் பணியில் தேர்வாணையம் முதன்மைத் தெரிவு முகமையாக செயல்பட்டு வருகின்றது. அரசுத் துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு தகுதிகளும், திறனறிவும் கொண்ட நபர்களைத் தேர்வாணையம் தெரிவு செய்கிறது. இயற்கை இடர்பாடாக இருந்தாலும், செயற்கை விபத்தாக இருந்தாலும், மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலாக இருந்தாலும், கட்டமைப்புகளை விரிவாக்கும் களப் பணிகளாக இருந்தாலும், அரசு தம் பணியாளர்களைக் கொண்டு மகத்தான பணிகளை ஆற்றுவதற்காக முழு தகுதியும் திறமையும் கொண்ட நபர்களைத் தெரிவு செய்திடும் பணியினைத் தேர்வாணையம் உறுதி செய்கிறது. மக்கள் சேவை அனைத்திலும் அரசே முன் நிற்கிறது. அவ்வாறே அதன் பணியாளர்களும் உள்ளனர்.

2(1) பொதுவான பணிகள்

அரசுப் பணிகளுக்கு பணியாளர்களைத் தெரிவு செய்வது மட்டுமின்றி அப்பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளையும் நடத்தி அவர்களை அரசுப் பணியின் முழு உறுப்பினராக வழிவகை செய்வதுடன், அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநிலப்

2023 ஏப்ரல் 19]

பணிகள் சார்ந்த அலுவலர்களுக்கான மொழித் தேர்வுகளையும் ஆண்டிற்கு இருமுறை நடத்துகிறது. இதுமட்டுமின்றி, ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சார்பாக டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரியில் மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வுகளையும் தேர்வாணையம் நடத்துகிறது.

மேலும், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது குறித்தும், அரசுப் பணியாளர்கள் தொடர்பான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

ஆண்டு திட்ட அட்டவணை

தேர்வர்கள் தங்களை முன்னதாகத் தயார் செய்துகொள்ள ஏதுவாக, ஒவ்வோர் ஆண்டும் தொடங்குவதற்கு முன்னரே, தேர்வாணையம் போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணையை வெளியிடுகிறது. மேலும், தேர்வர்களின் வசதிக்காக, பல்வேறு தேர்வுகளுக்கான நடைமுறைகள், பாடத்திட்டங்கள் உள்ளிட்ட விவரங்கள் தேர்வாணையத்தின் வலைதளத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

2(2) தெரிவு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல்

அரசுப் பணிகளுக்கான தெரிவுகளில், பொருத்தமான தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகள் வெளிப்படைத் தன்மையுடனும், நேர்மையுடனும் நடத்தப்படுகின்றன என்ற பெரும் நம்பிக்கையை வேலைவாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்திருப்போர்களின் மனங்களில் ஏற்படுத்தும்வண்ணம் தேர்வாணையம் முனைப்புடன் செயல்படுகிறது.

(i) மதிப்பீடு செய்தலில் தேர்வர்களின் பங்கேற்பு

- ✓ தெரிவு செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையைக் கடைபிடிக்கும் வகையில் தேர்வு முடிவடைந்த உடன் கொள்குறி வகைக்குரிய உத்தேச

விடைகள் (Answer Keys) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன.

- ✓ தேர்வர்களுக்கு விடைகள் குறித்து ஏதேனும் மறுப்பு இருப்பின் அதுகுறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்படுகிறது.
- ✓ வினாக்களின் சரித்தன்மை மற்றும் விடைகள் குறித்து தேர்வர்களின் கருத்துகளை உடனடியாகக் கருத்தில் கொண்டு, இணைய வழியில் இறுதி விடைகள் (Final Answer Keys) விரைவாக வெளியிடப்படுகின்றன.

(ii) தொழில்நுட்ப அடிப்படையிலான பாதுகாப்புகள்:-

- ✓ தேர்வு நடைமுறைகளில் கண்காணிப்பினைப் பலப்படுத்தும் பொருட்டு, தேர்வு நடைபெறும் அனைத்துத் தேர்வு மையங்கள்/அறைகள், ஒளிப்பதிவுக் கருவிகளின் வழியாக (videographing) கண்காணிக்கப்படுகின்றன.
- ✓ அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தேர்வு எழுதுபவர்களின் பெயர், பதிவு எண், புகைப்படம் போன்ற அனைத்து விவரங்களும் அச்சிடப்பட்ட தன்விவர கொள்குறி விடைத்தாட்கள் (Personalised OMR) வழங்கப்பட்டு வருகின்றன.
- ✓ வெளிமாவட்ட மையங்களிலிருந்து தேர்வாணையத்திற்கு மந்தணத் தன்மை கொண்ட பொருட்களைக் கொண்டுவரும் வாகனங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு, முழுவதும் பதிவு செய்யப்படுகின்றன.
- ✓ தேர்வு தொடர்பான பொருட்களைக் கொண்டு வரும் குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் அவற்றின் வழித்தட நகர்வுகளைக் கண்காணிக்கும்பொருட்டு, புவியிடம் காட்டும் (GPS) பூட்டுகள்மூலம் திறந்தும் மூடும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ புவியிடம் காட்டும் (GPS) பூட்டுகள் திறப்பதற்கான தொலைதூரக் கட்டளைகள் தேர்வாணைய அலுவலகத்தில் இயங்கும் கண்காணிப்புக் குழுவினரால் மட்டுமே வழங்க இயலும்.

- ✓ தேர்வு தொடர்பான மந்தணத் தன்மை கொண்ட பொருட்களைக் கொண்டுவரும் வாகனங்களை ஒரு வருவாய் அலுவலர், காவல் துணை ஆய்வாளர், தேர்வாணைய அலுவலர் ஆகியோர் கொண்ட வழிக்காவல் குழு (Escort) மூலம் பின்தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

2(3) ஒரு முறை பதிவு செய்தல்

(i) பதிவுகளும் தரவுகளும்

- ✓ தேர்வர்கள் தமது கையொப்பம் மற்றும் புகைப்படம் உள்ளிட்ட தன் விவர குறிப்புகளைத் தரவு தளத்தில் 'ஒரு முறை பதிவு செய்யும்' (One Time Registration) முறை செயல்பாட்டில் உள்ளது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக் கொள்ளலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப் பதிவு அடையாள விவரங்களை (Identification) உருவாக்குவதைத் தடுக்கும் வகையில், விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பதிவுடன் ஆதார் விவரங்களை இணைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ii) இணைய வழி விண்ணப்பம்

- ✓ தேர்வாணையம், இணைய வழியில், பொதுச் சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளதால் தேர்வர்களுக்கு நேரும் பயணச் செலவும், கால விரயமும் தவிர்க்கப்படுகிறது.
- ✓ அனைத்துத் தேர்வுகளுக்கும், இணையதளம் வழியாக மட்டுமே விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

(iii) ஒருங்கிணைந்த கைப்பேசி செயலி

- ✓ அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் விண்ணப்பதாரர்கள், மாநிலத்தின் தெரிவு முகமைகள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கும், விண்ணப்பத்தினை எளிதாக பதிவேற்றம் செய்யவும் ஒருங்கிணைந்த கைப்பேசி செயலி ஒன்று முன்னோடியாக செயலாக்கப்பட்டு வருகிறது.

(iv) தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கலந்தாய்வு

- ✓ *அலகு/பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுவதுடன், காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்களும் தேர்வாணைய இணையதளத்தில் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன.*

(v) மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள்

- ✓ *மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் அனைத்துத் தேர்வு மையங்களையும் சுலபமாக அணுகுவதற்கு ஏதுவாக, அவர்களுக்கு தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு தேர்வாணையம் வசதி செய்து கொடுத்துள்ளது. தேவை ஏற்படின், எழுத்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், எழுத்துத் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் பயன்பெறும் வகையில், தேர்வு எழுதுவதற்கு கூடுதல் நேரம் வழங்கப்படுகிறது. அவ்வாறே தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு கலந்தாய்வு வசதிகளும் அளிக்கப்படுகின்றன.*

2(4) துறை பதவி உயர்வுக் குழு

உயர்நிலை அரசுப் பணியாளர்களின் பதவி உயர்வு தொடர்பான நேர்வுகளிலும் தேர்வாணையம் பங்கேற்பதுடன், துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களைக் கூர்ந்தாய்ந்து பரிந்துரைக்க ஒற்றைச் சாளர முறை தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது.

பதவி உயர்வு மற்றும் மாறுதல்மூலம் பணி நியமனம் பெறும் தொகுதி-A ஊதிய நிலை 25-க்குமேல் உள்ள நுழைவு நிலையிலான பதவிகள் மட்டும் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றன. ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கான கருத்துருக்கள் அந்தந்தத் துறைகளுக்கான பதவி உயர்வுக் குழுவின்முன் வைக்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 19]

2(5) கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு

மாநிலத்தில் உள்ள அனைத்து தெரிவு முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, 2016 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில் உரிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

2(6) துறைத் தேர்வுகள்

தேர்வாணையம் மே 2021 ஆம் ஆண்டு முதல் பதவி உயர்வுக்குத் தேவையான துறைத் தேர்வு முடிவுகளைச் செம்மைப்படுத்தி, விரைந்து வெளியிடுவதற்கு கணினி அடிப்படையிலான தேர்வுமுறைகளை அறிமுகப்படுத்தி நடத்தி வருகிறது.

2(7) தேர்வாணையத்திற்குக் கூடுதல் பணிகள்

அரசுத் துறைகள் மற்றும் அரசின் பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களின் தெரிவு சீராக அமைய வேண்டி, அரசின் பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்பூர்வமான வாரியங்கள், குழுமங்கள் உள்ளிட்ட அமைப்புகளில் உள்ள சில பணியிடங்களை நிரப்பும் வகையில் தேர்வாணையத்திற்குக் கூடுதல் பணி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம், 2022 மற்றும் அதற்குரிய விதிகள் ஆகியவை இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டம் 17-3-2022 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்டத்தின் அடிப்படையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஆவின் ஆகிய நிறுவனங்களிலிருந்து சில பதவிகளுக்கான ஆட்களைத் தெரிவு செய்து தருமாறு தேர்வாணையத்திற்குக் கோரிக்கைகள் வரப்பெற்று, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

2(8) ஆண்டறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வோர் ஆண்டும் மாநிலச் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 19

2(9) தெரிவுகளில் போக்கு

மாநிலத்தின் பணியாளர் தெரிவு விவரங்கள் வரைபடங்களாக பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்காக, அவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள தகவல்களைக் குடிமக்களுக்கு வழங்குவதற்கு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழிவகுக்கின்றது. மக்களாட்சியின் உண்மையான உணர்வை வெளிப்படுத்துவதுடன் ஆளுமையில் மக்களின் பங்கேற்பை இச்சட்டம் உறுதி செய்கிறது. இதனடிப்படையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, மாநில தகவல் ஆணையத்தால் செயல்படுத்தப்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்படி 7-10-2005 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. தகவல் ஆணையம் ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் ஆறு தகவல் ஆணையர்களைக் கொண்டதாகும்.

பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுதாரர் கோரும் தகவலைக் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் வழங்குவதற்குப் பொறுப்பானவர். அதன் மீதான மேல்முறையீடு, பொது அதிகார அமைப்பினால் பதவியமர்த்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரால் தீர்வு செய்யப்படுகிறது. இதன் பின்னர் பெறப்படும் மேல்முறையீடுகள் மாநில தகவல் ஆணையத்தால் மேற்படி சட்டத்தின்படி தீர்வு செய்யப்படுகின்றன.

பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்வதற்கும் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கும் பொதுமக்களுக்கு இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

மேலும், அனைத்துத் துறைகளும் தத்தமது துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் இதர பொது முக்கியத்துவம் வாய்ந்த விவரங்கள் அனைத்தையும் தாமாகவே முன்வந்து வெளியிட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 19]

3(1) இணைய வழி சேவை

தகவல்களைப் பொதுமக்கள் எளிதாகப் பெறுவதற்காக இணையவழி சேவை படிப்படியாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*அதன்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இணைய வழியில் (*www.rtionline.tn.gov.in*) கட்டணம் செலுத்தி தாக்கல் செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*இரண்டாவது மேல் முறையீடுகளையும் இணையவழியில் தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்குப் பட்டியல்கள் மற்றும் முடிவுகள் ஆணையத்தின் இணையதளத்தில் (*www.tnsic.gov.in*) பதிவேற்றம் செய்யப்படுகின்றன. மேலும், ஆணையத்தால் இம்மனுக்கள் காணொலி (*Virtual Mode*) முறையிலும் விசாரிக்கப்படுகின்றன.*

25-6-2021 முதல் மனித வள மேலாண்மைத் துறையில் மனுக்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு மனுக்கள் இணைய வழியில் பெறப்பட்டு, தகவல்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, 8-8-2022 முதல் இவ்வசதி தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 14-2-2023 முதல் இவ்வசதி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள துறைத் தலைமை அலுவலகங்களிலும், நில அளவை இயக்குநரகத்தின்கீழ் உள்ள மாவட்ட அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் படிப்படியாக இது நடைமுறைப்படுத்தப்படும்.

3(2) மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் பெறும் வசதி

பார்வைத்திறன் குறைபாடு உடையோர்களின் கோரிக்கையின் பேரில், ஆணையத்தின் ஆணைகள், பிரெய்லி எழுத்து வடிவில் வழங்கப்படுகிறது. சென்னையில் அமைந்துள்ள பார்வையற்ற நபர்களுக்கு அதிகாரமயமாக்குதலுக்கான தேசிய நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் இச்சேவை வழங்கப்படுகிறது. இச்சேவை வழங்குவதில் இவ்வாணையம் நாட்டிலேயே முன்னோடியாகத் திகழ்கிறது.

3(3)உதவி மையம்

பொதுமக்கள் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு, விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை வழங்கும் வகையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வளாகத்தில் ஓர் உதவி மையம் (Help Desk) செயல்பட்டு வருகிறது. மேலும், ஆணையத்தில் இரண்டாவது மேல்முறையீடுகளின் நிலையைப் பார்வையிடுவதற்கும் உதவுகிறது.

3(4) தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த பயிற்சி

இச்சட்டத்தின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றவும், நிலுவையில் உள்ள மனுக்களைக் குறைக்கவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்கள் மற்றும் மேல்முறையீடுகளைத் தீர்வு செய்வதற்கு மாநிலம் முழுவதும் உள்ள பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.

3(5) ஆண்டு அறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வோர் ஆண்டும் மாநிலச் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

3(6) நிலையான வளர்ச்சி இலக்குகள்

நிலையான வளர்ச்சி இலக்குகளைப் பொறுத்தவரை, பின்வரும் விவரங்கள் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துகின்றன:-

- ✓ மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் 3 இலட்சத்திற்கும் அதிகமான தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்கள் பெறப்பட்டு, அவை, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி, பொதுத் தகவல் அலுவலர்களால் தீர்வு செய்யப்படுகின்றன.
- ✓ அரசு அலுவலகங்களில் தகவல் கோரி வருகின்ற பொதுமக்களின் வருகை கணிசமாகக் குறைந்துள்ளது. (குறியீடு எண் 16.6.3)

2023 ஏப்ரல் 19]

- ✓ *பொது மக்களால் கோரப்படும் தகவல்கள், கால வரம்புக்குள் அளிக்கப்பட்டு வருகின்றன. (குறியீடு எண்கள் 16.6.2 மற்றும் 16.10.1)*

4. மாநில விழிப்புப் பணி ஆணையம்

4 (1) தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையம் 1965 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பொதுப் பணிகளில், ஊழல் தடுப்பு நடவடிக்கைகள், தூய நிருவாகம் உள்ளிட்ட அலுவல் ரீதியான பணிகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், இவ்வாணையத்தின் முதன்மையான பணிகளாகும். ஊழல் குறித்த ஒவ்வோர் இனங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதலும் இவ்வாணையத்தின் பணியாகும். மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொது ஊழியர்கள்மீது விழிப்புப் பணி ஆணையம் தமது வரம்பினைக் கொண்டுள்ளது.

4(2) விழிப்புப் பணி ஆணையத்தின் நோக்கங்கள்:

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தைத் தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார்மீது விசாரணை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்;

(ii) இதற்காகத் தேவைப்படும் தகவல் அல்லது புள்ளிவிவரங்களை சேகரித்தல்; மற்றும்

(iii) ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை எந்தவொரு அரசுத் துறை அல்லது அரசு நிறுவனங்களிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

[2023 ஏப்ரல் 19

5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

5(1) பொது நிர்வாகத்தில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை திறம்படக் கையாளும் பொருட்டு, முறைப்படுத்தப்பட்ட முதல் இயக்கமாக 1964-ல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்ககத்திற்கு காவல் துறை இயக்குநர் (DGP) நிலையில் ஓர் இயக்குநர் தலைமை வகிக்கிறார். இயக்குநருக்கு உறுதுணையாக இணை இயக்குநர், துணை இயக்குநர், காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் சட்ட அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். இவ்வியக்ககத்தின்கீழ் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

5(2) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தின் முக்கியப் பணிகள்

(i) மாநில அரசு, மாநில விழிப்புப் பணி ஆணையம் மற்றும் லோக் ஆயுக்தா ஆகியவற்றால் பரிந்துரைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது தொடர்பான முறைகேடுகளின்மீது விசாரணைகள்/புலனாய்வு மேற்கொள்வது.

(ii) இவ்வியக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களை மாநில விழிப்புப் பணி ஆணையத்துக்கு சமர்ப்பித்தல்.

(iii) பொது ஊழியர்கள்மீது சாட்டப்படும் ஊழல் தொடர்பாக, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின்மீது விசாரணை மேற்கொள்வது.

(iv) ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பெறப்படும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்களில் நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து ஊழல் தடுப்புச் சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தச்) சட்டம் 2018-ன்படி புலனாய்வு செய்வது.

2023 ஏப்ரல் 19]

(V) உரிய ஆதாரங்களுடன்கூடிய புகார்களின் அடிப்படையில், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களை, இலஞ்சம் வாங்கும்பொழுது, தகுந்த முறைகளைப் பின்பற்றி பொறி வைத்து கையும் களவுமாகப் பிடித்தல்.

5(3) ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய எட்டு இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மேலும், மாநிலம் முழுவதும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முதன்மை அமர்வு நீதிபதிகளுக்கும், மாவட்ட சிறப்பு நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகளுக்கும், ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

5(4) வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்கும் எளிமையான அணுகுமுறையை ஊக்குவிப்பதற்கும், அவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வழக்குகளில் ஊழல் புகார்கள் தொடர்பான வழக்குகளின் ஆண்டு வாரியான புள்ளிவிவரங்கள் இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. மின்னஞ்சல் வாயிலாகப் பெறப்படும் புகார்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

5(5) காவல் துறையில் உள்ள சட்டம்-ஒழுங்கு மண்டலங்களைக் கருத்தில் கொண்டு, (i) சென்னை நகர சரகம் (ii) வடக்கு சரகம் (iii) மேற்கு சரகம் (iV) மத்திய சரகம் மற்றும் (V) தெற்கு சரகம் என ஐந்து சரகங்கள் இவ்வியக்ககத்திலும் உருவாக்கப்பட்டுள்ளன. 46 பிரிவு அலுவலகங்கள் இச்சரகங்களின் வரம்புகளுக்கு உட்பட்டவையாகும். இதுதவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மீதான வழக்குகள்/விசாரணைகளை விசாரிப்பதற்காக, சென்னை சரகத்தில் ஒரு சிறப்புப் புலனாய்வு பிரிவு (SIC) ஏற்படுத்தப்பட்டு, கடந்த 1996 முதல் இயங்கி வருகிறது.

5(6) வருமானத்திற்கு அதிகமாக சொத்துக் குவிப்பு வழக்குகள்/ விசாரணைகள் சம்பந்தமாக, விவசாயம்/தோட்டக்கலைமூலம்

பெறப்பட்ட வருவாய் விவரங்கள், வருமான வரித் துறையிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் ஆகியவற்றை கூர்ந்தாய்வு செய்வது குறித்து மேற்பார்வை/விசாரணை அதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. சமீபகாலத்திய நீதிமன்றத் தீர்ப்புகள் பற்றி அவ்வியக்கக சட்ட அலுவலர்களுக்கு கலந்தாய்வு வகுப்புகளும் நடத்தப்பட்டன.

5(7) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாத இறுதி வாரத்தில் விழிப்புணர்வு வார விழா நடத்தப்படுகிறது. அதன்படி, கடந்த 2022 ஆம் ஆண்டு பின்வரும் நிகழ்வுகளின் வாயிலாக விழிப்புணர்வு வார விழா கொண்டாடப்பட்டது:-

- மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்பு விழிப்பு தொடர்பான நிகழ்வுகள் பல அரசு அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் நடத்தப்பட்டு, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

- கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களிடையே கட்டுரை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரிக்கும் போட்டிகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அதிகாரிகள் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

- விழிப்புணர்வுப் பதாகைகளை ஏந்திய மாணவர்களின் பேரணியும், இரண்டு சக்கர வாகனப் பேரணியும் நடத்தப்பட்டன.

- தமிழ்நாடு முழுவதும் கல்லூரி மாணவர்களால் தெருமுனை பிரச்சாரங்கள் மூலமாக கண்காணிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

5(8) வருமான வரி, வங்கிகள் மற்றும் பொருளாதார கணக்கு விவரங்கள் தொடர்பான பெருமளவிலான கணக்கு விவரங்களையும், பதிவேடுகளையும், நிறுவனங்களின் பதிவாளர்களிடமிருந்து பெற்று கூர்ந்தாய்வு செய்யவும்,

2023 ஏப்ரல் 19]

மின்னணுக் கருவிகளான கணினி வன்பொருள், மடிக்கணினிகள், கைபேசிகள் போன்றவற்றின் விவரங்களைக் கூர்ந்தாய்வு செய்யவும் இவ்வியக்கக விசாரணை அதிகாரிகளுக்கு உதவி செய்யும் நோக்கில் (i) பட்டயக் கணக்கர்கள் (ii) ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் (iii) வருமான வரி அலுவலர்கள் மற்றும் (iv) இணையதள குற்ற தடயவியல் நிபுணர்கள் போன்ற பலதரப்பட்ட நிபுணர்களின் சேவைகளைப் பெற அனுமதி அளித்திருப்பதுடன், மேற்படி கூர்ந்தாய்வுக்குத் தேவையான மென்பொருட்களை வாங்கவும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

6. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்

6(1) மாநில அரசிலும், நகராட்சி நிர்வாக அமைப்புகளிலும் பணிபுரிந்துவரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட அமைப்பே ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் பணியாளர்கள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின் பொருட்டு, தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களைக் கோருவதற்கான நீதிமுறை சார்ந்த அதிகாரத்தையும் கொண்டுள்ளது. இவை யாவும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்கின்றன.

*6(2) சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் செயல்படும் இத்தீர்ப்பாயங்களில் வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவி புரியும் வகையில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் உள்ள சட்ட நடவடிக்கை தொடர்புடைய வழக்குரைஞர்களின் (*Prosecutors for Disciplinary Proceedings*) சட்டக் கருத்துகள்/ஆலோசனைகள் பெறப்படுகின்றன. வழக்கின் மீதான விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலர் தொடர்புடைய அரசு நிருவாகத்*

துறைக்கு தீர்ப்பாயத்தால் அனுப்பப்படும். அவ்வறிக்கையினை ஆய்வு செய்து ஒழுங்கு நடவடிக்கை மீதான இறுதி ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

6(3) துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள்

- ➢ அரசுப் பணியாளர்கள் தங்களது பணியில் ஏற்பட்ட குறைபாடுகளுக்காக, பொறி வைத்துப் பிடிக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவது உள்ளிட்ட குற்ற வழக்குகளின் தொடர்ச்சியாக அவர்கள்மீது எடுக்கப்படுகின்ற துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ➢ அரசுப் பணியாளர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நேர்வுகளைப் பொறுத்தவரையில், பணியிடை நீக்கம் தொடரலாமா அல்லது இரத்து செய்து மீண்டும் பணியில் சேர்க்கலாமா என்பது குறித்து உரிய அலுவலரால் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- ➢ ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், அதன் ஒவ்வொரு நிலையிலும் வரையறுக்கப்பட்ட கால அளவுகளை தவறாமல் பின்பற்றி, காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டி, அவற்றில் இறுதி ஆணைகள் விரைவாக வெளியிடப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

6(4) தேவையற்ற நடவடிக்கைகளைத் தவிர்த்து, பணிகளில் எவ்வித தொய்வும் ஏற்படாத வண்ணம், பணியாளர்கள் மீதான துறை ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் தற்காலிகப் பணியிடை நீக்க நேர்வுகள் குறித்து நிர்வாகத் துறைகள் அனைத்தும் அவற்றை ஆய்வு செய்திட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

7. தமிழ்நாடு லோக் ஆயுக்தா

7(1) லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013-ன் பிரிவு 63-க்கிணங்க தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம்,

2023 ஏப்ரல் 19]

2018, தமிழ்நாடு சட்டமன்றத்தால் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்டம் 13-11-2018 அன்று நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு லோக் ஆயுக்தா 21-4-2019 முதல் செயல்படத் துவங்கியது.

7(2) தமிழ்நாடு லோக் ஆயுக்தா, நீதி முறை சார்புடைய அமைப்பாகும். பொது ஊழியர்களுக்கு எதிரான ஊழல் மற்றும் அது தொடர்பான புகார்களை விசாரிப்பதற்காக தமிழ்நாடு லோக் ஆயுக்தா ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7(3) மாநிலம் முழுவதிலிருந்தும் வரும் புகார்கள், தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018, அதன் கீழான விதிகள், ஊழல் தடுப்புச் சட்டம், 1988 மற்றும் தொடர்புடைய சட்டங்களின்கீழ் பரிசீலனை செய்யப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7(4) தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டத்தின் நோக்கம் தூய்மையான நிருவாகத்தையும், வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புணர்வையும், செம்மையான நிருவாகத்தையும் உறுதிப்படுத்துவதாகும்.

7(5) தமிழ்நாடு லோக் ஆயுக்தா, தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை கொண்டதாகும். பல்வேறு நிலைகளிலான 103 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

7(6) சென்னை, கிண்டியிலுள்ள திரு.வி.க. தொழிற்பேட்டை, சிட்கோ வளாகத்தில் 6 மற்றும் 7-வது தளங்களில் தமிழ்நாடு லோக் ஆயுக்தா செயல்பட்டு வருகிறது.

7(7) தமிழ்நாடு லோக் ஆயுக்தாவினை மேலும் வலுப்படுத்துதல்

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பொது அதிகார அமைப்பினர்மீது அளிக்கப்படும் ஊழல் புகார்களை விசாரிக்கும் பொருட்டு தமிழ்நாடு லோக் ஆயுக்தாவினை மேலும் வலுப்படுத்துதல் மற்றும் அதற்குத் தகுந்த அதிகாரமளிக்கும் வகையில், பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

- பெரும்பாலான மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு லோக் ஆயுக்தா தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களுடன் முழுமையாக செயல்பட்டு வருகிறது.
- லோக் ஆயுக்தாவின் சிறப்பான செயல்பாட்டிற்காக, தேவையான நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், போதுமான பணியாளர்களும் வழங்கப்பட்டு, காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்படுகின்றன.
- கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.3,32,764/- கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் அதிகாரபூர்வ வலைதளத்தினை நிறுவுவதற்காக ரூ.1,11,274/- வழங்கப்பட்டுள்ளது.
- அலுவலக வளாகம் மற்றும் உபகரணங்களைப் பராமரிக்கும்பொருட்டு ரூ.79.45 இலட்சம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- இந்திய செயலக பயிற்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட, செயல்திறன் மேம்பாடு பயிற்சியில் கலந்து கொள்ளும்பொருட்டு, சார்புச் செயலாளர் நிலையில் இரு அலுவலர்களை அனுப்புவதற்காக தமிழ்நாடு லோக் ஆயுக்தாவிற்கு ரூ.94,398/- நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக, போதுமான பணியாளர்களைப் பணியமர்த்தி தமிழ்நாடு லோக் ஆயுக்தாவினை வலுப்படுத்தியுள்ளதுடன், அதற்குத் தேவையான அலுவலகம், வாகனங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

8. ஆய்வுப் பிரிவு

8(1) அலுவலக நிர்வாகத்தில் செயல்திறனை மேம்படுத்தவும், காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள், தலைமை அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் ஆகியவை ஆய்வுப் பிரிவின் அலுவலர்களால் கால முறையில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அலுவலக நடைமுறைகள் குறித்த குறுகிய கால பயிற்சிகளும் பல்வேறு துறைகளைச்

2023 ஏப்ரல் 19]

சார்ந்த அலுவலர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் அளிக்கப்பட்டு வருகின்றன.

8(2) தலைமைச் செயலகத்தில் மூன்று ஆய்வுக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அரசு துணைச் செயலாளர்/மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள அலுவலர்களின் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் இந்த ஆய்வுக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக முதனிலை ஆய்வு செய்யும். ஆய்வுக்குப் பிறகு, முதனிலை ஆய்வுக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின்பேரில், குறைகளைவு அறிக்கை அளிக்க வேண்டி ஆய்வுக் குறிப்புகள் அந்தந்த அலுவலகத்திற்கு வழங்கப்படுகின்றன. அவ்வலுவலகத்திலிருந்து குறைகளைவு அறிக்கை பெறப்பட்ட பிறகு, இறுதி ஆய்வு, இந்திய ஆட்சிப் பணி அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது. இறுதி ஆய்வு அலுவலர் அளிக்கும் பொதுவான கருத்துக்களின் அடிப்படையில், தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையால், தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆய்வுக் குழுவிற்கு நகல் அனுப்புவதுடன், அவை பதிவு செய்து கொள்ளப்படும்.

8(3) மாநிலத்திலுள்ள அனைத்து அலுவலகங்களிலும், மாவட்ட அளவில் அமைந்துள்ள 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. துணை ஆட்சியர் தலைமையில் உள்ள ஆய்வுக் குழு அலுவலருடன் ஒவ்வொரு மாவட்ட ஆய்வுக் குழுவும், வட்டாட்சியர் நிலையில் உள்ள துணை ஆய்வுக் குழு அலுவலர் மற்றும் இதர பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இக்குழுக்கள், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலகங்களில் வருடாந்திர ஆய்வு மேற்கொள்வதுடன், திடீர் ஆய்வும் மேற்கொள்ளும். ஒழுங்குமுறை நடைமுறைகள், அலுவலக நடைமுறைகள் போன்றவற்றில் மாவட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துவதும் ஆய்வுக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் ஒன்றாகும். மேலும், அந்தந்த மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புத் துறையினரால் மேற்கொள்ளப்படும் ஊழல் தொடர்பான திடீர் சோதனைப் பணிகளிலும், இந்த ஆய்வுக் குழுக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

8(4) 2022-2023 ஆம் ஆண்டு, மார்ச் 2023 வரையிலான காலத்தில், தலைமைச் செயலக துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் வாரியங்களில், இத்துறையின் ஆய்வுக் குழுக்களால் 4 முதனிலை ஆய்வுகள் மற்றும் 12 இறுதி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8(5) மேலும், 2022-2023 ஆம் ஆண்டு, மார்ச் 2023 வரையிலான காலத்தில், மாவட்ட ஆய்வுக் குழுக்கள், 120 ஆண்டாய்வுகள் மற்றும் 2828 திடீர் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் 92 கண்காணிப்புக் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

8(6) மேற்கண்ட பணிகளுடன், தேவைக்கேற்ப சிறப்பு ஆய்வுப் பணிகளும் ஆய்வுக் குழுக்களுக்கு அளிக்கப்படுகின்றன. மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சார்ந்த சில அலுவலகங்களில் விதிமீறல்கள் மற்றும் நிதி இழப்பு குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய மதுரை மாவட்ட ஆய்வுக் குழுவிற்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி, அவர்கள் அந்த அலுவலகத்தை விரிவாக ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கை உரிய நடவடிக்கைக்காக கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறைக்கு அனுப்பப்பட்டது.

8(7) இதே போன்று, நெடுஞ்சாலைத் துறையிலுள்ள சில அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பணிகளில் உரிய நெறிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பது தொடர்பாக ஆய்வு செய்ய சென்னை மாவட்ட ஆய்வுக் குழுவிற்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி பெறப்பட்ட ஆய்வறிக்கை தொடர் நடவடிக்கைக்காக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

8(8) 2022-2023 ஆம் ஆண்டு, மார்ச் 2023 வரையில் மாவட்ட ஆய்வுக் குழுக்கள், தலைமைச் செயலக ஆய்வு அலுவலர்களுடன் இணைந்து, 36 முன்னோடிப் பயிற்சிகளும் குறுகிய காலப் பயிற்சிகளும் நடத்தியுள்ளன. மாவட்டங்களின் அனைத்து அரசுத் துறைகளில் பணியாற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு ஆண்டுதோறும்

2023 ஏப்ரல் 19]

மாவட்டத் தலைமையகங்களில் மூன்று நாட்கள் புத்தாக்கப் பயிற்சியும் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களால் வழங்கப்பட்டது.

8(9) தற்பொழுது, இப்பயிற்சிகளை இணைய வழியில் கற்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகம்மூலம் மென்பொருள் ஒன்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு வருகிறது. இத்துடன் பாடத்திட்டங்களை இணைய வழிமூலம் கற்பிப்பதற்காக காணொலி தயாரிக்கப்பட்டு வருகிறது.

9. பயிற்சி

9(1) ஒவ்வொரு மனிதனும் அளவற்ற ஆற்றலுடன் பிறக்கிறான். பயிற்சியும், கடின உழைப்பும் அவனைச் சுய உணர்தலை அடையச் செய்கின்றன. முழுமையான மனிதனாக மலரச் செய்கின்றன.

பயிற்சிகள் ஒரு நபரின் தகுதியை மேம்படுத்துகின்றன, அர்ப்பணிப்பை அதிகப்படுத்துகின்றன, படைப்புத் திறனை உயர்த்துகின்றன, நிறுவனத்திற்கு அவன் பங்களிப்பைக் கூட்டுகின்றன. மேலாண்மை நிபுணர் டாம் பீட்டர்ஸ் என்பவர் 'திறன்மிகு மேலாளர்கள் தங்கள் பணி நேரத்தில் 75 சதவிகித நேரத்தை மற்றவர்களை உருவாக்குவதில் செலவழிக்கிறார்கள்' என்று குறிப்பிடுகிறார். உருவாக்குதல் என்பது அறிவைப் பரவலாக்கச் செய்யவும், தனியர்களின் வளர்ச்சியை அதிகப்படுத்தவும் மேற்கொள்ளும் உன்னதக் கலை.

திருக்குறள் 'ஒருவன் ஏதேனும் சில நல்லவற்றை உற்று கவனித்து, ஆழ்ந்து சிந்தித்து, சில நல்ல கருத்துகளை உள்வாங்கினாலே அவை அவனுடைய கண்ணியத்தை அதிகப்படுத்தும்' என்று குறிப்பிடுகிறது.

> *"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
> *ஆன்ற பெருமை தரும்"*

(திருக்குறள் 416)

மனித வள மேலாண்மையின் முக்கியமான கூறுகளில் ஒன்று பயிற்சி. பயிற்சி என்ற பெயரைப் பொதுவாக நாம்

[2023 ஏப்ரல் 19

பயன்படுத்தினாலும் பணியில் சேர்ந்ததும் அளிக்கப்படும் பயிற்சிக்கும், பின்னர் அளிக்கப்படுகின்ற மேம்பாட்டு நிகழ்வுகளுக்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது.

அடிப்படைப் பயிற்சி (Foundational Training), அறிமுகப் பயிற்சி (Induction Training), புத்துணர்ச்சிப் பயிற்சி (Refresher Training), இடைக்காலப் பயிற்சி (Mid-Term Training), பணியிடைப் பயிற்சி (In-Service Training), பணியில் பயிற்சி (On the job Training) என்று பல்வேறு விதமான பயிற்சிகள் இருக்கின்றன.

முறையான வகையில் அளிக்கப்படுகிற பயிற்சி, திறன்களை அதிகப்படுத்துகிறது, அறிவை விசாலப்படுத்துகிறது, மனநிலையை மாற்றுகிறது, பயிற்சி அளிப்பவர்களின் திறன், பயிற்சியின் பாடத்திட்டம், பயிற்சி பெறுபவர்களின் ஈடுபாடு, பயிற்சியின்போது பயன்படுத்துகிற உத்திகள், பயிற்சியில் பெற்றவற்றை களத்தில் பயன்படுத்தும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து ஒரு பயிற்சி வெற்றி பெறுகிறது.

மனித வள மேலாண்மைத் துறை பல துறைகள் பயன்படுத்தத்தக்க விரிவான பயிற்சிக் கொள்கையைக் கொண்டு வந்திருக்கிறது. பல்வேறு துறைகள் மனித வள மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பயிற்சி அலகுகளைக் கொண்டு பணியாளர்களின் செயல்படும் அளவை அதிகரிக்கச் செய்கின்றன.

9(2) பயிற்சித் துறைத் தலைவர்

அரசின் பல்வேறு பிரிவு பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பின்வரும் நிறுவனங்கள் மனித வள மேலாண்மைத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன:-

1. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி

2. ‘அ’ மற்றும் ‘ஆ’ அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம்

3. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்காக, பின்வரும் நிறுவனங்களில் உரிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன:-

2023 ஏப்ரல் 19]

4. அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம், சென்னை

5. போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்கள்

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் இயக்குநரே பயிற்சித் துறைத் தலைவராகவும் செயல்படுகிறார். மேற்கண்ட அனைத்து நிறுவனங்களும் அவருடைய மேற்பார்வையில் வருகின்றன.

9(3) அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு 1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி படிப்படியாக வளர்ந்து, இன்று அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்திட உதவும் வகையில் மேலாண்மை, செயல்திறன் பயிற்சிகளை அளித்து வருகிறது. பரவலாக்கத்தின்மூலம் மனித வளத்தின் திறன்களை அதிகரிக்கும் நோக்குடன் மதுரை, திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் 2014 ஆம் ஆண்டிலும், செங்கல்பட்டில் 2022 ஆம் ஆண்டிலும் மண்டலப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டன. மத்திய, மாநில அரசுப் பணியாளர்களின் திறன் கட்டுமானத்திற்காக ஒன்றிய அரசின் நிதி உதவியுடனும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் நிர்வாகப் பயிற்சி நிறுவனமாக (ATI) அறிவிக்கப்பட்டுள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி அதன் ஒருங்கிணைந்த நிறுவனங்களான 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து அரசு இயந்திரம் முழுவதற்கும் முழுமையான பயிற்சியினை அளித்து வருகிறது. மக்கள் நல அரசை நிறுவ வேண்டும் என்ற அரசின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் அதில் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்கும் விதத்தில் அரசு அலுவலர்களைத் தயார்படுத்துவதற்கு இந்தப் பயிற்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பருவநிலை மாற்றம் போன்ற தற்கால சூழலுக்கேற்ற வகையில் பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடத்தப்படுவதோடு அரசுத் துறைகளிடமிருந்து

[2023 ஏப்ரல் 19

குறிப்பிட்ட தலைப்பில் பயிற்சிகள் வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தால் அவையும் நிறைவேற்றப்படுகின்றன. ஜனவரி 31, 2023 வரையிலான காலத்தில் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி அதன் மண்டலப் பயிற்சி மையங்களோடு இணைந்து 650-க்கும் மேற்பட்ட பயிற்சிகளைக் கொடுத்துள்ளது. இதன்மூலம் 26,000 அரசு அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இதுவரையிலான ஆண்டுகளில் இதுவே அதிகமான எண்ணிக்கை ஆகும்.

2022-2023-ல் நடைபெற்றுவரும் பயிற்சித் திட்டங்கள்

தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சார்புச் செயலர்களுக்கு இரண்டு மாத கால கட்டாய வகுப்பறைப் பயிற்சிகள் மூன்று அணிகளில் நடத்தப்பட்டன.

துறை சார்ந்த பயிற்சிகள்

(i) முறையான பயிற்சி பெறாத தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், விடுதிக் காப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் பயிற்சி கொடுப்பதற்காக மனித வள மேலாண்மைத் (பயிற்சி 3) துறையின் 1-12-2021 நாளிட்ட அரசு ஆணை (டி) எண் 153-மூலம் இரண்டு கோடி ரூபாய் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதுவரை இந்த நிதிமூலம் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தில் பணிபுரிபவர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், வேளாண் விரிவாக்க மையப் பணியாளர்கள் ஆகியோருக்கு 28 அணிகளில் 849 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(ii) 55 வயதைக் கடந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு வகுப்பறையில்லா சூழலில் அவர்களின் வயது, அனுபவத்திற்கேற்ற பொதுவான தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்க வேண்டும் என்பதற்காக அரசு மனித வள மேலாண்மைத் துறையின் 7-12-2021 நாளிட்ட அரசாணை (டி) எண் 157-மூலம் ரூ.1,79,80,000/- நிதியை ஒப்பளிப்பு செய்தது. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி 1,200 அரசு அலுவலர்களுக்கு 44 அணிகளில் இதற்கான பயிற்சியை மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான விடுதி வளாகத்தில் நடத்தி முடித்துள்ளது.

2023 ஏப்ரல் 19]

(iii) மருத்துவர்கள், செவிலியர்கள், அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிப்பதற்காக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தனது 30-6-2021 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 305-ன்மூலம் ரூ.3,02,40,000/- நிதியினை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்தது. இதன்மூலம் 1,218 நபர்களுக்கு 39 அணிகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

(iv) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை தனது விடுதிக் காப்பாளர்களின் பயிற்சிக்காக 5-1-2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1-ன்மூலம் ரூ.39.90 இலட்சத்தினை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்தது. இதுவரை 386 நபர்களுக்கு எட்டு அணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 965 அலுவலர்கள் இன்னமும் பயிற்றுவிக்கப்படவிருக்கிறார்கள்.

(v) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தனது அலுவலர்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வில் பயிற்சி அளிப்பதற்காக 3-12-2021 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 118-ன்மூலம் ரூ.20.00 இலட்சத்தை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்தது. 500 அலுவலர்களுக்கு 20 அணிகளில் பயிற்சிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன.

(vi) தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை 925 தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ரூ.49.60 இலட்சத்தை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு முன்பணமாகக் கொடுத்துள்ளது. இதன்மூலம் 502 அலுவலர்களுக்கு 17 அணிகளில் இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு பயிற்சித் திட்டங்கள்

(i) அரசு அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் மட்டுமல்லாமல் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. ராஷ்ட்ரிய உச்சாதார் சிஷ்யா அபியான் (RUSA) அமைப்பு மாணவர்களுக்கு உயர் கல்வியில் தொழிற்கல்வியைக் கற்றுத்தரும் திட்டத்தின்கீழ் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்த நிதியில் 2913 அரசுக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

(ii) கலை-பண்பாட்டுத் துறை அளித்த நிதியின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள கவின் கலைக் கல்லூரிகள், இசைக் கல்லூரிகளின் பேராசிரியர்களுக்கு இரண்டு அணிகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

(iii) மாமல்லபுரத்தில் நடைபெற்ற பன்னாட்டு சதுரங்கப் போட்டிகளைக் காண வந்த அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவிடும் வகையில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு 'சுற்றுலா நட்பு ஆட்டோ ஓட்டுநர்கள்' என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சித் திட்டங்கள்

7-5-2022 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததன் அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை ஆட்சியர்கள் நிலையில் உள்ள குடிமைப்பணி அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மனித வள மேலாண்மைத் (பயிற்சி-III) துறை தனது 18-11-2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 125-ன்மூலம் பத்து இலட்சம் ரூபாயை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்துள்ளது. இந்தப் பயிற்சிகள் 2023 பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தனது துறையின் 983 அலுவலர்களுக்கும் 'சமத்துவம் காண்போம்' என்ற தலைப்பில் பயிற்சியினை அளிப்பதற்காக நாற்பது இலட்சம் ரூபாயை 7-12-2021 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 103-ன்மூலம் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்துள்ளது.

'நில எடுப்பு' என்ற தலைப்பில் சிறப்புப் பயிற்சி அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் நடத்தப்படுகிறது.

அறிவிப்புகளின் மீதான நடவடிக்கை

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்காக 13-9-2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட பின்வரும் திட்டங்களின் நிலை:

(i) பணியாளர்களுக்கான கூடுதல் குடியிருப்புகள்

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் பணிபுரியும் ஊழியர்களுக்காக, ஒவ்வொன்றும் 350 சதுர அடி பரப்பளவுள்ள ஆறு குடியிருப்புகள், மூன்று மாடிகளில்,

2005 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இவை அளவில் மிகச் சிறியவையாகும். தற்போது கல்லூரியில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளும், பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துவிட்டன. கூடவே, வெளியூர்களிலிருந்து வந்து தங்கி பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது. விடுதியில் தங்கும் இந்தப் பயிற்சியாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இரவும் பகலும் உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இதற்கு அவர்கள் கல்லூரி வளாகத்திற்குள்ளேயே தங்கியிருந்தால்தான் விடுதியில் தங்குபவர்களுக்கு நிறைவான வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். எனவே, அத்தியாவசியமான கூடுதல் ஊழியர்களை வளாகத்திற்குள்ளேயே தங்க வைப்பதற்காக ரூ.3,48,02,047/- செலவில் எட்டு பணியாளர் குடியிருப்புகளைக் கட்ட திட்டமிடப்பட்டது. மனித வள மேலாண்மைத் (பயிற்சி 3) துறை தனது 25-4-2022 நாளிட்ட அரசாணை எண் (டி) 67-ன்மூலம் இந்தத் தொகையைக் கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ii) உயர் அழுத்த மின்சாரம் வழங்குதல்

கூடுதலாகக் கட்டப்பட்ட வகுப்பறைகள் மற்றும் விடுதிகள், அதிக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப சாதனங்கள், கூடுதல் செயல்பாடுகள், அதிக அளவிலான பயிற்சி வகுப்புகள் மற்றும் அதிகரித்துவரும் பயிற்சியாளர்கள் எண்ணிக்கை போன்றவற்றால் கல்லூரியின் மின் உபயோகம் தற்போது பன்மடங்கு அதிகரித்துள்ளது. தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு உயர் மின் அழுத்த மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வது என்று திட்டமிடப்பட்டது. ரூ.3,50,00,000 செலவிலான இந்தத் திட்டத்தில் 500 கிலோ மின்பேரலகு திறனுடைய இரண்டு மின்மாற்றிகளையும், 250 கிலோ மின்பேரலகு திறன்கொண்ட மின்னாக்கி ஒன்றையும், தானியங்கி முதன்மைக் கட்டுப்பாட்டுக் கருவியுடன் (AMF) கூடிய 500 கிலோ மின்பேரலகு கொண்ட மின்னாக்கி ஒன்றையும் நிறுவ முடிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(iii) உள்ளரங்கு படப்பிடிப்புத் தளம்

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் நேரடி பயிற்சி வகுப்புகள் மட்டுமின்றி, பெரிய வகுப்பறைகளில் இடம், மின்சாரம், தளவாடங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டினைக் குறைக்கும் நோக்குடன், புதிய முயற்சியாக, காணொலிப்பாதை வழியாக பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

தற்போது மேற்படி கல்லூரியில் இணைய வழி வகுப்புகள் காணொலி காட்சி அறையில் நடத்தப்பட்டு வருகின்றன. வருங்காலங்களில் இக்கல்லூரியின் செயல்பாட்டினை அதிகரிக்கச் செய்து, கூடுதல் எண்ணிக்கையிலான நபர்களுக்கு இணையவழி பயிற்சி அளிக்கும் திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேலும், தற்காலத்திலுள்ள பணியாளர்கள் மின்னணு சார்ந்த சாதனங்களை சிறப்பாகப் பயன்படுத்துகின்ற நிலையில், நேரடி வகுப்புகளுக்கு பதிலாக, அவர்களே இணையவழி வகுப்புகளையே பெரிதும் விரும்புகின்றனர்.

எனவே, மேற்படி கல்லூரியில் பிரத்யேக உள்ளரங்கு (Indoor Studio) ஒன்றினை அமைப்பதற்காக மனித வள மேலாண்மைத் (பயிற்சி-3) துறை தனது 5-4-2022 நாளிட்ட அரசாணை (டி) எண் 58-ல் ரூ.49,89,814/-ஐ வழங்கியுள்ளது.

(iv) அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் காணொலிப்பாதை— AIM TN

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 'AIM TN' என்ற காணொலிப்பாதையை அறிமுகப்படுத்தியது. ஆரம்ப காலத்தில் இந்த காணொலிப்பாதையில் வழக்கு மேலாண்மை, தகவல் பெறும் உரிமைச் சட்டம் போன்ற பயிற்சிசார் காணொலிகள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டன. கொரோனா பெருந்தொற்று தீவிரமடைந்திருந்த காலத்தில் இந்த பயிற்சிக் காணொலிகள் அரசு ஊழியர்களுக்கு அருமருந்தாய் இருந்தன.

போட்டித் தேர்வுகளை எழுதுவதற்குப் பயிற்றுவிக்க இலவசப் பயிற்சி நிலையங்கள் இல்லாத சூழலில் கிராமப்புறங்களில் வாழும் மாணவர்களுக்கும், பொருளாதாரத்தில் பின்தங்கிய

மாணவர்களுக்கும் இத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அரசுப் பணியில் சேருவது என்பது கனவாக இருந்து வருகிறது. இதுபோன்ற மாணவர்களுக்கு உதவிடும் வகையில் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி தனது AIM TN காணொலிப்பாதையில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிக் காணொலிகளைத் தயாரித்து பதிவேற்றம் செய்யத் திட்டமிட்டது. முதல் முயற்சியாக அது நவம்பர் 2022-ல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட காவலர் தேர்விற்கான காணொலிகளைத் தயாரித்து பதிவேற்றம் செய்தது. இதற்குக் கிடைத்த பெரும் வரவேற்பின் காரணமாக, போட்டித் தேர்வுகளுக்கென பிரத்யேக இணையவழி வகுப்புகளை நடத்துவதற்கென அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அரசு ஒரு கோடி ரூபாய் நிதியினை அளித்தது.

இந்த நிதியினைக்கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி 2/2A தேர்வை எழுதும் மாணவர்களுக்கு 2023 ஆம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் 100 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு இணையதள வகுப்புகள் நடத்தப்பட்டன. இதன் சிறப்பம்சமாக மொத்தம் 18 மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட்டு 5,000 மாணவர்கள் இத்தேர்வினை எழுதினர். அவர்கள் அனைவரின் விடைத்தாள்களும்3 மதிப்பீடு செய்யப்பட்டு எழுதிய மாணவர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. தற்போது மத்திய அரசின் தேர்வாணையம் (SSC) நடத்தும் பன்முகத்திறன் பணியாளர் (Multi Tasking Staff) தேர்விற்கான காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. அதன் முழு பாடத்திட்டத்தையும் 60 நாட்களுக்குள் முடிக்கும் வகையில், இந்தப் பயிற்சியில் தோராயமாக 180 மணி நேரம் கொண்ட 180 காணொலிகள் பதிவேற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. AIM TN என்ற அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் இந்தக் காணொலிப்பாதையில் 1.18 இலட்சம் நபர்கள் பதிவு செய்துள்ளனர். இதுவரை மொத்தம் 672 காணொலிகள் பதிவேற்றப்பட்டுள்ளன. 56 இலட்சம் பேர் காணொலிகளைப் பார்த்துள்ளனர்.

(v) நோக்கம் செயலி

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி போட்டித் தேர்வுகளுக்கென பிரத்யேகமாக செயலி ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது. 'நோக்கம்' என்று பெயரிடப்பட்ட இந்தச் செயலியில் சுமார் 65,000 நபர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். மத்திய அரசின் தேர்வாணையம் நடத்தும் பன்முகத்திறன் பணியாளர் (MTS) தேர்விற்கான மாதிரித் தேர்வுகள் தற்போது இதில் பதிவேற்றப்பட்டு வருகின்றன. ஒரு மாத காலத்தில், 15 தேர்வுகள் நடத்தப்பட்டுவிட்டன; 25,000 தேர்வர்கள் இந்த மாதிரித் தேர்வுகளை எழுதியுள்ளனர்.

(vi) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின் காணொலிப்பாதை–AICSCC TN

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின் காணொலிப்பாதையான AICSCC TN செப்டம்பர் 29, 2020 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டினர் அதிக அளவில் குடிமைப் பணிகளில் சேர வேண்டும் என்ற நோக்குடன் இந்த காணொலிப்பாதை வல்லுநர்கள், அதிகாரிகள், கல்வியாளர்களைக் கொண்டு முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்கான பயிற்சிக் காணொலிகளைத் தயாரித்து பதிவேற்றி வருகிறது. இந்தக் காணொலிகளுக்கு மத்திய தேர்வாணைய (UPSC) தேர்வினை எழுதும் மாணவர்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதுவரை 74,394 வாடிக்கையாளர்கள் இந்தக் காணொலிப்பாதையில் பதிவு செய்துள்ளனர். 1,500 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 23 இலட்சம் பேர் காணொலிகளைப் பார்த்துள்ளனர்.

9(4) 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம்

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம், தொன்மை வாய்ந்த 'காஞ்சி' கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் பயிற்சித் துறை தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாகவும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த

2023 ஏப்ரல் 19]

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 5, மனித வள மேலாண்மைத் துறை, நாள் 13-1-2022-ன்படி பயிற்சிக்கான பாடத்திட்டம், பயிற்சி முறை ஆகியவை மாற்றியமைக்கப்பட்டு, 'அ' பிரிவு அலுவலர்களின் அடிப்படை பயிற்சிக் காலம் 150 மணி நேரத்திலிருந்து 180 மணி நேரமாகவும், 'ஆ' பிரிவு அலுவலர்களின் அடிப்படை பயிற்சிக் காலம் 90 மணி நேரத்திலிருந்து 120 மணி நேரமாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பயிற்சித் திட்டத்தில் யோகா, களப் பார்வையிடல் ஆகியன சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 136, மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை, நாள் 20-12-2022-ன்படி, திருத்தம் வெளியிடப்பட்டது.

மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி, பயிற்சியில், 'அ' பிரிவு அலுவலர்களுக்கு அலுவலக நிர்வாகம், நிதி நிர்வாகம், சட்டம், பொது நிதி, பொது நிர்வாகம், மேலாண்மை கோட்பாடுகள், திட்டம் மற்றும் மேம்பாடு, பொருளதாரம், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் ஆறு வாரங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான பயிற்சியில் சட்டம், அலுவலக நிர்வாகம், நிதி நிர்வாகம், பொது நிர்வாகம், மேலாண்மை கோட்பாடுகள், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் நான்கு வாரங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியின் நிறைவாக, அலுவலக நிர்வாகம், நிதி நிர்வாகம், சட்டம் ஆகிய பாடங்களில் தேர்வு ஒன்று நடத்தப்படும். இத்தேர்வில் தேர்ச்சி பெறுவது பயிற்சியாளரின் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்வதற்கு இன்றியமையாததாகும்.

பயிற்சியில் ஈடுபடுத்தப்படும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தினை உரிய காலத்தில் வழங்கிட ஏதுவாக, அரசாணை (நிலை) எண் 126, மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை, நாள் 21-11-2022-ல் தற்காலிக முன்பணத் தொகை ரூ.50,000/-லிருந்து ரூ.2,00,000/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

[2023 ஏப்ரல் 19

2022-2023 ஆம் நிதி ஆண்டில், 153 'அ' பிரிவு அலுவலர்களுக்கும், 235 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கும் என மொத்தம் 388 அலுவலர்களுக்கு இந்நிலையத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

9(5) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

அரசு அலுவலர் பயிற்சி நிலையம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகரில் 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தின் அருகில் 71.32 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தப் பயிற்சி நிலையத்தில் அரசு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் அலுவலர்கள் இனிமையான சூழலினால் அமைதியும் ஆற்றலும் ஒருங்கே கிடைக்கப்பெற்று, மகிழ்ச்சியான மன எழுச்சியுடன் பயிற்சி வகுப்புகளில் முழுமனதுடன் பங்கேற்கிறார்கள். இந்தப் பயிற்சியானது உறைவிடப் பயிற்சி என்பதால் பயிற்சி பெறுபவர்கள் தங்கள் தனித் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் வகையில் மாலை வேளைகளில் கல்விசாரா பயிற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு ஆளுமையை மேம்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த மையம் தமிழ்நாடு அரசின் அமைச்சுப் பணி மற்றும் நீதித் துறை அமைச்சுப் பணிகளில் நேரடியாகப் பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும், பதவி உயர்வுமூலம் இளநிலை உதவியாளர், உதவியாளர் பணிகளில் அமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் அடிப்படைப் பயிற்சியினை அளித்து வருகிறது.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சியை அளிப்பதில் நிலவிய தேக்கத்தைக் குறைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த அறிவிப்பின் அடிப்படையில் புதியதாக நியமிக்கப்பட்ட மற்றும் பதவிஉயர்வுபெற்றஇளநிலைஉதவியாளர்மற்றும்உதவியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் அந்தந்த மாவட்டத்திலேயே இந்தப் பயிற்சிகளை வழங்கவும், குறித்த காலத்தில் தங்கள் தகுதிகாண் பருவத்தை எந்தவிதத் தாமதமும் இல்லாமல் நிறைவு செய்திடவும் ஏதுவாக, பரவலாக்கப்பட்ட பயிற்சியை வழங்க 25-10-2021 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக 9,200 அலுவலர்களுக்கு 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு, முன்னர் இருந்த தேக்க நிலை நீக்கப்பட்டது.

2023 ஏப்ரல் 19]

அரசாணை (1டி) எண் 516, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 8-8-2022-ன்படி துணை வட்டாட்சியர் பணியிடைப் பயிற்சிக்கான பாடத்திட்டம் குறைக்கப்பட்டு, பயிற்சி அட்டவணை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி உரிய காலத்தில் தொடங்கப்படும்.

ரூ.504 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட பல்நோக்கு அரங்கம், உணவகம், மழை நீர் சுத்திகரிப்புத் தொட்டி, சமையல் எரிவாயுக் கிடங்கு, துணி துவைக்கும் இடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு 11-7-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டு பயிற்சி பெறுபவர்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுள்ள இம்மையத்தில் 700 அலுவலர்கள் ஒரே நேரத்தில் பயிற்சி பெற முடியும்.

ரூ.10 கோடி செலவில் கட்டப்பட்ட இரண்டு விடுதிகளும், நான்கு வகுப்பறைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-7-2022 அன்று காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டு பயிற்சி பெறுபவர்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

இப்பயிற்சி மையத்திற்குரிய 18 ஏக்கர் காலி நிலத்தை சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் காடுமயமாக்குதலுக்கு மனிதவள மேலாண்மைத் துறை 27-8-2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 96-ன்மூலம் ரூ.27 இலட்சம் வழங்கியுள்ளது.

தொடங்கப்பட்ட நாளிலிருந்து பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையம் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த 1,42,220 அலுவலர்களுக்குப் பயிற்சியினை வழங்கியுள்ளது.

9(6) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்

பட்டியலின/பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவர்களை குடிமைப் பணி தேர்வுகளை எழுதுவதற்குப் பயிற்றுவிக்க முன்-தேர்வு பயிற்சி மையம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது,

[*2023 ஏப்ரல் 19*

1971 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் வழிகாட்டுதலுக்காக சிறப்புப் பயிற்சி மையம் ஒன்று நிறுவப்பட்டது. பின்னர், இந்த இரண்டு நிறுவனங்களும் "அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்" என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டன. முதல்வர் ஒருவரால் நிர்வகிக்கப்படும் இந்தப் பயிற்சி மையம் பிப்ரவரி 2000 ஆண்டு முதல் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவரின்கீழ் இயங்கி வருகிறது.

மாணவர்கள் தங்களுடைய குறிக்கோளினை அடைவதற்கு உரிய படிக்கும் வசதியை மேற்கொள்ள இந்த மையம் அமைதியான சூழலில் அமைந்துள்ளது. போதுமான அளவு வகுப்பறைகள், பெரிய உள்ளரங்கம், நன்முறையில் அமையப்பெற்ற நூலகம், வசதியான விடுதி அறைகள், சமச்சீரான உணவளிக்கும் உணவகம் ஆகிய அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளதால் அனைவராலும் போற்றப்படுகின்ற பயிற்சி மையமாக இம்மையம் விளங்குகின்றது. தூய்மைப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அறிஞர் பெருமக்களும், அரசு உயர் அதிகாரிகளும் வகுப்பெடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இளைஞர்கள் போட்டித் தேர்வுகளைத் திறமையாக எதிர்கொள்ள, அடிக்கடி மாதிரித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

குடிமைப் பணி தேர்வுகள்

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் குடிமைப் பணி தேர்வுகளை மூன்று நிலைகளில் நடத்துகிறது. மாணவர்கள் முதன்மைத் தேர்வினை எதிர்கொள்ளும் அளவிற்குத் தகுதி பெற்றிருக்கிறார்களா என்பதைச் சோதிக்கும் முதல்நிலைத் தேர்வு நடத்தப்படுகிறது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களைத் தேர்வாணையம் புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்ள அழைக்கிறது. முதன்மைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களும், ஆளுமைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களும் கூட்டப்பட்டு இறுதி தர வரிசை நிர்ணயிக்கப்படுகிறது.

முதல்நிலைத் தேர்வுக்கான பயிற்சி

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம், UPSC *முதல்நிலைத் தேர்வுக்குப் பயிற்சி அளிப்பதற்காக தகுதி வாய்ந்த*

2023 ஏப்ரல் 19]

325 நபர்களை (225 நபர்கள் உள்ளுறை வசதியுடன், 100 நபர்கள் உள்ளுறை வசதி இன்றி) நுழைவுத் தேர்வின்மூலம் தேர்வு செய்கிறது. நுழைவுத் தேர்விற்கான விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களிலும், மையத்தின் இணையதளத்திலும் www.civilservicecoaching.com *நவம்பர்/டிசம்பர் மாதத்தில் வெளியிடப்படும். நுழைவுத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். மனித வள மேலாண்மைத் துறையின் 11.1.2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 4-ல் ஆணையிடப்பட்டவாறு இப்பயிற்சி மையத்தில் சேருவதற்கான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. முதல்நிலைத் தேர்வினை எதிர்கொள்வதற்காக இப்பயிற்சி மையம் 6 மாத கால பயிற்சி (டிசம்பர் முதல் மே வரை) அளிக்கிறது. நடப்பு ஆண்டில் நுழைவுத் தேர்விற்கு 7077* online *விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில், 325 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 9-12-2022 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.*

முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி

ஒவ்வோர் ஆண்டும் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெறும் 225 மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வினை எதிர்கொள்வதற்கான மூன்று மாத பயிற்சி (ஜுலை முதல் செப்டம்பர் வரை) வழங்கப்படுகிறது. அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையத்தில் பயின்று முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றோர் மட்டும் இல்லாமல், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களும் இந்த முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். வருமான உச்சவரம்பைக் கருத்தில் கொள்ளாமல் அனைத்து 225 மாணவர்களுக்கும் பயிற்சி புத்தகங்களை பயன்படுத்திக் கொள்வதற்காக மாதமொன்றிற்கு ரூ.3,000/- என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மாதிரி ஆளுமைத் தேர்வு

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்காக மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்துகிறது. புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வினை மாணவர்கள் மன உறுதியுடன்

[2023 ஏப்ரல் 19

எதிர்கொள்வதற்காக, பணியிலிருக்கும் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அகில இந்திய குடிமைப் பணி அதிகாரிகளைக் கொண்டு, மாதிரி ஆளுமைத் தேர்வு மற்றும் மாதிரி நேர்முகத் தேர்வும் நடத்தப்படுகின்றன. ஆளுமைத் தேர்வினை மன அழுத்தமின்றி எதிர்கொள்ள ஏதுவாக புது தில்லி செல்லும் மாணவர்களுக்கு தமிழக அரசு நாளொன்றுக்கு நூறு ரூபாய் என்ற அளவில் பத்து நாட்களுக்கு சலுகை விலையில் தங்கும் அறைகளையும், உணவினையும் தமிழ்நாடு இல்லத்தில் வழங்குகிறது. இடைநிகழ்வுச் செலவிற்காக வழங்கப்பட்ட ரூ.2,000/- மனிதவள மேலாண்மை (பயிற்சி-1) துறையின் 8-7-2022 நாளிட்ட அரசாணை எண் 68-ன்மூலம் ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டது.

இந்த மையத்தை முதல்வர் ஒருவரும், முழுநேர பேராசிரியர் ஒருவரும் நிர்வகிக்கின்றனர். 23-க்கும் மேற்பட்ட தலைப்புகளில் பயிற்சி அளிப்பதற்காக 20 கௌரவப் பேராசிரியர்களும் பணிபுரிகிறார்கள். 25-11-2021 ஆம் நாளிட்ட மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறையின் அரசாணை நிலை எண் 131-ன்படி கௌரவப் பேராசிரியர்களின் மதிப்பூதியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வினை எழுதும் மாணவர்களுக்கான புவியியல் புத்தகத்தின் முதல் தொகுதி 28-3-2023 அன்று வெளியிடப்பட்டது.

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் கூடுதல் உணவுக்கூடம், சமையலறை, மேல்தளம் மற்றும் தீயணைப்பு அமைப்பு, மிடுக்கு வகுப்பறைகளை மேம்படுத்துதல் ஆகிய கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 71, மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை, நாள் 15-7-2022-ன்படி ரூ.1,17,96,383/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து இப்பயிற்சி மையத்தில் பயின்ற 434 ஆர்வலர்கள் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளில் வெற்றிபெற்றுள்ளனர்.

2023 ஏப்ரல் 19]

மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்கள்

கிராமப்புறங்களிலிருந்து இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணி ஆகியவற்றிற்கான தேர்வுகளை எழுதும் மாணவர்கள் பயனடையும் வகையில், சென்னையில் உள்ள அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தைப் போன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திலும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி நிலையம் என்ற பெயரில் மேலும் இரண்டு பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு குடிமைப் பணிகளின் முதல்நிலைத் தேர்வுகளுக்கு மட்டும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2023 ஆம் ஆண்டு முதல்நிலைத் தேர்வுக்காக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 95 நபர்களும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 100 நபர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

9(7) போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள்

வட சென்னையில் ரூ.1.53 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய போட்டித் தேர்வு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய மூன்று இடங்களிலும், சென்னையில் மற்றும் ஓர் இடத்திலும் ரூ.4,44,20,000/- நிதி மதிப்பீட்டில் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் தொடங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டது. இத்தகைய பயிற்சி மையங்கள் மாணவர்கள் மத்திய பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிலையம், தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் போன்ற முகமைகள் நடத்தும் வேலைவாய்ப்புகளுக்கான போட்டித் தேர்வுகளைத் திறம்பட எதிர்கொண்டு வெற்றிகாண வழிவகை செய்கின்றன.

சென்னை, நந்தனத்தில் உள்ள அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் 23-5-2022 முதல் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் ஒன்று 7-3-2023 அன்று தலைமைச் செயலாளர்/பயிற்சித் துறைத்

தலைவர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மதுரை, சேலம் ஆகிய இடங்களிலும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 24-7-2022 அன்று நடத்தப்பட்ட தொகுதி IV எழுத்துத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள், சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி மற்றும் நந்தனம் ஆடவர் கலைக் கல்லூரியில் செயல்பட்டு வரும் பயிற்சி மையங்களில் அனுபவம் வாய்ந்த கௌரவ விரிவுரையாளர்கள் வாயிலாக நடத்தப்பட்டு அதன்மூலம் 440 ஆர்வலர்கள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர், தீயணைப்பாளர் ஆகிய பதவிகளுக்கு 27-11-2022 அன்று நடத்திய எழுத்துத் தேர்வுக்கு இவ்விரண்டு போட்டித் தேர்வு மையங்களின்மூலம் 165 ஆர்வலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. 17 ஆர்வலர்கள் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று உடற்தகுதித் தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 18-12-2022 அன்று நடத்திய தொகுதி V-A (தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி) எழுத்துத் தேர்வுக்கு இவ்விரண்டு போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற/பணியில் உள்ள தலைமைச் செயலக மூத்த அலுவலர்களைக்கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு 290 தேர்வர்கள் பயனடைந்துள்ளனர்.

9(8) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

- தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம், மனித வள மேலாண்மைத் துறையின்கீழ் இயங்குகின்றது.

- இப்பயிற்சி நிலையத்தில் நேரடி நியமனம்மூலம் தலைமைச் செயலகத் துறைகளில் பணியமர்த்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு அடிப்படைப் பயிற்சியானது வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி

நிலையமானது இதுவரை 105 அணிகளுக்கு அடிப்படைப் பயிற்சியினை வழங்கியுள்ளது.

- நடைமுறையிலுள்ள தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியானது பயனுள்ள சேவையை வழங்குவதற்கு ஏதுவாக சீரமைக்கப்பட்டு, புதிதாகப் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களைத் தயார்படுத்தும் விதத்தில், மிகவும் பொருத்தமான மற்றும் பணி சார்ந்த பாடத்திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

10. புதிய முயற்சிகள்

10(1) விதி ஆய்வுக் குழு

சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட கல்வித் தரங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பணியாளர் தெரிவு மற்றும் பதவி உயர்வுக்கான தகுதிகள் வரையறுக்கப்பட வேண்டும். எனவே, நேரடித் தேர்வு மற்றும் பதவி உயர்வு நியமனங்களில் பணியாளர் தெரிவுக்கு பரிந்துரைக்கப்பட்ட தகுதிகளை நவீனமயமாக்குவது தொடர்பாக, சிறப்பு விதிகளை ஒழுங்குபடுத்தவும், சீரமைக்கவும், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளைக் கொண்ட பிரத்யேகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. விதிகளை மேம்படுத்தும் பணியானது, அவ்விதி சார்ந்த துறைகளின் ஆலோசனையுடன் நடைபெற்று வருகிறது.

10(2) மின்னணு அலுவலக முறை (e-Office System)

வெளிப்படைத்தன்மை, துரிதமான செயல்பாடு ஆகியவற்றினை ஊக்குவிக்கும் வகையில் மின்னணு ஆளுகைமூலம் அரசு நிருவாகத்தினைத் திறம்படக் கண்காணிக்கும் வகையில் மின்னணு-அலுவலக முறை (e-Office System) அறிமுகப்படுத்தப்பட்டு 21-3-2022 முதல் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

10(3) பயிற்சி அலகு

பொது நிர்வாகம், தலைமைச் செயலக நிர்வாகம், பணி சார்ந்த (சட்டம்/விதிகள்) நிர்வாகம், நேர்மையான

நிர்வாகம்/ஒழுக்கம்/நடத்தை ஆகியவற்றில் தலைமைச் செயலகப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக மனித வள மேலாண்மைத் துறையில் ஒரு பயிற்சி அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

11. முடிவுரை

பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் வகையில், அரசின் மனித வளம்மூலம் சிறந்த நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக, பணி நெறிமுறைகளைச் செயல்படுத்துவதே இத்துறையின் முதன்மையான குறிக்கோளாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

இணைப்பு-VII

(476 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

மாநிலத்தில் பணிபுரியும் பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்) மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என இரு வகையான திட்டங்களின்கீழ் பயன்பெற்று வருகிறார்கள். 1-4-2003 ஆம் நாளுக்கு முன்னர் பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன் பெறுகிறார்கள். 1-4-2003 ஆம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் பணியில் சேர்ந்தவர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெறுகிறார்கள். வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 7,07,424 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் முறையே, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 31.3.2023 அன்றுள்ளவாறு 6,28,971 பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணிபுரிகிறார்கள்.

I. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

1. முன்னுரை

1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றனர். மேலும் 31-3-2023 வரை பணியிலிருந்து ஓய்வுபெற்ற/ பணிதுறப்பு/இறந்த/ பணிநீக்கம் செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட சந்தாதாரர்களிடமிருந்து பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட இறுதித் தொகை கோரி 29,598 விண்ணப்பங்கள் கருவூலக் கணக்கு ஆணையரகத்தால் பெறப்பட்டுள்ளன. அதில் 28,981 பணியாளர்களுக்கு இறுதித் தீர்வாணை வழங்கப்பட்டுள்ளது. அதில் 2022-2023 ஆம் ஆண்டில் மட்டும் ஓய்வுபெற்ற 5,820 பணியாளர்களுக்கு இறுதித் தீர்வுத் தொகையாக 327.74 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 19

(i) ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1-6-1988 முதல் ஒன்றிய அரசின் ஊதிய விகிதங்கள் மாநில அரசு பணியாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வூதியமானது, அப்பணியாளர்கள் வகிக்கும் பதவிக்கான திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது. அதிகரித்து வந்த சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள், அரசின் நிதி ஆதாரங்களால் ஈடுகட்ட முடியாத அளவிற்கு அதிகரித்து வந்தன. இதனால், கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்ற, போதிய நிதியில்லா நிலை ஏற்பட்டது.

(ii) ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்கும் பொருட்டு கர்நாடக அரசின் ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் திரு. பி.கே. பட்டாச்சார்யா, அவர்களின் தலைமையில் ஒன்றிய அரசு 26.6.2001 அன்று உயர்மட்ட வல்லுநர் குழுவினை அமைத்தது. இந்த உயர்மட்ட வல்லுநர் குழுவானது தனது பரிந்துரையில், பணியாளர்கள் மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து சமமான பங்களிப்புடன், பணியாளர்கள், வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியம் பெறக்கூடிய வகையிலான புதிய திட்டத்தை பிப்ரவரி 2002-ல் பரிந்துரைத்தது. புதிதாக அரசுப் பணியில் சேரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புடன் கூடிய திட்டத்தை வடிவமைப்பது ஒன்றிய அரசின் நோக்கமானது, மாநில அரசுப் பணியாளர்கள், நடுத்தர வர்க்கத்தினைச் சார்ந்த சுயதொழில்புரிபவர்கள் மற்றும் அமைப்பு சாராத் துறைகளில், குறைந்த வருமானம் உள்ளவர்கள் போன்ற பிற குழுக்களுக்குக் கால ஓட்டத்தில் சேவை செய்யும் நோக்கத்தில் உருவாக்கப்படுகின்ற கட்டமைப்பாகும்.

(iii) ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான ஒன்றிய அரசின் முன்முயற்சியைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

“நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு அரசு தான் மிக அதிக அளவிலான ஓய்வூதிய செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செலவினங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய

2023 ஏப்ரல் 19]

அரசினால் அமைக்கப்பட்டு வரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைப் (Contributory Pension Scheme) போன்றதொரு புதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது."

(iv) *வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக, 1.4.2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மாநில அரசுப் பணியில் சேர்ந்த பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பணியாளர்களுக்கு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 பொருந்தாது என்று உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன.*

2. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான வழிமுறைகள்

(i) *பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினைச் செலுத்துகிறது.*

(ii) *31-3-2023 அன்றுள்ளவாறு இத்திட்டத்தின்கீழ், உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள் உட்பட 6,28,971 பணியாளர்கள் உள்ளனர். மேலும் 31.3.2023 அன்றுள்ளவாறு, பணியாளர்களின் பங்களிப்பு, அரசு பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம் 61,251.16 கோடி ரூபாய் ஆகும். இத்தொகையானது தற்போது இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில்* (LIC) *முதலீடு செய்யப்பட்டுள்ளது.*

3. வட்டி

தற்போது பொது வருங்கால வைப்புநிதி கணக்குகளுக்குப் பொருந்தும் காலாண்டுக்கான வட்டி விகிதத்திலேயே பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த தொகைக்கான வட்டி அனுமதிக்கப்படுகிறது. பொது வருங்கால வைப்பு நிதிக்கு 1-1-2023 முதல் 31-3-2023 வரையுள்ள கால அளவிற்கு 7.1 சதவிகிதம் வட்டி அனுமதிக்கப்படுகிறது. தேசிய ஓய்வூதியத் திட்டக் கட்டமைப்பில் இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் பல்வேறு ஓய்வூதிய நிதி மேலாண்மை கணக்குகளின்கீழ் பெறப்படுகின்ற வருமானத்தைக் காட்டிலும் இந்த வட்டி விகிதம் குறைவாகவே வருமானம் ஈட்டுகிறது.

[2023 ஏப்ரல் 19

4. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்ந்த தொகையிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகள்

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்ந்த மொத்த தொகையும், ஆயுள் காப்பீட்டு நிறுவன ஓய்வூதிய நிதியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம்முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையானது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கப்படும் பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை விடக் குறைவாக உள்ளது. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கை மறுப்புரையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு இதனால் அரசுக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதுடன், தேசிய ஓய்வூதியத் திட்ட கட்டமைப்பின்கீழ் முதலீடு செய்யப்பட்டிருப்பின், பணியாளர்கள் அதிக பயன்களைப் பெற்றிருக்க முடியும்.

5. ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட இறுதித் தீர்வு

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கென விதிகள் உருவாக்கப்படாத நிலையில், பணியாளர் மற்றும் அரசு பங்களிப்பு உள்ளிட்ட திரட்டப்பட்ட தொகையை வட்டியுடன் சேர்த்து ஒட்டுமொத்த தொகையாக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 31.3.2023 அன்றுள்ளவாறு, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றி, பணி ஓய்வு/ பணித்துறப்பு/ இறந்த/பணிநீக்கம் செய்யப்பட்ட 28,981 பணியாளர்களுக்கு இறுதித் தீர்வுத் தொகையாக 1,919.19 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் 2003 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ள நிலையில், திரட்டப்பட்ட தொகையானது வருடாந்திர திட்டத்தை உருவாக்குவதற்கு முறையான கட்டமைப்பு இல்லாத காரணத்தால், அரசு பணியாளர்கள் நிதியிழப்பை சந்திப்பதுடன் அதிக பாதுகாப்பின்மைக்கும் ஆளாகின்றனர். எனவே, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் திரட்டப்பட்ட நிலுவைகளை, ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் முதலீடு செய்வது குறித்த உறுதியான முடிவு உடனடியாகத் தேவைப்படுகிறது.

6. உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான மாநில ஒருங்கிணைப்பு

அதிகாரியாக (State Nodal Officer) *கருவூலக் கணக்குத் துறை ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கென மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு, இதுதொடர்பான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

7. தமிழ்நாட்டில் உள்ள அகில இந்தியப் பணி (AIS) அலுவலர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS)

தமிழ்நாடு பிரிவைச் சார்ந்த அகில இந்தியப்பணி (AIS) *அலுவலர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமான தேசிய ஓய்வூதியத் திட்டத்திற்கு தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனம்* (National Securities Depository Limited), *ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்* (PFRDA) *அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதிமேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசால் 28.6.2017 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 31.3.2023 வரை அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான சந்தா மற்றும் அரசின் பங்களிப்புத் தொகையாக 45.26 கோடி ரூபாய் தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனத்திற்கு* (NSDL) *மாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

8. தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கட்டமைப்பு

தேசிய ஓய்வூதியத் திட்டமானது தனது சந்தாதாரர்கள் ஓய்வூதியத்திற்காக சேமிக்க ஏதுவாக பின்வரும் முக்கிய அம்சங்களை வழங்குகிறது:

(i) *தேசிய ஓய்வூதியத் திட்டமானது 1-1-2004 முதல் புதிய ஓய்வூதியத் திட்டமாக செயல்பட்டு வருகிறது. இது 1-1-2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ ஒன்றிய அரசு பணியில் புதியதாக பணியமர்த்தப்படும் பாதுகாப்புப் படையினரை தவிர மற்ற அனைவருக்கும் பொருந்தும். 1-5-2009 முதல் அனைத்து குடிமக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால் இத்திட்டம் தேசிய ஓய்வூதியத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.*

(ii) *தேசிய ஓய்வூதியத் திட்டமானது வரையறுக்கப்பட்ட பங்களிப்பு அடிப்படையில் அடுக்கு–*I *மற்றும் அடுக்கு–*II *என இரண்டு அடுக்குகளாக கட்டமைக்கப்பட்டுள்ளது.*

(iii) அடுக்கு–I-ன்கீழான ஓய்வூதியக் கணக்கானது 1.1.2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ அரசுப் பணியில் பணியமர்த்தப்படும் அனைத்து பணியாளர்களுக்கும் கட்டாயமானதாகும். அடுக்கு-I-ல் பணியாளர்களின் சம்பளப் பட்டியலில் இருந்து ஒவ்வொரு மாதமும் பங்களிப்பாக அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்யப்பட்டது. அடுக்கு-I ஆனது ஆரம்ப கட்டத்தில் திரும்பப் பெற இயலாத கணக்காகவும், தற்போது பகுதி அளவாக திரும்பப் பெறும் கணக்காகவும் மாறியுள்ளது.

(iv) அடுக்கு-II கணக்கானது பொது வருங்கால வைப்பு நிதிக் கணக்கிற்கு நிகரான ஒரு தன்னார்வ சேமிப்புக் கணக்காக 1-12-2009 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. செயல்பாட்டில் உள்ள அடுக்கு-I கணக்கானது அடுக்கு-II கணக்கைத் துவங்குவதற்கான முன்நிபந்தனையாகும். அடுக்கு-II-க்கான பங்களிப்புகள் சந்தாதாரர்களின் விருப்பத் தேர்வின் அடிப்படையில் திரும்பப் பெறக்கூடிய ஒரு தனி கணக்காக வைக்கப்பட்டுள்ளது.

(v) 1-1-2004 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஒன்றிய அரசுப் பணியில் சேரும் புதிய அரசுப் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியம் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி ஆகியவை பொருந்தாது.

(vi) பணம் பெற்று வழங்கும் அலுவலர்/சம்பளக் கணக்கு அலுவலர் (கருவூல அலுவலர்) அல்லது NPS வலைதளம் அல்லது Points of Presence (POP)மூலம் ஒரு தேசிய ஓய்வூதியத் திட்டக் கணக்கை சந்தாதாரர் தொடங்கி நிரந்தர ஓய்வூதியக் கணக்கு எண்ணை (PRAN) பெறலாம்.

(vii) முதலீடு மற்றும் ஓய்வூதிய நிதியினை சந்தாதாரர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் தேர்வு செய்யலாம்;

(viii) சந்தாதாரர்கள் தங்கள் இருப்பிடம், வேலை அல்லது ஓய்வூதிய நிதி மேலாளரை மாற்றினாலும், நாட்டின் எந்தவொரு பகுதியிலிருந்தும் தங்களின் கணக்கை எளிதாக இயக்கிக் கையாள இது வழிவகை செய்கிறது.

2023 ஏப்ரல் 19]

(ix) *சந்தாதாரர்கள் 60 வயது அல்லது அதற்குப் பிறகு அடுக்கு-I-க்கான கணக்குத் திட்டத்தில் இருந்து வெளியேற முடியும். இத்திட்டத்திலிருந்து வெளியேறும் பணியாளர்கள் அவர்களது ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில் 40% ஒழுங்குமுறை நிறுவனத்தால்* (IRDA) *அங்கீகரிக்கப்பட்ட ஒரு காப்பீட்டு நிறுவனத்தில் வருடாந்திர பயன்பெறும் வகையில் முதலீடு செய்வது கட்டாயமாகும். இது பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு வாழ்நாள் ஓய்வூதியத்தை வழங்கும். சந்தாதாரர்கள் 60 வயதை எய்துவதற்கு முன் திட்டத்தை விட்டு வெளியேறினால், வருடாந்திர ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில், 80% ஓய்வூதிய பலன் பெறும் வகையில் காப்பீட்டு நிறுவனத்தில் கட்டாயமாக முதலீடாக வைக்கப்படும்.*

(x) *வெளிப்படையான முதலீட்டு விதிமுறைகள் மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்ட அறக்கட்டளையின் நிதி மேலாளர்களின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் செயல்திறனுடன் தேசிய ஓய்வூதியத் திட்டமானது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.*

(xi) *ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்* (PFRDA), *ஓய்வூதிய முதலீட்டு சந்தையை ஒழுங்குபடுத்தி மேம்படுத்துகிறது.*

மத்திய குடிமைப் பணி (ஓய்வூதியம்) விதி, 1972-ன்கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் இறப்புப் பணிக்கொடை தேசிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கும் அதே விதிகள் மற்றும் வரையறைகளுக்குப்பட்டு பொருந்தும் என்ற ஆணை 2016 ஆம் ஆண்டு, ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

9. வல்லுநர் குழு அமைத்தல்

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தை தொடர பல்வேறு அரசுப் பணியாளர்கள்/சங்கங்களின் கோரிக்கையை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, பொருத்தமான முடிவினை மேற்கொள்ள அரசிற்கு பரிந்துரைக்க ஏதுவாக 2016 ஆம் ஆண்டில் ஒரு வல்லுநர்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையானது 27-11-2018 அன்று அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[*2023 ஏப்ரல் 19*

10. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கை குறிப்புகள்

31-3-2018 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையில் குறைவான நிதி முதலீடு மற்றும் கருவூலப்பட்டி முதலீட்டிற்குப் பெறப்பட்ட குறைவான வட்டி காரணமாக 2015-2018 காலகட்டத்தில் மாநில அரசிற்கு 797.12 ரூபாய் கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் (NPS) கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் சேருமாறு தொடர்ந்து தமிழ்நாடு அரசிடம் கோரியது (2008 மற்றும் 2009). தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதியத் திட்ட கட்டமைப்பில் (NPS) சேரத் தவறியது (2010).

அரசாங்கம் எதிர்மறை வட்டிச் சுமையின் காரணமாக தற்போது ஆண்டுக்கு ரூ.1,200 கோடிக்கும் அதிகமான கூடுதல் நிதிச் செலவையும் எதிர்கொள்கிறது. மேலும், வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (DCPS) தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்தும் மாநில அரசு நிதி மேலாளரை நியமிக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் தணிக்கைக் குறிப்புகள் உட்பட அனைத்து பரிமாணங்களையும் காரணியாகக் கொண்டு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ்வரும் பணியாளர்களின் பயன்கருதி விரைவில் முடிவெடுக்க வேண்டும்.

II. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

வரவு-செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு 1971 ஆம் ஆண்டு தோற்றுவித்தது. அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு மையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் (GDC) ஏற்படுத்தப்பட்டது.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் கீழ்க்காணும் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

2023 ஏப்ரல் 19]

1) அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்.

2) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்.

3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ICDS) பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் (GPF).

4) சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ஊக்கத் தொகை செலுத்துதல் (Direct Benefit Transfer).


அரசாணை (நிலை) எண் 201, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 21.05.2009-ன்படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 463, நிதித் (ஓய்வூதிய குறை தீர்க்கும்) துறை, நாள் 27.12.2013-ன்படி அரசுப் பணியாளர்களுக்கு புதிய பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்ட கணக்கு எண் ஒதுக்கீடு செய்தல் மற்றும் பராமரிக்கும் பணிகள் அனைத்தும் மாநில கணக்காயர் அலுவலகத்திலிருந்து அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. மாற்றம் செய்த பின்னர் காலமுறை ஊதியம் பெறும் அனைத்து அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் நிலையாக்கப்படாத பணியாளர்கள் ஆகியோருக்கு இவ்வலுவலகத்தில் புதிய கணக்கு எண் ஒதுக்குதல் மற்றும் கணக்குகளைப் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் பணியாளர்களுக்கு வழங்கியுள்ள குறியீட்டு எண்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்	வகை	31-3-2023 அன்றுள்ளவாறு வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள்
1	அரசுப் பணியாளர்கள்	4,92,952
2	நிதி உதவி பெறும் பள்ளிகள்/ கல்லூரிகள்	49,833
3	ஊராட்சி ஒன்றிய பள்ளிகள்	51,845
4	நகராட்சிப் பள்ளிகள்	3,183
5	உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள்	31,158
	மொத்தம்	6,28,971

31-3-2023 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கு எண்கள்



2023 ஏப்ரல் 19]

இறுதி கணக்குத்தாள் வழங்குதல்


28,981 ஒய்வுபெற்ற/பணிதுறப்பு/இறந்த பணியாளர்களின் இறுதி கணக்குத்தாள்கள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 31,158 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். இணையதளம் வழியாக, சந்தா பிடித்தம் மற்றும் அதற்கீடான உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவை பதிவு செய்யப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு இறுதித் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் (GPF)

அரசாணை (நிலை) எண் 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19.4.2010-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) *மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின்* (ICDS) *திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி குறித்தப் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட திட்டத்தில் 31-3-2023 அன்றுள்ளபடி 2,12,211 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.*



அரசாணை (நிலை) எண் 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-7-2015-ல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களிடம் இருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. இப்பணியாளர்களின் கணக்குதாள்களின் விவரம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.


சத்துணவுத் திட்டம் (NMP) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணியாளர்களுக்கு தற்காலிக முன்பணம்/90% பகுதி இறுதித் தொகை வழங்குதல்

அரசு கடித எண் 9831, சமூக நலத்துறை/4-2/2020-3, நாள் 18-6-2021-ல் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணியாளர்களுக்கான தற்காலிக முன்பணம் பெற்றிட உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. சந்தாதாரர்கள் முதன்முறையாக தற்காலிக முன்பணம் பெறுவதற்கு 5 ஆண்டுகள் சந்தா தொகை செலுத்தியிருக்க வேண்டும். சந்தாதாரர் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் நாளுக்கு ஓராண்டு இருக்கும் பொழுது 90% பகுதி இறுதித் தொகையினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். மீதமுள்ள 10% தொகை அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்ட பிறகே சம்பளம் பெற்று வழங்கும் அலுவலரால் வழங்கப்படும்.

இறுதித் தொகை வழங்கும் பணிகள்

31-3-2023 வரை இத்திட்டத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 19,127 பணியாளர்களுக்கு பொது வருங்கால வைப்புநிதி இறுதித்தொகை ரூ.73.60 கோடி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]




சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ஊக்கத் தொகை வழங்குதல் (Direct Benefit Transfer)


கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை 2017-2018 ஆம் ஆண்டு கரும்பு அரவை பருவம் முதல் வழங்கும் பொருட்டு, நேரடி பயனாளி திட்டத்தினை (Direct Benefit Transfer Scheme) *அரசு அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட பயனாளியின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக மின்னணு பரிவர்த்தனைத் திட்டம் வாயிலாக ஊக்கத் தொகை வரவு வைக்கப்படும்.*

[2023 ஏப்ரல் 19

உழவர்களின் எண்ணிக்கை



விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்ட தொகை விவரங்கள்




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் இப்பணி சம்பந்தமாக பயனாளர்களின் விவரக் குறிப்புகளைத் தொகுக்கும் பணியினை 2018 முதல் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

III. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்)

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்) 1-4-2003-க்கு முன் நியமிக்கப்பட்ட அனைத்துப் பணியாளர்களையும் உள்ளடக்கியது. 31-3-2023 அன்றுள்ளவாறு, இந்தத் திட்டத்தின்கீழ் 2,89,389 பணியாளர்கள் உள்ளனர். 2022-2023 ஆம் ஆண்டில் 22,261 பணியாளர்கள் ஓய்வு பெற்றதால் 4678.19 கோடி ரூபாய் ஓய்வூதியப் பலன்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இது தவிர, 7,07,424 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் மேற்கூறிய திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். 2022-2023 ஆம் ஆண்டில், ஓய்வூதியதாரர்கள் இறப்பு காரணமாக ஏற்கெனவே இருந்த 7,142 ஓய்வூதியதாரர்கள் குடும்ப ஓய்வூதியதாரர்களாக மாற்றப்பட்டு, இதற்காக 171.51 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 50-ன்கீழ், ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளுக்கான செலவினத்தை மேற்கொள்ளும்பொருட்டு, 41,231.90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகளுக்கான செலவு விவரம் பின்வருமாறு:



* *2023-2024 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதிய செலவு அதிகரித்ததற்குக் காரணம், அரசுப் பணியாளர்களின் ஓய்வுபெறும் வயதானது 2020 ஆம் ஆண்டு 58 லிருந்து 59 ஆகவும், மற்றும் 2021 ஆம் ஆண்டு 59 லிருந்து 60 ஆகவும் உயர்த்தியதால் ஆகும்.*


[*2023 ஏப்ரல் 19*

31-3-2023 அன்றுள்ளவாறு மாநில அரசு ஓய்வூதியதாரர்களின் விவரங்கள் பின்வருமாறு:



2023 ஏப்ரல் 19]

31-3-2023 அன்றுள்ளவாறு குடும்ப ஓய்வூதியதாரர்களின் விவரம் பின்வருமாறு:



ஓய்வூதியம் (Pension)

(அ) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதிப் பணிக்காலம் 10 நிறைவுற்ற ஆண்டுகளாகும் (10 completed years). *முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதிப் பணிக்காலம் 30 நிறைவுற்ற ஆண்டுகளாகும். மேலும், அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது, பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது இறுதி 10 மாத பணிக்காலத்தில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.*

(ஆ) 1.10.2017 அன்று முதல், குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 19

கூடுதல் ஓய்வூதியம்/கூடுதல் குடும்ப ஓய்வூதியம்

80 வயது முடிந்த ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர் அதாவது 81 வயது ஆரம்பிக்கும்போது கூடுதல் ஓய்வூதியம்/கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர். 31-3-2023 அன்றுள்ளவாறு கூடுதல் ஓய்வூதியம்/கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களின் மொத்த எண்ணிக்கை 89,005 ஆகும்.

வயது வாரியாக கூடுதல் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் விவரம்



அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்

அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு, மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850/- ரூபாய் உட்பட ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின்கீழ் வரும் பணியாளர்களுக்கான ஓய்வுக்காலப் பயன்கள்

ஓய்வு பெறும்போது பணியாளர் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதியும் மற்றும் ஓய்வு பெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் வசிக்க விரும்பும் வேறு ஏதாவது ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் பணியாளர்களுக்கான பணிக்கொடை (Gratuity)

(அ) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity)

பத்து நிறைவுற்ற ஆண்டுகளுக்கு (10 completed years) குறைவாக தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. இது அவர்கள் ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுக்காலப் பணிக்கொடையுடன் கூடுதலாக வழங்கப்படுகின்ற மொத்தத் தொகையாகும்.

(ஆ) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity)

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், 1.10.2017 முதல், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:

வ. எண்	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
1.	ஓராண்டுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் இரு மடங்கு
2.	ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் ஆறு மடங்கு
3.	ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் பதினோர் ஆண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு
4.	பதினோர் ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பதினைந்து மடங்கு

வ. எண்	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
5.	இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக	அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை ரூபாய் 20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்.

(இ) ஓய்வுக்காலப் பணிக்கொடை (Retirement Gratuity)

ஓர் அரசுப் பணியாளர், ஐந்து நிறைவுற்ற ஆண்டுகளும் (completed 5 years) அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும் போது ஓய்வுக்காலப் பணிக்கொடை வழங்கப்படுகிறது. 1.4.1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 112016 முதல் இறப்பு பணிக்கொடை/ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை 20 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் பணியாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் (Family Pension under Defined Benefit Pension Scheme)

(அ) 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு இறந்த அரசு பணியாளர் அல்லது ஓய்வு பெற்ற அரசுப் பணியாளரின் குடும்பத்திற்கு அவர் ஒரு வருடத்திற்கும் குறையாத காலத்திற்கு தொடர்ச்சியான தகுதிப் பணியினை நிறைவு செய்திருந்தால் அவர்தம் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 19]

(ஆ) *அரசாணை நிலை எண் 313, நிதித்(ஊதியக்குழு) துறை, நாள் 25.10.2017-ன் மூலமாக குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படும் பொழுது ஓய்வூதியதாரர் ஓய்வு பெறும் பொழுது பெற்ற ஊதியம் மற்றும் தர ஊதியத்தின் திருத்தப்பட்ட ஊதிய விகிதம்/ஊதிய ஏற்ற முறையில் தொடர்புடைய பரிந்துரைக்கப்பட்ட அலகில் குறைந்தபட்ச ஊதியத்தில் 30%-க்கும் குறைவாக இருக்கக் கூடாது.*

(இ) *1.10.2017 முதல் வழங்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

கருணைத் தொகை (Ex-Gratia Payment)

பங்களிப்பு வருங்கால வைப்புநிதி/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 1.1.1986-க்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது பணியிலிருக்கும்போது இறந்து விட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியில்லாத நபர்களுக்கும் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 645 ரூபாயுடன் 1.1.2023 முதல் 388 சதவிகித அகவிலைப்படியும் சேர்த்து வழங்கப்படுகிறது.

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension)

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் 33⅓ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். இச்சலுகை, விருப்பத்தின் பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனினும், அகவிலைப்படி ஓய்வூதிய ஒப்படைப்பிற்கு முன்னர் உள்ள தகுதியான முழு ஓய்வூதியத் தொகைக்கு வழங்கப்படுகிறது.

அகவிலைப்படி

ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தற்காலிக ஓய்வூதியம்/தற்காலிக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

மருத்துவப்படி

1-10-2017 முதல் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தற்காலிக ஓய்வூதியம்/தற்காலிக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாதம்தோறும் 300 ரூபாய் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

பொங்கல் பரிசு

"C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராமப் பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து "C" மற்றும் "D" பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Adhoc pensioners of all categories) *மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்தப் பணியாளர் பிரிவிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும்/பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும், ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.*

பண்டிகை முன்பணம்

ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை முன்பணம் 2.8.2019 முதல் 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

மின்னணு ஓய்வூதியம் (ePension)

ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களைப் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வுமுறை (Electronic Clearing Service)/*மண்டல மின்னணு தீர்வுமுறை* (Regional Electronic Clearing Service) *மூலமாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநிலக் கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு* (e-Pension Central Server) *மாற்ற வழிவகை செய்வதன்மூலம் ஓய்வூதியம் குறித்த*

விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன்பெற வழிவகுக்கும்.

ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணல் (e-Mustering)

மாநில அரசு ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தங்களின் வாழ்நாள் சான்றிதழை (Life Certificate) சமர்ப்பிக்கின்றனர். தற்போது, ஓய்வூதியம் பெறுவோர்/குடும்ப ஓய்வூதியம்பெறுவோர் தங்களின் வசதிக்கேற்ப பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து தங்களின் வாழ்நாள் சான்றிதழை (Life Certificate) சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (i) நேரடியாக வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பித்தல் (Direct Mustering) (ii) தபால்மூலம் வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பித்தல் மற்றும் (iii) பயோமெட்ரிக் சாதனத்தைப் பயன்படுத்தி, மின்னணு வாழ்நாள் சான்றிதழை (Digital Life Certificate) ஜீவன் பிரமாண் இணைய முகப்பு வழியாக சமர்ப்பித்தல், கோவிட் நோய்த் தொற்றின் காரணமாக, ஓய்வூதியம் பெறுவோர்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் பயன் பெறும் வகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வருடாந்திர நேர்காணல் (Annual Mustering) மற்றும் வாழ்நாள் சான்று சமர்ப்பித்தல் (furnishing of Life Certificate) ஆகியவற்றிற்கு விலக்கு அளித்து ஆணையிடப்பட்டது.

தமிழ்நாடு அரசு 2022 ஆம் ஆண்டு முதல் வழக்கமான முறையில் ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் வருடாந்திர நேர்காணலை (Annual Mustering) மேற்கொள்ளவும், ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் நேர்காணலுக்கு (Annual Mustering) நேரில் வருவதைத் தவிர்க்கவும், 80 சதவிகிதத்திற்குக் குறையாமல் வருடாந்திர நேர்காணல் ஜீவன் பிரமாண் இணைய முகப்பு வழியாக, இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) மூலமாக இருப்பிடத்திற்கே சென்று சேவை, இ-சேவை மையங்கள்/பொது சேவை மையங்கள், ஜீவன் பிரமாண் இணைய முகப்புடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் சாதனம் கொண்டுள்ள ஓய்வூதியர் சங்கங்கள்மூலம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதற்கான திருத்திய ஆணைகள் வயதான ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்கள் துயரத்தினைத் தவிர்க்கும்பொருட்டும், நேர்காணலுக்கு நேரில் வருவதைத் தவிர்த்து ஊக்குவிக்கும் பொருட்டும் வெளியிடப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 19

ஓய்வூதியதாரர்கள் அவர்களின் வசதிக்கேற்ப பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது:

1) மின்னணு வாழ்நாள் சான்று (DLC), ஜீவன் பிரமாண் இணைய முகப்பு வழியாக கீழ்க்காணும் வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றை ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளலாம்.

அ) இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) (ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் அவர்கள் இருக்கும் இடத்திலேயே இச்சேவையை பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது)

ஆ) இ-சேவை மையங்கள்/பொது சேவை மையங்கள்.

இ) ஜீவன் பிரமாண் இணைய முகப்புடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் சாதனம் கொண்ட ஓய்வூதியர் சங்கங்கள்.

2) தபால்மூலம் வருடாந்திர வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பித்தல்.

3) நேரடியாக வருடாந்திர வாழ்நாள் சான்றிதழை சமர்பித்தல் (Direct Mustering).

மேற்கூறிய ஆணையின்படி 7,05,712 மொத்த ஓய்வூதியதாரர்களில் 6,09,613 ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு வாழ்வு சான்று வழியாக நேர்காணல் செய்யப்பட்டது. இதில் 1.41 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) வழியாக அவர்களின் இருப்பிடத்திலேயே இச்சேவையைப் பெற்றுள்ளனர். இணைய வழியாக 80 சதவிகிதத்திற்கும் மேலான நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓய்வூதிய பதிவுகள் மின்னணுமயமாக்கல் (Digitization)

சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னணுமயமாக்கம் செய்திட முதல்கட்டப் பணிகளுக்கு அரசு 95.53 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது மற்றும் இரண்டாம் கட்டத்தின்கீழ்

2023 ஏப்ரல் 19]

இப்பணிகளுக்கான செலவுகளை மேற்கொள்ள அரசு 135 இலட்சம் ரூபாய் அளவிற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இரண்டாம் கட்டப் பணிக்காக தற்போது வரை 129.31 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர் இணையம் (Pensioners Portal)

2020 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஓய்வூதியதாரர்களின் அனைத்து விவரங்கள் மேம்படுத்தப்பட்ட இணையத்தில் கிடைக்கப்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்கள் https://www.karuvoolam.tn.gov.in (IFHRMS) என்ற வலைதளத்தினை பார்வையிட்டு அவர்கள் பெறும் ஓய்வூதிய விவரங்களை நவம்பர் 2020 முதல் பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

IV. ஓய்வூதிய இயக்குநரகம்

அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத்தை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை அரசு கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இவ்வியக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(அ) மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதியக் குறைகளைத் தீர்த்தல்.

(ஆ) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய குறைதீர்க்கும் மன்றத்தின்மூலம் தீர்த்தல்.

(இ) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(ஈ) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(உ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிர்வகித்தல் மற்றும் செயல்முறைப்படுத்தல்.

(ஊ) அமைப்புசாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூகப் பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிர்வகித்து நிறைவேற்றுதல்.

(எ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 மற்றும் 2000 ஆகியவற்றின் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ஏ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம், 1995-ன்கீழ் நிலுவையிலுள்ள நேர்வுகளைத் தீர்வு செய்தல்.

தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம்


i. தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதி திட்டம் 1.1.1997 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியதாரர் ஒருமாத பங்களிப்புக்குப் பின்னர் இறக்க நேரிட்டால் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர் அல்லது நியமனதாரருக்கு 50,000/- ரூபாய் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

ii. கோவிட் நோய்தொற்று காலங்களில் ஓய்வூதியதாரர்களின் இறப்பு எண்ணிக்கை அதிகமானதால், நிலுவை விண்ணப்பங்களை நேர் செய்ய அரசாணை (நிலை) எண் 125, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 9.5.2022-ல் ரூ.50 கோடியை அரசு கணக்கிலிருந்து ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வட்டியில்லாக் கடனாக குடும்பப் பாதுகாப்பு நிதி திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு செய்து ஆணையிட்டுள்ளது.


iii. மேலும், அரசாணை (நிலை) எண் 84, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 28.3.2023-ல் நிலுவையில் உள்ள கோரிக்கைகளைத் தீர்வு செய்வதற்காக, தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டங்களுக்கு அரசுக் கணக்கில் இருந்து மீண்டும் முன்பணமாக ரூ.25 கோடியை அனுமதித்துள்ளது. மேற்கூறிய தொகையில் 5,000 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 19]

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் தொடர்பான கோரிக்கைகள் குறித்த வயது வாரியான இறப்பு விகித பகுப்பாய்வு




2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ் ஓய்வூதியதாரர்களின் பங்களிப்பு



குறிப்பு : *ஓய்வூதியதாரர்களின் மாத சந்தா தொகையானது ரூ.80/-லிருந்து ரூ.150/- ஆக 1.7.2021 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 19

2018 முதல் 2023 வரை ஆண்டு வாரியான குடும்ப பாதுகாப்பு நிதி தொடர்பான கோரிக்கைகள் மற்றும் தீர்வுகள்



தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 1984

இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூபாய் 20 வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 10,000 சேர்த்து வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 2000

இப்புதிய திட்டம் 1-10-2000 முதல் தொடங்கப்பட்ட பின்னர் முந்தைய திட்டத்தில் பணியாளர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டது. எனினும் முந்தைய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் ஓய்வுபெறும் போது உரிய பணப்பயன் அத்திட்டத்தில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணியாளர்களுக்கும் விருப்பத்தின்

2023 ஏப்ரல் 19]

பேரில் இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு ரூபாய் 50 வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி அத்தொகை ஓய்வு பெறும் போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1.4.2022 முதல் 31.3.2023 வரை 1,848 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு தீர்வு செய்யப்பட்டுள்ளது. 1-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேரும் பணியாளர்கள் அனைவருக்கும் இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை ரூபாய் 70/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையான ரூபாய் 10,000/- சேர்த்து வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1969

இத்திட்டம் தமிழ்நாடு அரசுத் தொழில் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தின ஊதியப் பணியாளர்களின் நலன் கருதி 1969 ஆம் ஆண்டு அரசாணை எண் 1883, நிதித் (பல்வகை) துறை, நாள் 26.12.1969-ன்படி தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1.4.1989-க்கு முன்னர் ஊதியத் தொகையில் 8.33 சதவிகிதத் தொகை பணியாளர் பங்காகவும், அதற்குச் சமமாக அரசு நிறுவனப் பங்குத் தொகையாகவும் நிதி பெறப்பட்டது. 1.4.1989-க்குப் பின்னர் பணியாளரின் ஊதியத் தொகையில் 10 சதவிகிதத் தொகை பணியாளரின் பங்காகவும் அதற்குச் சமமாக அரசு நிறுவனப் பங்காகவும் அரசிடமிருந்து பெறப்படுகிறது.

தற்போது வேளாண்மைத் துறை, வனத் துறை, பொதுப் பணித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் (எண்ணெய் வித்துக்கள்) துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் போக்குவரத்துத் துறை உள்ளிட்ட 9 அரசுத் துறை நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. 12,269 உறுப்பினர்கள் இதுவரையில் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட அலுவலர்களால் சந்தாதாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சந்தா தொகை அரசு தன் வைப்புத் தொகைக் கணக்குத் தலைப்பின்கீழ் வரவு வைக்கப்படுகின்றது.

ஓய்வூதிய இயக்ககத்தின் கணக்கு அலுவலருக்கு (நிதி) அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டு அதன்படி சந்தாதாரர்களுக்கு

இத்திட்டத்தின் இறுதித் தொகை தீர்வு செய்யப்பட்டு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டம் (IFHRMS) மூலம் வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் நிதியாண்டு வரையிலான கணக்குத்தாள்கள் வழங்கப்பட்டுள்ளன. 90 பயனாளிகளுக்கு 1.4.2022 முதல் 31-3-2023 வரையில் ரூ.95.97 இலட்சம் இறுதித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், ஓய்வூதிய இயக்கக மின்னஞ்சல்மூலம் பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாகப் பெறப்படும் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாகப் பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றின்மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, உடனடியாகத் தீர்வு காணப்படுகிறது.

மாவட்டங்களில் நடைபெறும் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டம்

மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களில் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை நடத்துகிறார்கள். ஓய்வூதிய இயக்குநர் அல்லது இணை இயக்குநர் இந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டு, மாவட்டங்களிலிருந்து பெறப்படும் குறை தீர்க்கும் மனுக்களின்மீது விரைவாகத் தீர்வு காண்பதற்கு உதவுகிறார்கள். மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள ஓய்வூதிய முன்மொழிவுகளுக்கான, தீர்வுகளை விரைவுபடுத்த இந்த இயக்குநரகத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டங்களிலிருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனுக்கள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்குத் தீர்வு காண அனுப்பப்பட்டு, துறை வாரியாகக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு, இத்தகைய மனுக்களுக்கு தீர்வு காண்பதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

1-4-2022 முதல் 31-3-2023 வரை 54 ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் கூட்டம் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றது. புதிய மருத்துவக் காப்பீடு திட்டத்தின்கீழ் தீர்வு செய்யப்படாத மருத்துவச் செலவுகள், அடையாள அட்டைகள் வழங்குதல்,

2023 ஏப்ரல் 19]

கூடுதல் ஓய்வூதியம் வழங்குதல், பகுதி ஓய்வூதியத் தொகை திரும்பப் பெறுதல், கருணைத்தொகை வழங்குதல், ஓய்வூதியம் மறுசீரமைப்பு செய்தல், ஓய்வூதிய நிலுவைத் தொகையை வழங்குவதில் தாமதம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள தாமதம் போன்ற ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கைகள் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்படுகிறது.

ஓய்வூதியதாரர்களின் பணிப் பலன்கள் தொடர்பாக, துறைத் தலைவர்/தலைமை அலுவலகங்களுக்கும் ஓய்வூதியதாரர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், இறுதித் தீர்வு காண மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் ஓய்வூதிய இயக்குநரகத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 1-4-2022 முதல் 31-3-2023 வரையிலான காலகட்டத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 1,813 ஓய்வூதியதாரர்களின் குறைதீர் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. தற்போது மாவட்டங்களில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டத்தை ஆண்டுக்கு ஒருமுறை நடத்துவதற்கான திருத்திய வழிகாட்டுதல்களை வெளியிட்டு அரசு ஆணையிட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்களின் கையேடு

ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் அனுப்ப வழிகாட்டுதல்கள் ஆகிய தகவல்கள் அடங்கிய கையேடு www.tn.gov.in/dop *என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநரகத்தை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின்னஞ்சல் முகவரி* dop@tn.nic.in

ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்

ஓய்வூதிய இயக்ககத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1969 ஆகிய இரண்டு முக்கிய திட்டங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் பலன்தொகை தேசிய மின்னணு வாயிலான நிதி வழங்கல் (NEFT) *மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.*

V. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2022

(அ) ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட)/ குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014, 1.7.2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1-7-2022 முதல் 30-6-2026 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில கூடுதல் அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 4 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இப்புதியத் திட்டத்தில், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன்/திருமணமாகாத மகள், உழைக்கும் திறனற்ற மனநலம் குன்றிய அல்லது மனநலமற்றவராக அல்லது மாற்றுத் திறனாளியாக இருந்தால் அல்லது மணமாகாத/ விவாகரத்து பெற்ற/விதவை மகளாக இருப்பின் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பலன்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

(இ) இப்புதிய திட்டத்தில் கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது:

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்.

2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக டயாலிசிஸ்.

3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை.

4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்.

5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசம் (Aneurysms) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasties)

6) தீக்காயங்களுக்கான சிகிச்சை

7) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நன்கொடையாளரின் உறுப்பு பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சைக்கான செலவுகள்

8) தீவிர சிகிச்சை பிரிவில் மேற்கொள்ளப்படும் கோவிட்-19 நோய் தொற்றிற்கான சிகிச்சை.

(ஈ) இதுவரை 6,12,060 ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற ஏதுவாக காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டத்தின்கீழ், மீதமுள்ள அடையாள அட்டைகள் பெறாத ஓய்வூதியதாரர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

(உ) இத்திட்டத்தின்கீழ் 1.7.2022 முதல் 31.3.2023 வரை 57,058 பயனாளிகள் 235.71 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ஊ) மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள்/நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அந்த நிறுவனங்களால் கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்கொள்ளாமல் அந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அவர்கள் இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது.

[2023 ஏப்ரல் 19

இது தவிர, தற்போது கோவிட் சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ள ரூ.2.50 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை ரூ.52.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 6,864 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும், அவசரத்தன்மையற்ற நிலையில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் ஓய்வூதியதாரர்களால் மேற்கொள்ளப்பட்ட கோவிட் சிகிச்சைகளுக்கான மருத்துவ செலவினத்தை மீள வழங்க சிறப்புத் தொகுப்பாக ரூ.6 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இச்சிறப்பு நிதி ஒதுக்கீட்டின்கீழ் 581 ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.